
மொழி வரலாறு

ஆசிரியர் :
டாக்டர், மு. வரதராசன்

043
5E01
தி வேளியீடு

மொழி வரலாறு



டாக்டர்,
மு. வரதராசன்.

கழக வெளியீடு : எண்ண

மொழி வரலாறு

ஆசிரியர் :

டாக்டர், மு. வரதராசன், எம். ஏ., எம். ஓ. எல்., பிஎச். டி.

தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1

First Edition: Nov., 1954.

[All Rights Reserved by the Author]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY. TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, MADRAS - 1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.—C. 1100.

முன்னுரை

தமிழ்மொழி மிகப் பண்பட்டது; இலக்கிய வளம் உடையது; வரலாற்றுக்கு எட்டாத காலம் முதல் ஆங்கில அரசாங்கம் அமைந்த நாள் வரையில் இந்நாட்டின் ஆட்சிமொழியாக விளங்கி வந்தது; அதனால் நுட்பமான சொற்பொருள் முறையும் தெளிவான சொற்றொடரமைப்பும் உடையதாக வளர்ச்சி பெற்றது. இத்தகைய மொழியின் வரலாற்றைப் பற்றி ஆங்காங்கே தம் நூல்களில் மிகச் சுருக்கமாகக் குறித்துள்ளனர் மேற்கு நாட்டு அறிஞர் சிலர். தமிழறிஞர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் முதல் முதலாகத தமிழில் ஒரு நல்ல நூல் எழுதித் 'தமிழ்மொழி வரலாறு' என வெளியிட்டார். அது சுருங்கியது. இந்த ஐம்பது ஆண்டுகளாக வளர்ந்த பல கருத்துக்களுடன், தமிழர் தம் தாய் மொழியில் அறிந்துணரும் வகையில், விரிவான வரலாறு ஒன்று இன்றியமையாதது ஆயிற்று.

மொழிகளின் பொதுவான வரலாற்றை அறிவதன் வாயிலாக, தமிழ்மொழியின் வரலாறு பெரும்பாலும் விளங்குகின்றது. ஆகவே இந்நூலில் பொதுவான மொழிவரலாற்றுப் பகுதிகளை விளக்க முயன்றுள்ளேன். தமிழ்மொழி பற்றிய சிறப்புப் பகுதிகளையும் இறுதியில் தந்துள்ளேன்.

மொழிவரலாறு மொழியியல் என்னும் இருதுறையும் சென்ற நூற்றாண்டில் வளர்ந்தனவாகும். அன்று முதல் நேற்று வரையில் இவ்விரு துறையிலும் கருத்துப்பூசல்களும் குழப்பங்களும் பல ஏற்பட்டுவந்தன. இன்று பூசல்களும் குழப்பங்களும் மறைந்து, கருத்துவேறுபாடுகள் மட்டுமே உள்ளன. அவற்றைக் குறித்துக் கவலையுறாமல், உண்மை உணரும் வேட்கையுடன் அறிய முயல்வார்க்கு, இவ்விரு துறைகளும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

மொழியியல் பற்றிய கருத்துக்களைச் சுருக்கி, 1947-ம் ஆண்டில் 'மொழி நூல்' என எழுதி முடித்தபின், மொழிவரலாற்றுக் கருத்துக்களையும் அவ்வாறே எழுதவேண்டும் என அவா எழுந்தது. அது இன்று ஒருவாறு நிறைவுறுகிறது.

இந் நூலை அழகிய முறையில் வெளியிட்டு உதவிய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கு நன்றியுடையேன்.

மு. வரதராசன்.

மேற்கோள்

தமிழ்

அமிதசாகரர் —யாப்பருங்கலம்
இளங்கோவடிகள் —சிலப்பதிகாரம்
இளம்பூரணர் —தொல்காப்பிய உரை
கூல வாணிகன் சாத்தனர் —மணிமேகலை
சங்கப் புலவர் —அகநானூறு
ஷ —பரிபாடல்
ஷ —புறநானூறு
சங்கர நமச்சிவாயர் —நன்னூல் உரை
சிவஞான முனிவர் —நன்னூல் விருத்தியுரை
சுப்பிரமணியன், தி. நா. —பண்டைத் தமிழ் எழுத்துக்
சுவாமிநாத தேசிகர் —இலக்கணக் கொத்து [கள்
சூரிய நாராயண சாஸ்திரி
யார் வி. கோ. —தமிழ்மொழி வரலாறு
சேனவரையர் —தொல்காப்பியச் சொல்லதி
திருவள்ளுவர் —திருக்குறள் [கார உரை
தென்னிந்தியக் கல்வெட்டுக்கள்
தொல்காப்பியனர் —தொல்காப்பியம்
நச்சினர்க்கினியர் —தொல்காப்பிய உரை
நாற்கவிராசநம்பி —நம்பியகப்பொருள்
பவணந்தியார் —நன்னூல்
போதினியர் —தொல்காப்பியப் பொருளதி
மயிலைநாதர் —நன்னூல் உரை [கார உரை
மாணிக்கவாசகர் —திருவாசகம்

ஆங்கிலம்

Anavaratavinayagam Pillai	—Sanskrit Elements in the Vocabularies of the Dravidian Languages.
Ballard, P. B.	—Thought and Language.
Beschi, Constantius Joseph	—A Grammar of the Common Dialect of the Tamil Language.
Bhandarkar, Sri R. G.	—Collected Works.
Bloomfield, L.	—Language.
Breal, Michael	—Semantics.
Brown, C. P.	—A Grammar of the Telugu Language.
Burnell, A. C., Dr.	—Elements of South Indian Palaeography.
Caldwell, Dr.	—A Comparative Grammar of the Dravidian Languages.
Chatterji, S. K.	—Indo-Aryan and Hindi.
,,	—The Origin and Development of the Bengali Language.
Davis, Rhys	—Buddhist India.
Dikshitar, V. R. R	—Pre-Historic South India.
Elliot, Charles	—Hinduism and Buddhism, An Historical Sketch.
Grierson, Dr.	—Linguistic Survey of India.
,,	—Imperial Gazetteer of India.
Gundert, Dr.	—Malayalam Dictionary.
Gune, P. D.	—An Introduction to Comparative Philology.
Heras. Rev. H.	—Light on the Mohenjo Daro Riddle.
,,	—Studies in Proto-Indo-Mediterranean Culture.

Hodgson	—Journal of the Asiatic Society of Bengal.
Hovelacque, Abel	—The Science of Language.
Jespersen, Otto	—Growth and Structure of the English Language.
,,	—Language Its Nature Development and Origin.
,,	—Linguistica.
,,	—Mankind Nation and Individual from a Linguistic Point of View.
,,	—Progress in Language.
Kephart, Calvin	—Sanskrit Language, Its Origin, Composition and Diffusion.
Kittel, Dr. F.	—A Grammar of the Kannada Language.
Maclean, Dr.	—The Manual of the Administration of the Madras Presidency.
Max Muller	—The Science of Language.
Naylor, Darnley H.	—Evolution of Language.
Noel-Armfield, G.	—General Phonetics.
Pillsbury, W. B. and Meader, C. L.	—The Psychology of Language.
Platts, John, T.	—A Grammar of the Hindustani or Urdu Language.
Pope, Rev. G. U.	—A Handbook of the Ordinary Dialect of the Tamil Language
Radhakrishnan, S. Dr.	—Eastern Religions and Western Thought.
Ramakrishnaiah, K.	—Studies in Dravidian Philology.

Ramaswami Aiyar, L. V.	—Studies in Dravidian Semantics.
Sayce	—Introduction to the Science of Language.
Schlegal, Gustar, Dr.	—Sinico-Aryaca.
Sesha Iyengar, T. R.	—The Ancient Dravidians.
Stevenson, Rev. Dr.	—Journal of the Asiatic Society of Bombay.
Sweet, Henry	—The Practical Study of Languages.
Tagore, Rabindranath	—Viswa-Bharathi.
Trevelyan, G. M.	—History of England.
Tucker, T. G.	—Introduction to the Natural History of Language.
Vendryes, J.	—Language.
Wade, G. W.	—Elementary Chapters in Comparative Philology.
Wells, H. G.	—A Short History of the World.
Whitney, William Dwight	—Language and the Study of Language.
,,	—The Life and Growth of Language.
Wilson, R. A.	—The Birth of Language.
Zipf, G. K.	—The Psycho-Biology of Language.

பொருளடக்கம்

பக்கம்

க. அரிய கலை 1

மொழியை வளர்ப்பவரும் மொழியால் வளர்பவரும்- சமுதாயமாய் வாழத் துணை செய்யும் கருவி-மனமும் மொழியும் - ஊமையின் அறிவு - நுண்கருத்துக்கள் மொழியால் வளர்தல், மொழியாராய்ச்சி - அறிஞர்க்கு விருந்து - மரணத்தை வென்றது.

உ. பேச்சுமொழியும் எழுத்துமொழியும் 6

எண்ணம், கனவு முதலியன - குருடர்மொழி - பேச்சு மொழியின் மதிப்பு - இலக்கியத்தின் சிறப்பு - படிக்காதவரின் பேச்சிலும் இலக்கணம் - ஈகர மக்களின் பேச்சும் நாட்டுப்புற மக்களின் பேச்சும் - இலக்கணக் கூறுகளும் மூளையும்- எழுத்துமொழி - வேறுபாடுகள்.

ங. உணர்ச்சி: அறிவு: செயல் 16

கருத்தை உணர்த்தப் பயன்படல் - கூடிப்பழக உதவுதல் - மூவகைப் பயன் - அறிவும் உணர்ச்சியும் - உணர்ச்சி மொழியின் செல்வாக்கு - செயல்மொழி.

ச. மொழியின் பண்பாடு 23

எது தமிழ்? - பலகால உழைப்பு - அறிவுச் செல்வம்- உள்ளத் தியல்பு - வளர்ச்சி.

ஞ. போலச் செய்தல் 30

மக்களின் சிறப்பியல்பு - கற்றல் எவ்வாறு? - விலங்கிற்கு இன்மை.

சு. ஒப்புமை யாக்கம் 34

இளமைக் கல்வி - பேச்சுமொழியைக் கற்றல் - தாய் மொழி இலக்கணம் - பிறமொழிச் சுமை - ஒழுங்குபடல்- மரபுக்கு மதிப்பு - பயில வழங்குவன - தவறுக அமைவன.

பக்கம்

எ. மூட நம்பிக்கைகள் 45

பெயரின் பெருமை - சாவின் அச்சம் - வறுமைக்கு அஞ்சுதல்.

அ. வழக்கம் 51

பயனுள்ளதாக்குதல் - பொருளும் பெயரும் - அறிகுறிகள் - காரணமும் உண்டு - பிறப்பு வரலாறு - பயனே நோக்கம் - வாழ்வும் கேடும் - தனிமனிதர் : சமுதாயம் - புலவர்களின் ஆற்றல்.

கூ. இலக்கணம் 65

பெயரும் வினையும் - ஏவல் முதலியன-இலக்கண வேறுபாடுகள் - திணையும் பாலும் - எண்பாகுபாடு - இடைச்சொற்கள் - துணைவினைகள்.

கo. நாகரிகம் 75

சொல் சில, பொருள் பல - நாகரிக வளர்ச்சி - நுண் பொருள்கள் - நினைவாற்றல் - அறிவின் படைப்பு - இடமும் காலமும்-முயற்சிச் சிக்கனம் - தமிழின் குறையா? - தாழ்வு மனப் பான்மை - தேவையும் வளர்ச்சியும்-பண்புச் சொற்கள்-கருத்தின் அருமைப்பாடு - குறையுள்ள கருவியே.

கக. ஒரு பொருட் கிளவிகள் 95

வெவ்வேறு சொற்களே - தனி வாழ்வு இல்லை - சில துறைகளில் ஆர்வம்.

கஉ. கடன் வாங்கல் 99

கலப்பு - எதிர்ப்பு - மாறி அமைதல் - எதிர்ப்பின் காரணம் - தனித் தமிழ்-வடமொழியும் தென்மொழியும்-திசைச் சொல் - வடசொல் - வடமொழியில் திராவிடச்சொற்கள்-ஆராய்ந்து காணும் முறை - கால்டுவெல் எடுத்துக்காட்டும் சொற்கள் சில - வரையறை - செல்வாக்கு - கடன் வாங்கக் காரணம் - பாகுபாடு - கடன்வாங்கப்படுவன - இலக்கணக் கலப்பு - வெற்றி தோல்விகள்.

பக்கம்

கஉ. மரூஉ 131

முயற்சிச் சிக்கனம் - பயின்று வழங்குவன - எண்ணுப் பெயர் முதலின.

கச. ஒலித்திரிபு 136

சில விதிகள்-ஒலிவேறுபாடுகள்-இயற்கையும் காரணம்-பொருள் தெளிவு - நா முயற்சி-சோம்பல் - மாறி அமைதல்-கேடு அன்று - மூவகை.

கரு. இலக்கிய மொழியின் செல்வாக்கு 149

சிறப்பு மொழி - மாறுதலுக்குத் தடை - தமிழும் மலையாளமும் - தாயும் குழந்தையும்.

கசு. கிளைமொழி 155

ஒருமொழியே பலவகை - இருவகைப் பான்மை - இயல்பாக வேறுபடுவது - பழக்கம் காரணம்-செந்தமிழ், கொடுந்தமிழ் - வேறுபாடு வளர்தல் - கிளைமொழிகள் குறைதல் - விளங்கும் நிலை-கிளைமொழியும் பொதுமொழியும் - மாறுதல் இயற்கை.

கள. பொதுமொழி 171

பொதுமொழி அமைதல் - காரணங்கள் - தலைநகரச் செல்வாக்கு - இலக்கியமொழி பொதுமொழியா? - சிறப்புக்கள் அமைதல் - மீண்டும் போராட்டம் - அன்றும் இன்றும் - கருத்துணர்த்தும் அவா - ஒருபொருட்கிளவிகள்.

கஅ. சிறப்புமொழி 186

வேறுபடும் வகை - உயர்வு தாழ்வு - கிளைமொழியும் சிறப்புமொழியும் - இலக்கியமொழி.

கக. குறுமொழி 193

செயற்கை - கவர்ச்சியும் வேறுபாடும் - புத்துணர்ச்சி-கொச்சை அன்று - பாட்டுமொழி வேறு.

பக்கம்

உ0. குழந்தைமொழி 201

குழந்தையும் பெற்றோரும்-மூவகை நிலை-ஒலி வளர்ச்சி-அறியாமையா? - கருத்து வளர்ச்சி - சொற்களும் இலக்கணமும் - விளக்கள் - தவறுகள் - தொகைகள் - வினைகள் - சுற்றுப்புற மொழி.

உக. மொழியின் தோற்றம் 218

பண்பட்ட நிலை - ஆராய்ச்சி முயற்சிகள்-மூளை வளர்ச்சி-குகையும் அரண்மனையும்-அடிச்சொற்கள்-கடவுள் படைப்பு-கற்றுவளர்தல் - குழந்தைமொழி - பழைய இலக்கியமொழி-காகரிகம் வளராதவர் மொழி - சமுதாய வரலாறு-சைகை மொழி - குரல் ஒலி - போலிமொழி-உணர்ச்சிமொழி-பண்பு மொழி - தொழில் ஒலி - இன்பப்பாட்டு.

உஉ. மொழி நிலைகள் 243

மக்களும் மொழியும் - தனிநிலை - சீனமொழி - ஒட்டு நிலை - உட்பிணைப்புநிலை - உயிர்மாற்றம்-சொற்றொகைநிலை - மொழிநிலையில் நாகரிகம் - பாகுபாடு-மாறுதல் - மொழியின் மாவட்டம் - வாக்கிய அமைப்பு-தனிநிலையின் சிறப்பு-தொகு நிலை-பிரிநிலை - பழக்கமே காரணம் - மாறுதல் - மாறுதலுக்குத் தடை - உரிமையும் கட்டுப்பாடும் - தேய்ந்து குறுகல்-அழகா? சுமையா? - இடையூறு - சீர்கேடு - முயற்சியும் பயனும் - எளிமையும் சிக்கனமும்-உருபுகள் எண் உணர்த்தல்-பெயரடைகளில் திணைபால் - தேவை இன்மை - பழங்கால வழக்கு - இக்காலப் பேச்சு வழக்கு - மலையாள வினைமுற்று-மாறுதலைப் போற்றல் - டச்சும் ஆங்கிலமும் - வளர்ச்சி.

உரு. மொழியினங்கள் 287

மக்களும் மொழியும்-மக்களினங்கள்-மொழியினங்கள்-மக்களினமும் மொழியினமும் - பொதுவான அடிப்படை - பிறமொழிகளை மதியாமை-பழம் பெருமை-வீருப்புவெறுப்பு-இலக்கியச் சிறப்பு - சொற்களால் உறவு காணல் - புதிய வழி காட்டி - அறிஞர்கள் - உண்மை உணராமை.

பக்கம்

உ. சித்திய மொழியினம் 306

சித்திய இனம் எது? - ராஸ்க் கருத்து - கால்டுவெல் ஆராய்ச்சி - ஒற்றுமைக் கூறுகள் - வரலாற்றுக் கருத்து - உண்மை எது? - மக்கள் வரலாறு - ஒற்றுமை சில.

உரு. ஆரிய மொழியினம் 319

கருத்து வேறுபாடுகள் - ஆரிய, திராவிட நாகரிகம் - மொழிக்கலப்பு - பெயர்ப்பொருத்தம் - திராவிட மொழிகளின் செல்வாக்கு - பாலி மொழி - வட இந்திய மொழிகள் - இந்தி - ஆரிய மொழிகள் அன்மை - ஒற்றுமைக் கூறுகள் - சித்திய உறவு - வடமொழி தாய் அன்று - காரணங்கள் - ஆரியம், திராவிடம் - ஒற்றுமைக் கூறுகள் - வேற்றுமைக் கூறுகள்.

உசு. திராவிட மொழியினம் 345

திருந்தியன, திருந்தாதன - தமிழ் - தெலுங்கு - கன்னடம் - மலையாளம் - துளு - குடகு - ஆதிமொழி - கோட மொழி - கோந்த்மொழி - கூ அல்லது கந்த் - ராஜ்மஹால் - ஒரொவன் - பிராஹூய்மொழி - மூவிடப் பெயர்களின் பொதுமை - முண்டாமொழிகள்.

உள. தமிழ் 360

தொன்மைச் சிறப்பு - மொழியின் வரலாறு - போதாமுயற்சி - முதல் மக்களினம் - வெவ்வேறு கொள்கைகள் - வரலாற்றுக் குறிப்புக்கள் - எழுதிப் போற்றுமை - வேறு பெயர்கள் - திராவிடம் என்ற சொல் - பழம் பெருமை - பொருள்களும் சொற்களும் - வாணிகச் சிறப்பு - வேந்தர் மரபுகள் - செம்மொழி, பெருமொழி - ஆரியக் கலப்பு - எளிதில் பெற்ற வெற்றி - தென்கோடித் தமிழர் - தென்னாட்டில் கலப்பு - செல்வாக்குப் பெற இயலாமை - தமிழின் இலக்கியத் தொன்மை - தெலுங்கின் தோற்றம் - கன்னடத்தின் தோற்றம் - மலையாளத்தின் தோற்றம் - மணிப்பிரவாளம் - மொழிப் பற்றுக்குறைவு - பிறர் உணர்த்திய பெருமை.

பக்கம்


உஅ. எழுத்து 394

எழுத்துமொழியின் ஆற்றல் - முன்னேற்றம் - மதிப்பும் அச்சமும் - எழுத்தின் தோற்றம் - ஓவிய எழுத்து - சீன எகிப்திய எழுத்துக்கள் - சிவப்பிந்தியர் எழுத்து - பலரும் அறிதல் - திரிபுகள் - அடையாள எழுத்துக்கள் - இன்றும் உள்ளவை - வளர்ச்சி - அசையோவிய எழுத்துக்கள் - ஒலி எழுத்துக்கள் - ஆப்பு வடிவ எழுத்துக்கள் - எழுதும் முறைகள் - அரபி எழுத்துக்கள் - அசையெழுத்துக்கள் - பேச்சும் எழுத்தும் - எழுத்தும் ஒலியும் - திராவிடமொழிகளின் எழுத்துக்கள் - தமிழ் எழுத்துக்கள் : வேறுபாடு - தமிழ் எழுத்து வரலாறு - வட்டெழுத்துக்கள் வேறு ; வடஇந்திய எழுத்துக்கள் வேறு - கடன் வாங்கினவை அல்ல - தொல் காப்பியத்தில் விளக்கப்படும் எழுத்து வடிவம் சில - பிற்கால மாறுதல்கள்.

உக. எண்கள் 440

வளர்ச்சி - வெவ்வேறு முறைகள் - கைவிரல் காரணம் - எழுத்து வடிவங்கள்.

மொழி வரலாறு



க. அரிய கலை

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரிய தொரு கலை; மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல்; அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதிலேயே ஆகும். குழந்தையின் மன வளர்ச்சியோடு ஒத்து வளர்ந்துவருவது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழி யால் வளர்ந்து அமைந்தது; மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சிபெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

பலர் சேர்ந்து ஒரு சமுதாயமாய் ஓர் இனமாய்ப் பழகி வாழ்வதற்குத் துணையாக உள்ள சிறந்த கருவி மொழியே. பலர் ஓர் இனமாய் வாழ்கின்றனர் என்பதற்கு உண்மை யான அறிகுறி அவர்களின் நிறம் முதலிய எவையும் அல்ல; அவர்கள் பேசும் மொழியே உண்மையான அறிகுறி எனலாம். சமுதாய வாழ்வுக்கு அறிகுறியாக உள்ள மொழியே, அந்தச் சமுதாய வளர்ச்சிக்கும் காரணமாக

உள்ளது. சமுதாயத்தால் வளர்ந்து சமுதாயத்தை வளர்த்து வருவது மொழி எனலாம்.[1]

மனிதனது மனத்தை விடுத்து ஆராய்ந்தால், மொழியைப் பற்றி அறியத்தக்கதாக ஒன்றும் இல்லை. [2]மொழியை வளர்த்தது மனமே; மனத்தின் இயற்கையைக் காட்டவல்லதாக, மனத்தின் எதிரொளியாக (பிரதிபலிப்பாக) உள்ளது மொழியே. [3]மனிதரின் தொடர்பு இல்லாமல் தனியே வளர்ந்து வாழ வல்லது என மொழியைப் பற்றிக் கருதுதல் பொருந்தாது. பேசும் மக்களை விட்டுத் தனியே மொழி என்பது இல்லை. மனிதர் ஒவ்வொருவரின் அறிவின் ஆழத்திலும் மொழி வேர்கொண்டுள்ளது; அங்கிருந்தே மொழி வளர்ச்சி பெற்று விளங்குகிறது.[4]

---

1. In any social group, whatever its nature and however large it may be, language plays a role of primary importance. It is the strongest of the bonds uniting the members of the group, and is at the same time the symbol and safeguard of their common life. Flexible, fluid, and full of fine shades of meaning, it lends itself to many and varied uses, and constitutes the bond that unites the members of a group; it is their sign of recognition, and their badge of brotherhood.—J. Vendryes, Language, p. 240.

2. Apart from the human mind, language has neither life nor reality.—M. Breal, Semantics, p. 280.

3. A language is the reflection of human consciousness, and betrays the nature of the mind which conceives it. —J. Vendryes, Language, p. 357.

4. It is quite wrong to think of language as an ideal entity evolving independently of men and pursuing its own ends Language does not exist apart from the people who think and speak it; its roots go deep into the consciousness of each one of us; thence it is that it draws the sustenance enabling it to blossom in speech.—J. Vendryes, Language, p. 359.

பொருள்களை மட்டும் அறியும் அறிவு ஊமைக்கு உள்ளது; மொழிவளர்ச்சி இல்லாமையால் மேலும் அறிவை வளர்க்க வாய்ப்பு இல்லை. நாகரிகம் தொடங்குமுன்பு, மக்களுக்குப் புலன்கள் வளர்ந்திருந்தன; இயற்கையும் வளம் மிக்குக் காத்துவந்தது; ஆயின் அக்காலத்து மக்கள் அறிவு வளர்ச்சி பெறவில்லை. பேசக் கற்றுச் சொற்களைப் படைத்துக்கொண்ட பிறகே அறிவு வளரத் தொடங்கியது. பேச்சுடன் நிற்காமல் எழுத்துமுறை கற்றுச் சொற்களை மிகப் பயன்படுத்தத் தொடங்கிய பிறகே, அறிவு விரைவாக வளரலாயிற்று. மிகப் பழங்காலத்து மக்களுக்குக் கைவிரல்களின் எண்ணிக்கை பற்றி ஒருவகை அறிவு இருந்தது; காய்கள் கனிகள் முதலியவற்றை ஒருவாறு கணக்கிட்டுப் பழகியிருப்பர். ஆயின், கணக்கு என்னும் கலை அந்நாளில் வளரவில்லை. ஒன்று இரண்டு மூன்று முதலான சொற்களைப் படைத்துக்கொண்ட பிறகே கணக்கறிவு வளர்ந்தது. கணக்கறிவுக்கு எண்ணுப் பெயர்கள் எவ்வாறு இன்றியமையாதனவாக இருந்தனவோ, அவ்வாறே பொது அறிவுக்குச் சொற்கள் இன்றியமையாதனவாக இருந்தன. சொற்கள் பொருள்களுக்குக் குறியீடுகளாக வழங்குவனவே. எனினும் அத்தகைய குறியீடுகள் இன்றி அறிவு வளர வழி இல்லை. நுண்கருத்துக்களிலேயே பயின்று தேர்ச்சி பெறும் அறிஞரும், அவற்றிற்குப் பல குறியீடுகளை வைத்தே விளக்கம் பெறவும் பிறர்க்கு விளக்கம் அளிக்கவும் முடிகிறது. நுண்கருத்துக்களை மட்டும் எண்ணும்போது அறிவு தடுமாறுகிறது; திகைக்கிறது. குறியீடுகளை வைத்து வழங்கும்போது தெளிவு பெறுகிறது; உணரவும் உணர்த்தவும் ஆற்றல் எய்துகிறது; கைக்கு எட்டாத ஒன்றைப் பற்றிக் கையாள்வது போன்ற நம்பிக்கை பெறுகிறது.

இவ்வாறு மொழியின் இயல்பை ஆராய்ந்து காணக் காண, மொழியியல் மனித இயல்பையே காட்டுவதாக விளங்குகிறது. மனிதன் தன் மூளைகொண்டு பாடுபட்டு அமைத்துப் போற்றிடும் சிறந்த நாகரிகக் கருவி மொழியே.[1] எத்தனையோ தடைகளையும், சில காலங்களில் நேரும் காலத்தாழ்வு பிற்போக்கு ஆகிய எல்லாவற்றையும் கடந்து மனிதன் மொழியை எப்படியோ வளர்த்துக் காத்துவந்திருக்கிறான் என்பது ஆராய்ச்சியால் புலனாகும்.

மொழியாராய்ச்சியில் ஈடுபட்டவர் தவிர மற்றவர் களுக்கு இந்த ஆராய்ச்சி வீண் முயற்சியாகவும் தொல்லை யாகவும் தோன்றும். ஆயின், ஆராய்ச்சியாளனுக்குச் சொற்களின் அமைப்பு இலக்கண அமைப்பு முதலானவை புதுமை இன்பம் பயப்பதால், ஒவ்வொரு சொல்லும் விருந்தாகத் தோன்றும். கல்உடைக்கும் தொழி லாளிக்குத் தொல்லை தருவனவாகத் தோன்றும் கற்கள், நிலவியல் ஆராய்ச்சியாளனுக்கு வியப்பை விளைத்து இன்பம் பயப்பதைப் போன்றது இது என்று மாக்ஸ் முல்லர் கூறியுள்ளார்.[2]

மனிதருடைய உடலமைப்பு நிறம் முதலியவை பற்பல வகை. ஒவ்வொன்றிலும் எவ்வளவோ வேறுபாடுகள் உள்ளன. பண்புகளில் உள்ள வேறுபாடுகளும் கணக் கற்றவை. இவற்றின் காரணங்களோ எளிதில் ஆராயக் கூடியனவாக இல்லை. மூளையோ ஆராய்ச்சிக்கு எட்டாத நுண்ணிய வேறுபாடுகளை உடைய கருவியாக உள்ளது.

1. The science of language expresses man to himself: it shows him how he has constructed and perfected the most necessary instrument of civilisation, despite obstacles of every kind, despite inevitable delays, despite even momentary retrogressions.—M. Breal, Semantics, p. 2.

2. Max Muller, The Science of Language, p. 2.

மக்களின் அறிவுத் துறையில் சிக்கல்கள் மிகுந்துள்ளமைக்குக் காரணம் அதுவே. அறிவின் ஆற்றல் மிக்க கருவியாகிய மொழித் துறையிலும் அத்துணைச் சிக்கல்களும் உள்ளன. ஆகவே, மொழியின் வளர்ச்சி இத்தன்மையானது எனச் சில சொற்களால் தெளிவுபடுத்தல் இயலாது. ஆயினும் சமுதாய வளர்ச்சியை ஒட்டி மொழி வளர்ச்சி அமைவதால், ஒரு வரையறைக்கு உட்படுத்திக் கூறவேண்டுமாயின், பொதுமொழிகள் சமுதாயத்தால் அமைபவை என்று கூறலாம்.[1]

மொழி பேச்சுமொழியாக மட்டும் இருந்தபோது, மக்கள் மற்ற உயிர்களைவிடச் சில படிகள் முன்னேறிய வராக வாழ்ந்தனர். பேச்சுமொழியை எழுதத் தொடங்கி எழுத்துமொழியைப் படைத்தவுடன் மக்களின் வாழ்வு பல படிகள் முன்னேறியது. அச்சுப்பொறி வந்தவுடன், அந்த முன்னேற்றம் விரைவுடையதாயிற்று. எழுத்து மொழி ஆற்றல் மிகுந்ததாக வளர்ந்துவிட்டது. மனிதனால் கடக்கமுடியாத இடத்தையும் காலத்தையும் கடந்துவாழும் ஆற்றலை மொழி பெற்றுவிட்டது. மனிதனால் வெல்ல முடியாத மரணத்தை — அழிவை — மொழி வென்று விட்டது.

மக்களின் வாழ்வில் பிறந்த கலை மொழி; மக்களால் வளர்க்கப்படும் கலை மொழி; மக்களின் வாழ்வை நாகரிக முடையதாக உயர்த்திவரும் அரிய கலையும் மொழியே.

---

1. Our intellectual life is extraordinarily complex, and its most potent instrument, language, is also extraordinarily complex in consequence. The condition of its evolution cannot be reduced to a single definite formula, unless we are content with the one formula that covers everything, standard languages are socially determined.—Otto Jesperson, Mankind Nation and Individual, p. 73.

உ. பேச்சுமொழியும் எழுத்துமொழியும்

பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி; ஆயினும் எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்த நிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும். இவைகளே அன்றி வேறுவகை மொழிநிலைகளும் உண்டு. எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவுகாணப்படுவது ஆகியவைகளும் மொழியே ஆகும்.

மிகப் பழங்காலத்தில் வாழ்ந்திருந்த சில விலங்குகளின் உடலமைப்பு இன்னதெனக் காட்டும் கல்மாறிகளைப் (Fossils) போன்றவை வழக்கிறந்த மொழிகள். விலங்குகளின் உடல்உறுப்புக்கள் கல்லில் படிந்து விளங்குவது போல், ஒரு காலத்தில் மக்களால் பேசப்பட்டுவந்த ஒரு மொழி இலக்கிய வடிவில் ஓர் அளவிற்கு அழியாமல் நின்று அதன் தன்மையைக் காட்டுகின்றது.

புலன்களால் உணரப்படும் குறியீடுகள் உடையது மொழி எனலாம். பொருள்களுக்கு உரிய ஒலிவடிவான குறியீடுகள் கொண்டது பேச்சுமொழி ஆகும். வரிவடிவான குறியீடுகள் கொண்டது எழுத்துமொழி ஆகும். இவை செவிப்புலனும் கட்புலனும் பற்றுக்கோடாகக் கொண்டு வழங்கும் மொழிகள். தொட்டு அறியும் குறியீடுகளால் அமைந்தது—உற்றறியும் மொழியாக உள்ளது—குருடர் கற்கும் எழுத்துமொழி.

கற்றவர்களே மொழியாராய்ச்சி செய்தல் கூடும். அவர்கள் மொழியாராய்ச்சி செய்யத் தலைப்பட்டபோது, பேச்சுமொழியை மதிக்காமல், கற்ற புலவர்கள் எழுதிய இலக்கியங்களையும் எழுத்துவடிவு பெற்ற மற்றவற்றையுமே மொழியாக மதித்து, ஆராய்ச்சி செய்யத் தொடங்கி

னர்கள்.[1] அத்தகைய ஆராய்ச்சியால் போதிய பயன் விளையவில்லை; உண்மை காண இயலவில்லை. தடுமாற்றமும் தவறுமே கண்ட பயன்கள். மொழி என்பது உண்மையாக நோக்கின், ஒருவர்க்கு ஒருவர் நேரே நின்று கருத்தை உணர்த்தும்போது பயன்படும் கருவியே ஆகும். அவ் வாறு நேரே நின்று உணர்த்த முடியாதபோது, அதற்கு உதவியாக வந்து அமைந்த துணைக்கருவியே இலக்கியம், கல்வெட்டு, கடிதம் முதலிய எழுத்து வடிவங்கள். பேச்சு மொழி ஒருவரின் உடல்போன்றது என்றால், எழுத்து மொழி அவருடைய படம் போன்றது எனலாம். ஆகவே, மொழியாராய்ச்சிக்கு எழுத்துமொழி எவ்வளவு பயன்பட்டபோதிலும், பேச்சுமொழி இன்றியமையாததாக உள்ளது. இதுபற்றியே மொழியின் உயிர், வாய்க்கும் செவிக்கும் இடையே உள்ளது என்றும், எழுது கோலுக்கும் கண்ணுக்கும் இடையே இல்லை என்றும் கூறுவர். பேசுவோர் இருவர்க்கு இடையே மொழியின் உண்மைநிலை அறியலாம் என்பதும், எழுதுவோர் படிப் போர்க்கு இடையே உள்ள மொழி ஓரளவே மொழி யாராய்ச்சிக்குத் துணைசெய்யும் என்பதும் அறிஞர் கருத் தாகும். பொதுவாக மக்களுக்குப் பயன்படும் முறையை நோக்கினால், பேச்சுமொழியைவிட எழுத்துமொழியாகிய இலக்கியமே மிகுதியாகப் பயன்படுவது எனக் கூறலாம். அது வேறு. இங்கு மொழியியல் ஆராய்ச்சிக்கு மிகுதி யாகப் பயன்படுதல் பற்றியே கருதல் வேண்டும்; இவ்வகை யில் பேச்சுமொழி பெரிதும் பயன்படுதல் உண்மை எனக் காணலாம். மொழியியல் ஆராய்ச்சியாளர், ஒரு மொழியின்

1. People were taught to look down upon modern languages as mere dialects, and to worship Greek and Latin. —Otto Jespersen, Progress in Language, p. 9.

சிறப்பு வேறு என்றும், அதில் அமையும் இலக்கியத்தின் சிறப்பு வேறு என்றும் இரண்டையும் தனித்தனியே பிரிப்பர். ஒரு மொழியில் உயர்ந்த இலக்கியங்கள் அமைவது எதிர்பாராத நிகழ்ச்சி என்றும், உயர்ந்த இலக்கியங்கள் இருந்தலே நோக்கி அந்த மொழி மிகச் சிறந்த மொழி என்று கூறலாகாது என்றும் யெஸ்பர்ஸன் கருதுகிறார்.[1] மொழிகளின் வரலாற்றை ஆராயின், அவர் கருத்து உண்மையெனத் தோன்றுகிறது. அரசியல், வாணிகம் முதலிய காரணங்களால், ஒரு நாட்டு மக்கள் செல்வாக்குப் பெறுவதற்கு ஏற்ப அவர்களின் மொழியும் செல்வாக்குப் பெற்றுப் பரவுகிறது செல்வாக்குள்ள மொழியில்—பெரும்பாலோர் போற்றும் மொழியில்—எழுதினால் எழுதுவோர்க்கு மிக்க பயன் விளைகிறது; எழுதும் நூலும் நன்கு பரவுகிறது; ஆகவே எழுதும் ஆற்றலுள்ளவர்கள் அத்தகைய மொழியைக் கற்றுத்தேற முயல்கின்றனர்; கற்றுத் தேறியபின் அந்த மொழியிலேயே தம் கற்பனைகளையும் தாம் கண்ட உண்மைகளையும் எழுத முயல்கின்றனர். மொழிக்கு ஏற்படும் இத்தனைய செல்வாக்கு, அறிஞர்களைக் கவரும் கவர்ச்சியாக அமைந்து, இலக்கியம் பெருகுவதற்குக் காரணமாக நிற்கிறது.

---

1. Too much stress is laid on the literary merits of great writers, which have really no intrinsic connexion with the value of a language as such. It depends to a great extent on accidental circumstances whether a language has been or has not been used in elevated literature, and its merits should be estimated, so far as this is possible, independently of the perfection of its literature.—Otto Jespersen, Language, p 30.

நம் நாட்டு அறிவியல் பேரறிஞரான சர். சி. வி. இராமன் முதலானவர் தமிழில் எழுதாமல் ஆங்கிலத்தில் எழுதி அம் மொழியை வளம்படுத்துதற்கும் இதுவே காரணம் என்பது இங்குக் கருதத்தக்கது.

படித்த மக்களின் பேச்சில் உள்ள இலக்கணம் படிக்காத மக்களின் பேச்சிலும் உள்ளது. படித்தவர்கள் சொற்களைத் திருத்தமாக ஒலிக்கின்றனர்; நாகரிகமான சொற்களைத் தெரிந்தெடுத்துப் பேசுகின்றனர்; திருத்தமாக ஒலித்தலும் நாகரிகமாகப் பேசுதலும் இலக்கணம் அல்ல. சொற்களைத் தக்க இடங்களில் அமைத்தலும் சொற்களோடு ஏற்ற உருபு முதலியவற்றைச் சேர்த்தலுமே இலக்கணம் எனப்படும். இத்தகைய இலக்கணம் படிக்காத மக்களின் பேச்சிலும் உள்ளது.

இவ்வாறு ஆராயின், நகர மக்களின் பேச்சிற்கும் நாட்டுப்புற மக்களின் பேச்சிற்கும் இலக்கண அமைப்பில் வேறுபாடு இல்லை. இரண்டும் இலக்கணம் உடையனவே. வெண்ட்ரியே என்னும் அறிஞர் நாட்டுப்புற மக்களின் பேச்சில் இலக்கணம் கடுமையாக உள்ளது என்றும், படித்தவர்களைப் போல் அவர்கள் இலக்கணம் நெகிழ விட்டுக்கொடுப்பதில்லை என்றும் கூறுகிறார்.[1] தமிழிலும் இது உண்மையே. படித்தவர்கள் 'எனது குரு,' 'அவள் ஒருவள்' என்று எழுதினாலும் பேசினாலும், படியாத கிராம மக்கள் 'என் குரு,' 'அவள் ஒருத்தி' என்னும் வழக்கிலிருந்து மாறுவதே இல்லை.

பேச்சுமொழி எழுத்துமொழி என்ற பாகுபாட்டையும் கடந்து ஒரு மொழியில் தொன்றுதொட்டு அடிப்

1. They (cultured people) imagine that rules only exist in the books given to school boys, and that an unwritten language cannot have any rules. This is a fallacy. Rural speech or dialect as we call it, is often governed by stricter rules than the languages learned from grammars. It is written languages that admit of doubts and discussions among scholars. .....The peasant will affirm that the correct method of speech ends with the brook which bounds his own side of the valley.—J. Vendryes, Language, p. 242.

படையாய் இருந்துவருவது இலக்கணமாகும். நம் முன்னோரிடமிருந்து நாம் கற்றபோது, வாக்கியத்தில் முதலில் அமையும் சொல் இது, முடிவில் அமையும் சொல் இது, இடையே அமைபவை இவை, ஒன்றோடொன்று இயைதல் இப்படி என்பவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்காமலே கற்றுக்கொள்கிறோம். 'அதைச் செய்து விட்டு வா' என்ற வாக்கியத்தைக் கற்றபோது, அது போன்ற பல வாக்கியங்களின் அடிப்படையைக் கற்றுக் கொண்டோம். பல வாக்கியங்களைக் கேட்டுக் கேட்டு அந்த அடிப்படை நினைவில் ஊறிவிடுகிறது. அதனால்தான் நாமாகப் பேசும்போது, 'படத்தைப் பார்த்து விட்டுப் போ' என்கிறோம். இதைப் பேசத் தெரிந்து கொண்டோம் என்றால், பெயர்ச்சொல்லோடு இரண்டாம் வேற்றுமை உருபைச் சேர்க்கும் முறை, வினைச்சொல்லோடு இறந்தகால இடைநிலை சேர்த்து அதை வினையெச்சமாக்கும் முறை, அந்த வினையெச்சத்தோடு இறந்தகாலத் துணைவினை சேர்க்கும் முறை, அந்தத் துணைவினையாகிய எச்சத்தை அடுத்து முற்றுவினை சேர்க்கும் முறை முதலிய எவ்வளவோ இலக்கணக் கூறுகளை நம்மை அறியாமல் கற்றுக்கொண்டவர்களாகிறோம். நம் முன்னோர்களும் இவ்வாறே அவர்களுடைய முன்னோர்களிடமிருந்து கற்றனர். இப்படியே முன்னோர் முன்னோர் என்று பல தலைமுறைகளாக மொழியின் அடிப்படை மாறாமல் கற்கப் பட்டு வந்திருக்கிறது. தாய்மொழியை நினைவு வைத்துக் கொள்வதாகிய அதுவே மொழியின் அடிப்படை என்பர் அறிஞர் பிரீல்.[1] இத்தகைய அடிப்படையாக அமையும்

1. We bear in our minds a sort of grammar which, sooner or later, ends by leaving its mark on language ..... The inner form of language is nothing but remembrance of the mother-tongue.—M. Breal, Semantics, p. 304.

இலக்கணத்தை எவரும் புறக்கணிக்க இயலாது. 'விட்டு போ ஐ படம் து பார்' என்று மாற்றிக் கூறுதல் போல் முயன்று அதைப் புறக்கணித்தால் ஒருவருக் கொருவர் விளங்காத மொழிக் குழப்பம் ஏற்படும். ஒருவர் கருத்து மற்றவர்க்கு விளங்குவதற்காகவே மொழி கையாளப்படுதலால், இத்தகைய புறக்கணிப்புக்கும் குழப் பத்திற்கும் யாரும் எப்போதும் இடம் தருவதே இல்லை; ஆகவே, எல்லோரும் தம்மை அறியாமலே மொழியின் அடிப்படையாகிய இலக்கணத்தைப் போற்றிக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்துவருகின்றனர் என்பது தெளிவாகிறது.

மொழியைப்பற்றி உளநூலார் பலவகை ஆராய்ச்சி கள் செய்துவருகின்றனர். மூளையில் கருத்துக்களைக் கொள்ளும் வகைகளுக்கும் மொழியில் உள்ள இலக்கணக் கூறுகளுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா என்று ஆராய்ந்துள்ளனர். அத்தகைய தொடர்பு ஒன்றும் இல்லை என்பதே அவர்களின் முடிவு.[1] ஒரு மொழியில் வேற் றுமை எட்டு என இலக்கணக்காரர் கூறுகின்றனர். மற்றொரு மொழியில் ஐந்து என்கின்றனர். இன்னொரு மொழியில் பதினாறு என்கின்றனர். மூளையின் கருத்துக் கொள்ளும் வகைகளை ஒட்டி வேற்றுமைப் பாகுபாடுகள் அமைந்திருந்தால், எல்லா மொழியிலும் வேற்றுமைகள் எட்டாகவோ, ஐந்தாகவோ ஒரே எண்ணிக்கையாக அமைந்திருக்க வேண்டும் அன்றோ? அவ்வாறு இல்லை. இலக்கணக் கூறுகள் எதிர்பாராமல் ஒரு வகையாய்த்

1. There is no connection between the nature of the mental categories and the number and complexities of the grammatical categories. The latter depend primarily upon memory.—J. Vendryes, Language, p. 356.

தொடக்கத்தில் அமைய, அவற்றை அவ்வாறே தலைமுறை தலைமுறையாகப் போற்றிப் பயன்படுத்திக்கொள்கின்றனர். என்றோ அமைந்த மண்வெட்டியை இன்று வரையில் அவ்வாறே வைத்துப் பயன்படுத்திக்கொள்ளவில்லையா? அதுபோன்றதே இதுவும் ஆகும். எண்களைப் பத்துப்பத்தாக எண்ணுவதும் எதிர்பாராமல் அமைந்த அமைப்பே ஆகும். மனிதனுடைய கைவிரல்களுக்கும் பத்துப் பத்தாக எண்ணும் முறைக்கும் தொடர்பு உண்டே தவிர, மூளைக்கும் அதற்கும் தொடர்பு காணமுடியாது. மூளைக்கும் மூளையில் கருத்தைக்கொள்ளும் முறைக்கும் ஒருவகையில் தொடர்பு இருப்பதாகக் கருதலாம். ஆனால், பகுதி விகுதி இடைநிலை முதலியவற்றோடு தொடர்பு காண முடியவில்லை.

மூளையின் கூறுபாடுகளுக்கும் இலக்கணப் பாகுபாடுகளுக்கும் தொடர்பு கூற முடியாவிடினும், மூளை வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் தொடர்பு உள்ளது எனலாம். அறிவுவளர்ச்சி மிக்க மக்கள் பேசும் மொழி பலவகைச் சொல்வளம் பொருள்வளம் பெற்று விளங்கக் காணலாம்; அத்தகைய வளர்ச்சி இல்லாத மக்கள் பேசும் மொழி, சொல்வளம் பொருள்வளம் குறைந்த மொழியாக உள்ளது. ஆகவே, ஒரு மொழியின் சொற்பொருள் வளமும் வறுமையும் பேசுவோரின் மனவளத்தையும் வளமின்மையையும் ஒட்டி அமைவதாகக் கூறலாம்[1]

1. The content of any language, in words and phrase and their meanings, must correspond with and be measured by the mental wealth of the community to whom it belongs, and must change as this changes.—Whitney, Language and the Study of Language, p. 139.

Language is enriched and impoverished along with the enrichment or impoverishment of their minds.—ibid.

பேச்சுமொழி ஓடும் ஆறுபோன்றது என்றும், எழுத்துமொழி அந்த ஆற்றில் மிதக்கும் பனிக்கட்டி போன்றது என்றும் வெண்ட்ரியே கருதுகிறார்.[1] மிதக்கும் பனிக்கட்டி நீரின்மேல் உள்ளது; நீரால் ஆகியதே. எழுத்துமொழியும் பேச்சுமொழியை அடிப்படையாகக் கொண்டதே; பேச்சுமொழியிலிருந்து வளர்ந்ததே. குளிர் மிகுதியால் பனி உறைந்து வேறுப்பட்டதுபோல், கற்றவர்களின் தனிப் போக்கால் மொழி இறுகி அமைவதே இலக்கிய மொழி. உறைந்த பனி உருகி நீராகி ஓடச் சூரிய ஒளி வேண்டும்; இலக்கிய மொழி நெகிழ்ந்து பலர்க்கும் பயன்பட வேண்டுமானால், பொது மக்களின் செல்வாக்கு மிக வேண்டும் என்கிறார். பிரெஞ்சு மொழியில் பேச்சும் எழுத்தும் வேறு வேறு மொழியாக விளங்குவதையும், சீனாவில் இலக்கிய மொழி பேச்சு மொழிக்கு மாறாக இருப்பதையும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார். அரபி மொழியிலும் இவ்வாறான நிலை உள்ளது.

பேச்சுமொழி, உள்ளத்து உணர்ச்சியின் தூண்டுதலால் இயல்பாகத் தானேவரும் மொழி. எழுத்துமொழி, அறிவின் முயற்சியால் ஒழுங்குசெய்து அமைக்கப்படும் மொழி. முன்னது, மழைநீர் திரண்டுவரும் வெள்ளம் போன்றது. பின்னது, அணைகட்டித் தேக்கியநீர் வாய்க்கால்களில் வருவது போன்றது. ஆதலால் எழுத்துமொழியில் எழுவாய் பயனிலை செயப்படுபொருள் முதலியன அமைவதில் ஒழுங்குமுறை காணப்படுகிறது. பேச்சுமொழியிலோ, உணர்ச்சி வயமாய்ப் பேசுவோரின் உள்ளத்தில் எது முதலில் தோன்றுகிறதோ, அதற்கு உரிய சொல்லே முதலில் வெளிப்படுகிறது. ஆகவே, பேச்சுமொழியில்

1. J. Vendryes, Language, p. 278.

சொற்கள் மனம்போன போக்கில் அமைகின்றன எனலாம்.[1]

பொதுமக்களின் பேச்சுமொழிக்கும் இலக்கியத்தின் பண்பட்ட மொழிக்கும் உள்ள வேறுபாடு பெரிது; இயற்கையுணர்ச்சிக்கும் (instinct) விருப்பக் கொள்கைக்கும் (intention) உள்ள அவ்வளவு வேறுபாடு இவற்றிடையே உள்ளது என்பர் அறிஞர்.

பேச்சுமொழியில் அமையும் வாக்கியத்திற்கும் எழுத்துமொழியில் அமையும் வாக்கியத்திற்கும் வேறுபாடு உண்டு. பேச்சுமொழியின் வாக்கியம் சுருங்கியது, எளியது, நேரானது, இயற்கையானது, தெளிவானது. எழுத்து மொழியின் வாக்கியம் பெரும்பாலும் அதைவிட நீண்டது, செயற்கையாக அமைத்துக்கொண்டது, சிக்கல் உடையது. காரணம் என்ன? பேசுவோர், எண்ணும் எண்ணங்களுக்கு உடனே ஒலிவடிவு கொடுத்து வெளியிடுகின்றனர்; ஆகவே சுருங்கிய நேரத்தில் குறைந்த மூளை உழைப்பால் அமைந்தவை அவர்களின் வாக்கியங்கள். எழுதுவோர், பற்பல எண்ணி அமைத்திற்கும் எழுத்துவடிவு கொடுத்து வெளியிடுகின்றனர்; மூளை அமைதியாக இருந்து நீண்ட நேரம் உழைக்கும் உழைப்பால் அமைந்தவை அவர்களின் வாக்கியங்கள். மீடர் என்னும் அறிஞர் குறிப்பிடும் கணக்கின்படி, பேச்சு வாக்கியம் சராசரி மூன்றரைச் சொற்கள் உடையது.[2] எழுத்து வாக்கியம் சராசரி ஆறரைச் சொற்கள்

1. The logical order in which the words of the written sentence are introduced and set is always more or less dislocated in the spoken sentence.—J. Vendryes, Language, p. 145.

2. Statistics covering a large number of instances show an average length of about three and a half words for conversation and six and a half words for written matter.—Pillsbury and Meader, The Psychology of Language, p. 259.

உடையது. தனிநிலை அமைந்த (isolative) ஆங்கிலமொழியின் நிலைமை இது. ஒட்டுநிலை மிகுந்த (agglutinative) தமிழில் பேச்சு வாக்கியம் சராசரி இரண்டு சொற்கள் உடையது என்றும், எழுத்து வாக்கியம் நான்கு அல்லது ஐந்து சொற்கள் உடையது என்றும் கூறலாம்.

இலக்கணத்தை நோக்கின், பொதுமக்களின் பேச்சில் உள்ள இலக்கணக் கூறுகளே நாளடைவில் வெற்றி பெறுதல் காணலாம். எடுத்துக்காட்டாக ஒன்று காண்போம். வெறும் பெயர்ச்சொல்லாக வழங்கும் மரம், ஆடு, மாடு முதலியவற்றை ஒருமை என்றும், கள் விகுதி சேர்ந்த மரங்கள், ஆடுகள், மாடுகள் முதலியவற்றைப் பன்மை என்றும் அறிஞர் வகுத்தனர். பேசும் பொதுமக்களோ, பன்மையைக் குறிக்கும்போதும்,

பத்து மரம்
எட்டு ஆடு
ஏழு மாடு

என்று கள் விகுதி சேர்க்காமலே பன்மைப் பொருளில் வழங்கினர். பொதுமக்களின் முறையே மொழியில் வேரூன்றி நின்றதை கண்ட தொல்காப்பியனார், அஃறிணைப் பெயர்ச்சொற்கள் பன்மைப்பொருளை உணர்த்தும்போது கள் விகுதி பெற்று நிற்றலும் உண்டு (பெறாமல் நிற்றல் பெரும்பான்மை) என்று விதியும் வகுக்க நேர்ந்தது.[1]

ஆகவே, பேச்சுமொழி செல்வாக்கு மிகுந்தது என்பதும், அதன் செல்வாக்கு மொழியின் இலக்கணத்திலும் காணப்படும் என்பதும் தெளிவாகும்.

---

1. கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி உடைய பலவறி சொற்கே.
—தொல்காப்பியம், சொல், 169.

ஈ. உணர்ச்சி : அறிவு : செயல்

மொழி, கருத்தை உணர்த்துவதற்காக மட்டும் ஏற்பட்டது அன்று. சிந்தனையாளர்கள் கருத்து மிக்கவர்கள். அவர்கள் தம் கருத்தை உணர்த்துவதற்கு மொழியைப் பயன்படுத்துவது உண்மையே. ஆனால், மக்கள் பலர் ஒருவரோடு ஒருவர் கூடிப் பழகி மகிழ்வதற்காகவே பெரும்பாலும் மொழியைப் பயன்படுத்துகின்றனர். குழந்தைக்கு நாக்கு ஒரு விளையாட்டுக் கருவியாக உள்ளது என்றும், அதைக்கொண்டு பலவகை ஒலிகளை ஒலித்து மகிழ்கின்றது என்றும் கூறுவர். குழந்தைக்கு மட்டும் அல்லாமல், வளர்ந்த மனிதனுக்கும் மொழி அத்தகைய கருவியாகவே உள்ளது. ஒருவர் மற்றவர்களோடு பழகி மகிழ்வதற்கு முகக்குறிப்புப் போதவில்லை; கை முதலியவற்றின் செயல்களை மிகையாக உள்ளன; பேச்சு ஒன்றே அளவுடன் அமைந்த நாகரிகக் கருவியாக உள்ளது. மனிதன் தனித்து ஒதுங்கி வாழமுடியாதவன் ஆகையால், சமுதாயத்தில் கலந்து பழகுவதற்கு இத்தகைய பேச்சைப் பயன்படுத்திக் கொள்கிறான். நான்குபேர் கூடியுள்ள இடத்தில் ஒருவரோடு ஒருவர் பேசாமல் இருத்தல் இயலாது; பேசாமல் இருத்தல் குற்றமாகவும், பகை அல்லது வெறுப்பின் அறிகுறியாகவும் உள்ளது. அந்நிலையில் பேச்சு அவர்களுக்கு உதவியாக வந்து அமைகிறது. புதிதாக ஒருவரைக் கண்டபோது, கைகூப்பி வணக்கம் செலுத்துதல், புன்முறுவல் காட்டல், தலையில் உள்ள தொப்பியைத் தூக்கி அசைத்தல் முதலியவை துணை செய்கின்றன அல்லவா? அவை போலவே, "எப்போது வந்தீர்கள்?" "நலமாக இருக்கிறீர்களா?" "என்ன செய்தி?" "அங்கெல்லாம் மழை எப்படி?" "வெயில் இப்போதே கொடுமையாக உள்ளது,

பார்த்தீர்களா?" முதலானவற்றில் ஒன்றையோ இரண்டையோ சொல்லுதல், அவருடன் பழகுவதற்குத் துணை செய்கிறது. இந்த வினுக்களுக்கு விடை தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தைவிட, வந்தவரிடம் வாய் திறந்து பேசிப் பழக்கத்தைப் புலப்படுத்தவேண்டும் என்ற ஆர்வமே மிகுதியாக இருத்தலை உணரலாம்.

இவ்வாறு பேசிப் பழகமுடியாமல், வேற்று மொழியாளர் ஒருவர் எதிர்ப்பட்டபோது, மனம் அமைதியிழத்தலையும் காணலாம். இக்காரணம் பற்றியே, காட்டுமிராண்டிகள் தம் மொழி தெரியாதவர்கள் எல்லோரையும் பகைவராகக் கருதினர் போலும்![1]

கருத்தைப் பிறர்க்கு உணர்த்துவதற்கு உரிய கருவி மொழி என்பது பலரும் கூறிவரும் விளக்கம். டாலிராண்ட் என்பவர், அதற்கு மாறுக, கருத்தைப் பிறர் அறியாமல் மறைப்பதற்கு உதவுவது மொழி என்றார். சோவென்கிர்க்கெர்ரெட் என்பவர், இவ்விரண்டையும் விட்டு, தமக்குக் கருத்து ஒன்றும் இல்லை என்பதை மறைக்

---

1. மணிமேகலையில் ஆதிரையின் கணவனை சாதுவன் என்பவனுடைய கதை இதற்குச் சான்றாக உள்ளது. அவன் ஏறிச் சென்ற கப்பல் கவிழ, நாகர் வாழும் மலைப்பக்கத்தில் போய்ச் சேர்ந்தானும். அங்கு அவன் அயர்ந்து தூங்கும்போது, அவனுடம்பை நல்ல உணவு என்று தின்னும் கருத்துடன் நாகர்கள் சூழ்ந்துகொண்டார்களாம். அந் நோக்கத்துடன் அவனை எழுப்பியபோது, அவன் அவர்களின் மொழியில் பேசிய காரணத்தால், அவர்கள் கொன்று தின்னும் எண்ணத்தைத் துறந்து தங்கள் தலைவனிடம் அழைத்துச் சென்றார்களாம். அத்தத் தலைவனோடு அந்த மொழியில் அளவளாவிய காரணத்தால் சாதுவன் அவனால் சிறப்புப் பல பெற்று மகிழ்ந்து நாட்டுக்குத் திரும்பமுடிந்ததாம். —மணிமேகலை : காதை, 16.

கப் பலர் மொழியைப் பயன்படுத்துகின்றனர் எனக் கூறுகிறார்.[1]

பொதுவாக ஆராய்ந்து நோக்கினால், மொழி மூவகையில் பயன்படுதல் காணலாம். முதலாவதாக, அது கருத்துப் புலப்படுத்துவதற்கு உதவும் கருவியாகும். இரண்டாவதாக, சிந்தனை வளர்ச்சிக்கு அது துணை செய்கிறது. மூன்றாவதாக, மறக்கப்படுவனவற்றை மறவாமல் காக்கும் கருவியாகவும், வேண்டியவற்றை வேண்டியபோது அறிய உதவும் கருவியாகவும் பயன்படுகிறது. இவ்வாறு உதவும் கருவியாகப் பயன்படும்போது அது இலக்கிய மொழி என்று கூறப்படுகிறது.

மக்களின் வாழ்வில் அறிவுடன் உணர்ச்சியும் இடம் பெற்று விளங்குவதுபோல், மொழியிலும் அறிவின் கூறுகளும் உணர்ச்சியின் கூறுகளும் அமைந்துள்ளன. மனிதர் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்திருந்த காலத்தில் உணர்ச்சி மிக்கவர்களாக இருந்தனர்; அப்போது அவர்களின் மொழியிலும் உணர்ச்சியின் கூறுகளே மிக்கிருந்தன. நாகரிகம் எவ்வளவு வளர்ந்தபோதிலும், மனிதரின் வாழ்வில் உணர்ச்சி குறைந்து குறைந்து ஓரளவு இருந்து வருதல்போல், மொழியில் அறிவின் கூறுகள் மிக்க போதிலும், ஓரளவு உணர்ச்சியின் கூறுகள் இருந்தே வருகின்றன. 'அந்தோ அந்தோ' 'என்னே என்னே' என்று தேர்ந்த எழுத்தாளர் எழுதும் பகுதிகள்

1. We may first call to mind three competing statements, first the everyday remark that language exists to express one's thought, next Talleyrand's well known *mot* that language exists to hide one's thoughts, and lastly Soven Kierkegaard's improvement of it, that language is used by many people to hide the fact that they have no thoughts.—Otto Jespersen, Mankind Nation and Individual, p. 6.

உணர்ச்சியின் கூறுகளே ஆகும். எழுத்திலேயே இவை காணப்படும்போது, பேச்சுமொழியில் இன்னும் பெருகியிருத்தல் இயல்பேயாகும். 'சே! ஆ! ஒ!' முதலியவை உணர்ச்சியைப் புலப்படுத்துவன. 'இன்னும் வரவில்லையே' என்னும்போது ஏகாரம் ஏமாற்ற உணர்ச்சியைப் புலப்படுத்துகிறது. 'வந்தார் வந்தார்' என்று இருமுறை கூறுதலும் உணர்ச்சியை வெளியிடுவதேயாகும்.

உணர்ச்சி மொழியில் (affective language) சொல்லிலக்கண மாறுதல் ஒன்றும் இல்லை. சொற்கள் வேறு வகைச் சொற்களாக இருக்கலாம்; அல்லது, வாக்கியத்தில் சொற்கள் நிற்கும் இடம் மாறலாம். 'அவன் வெறுக்கத் தக்க மனிதன்' என்னும் அதையே உணர்ச்சி மொழியில் 'சே! சே! அவன் மனிதனா?' என்பர். 'அவன் பொல்லாதவன்' என்பதை 'பொல்லதவன் அவன்' என்று உணர்ச்சி தோன்ற மாற்றிக் கூறுவர். ஆகவே, சொற்கோவை, வாக்கிய அமைப்பு ஆகியவற்றில் சில மாறுதல் செய்து உணர்ச்சி மொழி அமைகின்றது.

• மொழி, பொதுவாக ஓரளவு உணர்ச்சி கலந்தே வழங்குகின்றது.[1] எனினும், பேச்சுமொழியில் உணர்ச்சி மிகக் கலந்துள்ளது என்றும், எழுத்துமொழியில் உணர்ச்சி அவ்வளவாகக் கலப்பதில்லை என்றும் கூறலாம். பேசும்போது ஒருவன் தான் கலந்து பேசுகின்றான்; ஆயின் அவனே எழுதும்போது இன்னொருவனுடைய கருத்துக்களை எழுதுவதுபோல் தான் கலவாமல் தனித்து நின்று எழுதுகின்றான். இதுவே இவ் வேறுபாட்டுக்குக் காரணமாகும்.

பேசுவோர் எழுத்துமொழியைக் கற்பதாலும், எழுதுவோர் பேசுவோராகவும் பேச்சைக் கேட்போ

1. J. Vendryes, Language, pp. 146-152.

ராகவும் இருத்தலாலும், உணர்ச்சிமொழியும் அறிவு மொழியும் வேறு வேறுகத் தனித்து நிற்க முடிவதில்லை. எழுத்துமொழியில் சில வேளைகளில் தெளிவுறுத்துவதற்காக, உணர்ச்சிமொழியின் முறை கலப்பது உண்டு. கற்ற நூல்களின் பழக்கத்தால், பேசும் மொழியில் அறிவு மொழியின் அமைப்புக்கள் இடம் பெறுவதும் உண்டு.

'மற்று, கொல், அந்தோ, மதி, மன், தில்ல' முதலான இடைச்சொற்கள் பழந் தமிழில் கலந்திருந்தமைக்குக் காரணம் அக்காலத்து உணர்ச்சிமொழியின் செல்வாக்கே. விழைவு, இரக்கம் முதலான பொருள்கள் சில இடைச் சொற்களுக்கு இருத்தலும் இங்குக் கருதத்தக்கது. இவைகள் எல்லாம் பேச்சுமொழியில் கண்ட உணர்ச்சிக் கூறுகளுக்கு இலக்கணக்காரர் வகுத்த வரையறைகள் எனலாம்.

மனிதர் சிலர் தம் விருப்பு வெறுப்புக்களைப் பேச்சில் மென்மை வன்மையான ஒலிகளாலும் மிகப்படுத்தும் மிக எடுத்தும் ஒலித்தலாலும் புலப்படுத்துவர்; நாகரிகம் குறைந்த மக்களின் பேச்சில் இவ்வியல்பு மிகுதி. ஓர் இனத்தாருள்ளேயே, ஆண்களின் பேச்சைவிடப் பெண்களின் பேச்சில் இந்தக் கூறுகள் மிகுதி என்கிறார் அறிஞர் யெஸ்பர்ஸன்.[1] இவை எல்லாம் உணர்ச்சிமொழியைச்

1. Those who use many strong words to express their likes and dislikes will generally also make an extensive use of another linguistic appliance, namely, violent movements in the intonation. Their voices will now suddenly rise to a very high pitch and then as suddenly fall to low tones. An excessive use of this emotional tonic accent is characteristic of many savage nations. In each nation it seems as if it was ever more employed by women than by men. Now it has often been observed that the English speak in a more monotonous way than most other nations, so that an extremely slight rising or

சார்ந்தவை எனலாம். பொதுவாக மொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்தால், ஆங்கில மொழியில் இத்தகைய உணர்ச்சிக் கூறுகள் குறைவு ; ஆங்கிலேயர் உணர்ச்சி மிகுந்தபோதும் உணர்ச்சி அற்றவர்கள்போல் பேசும் கலையில் தேர்ந்தவராக உள்ளனர். மற்ற மொழிகளில் பெரு முயற்சியுடன் ஒலித்துப் புலப்படுத்த வேண்டிய உணர்ச்சிக் கூறுகளை ஆங்கிலம் மிக நுட்பமான சிறு சிறு ஒலி மாறுதல்களாலே உணர்த்துகிறது.

அறிவு, உணர்ச்சி, செயல் மூன்றுமே வாழ்க்கைப் பகுதிகள் ஆகையால், அறிவுமொழி (logical language) உணர்ச்சிமொழி (affective language) ஆகியவற்றோடு செயல்மொழியும் (active language) இருப்பதாகக் கொள்ளல் வேண்டும்.[1] அதைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் வளரவில்லை. நாகரிகம் வளர வளர, அறிவு பெருகி அறிவுமொழியே பெரும்பங்கு ஆகின்றது. உணர்ச்சி மொழி சிறிதளவாக நிற்கிறது. செயல்மொழியோ தொடக்கத்தில் இருந்த அந்த அளவிலேயே இன்றும் காணப்படுகிறது. 'வா, போ, நட,' இரு முதலான ஏவல்வினைகளும் 'குழந்தாய், தம்பீ, அம்மா' முதலான விளிப் பெயர்களும் செயல்மொழி எனக் கூறத்தக்கவை ஆகும்.

எழுவாய் முன்னும் பயனிலை பின்னுமாக 'அவன் போனான்' என்று சொல்லும் வாக்கியம் பல தலைமுறைகளாக அனுபவப்பட்டு அமைத்த அறிவுமொழியின் முறை. 'போனான் அவன்' என்று சில வேளைகளில் விரைந்து கூறுகிறோம். அது உணர்ச்சியின் விளைவாகும்.

lowering of the tone indicates what in other languages would require a much greater interval.—Otto Jespersen, Growth and Structure of the English Language, p. 9.

1. J. Vendryes, Language, p. 137.

'பாம்பு அங்கே ஓடுகிறது' என்று சொல்வது அறிவுக்கு இயைந்த வாக்கிய அமைப்பு. உணர்ச்சி வயப் பட்டபோது வினைமுற்று இல்லாமலே 'பாம்பு பாம்பு பாம்பு' என்று அலறுகிறோம். அடுக்குத் தொடராக வருவன எல்லாம் உணர்ச்சிமொழியின் பாற்படுவனவே.

இவ்வாறு உணர்ச்சியின் பயனாக மொழியில் ஏற்படும் மாறுதல்களை எல்லாம் கண்டு அவற்றிற்கும் இலக் கணத்தில் இடம் கொடுத்து முறைப்படுத்தியது தமிழி லக்கண நூலாரின் சிறப்பியல்பாகும். மூவாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட தொல்காப்பியத்திலும் அடுக்குத் தொடர் முதலியவை இடம் பெற்றிருத்தல் போற்றத்தக்கது.

"இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென்று
அவைமூன் றென்ப ஒருசொல் லடுக்கே."[1]

எனவரும் அடுக்குத்தொடரை இசைநிறை அசைநிலை பொருளுடையன என மூவகைப்படுத்திக் கூறியுள்ளார்.

வலியுறுத்திக் கூறுமிடங்களில் சொல்லை இருமுறை மும்முறை கூறுதலாகிய வழக்கம் உலகத்திலுள்ள எல்லா மொழிகளிலும் உள்ளது. மிகமிக நன்று, (very very good) என்பவை போன்றவை எல்லா மொழிகளிலும் உள்ளன.

ஒருசொல்லின் முற்பகுதியைமட்டும் இருமுறை கூறுதலாகிய இரட்டைக்கிளவி என்பதும் எல்லா மொழி களிலும் காணப்படுவதாகும். கலகலத்துவிட்டது, குறு குறுத்தது முதலிய தொடர்கள் பல தமிழில் வழங்கு கின்றன.

"இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந் திசையா."[2]

---

1. தொல்காப்பியம், சொல். 411. 2. தொல், சொல். 48.

2. மொழியின் பண்பாடு

எது தமிழ்

தமிழ்மொழியைத் தமிழர் மூன்றுகோடி மக்கள் பேசுகிறார்கள். தமிழ் என்பது, அந்த மூன்றுகோடி மக்களின் பேச்சும் சேர்ந்த ஒன்றா? அன்று; மூன்று கோடி மக்களின் பேச்சில் சராசரியான ஒன்று எனலாம்; அல்லது, மூன்றுகோடி மக்களில் ஏறக்குறைய ஒரேவகையாகப் பேசும் பெரும்பாலோரின் பேச்சே தமிழ் எனலாம். பெரும்பாலோர் என்பதிலும் சிறு தவறு உள்ளது. ஏன் எனில், மொழித்துறையில் மக்களின் எண்ணிக்கையைக் கொண்டு பெரும்பாலோர் என்று கூறுவதைவிட, மக்களின் செல்வாக்கைக் கொண்டு பெரும்பான்மையான ஆற்றலுடையோர் என்று கூறுவது சில இடங்களில் பொருந்துகிறது.

பேசும் மக்களுக்குள் பலவகை வேறுபாடுகள் இருக்கின்றமையால், ஒரு சாரார் பேசும் பேச்சையே அந்த மொழி என்று கூறிவிட முடியாது. பேசுவோர் ஒவ்வொருவரின் பேச்சிலும் சிறிது சிறிது வேறுபாடு இருத்தலால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகைத் தமிழ் பேசுகின்றனர் எனலாம்; பேசும் இனத்தார் அல்லது வகுப்பார்க்குள் வேறுபாடு இருந்தால், ஒவ்வொரு வகுப்பு அல்லது இனமும் ஒவ்வொரு வகைத் தமிழ் பேசுவதாகக் கூறலாம். இவ்வாறே இடத்திற்கு இடம் உள்ள மொழி வேறுபாடு கண்டு, ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு வகைத் தமிழ் இருப்பதாகக் கூறலாம்.

பலகால உழைப்பு

இன்னும் ஆராய்ந்து நோக்கின், மொழி என்பது ஒரு கலைமுறையினர் மட்டும் பேசும் கருவி அன்று என்பது

விளங்கும்; நூற்றுக்கணக்கான தலைமுறையினர், கணக்கற்ற மக்கள் வழிவழியாக வளர்த்துப் போற்றிவரும் கருவி எனத்தக்கது இது. தஞ்சைப் பெருங்கோயில் போன்ற கட்டிடம் ஒரு குறிப்பிட்ட காலத்து மக்கள் பாடுபட்டுக் கட்டிய பெருங்கட்டிடம் ஆகும். ஆனால், தஞ்சை மக்கள் பேசும் மொழியாகிய தமிழ், கணக்கற்ற தலைமுறைகளாகக் கணக்கற்ற மக்கள் ஓயாமல் உழைத்துத் தந்தது, இன்னும் விடாமல் உழைத்துப் போற்றி வளர்த்துவருவது என்று கூறவேண்டும். தொல்காப்பியனரின் உழைப்பும் இதில் கலந்திருக்கிறது; தொல்காப்பியனர் வேற்றுமை கனைப் பற்றியும் சாரியை முதலியவைகளைப் பற்றியும் ஆராய்ந்து எழுதுதற்குக் காரணமாக இருந்த அக் காலத்துத் தமிழைப் பேசியும் எழுதியும் வளர்த்த மக்களின் உழைப்பும் இதில் கலந்திருக்கிறது. தொல்காப்பியனருக்கு முன் எத்தனையோ தலைமுறையினர் இவ்வாறு உழைத்த உழைப்பும் இதில் கலந்துள்ளது. அவர்களின் உழைப்பு முதல், இன்றைய கவிஞர்கள் கட்டுரையாளர்கள் கதையாசிரியர்கள் முதலியவர்களின் உழைப்பு வரையில், அவற் றோடு இவர்கள் உணர்ந்து போற்றி எழுதக் காரணமாக இக்காலத்துத் தமிழ் பேசும் மக்களின் உழைப்பும் ஆகிய எல்லாம் இந்த ஒரு மொழியின் வளர்ச்சியில் கலந்திருக்கிறது. தமிழைப்போலவே, உலகத்து மொழிகளுள் ஒவ்வொன்றும் இவ்வாறு பல தலைமுறையினரின் உழைப்பால் வளர்ந்து விளங்கும் பெரிய அமைப்பாக உள்ளது எனலாம்.[1]

1. Every language in the gross is an institution, on which scores or hundreds of generations and unnumbered thousands of individual workers have laboured.—Whitney, The Life and Growth of Language, p. 309.

அறிவுச் செல்வம்

எத்தனைத் தலைமுறைகளாக வளர்ந்து பெருகிய அறிவுச் செல்வம் மொழியில் பொதிந்துகிடக்கின்றது என்பதை நாம் உணர்வதில்லை.[1] நாம் இடையறாமல் கையாண்டு பழகும் ஒரு கருவியாக இருப்பதால், மொழியின் அருமை பெருமைகள் நம்க்குப் புலனுவதில்லை. மனித அறிவில் அவ்வப்போது தோன்றிய புதுமைகள் அனைத்தும் மொழியில் படிந்துள்ளன எனலாம். மொழியின் ஒவ்வொரு சொல்லும் மூலை பலவகையாக எண்ணி எண்ணி வளர்ந்த வளர்ச்சியைக் காட்டுகிறது எனலாம்.[2]

ஒரு நூல் என்பது, உண்மையாகப் பார்த்தால், ஒருவருடைய மொழி எனலாம். அவரே அந்த நூல் எனலாம். நூல்வடிவில் இருப்பதால், அவருடன் பல தலைமுறைகளாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் தொடர்புகொள்ள முடிகிறது. ஒருவரின் பேச்சு மொழி அவர் அக்காலத்தில் சிலருடன் பழகும் அளவில் நிற்கிறது. ஆனால் நூல் எழுதிய ஒருவரின் மொழி நெடுங் காலம் மிகப் பலருடன் பழகும் மொழியாகிறது. ஆகவே, ஒரு மொழியை நெடுங்காலம் காத்துப் பலர்க்குப் பரப்புவது நூல் எனலாம். ஆனால் தனி ஒருவரின் மொழியில் சில குறைகளும் இருப்பதைப் போல், ஒருவரின் நூலாக அமைந்த மொழியிலும் சில குறைகள் இருத்தல் கூடும்.

ஒரு மொழியில் உள்ள எல்லாச் சொற்களையும் ஒருவரால்—அவர் எவ்வளவு சிறந்த புலவராயினும்—விடாமல்

1. We must imagine language as a vast catalogue in which are recorded all the products of human intelligence. —M. Breal, Semantics, p. 140.

2. It is no exaggeration to say that every word represents an elaborate complex of meaning.—G. K. Zipf, The psycho-Biology of Language, p. 235.

பயன்படுத்த முடியாது. ஷேக்ஸ்பியர் என்ற பெரும்புல வரும் தம் நூல்களில் பயன்படுத்திய சொற்கள் ஏறக்குறை யப் பதினாயிரமாம்; ஆங்கில மொழியிலுள்ள சொற் களில் ஆறில் ஒரு பங்கையே அவ்வளவு சிறந்த புலவரும் எடுத்தாள முடிந்தது.

உள்ளத்தியல்பு

படைப்பில் உள்ளவற்றில் 'மனம்' என்பது மிக விந்தையானது; வியக்கத்தக்க இயல்புகள் உடையது; ஆராய்ச்சிக்கு எட்டாதவகையில் அமைந்து இயங்குவது. மனத்தின் படைப்பாகிய மொழியிலும் இத்தகைய வியப் புக்குரிய இயல்புகளும் அமைப்புக்களும் காணப்படு கின்றன.

மனத்தில் நிகழ்வனவற்றை உணர்த்தவே மொழி கருவியாகப் பயன்படுகிறது. ஆகவே மொழியியல் என்பது எடுத்துக்காட்டுடன் இயைந்த உளநூல் என்று கருது வாரும் உளர்.[1] ஆயினும் பேச்சுமொழியை ஆராய்வது போல், உள்ளத்தின் இயல்பை ஆராய முடிவதில்லை. மொழி பேசப்படும்போது, உள்ளத்தில் நிகழ்வன என் னென்ன என்று ஆராய்ந்து கூறுதல் எளிது அன்று.[2]

வளர்ச்சி

மொழியைப் படைத்துப் பேசும் மக்களின் முன் பாந்த பெரிய உலகம் நிற்கிறது; உலகத்துப் பலவகைப் பொருள்கள், தன்மைகள், செயல்கள் உள்ளன. பேசும்

1. Its subject matter is, in a sense; the creation of the human mind.....In a sense, therefore, general linguistics may be called applied psychology.—Pillsbury and Meader, The Psychology of Language, p. 17.

2. It is by no means easy to make sure exactly what goes on in the individual mind when one speaks.—Ibid, p. 172.

மக்கள் அறிவு ஆற்றல்களில் வேறுபாடு உடையவர்கள். அந்தந்தக் கூட்டத்தார் - நாட்டார் - அவரவர்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற அளவில் உலகத்துப் பொருள்களே மொழியால் உணர்த்த முற்பட்டார்கள். சில கூட்டத்தார்க்கு நுண்ணிய கருத்துக்களே உணர்ந்து சொற்களால் உணர்த்துவதற்கு நெடுங்காலம் ஆகியிருக்கும். வேறு சிலர் குறுகிய காலத்திலேயே நுண் கருத்துக்களையும் உணர்த்தத் தொடங்கியிருப்பர். அவரவர்களின் வாழ்வில் எவ்வெப்போது எந்தெந்தப் பொருள்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனவோ, அந்தந்தப் பொருள்களுக்கு உரிய சொற்கள் அவ்வப்போது விரைவில் ஏற்பட்டிருக்கும். பிறகு பிறமொழியார் வந்து கலந்தபோது, புதிய - அல்லது நெருங்கிய தொடர்பு இல்லாத - பொருள்களுக்கும் கருத்துக்களுக்கும் உரிய சொற்கள் வந்து புகுந்திருக்கும். பிறர் கலப்பின் காரணமாக அல்லாமல், இயல்பாகவே தோன்றிய புதிய கருத்துகளுக்குத் தாமே அவ்வப்போது சொற்களைப் படைத்துக் கொண்டனர்.

ஒவ்வொரு சொல்லும் நெடுங்காலமாகப் பலவகைப் பொருள்களின் தொடர்பு உடையதாக வழங்கிவருகிறது. அதனால் ஒரு சொல்லின் பொருளை விளக்கும்போது வேறொரு சொல்லின் துணைகொண்டு முற்றவிளக்க முடிவதில்லை. தாய், அறம் என்ற சொற்கள் எவ்வளவு பொருள் நிறைந்தனவாக உள்ளன! அவற்றை விளக்கப் பல சொற்கள் தேவையாக உள்ளன. தலைமுறை தலைமுறையாக மக்கள் வழங்கிச் சேர்த்த கருத்துக்கள் எல்லாம் இந்தச் சிறு சொற்களில் பொதிந்துள்ளன. தொடக்கத்தில் இவை நீண்ட பெரிய தொடர்களால் உணர்த்தப் பட்டிருக்கும். பிறகு காலப்போக்கில் இந்தக் கருத்

துக்களைப் பலமுறை உணர்த்தும் நிலை ஏற்பட்டபோது சிறு சொற்கள் தேவைப்பட்டன. அடிக்கடி பயின்று வழங்கும் கருத்துக்கள் சிறு சொற்களால் உணர்த்தப் படுவது மொழியின் இயல்பு. எண்ணுப் பெயர்களும் மூவிடப் பெயர்களும் பயின்று வழங்கும் காரணத் தாலேயே சிறு சொற்களாக அமைந்தன. அவ்வாறே தாய், அறம் முதலிய சொற்களும் பயிற்சி காரணமாகவே இவ்வடிவில் அமைந்தன. பிறனில் விழையாமை சுற்றந் தழுவுதல், பெரியாரைப் பிழையாமை முதலிய கருத்துக்கள் இவைபோல் அடிக்கடி வழங்காதவை. ஆகையால் இன்னும் நீண்ட தொடர்களாகவே உள்ளன. மூட்டியால் அடித்தல், தலையால் தள்ளுதல் முதலியவற்றிற்குச் சிறு சொற்கள் தனித்தனியே ஏற்படவில்லை. காரணம், இவை பயில வழங்காமையே. காலால் அடித்துத் தள்ளுதல் என்ற கருத்துக்கு மட்டும் 'உதை' என்ற சிறு சொல் ஏற்பட் டுள்ளது. ஆகவே, காலப்போக்கில் ஏற்படும் தேவைகளை ஒட்டிச் சொற்கள் வளர்ந்து அமைகின்றன என அறியலாம்.

இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த மொழியும் ஒரு கருவியே என்றும், ஒவ்வொரு கருவியும் தொடக்கத்தில் மிக எளியதாக இருந்து பிறகு வரவரப் பலவகை அமைப்பு உடையதாக வளர்ந்ததுபோலவே மொழியும் தொடக் கத்தில் எளியதாக இருந்து வளர்ந்தது என்றும் விட்னே கூறுகிறார்.[1] ஆயின், இக் காரணம் பற்றி மொழி அடிச்

1. Language is an instrumentality; and the law of simplicity of beginnings applies to it not less naturally and necessarily than to other instrumentalities.....In a stick or stone was present—and may, on an emergency, be made present still—a variety of instrument or weapons.—Whitney, The Life and Growth of Language, p. 226.

சொற்களிலிருந்து வளர்ந்தது என்று கூற முடியாது. தொடக்கத்தில் கற்காலத்து மனிதன் கத்தியாகப் பயன் படுத்திய கருவி கூர்மையான கல்தான். இன்று பயன் படும் கத்தி அதை விடச் சிறியது; ஆனால் இது பலவகை உறுப்புக்கள் உடையதாக வளர்ந்துள்ளது. அது போலவே, பழங்கால மொழியில் நீண்ட சொல் - திருந்தாத வாக்கியமாகப்-பயன்பட்டது. பிறகு வரவரப் பண்பட்டுச் சிறு சிறு சொற்கள் அமைந்த வாக்கியம் வளர்ந்து அமைந்தது. பழங்காலத்துக் கத்தி ஒரே கல்லாய்க் கூர்மையுடையதாக விளங்கியது. இக்காலத்துக் கத்தியில், பிடி, வீணையம், ஆணிகள், மறைகள் முதலியன எல்லாம் அமைந்துள்ளன. மொழியிலும் இத்தகைய வளர்ச்சியைக் காணலாம். பழங்கால மொழியில் நீண்ட ஒரு சொல்லே வாக்கியமாகப் பயன்பட்டது. இக் காலத்தில் ஒரு வாக்கி யத்தில் பெயர்ச்சொல், வினைச்சொல், இவற்றோடு பொருள் வேறுபாடு உணர்த்தும் உருபு விகுதி இடைநிலை முதலிய இடைச்சொற்கள் சேர்ந்து அமைந்துள்ளன. பழங்காலத் துக் கருவி ஒரே பொருளால் ஆகியது; திருந்தாதது; பாகு பாடு இல்லாதது. இவ்வகையில்தான் எளிமை காணலாமே அன்றி, அளவில் சிறியது எனக் கூற முடியாது. இக் காலக் கருவி எளிமை இல்லாததாகத் தோன்றினும், பல வகை யிலும் பயன்படக் கூடியதாய்ச் சிறந்து விளங்குகிறது. இக் காலத்து வாக்கியமும் இவ்வாறே பலவகைக் கருத் துக்களை நுட்பமாகவும் தெளிவாகவும் விளக்க வல்லதாக உள்ளது.

ரு. போலச் செய்தல்

மக்களின் சிறப்பியல்பு

விலங்குகளும் பறவைகளும் இயற்கையிலேயே சில வகைத் திறமை பெற்றவைகளாக - சில இயற்கை யுணர்ச்சிகள் பெற்றவைகளாகப் பிறக்கின்றன. அதனால்தான் சில பிறந்தவுடன் நடக்கின்றன ; கத்துகின்றன ; ஓடுகின்றன. வேறு சில பிறந்த சில நாட்களில் தம் வாழ்வுக்கு உரியன எல்லாம் அறிந்தனவாக உள்ளன ; சில நாட்களில் தாயை விட்டுத் தனியே வாழும் ஆற்றல் பெற்றுவிடுகின்றன. மனிதன் நெடுங்காலம் பெற்றோரையும் மற்றவர்களையும் அடித்து வாழ்ந்து பலவற்றைக் கற்க வேண்டியவனாக உள்ளான். பிறவியிலேயே மனிதன் அறிந்த அறிவு தாய்ப் பாலை உறிஞ்சிக் குடித்தல் ஒன்றுதான் போலும் ; மற்றொன்று உண்டு எனில், சிறிது வளர்ந்த பிறகு, மற்றவர்களைப் பார்த்து அவர்கள் செய்வதுபோல் செய்யும் ஆற்றல்தான். 'போலச் செய்தல்' (imitation) என்னும் இந்தச் சிறப்பியல்புதான், மனிதனை முன்னேறச் செய்துள்ளது; பிறவியில் இயற்கையாக அமையாத ஆற்றல்களை எல்லாம் பார்த்தும் கேட்டும் அறிந்து கற்றுக்கொண்டு மனிதன் உயர்வதற்கு உறுதுணையாக இருப்பது இதுவே.

ஒருவர் செய்வதைப் பார்த்து அவ்வாறே செய்கின்ற - போலச் செய்கின்ற-இந்தப் பண்புதான் மக்களின் நாகரிக வளர்ச்சிக்கே காரணம் என்று கூறத்தக்கது. ஒருவரைப் போல் மற்றவர் நடக்க முயல்வதால்தான், சமுதாயத்தில் ஒற்றுமை நிலவமுடிகின்றது. மக்களில் ஒரு சாரார் சேர்ந்து சமயம் என ஒன்றை அமைத்து வளர்ப்பதற்கும் அதுவே காரணம். அரசியல் அமைப்புக்கள் ஏற்படுவதற்கும் அதுவே காரணம். நடை உடை முதலியவை

களில் புதியன பல ஒரே வகையாகப் பரவி நாகரிகமாகப் போற்றப்படுவதற்கும் 'போலச் செய்தல்' (imitation) என்னும் இந்தப் பண்பே காரணம் ஆகும்.

கற்றல் எவ்வாறு

ஒருவர் ஒலித்ததுபோல் மற்றவர் ஒலிக்க முடிந்ததால்தான் பேச்சுமொழி எற்பட முடிந்தது. ஒருவர் எழுதியதுபோல் மற்றவர் எழுத முடிந்ததால்தான் எழுத்து மொழி ஏற்படலாயிற்று. இன்னும் மொழி என்பது பலர்க்கு உரியதான பொதுத்தன்மை பெற்று வளர்வதற்குக் காரணம், 'போலச் செய்தல்' என்னும் இந்த மக்கட் பண்பே ஆகும்.

நெடுங்காலமாகத் தமிழ்மொழி பேசிவந்த ஓர் இனத்துள் சிலர், ஆங்கிலமொழி பேசும் மக்களுடன் பழக நேர்ந்தபின், ஆங்கிலமும் பேசத் தொடங்கினர். ஆங்கிலேயரைப் போல் ஒலிக்க முயன்று கற்ற முயற்சியின் வெற்றியே அது மக்களிடையே இத்தகைய பண்பு அமைந்திருக்க, விலங்குகளிடத்தில் இதைக் காண்பதற்கில்லை. தொல்காப்பியனார் காலத்தில் தமிழ்நாட்டு மாடும் ஆடும் காக்கையும் குரங்கும் எவ்வாறு ஒலித்தனவோ, அவ்வாறே இன்றும் ஒலித்துவருகின்றன. அந்த ஒலிகளும் அவைகள் கற்ற ஒலிகள் என்று கூறுவதற்கில்லை. உண்ணுதல், தன்னைக் காத்துக்கொள்ளல், உறங்குதல் என்பவற்றை அவைகள் கற்காத இயற்கை யுணர்ச்சியாகப் பெற்றிருப்பதுபோல், அந்தந்த ஒலிகளை ஒலிக்கும் தன்மையையும் இயற்கையாகப் பெற்றுள்ளன. இளங்கன்று பிறந்த சில காட்சிகளில் எவ்வாறு ஒலிக்கின்றதோ அதுபோலவே சாகும் வரையிலும் ஒலித்து மாய்கிறது. அதில் ஒரு மாறுதலும் இல்லை. கற்கும் ஆற்றல் அதற்கு இல்லை என்பதற்கு

இது சான்று. கற்றல் என்பதற்கு அடிப்படையாக வேண்டுவன : ஒருவர் ஒலிப்பது கேட்டு அதைப் போல் ஒலித்தல், ஒருவர் எழுதுவது கண்டு அதைப் போல் எழுதுதல், ஒருவர் செய்வது போல் செய்தல், ஒருவர் உணர்வது போல் உணர்தல் முதலியவை; சுருங்கக்கூறின், கல்விக்கும் நாகரிகத்திற்கும் அடிப்படையாக வேண்டுவது 'போலச் செய்தல்' என்னும் பண்பே ஆகும்.

விலங்கிற்கு இல்லை

குல்லாய்க்காரன் ஒருவன் மரத்தடியில் படுத்திருந்தாகவும், மரத்திலிருந்த குரங்கு ஒன்று கீழே வந்து அவனருகே இருந்த குல்லாய்மூட்டையைப் பிரித்து ஒரு குல்லாயை எடுத்துத் தலையில் மாட்டிச் சென்றதாகவும், அதைப் பார்த்த மற்றக் குரங்குகள் ஒவ்வொன்றும் இவ்வாறே ஒவ்வொரு குல்லாயைத் தலையில் மாட்டிச் சென்றதாகவும், குல்லாய்க்காரன் விழித்தெழுந்து திகைத்ததாகவும் கதை ஒன்று உள்ளது. இந்தக் கதையைக் கொண்டு 'போலச் செய்யும்' ஆற்றல் குரங்குக்கு இருப்பதாகக் கூறமுடியாது. உளநூல் அறிஞர்கள் இந்தக் கதையை நிகழக்கூடியதாக உடன்படுவதில்லை. எழுதிய வரின் கற்பனை இது. குரங்குக்கு இந்த ஓர் ஆற்றல்—போலச் செய்யும் திறன்—இருக்குமாயின், இனமாகக் கூடி அமைப்புக்கள் பல ஏற்படுத்தி மனித இனத்தையே எதிர்த்திருக்கக் கூடும். அதற்கு மாறாக, குரங்குகளோ மிகப் பழங்காலம் முதல் ஒரு சிறு முன்னேற்றமும் இல்லாமல் அன்று இருந்தபடியே இன்றும் உள்ளன; அவற்றின் ஒலிகளிலோ செயல்களிலோ மாறுதலோ முன்னேற்றமோ ஒரு சிறிதும் காணோம்.

விலங்குகளுள் அறிவில் மிக்கது என்று கருதப்படும் குரங்கினிடமும் இல்லாத இந்த ஆற்றல், மனிதருள் குழந்

தையினிடமும் எளிதில் அமைந்திருக்கிறது. அதனால்தான் குழந்தை பல ஒலி ஒலித்துப் பல செயல் செய்து வளர முடிகிறது. 'போலச் செய்தல்' (imitation) என்னும் இந்த ஆற்றலே குழந்தையின், வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளது; பேச்சிலும் செயலிலும் அதனிடம் இத்தன்மை காணப்படும்போ தெல்லாம் பெற்றோரும் மற்றோரும் வளர்ச்சி என உணர்ந்து மகிழ்கின்றனர். மக்கள் எந்த எந்தத் துறையில் வளர்ச்சி பெற்றுள்ளனரோ, அந்த அந்தத் துறையில் அவர்கள் பெற்றுள்ள வளர்ச்சிக்கெல் லாம் காரணம் 'போலச் செய்தல்' என்னும் இந்தத் தனிப் பண்பே ஆகும்.

சுர. ஒப்புமையாக்கம்

ஒருவர் செய்வதைப் பார்த்து அவ்வாறே செய்வது (ஒருவர் ஒலிப்பதைப் பார்த்து அவ்வாறே ஒலிப்பது) ஆகிய 'போலச் செய்தல்' (imitation) மொழி வளர்ச் சிக்கு அடிப்படைக் காரணம் என்பதை மேலே கண்டோம்; இது ஒருவர் பிறரிடமிருந்து மொழியைக் கற்பதைப் பொறுத்தவரையில் காணும் உண்மையாகும். ஒருவர் தாம் கற்ற சிலவற்றைக் கொண்டு மற்றவற்றை அமைத்துக் கொள்ளும் தன்மை ஒன்று உண்டு; அது ஒப்புமையாக்கம் (analogy) எனப்படும். மொழியின் அமைப்புக்கு இது பெரிய காரணமாகும்.

இளமைக் கல்வி

எடு என்பதன் இறந்தகாலச் சொல்லாக எடுத்தார் என்பதை அறிந்த குழந்தை, கொடு என்பதற்குக் கொடுத்தார் என்றும், தடு என்பதற்குத் தடுத்தார் என்றும் தானே சொற்களை அமைத்துக்கொள்கிறது. பத்தும் நான்கும் பதினொன்று என்று அறிந்த சிறுவன், பதினேந்து பதினாறு பதினேழு பதினெட்டு என்ற சொற் களை எளிதில் அமைத்துக்கொள்ள முடிகிறது. 'அவர் பத்து மாடு வாங்கினார்' என்ற வாக்கியத்தை அறிந்த சிறுவனுடைய மூளையில் எழுவாய் முதலிலும் பயனிலை இறுதியிலும் செயப்படுபொருள் இடையிலும் அதற்கு அடையான எண்ணுப் பெயர் அதற்கு முன்னும் அமையும் அமைப்பு நன்றாகப் பதிந்துவிடுகிறது. அதனால், அதே வாய்பாட்டில் வேறு கருத்துக்களையும் அவற்றின் சொற் களையும் அமைத்து, 'தம்பி மூன்று முறுக்குத் தின்றான்,' 'அத்தை நான்கு காசு கொடுத்தாள்' முதலான பல வாக்

கியங்களை அமைக்க அவனால் முடிகிறது. இவ்வாறு பெயர்ச் சொல்லின் வேறுபாடுகள் (declensions), வினைச்சொல் லின் வேறுபாடுகள் (conjugations), சொற்றொடர் அமைப் புக்கள், வாக்கிய அமைப்புக்கள் முதலிய எல்லாவற்றையும் ஒப்புமையாக்க (analogy) முறையினால் எளிதில் அமைத் துக்கொள்ள முடிகிறது. இத்தகைய ஒப்புமையாக்க முறை இளம்பருவத்திலே நன்றாகப் பதிந்து பழகிவிடும் வாய்ப்பு, தாய்மொழியில் உள்ளது.

பேச்சுமொழியைக் கற்றல்

வேற்றுமை உருபுகளை என்னென்ன பொருளில் எவ் வெவ்வாறு வழங்குவது என்றும், எவ்வெவ்வாறு சொற் களோடு இயைத்து எவ்வெவற்றோடு முடிப்பது என்றும் இலக்கண நூல்கள் பக்கம் பக்கமாக விரித்துரைக் கின்றன. அவற்றைக் கற்கும்போது உருபுகளைச் சேர்த்து வழங்குவது பெருமுயற்சிபோல் தோன்றும். ஆயின், கல்லாத மக்கள் பேசும் பேச்சில் ஒருவித முயற் சியும் இன்றி எளிதில் வழங்குகின்றனர்; இன்ன சாரியை இதனோடு சேர்க்கவேண்டும் என்று ஆராய்ந்து எண்ணிப் பேசுவதில்லை; கருத்துத் தோன்றியவுடன், அதற்கு மொழி வடிவு தந்து சொற்களை அமைத்துப் பேசுகின்றனர். மிக விரிவான இலக்கண விதிகளையும் நோக்கி, அவற்றைப்பற்றிக் கவலை இல்லாமல் எளிதில் பேசும் மக்களின் திறனையும் நோக்கின், பேச்சு மொழியின் அடிப்படை ஒப்புமையாக்கம் என்று விளங்குகிறது. பலமுறை கேட்டுக் கேட்டு, பல முறை பேசிப் பேசி, சில வாய்பாடுகள், 'மாதிரிகள்' மக்களின் நினைவில் பதிந்துவிடுகின்றன. இந்த நினைவாற்ற லால்தான் மக்கள் எளிதில் பேச முடிகின்றது. இலக்கண விதிகள் போன்றவற்றை அவர்கள் எண்ணுவதே இல்லை.

தாய்மொழி இலக்கணம்

சாரியைகள் விகுதிகள் உருபுகள் முதலியவற்றை எவ்வெச் சொற்களோடு எவ்வெவ்வாறு சேர்த்திட வேண்டும் என்று இலக்கண நூல்கள் கூற முயல்கின்றன. ஆயின் முற்றிலும் கூற முடிவதில்லை. முற்றிலும் கூறுவதானால், இலக்கண நூல்கள் அளவின்றிப் பெருகும். இவ்வளவு விரிவாக உள்ள விதிகளை எல்லாம் கற்காமலே மக்கள் சாரியைகளையும் விகுதிகளையும் உருபுகளையும் தக்க இடங்களில் தக்கவாறு சேர்த்துப் பேசுதல் வியக்கத் தக்கதே ஆகும். மக்கள் இதை ஒரு சுமையாகவோ தொல்லையாகவோ கருதுவதாகத் தோன்றவில்லை. சில வாய்பாடுகளை நினைவில் வைத்துக்கொண்டும், மற்றவர் களின் பேச்சைக் கவனித்துக்கொண்டும் இயல்பாகப் பேசிப் பழகுகின்றனர்.[1] இதுவே தாய்மொழியின் நன்மையாகும். இளமை முதல்கொண்டே இந்த அமைப்புக்கள் நினைவில் ஊறிவிடுவதால், முயற்சி எளிதாகிறது. பிற மொழி கற்கும்போது விதிகளை நினைவில் வைத்துத் தொடங்குவதால் சுமையாகிறது. சைக்கில் ஓட்டுபவர்க்குக் கைகால்கள் தாமே கடமையைச் செய்வது போல், பின்னல் வேலை செய்பவர்க்குக் கைவிரல்கள் தாமே வேண்டியவாறு ஊசியை இயக்குதல் போல், தாய்மொழி பேசுபவர்க்குச் சொற்களின் அமைப்பெல்லாம் தாமே எளிதில் வந்து அமைகின்றன.

1. The inner linguistic form is not a gift of nature, since it varies in different languages, and since in one single language it becomes modified in the course of ages. The inner form of language is nothing but remembrance of the mother-tongue. But, in its turn, this remembrance is impressed on the still fluctuating parts of the language, and forces them into the established framework.—M. Breal, Semantics, p. 304.

பிறமொழிச் சுமை

முதல் நான்கு ஆண்டுகளுக்குள் குழந்தைப்பருவத்தில் மனித மூளை கற்கும் அவ்வளவு மிகுதியாகப் பிற்காலத்தில் கற்பதில்லை என்றும், கற்க முடிவதில்லை என்றும் அறிஞர் கூறுவர். இந்தப் பருவத்திலேயே தாய்மொழியின் வாக்கிய அமைப்புக்கள், விகுதி உருபு முதலியவற்றைச் சேர்க்கும் முறைகள் ஆகியவை குழந்தையின் மூளையில் நன்றாகப் பதிந்து வருகின்றன. ஆகவே, பிற்காலத்தில் மொழியைப் பற்றிக் கவலைப்படாமல் அறிவை வளர்ப்பதிலேயே முயற்சியைச் செலுத்த முடிகிறது. பிற மொழி கற்பதில் இந்த நன்மை இல்லை. மூளை வளர்ந்து இறுகிய பிறகு, வாக்கிய அமைப்புக்கள் இலக்கணக் கூறுகள் ஆகியவற்றை வற்புறுத்தித் திணிக்க வேண்டியுள்ளது. அவ்வாறு திணித்தும், அந்த மொழியில் நன்கு பயின்ற பிறகும், வேற்றுமை யுருபுகளைச் சேர்க்கும் முறையிலும் வினைச்சொற்களை வேறுபடுத்தும் வகையிலும் அடிக்கடி ஐயப்பாடு தோன்றுகிறது. தாய்மொழியின் வாக்கிய வாய்பாட்டிலே பிறமொழி வாக்கியங்களைச் சில வேளைகளில் அமைத்துத் தவறு செய்யவும் நேர்கிறது. இந்தியர் ஆங்கிலத்தை நன்கு கற்றுத் தேர்ந்தபிறகு செய்யும் இத்தகைய தவறுகளை ஆங்கிலேயர் இந்தியக் கூறுகள் (Indianisms) என எடுத்துக்கூறுவர்.

தவிர, தாய்மொழியைக் கற்கும்போது கல்வி ஒரு சுமையாவதில்லை. தேவையே கற்கத் தூண்டுவதால் கல்வி எளிதாகிறது. மூளையில் வேறு சுமைகள் சேர்ந்து நெருக்காத இளமையில் தாய்மொழி பதிந்துவிடுவதால் என்றும் நீங்காமல் நிலைபேறு உடையதாகிறது. எல்லாவற்றையும் விடச் சிறந்த ஒரு மேன்மை என்ன எனில், தாய்மொழிக் கல்வியில் சொற்களைப் பொருள்களுக்கு நேரே இயைக்கும்

இயற்கையான நன்முறை வாய்த்திருக்கின்றது. பிற மொழி கற்கும்போது, ஒரு மொழிச் சொற்களோடு இன்னொரு மொழியின் சொற்களை இயைத்துக் கற்கும் செயற்கையான முறையே உள்ளது. தாய்மொழியில் மரம் என்னும் போது மூலை கேரே கவடும் இலையுமாக வளர்ந்த இயற்கைப் பொருளைக் கருதுகிறது. ஆங்கிலத்தில் 'ட்ரீ' (tree) என்னும் சொல்லைக் கருதும் போது, உடனே மரம் என்னும் வேறொரு சொல்லின் தொடர்பே ஏற்படுகிறது. ஆதலின் இடர்ப்பாட்டுடன் அவற்றைக் கற்க வேண்டியுள்ளது.

ஒருவகை இடர்ப்பாடும் இல்லாத காரணத்தால் தாய் மொழியில்,

வீடு : வீட்டை, வீட்டுக்கு
காடு : காட்டை, காட்டுக்கு

எனச் சிலவற்றை அறிந்தவுடன்

நாடு : நாட்டை, நாட்டுக்கு
ஓடு : ஓட்டை, ஓட்டுக்கு

என வேறு சொற்களிலும் எவ்வாறு உருபுகளைச் சேர்ப்பது என்பதை ஒப்புமையாக்க (analogy) முறையால் எளிதில் அறிய முடிகிறது.

ஒழுங்குபடல்

சில மொழிகளில் ஒவ்வொரு பெயர்ச் சொல்லும் உருபு ஏற்கும் முறையைத் (declensions) தனித் தனியே கற்க வேண்டியுள்ளது; ஒவ்வொரு வினைச் சொல்லும் விகுதி ஏற்கும் முறையையும் (conjugations) தனித் தனியே கற்க வேண்டியுள்ளது. அந்த மொழிகளில் ஒப்புமையாக்கம் (analogy) செல்வாக்குடன் சொற்களை

ஒழுங்குபடுத்த முடியாமல் விட்டுவிட்டது எனக் கூற வேண்டும். நெடுங்காலத்திற்கு முன்னமே பண்பட்ட மொழியாதலின், தமிழில் ஒப்புமையாக்கத்தின் செல் வாக்கு மிகுதி; அதனால் சொற்கள் பலவும் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளன.

தமிழிலும் ஒழுங்குபடாத சொற்கள் சில உள்ளன. எடுத்துக்காட்டாக, கொடுத்தார், எடுத்தார், தடுத்தார் என்பன போல் அமையாமல், நடு என்ற சொல்லுக்கு நட்டார் என்ற வடிவம் உள்ளது. பதினெண்கு பதினேந்து பதினாறு என்பன போல் பதினென்பது என்பது அமைய வில்லை; பத்தொன்பது எனச் சிறிது மாறியுள்ளது. பதினிரண்டு என்று அமையாமல் பன்னிரண்டு என்னும் வடிவம் வேறாக உள்ளது. ஒப்புமையாக்க முறைக்கு உட்பட்டு ஒழுங்குபடாமல், இவ்வாறு விதிவிலக்காக வேறு பட்டு நிற்கும் சொற்களைக் கற்பது குழந்தைக்குத் தொல்லை யாகவே இருக்கும். நடுத்தார் என்றும், பதினிரண்டு என்றும் குழந்தை சொல்லும்; கேட்பவர் நகைப்பது கண்டு மயங்கும்; திருத்துவோரின் திருத்தங்களை வெறுப் புடன் கேட்கும்; பிறகு படிப்படியாகத் தன்னைத் தானே திருத்திக்கொள்ளும்.

மரபுக்கு மதிப்பு

உண்மையாகப் பார்த்தால் குழந்தை ஒரு தவறும் செய்யவில்லை. குழந்தை பேசும் ஒப்புமையாக்க முறையில் தவறு ஒன்றுமே இல்லை. அவன்—அவனுக்கு என்பது போல், நான்—நானுக்கு என்று சொல் அமைத்துக் குழந்தை பேசுவதுதான் ஒழுங்கான முறை. 'நானுக்கு' என்றதைக் கேட்டுச் சிரிப்பவரும், 'எனக்கு' என்று சொல்லுமாறு கூறித் திருத்துபவரும் ஒழுங்குமுறையைப்

போற்றுமல், முன்னோர் சொன்னபடி கண்மூடிச் சொல்லிப் பழகுபவர். ஆயினும், குழந்தை தன் சொல்லை மாற்றிக் கொள்ளவேண்டியுள்ளது. காரணம், மொழியில் ஒப்புமை யாக்கத்திற்கு எவ்வளவு செல்வாக்கு இருந்த போதிலும், சில இடங்களில் கண்மூடிப் போற்றும் மரபுக்கும் மதிப்பு உள்ளது.

இது தமிழில் மட்டும் உள்ள குறை அன்று; உண்மை யாக ஆராய்ந்தால் தமிழில் இத்தகைய குறை ஒரு சில சொற்களில் மட்டுமே உள்ளது எனலாம். நானுக்கு என்பது எனக்கு என்பதோடு தொடர்புடைய சொல் லாகவே உள்ளது. ஆங்கிலத்தில் 'I' என்பதற்கும் 'me' என்பதற்கும் தொடர்பே காணேம். 'நட்டார்' என்ற மரபான சொல்லுக்கும் 'நடித்தார்' என்ற ஒப்புமையாக்கச் சொல்லுக்கும் தொடர்பு தெளிவாக உள்ளது. ஆனால் ஆங்கிலத்தில் 'go' என்ற நிகழ்கால வினைக்கும் 'went' என்ற இறந்தகால வினைக்கும் தொடர்பே இல்லை. அதனால் ஆங்கில நாட்டுக் குழந்தை நெடுங்காலம் வரையில் 'He went' என்று சொல்ல முடியாமல் 'He goed' என்றே சொல்லிக்கொண்டிருக்குமாம்.

ஆங்கில மொழியிலும் காலப் போக்கில் ஒப்புமை யாக்கம் செல்வாக்குப் பெற்று ஒழுங்கற்ற சொற்களையும் ஒழுங்குபடுத்தி வருகிறது.[1] எடுத்துக்காட்டாக, பெயர்ச் சொற்கள் சிலவற்றிற்கு வெவ்வேறு வகையான பன்மை வடிவங்கள் இருந்து வந்தன. இப்போது அவை 's' என்னும் பன்மை விகுதி சேர்ந்து ஒழுங்குபட அமைந்துள்ளன.

1. Even now it is clear that change in language tends towards shorter and more regularly constructed words; sound-change shortens the word, and analogic change replaces irregular derivatives by regular.—L. Bloomfield, Language, p. 509.

ஒருமை	பழைய பன்மை	இப்போதுள்ள பன்மை
eye	eyen	eyes
shoe	shoon	shoes
brother	brethren	brothers

ஆங்கில மொழி பலவகை ஆட்சிகளின் தாக்குதலால் வெவ் வேறு மொழிகளின் செல்வாக்குக்கு உட்பட்டுப் பலவகைத் திரிபுகள் பெற்று வளர்ந்துவந்தது; சென்ற நூற்றாண்டு முதல்தான் ஒப்புமையாக்க முறையால் பெரும்பாலும் ஒழுங்குபட்டு வருகின்றது. ஆதலின் விதிவிலக்கான சொல்வடிவங்கள் பல இன்னும் உள்ளன.

வினைச்சொல் காலம்காட்டத் திரியும் இடங்களில் ஒழுங்கற்ற சொற்கள் பல ஆங்கிலத்தில் உள்ளன. வினைச் சொல்லுடன் 'ed' என்ற இடைநிலை சேர்ந்து இறந்தகாலச் சொல் அமைவதே ஆங்கிலத்தில் பெரும்பாலும் உள்ள முறை. Help என்ற சொல்லுக்கு holpen என்ற இறந்த கால வடிவம் பழைய ஆங்கிலத்தில் இருந்துவந்தது. ஒப்புமையாக்கம் அதனை helped என்று மாற்றிவிட்டது. 'sow' என்ற சொல்லுக்கு 'sown' என்று உள்ளதை 'sowed' என்று சிலர் மாற்றி வழங்கி வருகின்றனராம்.[1] ஆயினும் bring என்பதற்கு bringed என்று இல்லாமல் brought என்பதே இன்னும் உள்ளது. ஒப்புமையாக்கத் தின் ஒழுங்குமுறை மிகுந்துள்ள தமிழிலும் கா-காத்தான் என்று அமைவது போல் அல்லாமல், சா-செத்தான் என்ற விதிவிலக்கான வடிவங்கள் இன்னும் உள்ளன.

1. The older holpen has become helped by analogic change, while sown for which one frequently hears sowed is now in the process of being levelled.—G. K. Zipf, The Psycho-Biology of Language, p. 199.

கல்-கற்றான், நில்-நின்றான், சொல்-சொல்லினான் முதலான சொற்களும் வெவ்வேறு வடிவங்கள் கொள்ளல் காணலாம்.

பயில வழங்குவன

மிகப் பழங்காலத்தில் அமைந்து பழக்கப்பட்டுப் போன ஒரு சில சொற்களே ஒழுங்காக்க முடியாமல் அப்படியே வழங்கிவருகின்றோம். ஒழுங்குமுறைக்கு உட்பட்டு வராமல் வேறுபட்டு வழங்கும் இத்தகைய சொற்களே ஆராய்ந்தால் ஓர் உண்மை விளங்கும். மொழியில் பயின்று வழங்கும் அடிப்படைச் சொற்களே இவ்வாறு விதிவிலக்கான வடிவங்களில் அமைகின்றன என்று உணரலாம். எடுத்துக்காட்டாக, தன்மை முன்னிலை யிடப்பெயர்கள் மொழிக்கு அடிப்படையானவை; பயின்று வழங்குபவை. அவற்றில் இத்தகைய வேறுபட்ட வடிவங்கள் உள்ளன.

யான்	+	ஐ	—	என்னை
யாம்	+	ஐ	—	எம்மை
நீ	+	ஐ	—	உன்னை
நீர்	+	ஐ	—	உம்மை
நீங்கள்	+	கு	—	உங்களுக்கு

ஆங்கில மொழியில் மூவிடப் பெயர்களிலும் ஒப்புமையாக்கத்தின் செல்வாக்கு ஒரு சிறிது வெற்றி பெற்றுள்ளது. 'It' என்ற சொல்லின் ஆறும் வேற்றுமைத் திரிபாக 'his' என்ற சொல்லே பழைய ஆங்கிலத்தில் வழங்கிவந்தது. ஒப்புமையாக்க உணர்ச்சியால் மக்களிடையே 'its' என்ற சொல் மெல்ல நுழைந்து பரவத் தொடங்கியது. இன்று இதுவே இலக்கிய வாழ்வும் பெற்றுவிட்டது.

செத்தான், கற்றான், சொல்லினான், நின்றான் முதலிய சொற்களும் மூவிடப் பெயர்களுக்கு அடித்தபடியாகப்

பயின்று வழங்குபவை எனலாம். ஆகையால் அவற்றிலும் வேறுபட்ட வடிவங்கள் வாழ்கின்றன. பன்னிரண்டு, பத்தொன்பது முதலிய சொற்களும் அத்தகையனவே.

பயில வழங்காது அருகி வழங்கும் ஒரு சொல்லுக்கு இத்தகைய வேறுபட்ட வடிவம் அமைந்தால் அது நெடுங் காலம் நிற்காமல் விரைவில் மாறி ஒப்புமையாக்க முறையின்படி அமைந்துவிடும்.

பழங்காலச் சொற்களாக இராமல் புதியனவாக ஏற்படும் சொற்களாலும், அவை ஒப்புமையாக்கம் தவறாமல் ஒழுங்காக அமைகின்றன. 'காரன்' என்ற புதிய விகுதி ஏற்கும் சொற்கள், தயிர்க்காரன், வீட்டுக்காரன், பணக்காரன், கடன்காரன், கடைக்காரன் என ஒரே ஒழுங்காக அமைவது காணலாம். ஒப்புமையாக்கத்தால் இத்தகைய சொற்கள் பற்பல அமைந்து மிக வேகமாகப் பெருகுதல் உண்டு. அவை பெருகிப் பரவும் வேகம், தொத்துநோய்கள் பரவும் வேகத்தை நினைவூட்டுவதாகக் கூறுகிறார் அறிஞர் யெஸ்பர்ஸன்[1]

தவறுக அமைவன

ஒப்புமையாக்கத்தின் செல்வாக்குக்கு இடந்தராமல் ஒழுங்குமுறை கடந்துநிற்கும் சொற்களைப் பற்றி மேலே கண்டோம். ஒப்புமையாக்கம் தவறான வகையில் அமைத்திடும் சில சொற்களும் மொழியில் உண்டு. எடுத்துக் காட்டாக, 'தனவந்தர்' என்ற வட சொல்லின் ஒப்புமையாக்கமாகச் 'செல்வந்தர்' என்ற தவறான சொல், அமைந்

1. Sometimes one is reminded of the way in which contagious diseases spread, when one sees how certain suffixes become the fashion and are used in an increasing number of new words.—Otto Jespersen, Linguistica, p. 438.

துள்ளது. 'தேகம்' என்ற சொல், ப்ரேதம், ப்ரேமை, த்ரவியம், த்ரோகம் முதலிய சொற்கள்போல் தவறுக உணரப்பட்டுத் த்ரேகம்—திரேகம் என வழங்குகிறது.

செல்வர் செல்வியர், அரசர், அரசியர் என்ற சொற் களின் ஒப்புமையாக்கமாக மாணவர் மாணவியர் என்ற புதுச் சொற்கள் இந்த நூற்றாண்டில் அமைந்தன.

நன்மை என்பதற்கு எதிர்மறை தீமை. நன்மை தீமை என்பது வழு இல்லாத தொடர். ஆயின் ஒப்புமை யாக்கத்தின் காரணமாக நன்மைதின்மை என்ற தொடர் பேச்சுவழக்கில் காணப்படுகிறது. தீமை என்பது இதனால் தின்மை எனத் திரிகிறது.

ஒப்புமையாக்கத்தின் காரணமாகச் சில புதுச்சொற் களும் படைக்கப்படுகின்றன. சம்பளம் என்பது முறை யான ஊதியம். வேறு வழியில் வரும் ஊதியம், சம்பளத் தின் ஒப்புமையாக்கமாகக் கிம்பளம் என்று கூறப்படுகிறது. சம்பளம் கிம்பளம் என்ற வழக்கிலிருந்து பிறந்தது இது. சட்டி கிட்டி, தவளை கிவளை, கப்பல் கிப்பல், பட்டம் கிட்டம் என்று ஒவ்வொரு சொல்லுக்கும் முதலெழுத்தின் இடத் தில் கிகர ஒலி அமைத்து வழங்குவது தமிழ்மொழியின் பேச்சுவழக்கில் மிகுதியாகக் காணப்படுகிறது.

எ. மூடநம்பிக்கைகள்

பெயரின் பெருமை

மனம் இல்லையேல் மொழி இல்லை ; மனத்தின் இயல்புகள் எல்லாம் மொழியில் விளங்கும் ; மனம் பற்றும் மூடநம்பிக்கைகள் பல மொழியில் இடம்பெறும்.

கிரீன்லாந்தில் உள்ள மக்களின் நம்பிக்கையின்படி, ஒருவனுடைய பெயரில் அவனுடைய பண்பும் ஆற்றலும் உள்ளனவாம். ஒருவன் இறந்தபின், அவனுடைய பெயரை இன்னொருவனுக்கு இட்டால், இறந்தவனுடைய பண்புகள் இவனுக்கு வந்து அமையுமாம். இறந்தவனுடைய பெயரை ஒரு குழந்தைக்கு வைக்கும் வரையில், அவனுடைய பண்புகள் அலைந்துகொண்டே இருக்கும் என்றும், அதனால் அவனுடைய உயிர் அமைதியுறுது என்றும் அவர்கள் நம்புகின்றார்கள். உடல் இறந்தபின், அவனுடைய பெயரும் பண்புகளும் சூல்கொண்ட ஒரு மங்கையின் வயிற்றினுள் புகுந்து ஒரு குழந்தையிடம் அமைந்துவிடுகின்றனவாம். இத்தகைய நம்பிக்கையின் காரணமாக, பாட்டனுடைய பெயரைப் பேரனுக்கு இடும்வழக்கம் தோன்றி யிருக்கக்கூடும் என்று யெஸ்பர்ஸன் கருதுகிறார்.[1] பேரன் (பேர் + அன், பெயர் + அன்) என்றசொல்லே தமிழில் பெயர் காரணமாக அமைந்திருக்கிறது. இறந்தவரின் பெயரைச் சொல்லி இறுதிச் சடங்குசெய்யும் முறையும் இந்த நம்பிக்கையுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

வெளியாருக்குத் தம் பெயரைச் சொல்லாமல் மறைக்கும் வழக்கம் மடகாஸ்கரில் வாழும் மக்களிடையே உள்ளது. கணவன் பெயரை மனைவிசொல்ல மறுக்கும் வழக்கம்

1. Otto Jespersen, Mankind Nation and Individual, pp. 170-171.

இந்த நாட்டில் உள்ளது. அரசிளங்குமரனே, மடதத்தில் உள்ள இளந்துறவியோ, அரசனுகவும் தலைமைத் துறவி யாகவும் உயர்ந்தவுடன் பெயரை மாற்றிக்கொள்ளும் வழக் கமும் இதனேடு தொடர்புடையதாகலாம். மனிதனுடைய வாழ்வில் ஏற்பட்ட மாறுதல் பெயரிலும் ஏற்பட வேண்டும் என்ற இந்த நோக்கம், பெயருக்கும் பொருளுக்கும் சிறந்த தொடர்பு உண்டு என்ற நம்பிக்கையால் ஏற்பட்டதே ஆகும். ஊர்ப்பெயர்களே மாற்றுவதிலும் இதை ஒருவாறு காணலாம். ஜப்பானில் பழைய யெட்டோ (yeddo) டோகியோ (Tokyo) ஆயிற்று. ரஷ்யாவில் பீடர்ஸ்பர்க் என்பது லெனின்கிராட் ஆயிற்று.

பசிபிக்தீவுகளின் பழங்குடி மக்களின் பேச்சில், அவர் களின் தலைவனுடைய பெயரை எவரும் வைத்துக்கொள்வ தில்லே. அதனேடன்றி, அந்தப் பெயரின் ஓர் அசையும் மற்ற வர்களின் பெயரில் இல்லாதவாறு காத்துக்கொள்கின்றனர். அவ்வாறு ஏதேனும் ஓர் அசை தங்கள் பெயரில் இருந்தால், அந்த அசையைமட்டும் மாற்றியமைத்துக்கொள்கின்றனர். போமரெ என்பவர் அரசியாக வந்தவுடன், போ என்ற அசை குடிகளின் பெயரில் இருந்ததால் அதை மாற்றிக் கொண்டனராம். இராக்காலத்தைக் குறிக்க 'போ' என்ற சொல் வழங்கியது. அதையும் 'மி' என மாற்றிக்கொண் டனராம்.[1] சீனர்களுக்குள்ளும் இத்தகைய வழக்கம் இருந்துவந்தது.

தமிழ் நாட்டிலும் கிராமத்தாரிடையே இந்த வழக்கம் இருந்துவருகிறது. கணவனுடைய பெயர் முருகையா என்று இருந்தால், மனைவி முருங்கைக்காய் என்று சொல் லாமல் அதைக் கொம்புக் காய் என்று சொல்வாள். மாம

1. Sayce, Introduction to the Science of Language, p. 206.

னரின் பெயர் சீதாராமன் என்று இருந்தால், மருமகள் சீதாப்பழத்தைச் செடிப்பழம் என்று சொல்வாள். தன் மாமனாரின் பெயரே அவருடைய பேரனுகிய தன் மகனுக்கும் இடப்படும்பொழுது தான் அந்தப் பெயரைச் சொல்ல முடியாத காரணத்தால், வேறொரு பெயரைச் செல்லப் பெயராக வழங்குவாள். அதனால் ஆறுமுகத்தின் பேரனுக்கு ஆறுமுகம் என்ற பெயர் ஊரெல்லாம் வழங்கும் போது, அவனுடைய தாய்மட்டும் கண்ணன் என்றோ குழந்தை என்றோ செல்லப்பெயர் இட்டு வழங்குவாள். சுப்பையா என்பவரை மணந்த ஒருத்தி, உப்பு என்னும் சொல்லையும் ஒலிக்கக் கூசுவது உண்டு.

சாவின் அச்சம்

சாவை ஒட்டி வளர்ந்த மூட நம்பிக்கைகள் பல உலகமெல்லாம் காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் இறந்தார் என்றோ செத்தார் என்றோ சொல்லாமல், திருவடி நீழல் அடைந்தார் என்று கூறும் வழக்கம் உள்ளது. பழங் காலத்தில் இறந்த வேந்தர்களைக் குறிப்பிடும் இடங்களில் 'துஞ்சினர்' என்று எழுதியிருக்கிறார்கள்.[1] இவ்வாறு கூறுவது 'தகுதி'[2] என்றும் 'மங்கல வழக்கு' என்றும் குறித்து இலக்கணம் இடம்தருகிறது.[3]

---

1. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனே.....
—புறநானூறு, 34

2. தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலே இலவே. —தொல், சொல். 17

தகுதி என்பது அப்பொருட்கு உரியசொல்லாற் சொல்லுதல் நீர்மையன்று என்று அது களைந்து தக்கதோர் வாய்பாட்டாற் கூறுதல். அது செத்தாரைத் துஞ்சினர் என்றலும், சுடுகாட்டை நன்காடு என்றலும், ஓலையைத் திருமுகம் என்றலும், கெட்ட தனைப் பெருகிற்று என்றலும் என இத்தொடக்கத்தன.
—ஷே. சேனுவரையம்.

3. இடக்கர டக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமூத் தகுதியோடு ஆறும் வழக்கியல். நன்னூல், 267

'போய்விட்டார்' என்ற சொல்லும் சில வேளைகளில் இறந்தவரைக் குறித்துச் சொல்லப்பட்டுவருகிறது. 'போய்விடும், கிற்காது' என்று உயிர் போவதைக் குறிக்கும் வழக்கம் இன்றும் உள்ளது.[4] அம்மைவார்த்து இறந்தவரைக் குறிக்கும்போது, அம்மை நோயிடம் உள்ள அச்சத்தால் 'இறந்தார்' என்று சொல்வதில்லை; 'குளிர்ந்து விட்டது' என்பர்.

போர்க் காலத்தில் படையில் சேர்ந்து போர்புரியும் வீரர்கள் 'சாவு' என்ற சொல்லை ஆளுவதே இல்லை என்றும், அந்தச் சொல்லிடத்துக் கொண்ட அச்சமே அதற்குக் காரணம் என்றும், அந்தப் பொருளை உணர்த்த வெவ்வேறு சொற்களைப் பயன்படுத்துகின்றனர் என்றும் யெஸ்பர்ஸன் கூறுகிறார்.

வறுமைக்கு அஞ்சுதல்

காட்டுமிராண்டிகள் சொற்களுக்குத் தனி ஆற்றல் இருப்பதாக எண்ணும் இயல்பினர்; துன்பம் பற்றிய சொற்களை வழங்காமலே இருந்தால் துன்பத்திலிருந்து நீங்கியிருக்கலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. நாகரிக மக்களிடத்திலும் இந்த நம்பிக்கை இன்னும் விடாமல் ஓரளவு பற்றிக்கொண்டுள்ளது எனலாம்.

நாகரிக மக்களிடத்தில் வறுமையைப் பற்றிய அச்சம் பல சொல்வழக்குகளுக்குக் காரணமாக உள்ளது. தமிழ் நாட்டிலும் 'இல்லை' என்று சொல்லை வழங்கத் தயங்கும் மக்களும், அதை எக்காரணத்தாலும் கூறாமல் காத்துக்கொள்ளும் மக்களும் உள்ளனர். இல்லாத

4. Nearly all the words which properly mean to go, to go away, or can be used in slang in that sense, can be used in a transferred sense to mean 'to die.'—Otto Jespersen, Mankind Nation and Individual, p. 165.

நிலையாகிய வறுமையிடம் அவர்களுக்கு உள்ள அச்சமே 'இல்லை' என்ற சொல்லினிடத்திலும் தோன்றுகிறது. உளுந்து வாங்க வந்தவரிடத்தில் 'உளுந்து இல்லை' என்று சொல்ல முடியாமல், 'பயறுதான் உண்டு' என்று சொல்லும் வழக்கத்தை வணிகரிடத்தில் காணலாம். குழந்தை பெறுத ஒருவனை நோக்கி, 'எத்தனைக் குழந்தைகள்?' என்று கேட்டால், 'இல்லை' என்ற விடை வராது; 'இனிமேல்தான்' என்ற விடையே தமிழர் சிலரிடம் எதிர்பார்க்கலாம். கடன் கொடுப்பவர் தம்மிடம் பணம் இல்லை என்பதை எப்போதும் கூறுவதில்லை; நாளைக்குப் பார்க்கலாம் என்றே சொல்லியனுப்புவர். 'சாப்பாடு ஆயிற்று?' என்ற வினவுக்கு விடை கூறுவோர் பெரும்பாலும் 'இல்லை' என்று சொல்லாமல், 'இதோ, சாப்பிடப் போகிறேன்' என்று கூறுதல் வழக்கம்.

உப்பு விலை குறைந்த எளிய பொருள் ஆகையால், அதை இல்லை என்றோ குறைவு என்றோ கூறுதல் வறுமையிலும் வறுமையாகக் கருதப்படுகிறது. ஆகவே 'உப்பு இல்லை' என்னுமல், 'சர்க்கரை இல்லை' 'சர்க்கரை குறைவு' என்று சொல்லக் கேட்கிறோம். 'உப்பு வாங்கிவா' 'உப்பு எடுத்துவா' என்றால், 'சர்க்கரை வாங்கிவா' 'சர்க்கரை எடுத்துவா' என்பர். விளக்குவைத்த பிறகு உப்பு என்ற சொல்லையே நாவால் சொல்ல அஞ்சுகின்றனர் சிலர். துன்பத்தை அறிவிப்பதாகக் கருதப்படும் பல்லியின் பெயரையும் கூற அஞ்சுவோர் உள்ளனர்.

விளக்கை அவி, அல்லது நிறுத்து என்று கூறுவது அமங்கலம் என்று, விளக்கை அமர்த்து, குளிரவை முதலான சொற்களால் குறிப்பர். திருமகளின் பொலிவு என்று விளக்கைப் போற்றும் நம்பிக்கை இருப்பதால்,

அவி, அல்லது நிறுத்து என்னும் சொற்களை வழங்கினால் திருமகளின் அருள் நீங்குமோ வறுமை வந்திடுமோ என்ற அச்சமே அதன் அடிப்படையில் உள்ளது.

பாம்பைப் பூச்சி கயிறு என்று வேறு பெயர்களால் கூறும் வழக்கம் சில மாவட்டங்களில் உள்ளது. பாம்பு என்ற சொல்லாலேயே கூறின், பாம்பு வந்துவிடும் என்ற அச்சமே இதற்குக் காரணம்.

வசம்பு என்ற சொல்லை வழங்காமல், பிள்ளைவளர்த்தி என்ற சொல்லால் சிலர் குறிப்பிடுகின்றனர். பிள்ளை வளர வேண்டும் என்ற கவலை இவ்வாறு சொல்லினிடத்தும் அச்சத்தை ஏற்படுத்தி, நல்ல சொல்லால் அதைக் குறிக்க வேண்டும் என்று தூண்டுகிறது.

அச்சம் பற்றிப் பிறக்கும் சொல்வழக்குகளைப் போலவே, ஆசை பற்றிப் பிறக்கும் வழக்குகளும் உண்டு. மரக்காலால் நெல்லை அளப்பவர், ஒன்று இரண்டு என்று எண்ணுமல், (இ)லாபம் இரண்டு மூன்று என்று எண்ணிக் கொண்டு செல்வர். இங்கு ஒன்று என்ற சொல்லுக்கு ஈடாகவே (இ)லாபம் என்ற சொல் வழங்குகிறது. தவறுமல் ஊதியம் பெருக வேண்டும் என்ற ஆசையே இந்த மாறுதலுக்குக் காரணமாகும்.

அ. வழக்கம்

பயனுள்ளதாக்குதல்

வழக்கம் என்பது இறந்த காலத்தின் அனுபவத்தை இழந்துவிடாமல் காக்கவல்லது; ஒவ்வொரு முறையும் என்ன செய்வது என்று எண்ணிப் பாராமல், முன்னமே வகுத்த வழியில் எளிதில் செல்லத் துணை புரிவது. பரந்த பெரு வெளியில் எவ்வாறு எப்பகுதியில் நடந்து செல்வது என்று ஒவ்வொருவரும் எண்ணிக்கொண்டிருப்பதில் காலமும் முயற்சியும் எவ்வளவோ வீணாகும். அங்கே ஓர் ஒற்றையடிப் பாதை இருப்பின், அது அவ்வளவு காலத்தையும் முயற்சியையும் வீணாக்காது சிக்கனப்படுத்தும்; நடப்பவர்க்கு எளிதாய்ப் பெருநன்மையாகும். அந்த ஒற்றையடிப் பாதை நடப்பவர்க்கு எத்தன்மையானதோ, பேசுபவர்க்கு மொழி அத்தன்மையானது. ஒற்றையடிப் பாதை என்பது என்ன? பலர் நடந்து சென்று பழக்கமானது, அந்தப் பழக்கத்தை நாமும் பயன்படுத்திக்கொள்ளுமாறு அமைந்தது. மொழியும் அப்படிப்பட்டதே; அது, பலர் பேசி அறிகுறிகளாய்ப் பழக்கப்பட்ட ஒன்று; நாம் பயன்படுத்திக் கொள்வதற்கு எளிதாக அமைந்தது.

பலர் நடந்து சென்று நமக்குப் பயனுள்ளதாக்கிவிட்டுவிட்டுச் சென்ற ஒற்றையடிப் பாதையில் நாமும் நடந்து வழக்குள்ளதாக்குகிறோம்; இனி நடப்போருக்கும் பயனுள்ளதாகச் செய்கிறோம். அதுபோலவே, பல தலைமுறையாகப் பலர் பேசிப் பேசி (எழுத்துமொழியாயின் எழுதி எழுதிப்) பயனுள்ளதாக்கிவிட்டுச் சென்ற மொழியை நாமும் பேசி (எழுதி) வாழ்வுள்ளதாக்குகிறோம்; இனிப் பேசுவோருக்கும் (எழுதுவோருக்கும்) பயனுள்ளதாக்குகிறோம்.

ஒற்றையடிப் பாதை சென்ற ஆண்டு இருந்தது போலவே, இன்றும் இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. நடப்பவர் நடந்த நடைவேறுபாடுகளாலும், எதிரே வந்தவர்களின் வருகை வேறுபாடுகளாலும், அந்தச் சிறு பாதை ஒரு சிறிது மாறுதலடைந்திருக்கும் அன்றோ? அது போலவே, பேசுவோர் கேட்போர் (எழுதுவோர் கற்போர்) ஏற்படுத்தும் சிறு சிறு மாறுதல்கள் மொழியில் இடம் பெறுவது இயற்கையாகும்.

பொருளும் பெயரும்

ஒரு பொருளை நினைத்தவுடன் அதனுடைய பெயர் உள்ளத்தே தோன்றுகிறது. அல்லது, ஒரு பெயரைச் செவியால் கேட்டவுடன் (நூலில் கண்டவுடன்) அந்தப் பொருளைப் பற்றிய எண்ணம் அகத்தே எழுகிறது. பெயர் என்பது என்ன? ஒருவகை ஒலியை (அந்த ஒலிக்குத் தந்த வடிவத்தைப்) பெயர் என்கிறோம். அந்தப் பொருளுக்கும் ஒலிக்கும் தொடர்பு எப்படி ஏற்பட்டது எனின், அது பழக்கத்தால் ஏற்பட்டது ஆகும். ஒரு கொடியைக் கண்டவுடன் அந்தக் கொடியை அடையாளமாகக்கொண்ட நாட்டின் நினைவு அல்லது இயக்கத்தின் நினைவு வருதலைப் போன்று, அதுவும் பழக்கத்தால் வருவதே ஆகும். அதனால்தான் ஒரே பொருளுக்கு மொழிதோறும் வெவ் வேறு பெயர் அமைந்திருக்கக் காண்கிறோம்.

பொருளுக்கு அறிகுறியாக அமைந்த பெயர் பழக்கத்தால் அந்தப் பொருளுணர்ச்சியைப் பெற்றது எனக் கண்டோம். ஒவ்வொரு வகைச் செயலுக்கும் (வினைக்கும்) ஒவ்வொரு சொல் இவ்வாறே அறிகுறியாக அமைந்துள்ளது. பொருள்களின் வேறுபாடுகள் பல; செயல்களின் வேறுபாடுகள் பல; இடத்தையும் காலத்தையும்

பிறவற்றையும் ஒட்டி அமையும் வேறுபாடுகளுக்கும் ஏற்ற சொற்கள் அறிகுறிகளாக அமைகின்றன. இவை எல்லாம் சேர்ந்து ஒரு கருத்தை உணர்த்தத் தேவைப்படும்போது வாக்கியம் அமைகிறது. வாக்கியங்கள், பல தலைமுறைகளாகப் பலர் பேசிப் பேசிப் பழக்கப்பட்டவைகளே ஆகும். ஆகவே மொழி முழுவதுமே, மனித மூளைப் பழக்கத்தால் உணர்ந்துகொள்ளும் பொருளுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

நாயையும் மாட்டையும் வளர்த்துப் பழக்குவோர் அந்த விலங்குகளின் மூளைப் பழக்கத்தின் காரணமாகச் சில சைகைகளுக்கும் ஒலிகளுக்கும் குறிப்பிட்ட பொருளை உணர்ந்து நடப்பதை அறிவர். விலங்குகளின் மூளை சிறியது; விரிவடையாதது; ஒரு சில அறிகுறிகளை மட்டுமே உணர வல்லது. மனித மூளை பெரியது; பயிற்சியால் விரிவடைவது; கோடிக்கணக்கான அறிகுறிகளை நினைவில் கொண்டு உணர வல்லது. அதனால்தான் எவ்வளவோ பெயர்ச்சொற்கள் வினைச்சொற்கள் இடைச்சொற்கள் ஆகிய ஒலிக் கூட்டங்களுக்கு இன்னின்ன பொருள் என்று தெளிவாக உணரும் ஆற்றல் மனித மூளைக்கு அமைந்துள்ளது.[1] இயற்கையாக மனிதனுக்கு உள்ள ஆற்றலாலேயே மொழி என்பது ஒரு பெருங் கலையாய் வளர்ந்து சமூதாயத்தைப் பிணைக்க வல்லதாய் விளங்குகிறது.

அறிகுறிகள்

மரம் என்ற ஒரு பொருளுக்குத் தமிழில் இந்தப் பெயரும், ஆங்கிலத்தில் 'ட்ரீ' (tree) என்னும் வேறு

1. Human language is no less natural than that of animals, but it is a degree higher, in that man, having given to signs an objective value, is able to vary it indefinitely by convention.—J. Vendryes, Language, p. 11.

பெயரும், இந்தியில் 'பேட்' என்னும் மற்றொரு பெயரு மாக, இவ்வாறு வெவ்வேறு மொழியில் வெவ்வேறு பெயர் அமைந்திருக்கக் காணலாம். மரம் என்ற பெயருக்கும் (கப்பும் கிளையும் இலையும் காயுமாக உள்ள) அந்தப் பொரு ளுக்கும் தொடர்பு இல்லை. தொடர்பு உண்டு என்றால் ட்ரீ, பேட் முதலான வேறு பெயர்கள் தோன்றி யிருக்க வேண்டியதில்லை. உணவு உண்பதில் இந்த நாட்டில் ஒரு பழக்கமும், ஜப்பானில் வேறொரு பழக்கமும், இங்கி லாந்தில் மற்றொரு பழக்கமும் அமைந்துள்ளதுபோல், உலகமெல்லாம் உள்ள ஒரே பொருள் ஆயினும், அந்தந்த நாட்டு மக்கள் பழங்காலத்திலேயே ஒவ்வொரு பெயர் அமைத்து, அந்தந்தப் பெயரை அறிகுறியாகப் பழக்கப் படுத்திக்கொண்டனர்.

இவ்வாறே ஒவ்வொரு சொல்லையும் ஆராய்ந்தால், பெரும்பாலும் அதற்கும் அதன் பொருளுக்கும் உள்ள தொடர்பு பெரும்பாலும் காரணமின்றி அமைந்தது என்ப தையும், தலைமுறை தலைமுறையாகப் பழக்கப்பட்டதால் அந்தப் பொருளுணர்ச்சி மாற்ற முடியாததாக அமைந் துள்ளது என்பதையும் அறியலாம்.[1] ஆட்டுக்கு ஆ என்று பெயர் வைத்திருக்கக்கூடும்: பசுவுக்கு ஆடு என்றும் பெயர் வைத்திருக்கக்கூடும். இரண்டும் அல்லாமல், ஆட் டைக் கீ என்றும், மாட்டைத் தோ என்றும் தொடக்கத்

1. Every word handed down in every human language is an arbitrary and conventional sign: arbitrary, because any one of the thousand and other words current among men, or of the tens of thousands which might be fabricated, could have been equally well learned and applied to this particular purpose; conventional because the reason for the use of this rather than another lies solely in the fact that it is already used in the community to which the speaker belongs.—Whitney, The Life and Growth of Language, p. 19.

கில் பெயர்வைத்து வழங்கியிருந்தாலும், பழக்கத்தால் அவைகளே அவற்றிற்குப் பெயர்களாக அமைந்திருக்கக் கூடும். வருதலைப் போதல் என்றும் போதலை வருதல் என்றும், அல்லது இரண்டையுமே கொருதல் மொருதல் என்று முன்னோர் வழங்கியிருப்பினும் இன்று அவை அப் பொருளுக்கு உரிய சொற்களாக வாழ்ந்திருக்கும்.

காரணமும் உண்டு

எல்லாச் சொற்களும் காரணம் அற்ற அறிகுறிகள் என்று துணிவதற்கு இடம் இல்லை. ஒரு சில சொற்கள் சில காரணம் பற்றி அமைதல் உண்டு. எடுத்துக்காட்டாக, அச்சமும் வியப்பும் தோன்றும்போது மூச்சை உள்ளே இழுத்தலும், சினமும் வெறுப்பும் கொள்ளும்போது மூச்சை வெளியே விடுதலும் உண்டு. அந்த முயற்சிகளுக்கு ஏற்ற ஒலிகளே அவ் வுணர்ச்சிகளுக்கு உரிய ஒலிக் குறிப்புச் சொற்களாக வழங்குகின்றன. 'ஆ' 'ஓ' 'ஆஆ' 'ஆஹா' 'அஹ்' முதலான ஒலிக்குறிப்புக்கள் மூச்சை உள் ளிழுக்கும் முயற்சிக்கு இயைந்து, அச்ச வுணர்ச்சியையும் வியப்புணர்ச்சியையும் புலப்படுத்துகின்றன. 'ஃ' 'சே' 'ப்பூ' முதலிய ஒலிக்குறிப்புக்கள் மூச்சை வெளிவிடும் முயற்சிக்கு இயைந்து, சினத்தையும் வெறுப்பையும் புலப் படுத்துகின்றன. உலக மொழிகள் பலவற்றிலும் உணர்ச்சிக் குறிப்புக்களாக உள்ள இத்தகைய சொற்கள் காரணத் தோடு அமைந்திருக்கக் காண்கிறோம். வேறுபட்ட சில மொழிகளுக்குள் ஒரேவகையான சொற்கள் இருத்தலையும் காணலாம். தமிழில் வியப்புச்சொல்லாக உள்ள 'ஓ!' என்பதுபோலவே ஆங்கிலத்தில் 'Oh!' என்பது உள்ளது.

இவ்வாறு வேறு சில சொற்களும் தக்க காரணத்தோடு பொருந்தி அமைந்த சொற்களாகத் தோன்றுகின்றன.

உரிஞ் என்ற சொல் அந்தச் செயலை ஒருவாறு உணர்த்து வதுபோல் தோன்றுகிறது. குயில் என்ற சொல்லும் அந்தப் பறவையின் ஒலியோடு ஒரு சிறு ஒப்புமை உடை யதுபோல் தோன்றுகிறது. இவ்வாறு உள்ள சொற்கள் மிகமிகச் சிலவே.

பெரும்பான்மையான சொற்கள் காரணமின்றி அமைக்கப்பட்டவை; எண்ணிப்பார்க்காமல் தெளிவு இல் லாமல் கண்மூடி அமைக்கப்பட்டவை.[1] நாற்காலி என்னும் சொல் காரணத்தோடு அமைக்கப்பட்டதாகத் தோன்றும். ஆயின், அதுவே எருமையைக் குறிக்கவோ, குதிரையைக் குறிக்கவோ வழங்கியிருப்பினும் பொருத்தமாகவே தோன் றும். தவிர, அதன் உறுப்புக்களாக உள்ள நால் (நான்கு) என்னும் சொல்லும், கால் என்னும் சொல்லும் எக் காரணம் பற்றி அமைக்கப்பட்டன? நான்குக்கு வேறு எச் சொல்லாவது அமைந்திருக்கக்கூடும்; காலுக்கு வேறு ஏதேனும் சொல்லாகியிருக்கக்கூடும். அவ்வாறு ஏற்பட்டிருப்பின், நாற்காலி என்ற சொல்லின் நிலை என்ன ஆகியிருக்கும்? அவ்வாறே 'நாய்' என்ற சொல் நா என்பதன் அடியாகப் பிறந்தது என்று காரணம் காணும்போது அழகுபட உள்ளது. ஆனால் அதன் அடிச் சொல்லாகிய நா என்பதற்குப் பொருட் காரணம் கூற முடியவில்லை. இவ்வாறே ஒவ்வொன்றையும் ஆராய்ந்து காணின், பெரும்பான்மையான சொற்கள் எவ்வாறோ எதிர் பாராமல் அமைந்து வழக்கத்தை அரணாகக்கொண்டு வாழ்வுபெற்றுள்ளன எனலாம். இதனாலேயே, 'மொழிப்

1. Our words are too often signs sor crude and hasty, for indefinite and indefinable, generalizations.....For the most part, we are loose thinkers and loose talkers, misled into error in an infinity of cases by our ignorance of the terms we glibly use.—Whitney, The Life and Growth of Language, p. 29.

பொருட் காரணம் விழிப்பத் தோன்ற' என்றார் தொல் காப்பியனார்.

பிறப்பு வரலாறு

சொற்களின் பிறப்பு வரலாற்றைப்பற்றிப் பெரும்புல வர்கள் கவலைப்படுவதே இல்லை. சொற்கள் உணர்த்தும் பொருளைப் பற்றியே அவர்கள் எண்ணுகின்றனர். உண்மை யில், புலவர்களே மொழியை வளர்ப்பவர்கள்; தம் கருத் தைப் பிறர் தெளிவாக உணரவேண்டும் என்றும், முயற்சி இல்லாமலே உணரவேண்டும் என்றும் விழைகின்றவர்கள் அவர்கள். அத்தகையவர்கள் தாம் எடுத்தாளும் சொற்கள் எப்படிப் பிறந்தன எவ்வாறு பிறந்தன என்பன பற்றிக் கவலைப்படுவதே இல்லை.[1] ஒவ்வொரு சொல்லும் வழக்கத் தில் என்ன என்ன பொருளை உணர்த்துகிறது என்பதைத் தெளிவாக உணர்ந்து, அந்தந்தச் சொல்லை அந்தந்தப் பொருளிலே ஆளுவதில் அவர்கள் கருத்தாக உள்ளனர்.

சொற்களை வழங்கும் மக்களும் அவற்றின் பிறப்பு வரலாற்றைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அரசாங்கம் ஏற்படுத்தும் நாணயங்களை மதிப்பறிந்து வழங்குவதில் மக்கள் விழிப்பாக உள்ளனர்; ஆனால் அந்த நாணயங்கள் செய்யப்பட்ட இடம் காலம் முறை முதலிய வரலாற்று ஆராய்ச்சியில் அவர்கள் அக்கறை கொள்வதில்லை. அதுபோலவே, சமுதாயத்தில் வழங்கிவரும் சொற்களில், எந்தச் சொல்லுக்கு என்ன பொருள் என்று நிட்பமாக அறிந்து வழங்குவதில் மக்களுக்கு ஆர்வம் உள்ளது; ஆயின், அந்தச் சொற்களின் பிறப்புவரலாற்றில் ஆர்வம்

1. But those who really form the language, anxious above all to be understood, and that at least cost, trouble themselves but little about the origin of the materials with which they work.—M. Breal, Semantics, p. 68.

இல்லை. தனிர, சொற்பிறப்பு ஆராய்ச்சி, சொற்களின் உண்மைத் தன்மையை விளக்குவதில்லை.[1] நாணயங்களின் மதிப்பு அவற்றின் வரலாற்றால் ஏற்படாததுபோல், சொற்களின் பொருளும், அவற்றின் பிறப்புப் பற்றி அமைவ தில்லை. இரண்டனுக்கும் ஏதேனும் சிறு தொடர்பு இருக்கலாம். அதை மக்களின் மனம் மறந்துவிடுகிறது.[2]

துன்ப நாடகம் என்ற பொருளைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லாகிய 'tragedy' என்பதன் தொடக்கப் பொருள் 'ஆட்டின் பாட்டு' (goat song) என்பதாகும். இன்ப நாடகத்தை உணர்த்தும் 'comedy' என்ற சொல்லின் தொடக்கப்பொருள் 'விழாப் பாட்டு' என்பதாகும். 'வைதிகம்' என்ற வடசொல், வேதத்தின் தொடர்பானது; வேதநெறி என்னும் பொருள் உடையது. இன்று அது தமிழில் வழங்கும்போது, அத் தொடக்கப்பொருள் மறக்கப்பட்டு, சடங்குகளிலும் பழமையிலும் ஊறித் தேங்கிய வாழ்வையே குறிக்கிறது.

பயனே நோக்கம்

மக்களின் மனம் மொழியாகிய கருவியின் பயனையே கருதுகின்றதே அல்லாமல், வரலாற்றைப் பற்றிக் கருதுவ

1. Etymology, however, gives a false idea of the nature of a vocabulary, for it is concerned only in showing how a vocabulary has been formed. Words are not used according to their historical value. The mind forgets—assuming that it ever knew - the semantic evolutions through which the words have passed. Words always have a current value, that is to say, limited to the moment when they are employed, and a particular value relative to the momentary use made of them. —J. Vendryes, Language, p. 176.

2. Use tends to each of these words a precise value irrespective of any meaning they may have had in the past.—Ibid. p. 176.

இல்லை.[1] ஏறக்குறைய எல்லாக் கருவிகளைப் பற்றியும் மக்களின் மனம் இதே போக்கில் உள்ளது. எழுத்தாணியை விட்டுப் பென்சிலைப் போற்றிய மனம், மை தோய்த்து எழுதும் பேனாவை விட்டு மையூற்றுப் பேனாவைப் போற்றிய மனம் முதலியவற்றிலும் பயனையே நோக்கமாகக் கருதும் பான்மையை உணரலாம். எளிய தாய் மிக்க பயனைத் தருவதாய் உள்ள கருவியை மனித மனம் எப்போதும் போற்றுகிறது. அதற்காகப் பழைய கருவிகளைப் புறக்கணிக்கத் தயங்குவதே இல்லை. வரலாற்றுச் சிறப்புடைய கருவியே ஆயினும் அதற்கு வாழ்வு இல்லாமல் போவதற்குக் காரணம் இதுவே. சொற்களிலும் இதே நிலை உள்ளது. தெளிவான அடிச்சொல் அமைந்த சிறந்த சொல்லாக இருப்பினும், அதைவிடப் பயன்மிக்க எளிய சொல் கிடைத்தால், மக்கள் பின்னதைப் போற்றி முன்னதை மறந்துவிடுகின்றனர். பழைய சொல்லுக்கே புதியதொரு பொருள் காணும்போதும், பழைய பொருளால் பயன் குறைவு என உணர்ந்தால், அதன் பொருள்தெளிவைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் விட்டுவிடுகின்றனர். சொல்லின் பிறப்புக்கும் புதிய பொருளுக்கும் தொடர்பு இல்லையாயினும், புதிய பொருளை விடாமல் போற்றுகின்றனர். சூழ்ச்சி என்ற தமிழ்ச் சொல்லுக்குப் பழைய பொருள் 'சூழ்ந்து நிற்றல்' 'ஆராய்தல்' என்பவை; இன்று வழங்கும் பொருள், 'தீய எண்ணம்' 'வஞ்சக யோசனை' என்பவை. அச் சொல்லின் பிறப்பைக் காட்டும் 'சூழ்' என்னும் அடிச்சொல் தெளிவாக அமைந்திருந்தும் இவ்வாறு பொருள் மாறுவதைத் தடுக்க இயலவில்லை.

---

1. The people has a feeling for utility, but does not trouble at all about history.—M. Breal, Semantics, p. 56.

புகையிலை, நம் நாட்டில் இறக்குமதியாயிற்று. அப் போது வேறு பெயராலேயே மக்களில் சிலர் அதைப் பற்றி அறிந்தனர். அந்தப் பெயரை மறந்தவரோ, அல்லது அதைச் சொல்லத் தயங்கியவரோ ஒருவர் அது பயன்படும் வகையை—புகைக்கப் பயன்படுவதை—நெஞ்சில் கொண் டவராய், 'புகையிலை' என்று குறிப்பிட்டுப் பேசினர். கேட்டவரின் உள்ளத்தில் அது பொருத்தமான பெய ராகப் பதிந்தது. அவரும் அந்தப் பெயராலேயே குறிப் பிட்டுப் பேசினர். இவ்வாறே பற்பலர் பேசிப்பேசி அந்தச் சொல்லுக்கு அந்தப் பொருளுணர்ச்சி நிலைத்துவிட்டது.

வாழ்வும் கேடும்

முதலில் ஒருவர் முயற்சியால் அமைந்த சொல், பிறகு பயனுள்ளது என்று பலராலும் அறிந்து போற்றப்படு கிறது. விருப்பு வெறுப்பைக் கேட்டுணர்ந்து சொற்களை யாரும் பேசுவதில்லை. எளிமையும் தெளிவும் அமைந்த சொற்களைத் தயங்காமல் ஏற்றுக்கொள்கின்றனர். சொற் களின் உலகத்தில், தக்க சொல்லுக்கு அரண்செய்ய வேண்டியதும் இல்லை; தகாத சொல்லை நீக்கித் தள்ளவேண் டியதும் இல்லை. பெரும்பாலோர் விரும்புவது தக்கது; விரும்பாதது தகாதது. பலர் விரும்பும் சொல் தானே உரம்பெற்று வாழ்கிறது. பலர் விரும்பாத சொல் தானே அழிந்து மறைகிறது.

கல்லாதவனுக்குப் பழக்கமான சொற்கள் சில; கற் றவன் நினைவில் உள்ள சொற்கள் பல: மிகப்பல. ஆயின், கற்றவன் நினைவில் கொண்ட சொற்களுள் வேண்டாதவை பல; அவை வீண்சுமையாய் அவனுடைய நினைவில் கிடக் கின்றன என்கிறார் அறிஞர் வெண்ட்ரியே.[1] அவன் நினை

1. J. Vendryes, Language, pp. 189-190.

வார்த்தை வளர்த்து இச் சொற்களைச் சேர்த்து மூளையில் குவித்துவைக்கின்றான் என்றும், அவற்றை வெளியே எடுத்து வீசும்போது கல்லாதவர்களும் அறிவிலிகளும் கேட்டு மருண்டு அவனைப் புகழ்கிறார்கள் என்றும் அவர் கூறுகிறார். பல மொழி அறிந்தவர்களையும் நினைவாற்றல் கொழுத்தவர்கள் என்றே அவர் கருதுகிறார். தச்சன் முதலியவர்கள் கை முதலிய உறுப்புக்களுக்குத் தரும் மிகுதியான பயிற்சியால் அந்த உறுப்புக்கள் மிக்க ஆற்றலுடன் வளர்வதுபோல், பயிற்சி காரணமாக நினைவாற்றல் சிலருக்குச் செழிக்கிறது. சிலருக்கு வாழ்க்கை நெருக்கடியே அத்தகைய பயிற்சி பெறத் தூண்டுகிறது. சிலர் வேண்டுமென்றே இளமைமுதல் பாடுபட்டு அதைப் பெற்றுக்கொள்கின்றனர்.

நகரங்களில் பல மொழி அறிந்தவர்கள் கூடிக் களிக்கும் பொழுதுபோக்குக் கழகங்களில் வேலைசெய்யும் ஏவலாளர்கள், ஒவ்வொரு பொருளுக்கும் பல மொழிப் பெயர்கள் அறிந்தவர்களாக இருப்பார்கள். பலமொழி அறிந்தால்தான், அங்கே அவர்கள் தொழில் செய்ய முடியும். ஆகையால், வாழ்க்கைநிலைமை அவர்களுக்கு அந்தப் பயிற்சியை அளிக்கிறது. எல்லா நாடுகளிலும் சமயத்துறையில் தொண்டு ஆற்றும் புரோகிதர் முதலானவர்கள் மிக்க நினைவாற்றல் பெற்றிருப்பதற்கும் காரணம் அதுவே. சிலர் நூல்களின்மேல் உள்ள ஆர்வத்தின் காரணமாக அவற்றைத் திரும்பத் திரும்பக் கற்று மனப்பாடம் செய்வதால் நினைவாற்றலை வளர்த்துக்கொள்கின்றனர். இந்த இரு சாராரும் மிகப் பல சொற்களை அறிந்தவர்கள் எனலாம். பொதுவான உலக வாழ்க்கைக்கு இவ்வளவு சொற்கள் தேவை இல்லை எனலாம்.

தேவை இல்லாத சொற்கள் நாளடைவில் மறக்கப்பட்டு அழிந்து போவதும் உண்டு.

மொழித்துறையில் அழிவு என்பது மரம் வீடு நகரம் முதலியவற்றின் அழிவு போன்றது அன்று. ஒரு சொல்லோ அதன் பொருளோ வழக்கில் இருந்துவருதலே அதன் வாழ்வு ஆகும். யாராலும் ஆளப்படாமல் வழக்கில் இல்லாமல் போதலே அதன் அழிவு ஆகும்.

சொற்களின் பிறப்பு வளர்ச்சி இறப்பு என்று பேசப்படுகிறது; மொழியின் பிறப்பு வளர்ப்பு இறப்பு என்றும் பேசப்படுகிறது. அறிவியல் (Science) முறைப்படி, ஒரு சொல்லுக்கோ மொழிக்கோ உயிர் இருப்பதாகக் கூறுவது பொருந்தாது. ஒப்புமை வகையால் கூறும் கூற்றாகவே இதைக் கொள்ளவேண்டும்.

தனிமனிதர் : சமுதாயம்

ஒரு மொழியில் ஏற்படும் மாறுதல்களை எல்லாம் கொள்ளுவதோ தள்ளுவதோ, அந்த மொழியைப் பேசுவோரின் முடிவை ஒட்டியது; அந்தச் சமுதாயம் தக்கது என ஏற்றால் அது மொழியில் இடம் பெறமுடியும்; ஏற்காமல் கைவிடின், அது மொழியில் இடம்பெற்று வாழ முடியாது.

சமுதாயம் என்று பொதுப்படக் கூறப்படினும், தனிமனிதர் முயற்சி இன்றிச் சமுதாய ஆட்சி இல்லை. ஒவ்வொரு மாறுதலும் முதல்முதலில் ஒருவராலேயே அவருடைய பேச்சிலோ எழுத்திலோ புகுத்தப்படும். அவர் அறிந்தோ அறியாமலோ அது புகுதல் கூடும். அவர் பேசியதை மற்றவரும் தொடர்ந்து பேசினால் அல்லது எழுதினால்தான் அதற்கு உயிர் உண்டாகும்; இல்லையேல்

பிற்ந்தபோதே சாகும் நிலையினது ஆகும். மேன்மேலும் அவ்வாறே தொடர்ந்து பேசுவோர்—எழுதுவோர்—இருந்தால்தான், அது நீண்ட வாழ்வு பெறமுடியும். இல்லையேல் அதன் உயிர்வாழ்க்கை ஒருபகல் வாழ்க்கையாக முடியும். ஒவ்வொரு மாறுதலும் புகத் தொடங்கிய நாள்முதல், பலரால் போற்றி வழங்கப்படும் நாள்வரையில், ஒருவகையான நிலையற்ற வாழ்வில் கிடக்கும். 'வருகின்றாரில்லை' 'செய்தாரில்லை' 'கேண்மின்கள்' 'எழுமின்கள்' முதலான சொற்கள் புதியனவாகச் சிலரால் எழுதப்படுகின்றன. இவற்றின் வாழ்வு உறுதிபெறவில்லை என்பது காணலாம்.

புலவர்களின் ஆற்றல்

பொதுவாகச் சொற்களின் வாழ்வும் மதிப்பும் பேசும் மக்களைப் பொறுத்தே உள்ளன எனினும், சிறந்த புலவர்களின் எழுத்தாலும் ஓரளவு அவற்றிற்கு வாழ்வும் மதிப்பும் ஏற்படுவதாகக் கூறலாம். சிறந்த புலவர்களின் எழுத்துக்கள் மக்களின் நெஞ்சில் நின்று போற்றப்படுவதால், அவர்கள் எந்தச் சொல்லுக்கு எந்தப் பொருள் தந்து இலக்கிய வாழ்வு அளித்துள்ளனரோ, அந்தச் சொல்லை அவ்வாறே மக்களும் போற்றத் தலைப்படுகின்றனர்; பேச்சுமொழியில் வாழ்வு அளிக்கின்றனர். நாணயங்களின் மதிப்புக்குப் பழங்கால அரசன் காரணமாக நின்றதுபோல் இத்தகைய புலவர்கள் சொற்களுக்கு மதிப்புத் தந்து காக்கின்றனர் என அறிஞர் வெண்ட்ரியே கருதுகிறார்.[1] இலக்கியத்தில் பெருவாழ்வு பெற்று மக்களிடையே பரவிய சில சொற்களைப் பொறுத்த வரையில் இந்தக் கருத்துப் பொருந்தும் எனக் கொள்ள

1. The great writers have done for words what the kings formerly did for the coinage. They gave it whatever value they saw fit and decided the rate at which it was to be accepted by all.—J. Vendryes, Language, pp. 274-275.

லாம். மற்றச் சொற்களுக்குச் சமுதாயமே நேர்ப்பொறுப்பு சமுதாயம் வாழ்வும் மதிப்பும் தந்து ஆளும் சொற்களைப் புலவர்கள் எடுத்தாண்டு இலக்கிய வாழ்வு தந்து செல்கின்றனர் என்று கூறுவதே பெரும்பாலும் பொருந்துகின்றது. செங்கோல் விருந்து முதலான சில சொற்கள் இலக்கிய வாழ்வால் பேச்சுமொழியில் இடம் பெற்றவை எனக் கூறலாம். தேன், ஆறு, கூடு, ஊர்க்குருவி, குகை, தோப்பு, பழம் முதலிய பற்பல சொற்கள் சமுதாயத்திடமிருந்து இலக்கியத்திற்குச் சென்று இடம் பெற்றவை ஆகும்.

கூ. இலக்கணம்

பெயரும் வினையும்

பெயர்ச்சொல் வினைச்சொல் என்ற இலக்கணப் பாகுபாடு மிக இயற்கையானது; அது எல்லா மொழிகளிலும் உள்ளது. இந்த இரண்டு சொற்களுள் எது முதலில் தோன்றியது என்ற ஆராய்ச்சியில் சென்ற நூற்றாண்டில் சிலர் ஈடுபட்டனர். அது வேண்டாத ஆராய்ச்சி ஆகும்.[1] ஒரு பொருளின் அசையா நிலையில் அதன் பெயரைச் சுட்டுகிறோம். அசையும் நிலையில் அதன் செயலைச் சுட்டுகிறோம். பெயர் வினை என்பவற்றின் அடிப்படை, பொருளின் அசையா நிலையும் அசையும் நிலையுமே ஆகும். இந்த இருநிலைகளுக்கும் உள்ள வேறுபாடு மிகப் பழங்கால மனிதனுக்கு மொழி தோன்றி வளர்வதற்கு முன்னமே தெரிந்திருக்கும். ஆதலின் பெயர்வினைப் பாகுபாடு மொழிக்கு முந்தியே மனித மூளையில் தோன்றியமைந்தது எனலாம். மொழி தோன்றி வளரத் தலைப்பட்டதும், இருவகைச் சொற்களும் ஒருங்கே தோன்றியிருக்கும்.

இன்னொரு வகையாகப் பார்த்தால், செயல் (வினை) என்பது பொருளின் அடையாக, பண்பாக வரும் ஒன்றே. செயல் என்றதும் ஒரு பொருள் என்ன செய்கிறதோ அல்லது நிகழ்த்துகிறதோ அதை எண்ணுகிறோம். மொழியில் ஆராய்ந்து பார்த்தால், ஒரு பொருள் என்ன ஆகிறதோ, என்னவாக இருக்கிறதோ அதுவும் செயல்

1. As for priority, it seems superfluous to raise the question. Since the capacity to appreciate an object as moveing and as at rest antedates the origin of speech, it follows that as soon as special motor reaction develops to designate one of them as distinguished from the other, both noun and verb have originated simultaneously.—Pillsbury and Meader, The Psychology of Language, p. 282.

தான். ஆகவே மொழியில் பொருளின் பண்புக்கும் செயலுக்கும் அவ்வளவாக வேறுபாடு இல்லை. (இது பற்றியே தமிழிலக்கணத்தில் குணம் தொழில் என்னும் இரண்டும் பண்பு எனக் கூறும் மரபு உண்டு). ஒரு வாக்கியத்தை ஆராய்ந்தால் அது ஒரு பொருளைப் பற்றி, அதன் தன்மையைப் பற்றி அல்லது செயலைப் பற்றி விளக்குவதை உணரலாம். ஆகவே பெயர் வினை பெயரடை வினையடை எல்லாம் ஒன்றுகவே விளங்கக் காணலாம்.[1]

இக்காரணத்தாலேயே பெயருக்கும் வினைக்கும் சில மொழிகளில் தெளிவான வேறுபாடு இல்லை.[2] தமிழில் பல அடிச்சொற்கள் (பூ, மலர், பிடி, அடி, தளிர், தழை, காய் முதலியன) பெயர்க்கும் வினைக்கும் பொதுவாக உள்ளன; வினைமுற்று வினையாலணையும் பெயராக அமைகிறது; வினைக்குறிப்பு என்பதும் திணைபால் விகுதி ஏற்ற பெயர்ச்சொல்லும் வேறுபாடு இல்லாமல் ஒத்து அமைந்துள்ளன.

---

1. An action is always an attribute of a thlng, a part of its nature. We are accustomed to think of an action as something which a person does. In reality it is what a person *is*. It is *a* characteristic of the subject. Accordingly the characteristics of the verb are the characteristics of the subject. Of course, the same thing is true of the adjective because the sentence is a description of a thing or a situation. All is one. —Pillsbury and meader, The Psychology of Language, p. 291.

Moreover, anything which can properly be styled a verb is possessed by none of these languages (the polynesian language); their so-called verbs are really only nouns taken predicatively.—Whitney, Language and the Study of Language, p. 338.

There is no essential distinction formally made between a noun and a verb (in the Egyptian language)—Ibid. p. 342.

ஏவல் முதலியன

'அம்மா' என்ற சொல்லுக்குத் 'தாய்' என்று பொருள் கூறுகிறோம். ஆனால், குழந்தையின் வாயில் அந்தச் சொல் பிறக்கும்போது, அதற்குத் தாய் என்ற பொருள் இல்லை. குழந்தையின் ஒருவகை வேட்கையை—தேவையை—உணர்த்தும் ஒலியாகவே அப்போது அது பயன்படுகிறது. பிறகு எதிரே உள்ளவரை நோக்கித் தன் தேவையைத் தருமாறு ஏவும் ஏவலாகப் பயன்படுகிறது. பல திங்கள் வரையில் குழந்தை தனக்குத் தேவையான எந்தப் பொருளையும் 'அம்மா' என்ற சொல்லாலேயே குறிக்கிறது. நெடுங்காலம் கழித்தே 'அம்மா' என்பது தன் தாயின் பெயர் என்று அறிகிறது. தன் தாய்க்கு வேறு சிறப்புப்பெயர் உண்டு என்றும், 'அம்மா' என்பது எல்லாத் தாய்மார்க்கும் உரிய பொதுப்பெயர் என்றும் உண்மையை அறிவதற்கு எவ்வளவோ காலம் ஆகிறது. (அந்த நிலை வருவதற்குமுன், குழந்தையை நோக்கி, 'இவள் பெயர் என்ன?' என்று தாயைச் சுட்டிக் கேட்டால், 'அம்மா' என்றே சொல்லும்).

ஏவும் சொல்லாகிய ஏவல்வினையாகவே தொடக்கத்தில் பல சொற்கள் பயன்பட்டிருக்க வேண்டும். 'அம்மா' என்ற சொல்லை ஏவல் வினையாகக் குழந்தை இன்னும் பயன்படுத்துதல்போல, மலர், காய், தழை முதலிய சொற்களைப் பழங்கால மனிதர் ஏவல்வினைகளாகப் பயன்படுத்தினர். ஏவல்வினை எதிரே நிற்பவரை நோக்கி நேரே உணர்த்தப்படுவது ஆகையால், பால்காட்டும் விகுதி முதலியவைகளோ காலம் காட்டும் இடைநிலைகளோ தேவை இல்லாமல் தனியே சிறுசிறு சொற்களாகவே வழங்க முடிகிறது. இக்காரணத்தாலேயே தமிழில் பகுதியோ அடிச்சொல்லோ காணும்போதெல்லாம் ஏவல்

வினையாகவே காண முயல்கின்றனர். வந்தான் என்பதன் அடிச்சொல் வா என்றும், உணவு என்பதன் அடிச்சொல் உண் என்றும் ஏவல்வினையாகவே காணுதல் வழக்கம். உணவு முதலிய சொற்களைத் தனிவாக்கியமாக வழங்குதல் இயலாது. ஆனால், உண் முதலிய ஏவல்வினைகளைத் தனி வாக்கியமாக வழங்க முடிகிறது.

ஏவல்வினைகளைப் போலவே, வியப்பு அச்சம் விரைவு முதலியவற்றை உணர்த்தும் வாக்கியங்களும் இரண்டொரு சொற்களால் அமைகின்றன; பல சொற்கள் தேவை இல்லாத எளிமை அவற்றிலும் இயல்பாக உள்ளது.

பெரியது!	வியப்பு
பாம்பு, பாம்பு!	அச்சம்
போ போ!	விரைவு

இவற்றின் எளிமைக்குக் காரணம், அப்போது உள்ள மனநிலையில் பலவகைக் கருத்துக்கள் பின்னிக் கிடக்காமல், ஓர் உணர்ச்சி மட்டும் மேலெழுந்து நிற்பதே ஆகும்.[1] மனத்தில் முன்னும் பின்னும் பின்னிய கருத்து எழும் போதுதான் வாக்கியம் பல சொற்கள் உடையதாக நீண்டு அமைகிறது.

இலக்கண வேறுபாடுகள்

வாழ்வுக்கு இன்றியமையாத—அறிவுக்கு இயைந்த—வேறுபாடுகளை உணர்த்தும் இலக்கண அமைப்பு எல்லா மொழிகளிலும் இருத்தல், மொழிகளின் பொதுத் தன்

1. If it be true that language, both gesture and spoken, developed out of originally direct life-serving activities, then sentences expressing a need should be regarded as the most primitive and the other more elaborate types as later refinements.—Pillsbury and Meader, The Psychology of Language, p. 231.

மைக்கு ஒரு நல்ல சான்றாக உள்ளது. ஒன்றனுக்கும் பல வற்றிற்கும் வேறுபாடு உணர்த்தும் எண் இலக்கணம், உயிருள்ளவற்றிற்கும் இல்லாதவற்றிற்கும் (அல்லது, அறிவுள்ளவற்றிற்கும் இல்லாதவற்றிற்கும்) வேறுபாடு உணர்த்தும் திணை இலக்கணம், ஆண் பெண் வேறுபாடு உணர்த்தும் பாலிலக்கணம், தன்மை முன்னிலை படர்க்கை யாகிய இடவேறுபாடு உணர்த்தும் மூவிட இலக்கணம், சென்றதற்கும் நிகழ்வதற்கும் வருவதற்கும் வேறுபாடு உணர்த்தும் கால இலக்கணம் முதலியவை எல்லா மொழி களிலும் உள்ளன.

திணையும் பாலும்

ஆங்கிலம் முதலான மொழிகளில் உயர்திணை அஃறிணை என்ற திணைப்பாகுபாடு இல்லை. ஆயின் ஆண் பால் பெண்பால் அலிப்பால் என்ற பால்பாகுபாடு உண்டு. இலக்கணத்தில் இவ்வாறு இருப்பினும், வழக்கில் உயர்திணை அஃறிணை என்ற திணைப் பாகுபாட்டை அம்மொழிகளும் புறக்கணிக்க முடியவில்லை. who என்னும் வினாப் பெயர் உயர்திணைக்கும் what என்னும் வினாப்பெயர் அஃறி ணைக்கும் உரியனவாக வழக்கில் வரையறை செய்யப்பட் டிருப்பது காணலாம். ஆகையால் இத்தகைய திணைப்பாகு பாடு சில மொழிகளில் எழுதிவைக்கப்படாவிடினும் மொழிக்கு இன்றியமையாததாக உள்ளது என்பது மட்டும் தெளிவாகிறது.

சில மொழிகளில் வாழ்வுக்குப் பொருந்தாத—உண் மையோடு இயையாத—செயற்கையான பால்பாகுபாடு அமைந்திருக்கிறது. தொடக்கத்தில் இந்த மொழிகளிலும் இயற்கையான பால்பாகுபாடு இருந்திருக்கும். காலப் போக்கில் இது மாறி, செயற்கையான முறை வந்துவிட்

டிருக்கும். ஐரோப்பிய மொழிகளில் இத்தகைய பொருந்தாப் பாகுபாடு காணப்படுகிறது. வடமொழியிலும் இதுவே உள்ளது. ஆங்கில மொழியிலும் இம்முறை இருந்தது; காது அலிப்பால் என்றும், நாள் ஆண்பால் என்றும், நாக்குப் பெண்பால் என்றும் பொருளற்ற பாகுபாடு ஆங்கிலத்தில் இருந்து மறைந்துவிட்டது. இப்போது தமிழைப் போல் ஆங்கிலத்திலும் ஆண் ஆண்பால் என்றும், பெண் பெண்பால் என்றும், இரண்டும் அல்லாதது அலிப்பால் என்றும் கூறும் இயற்கையான பால்பாகுபாடு ஏற்பட்டுள்ளது.[1]

எண் பாகுபாடு

பால்பாகுபாடு போலவே எண்பாகுபாடும் எல்லா மொழிகளிலும் காணப்படுகிறது. பொருள்களில் ஒன்றையும் ஒன்றனுக்கு மேற்பட்ட பலவற்றையும் வேறுபடுத்திக் காட்ட இப் பாகுபாடு பயன்படுகிறது. ஒருமையை வேறும் பெயரால் உணர்த்திப் பன்மையை அதனோடு விகுதி சேர்த்து உணர்த்துதல் பெரும்பாலான மொழிகளில் காணப்படுகிறது. வினைமுற்றுக்களில் ஒருமை பன்மை உணர்த்தும் இயல்பு உடைய மொழிகளில், ஒருமை வினைக்கு ஒரு விகுதியும் பன்மை வினைக்கு வேறு ஒரு விகுதியும் சேர்த்து வழங்குகின்றனர்.

தொடக்கத்தில் எண்பாகுபாடு இல்லாமல் இருந்திருக்கும் என்று கருதுவதற்குச் சில மொழிகள் சான்று

1. The Anglo-Saxon had grammatical gender, like the Greek and Latin and German; it regarded *ear* as neuter. but oeer (over) and dœy (day) as masculine, and, for instance, tungue (tongue) and dœd (deed) as feminine; to us, who have abolished grammatical gender in favour of natural sex, all are alike neuter.—Whitney, The Life and Grouth of Language, p. 36.

பகர்கின்றன. தமிழில் பெரும்பான்மையான அஃறிணைச் சொற்களில் ஒருமை பன்மை என்று வேறுபடுத்துவது பழங்காலத்தில் இல்லை. ஒரு மரம் பல மரம் என்று பெயர்ச் சொற்களைப் பொதுவாகவே குறிப்பிட்டு, அவற்றிற்கு அமையும் அடை முதலியவற்றால் ஒருமை பன்மை என்ற வேறுபாட்டை உணர்த்தினர். சில வாக்கியங்களில் கூறுவோன் குறிப்பாலும் இடத்தாலுமே ஒருமையா பன்மையா என்று பகுத்தறிய முடிந்தது. இன்று எழுத்து வழக்கில் கள் விகுதி சேர்த்துப் பன்மையை வேறுபடுத்திய போதிலும், பேச்சு வழக்கில் பெரும்பாலும் பழைய நிலையே காணப்படுகிறது. சீன மொழியிலும்[1] ஆஸ்திரேலிய மொழியிலும்[2] இதே நிலை உள்ளது. ஆங்கில மொழியின் தாயாகிய ஆங்கிலோசாக்ஸன் மொழியிலும் அஃறிணைப் பெயர்ச் சொற்கள். சில (ரீண்ட ஒரசைச் சொற்கள்) பன்மை விகுதி ஏற்காமலே பன்மைப் பொருள் உணர்த்தி வந்தன. இன்றைய ஆங்கிலத்திலும் sheep முதலிய சில சொற்கள் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாகவே உள்ளன.

ஒருமை பன்மை என்ற பாகுபாடு பல மொழிகளில் காணப்பட, ஒருமை இருமை பன்மை என்ற மூன்று எண்கள் சில மொழிகளில் காணப்படுகின்றன. இருமை என்ற எண் வேண்டாதது; இருமை எண் வேறுபாட்டை

1. If a noun is to be taken as plural (in Chinese), this as a rule must be gathered from the context; and it is only when there is any danger of misunderstanding, or when the notion of plurality is to be emphasised, that separate words are added. —Jespersen, Progress in Language, p. 80.

2. In nearly all of these idioms (Australian languages) the idea of number is but little developed, and those of gender not at all.—Abel Hovelacque, The Science of Language, p. 67.

உணர்த்தி வந்த சில மொழிகள், நாகரிகம் வளர வளர, அதை விட்டுவிட்டன.[1]

இடைச்சொற்கள்

தொடக்கத்தில் பாகுபாடு அற்ற ஒலிக் கூட்டத்தை வைத்துக்கொண்டே சில அடிப்படைக் கருத்துக்களைப் பிறர்க்கு உணர்த்தி வந்த மனிதன், நாளடைவில் சொற்களைப் பிரித்துப் பெயர்ச்சொல் வினைச்சொல் என்று பாகுபாடு செய்து பல வேறுபட்ட கருத்துக்களை உணர்த்த முயன்றான். அம் முயற்சியில் வெற்றி பெற்றவுடன், அவனுடைய மூளையில் இன்னும் பல நுண்ணிய கருத்துக்கள் ஏற்படத் தொடங்கின அவற்றை உணர்த்த வேறு பல சொற்களின் உதவி அவனுக்குத் தேவையாக இருந்தது. உள்ள சொற்களில் சிலவற்றைத் திரித்தும் குறைத்தும் தமக்கென்று பொருளில்லாத சொற்களாக்கி இத்தகைய நுண்ணிய கருத்துக்களை உணர்த்த முயன்றான்; முயற்சியில் வெற்றி பெற்றான். இவ்வாறு பயன்பட்ட சொற்களைச் சீன மொழியில் 'வெறுஞ் சொற்கள்' (empty words) என்று வழங்குவர்.

சீன மொழியில் 'வெறுஞ் சொற்கள்' (empty words) எனப்படுபவை தமிழில் இடைச்சொற்கள் எனப்படும். இடைச்சொற்களுள் ஒரு வகை ஆகிய உருபுகள் தொக்கும் தொகாமலும் வருதல் போலவே, சீனமொழியில் வெறுஞ் சொற்கள் சில தொக்குவருதலும் உண்டு; தொகாமல் வருதலும் உண்டு. பொருள் தெளிவு வேண்டும் இடங்களில் தொகாநிலையே போற்றப்படுகிறது.

1. The use of the dual in different dialects was in proportion to the degree of culture; those dialects which had lost this number from prehistoric times were the very ones spoken by the most cultured people.—J. Vendryes, Language, p. 355.

தமிழில்: மக்கள் விருப்பம்—தொகை
மக்களது விருப்பம்—தொகாநிலை.
(அது: ஆறும் வேற்றுமை உருபு)

சீன மொழியில்: மின் (மக்கள்)
லிக் (வலிமை)
மின் லிக் (மக்கள் வலிமை)—தொகை
மின் சிலிக் (மக்களுடைய வலிமை)—
தொகாநிலை.
சி—வெறுஞ் சொல் (இடைச் சொல்)

இவ்வாறு நுட்பமான பொருள்வேறுபாட்டை உணர்த்தப் பயன்படும் சொற்களைத் தமிழில் இடைச் சொற்கள் எனப் பாகுபாடுசெய்வர். வேற்றுமை உருபுகள் கால இடைநிலைகள் முதலியன இத்தகையன. வேற்றுமை உருபுகள் தொடக்கத்தில் என்ன பொருள் உணர்த்தின என்பதைப் பற்றிக் கவலை இல்லை. ஒரு சொல்லோடு சேர்ந்து அமைந்து ஒருமுறை ஒரு பொருள் வேறுபாட்டை உணர்த்திய இடைச்சொல், பிறகு வேறொரு சொல்லோடும் சேர்ந்து அத்தகைய பொருள்வேறுபாட்டை உணர்த்த வல்லதாகிறது.[1] காலப் போக்கில் இந்த உருபிற்கு இன்ன பொருள் வேறுபாடு என்று வழக்கத்தால் ஏற்பட்டு விடுகிறது. இவ்வாறு ஐ ஆல் கு முதலிய வேற்றுமை யுருபுகளுக்குத் தனித்தனி வேற்றுமைப் பொருள்கள் அமைந்துவிட்டன. கருவி எத்தன்மையானதாக இருந்தாலும், அதைப் பண்படுத்தி இன்ன தொழிலுக்கு என்று பயன்படுத்தும் ஆற்றல் மனிதனுக்கு அமைந்திருக்கிறது.

1. In the history of some suffixes we see that, without any regard to their original etymological signification, they may adopt something of the radical meaning of the words to which they are added, and transfer that meaning to new formations.—Otto Jespersen, Progress in Language, p. 71.

இடைச் சொற்களையும் இவ்வாறே பலவகைக் கருத்துணர்த்தும் கருவிகளாக மக்கள் பயன்படுத்திக்கொள்கின்றனர்.[1]

துணைவினைகள்

நுட்பமான கால வேறுபாடுகளையும் மனநிலை வேறுபாடுகளையும் உணர்த்த வினைச் சொற்களுடன் சேர்க்கப்படும் துணைவினைகளில் இதனைத் தெளிவாகக் காணலாம்.

			துணைவினை
வந்தான்	—	வந்திருந்தான்	— இரு
செய்கிறான்	—	செய்திருக்கிறான்	— இரு
போவான்	—	போயிருப்பான்	— இரு
எடுத்தான்	—	எடுத்துக்கொண்டான்	— கொள்
எழுதினான்	—	எழுதிவிட்டான்	— விடு

இந்தத் துணைவினைகள் தனிச்சொற்களாக வழங்கும் போது அவற்றின் பொருள் வேறு. இவைகளே மற்ற வினைச்சொற்களுக்குத் துணையாகப் பயன்படும்போது, அந்த வினைச்சொற்களின் பொருளை நுட்பமாக வேறுபடுத்துகின்றன. நுண்ணிய பொருள்வேறுபாடுகள், இரு கொள் விடு முதலிய சொற்களில் இல்லை; அவற்றைப் பயன்படுத்தும் மக்கள் தாமே அமைத்துக்கொண்டு வழங்குகின்றனர்.

---

1. These three parts of speech—the adverb, the preposition and the conjunction—prove themselves to be new formations from existing old material. The process of their formation was a slow one. It belongs to historical times.—P.D. Gune, An Introduction to Comparative Philology, p. 77.

60. நாகரிகம்

சொல் சில; பொருள் பல

ஒருவர் எண்ணும் எண்ணங்கள் மிகப் பல; அவர் பேசும் சொற்கள் அவற்றைவிடக் குறைவே. தனி ஒருவர் வாழ்வில் இது உண்மையாவது போலவே, மன்பதையைப் பொறுத்தும் உண்மையாகிறது. ஒரு மொழிபேசும் மக்களிடையே உள்ள கருத்துக்கள், அம்மொழியில் உள்ள சொற்கோவை (vocabulary)யை விடப் பலவாகும். ஒரு மொழியின் சொற்கோவையைக் கொண்டு, அம்மொழியினர் கருத்துக்கள் இவ்வளவுதான் என்று வரையறுத்துக் கூறல் இயலாது. உள்ள சில சொற்களைக்கொண்டே புதிய புதிய கருத்துக்களை உணர்த்தும் முயற்சி என்றும் இருந்து வருவதால், கருத்துக்கள் பலவாகவும் சொற்கள் சிலவாகவும் உள்ள நிலையை மொழிகளில் காணலாம்.[1] சொற்களின் பொருள் தெளிவுபெறுதபோது, அந்தச் சொற்கள் அமைந்த இடம்நோக்கிப் பொருள் உணரப்படுகிறது; அல்லது, சிறு மாறுதல்களால் பொருள் உணர்த்தப்படுகிறது. எவ்வாறேனும் உள்ள சொற்களைக் கொண்டே புதிய பொருள் உணர்த்தப்படுகிறது.

நாகரிக வளர்ச்சி

ஆயினும், சொற்கோவையைக் கொண்டு உணரத்தக்க உண்மை ஒன்று உண்டு; ஒரு மொழியினர் பெற்றிருந்த பண்பாடும் நாகரிக வளர்ச்சியும் இப்படிப்பட்டவை

1. A vocabulary never renders all the aspects of thought. There are always fewer words than ideas, but ordinary usage is content with approximations, as it has other means of avoiding ambiguity. The meaning of each word is made clear through the context, and if this does not suffice the language is never at a loss to remedy this deficiency.—J. Vendryes, Language, p. 238.

என்பதை அம் மொழியின் சொற்கோவையால் உணரலாம். மொழியியலுக்கும் தொல்பொருளாராய்ச்சிக்கும் இடையே சொற்கோவை பாலம்போல் உதவவல்லது என்பர் அறிஞர் வெண்ட்ரியே.[1]

விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் உலகம் குடும்பம்போல் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தமையால், புதிய புதிய பல பொருள்கள் உண்டாவதுபோலவே, புதிய புதிய கருத்துக்களும் சுரக்கின்றன. அவற்றை உணர்த்தப் பல புதிய சொற்கள் தேவைப்படுகின்றன. ஆகவே, நாகரிக வளர்ச்சியால் ஒவ்வொரு மொழியின் சொற்கோவையும் பெருகுகின்றது எனலாம்.

சமுதாயம் நாகரிகம் பெற்று முன்னேற முன்னேற, மொழித்துறையில் சில நுண்ணிய மாறுதல்கள் ஏற்படுகின்றன. உணர்ச்சிமிக்க நிலையிலிருந்து அறிவுமிக்க நிலைக்கு மொழியின் தன்மை வளர்கிறது. அறிவுநுட்பம் புலப்படுத்தும் சொற்கள் பெருகுகின்றன. பருப் பொருள்களை உணர்த்தும் சொற்கள் நுண்பொருள்களை உணர்த்தத் தொடங்குகின்றன[2]

நுண்பொருட்கள்

வேந்து, அமைச்சு, விருந்து முதலிய சொற்கள் வேந்தனையும் அமைச்சனையும் விருந்தினரையுமே தொடக்கத்தில் உணர்த்திவந்தன. காலப்போக்கில் நுண்பொருள் அறிவு வளர்ந்ததும், அவற்றிற்கு அன் அர் முதலிய விகுதிகள் சேர்த்து, வேந்தன், அமைச்சன், விருந்தினர் முதலிய

1. It is very important that we should have a knowledge of the vocabulary of any language if we are desirous of studying its culture. Vocabulary thus forms a bridge between philology and archaeology.—J. Vendryes, Language, p. 306.

2. J. Vendryes, Language, p. 354.

சொற்களாக்கி அப்பொருள் உணர்த்தச் செய்தனர்; வேற்றன் தன்மை, அமைச்சனியல்பு, விருந்தினர் தன்மை முதலிய நுண்பொருள்களே உணர்த்த விகுதியற்ற சொற்களைப் பயன்படுத்தினர்.

'வருகின்றான்' முதலியனபோல் நிகழ்காலம் உணர்த்தும் சொற்கள் பழந்தமிழில் இல்லாதிருந்தன. பிற்காலத்தே அவை வளர்ந்து பெருகலாயின. இறந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் நுண்ணிய வேறுபாடுகள் தோன்றலாயின.

செய்தான்	—இறப்பு
செய்திட்டான்	—இறப்பில் இறப்பு
செய்திருக்கிறான்	—இறப்பில் நிகழ்வு
செய்திருப்பான்	—இறப்பில் எதிர்வு
செய்துகொண்டிருந்தான்	—தொடர் இறப்பு
செய்துகொண்டிருக்கிறான்	—தொடர் நிகழ்வு

இவ்வாறு பல வேறு கால வேறுபாடுகள் வினைச் சொற்களில் அமையலாயின.

அறிஞர் வெண்ட்ரியே கிரேக்க மொழியிலிருந்து ஓர் எடுத்துக்காட்டுத் தந்து இதனை விளக்குகிறார்.[1] ஒருமை பன்மை என்ற எண் வேறுபாடு இக்கால மொழிகளில் இயல்பாக உள்ளது. இவையே அல்லாமல் இருமை என்ற எண் வழக்கு, கிரேக்க மொழியில் இருந்துவந்தது. கிரேக்க மொழியின் கிளைமொழிகளாக (dialects) இருந்தவை பல. அவற்றுள் நாகரிகமான மக்கள் பேசிய மொழி

1. The very way in which the concrete categories disappeared from languages confirms the importance of the role which civilization has played. One of the most striking cases is that of the dual in Greek.—J. Vendryes, Language, p. 354.

கள் இந்த இருமை எண்ணைக் குறைந்த அளவில் வழங்கி வந்தன. அவைகளில் சில மொழிகளில் 'இருமை இல்லாமல் மறைந்தும் போயிற்று. கிரேக்க நாகரிகம் தலைதிறந்திருந்த குடியேற்ற நகரங்களில் பேசிய கிரேமொழிகளில் இந்த வழக்கு மிகக் குறைந்த அளவே இருந்து வந்தது. செமிடிக் மொழிகளில் நாகரிகம் பெற்றவைகளாகிய ஹீப்ரூ, அரமைக், எத்தியோப்பிய மொழிகளில் ஒரு சில இடங்களில் மட்டுமே 'இருமை' வழங்குகிறது. கி. பி. ஏழாம் நூற்றாண்டு வரையில் அரபி மொழியில் பெயர், மூவிடப் பெயர், வினை ஆகியவற்றில் இருமை எண் இருந்து வந்தது. நாகரிகம் மிகக் குறைந்தவர்களாகிய அமெரிக்க ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் பேச்சில் இருமை மட்டும் அல்லாமல் மும்மை எண்ணும் உள்ளது. நாகரிகப் படியில் தாழ்ந்திருக்கும்போது இத்தகைய சொற்கள் தேவைப்படுதலும், நாகரிகம் வளர வளர அவற்றின் தேவை குறைந்து திண்பொருட் சொற்கள் மிகுதலும் காணலாம்.[1]

தினைவாற்றல்

பழங்காலத்து மொழிகளின் இயல்பை ஆராய்ந்தால், பொதுவான ஒரு பொருளுக்கே வெவ்வேறு இடம் நோக்கி வெவ்வேறு பெயர்கள் அமைந்திருக்கக் காணலாம். பழந்தமிழில் ஆணின் தலைமயிரைக் 'குஞ்சி' என்றனர். பெண்ணின் தலைமயிரைக் 'கோதை,' 'குழல்' என்றனர். இன்று இரண்டினையும் தலைமயிர் என்னும் வழக்கு உள்ளது. சில மொழிகளில் கைகால்களுக்கு ஒரு

1. The mind of a cultured person, however, is more capable of perceiving the abstract than the mind of primitive man, because the conditions of civilized life turn the mind towards abstract considerations rather than to concrete ones.—J. Vendryes, Language, p. 357.

பெயரும் கால்விரல்களுக்கு ஒரு பெயரும் காணப்படும். உள்ளே காழ் உடைய மரவகைகளுக்கு மரம் என்ற ஒரு பெயரும், அவ்வாறு அல்லாமல் புறத்தே காழ் உடைய வற்றிற்குப் 'புல்' என்ற ஒரு பெயரும் பழங்காலத் தமிழில் வழங்கின. அணில் முதலியவற்றின் இளமைக்குக் குட்டி முதலிய பெயரும், யானை முதலியவற்றின் இளமைக்குக் கன்று முதலிய பெயரும் வழங்கின. இவ்வேறுபாடுகள் பலவும் வர வரக் குறைந்து பொதுப்பெயர்களாகச் சில சொற்கள் மட்டுமே வழங்கிவருகின்றன. வேறுபட்ட பல சொற்களை நினைவில் கொண்டு வழங்குவது அரிது; பொதுப்பெயர்களாகச் சில சொற்களை மட்டும் வழங்குவது எளிது.

நாகரிகக் காலத்து மக்களைவிட, நாகரிகம் இல்லாத பழங்கால மக்களுக்கு நினைவாற்றல் மிகுதி. ஏன் எனின், அவர்களின் வாழ்க்கைக்கு நினைவாற்றல் மிகத் தேவையாக இருந்தது. நினைவாற்றல் இல்லாதவர்களுக்கு வாழ்க்கை இல்லை என்னும் அளவிற்கு அவர்களின் நிலை இருந்தது. நாகரிக மக்கள் நினைவாற்றலுக்கு ஈடு செய்யக்கூடிய உதவிகள் பலவற்றைத் தேடிப் பெற்றிருக்கின்றனர். நூல்கள், எழுத்துக் குறிப்புக்கள் முதலிய பல இவர் களுக்கு உதவியாக உள்ளன. அதனால் நினைவாற்றல் குறைந்தாலும் வாழ்க்கையில் ஒரு குறையும் இல்லாமல் இருக்க முடிகின்றது. பழங்காலத்தில் நாகரிகமில்லாத வர்களாய் வாழ்ந்த மக்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை; நினை வாற்றலை நம்பியே வாழ்ந்திருந்தனர். அதனால்தான், அவர் களின் மொழியில் ஒரு பொருட் கிளவிகள் மலிந்திருந்த தோடு, விகுதிகள் முதலியவை பல்கியிருந்தன; நுண் பொருள் உணர்த்தும் பொதுச் சொல் காண முடியாமல், ஒவ்வொன்றனுக்கும் சிறப்புச் சொல் வழங்கிவந்தனர்.

அறிவின் படைப்பு

தொடக்கத்தில் ஆண் யானைக்கு ஒரு பெயரும் பெண் யானைக்கு ஒரு பெயருமாகக் களிறு பிடி என்னும் சொற்கள் வழங்கியிருக்கக் கூடும்; நெடுங்காலம் கழித்தே இரண்டனுக்கும் பொதுவான யானை என்னும் சொல் வழங்க முடிந்திருக்கும். ஆண் பெண் இரண்டும் அல்லாத பொதுத்தன்மை உடைய 'யானை' என்னும் உயிர் எங்கும் இல்லை. களிறு உண்டு; பிடி உண்டு; இவை பருப் பொருட்கள்; கண்ணால் காண்பன. ஆனால் யானை எங்கும் இல்லை; இது நுண் பொருள்; அறிவால் மட்டும் உய்த் துணரக் கூடிய பொதுத்தன்மை உடையது இது. ஆதலின் இச் சொல் காலத்தால் பிந்தியது எனலாம். ஆன் (பசு) உண்டு; எருது உண்டு; இரண்டற்கும் பொதுவான மாடு என்பது அறிவின் படைப்பே. இத்தகைய பொதுச்சொற்கள் பிறந்து வழங்கியது நாகரிகத்தின் வளர்ச்சியைக் காட்டுவது எனலாம்.

நாகரிக வளர்ச்சியும் நுண்பொருட் சொற்களின் பெருக்கமும் ஒத்துச் செல்பவை. நாகரிகம் வளர வளர, வாணிபம் பெருகும்; வாணிபத்திற்குக் கணக்குத் தேவை; க்கணக்கு நுண்பொருட் சொற்களாலாகியது. நாகரிக வளர்ச்சியில் அரசியல்முறை திருந்துகிறது. அரசியல் முற்போக்கு எனின், பொதுவான நுண்கருத்துக்களைக் கருதும் பயிற்சியும் வேட்கையும் வளரத் துணை செய்கிறது. கருத்து என்பதே, பருப்பொருளை நுண்ணிய வாய்பாட்டால் எண்ணுவதுதான்.

இடமும் காலமும்

இடத்தைப் பற்றிய அறிவு வளர்ந்து நெடுங்காலம் கழிந்த பிறகே காலத்தைப் பற்றிய அறிவு வளர்கிறது.

இடம் பருப்பொருள் ; காலம் நுண்பொருள்.[1] நாகரிகம் வளர வளர, இடத்தை ஒட்டிய வேறுபாடுகளை உணர்த்தும் மொழிக்கூறுகள் குறைந்து காலத்தை ஒட்டிய வேறுபாடுகளை உணர்த்தும் மொழிக்கூறுகள் பெருகுகின்றன.

நாகரிகம் குறைந்த சூலு (Zulu) மொழியில், என் தந்தைக்கு ஒரு சொல்லும் உன் தந்தைக்கு ஒரு சொல்லும், அவனுடைய அல்லது அவளுடைய தந்தைக்கு வேறொரு சொல்லுமாக இடவேறுபாடுகளுக்கு ஏற்பத் தந்தையர்க்கு வெவ்வேறு பெயர்கள் உள்ளன[2]. அந்தச் சொற்களுள், தந்தை என்னும் பொதுத் தன்மையை உணர்த்தும் உறுப்பு இன்னதெனப் பிரித்தெடுக்க இயலாதாம். பழந்தமிழிலும் இதே நிலைமை இருந்துவந்தது என்பதைப் பின்வரும் சொற்களிலிருந்து அறியலாம். ஆனல் தமிழில் வெவ்வேறு பெயர்கள் இருந்தபோதிலும், ஒவ்வொன்றிலும் இடத்தை உணர்த்தும் உறுப்பு இன்னது என்று தனியே பிரித்து, ஐ என்பது அப்பனை உணர்த்தும் பொதுச்சொல்லாக நிற்றலை அறிய முடிகிறது. ஆகவே, தமிழ் பழங்காலத்திலேயே வளர்ச்சியுற்ற நிலையில் விளங்கியது எனக் கூற இடம் உள்ளது.

என்னை எந்தை	—	தன்மை	(என் அப்பன்) (எம் அப்பன்)
நுந்தை	—	முன்னிலை	(உன் அப்பன்) (உம் அப்பன்)
தந்தை	—	படர்க்கை	(தன், தம் அப்பன்)

1. Time is a higher degree of abstraction than space. We civilized folk abandon the concrete notion of space in the morphology of our languages and are more desirous of expressing the abstract notion of time.—J. Vendryes, Language, p. 355.

2. H. Darnley Naylor, Evolution of Language, p. 97.

என்பவை பழங்கால வழக்கு. ஐயன், ஐயர் என்ற சொற் கள் மூன்று இடங்களுக்கும் பொதுவாக இருந்தபோதிலும், அப்பன் என்ற வரையறுத்த பொருளில் இல்லை; மூத் தோர், சான்றோர் என்ற பொருளிலும் அது வழங்கியது. ஆகவே, அப்பன் என்ற பொருளில் பொதுச்சொல் அக் காலத்தில் வழங்கவில்லை எனலாம். இடத்தை ஒட்டி வேறு வேறு சொல்லாக மூன்று நான்கு சொற்கள் இருந்தன. இக்காலத்தில் தந்தை என்பதில் படர்க்கைப் பொருளுணர்ச்சி இல்லாமற் போக, அதை மூன்று இடங் களுக்கும் பொதுவாக வழங்குதல் காணலாம்.

என் தந்தை எம் தந்தை	தன்மை
உம் தந்தை	முன்னிலை
அவர் தந்தை	படர்க்கை

மூன்று வேறு வேறு சொற்களைக் கற்று வழங்கும் முயற்சி குறைந்து ஒரு சொல்லையே எல்லாவற்றிற்கும் பொதுவாக வழங்குகின்றனர். என் எம் உம் அவர் முதலான சொற் கள் முன்னமே தேவைப்பட்டவை; ஆதலின் அவற்றைத் தனியே கற்கும முயற்சி இல்லை. என் கடமை, உம் தொழில் முதலான பல தொடர்களில் அவை பொதுவாக வழங்கிப் பயின்றவை; ஆகவே இங்குக் கற்கவேண்டியது தந்தை என்ற ஒரு சொல்லே.

தங்கை, தம்பி, தவ்வை, தமக்கை, தமையன் முத லான பல சொற்கள் இவ்வாறு படர்க்கையிடத்துக்குரிய பொருளுணர்ச்சி இழந்து பொதுவாக வழங்குகின்றன. நங்கை, உங்கை, எம்பி, உம்பி, நுவ்வை முதலிய தன்மை முன்னிலை இடத்துக்கு உரிய சொற்கள் வழக்கிறந்து விட்டன. வீட்டில் ஓர் எழுதுகோலும், மன்றத்தில்

மற்றோர் எழுதுகோலும், வெளியூரில் வேறோர் எழுது கோலுமாக மூவகைக் கருவிகள் வைத்திருப்பது தன்ப மாகத் தோன்றவே, அம் மூன்றில் இரண்டைவிட்டு ஒன்றையே எல்லா இடங்களுக்கும் பொதுவாகப் பயன் படுத்தலாம் அன்றே? அதுபோன்ற மாறுதலே இது.

முயற்சிச் சிக்கனம்

இவ்வாறு திணை பால் எண் இட வேறுபாடுகளுக்கு ஏற்பப் பல சொற்கள் படைத்து நினைவிலிருத்தி வழங்கு வதைவிட, சில பொதுச் சொற்களைமட்டும் வழங்குவதால் முயற்சிச் சிக்கனம் முதலிய பயன்கள் உண்டு என்பதைக் கண்டோம். இவ்வாறு சிக்கனம் செய்து காத்த முயற்சி யும் காலமும், நாகரிக மக்களின் வேறு துறைகளுக்குப் பயன்படுகின்றன. நுண்பொருள்களை ஆழ்ந்து அறியும் மூளையுழைப்புக்கு இவை பயன்படுகின்றன எனலாம்.

அல்லது: நாகரிக வாழ்க்கையில் வாணிபம், அரசியல் முதலிய துறைகளில் மூளையுழைப்பு மிகுதியாகத் தேவை யாக இருப்பதால், உள்ள காலத்திலும் முயற்சியிலும் ஒரு பெரும்பங்கு இவற்றிற்குச் செலவாகிவிடுகின்றன. எஞ்சி யுள்ள காலமும் முயற்சியுமே மொழியைக் கற்றுப் பேசு வதற்குக் கிடைக்கின்றன. ஆகையால் பண்டைக்காலம் போல் ஒவ்வொரு பொருள்வகையிலும் பல சொற்களைக் கற்று நினைவில் வைத்திருந்து வழங்கும் ஆற்றல் குறைந்து போகிறது. அதனால் சில சொற்களைமட்டும் திணை பால் எண் இட வேறுபாடற்ற பொதுச் சொற்களாக்கிப் பயன்படுத்த நேர்கிறது என்றும் காரணம் கூறலாம்.

சுருங்கக் கூறின், மொழித்துறைக்கு உரிய முயற்சி யும் காலமும் குறைந்து, பிறதுறையில் மூளையுழைப்புக்குப் பயன்பட்டன எனலாம். அல்லது, மூளையுழைப்புக்கு

முயற்சியும் காலமும் மிகத் தேவைப்பட்டமையால், மொழித்துறையில் சிக்கனம் செய்ய நேர்ந்தது எனலாம். (உழைப்பால் உணவு, உணவால் உழைப்பு என்பதுபோல்) இரண்டுமே ஒன்றுகொன்று காரணமாக இருந்து வளர்ந்தன என்றும் கூறலாம்.

நாகரிகம் குறைந்த அமெரிக்கப் பழங்குடி மக்களின் மொழியில் தந்தை தம்பி முதலான உறவுப் பெயர்கள் இன்னும் இடம் முதலிய வேறுபாடுகள் உணர்த்துவன வாகவே உள்ளன. தென் அமெரிக்க மக்களின் மொழி யில் இத்தகைய உறவுப் பெயர்கள் மட்டும் அல்லாமல், தலை கண் முதலிய மற்றப் பெயர்களும் மூவிட வேறுபாடு உணர்த்துவனவாகப் பலவகையாக உள்ளன, அப்பன் போன்ற பொதுச்சொல் இல்லாததுபோலவே, இன்னொரின் தலை, இன்னொரின் கண் என்னுமல் பொதுவாகத் தலை கண் முதலியவற்றைக் குறிக்கச் சொற்கள் இல்லை. என் தலை என் கண் உன் தலை உன் கண் போன்ற இடவேறுபாடு உணர்த்தும் சொற்களே உள்ளனவாம். நாகரிகம் குறைந்த மக்களாக இருத்தலால், வேறு துறைகளில் முன்னேற இயலாமல், மொழித் துறையில் மட்டும் சொற் களைப் பலவகையாகப் பெருக்கிக்கொண்டுள்ளனர் போலும்.

தமிழின் குறையா?

பொதுவாக ஆராய்ந்தால் நாகரிகம் குறைந்த மொழி களில், பொதுப் பெயர்களும் பொதுவினைகளும் குறை வாகவும், சிறப்புப் பெயர்களும் சிறப்பு வினைகளுமே மிகுதி யாகவும் இருத்தலைக் காணலாம். உடம்பின் உறுப்பாகிய கால் என்பது மனிதனுடைய கால், விலங்கின் கால், பறவையின் கால் ஆகிய பலவற்றிற்கும் பொதுவான பெயர். சில மொழிகளில் ஒவ்வொரு வகைக்கும் தனித்

தனிச் சொற்கள் உள்ளன. வருதல் என்பது மனிதன், பறவை, விலங்கு எல்லாவற்றிற்கும் பொதுவான வினை. சில மொழிகளில் இத்தகைய வினைச்சொல் மனிதனுக்கு வேறுகவும் விலங்குக்கு வேறுகவும் பறவைக்கு வேறுகவும் இருந்தால், அது வேடிக்கையாகத் தோன்றும் அன்றே? அமெரிக்கச் சிவப்பிந்தியரின் மொழியில் 'ஓடு' என்னும் பொதுவான வினைச்சொல் இல்லையாம். ஒவ்வொரு வகை விலங்கின் ஓட்டத்தையும் குறிக்க வெவ்வேறு வினைச் சொற்கள் உள்ளனவாம். இத்தகைய சிறப்புச் சொற்கள் மிகுந்த மொழி, நாகரிகம் குறைந்தவர்கள் பேசும் மொழி என்பர். இது எல்லா இடத்திற்கும் பொருந்தும் எனக் கூறமுடியாது. ஆங்கிலத்தில் குதிரையின் பல்வேறு வகையான ஓட்டங்களுக்குச் சொற்கள் உண்டு (gallop, trot). ஆனால் குதிரையின் ஓட்டத்தைப் பொதுவாகக் குறிக்கும் சொல் இல்லை. அதனால் ஆங்கிலமொழி நாகரிகம் குறைந்தவர்களின் மொழி எனக் கூறமுடியாது. பெரும்பான்மையாக உள்ள நிலை கண்டே முடிவு செய்தல் வேண்டும். மக்களைக் குறித்துக் கூறும்போது உணவு என்றும், விலங்கு பறவைகளைக் குறித்துக் கூறும்போது தீனி என்றும் இரை என்றும் தமிழில் வழங்குகிறோம். அதுபற்றித் தமிழ் குறையுடையது ஆகாது.

ஆங்கிலத்தில் தாயுடன் பிறந்தவர்க்கும் தந்தையுடன் பிறந்தவர்க்கும் பொதுச்சொல் உண்டு (uncle, aunt). ஆயின் தமிழில் தாயுடன் பிறந்தவர்க்கு ஒருவகைச் சொற்களும் (மாமன், சிற்றன்னை, பெரியதாய்), தந்தையுடன் பிறந்தவர்க்கு வேறுவகைச் சொற்களும் (சிற்றப்பன், பெரியப்பன், அத்தை) வழங்குகின்றன. இவ்வாறு வழங்குவது கண்டு தமிழர் நாகரிகம் குறைந்தவர்கள் என்று கூற முடியுமோ? அபெல்ஹாவெலாக் என்பவர் திராவிட

மொழியினத்தில் தமையனுக்கும் தம்பிக்கும் பொதுவான உடன்பிறந்தான் என்பதுபோன்ற சொல் இல்லை என்றும், இத்தகைய சிறப்புச் சொற்கள் மட்டும் இருப்பது மொழியின் பெருமைக்கு உரியது அன்று என்றும், பொதுச் சொற்கள் இல்லாமை மொழியின் தாழ்ந்த நிலையையே காட்டும் என்றும் எழுதியுள்ளார். பாஸ்க் மொழியில் தந்தையுடன் பிறந்தவளுக்கு ஒரு சொல்லும், தாயுடன் பிறந்தவளுக்கு வேறொரு சொல்லும் இருத்தலை எடுத்துக் காட்டித் திராவிட மொழியினத்தோடு ஒப்பிட்டுக் குறை கூறியுள்ளார்[1]. அத்தை, சிற்றன்னை, பெரியன்னை ஆகியோர்க்குப் பொதுவாக ஆங்கிலத்தில் 'aunt' என்ற சொல் வழங்குகிறது. அத்தகைய பொதுச்சொல் தமிழில் இல்லை என்பது உண்மையே. ஆயின், வேறு எத்தனையோ துறைகளில் தமிழில் பொதுச்சொற்களும் தூண்பொருட் சொற்களும் மிகப்பல உள்ளன. ஒரு சில இடங்களில் பொதுச் சொற்கள் இல்லாததுகண்டு, மற்ற அருமையான தூண்ணிய அமைப்புக்களை மறந்து, மொழியைக் குறைகூறுதல் ஆராய்ச்சிக்குப் பொருந்தாது.

தாழ்வுமனப்பான்மை

கிழக்கு நாடுகளின் மொழியில் உள்ளதாக ஐரோப்பியர் எடுத்துக்காட்டும் குறை இன்னொன்று உளது.

---

1. The Dravidian group is also remarkably rich in words of this sort, distinguishing, for instance, the elder from the junior brothers, just as in Basque, a woman's sister is distinguished from a man's. The cause of these intricacies is, we have no doubt, the lack of general expressions, which is a usual feature of inferior languages, though not unfrequently mistaken for wealth by writers on ethnography and geography.—Abel Hovelacque, The Science of Language, p. 134.

அதாவது : சமுதாய ஏற்றத் தாழ்வுகளின் மிகுதியினால், உயர்ந்தோரை நோக்கிப் பேசும்போது பலவகை உயர் சொற்கிளவிகள் உள்ளன என்பர். பேசுவோர் தம்மை மிக இழிவுற வைத்துக்கொண்டு பேசும் தாழ்வுமனப் பான்மை இம் மொழிகளில் மிகுதி என்பர்.

நீ — வேலையாளிடம்
நீர் — ஒத்தவரிடம்
நீங்கள் — சிறிது உயர்ந்தவரிடம்
தாங்கள் — மிக உயர்ந்தவரிடம்

இவ்வாறே ஒருமையில் வழங்கும் சொற்களாக அவர், அவர்கள் என்பவை வழங்குகின்றன. 'ஆமாம்' என்று ஒத்தவரிடம் சொல்பவர், ஆமாங்கள் (ஆமாங்க) என்று உயர்ந்தவரிடம் சொல்லுதல் காணலாம். மொழியில் இத் தகைய சமுதாய ஏற்றத்தாழ்வுகள் மிகுதியாக இடம்பெற் றிருப்பதை எடுத்துக்காட்டி ஜோப்பியர் குறை கூறுவர்.[1] ஆங்கிலத்திலும் இவை இருந்தன. thou, thee, ye, you என்று பல சொற்கள் இருந்த இடத்தில் இப்போது முன் னிலை யிடப்பெயராக you என்ற ஒரு சொல் மட்டுமே வழங்குகிறது. தமிழில் ஒருவனையே (ஒருவரையே) அவர் என்றும் அவர்கள் என்றும் குறிப்பது போன்ற உயர் சொற்கிளவி ஆங்கிலத்தில் இல்லாமல், he என்ற ஒரே சொல் வேலையாள், ஆசிரியர், அரசன், கடவுள் எல்லோ

1. What we Europeans however suffer in regard to language from social inequality is nothing compared to what we find with Orientals, whose language reflects an absolutely cringing subservience. The Japanese have different words, not only for thou or you, but for I, according to the person addressed.....In Basque there are not only different pronouns but different verbal forms.—Otto Jespersen, Mankind Nation and Individual, pp. 143-144.

ரையும் குறிக்க வழங்குகிறது. எனினும் His Highness, His Majesty முதலிய சொற்கள் உயர்வுவேண்டும்போது வழங்குகின்றன. இத்தாலிய மொழியில் மூவகை உயர் சொற்கிளவிகள் முன்னிலையில் உள்ளன.[1] ஸ்பெயின் மொழியிலும் இத்தகைய சொற்கள் உள்ளன.[2] ஆங்கிலத்தில் ஏற்பட்டது போன்ற மாறுதல் (எல்லோருக்கும் ஒரு சொல்லாக அமைதல்) நாளடைவில் பிறமொழிகளிலும் ஏற்படக்கூடும். தமிழிலும் அத்தகைய மாறுதல் ஒரு காலத்தில் ஏற்படலாம்.

தேவையும் வளர்ச்சியும்

ஆங்கிலத்தில் ஆட்டு மந்தைக்கு ஒரு சொல்லும், (a flock of sheep), ஓநாய்க் கூட்டத்திற்கு வேறொரு சொல்லும் (a pack of wolves), பசு மந்தைக்கு இன்னொரு சொல்லும் (a herd of cows) இவ்வாறே ஒவ்வொரு வகைக்கு ஒவ்வொரு சொல்லாக (a bevy of larks, a covey of partridges, a shoal of fish) உள்ளன. இந்தத் துறையில் பொதுச்சொல்லே வளர்க்கவேண்டிய தேவை ஆங்கிலமொழிக்கு ஏற்படவில்லை. மிக மிக நுண்ணிய கருத்துக்களை எல்லாம் உணர்த்தவல்லதாய் விளங்கும் ஆங்கிலமொழி, இந்தத் தேவையை உணர்ந்திருப்பின் உடனே வேண்டியவாறு பொதுச்சொற்களை அமைத்துக் கொண்டிருக்க முடியும். தமிழும் சில இடங்களில் இன்னும் தேவையை உணரவில்லை. தேவையே புதிய படைப்புக்கெல்லாம் காரணம். தேவை ஏற்படும் வரையில் புதிய சொற்களும் தோன்றி அமைவதில்லை.

---

1. In Italian, there are three stages of increasingly respectful address, 'tu,' 'voi,' 'lei.'—Ibid, p. 143.

2. In Spanish, the pronoun of polite address is 'usted,' an abbreviation of 'vuestra merced' (your grace).—Ibid.

சில காட்டுமிராண்டிகளின் மொழியில் கழுவுதல் என்பதற்கு ஈடான பொதுச்சொல் இல்லை. கைகளைக் கழுவுதற்கு ஒரு சொல்லும், கால்களைக் கழுவுதற்கு வேறொரு சொல்லும், தட்டுக்களைக் கழுவுதற்கு மற்றொரு சொல்லும், இவ்வாறே வெவ்வேறு பொருள்களைக் கழுவுதற்கு வெவ்வேறு சொற்களாக உள்ளனவாம்.[1]

நாகரிகம் வளர வளரவே, நுண்பொருட் சொற்கள் வளர்தல் மொழிகளின் இயல்பு.[2] நாகரிகம் வளராத டாஸ்மேனியாவின் பழங்குடி மக்களின் பேச்சில் நுண் பொருட் சொற்கள் இல்லையாம். ஒவ்வொரு மரவகைக்கும் ஒவ்வொரு பெயர் உள்ளதே தவிர, பொதுவாக மரம் என்று உணர்த்தும் சொல் இல்லையாம். தமிழில் வேம்பு, நுணை, வேங்கை, ஆல், அரசு, அத்தி என்று மட்டும் பெயர்கள் இருந்து, மரம் என்ற பொதுச்சொல் இல்லை யானால் எவ்வாறு இருக்குமோ, அவ்வாறு உள்ளது அந்த மொழியின் நிலைமை.

இன்னும் சிலர், ஒவ்வொரு பொருளை அறுப்பதற்கும் வெவ்வேறு சொல்லை வழங்குகின்றனர். ஆயின் பொது வாக அறுத்தல் என்பதற்கு ஈடான பொதுச்சொல் அறி யாதவர்களாக உள்ளனர். சூலு (the Zulus) என்னும் மக்கள், வெண்ணிறப் பசுவுக்கு ஒரு சொல்லும் செந்நிறப் பசுவுக்கு வேறொரு சொல்லும் இவ்வாறு வெவ்வேறு நிறப்

1. Those savage languages often have no word even for so concrete an idea as that of 'washing,' but only separate words for 'wash the hands,' 'wash the feet,' 'wash the dishes' and so on.—Sweet, The Practical Study of Languages, p. 45.

2. It is a well-known law in psychology that the power of grasping abstract notions is of comparatively later growth in the individual as well as in the race.—Otto Jespersen, Progress in Language, p. 24.

பசுவுக்கு வெவ்வேறு சொல் வழங்குகின்றனர்; ஆயின் பசு என்பதற்கு நேரான பொதுச்சொல் அறியார்.[1]

பண்புச்சொற்கள்

நிலையான பண்புகளை உணர்த்தும் சொற்கள் நெடுங் காலம் கழித்துப் பிறந்திருக்கும்.[2] ஏன் எனில், நுண் கருத்துக்களை உணர்தற்கு அறிவுவளர்ச்சி இன்றியமை யாததாக இருத்தல் போலவே, இத்தகைய பண்புகளை உணர்தற்கும் வளர்ச்சி வேண்டியுள்ளது. வாலண்டைன் (Valentine) என்பவர் குழந்தைகளின் அறிவில் நிறங் களைப் பற்றிய உணர்ச்சி எவ்வாறு வளர்ச்சி அடைகிறது என ஆராய்ந்தார். மஞ்சள், வெள்ளை, கத்தரிப்பூநிறம், சிவப்பு, பழுப்பு, கருப்பு, நீலம், பச்சை, நீலப்பச்சை என இம் முறைப்படி விரும்பிக் குழந்தைகள் கற்பதாக அவர் கருதுகிறார். குழந்தைகள் வேறுபட விரும்புவதும் உண்டு. இத்தகைய ஆராய்ச்சியில் எளிதில் முடிவுகாணல் இயலாது. தவிர, சொற்கள் பிறப்பது ஒருவகை; கருத்துக்கள் பிறப்பது மற்றொருவகை. சொற்கள் முன்னமே பிறந்து வேறு பருப்பொருள்களுக்குப் பெயர்களாக வழங்கிவருதல் கூடும்; பின்னர், நுண்கருத்துக்கள் வளரும்போது அவற் றைக் குறிக்க அந்தப் பழைய சொற்களையே சிறிது திரித்தோ திரிக்காமலோ வழங்குதல் உண்டு.

பலவகை நிறங்களைப் பற்றிய சொற்கள் பிற்காலத்தில் தோன்றியவை என்று கூறுவர். நிறவேறுபாடுகள் நுண் ணிய கருத்துக்கள் ஆதலின், பருப்பொருள்களின் பெயர்

1. H. Darnley Naylor, Evolution of Language, p. 24.

2. The appreciation of relatively permanent qualities may conceivably have developed later than that of movement. —Pillsbury and Meader, The Psychology of Language, p. 283.

கள்போல் தொடக்கத்தில் தோன்றியிருத்தல் இயலாது என்பர்.[1] கருமை செம்மை முதலிய சொற்களும் தொடக்கத்தில் கார், சேய் முதலிய வேறு பல சொற்களிலிருந்து அமைந்திருக்கக்கூடும். காரியதொரு பொருள், செந்நிற மான ஒரு பொருள் ஆகியவற்றை உணர்த்த அச்சொற்கள் வழங்கியிருக்கும். இவ்வாறு பருப்பொருள்களை உணர்த்தும் சொற்களிலிருந்து, அவற்றின் நிறங்களாகிய நுண் பொருள்களை உணர்த்தப் பிற்காலத்தில் மைவிகுதி சேர்த்துச் சொற்கள் அமைக்கப்பட்டிருக்கும். பொன் என்பது பருப்பொருளைக் குறிப்பது. அதன் நிறத்தை உணர்த்த மைவிகுதி சேர்த்துப் பொன்மை என்ற சொல்லை அமைத்ததுபோல், கருமை செம்மை முதலிய நுண் பொருட் சொற்களையும் அமைத்திருக்கக்கூடும்.

கருத்தின் அருமைப்பாடு

எந்தச் சொல்லையாவது ஒரு பொருளுக்கோ தன்மைக்கோ அறிகுறியாகப் பயன்படுத்த முடியும். ஆகவே சொற்களைப் படைப்பதில் ஒன்றும் அருமைப்பாடு இல்லை. நுண்ணிய கருத்துக்களை உணர்ந்து அவற்றிற்குச் சொற்களை அறிகுறிகளாக வழங்குவதே அரிய திறனாகும்.[2]

---

1. It is commonly stated that words of abstract meaning are later developments of words which had concrete meaning... .....It is also generally assumed that substantives denoting concrete objects are named for some of their dominating qualities. A quality is more abstract than an object, since it is the result of an analysis of a mass concept.—Pillsbury and Meader, The Psychology of Language, p. 284.

2. Meaning grows with experience and may fairly be said to grow out of experience.—Ibid p. 166.

உடம்பின் உறுப்புக்களுள் ஒன்றனுக்குக் கால் எனப் பெயர் வைத்து வழங்குவது எளிது. ஒன்றை நான்கு பகுதியாகப் பிரித்து, அந்த நான்கில் ஒரு பகுதியைக் 'கால்' என வழங்கும் துண் கருத்தே அருமையுடையது. நீர்நிறைந்து மண்ணை அறுத்து ஓடுவதைக் கண்டு 'ஆறு' எனப் பெயர் வைத்தது எளியது; நிலத்தில் அறுத்தாற்போல் அமைந்த பாதையைக் கண்டு 'வழி' எனப் பெயர் வைத்ததும் எளியதே; [1]ஆயின் ஒருவன் வாழும் வாழ்வின் போக்கை உணர்ந்து அதனை (நல்ல வழி என்னும் பொருளில்) நல்ல ஆறு என்று வழங்குமிடத்தில் அருமை புலனாகின்றது.

உயிர் என்ற சொல் நெடுங்காலத்திற்கு முன்னமே இருந்தது; காற்று என்னும் பொருளுடன் இருந்தது (உயிர்த்தல் - மூச்சு விடுதல்). இந்தச் சொல் வேறு ஒன்றை—வாழ்வுக்கு அடிப்படையான உயிர் என்பதைக்—குறிக்க எவ்வளவோ காலம் கழிந்திருக்கும். ஏன் எனில், காற்றை உணர்ந்த மக்கள், உயிர் உண்டு என்பதை நெடுங் காலம் கழித்தே உணர்ந்திருப்பார்கள். சொல் பழையது; புதிதாக உணர்ந்த ஒரு கருத்தை உணர்த்துவதற்கு அந்தப் பழைய சொல்லையே பயன்படுத்திக்கொண்டனர்.

இவ்வாறு ஆராய்ந்தால், ஒழுக்கம் பண்பு உயிர் நன்மை தீமை வாழ்வு அறிவு முதலான நுண்கருத்து உணர்த்தும் சொற்களை அமைத்த முயற்சியை நினைத்துப் போற்ற வேண்டியுள்ளது. ஒவ்வொரு மொழியிலும் இவ்

1. But throughout the course of development, it is the series of associates that are suggested by the word that constitutes its meaning.—Ibid. p. 174.

The meaning of a word is primarily the associates that it partially arouses and which give it color.—Ibid. p. 184.

வாறே நுண்கருத்துச் சொற்கள் (words expressing abstract ideas) பிறப்பதற்கு எத்தனைக் காலமாக வளர்ந்த மனவளர்ச்சி தேவையாக இருந்திருக்கும்![1] எத்தனை நூற்றாண்டுகளாக முன்னோர் முயன்று உணர்ந்து இவற்றைக் கண்டிருப்பர்! மக்களின் வாழ்வில் காணப் படும் நாகரிகத்தின் வளர்ச்சி எல்லாம் இத்தகைய சொற் களில் விளங்குகின்றன எனலாம்.

குறையுள்ள கருவியே

மனிதன் எண்ணிய எண்ணங்கள் எல்லாவற்றையும் எண்ணியவாறே வெளியிடும் கருவியாக—குறையற்ற கருவி யாக மொழி எப்போதும் வளர்ந்தமைந்ததில்லை. எண் ணங்கள் முன்னே வளர, மொழி அவற்றை ஒட்டிப் பின்னே வளர்வதாலும், எண்ணங்கள் என்றும் வளர்ந்த வாறே உள்ளமையாலும், எண்ணங்களின் வளர்ச்சியை எட்டிப்பிடிக்க மொழியால் முடிவதில்லை. ஒருவர்க்கு ஒருவர் கருத்துக்களைத் தடையின்றி உணர்த்தவும் மொழி முழுதும் உதவுவதாக இல்லை;[2] ஏறக்குறைய உதவுகின்றது எனலாம். மொழியால் உணர்த்தமுடியாமல் குறையாக இருப்பவற்றை முகக்குறிப்பு, சைகை, ஒலிக்குறிப்பு முத லியவற்றால் உணர்த்த முயல்கிறார்கள். ஆதலின் மொழி

1. The more meanings a term has accumulated, the more it may be supposed to represent the various sides of intellectual and social activity.—M. Breal, Semantics, p. 140.

2. It is of course impossible to believe that the mind of man has in any of the languages of the past or of the present found a perfect means of expression, or of communication between man and man.—P. B. Ballard, Thought and Language, p. 8.

If we were to look for the perfect realization of any language we should not find it.—J. Vendryes, Language, p. 242.

குறையுடையதாக இருப்பினும் எவ்வாறே மனிதன் அதைக்கொண்டு தன் கருத்துக்களை உணர்த்திவிடுகிறான்.[1] மனிதன் பெற்ற நாகரிக வளர்ச்சியின் பெற்றியை விளக்கும் மொழி, அதனை முற்ற உணர்த்தும் கருவியாக வளரவில்லை எனினும், அதனைப் பயன்படுத்தும் மனிதன் வல்லவனாக விளங்குகிறான்.

---

1. The fact that languages of quite different type have sufficed to express the varied needs of thoughts equally rich and exacting, shows that one must not seek the ideal of perfection in any special type of language.....In fact, no language has ever failed the man who has really had something to say. —J. Vendryes, Language, p. 347.

கக. ஒருபொருட் கிளவிகள்

வெவ்வேறு சொற்களே

வழங்கும் மொழியில் ஒரு சொல் ஒரு பொருளைக் குறிப்பதாக இருத்தலே இயற்கை. ஒரு சொல் இரு பொருளைக் குறித்தலும் இல்லை; ஒரு பொருளில் இரு சொல் வழங்குதலும் இல்லை. நீர் என்ற சொல் இரு பொருளில் (நீர் நேற்று வந்தீர், குடத்தில் நீர் இல்லை) வழங்குகின்றதே எனின், அவை இரண்டு தனிச்சொற் களே அன்றி, ஒரு சொல் அல்ல என்பர் மொழியியல் அறிஞர்.[1] படி என்ற ஒரே ஒலியில் இரு சொற்கள் (அது உயர்ந்த படி, நீ இதைப் படி) இருப்பதாகக் கொள்வதே அவர்களின் கொள்கை. படி என்ற ஒரு சொல்லுக்கு இருபொருள் இருப்பதாகக் கூறுவது மொழியியலின் படி பொருந்தாது.

இந்த இரு சொற்கள் ஒருவகையாகவே ஒலிக்கப் படுதல் மொழியின் தெளிவுக்கு இடையூறு அன்றே எனலாம். தெளிவு குறைவதாக உணரின், பேசும் மக்கள் என்றே அவற்றை மாற்றி ஒலித்திருப்பர். பேச்சு மொழி உடனடியாக ஏற்படும் தெளிவையே முதல் நோக்கமாகக் கொண்டது. ஆதலின் தெளிவு சிறிதும் குறையவில்லை. தவிர, படி முதலான சொற்கள் ஒரேவகையாக எழுதப் படுதல் உண்மை. ஆயினும் ஒரே வகையாக ஒலிக்கப் படுதல் இல்லை. எழுத்துவகையில் ஒன்றுபோல் தோன்றினும், எடுத்தல் படுத்தல் நலிதல் ஆகிய நுண்ணிய ஒலி வேறுபாடு அமைந்திருப்பதைப் பேச்சுமொழியில் உணரலாம். ஆகவே, இருவேறு ஒலியுடைய இருவேறு சொற்கள்

1. P. B. Ballard, Thought and Language, p. 173. —J. Vendryes, Language, p. 177.

என்று பேசுவோர் உணர்ந்து தெளிவு குன்றுமல் வழங்க முடிகின்றது.

தனிவாழ்வு இல்லை

தவிர, எந்தச் சொல்லுக்கும் தனியே ஒரு வாழ்வு இல்லை.[1] ஒரு வாக்கியத்தின் உறுப்பாக அமையும்போது-தான் அது பொருளுடையதாக அமைகின்றது. ஒவ்வொரு சொல்லும் ஒரு வாக்கியத்தில் அமைந்து, இடம் நோக்கிப் பொருள் பயக்கின்றது. பேசுவோர்க்கு இன்ன இடம் பற்றிய பேச்சு இது என்ற தெளிவு இருப்பதால், அந்தச் சொல்லின் பொருளில் தடுமாற்றம் நிகழ இடமே இல்லை. இது உயர்ந்த படி என்று கூறும்போது, புத்தகம் முதலிய நினைவு இல்லாமல், கட்டிட நினைவோ, அல்லது உயர்வுக்கு உரிய நெறி பற்றிய நினைவோ தோன்றுவதைக் காணலாம். மாணவர், கல்வி, தேர்வு முதலியவற்றைப் பற்றிப் பேச்சு நிகழும்போது 'நீ அதைப் படி' என்று கூறப்படுவதால், பொருள் தடுமாறுவதற்கே இடம் இல்லை. அவ்வாறு தடுமாற இடம் உளதாயின், பேசும் மக்கள் உடனே சொற்களை மாற்றி அமைத்துக்கொள்வர். முதல்சொல் பொருளைக் குறிக்கும் பெயர்ச்சொல்லாகவும், இரண்டாம்சொல் தொழிலை உணர்த்தும் வினைச்சொல்லாகவும் இருத்தலால் ஐயுறவுக்கே இடம் இல்லை.

'நீர் கொண்டுவர வேண்டும்' என்று சொல்லும் போது, நீர் என்ற சொல் எதிரே உள்ளவரைக் குறித்ததா அல்லது பருகுவதற்கு உரியதைக் குறித்ததா என்ற ஐயப் பாடு ஏற்படக்கூடும். பெரும்பாலும் ஐயம் ஏற்படாது. ஒருகால் ஐயம் ஏற்படினும், பேசும் இடம் பேசுவோரின்

1. A language is not formed solely of words; it is composed of groups of words and phrases.—M. Breal, Semantics, p. 294.

குறிப்பு முதலியவற்றால் உடனே தெளிவு ஏற்படும்[1] ஒரு கால் அவ்வாறு ஐயம் நீங்காமலே நிற்பின், வேறுவகையில் தெளிவு ஏற்பட வேண்டுவதாகிறது. 'நீர்' என்பது இரண்டு இடத்தும் பெயர்ச்சொல்லாகவே இருத்தலால், ஒருவகையில் சிறிது இடர்ப்பாடாக உள்ளது. ஆதலின், பேசும் மக்கள் நாளடைவில் 'நீர்' என்பதை முன்னிலைப் பெயருக்கு உரியதாக்கி, பருகும் நீரைக் குறிக்கத் 'தண்ணீர்' என்ற அடை சேர்ந்த சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கினர். அதனால், கல்லாத மக்களிடையே இன்று 'நீர்' என்ற சொல் பருகும் நீரைக் குறிப்பதில்லை.

சில துறைகளில் ஆர்வம்

ஒரு சொல்லுக்குப் பல பொருள் இருத்தல் இயலாதது; வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு பொருள் வழங்கியது என்றோ, அவை வெவ்வேறு பொருள் உணர்த்தும் வெவ்வேறு சொற்கள் என்றோ கொள்ளவேண்டும் என மேலே கண்டோம்.

ஒரு பொருளுக்குப் பல சொற்கள் இருத்தல் இயல்பானதே. ஒவ்வொரு காலத்தில் ஏற்படும் சொல்லும் பழைய சொல்லுடன் சேர்ந்து வாழ்கின்றது எனலாம்; அல்லது, சிறிது வேறுபட்ட பொருள் உணர்த்தும் சொற்களும் வேறுபாட்டைக் கடந்து ஒரு பொருளனவாய் வழங்குகின்றன எனலாம். யானை, களிறு, பிடி, ஒருத்தல் முதலிய சொற்கள் சிறுசிறு பொருள் வேறுபாடு உடையனவே; எனினும் எல்லாம் யானையைக் குறிப்பனவே. வெற்பு, சிலம்பு, ஓங்கல், அடுக்கல், மலை, குன்று முதலியனவும், புனரி, முந்நீர், ஆழி, பரவை, கடல், பவ்வம்

1. No word is isolated in the mind. On the contrary the mind always tends to group words and to discover new bonds between them.—J. Vendryes, Language, p. 180.

முதலியனவும், கலம், ஓடம், புணை, தெப்பம், கப்பல் முதலியனவும் இவ்வாறு உள்ள சொற்களே. இத்தகைய சொற்கள் எந்தத் துறையில் உள்ளனவோ, அந்தத் துறையில் மக்கள் மிக்க ஆர்வம் காட்டினர் என்று கொள்ளவேண்டும் என்பது அறிஞர் பிரீல் கருத்து.[1] பண்டைத் தமிழ்மக்கள் யானைப் படையிலும் யானைக் கொடையிலும் மிக்க ஆர்வம் உடையவராய் விளங்கினர் என்பது வரலாற்றுல் தெளிவுறும் செய்தி. அவ்வாறே ஈ தா கொடு ஈகை கொடை ஒப்புரவு வழங்கல் அளித்தல் முதலான சொற்களே ஆராய்வோர், பண்டைத் தமிழ் மக்களின் உள்ளத்தில் ஈகையறம் சிறந்த இடம் பெற்றிருந்தது என்று உணரலாம்.[2] புகழ் இசை ஒளி முதலான சொற்களும் சிறு பொருள் வேறுபாடு உடையனவே ஆயினும், ஒருபொருட் கிளவிகளாய் வழங்குவதை ஆராயின், தமிழ் மக்களின் வாழ்வில் புகழுக்கு இருந்த சிறப்பிடம் தெளியப்படும்.

---

1. Through synonymy we learn with what objects the thought of a nation has been chiefly preoccupied.—M. Breal, Semantics, p. 38.

2. 'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு'

என்ற திருவள்ளுவரின் மொழியும் இக்கருத்தை வலியுறுத்தல் காண்க. (குறள், 231).

கஉ. கடன் வாங்கல்

கலப்பு

ஓர் இனத்தாரிடமிருந்து மற்றோர் இனத்தார் பெறுவன இருவகைப்படும். ஒருவகையானவை, நிறம், உறுப்புக்களின் அமைப்பு முதலியவை. அவை இரத்தக் கலப்பால் அன்றிப் பெறமுடியாதவை. மற்றொருவகையானவை, சமயம், நாகரிகம், மொழி முதலியன. இவை இரத்தக் கலப்பு இல்லாமலே ஒருவரைப் பார்த்து மற்றொருவர் கற்றுக்கொள்ளக்கூடியவை. ஒரு மொழியிலிருந்து சொற்களும் இலக்கணக் கூறுகளும் மற்றொரு மொழி கடன் வாங்கியது என்றால், அம் மொழியைப் பேசுவோரிடையே ஏதேனும் காரணம் பற்றி நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது எனக் கொள்ளலாம். அரசியல், சமயம், கலை முதலாய காரணங்களுள் ஏதேனும் ஒன்றால் அவ் விருவகையார் கூடிப் பழகியதால், மொழிகளிடையே கலப்பு ஏற்பட்டது எனக் கருதலாம்.

இங்கே கருதத்தக்க வேறுபாடு ஒன்று உள்ளது. மொழிக்கு மொழி கடன் வாங்குதல் என்பது, மக்கள் பணத்தையோ பொருளையோ கடன்வாங்குதல் போன்றது அன்று. மொழியைப் பொறுத்தவரையில், கடன் கொடுப்பவர் தம்மிடமிருந்து இழப்பது ஒன்றும் இல்லை; கடன் பெறுபவர் திருப்பித் தருவதும் இல்லை. இங்குக் கடன் வாங்குதல் என்பது 'போலச்செய்தல்' (imitation) என்று யெஸ்பர்ஸன் கருதுகிறார்.[1]

மொழிக் கலப்பால் சொற்கள் கலத்தல் எளிது. ஒருவர் பேசும் மொழியில் இன்னொரு மொழியின் சொற்கள் கலந்திருக்கும் காரணத்தாலேயே, அவர் இரு

1. Otto Jespersen, Language, p. 208.

மொழி அறிந்தவர் என்று சொல்வதற்கில்லை. இன்னொரு மொழியைப் பற்றி ஒன்றும் அறியாமலே அந்த மொழியின் சொற்கள் சிலவற்றைக் கேட்டுத் தம் மொழியில் கலந்து பேசுவது எளிது. ஆகவே, சொற்களின் கலப்பில் பெரிய தொரு காரணம் இருக்கவேண்டியதில்லை. இருவேறு மொழி பேசும் மக்கள் நாட்டின் ஒரு மூலையில் ஏதேனும் ஒரு காரணம் பற்றிக் கலந்து பழகினால் போதும்; இத்தகைய சொற்கலப்புக்கு அது இடம் தந்துவிடும்.

எதிர்ப்பு

பிறமொழிச் சொற்கள் தம் மொழியில் புகுவதை ஒவ்வொரு மொழியினரும் ஒவ்வொரு காலத்தில் எதிர்த்து வந்திருக்கின்றனர். அதற்குக் காரணம், மிக மிக இன்றியமையாத—பழகிய—சொற்கள் மொழியில் இயல்பாக அமைவனவாகத் தோன்றுகின்றன. பழகாத புதுச்சொற் களைக் கற்றவர்கள் சிலர் புகுத்த முயலும் முயற்சி செயற்கையாக உள்ளது. பொதுமக்களின் பேச்சுவழக்கில் பரவிக் கலக்கும் பிறமொழிச் சொற்கள், வந்த மொழியின் ஒலிமுறைக்கு ஏற்ப ஓரளவு உரு மாறி அமைகின்றன. அதனால் அந்த மொழியினர், தம் மொழிச் சொற்கள்போல் அவற்றை வெறுப்பின்றி ஆளுகின்றனர். கற்றவர்கள் எழுதும்போது செயற்கையாகப் புகுத்தும் சொற்கள் உரு மாறுவதில்லை; பிறமொழிச் சொற்களாகவே வேறுபட்டு நிற்கின்றன. இவ்வாறு ஒட்டாமல் நிற்கும் பிறமொழிச் சொற்களின் தொகை மிகும்போது, மொழியின் இயற்கைத் தன்மை கெடுவதாக உணரும் மக்கள் அவற்றை எதிர்க்கத் தலைப்படுகின்றனர்; பிரெஞ்சு மொழிச் சொற்கள் ஜெர்மன் மொழியில் மிகுதியாகக் கலந்தபோது, இவ்வாறு அடிக்கடி எதிர்ப்பு இருந்துவந்தது. தமிழில் வடசொற் கலப்பும் இவ்வாறே தொடர்ந்து எதிர்க்கப்பட்டுவருகின்றது. இத்

தகைய பிறமொழிச் சொற்கலப்புக்குப் பிறநாட்டு மக்களின் கலப்பையே உவமையாகக் கூறலாம். நம் நாட்டு உடை அணிந்து நம் பழக்கவழக்கங்களை மேற்கொண்டு அயல் நாட்டார் நம்மிடையே வாழும்போது, அவர்களும் நாமும் கலந்து ஒன்றுபடுகிறோம். ஆயின் நம் நாட்டுக்கு வந்து குடியேறிய பிறகும், அவர்களின் உடை நடை பழக்க வழக் கங்களைச் சிறிதளவும் மாற்றாத உறுதியுடன் நம்மிடையே வாழ்வார்களானால், உள்ளன்போடு அவர்களோடு கலந்து பழக முடியாமல், வேறுபாடு என்றும் இருந்துவருகிறது. பிறமொழிச் சொற்களின் கலப்பு இடம்பெறுவதும் எதிர்ப்புப் பெறுவதும் இத்தகைய காரணங்களாலேயே ஆகும்.

மாறி அமைதல்

இந்த உண்மையை உணர்ந்த தொல்காப்பியனார், பிற மொழிச் சொற்களைக் கடன் வாங்குவோர் என்றும் போற்றத் தக்க நெறியை எடுத்துரைத்துள்ளார்.

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே[1]

எனப் பிறமொழிச் சொற்கள் புகும் மொழியின் ஒலி யமைப்புக்கு ஏற்றவாறு மாறியமைய வேண்டும் என்கிறார்.

இவ்வாறு மாறியமைந்த வட சொற்களே ஆணை, விண்ணப்பம், ஞானம், அனுபவம், அமாவாசை முதலிய சொற்கள். ஆங்கிலத்திலிருந்து தமிழில் புகுந்த சொற்கள் சில இவ்வாறு சிறு மாறுதல் பெற்றுத் தமிழுக்கு ஏற்ற வாறு அமைந்துள்ளன. ஐரோப்பா, இங்கிலாந்து, ஆங் கிலேயர், உயில், கிறிஸ்து, யோவான், உவிலியம் முதலான சொற்கள் எடுத்துக்காட்டு ஆகும். சீன மொழியில்

1. தொல்காப்பியம், சொல். 401.

கிறிஸ்து என்ற சொல்லைக் 'கிலிசெது' என்றும், ஜப்பானிய மொழியில் லகரம் அமைந்த பிறமொழிச் சொற்களை ரகரம் வரத் திரித்தும் சிறிது வேறுபடுத்தி ஒலிக்கின்றனர் [1]

இவ்வாறு அன்றி, பிறமொழிச் சொற்கள் ஒலிவேறுபாடு இன்றி அவ்வாறே கடன் வாங்கப்படவேண்டும் என்னும் கொள்கை இக்காலத்தே வளர்கிறது. உலக நாடுகள் ஒரு குடும்பமாய் ஒன்றுபட்டுக் கலை அரசு முதலியவைகளை ஒம்பவேண்டிய வாய்ப்பும் நெருக்கடியும் ஏற்பட்டுள்ள இக்காலத்தில், ஒரு பொருளுக்கே ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு பெயர் அமைவதால் அறிவுவளர்ச்சிக்கும் கூடிப் பழகுதற்கும் தடை ஏற்படுகிறது என்பது இக்காலத்து அறிஞரின் கருத்து. ஆகவே செகப்பிரியர் என்று எழுதாமல் ஷேக்ஸ்பியர் என்றே எழுதப்படுகிறது. பாகிஸ்தான், டில்லி, பர்மா, டெலிவிஷன் முதலிய பல சொற்கள் எல்லா மொழிகளிலும் ஒரேவகையாக எழுதப்படும் முறைக்குக் காரணம் இதுவே ஆகும்.

மாற்றி அமைப்பினும், மாற்றாமல் அவ்வாறே அமைப்பினும், கடன் வாங்கக் கூடாது என்ற எதிர்ப்புணர்ச்சி ஏற்படுவதற்கு வேறு சில காரணங்கள் உள்ளன.

எதிர்ப்பின் காரணம்

தேவையும் பயனும் நோக்கி ஒருசில சொற்களைக் கடன் வாங்கும்போது எதிர்ப்புணர்ச்சி எழுவதில்லை. அழகுக்காக, அலங்காரத்திற்காக என்று பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கும்போது எதிர்ப்பு எழுகிறது.

---

1. The Chinese change every r into l, and the nearest approach they can make to the pronunciation of Christ is Ki-li-see-t(u). The Japanese, on the other hand, cannot manage l, and in their mouths accordingly idolatry becomes idoratory.—A. H. Sayce, Introduction to the Science of Lauguage, p. 147.

இயல்பாகக் கலந்து கருத்தை உணர்த்தப் பயன்படும் சொற்கள் பெரும்பாலும் கற்றவர் கல்லாதவர் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லாரிடமும் வழங்குவன. ஆனால், ஒரு மொழியை மிகுதியாகக் கற்றவர், மற்றொரு மொழியை நன்கு கற்காமலே முன்னதிலிருந்து பல சொற்களை இதில் புகுத்துதல் உண்டு. அதற்கு அடிப்படைக் காரணம், இந்த மொழியைக் கற்க முயற்சி செய்யாமலே, தம் பிறமொழிப் புலமையைப் புலப்படுத்த வேண்டும் என்ற செருக்கு, அல்லது இந்த மொழியை நன்கு அறியாத அறியாமையை மறைக்கும் ஆர்வம் ஆகும். இவ்வாறு இவர்கள் புகுத்தும் சொற்கள் செயற்கையாக ஒரு மொழியில் புக முயல்கின்றன. அவற்றிற்கு அம்மொழியினர் வரவேற்பு நல்குவதில்லை. முதலில் தயங்கி நிற்பினும், நாளடைவில் எதிர்க்க முனைகின்றனர்.

அந்த மொழியை நன்கு கற்றுப் புலமை பெற்றவர்களும், இன்றியமையாமை உணராமல் தாம் அறிந்த பிற மொழிச் சொற்களைக் கண்டவிடமெல்லாம் புகுத்த முயல்வாயின், அம் முயற்சியும் எதிர்க்கப்படும். இவர்கள் இவ்வாறு பிறமொழிச் சொற்கள் பலவற்றைப் புகுத்தும் முயற்சியில் இவர்களின் தாழ்வுமனப்பான்மை அடிப்படையாக உள்ளது. இத்தகைய தாழ்வுமனப்பான்மை மற்றவர்களுக்கு இல்லாமையால் அவர்கள் எதிர்த்தல் இயல்பே ஆகும்.

பிறமொழி கற்றவர்கள் தாம் கற்ற மொழி உயர்ந்தது என்று உயர்வுமனப்பான்மை கொண்டு, இல்லை என்று இரப்பவனுக்குப் பெருமிதத்துடன் ஈபவன் கொடைபோல் கருதிச் சொற்கள் பலவற்றை ஒரு மொழியில் புகுதத்தத் தொடங்கினும், அம் முயற்சி எதிர்க்கப்படும்.

இத்தனை எதிர்ப்பும் இல்லாமலே சில சொற்கள் ஒரு மொழியில் புகுந்தபின், அந்த மொழியின் உரிமையான சொற்களும் இவ்வாறு கடன் வாங்கப்பட்டவையே என்று யாரேனும் எடுத்துக்கூறித் தாழ்வுபடுத்த முனையினும், இம்முயற்சி ஏற்கப்படாமல் எதிர்க்கப்படும்.

தனித்தமிழ்

பழங்காலத்திலேயே வடமொழியிலிருந்து தமிழில் புகும்சொற்களைத் தடையின்றி ஏற்றுக்கொள்ள முடியாமற் போன நிலைமை இங்குக் கருதத்தக்கது. தற்சமம், தற்பவம் என்று தமிழில் கலந்துள்ள வடசொற்களை இரு வகையாகப் பிரித்த பிரிவினும் இந்த உண்மையைக் காண லாம். வடமொழியிலிருந்தே தமிழ் கடன் வாங்கியது என்றும், தமிழினிடமிருந்து வடமொழி ஒன்றும் கடன் வாங்கியதில்லை என்றும், அதனால் தமிழைவிட வடமொழி உயர்வுடையது என்றும் உண்மைக்கு மாறான கூற்றுக்களை வடமொழி கற்றவர் தொடர்ந்து கூறிவந்த காரணத்தால் வடசொற்கள் தமிழர்நெஞ்சில் அன்பான இடம் பெற முடியாமற்போயிற்று. ஒருசிலர் தமிழும் வடமொழியி லிருந்து பிறந்தது என்று செருக்கோடு கூறிவந்தவை பகை மையையும் வளர்த்துவந்தன. நடுநிலைமை பிறழ்ந்து ஒரு சாரார் பரப்பிய கருத்துக்கள் அன்பான இசைவுக்கு இடம் இல்லாமற் செய்துவிட்டன. தமிழையும் வடமொழி யையும் ஒப்பிட்டு அவற்றின் உரிமையான வளர்ச்சி யையும் சிறப்பியல்பையும் சீர்தூக்கி உணரமுடியாத புலவர் சிலர் வடமொழிச் சார்பாக நடுநிலை இல்லாமல் கூறிய கூற்றுக்கள் பகைமைக்கு வித்திட்டன. ற ன ழ எ ஒ இந்த ஐந்தெழுத்துக்களே தமிழுக்கு உரிமை என்றும், ஐந் தெழுத்துக்களை மட்டும் உடையது ஒரு மொழி என்று

கூற நாண வேண்டும் என்றும் புலவர் ஒருவர் மயங்கிக் கூறியது இதற்கு எடுத்துக்காட்டாகும்.

அன்றியும் தமிழ்நூற்கு அளவிலை அவற்றுள்
ஒன்றே ஆயினும் தனித்தமிழ் உண்டோ?
அன்றியும் ஐந்தெழுத் தால்ஒரு பாடைஎன் றறை
யவே நாணுவர் அறிவுடை யோரே
ஆகையால் யானும் அதுவே அறிக.[1]

இவ்வாறு ஒருசிலர் மொழிகளின் சிறப்பியல்புக்கும் உடைமைக்கும் வேறுபாடு அறியாமல், மொழிகளின் இயல்பும் தனிவளர்ச்சியும் ஆராய்ந்து உணராமல் கூறி வடமொழிக்குப் பெருமை தேடித் தர முயன்ற தவறான முயற்சியே, இன்று தமிழ் கற்றவர் பலரும் வடமொழிக் கலப்பை அடியோடு வெறுக்கும் நிலையை ஏற்படுத்தி யுள்ளது. தனித்தமிழ் உண்டோ என எழுப்பிய வினாவே பிற்காலத்தில் தனித்தமிழியக்கத்தை வளர்ப்பதற்கும் காரணம் ஆயிற்று. என்றும் உண்மையே உண்மையை வளர்க்கும்; நடுநிலைமை அற்ற பொய் பொய்யை வளர்க்கும்; வெறிக்கு இடம் தரும். அரசியல்துறையில் இது உண்மை யாதல் போலவே, மொழித் துறையிலும் உண்மையாகும். மொழிகளுள் ஒன்றை இகழ்ந்து மற்றொன்றைப் புகழ் வோர், நெடுங்காலம் நிற்கவல்ல பகைமையையும் காழ்ப்பை யும் விதைத்துச் செல்பவர் ஆவர். வடமொழியைப் புகழ்ந்து தமிழை இழிவுபடுத்தியவர் இத்தகைய தீமை செய்தவரே ஆவர்.

வடமொழியும் தென்மொழியும்

தமிழ் வடமொழியிலிருந்து சொற்களைக் கடன் வாங் கியதுபோலவே, வடமொழியும் தமிழிலிருந்தும் பிற

1. இலக்கணக்கொத்துரை, பாயிரம், 7.

மொழிகளிலிருந்தும் சொற்களைக் கடன் வாங்கியுள்ளது என்பதைக் கால்டுவெல் விளக்கியுள்ளார். கடன்வாங்கிய சொற்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம்; அது பற்றிக் கடன் வாங்கவில்லை என்று கூறமுடியாது. ஆங்கில மொழியில் எவ்வளவு பிரிட்டிஷ் சொற்கள் உண்டோ அவ்வளவு திராவிடச் சொற்கள் வடமொழியில் உண்டு என்கிறார் கால்டுவெல்.[1] அன்றியும், தமிழ்ச்சொல்லா வடசொல்லா என்று ஐயுறத்தக்க நிலையில் உள்ள சொற்களை எல்லாம் தயங்காமல் வடசொல் என்று கூறும் கண்மூடிமுடிபும் நெடுங்காலம் இருந்துவந்து தீமைவிளைத்தது. வடமொழி நிகண்டு நூலாரும் இலக்கண நூலாரும் தமிழ்ப் புலவர்களைப் போல் நடுநின்று சொற்களை ஆராயாமலே, எல்லாவற்றையும் வடசொல் என்று குறிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தனர்.[2] இவ்வாறு நடுநிலைமை பிறழ்ந்த போக்கு, கசப்பையும் தீமையையும் விளைக்கக் காரணமாயிற்று. இதற்கு மாறுகத் தமிழ் தெலுங்கு முதலிய மொழிகளில் நூல் எழுதும் புலவர்கள் தம் கடமை தவறாமல் வடமொழியிலிருந்து வந்த சொற்களைத் தம் சொற்களெனக் கொள்ளாமல், வடசொற்கள் என்று உண்மையை உடன்பட்டுக் குறித்துள்ளனர். வடநூலார் மட்டுமே இவ்வாறு செய்யத் தவறினர்.

---

1. Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, p. 453.

2. But this probability has generally remained unnoticed; and wherever any word was found to be the common property of the Sanskrit and any of the Dravidian tongues, it was at once assumed to be a Sanskrit derivative.....Sanskrit lexicographers and grammarians were not always so discriminate as their Dravidian brethren.—Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, p. 453.

திசைச்சொல் :

தமிழ்மொழியில் இலக்கண முறைப்படி (morphological classification) சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்குவகையாகப் பகுத்தலேயன்றி, சொற்கோவை முறைப்படி வேறு வகையாகவும் வகைப்படுத்தல் காணப்படுகின்றது (etymological classification).

அவற்றுள்
இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே[1]

என்னும் தொல்காப்பியம் இதனை விளக்குவதாம்.

இயற்சொல் மக்களின் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்கள் என்றும், திரிசொல் பேச்சுவழக்கிறந்து செய்யுளளவில் நின்ற தமிழ்ச் சொற்கள் என்றும், வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்தன வடசொல் என்றும், பிற மொழிச் சொற்கள் எல்லாம் திசைச்சொற்கள் என்றும் வகைப்படுத்தலே நன்கு நோக்கமாகும்.[2]

---

1. தொல். சொல். 397.

2. This classification would group all foreign words, together, Arabic, Persian, Telugu, Malayalam, Tulu, Kanarese, etc. This classification was of course unscientific. When a certain word that was not found in Tamil literature or used by the Tamil-speaking people, happened to be employed by an author perhaps owing to his contact with, say, the Telugu people, it was set down as a Telugu word and a ticaiccol. One cannot deny that there were people at various times conversant with more than one of the Dravidian languages. Still it was not before Dr. Gundert, Dr. Caldwell and other European scholars pointed it out that it was recognized that Tamil, Telugu, Kanarese and Malayalam were sister-languages and that they all belonged to the same stock that may be termed Dravidian.—Anavaratavinayakam Pillai, Sanskrit Elements in the Vocabularies of the Dravidian Languages, pp. 1, 2.

இயற்சொல் தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே[1]

என்பது தொல்காப்பியனர் இயற்சொல்லைப் பற்றிக் கொண்ட கருத்தைத் தெளிவாக்குகின்றது.

திருவாசகத்தில் அச்சன்[2] அதெந்து[3] என வரும் சொற்கள் திசைச் சொற்களுக்கு எடுத்துக்காட்டுக் களாகும்.

முகம்மதியர் ஆட்சிக் காரணத்தாலும் ஆங்கிலேய ஆட்சிக் காரணத்தாலும் தமிழில் புகுந்த சொற்கள் பல. சலாம், சபாஷ் முதலிய சில சொற்கள் இலக்கியத்திலும் (திருப்புகழிலும் குமரகுருபரர் பாட்டிலும்) புகுந்தன.

சன்னல், சாவி, கிராம்பு, அலமாரி, பாதிரி முதலியன போர்த்துக்கீசியச் சொற்கள்.

ஜமீன், சிபாரிசு, சிப்பந்தி, சிப்பாய், சுமார், பக்கிரி, மேஜை முதலியன பாரசீகச் சொற்கள்.

ஆசாமி, இலாகா, கஜானா, நகல், நாசூக், மாமூல், முன்சீப், வசூல் முதலியன அரேபியச் சொற்கள்.

அசல், அந்தஸ்து, அபின், உஷார், கிச்சடி, குமஸ்தா, சுல்லா, சமக்காளம், ஜோடி, தபால், தர்பார், பஞ்சாயத்து, பங்களா, மாகாணம், தொப்பி, மாசூல், மசாலை முதலியன இந்துஸ்தானி.

இவையெல்லாம் பிற மொழிகளிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்கள்.

வடசொல்

வடமொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டவை வட சொற்கள் எனப்பட்டன.

---

1. தொல். சொல். 398.
2. திருவாசகம், திருச்சதகம், 29.
3. திருவாசகம், அருட்பத்து, ஈற்றடி.

சங்க காலத்தில் நூற்றுக்கு இரண்டு என்னும் அள வில் இருந்த வட சொற்கள், பதினெண் கீழ்க்கணக்கிலும் சிலப்பதிகாரம் மணிமேகலையிலும் நூற்றுக்கு நான்கு ஐந்தாகப் பெருகியுள்ளன. ஆழ்வார் நாயன்மார் காலத் தில் நூற்றுக்குப் பத்துப் பதினைந்தளவும் மிகுந்தன. பிறகு நெடுங்காலம் அங்கிலையே நீடித்தது. மணிப்பிர வாளம் செல்வாக்குப் பெற்ற காலத்திலேயே வடமொழிக் கலப்பு அளவின்றிப் பெருகியது. ஆயினும் நூலாசிரியர் களும் உரையாசிரியர்களும் தமிழிலக்கியம் என்ற நினை வுடன் எழுதப் புகுந்தபோதெல்லாம் வடசொற் கலப்பு மிகக் குறைந்தேவந்தது. இன்றும் நாட்டுப்புறங்களில் பேச்சுத் தமிழில் வடசொல் குறைவு. நகரங்களில்தான் நூற்றுக்குப் பத்து அளவில் வடசொல் கலந்து பேசப் படுகின்றது. பத்திரிகைகளில் எழுதப்படும் தமிழிலும் பல சொல் கலப்பு உண்டு. எனினும் தெலுங்கு மலையாள மொழிகளில் உள்ளதுபோல் கலப்பு அளவின்றி மிகுதற்கு வழியில்லை.

இவ்வாறு கலந்த வட சொற்களைத் தற்சமம் என்றும் தற்பவம் என்றும் இருவகைப் படுத்துவர் பிற்காலத்து இலக்கண நூலார். தமிழ்க்கும் வடமொழிக்கும் பொது வெழுத்துக்களால் ஆகிய வடசொற்கள் தமிழில் புகின், அவை தற்சமம் எனப்படும். (காரணம், அமலம் முதலி யவை). தமிழில் இல்லாத வடமொழிக்கே உரிய எழுத் துக்களையுடைய வடசொற்கள் தமிழில் வந்து வழங்குவன தற்பவம் எனப்படும் (இடபம், அத்திரம், பத்தி முதலியன). இங்ஙனம் புகுந்த வடசொற்கள் வேறு பலவகைப்படுவன. அவையாவன :—(i) பிராகிருதம் பேசும் வடநாட்டு மக்க ளுடன் நேரே பேசிப் பழகிய தமிழ்மக்கள் கடன் வாங்கின சொற்கள்; (ii) வட மொழி கற்ற வடநாட்டறிஞர்களால்

தமிழ்நூல்களில் புகுந்த வடசொற்கள்; (iii) வடமொழி கற்ற தமிழறிஞர் தமிழ் நூல்களிற் புகுத்திய வட சொற்கள்; (iv) இரண்டு மொழிகளும் கலந்து புது மொழியாக மணிப்பிரவாளம் என்னும் மொழியாக ஆதல்வேண்டு ஞும் ஆர்வத்தால் வலிந்து புகுத்தப்பட்ட வடசொற்கள்

வடமொழியில் திராவிடச் சொற்கள்

தமிழ்ச் சொற்களாக உள்ள சில சொற்களையும் வட சொற்கள் எனக் கூறுவதில் இந் நாட்டறிஞர்க்குப் பெரிய தோர் ஆர்வம் இருந்துவந்தது. ஆயினும், அவர்களிடையே சிலர் அவ்வப்போது அவற்றைத் தமிழ்ச் சொற்கள் என்றே உறுதிப்படுத்திவந்துள்ளனர். எடுத்துக்காட் டாகக் கூறத்தக்கவர் நச்சினார்க்கினியர். அவர், உலகம், காலம் என்னும் சொற்களைப் பிறர் வடசொல்லெனக் கூறி னும், அவை தமிழ்ச்சொற்களே என விளக்கினர்.[1]

சென்ற நூற்றாண்டில் முதன்முதலாக டாக்டர் குண் டர்ட் என்பவர் "வட மொழியில் திராவிடக் கூறுகள்" (Dravidian Elements in Sanskrit) என்ற ஆராய்ச்சிக் கட்டுரையைக் கி. பி. 1869-ல் ஜெர்மன் கீழ்நாட்டுக் கல்விக் கழகத்தின் பத்திரிகையில் (The Journal of the German Oriental Society) வெளியிட்டார். பின்னர், டாக்டர் கிட்டல் கி. பி. 1872-ல் "வடமொழி அகராதிகளில் திரா விடச் சொற்கள்" என்ற கட்டுரை வரைந்தார். அவர் தாம் எழுதிய கன்னட அகராதியில் வடமொழி கடன் வாங்கின சொற்கள் என நானூற்றிருபது சொற்களை எடுத்து வெளியிட்டார்.[2] அவருக்குப் பின்னர், அவ்

1. தொல். சொல். 57

2. கிரையர்சனும் திராவிடச் சொற்கள் பல வடமொழியில் புதுந்துள்ளன என்பர். Linguistic Survey, Vol. IV. pp, 278, 279.

வாராய்ச்சியில் ஈடுபட்டவர், ஒப்பிலக்கணம் எழுதிய டாக்டர் கால்டுவெலே ஆவார்.[1]

ஆராய்ந்து காணும் முறை

வடமொழிக்கும் திராவிட மொழிக்கும் பொதுவாக வழங்கும் சொற்களில் சிலவற்றைப் பின்வரும் முறையில் ஆராய்ந்து, திராவிடமொழிச் சொற்கள் எனக் கூறலாம் என்கிறார் கால்டுவெல் :—

1. ஒரு சொல் வடமொழியில் தன் இனமான சொற்கள் இல்லாமல், அடிச் சொல்லும் இல்லாமல், அதிலிருந்து வளர்ந்தமைந்த சொற்களும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதற்கு இனமான சொற்கள், ஒத்த பிறப்புடைய சொற்கள், அல்லது, அதிலிருந்து வளர்ந்தமைந்த சொற்கள் திராவிட மொழிகளில் இருந்தால், அது வடமொழிக்கு உரியதன்று என்றும் திராவிடச்சொல் என்றும் துணியலாம்.

2. ஒரு சொல்லின் பொருளே உணர்த்த வேறு பல சொற்கள் வடமொழியில் இருக்க, திராவிட மொழிகளில் அப் பொருளுக்கு உரியதாய் அந்த ஒரு சொல் மட்டுமே இருந்தால், அது திராவிடச் சொல்லெனத் துணியலாம்.

3. ஒரு சொல் வடமொழியில் மட்டும் காணப்பட்டு, வடமொழிக்கு இனமான ஐரோப்பிய மொழிகளில் (கிரீக், லத்தீன், ஜெர்மன் முதலிய ஆரிய மொழிகளில்) காணப்படாமல், திராவிட மொழிகளில் பண்பட்டவை பண்படாதவை எவற்றிலும் வழங்குவதாக இருப்பின், அதுவும் திராவிடச்சொல் எனப்படும்.

1. Caldwell, A Comparative Grammar of the Dravidian Langnages, pp. 565, 567

4. ஒரு சொல்லின் பிறப்பைப் பற்றி வடநூலார் கூறும் வரலாறு விந்தையானதாகவும் நம்பத்தகாததாகவும் இருக்க, தமிழ் நூலார் கூறும் பிறப்பு வரலாறும் அடிச் சொல்லும் தொடர்பும் பொருந்துவனவாக இருப்பின், அதுவும் திராவிடச்சொல் எனப்படும்.

5. ஒரு சொல்லின் பொருள் திராவிட மொழிகளில் நேரிதாகவும் அடிச்சொல்லுடன் தொடர்புடையதாகவும் இருக்க, வடமொழியில் உள்ள பொருள் உருவகப் பொருளாகவும் நேர்த்தொடர்பு அற்றதாகவும் இருப்பின் அதுவும் திராவிடச்சொல் எனக் கொள்ளத்தகும்.

6. வடமொழியிலிருந்து கடன் வாங்கிய சொற்களைத் தற்சமம் தற்பவம் எனப் பாகுபாடு செய்து வடசொற்கள் எனத் தயங்காமல் உடன்படும் உண்மைப்போக்கும் வட மொழியிடத்துப் பெருமதிப்பும் உடையவர்களாகிய தமிழ் தெலுங்கு மொழிப் புலவர்களே ஒரு சொல்லைத் திராவிடச் சொல் எனக் குறிப்பராயின், அது உண்மை எனப் போற்றத்தக்கதாகும்.

இவ்வாறு ஆராய்ந்தால், வடமொழியில் உள்ள சொற்களில் எவை எவை திராவிடச் சொற்கள் என உணரலாம் என்று கால்டுவெல் ஆராய்ந்து கூறுகிறார்.[1]

இக்காரணங்களுள் ஒன்றோ பலவோ இருப்பின், எச் சொல்லாயினும் திராவிட மொழிகளிடமிருந்து வட மொழியிற் கலந்த சொல்லென்று துணிதல் தகும்.

கால்டுவெல் எடுத்துக்காட்டும் சொற்கள் சில:

அணி, ஆணி—இச்சொற்கள் வடமொழியில் வண்டியின் அச்சாணியைக் குறிக்கும். வடமொழி யறிஞர்கள்

1. Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, p. 454.

அண் என்பதனைப் பகுதி என்பர். அப்பகுதிக்கு ஒலித்தல் என்பது பொருளாகும். திராவிட மொழிகளில் அண் என்பது, சேர், தொடு, கட்டு, அருகே, மேல், அணிந்து கொள் (அணை, அணி, அணுகு, அணவு) என்னும் பொருளில் வழங்குகின்றது. எனவே ஆணியைத் திராவிடச் சொல்லாகக் கொள்வர் கால்டுவெல்.

கடு, கடுகு—வடமொழியில் காரத்தையும் கொடுமையையும் குறிப்பனவாம். அங்குக் 'கட்' என்னும் பகுதி 'போ' என்னும் பொருளது. தமிழில் கடு என்பது பிகுதி முதலான பலபொருள் உடையது. வடமொழி அறிஞர் சிலர் 'கிரிட்' பகுதி என்றும் 'வெட்டு' என்பது பொருள் என்றும் கருதுவர். எனினும் அதுவும் பொருந்தாததே. திராவிட மொழிகளில் 'கடு' என்னும் பகுதியிலிருந்து பிறந்த சொற்கள் மிகப் பலவாகவும் நேரிய பொருளுடையனவாகவும் இருத்தலாலும், வடமொழியில் இதற்கு இனச்சொல் இன்மையாலும் இதனைத் திராவிடச் சொல் என்றே கொள்ளலாம். (கடுகு, கடி, கடுகடுத்தல், கடறு என்னும் தமிழ்ச் சொற்களையும் நோக்குக).

குடி—வடமொழியில் வீடு என்னும் பொருள்தருகின்றது. குடிர, குடீர, குடோ, குடும்ப என்பவை இனச் சொற்கள். 'குட்' என்பது கோணியிருத்தல் என்னும் பொருள்தரும் பகுதியாம். இப்பகுதியிலிருந்தே குடம் என்னும் வடசொல்லும் பிறந்ததாம். தமிழில் குடி என்பது ஒன்றுய் வாழ்தல், வீட்டில் வாழ்தல், ஒன்றுய் வாழும் மக்கள் என்னும் பொருள் தருகின்றது. கூடு என்பதன் அடிச்சொல் 'குடு' என்று கொள்ளின் இப் பொருள் இயல்பாகின்றது. குடில், குடிசை என்பன அதிலிருந்து பிறந்தவை. தெலுங்கிலும் கன்னடத்திலும்

'குடி' (gudi) கோயிலைக் குறிக்கும். கன்னடத்தில் 'குடசலு' குடிசையைக் குறிக்கும். பின்னிஷ் முதலான சித்திய மொழிகளிலும் இப் பகுதி இப்பொருளில் உள்ளது. ஆதலின் இது திராவிடச் சொல்லேயாம்.

நீர்—வடமொழியில் நீரைக் குறிப்பது. வழிகாட்டு என்னும் பொருளுடைய 'நீ' என்பது பகுதியாம். நாரா என்பது பகுதி என்றும், அது 'ஸ்நா' (குளி) என்பதிலிருந்து எழுந்ததென்றும் கூறுவாரும் உளர் இச்சொல் வடமொழியில் அருகி வழங்குவதேயாம். ஜல என்பதே பயின்று வழங்கும் சொல். அதுவும் வடமொழிக்குமுன் வடநாட்டில் வழங்கியிருந்த பழைய மொழியிலிருந்து புகுந்தது என்பர். ஆனால் நீர் என்பது தமிழ் முதலான திராவிட மொழிகளில் பயின்று வழங்கும் சொல்லாகும். அப்பொருளில் வேறு சொல் பயின்று வழங்குதல் இல்லை. (தெலுங்கு : நீளு<நீர்லு. கோண்டு : ஈர்<நீர். பிராகுவி : தீர்<நீர். மலையாளம் : வெள்ளம் - ஆகுபெயர்; மலையாளத்தில் 'நீர்' என்பதும் உண்டு. தமிழில் பேச்சுமொழியில் தண்ணி<தண்+நீர். 'தண்' பொருளிழந்தது.) நீந்து என்பதும் நீர் என்னும் சொல்லினடியாகப் பிறந்ததே. ஆதலின் இதுவும் திராவிடச் சொல்லே.

மீன்—வடமொழியில் மீனைக் குறிப்பது. மீ (துன்புறுத்து) என்னும் அடிச்சொல் உடையது. திராவிட மொழிகளில் மீன் என்பது அப்பொருளில் வழங்கும் ஒரே சொல்லாகவும் தமிழ் முதலான எல்லா மொழிகளிலும் வழங்குவதாகவும் உள்ளது. ராஜமஹால் மொழியிலும் மீன் உள்ளது. கோண்டு மொழியில் 'மீந்த்' என உள்ளது. தவிர, வடமொழியில் கூறப்படும் அடிச்சொல் பொருந்தாத தாய்த் தோன்ற, திராவிட அடிச்சொல்லோ மிக்க

பொருத்தமுடையதாய் விளங்குகின்றது. 'மின்' என்னும் திராவிட அடிச்சொல் முதல் மீண்டு மீன் என்றுயிற்று. இதே அடிச்சொல் 'விண்மீன்' என்ற தொடரில் நட்சத்திரத்தைக் குறித்தலும் காணத்தகும். மின்மினி என்ற உயிர்வகையும் உள்ளது. நீர்நிலைகளில் அலைகளுக்கிடையிடையே மின்னி ஒளிரும் உயிர்களை இப்பெயரால் குறித்தல் இயற்கையானது.

வரையறை

எவ்வகையிலும் ஒருசில சொற்கள் பிறமொழியிலிருந்து வந்து கலவாமல் ஒரு மொழி நிலவுதல் அரிது.[1] கலைச்சொற்களாக உள்ள பிறமொழிச் சொற்களை எந்த மொழியும் ஓரளவு கடன்வாங்க வேண்டியுள்ளது. அச் சொற்களைக் கலக்கும்போது முன்குறித்த எதிர்ப்பும் இடர்ப்பாடும் இல்லை. காரணம், கலைச்சொற்களைக் கற்க முயல்வோர் மிகச் சிறுபான்மையோரே. பெரும்பாலோருடைய மொழியை அது எவ்விதத்திலும் கெடுக்காததால், அவர்கள் இந்தக் கலையுலகத்துப் போக்கில் தலையிடுவதில்லை. இத்தகைய இடத்தில் தவிர, மற்ற இடங்களில் பிறமொழிச் சொற்களை வேண்டும் என்றே அழகு கருதிப் புகுத்தலும் தவறு; நம் மொழியில் சொற்கள் இருக்கும்போது, பிற மொழிகளிலிருந்து புதுச் சொற்களைக் கொண்டுவந்து புகுத்தலும் தவறு. சுருங்கக் கூறின், பிறமொழிச் சொற்களை வரையறையின்றி எந்தக் காலத்திலும் எந்த நூலிலும் புகுத்துவது தவருகும். பிறமொழிச் சொற்கள் எக் கார

1. Contact between languages is an historical necessity. —J. Vendryes, Language, p. 280.

Certain philologists have even gone so for as to say that there is no language which is not in certain respects a mixed language.—Ibid. p. 281.

ணத்தாலும் புகாதவாறு ஒரு மொழியைக் காத்திடுதலும் இயலாததாகும்.

செல்வாக்கு

இரு மொழிகளுக்குள் கலப்பு ஏற்படும்போது, ஒத்த செல்வாக்கு உடையவைகளாக இருப்பின், இரண்டும் வாழும். இல்லையேல், செல்வாக்கு மிகுந்தது வாழ, மற்றது மறைந்துவிடும். ஐரோப்பாவில் அர்மீனிய மொழியும் (Armenian) ரஷ்ய மொழியும் கலக்கத் தொடங்கிய போது, முன்னது அடங்கி மறைந்தது. ஆனால் போலிஷ் மொழி ரஷ்ய மொழியின் கலப்பை எதிர்த்து வளர்ந்தது. இங்கிலாந்தில் கெல்ட் மொழி இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து அங்கெல்லாம் ஆங்கிலமே வாழ்கிறது. அயர்லாந்தில் ஆங்கிலம் எவ்வளவு கலந்தபோதிலும் ஐரிஷ் மொழி அழியாமல் விளங்குகிறது. அமெரிக்காவில் ஜெர்மானியர், பிரஞ்சு மக்கள் முதலியவர்கள் குடியேறிய போதிலும், அவர்களின் மொழியெல்லாம் மறைந்து, ஆங்கிலம் மட்டுமே வாழ்கிறது.

இரு மொழிகள் கலக்கும்போது எது செல்வாக்கு உடையதாக இருக்கும் என்று சொல்வது அரிது. இரண்டும் பேச்சுமொழிகளாக ஒத்தநிலையில் இருப்பின், நெடுங்காலம் வரையில் படிப்படியாகக் கலப்பு நிகழ்ந்த வாறே இருக்கும். ஒன்று எழுத்துவழக்கு அற்ற பேச்சு மொழியாகவும், மற்றொன்று பேச்சுவழக்கு அற்ற எழுத்து மொழியாகவும் இருப்பின், முன்னது விரைவில் மாறும்; புதுமொழியாக உருப்பெறும். ஒன்று எழுத்துவழக்கும் பேச்சுவழக்கும் உடைய மொழியாகவும், மற்றொன்று பேச்சுவழக்கு அற்ற மொழியாகவும் இருப்பின், முன்னது பல சொற்களைக் கடன்வாங்கிக்கொள்ளும்; பின்னது ஒரு

சில சொற்களேயே கடன்வாங்கும். வடமொழியில் தமிழ்ச் சொற்கள் ஒருசில மட்டும் இருத்தற்கும், தமிழில் வட சொற்கள் பல புகுந்தமைக்கும் காரணம் இதுவே. இந் நாட்டில் ஆங்கில ஆட்சியில் ஆங்கிலமொழி நூல்கள் வாயிலாகவும் அரசாங்க எழுத்தின் வாயிலாகவுமே பெரும்பாலும் கலந்தமையால், ஆங்கிலத்திலும (மிளகுத் தண்ணீர், கட்டுமரம் முதலிய) ஒருசில தமிழ்ச் சொற்களே கலந்தன.

ஒத்த நிலையில் பேச்சு வழக்கில் உள்ள இருமொழிகள் கலந்தால், உயர்ந்த மொழியிடமிருந்து உயர்வற்ற மொழி கடன்வாங்குதல் போலவே, உயர்வற்ற மொழியிடமிருந்து உயர்வுடைய மொழியும் கடன்வாங்குதல் உண்டு. இரண்டில் ஒன்றே வாழ்வது என்ற நெருக்கடி ஏற்படும்போது, உயர்வுடையது மறைய, உயர்வற்ற மொழி வெற்றிபெறுதலும் உண்டு என்கிறார் அறிஞர் யெஸ்பர்ஸன்.[1] அரசியல் துறையில் செல்வாக்கு உடைய மொழி வெற்றி பெற்று, செல்வாக்கு அற்ற மொழி மறைதலும் உண்டு. அமெரிக்காவில் ஆங்கில மொழி வாழ, மற்ற ஐரோப்பிய மொழிகள் இடம்பெறுமற் போனதற்கு ஆங்கிலேயரின் அரசியல் செல்வாக்கே காரணம் எனலாம்.[2]

---

1. When two languages compete, the victory does not fall to the most perfect language as such. Nor is it always the nation whose culture is superior that makes the nation of inferior culture adopt its language.....It sometimes happens in a district of mixed nationalities that the population which is intellectually superior give up their own language because they can learn their neighbours' tongue.—Otto Jespersen, Growth and Structure of the English Language, p. 247.

2. Political ascendancy would probably be found in most cases to have been the most powerful influence.—Ibid.

கடன்வாங்கக் காரணம்

யெஸ்பர்ஸன் கருத்துப்படி சொற்களைக் கடன்வாங்குவதற்குரிய காரணங்கள் மூன்று ஆகும். முதலாவது : தம்மிடம் இல்லாத புதிய பொருள்களைப் பயன்படுத்தும் போது அவற்றின் பிறமொழிப் பெயர்களைக் கடன்வாங்குதல். இரண்டாவது : ஒருமொழியாரிடமிருந்து செல்வாக்கோ உயர்வோ பெற்றுள்ள ஒரு துறையைக் கற்கும் போது அதற்கு உரிய அம்மொழிச் சொற்களையும் கற்றுக் கையாளுதல். மூன்றாவது : மொழிபெயர்ப்பாளர்கள் சோம்பலின் காரணமாக, தம் மொழிச் சொற்களைத் தேடிக் காணுமல் பிறமொழிச் சொற்களை அப்படியே கொண்டு வந்து கலந்து சேர்த்தல்.

ஒரு நாட்டில் சிறந்த பொருள் என்று புதிதாக இயற்றப்படுமானால், அந்தப் பொருளைத் தருவித்துக்கொள்வது மட்டும் அல்லாமல், அதற்கு அவர்கள் இட்ட பெயரையும் அடுத்த நாட்டு மக்கள் பயன்படுத்திக்கொள்கின்றனர். சைக்கில், மோட்டார், டெலிவிஷன் முதலிய சொற்கள் தமிழில் வழங்கும் காரணம் அதுவே. புதுப்பொருள் போலவே, புதுக்கருத்தையும் இவ்வாறு போற்றிக்கற்பதும், அவ்வகையில் அமைந்துள்ள பெயர்ச்சொற்களைக் கடன் வாங்கிக்கொள்வதும் மக்களின் இயல்பாகும்.[1]

பிரெஞ்சு மொழியில் உள்ள பாராளுமன்றத்தின் தொடர்பான பல சொற்கள் ஆங்கிலத்திலிருந்து கடன் வாங்கப்பட்டவை ; அதற்குக் காரணம் பாராளுமன்றத்தை முதல்முதலில் உருவாக்கிச் சிறப்பித்தவர் ஆங்கிலேயர் ;

1. When a nation produces something that its neighbours think worthy of imitation those will take over not only the thing but also the name.—Otto Jespersen, Growth and Structure of the English Language, p. 30.

ஆகவே அவர்களிடமிருந்து கற்ற கலைக்கு ஏற்ற சொற்கள் பிரெஞ்சு மொழியில் புகுந்தன. ஆங்கில மொழியில் நாகரிக வாழ்க்கைக்கு உரிய பலவகைப் பொருள்களின் பெயர்கள் பிரஞ்சுச் சொற்களாக உள்ளன. அதற்குக் காரணம், நாகரிகப் புதுமை மிகுந்த நாடு பிரான்ஸ்; அந்தப் பொருள்கள் அங்கிருந்து வந்து பழகியவை.

பழமையை அவ்வளவாகப் போற்றுமல், பழக்கவழக்கங்களை விரைவில் மாற்றும் இயல்பு, மக்கள் சிலரிடத்தில் உள்ளது. தம்மைத் தாமே தாழ்வாகக் கருதி, தம்மிடம் பழகும் அயலாரை உயர்வாக மதிக்கும் தாழ்வு மனப்பான்மை சிலரிடம் உள்ளது. புதிதாக வரும் எதையும் கண்மூடிப் போற்றும் வேகம் மக்கள் சிலரிடம் காணப்படுகிறது. இத்தகைய இயல்புகள் ஒரு நாட்டு மக்களிடம் மிகுதியாக இருக்குமானால், இந்த இயல்புகள் அவர்கள் பேசும் மொழியிலும் இடம்பெறும்; இவர்கள் பிறமொழிச் சொற்களைத் தயங்காமல் கடன்வாங்குவர்.[1] மற்ற மொழியினரைவிடத் தமிழர் பிறமொழிச் சொற்களை மிகுதியாகக் கலந்து பேசும் வழக்கமுடையவராக இருக்கின்றனர். எழுதும் வகையில் கட்டுப்பாடு காணப்படினும், அன்றாடப் பேச்சில் கலப்பு மிகுதியாக இருத்தல் இங்குக் கருதத் தக்கது. சோம்பலின் காரணமாகவும், தாய்மொழிச் சொல்லைத் தேடி வருந்தும் முயற்சி இல்லாமல் பிறமொழிச் சொல்லைச் சேர்த்துப் பேசுதல் உண்டு என்பர்.

---

1. When a nation has once got into the habit of borrowing words, people will very often use foreign words where it would have been perfectly possible to express their ideas by means of native speech-material, the reason for going out of one's own language being in some cases the desire to be thought fashionable or refined through interluding one's speech with foreign words, in others simply laziness.—Otto Jespersen, Language, p. 210.

ஆங்கிலம் மிகக் கடன் வாங்கித் தன்னை வளமுறச் செய்து கொண்டது என்று சிலர் அதைப் புகழ்ந்தபோதி லும், புதிய கருத்துக்களுக்கு ஏற்றவாறு புதிய சொற்களை ஆக்கி வழங்காமல், பிற மொழிச் சொற்களை வரையறை இன்றிக் கடன் வாங்கியது என்று ஆங்கில மொழியைக் குறை கூறுவோரும் உள்ளனர்.[1]

ஆங்கிலம் போலவே, மலையாள மொழியும் புதிய சொற்களைப் படைத்து வழங்கும் ஆற்றலை இழந்து விட்டது என்றும், வடமொழிச் சொற்களை வரையறை இன்றிக் கடன் வாங்கியதே அதற்குக் காரணம் என்றும் அறிஞர் கருதுகின்றனர்.[2]

ஒரு மொழியிடமிருந்து மற்றொரு மொழி இவ்வாறு கடன் வாங்கியபோது, கடன் வாங்கிய சொற்களின் எண் ணிக்கையைவிட அவற்றின் சிறப்பியல்பு அந்த இரு மொழியார்க்குள் இருந்த உறவை நன்கு விளக்கவல்ல தாகும். தக்க முறையில் ஆராய்ந்தால், இன்ன துறையில் இன்ன மொழியார் சிறப்புப் பெற்று விளங்கினர் என்ப தையும், இன்ன வகையில் இன்னார் கருத்துவளம் பெற்றி ருந்தனர் என்பதையும் கடன் வாங்கிய சொற்களைக் கொண்டே தெளிந்து கூறலாம்.[3]

---

1. This habit permitted it (English) to neglect its own vocabulary as a source for new words.—Language, J. Vendryes, p. 350.

2. From the point of view of the student of semantics, Malayalam, of all the Dravidian languages, has suffered to the greatest extent from the all-dominant sway of Sanskrit. —L. V. Ramaswami Aiyar, Studies in Dravidian Semantics.

3. The number of the loan-words and still more the quality of the loan-words, if rightly interpreted, will inform us of their reciprocal relations, they will show us which of them has been the more fertile in ideas and on what domains

பாகுபாடு

தமிழில் கலந்துள்ள வட சொற்களை மூன்று வகையாகப் பாகுபாடு செய்யலாம் என்கிறார் கால்டுவெல்.[1]

1. பதினோராம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டு வரையில் சைவ சித்தாந்தம், வைணவம் (விசிஷ்டாத்வைதம்), அத்வைதம் ஆகிய மூன்று சமயத்தலைவர்களும் தம் தம் கொள்கைகளைப் பரப்பியபோது, வடசொற்கள் பலவற்றைத் தமிழில் கலந்தனர். இந்த வடசொற்கள் பெரும்பாலும் திரியாமலே தமிழில் புகுந்தன. ஒரு சில சொற்களே தமிழொலிக்கு ஏற்பத் திரிந்தன.

2. இந்தக் காலத்திற்குச் சிறிது முந்திய நூற்றாண்டுகளிலும், இதன் முற்பகுதியிலும் ஏறக்குறைய ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையில் சமணர் தம் சமயத்தைப் பரப்ப முயன்றனர். அக்காலத்தில் அவர்களின் செல்வாக்கால் தமிழில் புகுந்த வடசொற்கள் தமிழ் ஒலிக்கு ஏற்ப மாறி அமைந்துள்ளன.

3. இதற்கும் முந்திய பழங்காலத்தில்[2] வடமொழி படித்தவர்களான புரோகிதர், புலவர், சோதிடர் முதலானோருடன் நேரே பழகிய தமிழ் மக்கள் பேச்சுமொழியில் கற்றுக் கலந்த சொற்கள் நெடுங்காலம் எழுதப்படாமலே

of human activity each has been superior to the other. —Otto Jespersen, Growth and Structure of the English Language, p. 30.

1. Caldwell. A Comparative Grammar of the Dravidian Lauguages. p. 86.

2. The corresponding names of the asterisms and months in Telugu, Canarese, etc., are pure, unchanged Sanskrit; and hence the greater antiquity of the intvoduction of those words into Tamil, or at least the greater antiquity of their use in Tamil written compositions, may safely be concluded.—Ibid, 88.

கின்றது, பிறகு காலப் போக்கில் வடிவம் திரிந்த பிறகு தமிழில் எழுதப்பட்டன. ஆகையால் இத்தகைய வட சொற்கள், சமணரால் புகுத்தப்பட்ட வட சொற்களை விட மிகுதியாகத் திரிந்துள்ளன.

பூர்வ ஆஷாடம்—பூராடம்

ஆஷாடம்—ஆடி

அஸ்வினி—ஐப்பசி

பூர்வபத்ரபத—புரட்டாசி

எனச் சொற்கள் சில மிக்க திரிபு பெற்றுத் தமிழில் வழங்குதல் காணலாம்.

சமயத் துறையில் வட மொழியில் நூல்கள் இயற்றும் வழக்கம் மிகுந்திருந்தது; சங்கரர், இராமானுஜர் போன்றவர்களும் தம் தாய்மொழி தமிழாக இருந்தும், வடமொழியில் விரிவுரைகளும் ஆராய்ச்சிகளும் எழுதியது இங்குக் கருதத்தக்கது. ஒரு மொழி எந்தத் துறையில் செல்வாக்குப் பெற்று விளங்குகிறதோ, அந்தத் துறையின் சொற்களை மற்ற மொழி கடன் வாங்கிக்கொள்ளுதல் இயற்கையாகும். வடமொழியிலிருந்து தமிழில் புகுந்த சொற்களை ஆராய்ந்தால் சமயத் துறையில் வடமொழிக்கு இருந்த செல்வாக்குப் புலப்படுகிறது.

கடன் வாங்கிய சொற்கள் மொழியியலில் மைல் கற்கள் போல் உள்ளன என்றும், மொழியில் நேர்ந்த மாறுதல்களின் காலத்தை ஒருவாறு உணர்வதற்கு அவை உதவுகின்றன என்றும் அறிஞர் யெஸ்பர்ஸன் கருதுகிறார்.[1] இது

1. Loan-words have been called the milestones of philology, because in a great many instances they permit us to fix approximately the dates of linguistic changes.—Otto Jespersen, Growth and Structure of the English Language, p. 29.

ஒரு சில இடங்களில் மட்டுமே பொருந்துவதாக உள்ளது. சொற்களைக் கடன் வாங்குவதால் மொழியில் பெரிய மாறுதல்கள் நேர்வதில்லை. இருவகை மொழி பேசும் மக்கள் நெருங்கிப் பழகாமலே, கலை முதலியவற்றின் செல்வாக்கால் சொற்கள் மட்டும் கடன் வாங்கப்படுதலும் உண்டு. ஆகவே மொழிவரலாற்றின் உண்மைகளை அறிவிக்கத் தக்க பெருஞ் சிறப்பு இத்தகைய சொற்கலப்பால் ஏற்படுவதில்லை எனலாம். எவ்வளவு மிகுதியாக இருந்தபோதிலும், சொற்கள் கடன் வாங்கப்படுதல், மொழியின் எல்லைக்கு அப்பாற் பட்ட காரணத்தால் நிகழ்வதாகவே ஒருவகையில் கருதத் தக்கது என்று வெண்ட்ரியே கூறுவதும் உண்மை ஆகும்.[1]

கடன்வாங்கப்படுவன

இவ்வாறு ஒருமொழி கடன் வாங்கியதைப் பற்றி ஆராயும்போது, இன்ன அளவிற்குக் கடன் வாங்கியது என்று ஆராய்தல் வேண்டும்; இன்ன வகையில் கடன் வாங்கியது என்று ஆராய்தலும் வேண்டும். பெரும்பாலும் கடன்வாங்கப்படுபவை, பொருள்களின் பெயர்களும், பண்புப் பெயர்களும் ஆகும். வினைச்சொற்கள் மிகக் குறைந்த அளவிலே கடன்வாங்கப்படுகின்றன. இடைச் சொற்களைக் கடன் வாங்குதல் அரிது. துணைவினை முதலியவற்றைக் கடன் வாங்கல் இல்லை எனலாம். வேற்றுமை யுருபுகள், வினைவிகுதிகள் முதலியவற்றைக் கடனாகப் பெறுதல் சிறிதும் இல்லை எனலாம். ஒரோவழி எண்ணுப் பெயர்களில் ஒரு சில கடன் வாங்கப்படுதல் உண்டு.[2]

---

1. Vocabulary borrowings, no matter how extensive they may be, remain in a certain sense outside the language. —J. Vendryes, Language, p. 289.

2. There are degrees of kind as well as of extent in the process of borrowing: What is most easily taken out of the

மூவிடப் பெயர்கள் போன்றவற்றை ஒரு மொழி கடன் வாங்குதல் அரிது. அவ்வாறு கடன் வாங்கியிருந்தால், அது இரு மொழியாளருமே கலந்த பழக்கம்மட்டும் அல்லாமல், அவர்கள் மிகக் கலந்து ஒன்றுபட்ட தன்மையே காரணம் எனக் கூறலாம்.

ஆங்கிலத்தில் உள்ள they, them, their என்னும் இடப்பெயர்வகைகள் ஸ்காண்டிநேவியன் மொழியிலிருந்து வந்தவை என்றும், இரண்டு இனமும் ஒன்றாகக் கலந்த கலப்பால் ஏற்பட்டவை என்றுமே கூறப்படுகின்றது.[1]

மூவிடப் பெயர்கள் மொழியின் உயிரான இலக்கணம் போல் அடிப்படையோடு இயைந்து நிற்பவை. பிறமொழிச் சொற்களைக் கொண்டு தம் மொழியில் அழகுபடுத்த வேண்டும் என்று தவறாக நினைப்பவரும் இவற்றைக் கடன் வாங்கத் துணிவதில்லை. இவை மொழியில் அவ்வளவு ஆழமாக வேரூன்றியுள்ளன எனலாம்.[2]

---

stores of one language to be added to those of another is the names and epithets of things, nouns and adjectives; verbs, much less easily; particles, hardly at all; apparatus of derivation, prefixes and suffixes, very sparingly; and apparatus of inflection, endings of declension and conjugation, least of all.—Whitney, The Life and Growth of Language, p. 119.

1. Personal and demonstrative pronouns, articles and the like are scarcely ever taken over from one language to another. They are so definitely woven into the innermost texture of a language that no one would think of giving them up, however much he might like to adorn his speech with words from a foreign source.—Otto Jespersen, Language, p. 212.

2. H. D. Naylor, Evolution of Language, p. 15.

இலக்கணக்கலப்பு

ஒரு மொழியில் மற்றொரு மொழியின் இலக்கணக் கூறுகள் கலந்துள்ளன என்றால், முன்னைய மொழியினர் தம் எண்ணப்போக்கையே மாற்றிக்கொண்டனர் என்று தான் கொள்ளவேண்டும். இரண்டு கூட்டத்தார் அரசியல் முதலிய காரணங்களால் கலந்து பழகுவதால்மட்டும் இந்த நிலை ஏற்படாது. ஒரு கூட்டத்தாரின் உள்ளமே முற்றும் மாறும் அளவிற்கு—எண்ணப்போக்கே மாறிவிடும் அளவிற்கு—பெரிய மாறுதல் நிகழ்ந்தால்தான், மொழியின் இலக்கணம் கடன் வாங்கப்படும்.[1]

தமிழர் தம் தாய்மொழியுடன் நெடுங்காலமாக வடமொழியையும் போற்றி வளர்த்துவந்தபோதிலும், காஞ்சி மாநகர் வடமொழிக்கும் தென்மொழிக்கும் ஒத்த நிலையில் பல்லவர் கழகமாய்ப் பல நூற்றாண்டுகள் இருந்து வந்த போதிலும், வடமொழி நூல்கள் பலவற்றைத் தமிழரே இயற்றிய போதிலும், அதன் இலக்கியங்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட போதிலும், வடமொழியின் இலக்கணக்கூறுகள் தமிழில் புக இயலவில்லை. க்ரு என்னும் வடசொற் பகுதியினின்றும் பிறந்த காரன், காரி என்னும் விகுதிவகை தவிர (குடிகாரன், வீட்டுக்காரி) வேறொரு

1. The borrowing of grammatical forms is of much rarer occurrence, inasmuch as grammar is the essence and life-blood of language, and to borrow the forms of grammar, therefore, is to intermingle the psychological histories of two separate tongues. It is a metamorphosis of the whole inherited mode of thinking and of viewing the relations of things to ourselves and one another, and to mix two grammars together is like mixing two different and incompatible modes of thought. —Sayce, An Introduction to the Science of Language, p. 174.

விகுதியோ இடைச்சொல்லோ வடமொழியினின்றும் தமிழில் புகவில்லை.

பிறமொழிச் சொற்கள் வரையறை இன்றிக் கலக்கப் பெற்றுள்ளதாகக் கூறப்படும் ஆங்கில மொழியிலும் இலக்கணக் கலப்பு இல்லை; உருபுகள் முதலிய இடைச்சொற்களிலும் கலப்பு இல்லை என்று கூறத்தக்க நிலையே உள்ளது. ஆங்கில மொழியின் இலக்கணக் கூறுகளும் இடைச் சொற்களும் முற்றிலும் ஆங்கில-சாக்ஸன் தாயிடமிருந்து பெற்றவைகளே அல்லாமல், பிறமொழியிலிருந்து வந்து புகுந்தவை அல்ல.[1]

ஒரு மொழியின் வாக்கிய அமைப்பைக் கடன் வாங்குவது எளிது அன்று. 'நீங்கள் வருமாறு அழைக்கப்படுகிறீர்கள்' என்று சிலர் தமிழில் எழுதும் வாக்கியம் எடுத்துக்காட்டாகக் கூறலாம். 'You are requested to attend' என்னும் ஆங்கில வாக்கியத்தின் அமைப்பே அது. இப்படி வாக்கியம் அமைத்தவர் ஒரு மொழிமட்டும் அறிந்தவராக இருக்கமுடியாது. தமிழ் சிறிது கற்று ஆங்கிலம் நன்கு கற்றவரே இப்படிப்பட்ட வாக்கியங்களைக் கடன்வாங்க முடியும். இவ்வாறே இலக்கணக் கூறுகளை ஒரு மொழியிலிருந்து கடன்வாங்கித் தம் மொழியில் எழுதுவோர் அனைவரும் இரு மொழி கற்றவராக இருப்பர். சொற்கள் கலப்பதற்கு, இருவகை மொழி பேசுவோர் எங்கேனும் எவ்வாறேனும் கலந்து பழகுதலே போதும். ஆயின், இலக்கணம் கலப்பதற்கு, ஒரு மொழியினர் தம்மொழியை

1. Even English is nearly unmixed in its grammar; its articulating parts, the elements that bind ideas together and show their relations that make sentences, are almost exclusively of Anglo-Saxon origin.—Whitney, the Life and Growth of Language, p. 119.

விட மற்றொரு மொழியை நன்கு கற்றுப் பயில்வதே காரணமாகும்.

இவர்கள் தம் மொழியில் பேசும்போதும் எழுதும் போதும் பிறமொழியின் இலக்கண அமைப்பைக் கடன் வாங்குவது போலவே, பிறமொழியில் பேசும்போதும் எழுதும்போதும் தம் தாய்மொழியின் இலக்கண அமைப் புக்களைச் சேர்த்துவிடுவர். இந்தியர்கள் எழுதும் ஆங்கி லத்தில் இத்தகைய இந்திய மொழிக் கூறுகள் (Indianisms) இருப்பதாக ஆங்கில அறிஞர்கள் குறைகூறுகின்றனர். கல்விப் பயிற்சி குறைந்தவர்களாய் ஆங்கிலச் சொற்களைக் கற்று ஆங்கிலேயருடன் பயிலும வேலையாட்கள் முதலா னோர் பேசும் ஆங்கில வாக்கியங்களில் குறைபாடு மிகுதி; அவர்களின் ஆங்கில வாக்கியங்கள், தமிழர் ஆங்கிலேய உடை உடுத்துத் தோன்றுதல்போல் உள்ளன. எவ்வ ளவுதான் ஆங்கிலச் சொற்களைக் கொண்டு அந்த வாக் கியங்களை மூடி மறைத்தாலும், அவற்றின் உண்மை வெளிப்பட்டுவிடுகிறது.

வடமொழியிலிருந்து சொற்களைமட்டும் கடன் வாங் கித் திராவிட மொழியமைப்புக்கொண்டு பழங்காலத்து வடநாட்டு மக்கள் பேசிவந்தார்கள்; அந்தப் பேச்சுக்களின் திரிபுகளாக உள்ளவைகளே இன்றுள்ள வடநாட்டு மொழிகள்.[1] இந்த மொழிகளில் திராவிட வாக்கிய அமைப்பும் மற்றும் சில இலக்கணக் கூறுகளும் இன்றளவும் காணப்படுவதற்கு இதுவே காரணமாகும்.

---

1. Tho vocabulary may even be completely changed without any notable alteration in the language either in phonetic or grammatical structure.—J. Vendryes, Language, p. 306.

வெற்றிதோல்விகள்

ஒரு நாட்டை வென்று கைப்பற்றியவர் மிகச் சிறு பான்மையோராக இருப்பின், அவர்களின் மொழி மிக்க செல்வாக்கு உடையதாக இருந்தும், வென்ற நாட்டில் இடம் பெறுமல் போவதும் உண்டு. வென்ற சிறுபான் மையோர் தம் மொழியோடு பெரும்பான்மையோரின் மொழியையும் கற்று இரு மொழியினராக வாழத் தலைப் படுவர்; காளடைவில் அவர்களின் தாய்மொழியை நெகிழ விட்டு, அந்நாட்டு மொழியை மட்டுமே போற்றத் தொடங் குவர். இங்கிலாந்தை வென்ற நார்மன் வகுப்பார் தம் பிரெஞ்சு மொழியைக் கைவிட்டு ஆங்கிலம் கற்றுக் கலந்து விட்ட வரலாறு இதை உணர்த்தும்.[1]

இவ்வாறு அரசியலில் வென்றவர் மொழித்துறையில் தோல்வியுறக் காரணம், அரசியல் தவிர வேறு துறைகளில் அவர்கள் செல்வாக்குப் பெறுமல் இருத்தலேயாகும். அர சியலோடு சமயம் வாணிகம் கலை முதலிய துறைகளிலும் செல்வாக்குடன் விளங்கினால், மிகச் சிறுபான்மையோராக இருப்பினும் அவர்களின் மொழி வெற்றிபெற்று வாழ்தல் இயலும். வடநாட்டில் குடிபுகுந்த ஆரியர் சிறுபான்மை யோராக இருந்தபோதிலும், சமயம் முதலிய பல துறை களிலும் செல்வாக்குப் பெற்றமையால், அவர்களின் மொழி நிலைபெற முடிந்தது.

இரண்டு மொழிகள் இருந்த நாட்டில் ஒரு மொழி மறைந்து மற்றொரு மொழி மட்டும் வாழும் நிலைமை ஏற் பட்டபோதும், வாழும் மொழியில் மறைந்த மொழியின் சொற்கள் கலந்திருக்கக் காணலாம். இதுதவிர, இலக்கண அமைப்பு முதலியவற்றில் பொதுவாக மாறுதல்கள் ஏற்படு

1. L. Bloomfield, Language, p. 463.

வதில்லை. ஆயின் ஒன்று : மக்களிடையே இத்தகைய கலப்பு ஏற்படும்போது, மொழியில் இயல்பாக நடைபெற்று வரும் மாறுதல் மிக விரைவாக நிகழ்தல் உண்டு. கலப்பினால் அந்த மாறுதல் ஏற்படுவதில்லை; இயற்கையாக நடைபெறும் அந்த மாறுதல், கலப்பின் காரணமாக விரைந்து நிகழும். ஒரு நாட்டின் அரசியல் மாறுதல்கள் (படையெடுப்பு, குழப்பம், ஆட்சிமாறுதல் முதலியவை), அந்த நாட்டு மொழியை வேகமாக மாற்றும் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஆங்கில மொழியைக் கூறுவர் யெஸ்பர்ஸன். நாட்டு மக்களின் வாழ்வில் அமைதி நிலவும் போது, மொழியின் மாறுதல் மெல்ல நிகழும்; அவர்களின் வாழ்க்கை கொந்தளிப்புக்கும் குழப்பத்திற்கும் இரையாகும்போது, அது விரைவாக நிகழும். இந்தியாவின் தென் பகுதியில் நெடுங்காலமாக இருந்துவரும் தமிழ்மொழி பல நூற்றாண்டுகளாக மிகக் குறைந்த அளவான மாறுதலுடன் மெல்ல வளர, வடபகுதியில் உள்ள மொழிகள் சில நூற்றாண்டுகளில் பெரிய பெரிய மாறுதல்கள் உற்று விரைந்து மாறிவந்துள்ளதைக் காணலாம்.

ஒரு நாட்டின் ஆட்சியில் பெரிய மாறுதல் ஒன்றும் நேராமல் அமைதி நிலவும் காலத்திலும், நாட்டு மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்லாமலும் வெளிநாட்டு மக்கள் இந்நாட்டுக்குள் அடிக்கடி வராமலும் குறிப்பிட்ட எல்லைக்குள் கிடந்து வாழும் காலத்திலும், இந்நாட்டு மொழியில் மாறுதல் அவ்வாறு நேராது. வெளிநாடுகளில் இவர்கள் குடியேறிப் பரவும் காலத்திலும், வெளிநாட்டார் இங்குக் கலந்து பழகும் காலத்திலும், ஆட்சிமுறையில் மாறுதல் நேரும் காலத்திலும், சமயம் முதலிய துறைகளில் புதிய இயக்கங்கள் எழும் காலத்திலும், வாணிபம் முதலிய காரணங்களால் புதிய செல்வாக்குப் பெறும் காலத்திலும்

மொழியில் பல மாறுதல்கள் விரைவில் ஏற்படுதல் உண்டு.[1] மலையோரமான பகுதிகளிலும், பிறநாட்டாரின் போக்கு வரவு அற்ற தொலைவான மூலைப்பகுதிகளிலும் மக்களின் மொழியில் மாறுதல் அவ்வளவாக ஏற்படுவதில்லை. பல வகை மக்கள் கலந்து வாழ இடம் அளிக்கும் பெரிய நகரங் களிலும், பிறநாட்டு எல்லையை அணுகி அமைந்துள்ள நகரங்களிலும் மாறுதல் மிகுதியாக ஏற்படும்.

---

1. If history has any influence at all on linguistic evolution, it seems to be only that of accelerating the movement along the same lines as before; the languages of those nations whose lives have been most agitated by historical events (e.g. English) have gone farthest in evolution. Besides the more lively exchange of thought, mixture of races may count here for much.—Otto Jespersen, Progress in Language, p. 136.

முயற்சிச்சிக்கனம்

நீண்ட சொற்களைக் குறுக்கி ஒலிப்பது உலக மொழிகள் எல்லாவற்றிலும் உள்ளது. சோழநாடு, ஆதன் தந்தை முதலியவற்றைப் பழங்காலத்தில் சோணாடு ஆந்தை முதலிய வடிவங்களாக்கி ஒலித்தனர். இக்காலத்திலும் ஆய்விட்டது போய்விட்டது என்பவற்றை ஆச்சுது போச்சுது என ஒலிக்கின்றனர். இவ்வாறு சொற்களின் வடிவு குறுகுதலை மரூஉ என்பர் இலக்கண நூலார்.

ஒலிக்கும் முயற்சியில் இது குறுக்குவழி எனலாம்.[1] பேச்சுமொழி காலம் என்னும் ஓர் அளவுகருவி உடையது. ஒலிப்பதற்கு மிக்க நேரம் ஆகும் சொற்களைக் குறைந்த நேரத்தில் ஒலிக்கத் தக்கனவாக மாற்றுதலால், மரூஉ என்பது பயனுள்ள முயற்சிச்சிக்கனமாகக் கருதப்படுகிறது.[2]

பயின்று வழங்குவன

பலமுறை வழங்கத்தக்க சிறப்புடைய சொல் நீண்ட பல ஒலிகளால் ஒலிக்கவேண்டுவதாக இருக்கலாம்; ஆயின் பலமுறை வழங்கும் காரணத்தாலேயே அது நாளடைவில் குறுகிய வடிவுடையதாக ஆகிவிடும். ஒரு சொல் எவ்வளவுக்கு எவ்வளவு மிகுதியாகப் பேச்சில் பயில்கிறதோ அவ்

1. Abbreviation is actually a short-cut; and moreover, since the stream of speech knows no other arrangement than that of time, an abbreviation of speech is a short-cut in time. —G. K. Zipf, The Psycho - Biology of Language, p. 283.

2. What we call a word is really and primarily the combined action of human muscles to produce an audible effect;...We see that the shortening of a form means a diminution of effort and a saving of time in the communication of our thoughts.—Otto Jespersen, Language, p. 331.

வளவுக்கு அவ்வளவு அது குறுகிய வடிவம் பெறும். என்றே ஒருநாள் தேவைப்படும் பொன்னுங்கண்ணி கரிசலாங்கண்ணி முதலிய கீரைகளுக்கு நீண்ட பெயர்கள் அமையலாம்; ஆனால் நாள்தோறும் தேவைப்படும் வாழையிலைக்கு நீண்ட பெயர் வைத்தாலும் அது நிலைக்காது. என்றே ஒருநாள் வரும் விருந்தினரின் பெயர் நீண்ட ஒன்றாய் இருப்பின் அதை அவ்வாறே ஒலிப்போம். ஆனால், வேளைதோறும் பல முறை பழகும் நம் குழந்தையின் பெயர் நீண்டதாய் இருப்பின், அதை இரண்டொரு நாளிலேயே குறுகிய பெயராக்கிவிடுவோம். ஆகவே, நீண்ட வாக்கியம்போல் இருந்தாலும், பலகாலும் பயின்று வழங்கும் சொல்லானால், அதை ஈரசை மூவசைச் சொல்லாகக் குறுக ஒலித்தல் இயற்கை. 'கொண்டுபோய்விட்டான்' என்னும் வினைச்சொல் அடிக்கடி வழங்காதது. ஆதலின் அதை எவரும் குறுக ஒலிப்பதில்லை. இருக்கிறது, போய்விட்டது, ஆய்விட்டது முதலிய வினைச் சொற்கள் அன்றாடப் பேச்சில் பலமுறை வருவன. ஆதலின், இருக்குது (இருக்கு), போச்சுது (போச்சு), ஆச்சுது (ஆச்சு) முதலிய வடிவங்களாகக் குறுகி வழங்குகின்றன. எனவே, ஒரு சொல்லின் பயிற்சிமிகுதியை ஒட்டி அதன் வடிவும் குறுகும் எனக் காணலாம்.[1]

1. A subject (or other syntactical unit) is a configuration which may express a degree of articulatedness of meaning which is high or low, and the degree of articulatedness of meaning will be reflected by a corresponding degree of crystallization of the configuration, which is equitable with relative frequency of occurrence. When the configurational arrangement of a subject is sufficiently highly crystallized to be a word, that word is a noun or pronoun; when less crystallized to be a word, that word is a noun or pronoun; when less crystallized it is a phrase or a clause.—G. K. Zipf, The Psycho-Biology of Language, p. 236.

'இன்றியமையாதது' என்பது தமிழ்ச்சொல். அது கருத்தை உணர்த்த இன்றியமையாத சொல்லேயாகும். ஆயின் நீண்ட சொல்லாய் ஒலித்தற்கு அரியதாய் உள்ளமையால், முக்கியம் என்ற வடசொல் அதைவிடக் குறுகிய வடிவில் வந்தவுடன், தமிழ்மக்கள் அதைப் போற்றத் தொடங்கினர். குடும்பத்துச் சான்றோர் ஒரு சிறுவனுக்கு ஒலிப்பதற்கு அரிய பெயரை வைத்திருந்தால், அவனுடைய தாய் அதைவிட்டுத் தன் நாவிற்கு இசைந்த சிறு பெயர் வைத்து வழங்குவதைப் போன்றது இது.

எண்ணுப்பெயர் முதலியன

சொல்லின் வடிவு நீண்டிருப்பின் அது பயின்று வழங்காத சொல் என்று அறியலாம்; சொல்லின் வடிவு குறுகியிருப்பின், அது பயின்று வழங்கும் சொல் என்று கொள்ளலாம். எனவே, சொல்லின் வடிவிற்கும் அதன் பயிற்சிக்கும் ஒருவகைத் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.[1] மொழியில் பயின்று வழங்கும் மூவிடப் பெயர்களும் (யான் யாம் நீ முதலியவை) எண்ணுப் பெயர்களும் (ஒன்று, இரண்டு, மூன்று முதலியவை) உலகத்தில் உள்ள எல்லா மொழிகளிலும் ஓரசை ஈரசைச் சொற்களாகவே இருத்தல் இதனை விளக்குகின்றது.

பேச்சுவழக்கில் உள்ள மொழிகளில் எண்ணுப் பெயர்கள் மிகப் பயின்று வழங்குவதால், வடிவம் குறுகி ஓரசைச் சொற்களாக உள்ளன. ஆங்கிலத்தில் ஏழு

1. It can be shown that the length of a word, far from being a random matter, is closely related to the frequency of its usage—the greater the frequency, the shorter the word. It can furthermore be shown either from speech-sounds, or from roots and affixes, or from words or phrases, that the more complex any speech-element is phonetically, the less frequently it occurs.—G. K. Zipf, The Psycho-Biology of Language, p. v.

(seven) என்ற எண்ணுப்பெயர் தவிர, மற்ற ஒன்பது எண்ணுப்பெயர்களும் ஒரசைச் சொற்களே. இந்தியில் முதல் பத்து எண்ணுப்பெயர்களும் ஒரசைச் சொற்களே. தமிழில் குற்றியலுகரம் நீக்கிப் பார்க்கும்போது, இரண்டு ஒன்பது என்னும் இரண்டு எண்ணுப் பெயர்களே சிறிது நீண்ட வடிவில் உள்ளன. சங்க இலக்கியமும் அதன் தொடர்பான எழுத்துவழக்குகளும் இல்லாதிருந்தால், இவைகளும் குறுகிய வடிவு பெற்றிருக்கும். இலக்கியம் இவற்றின் பழைய வடிவத்தையே காக்க முயல்வதால், குறுகும் முயற்சி வெற்றி பெறவில்லை.[1]

பேச்சு மொழியில் இரண்டு என்று ஒலிக்காமல் ரெண்டு என்று ஓர் உயிர் குறைத்தே ஒலிக்கின்றனர். இலக்கிய மொழியே பழைய வடிவத்தைக் காத்து வருகிறது.

வேற்றுமை உருபுகள், விகுதிகள் முதலியவை ஒவ்வொரு வாக்கியத்திலும் திரும்பத் திரும்ப வரக்கூடியவை. தனித்து வழங்கும் ஆற்றல் இல்லாத இவை பயிற்சி மிக்கவை என்பர் சிப் என்னும் அறிஞர்.[2] அதுபற்றியே இவற்றின் வடிவங்களும் மிகச் சிறியவையாக—பெரும்பாலும் ஓரசையாக உள்ளன என்பர். ஐ, கு, ஆல் முத

1. Literature has the effect of retarding the tendencies of change in language by keeping older forms alive for a longer time than if language was only transmitted orally.—Otto Jespersen, Progress in Language, p. 136.

A literary dialect is naturally less subject to the inroads of decay than an unwritten one.—A. H. Sayce, Introduction to the Science of Language, p. 196.

2 The least independent elements are also the relatively more frequent; and by the law of abbreviation, the more frequent are the shorter.—G. K. Zipf, The Psycho-Biology of Language.

லிய உருபுகள் கணக்கற்ற முறை சொற்களுடன் சேர்ந்து வழங்குகின்றன. அன் ஆன் அள் ஆள் அர் ஆர் முதலிய விகுதிகள் இல்லாமல் ஒரு வாக்கியமும் இல்லை என்னும் அளவிற்கு அவைகளும் பயின்று வழங்குகின்றன. தொடக்கத்தில் அவ்வுருபுகளும் விகுதிகளும் தீண்ட சொற்களாக வழங்கியிருத்தல் கூடும். மிகுதியாகப் பயிலப் பயிலக் குறுகிய வடிவங்களை—ஓரசை வடிவங்களைப்—பெற்றன. அவை ஓரசைச் சொற்களாகவே மிகப் பழைய இலக்கியத்திலும் காணப்படுவதற்குக் காரணம், அவை மிக மிகப் பயின்று பேச்சிடையே வழங்குதலே ஆகும். எல்லா மொழிகளிலும் இத்தகைய சொற்கள் இவ்வாறு குறுகியிருத்தலைக் காணலாம்.

கச. ஒலித்திரிபு

சிலவிதிகள்

ஒலி, மனிதனின் உடலே ஒட்டி அமைவதாகும்; நா முதலிய உறுப்புக்களின் அசைவையும் மாறுதல்களையும் ஒட்டிப் பலவகை ஒலிகள் அமைகின்றன. சொல்லிலக்கணமும் சொற்றொடர் நிலக்கணமும் உடலியலோடு தொடர்பு இல்லாதவை. அவை உள்ளத்தின் போக்கை ஒட்டி அமைவனவாகும்; உள்ளம் பலவகையாய் மாறும் இயல்பினது ஆகையால், சொல்லிலக்கணமும் சொற்றொடர் நிலக்கணமும் பலவகையாக அமைந்துள்ளன. உடல் அவ்வாறு வேறுபடாமல், குறித்த சில இயற்கை விதிகளுக்குக் கட்டுப்பட்டிருத்தலால், உடலுறுப்புக்களே ஒட்டிப் பிறக்கும் ஒலிகளும் சில விதிகளுக்குள் அடங்குவனவாக உள்ளன.

ஒலி வேறுபாடுகள்

மொழிக்கு மொழி ஒலிகளில் உள்ள வேறுபாடுகள், சொற்களிலும் சொற்றொடர்களிலும் உள்ள வேறுபாட்டைவிட மிகக் குறைந்தனவே ஆகும். அடிப்படையான ஒலிகள் ஏறக்குறைய எல்லா மொழிகளிலும் ஒருதன்மையாகவே உள்ளன. வேறுபாடு எந்த அளவிற்கு எனின், நா முதலிய உறுப்புக்களால் ஒலிக்கக்கூடிய ஒலிகளுள், சில மொழிகள் சில ஒலிகளே ஆளாமல் விட்டுவிடுகின்றன; வேறு சில மொழிகள் சில ஒலிகளில் பயிலாமல் விட்டுள்ளன; சில மொழிகளில் குறித்த சில ஒலிகள் மட்டும் மிகுதியாகப் பயின்றுள்ளன; வேறு சில மொழிகளில் இன்னும் சில ஒலிகள் அடிக்கடி ஒலிக்கப்படுகின்றன. தமிழ்மொழி ழகரம், றகரம் முதலிய ஒலிகளைப் போற்றுகிறது. இந்தி முதலிய மொழிகள், ஹ, ஸ, ஷ

முதலிய ஒலிகளை மிகுதியாகக் கையாள்கின்றன. ஆஸ்திரேலிய மொழிகளில் ஹ ஸ என்னும் ஒலிகளே இல்லை;[1] வடமொழியில் எகர ஒகரக் குற்றுயிர்கள் இல்லை. சில மொழிகள் மென்மையான ஒலிகள் கிரம்பியனவாக உள்ளன; சில மொழிகள் வல்லொலிகள் மிக்கு வர அமைந்துள்ளன. சில மொழிகளில் சொற்களின் இறுதியில் இன்ன ஒலிகள் வரலாம், இடையில் இன்ன ஒலிகள் சேர்ந்து வரலாம் என்ற வரையறை உண்டு; சில மொழிகளில் அத்தகைய வரையறை இல்லை. இவ்வாறு ஒலிகளைக் கொள்ளுதலிலும் தள்ளுதலிலுமே மொழிக்கு மொழி வேறுபாடுகள் காணப்படும்.

மனிதன் முயன்றால் கணக்கற்ற ஒலிகளை ஒலிக்கமுடியும் என்றும், அவற்றில் ஒரு சிலவற்றையே (இருபது முதல் ஐம்பது ஒலிகள் வரையிலேயே) பேச்சுமொழிக்குப் பயன்படுத்துகிறான் என்றும் விட்னே கூறுகிறார்.[2] ஒலிப்பதற்கு எளிய ஒலிகளாகவும் ஒன்றிலிருந்து ஒன்று தெளிவாக வேறுபட்டு ஒலிப்பனவாகவும் உள்ளவற்றை மட்டும் மக்கள் பேச்சுமொழிக்குப் பயன்படுத்துகின்றனர்; மற்றவற்றை மொழிக்குப் பயன்படுத்தாமல் விட்டுவிடுகின்றனர்.

இயற்கையும் காரணம்

இயற்கையோடு போராடிப் பாடுபட்டு வாழவேண்டியுள்ள மக்களின் பேச்சில் அரிய ஒலிகள் பல இருக்

1. Their (Australian languages') phonetics are extremely simple, possessing neither sibilants nor aspirates.—Abel Hovelacque, The Science of Language, p. 67.

2. Of the indefinite number of distinguishable sounds which it can produce, only a fraction, of twelve to fifty, are put to use in any one language.....From among the many possible, these have chanced to be taken, mainly the sounds easiest to make, and broadly distinguished from one another. —Whitney, The Life and Growth of Language, p. 293.

கின்றன. இயற்கையோடு போராடாமல், இயற்கையின் இன்பத்தில் திளைத்து இனிது வாழும் மக்கள் பெருமுயற்சி இல்லாமல் எளிதில் ஒலிக்கும் ஒலிகளைமட்டும் தங்கள் மொழியில் கொண்டுள்ளனர். பனியும குளிரும் மிகுந்த நாடுகளில் இயற்கையோடு மக்கள் மிகப் போராடி வாழ வேண்டியுள்ளது. அங்குள்ள மொழியில் சொல்லின் முதலில் இரண்டு மூன்று மெய்கள் கூடி வருதலும் சொல்லின் இறுதியிலும் அவ்வாறே வருதலும் காணலாம்.

"Strength" என்ற ஆங்கிலச் சொல்லில் முதலில் மூன்று மெய்யும் இறுதியில் நான்கு மெய்யும் ஒலித்தல் காண்க. ஒலிப்பதற்கு அரியனவாக உள்ள ஒலிகள் சொல்லின் முதலிலும் முடிவிலும் வருதலும் காணலாம். தட்பவெப்பம் ஏற்றவாறு அமைந்து போராட்டம் இன்றி அமைதியாக வாழும் இயற்கையமைப்பு உள்ள தமிழ்நாட்டில் மக்கள் அரிய ஒலிகளை நீக்கி எளிய ஒலிகளை மட்டும் ஒலித்துவருகின்றனர். தமிழ்ச் சொற்களில் இன்ன எழுத்துக்கள் முதலில் வராதவை, இன்ன எழுத்துக்கள் இறுதியில் வராதவை, இன்ன இன்ன எழுத்துக்கள் கூடிநிற்காதவை என்று பற்பல விதிகள் உள்ளன. பெரு முயற்சி இல்லாமலே சொற்களை ஒலிப்பதற்கு உதவும் விதிகள் தமிழில் உள்ளன. பாக், பாய்ச், பாட், பத், துப், காற் என்று வல்லொலிகள் இறுதியில் அமைந்தால், ஒலிக்கும் முயற்சி அரிதாகின்றது. குற்றியலுகரம் சேர்த்து, பாக்கு, பாய்ச்சு, பாட்டு, பத்து, துப்பு, காற்று என முயற்சியை எளிதாக்குவது தமிழ்வழக்கு. அதனாலேயே, இங்கிலாந்து, கிறிஸ்து முதலியன ஈற்றில் உகரம் பெறுகின்றன.

ஹவாய் மொழியில் இத்தகைய எளிய ஒலிமுறை இருத்தலைக் கண்ட அறிஞர் யெஸ்பர்ஸன், இம்மொழி இசைநயமும் இன்பமும் நிரம்பியதாயினும், அதன்

எளிமை நோக்கின், குழந்தைத் தன்மை உள்ளது என்றும் பெண்தன்மை உள்ளது என்றும் குறிப்பிடுகிறார்.[1] இத்தகைய மொழியைப் பேசுவோரிடம் ஆற்றலும் எழுச்சியும் எதிர்பார்க்க இயலாது என்றும், கதிரவன் ஒளி நிரம்பி மண்வளம் கொழிக்க உழைப்புத் தேவையில்லாது வேண்டிய பயனை அளிக்கும் நாட்டில் வாழ்வோருக்கு ஏற்றது போல் இம்மொழி உள்ளது என்றும் கூறுகிறார். ஆங்கிலம் போல் சொல்லின் முன்னும் பின்னும் கூட்டொலிகள் மிகுந்து ஒலிக்க அரிதாக உள்ள மொழியே மக்களின் ஆண்மைக்கும் ஆற்றலுக்கும் அறிகுறியானது என்பது அவர் கருத்து. ஆயின், ஆங்கிலத்திலும் அரிய ஒலிகளை எளிமைப்படுத்தும் போக்கே உள்ளது. know, gnaw முதலிய சொற்களில் முதலில் உள்ள கூட்டொலியில் ஒரு மெய்யை ஒலிக்காமல் விடுதலும், night, thought முதலிய சொற்களில் இடையில் உள்ள ஒரு மெய்யை (g) ஒலிக்காமல் விடுதலும், honour, hour முதலியவற்றில் ஹகர ஒலியை ஒலிக்காமல் விடுதலும் இந்த எளிமைப் போக்கையே புலப்படுத்துகின்றன.

பொருள்தெளிவு

ஒலிகளில் நேரும் மாறுதல்கள் பேசுவோரின் கருத்தின்றியே நிகழ்வன; ஒலிக்கும் உறுப்புக்கள் அந்த மொழியை எவ்வாறு ஒலித்துப் பழகியுள்ளனவோ அம்முறைக்கு ஏற்ப ஒலிகளில் மாறுதல்கள் நேரும். ஆகவே அத்தகைய மாறுதல்களில் ஒழுங்கான சில விதிகள் உண்டு எனலாம்.[2]

---

1. Otto Jespersen, Growth and Structure of the English Language, p. 3.

2. Phonetic changes doubtless take place mechanically, independent of the will or even of the knowledge of the

ஒலிநயம் காரணமாகவே சொற்கள் திரிகின்றன என்பர். ஒலிநயம் என்பது என்ன? பேசுவோர் பழகிய ஒலிமுறைப்படி ஒலிப்பதற்கு நன்கு இயைந்து வருதல் ஒலி நயமாகும். ஆயின், கேட்பவர் உணர்ந்துகொள்வதற்கும் எளிதாக இருந்தால்தான் அந்த ஒலிநயம் போற்றப்படும். கேட்பவர்க்குப் பொருள்தெளிவு குறைந்துவிடுமாயின், அத் திரிபு போற்றப்படாது. ஆகவே பேசுவோர் தம் சோம்பலாலேயே அவ்வாறு திரித்துக் கூறுகின்றனர் என்பது பொருந்தவில்லை.

ஒலிகள் திரிவதில் மனத்தின் முயற்சி இல்லை. நா முதலிய உறுப்புக்களே படிப்படியாக ஒலியைத் திரித்து அமைக்கின்றன. சேர்ந்து நிற்கும் பல ஒலிகளும் வெவ்வேறு வகையாக—ஒன்றற்கொன்று மாறுபட்ட ஒலிகளாக—இருப்பின், ஒலிக்கும் முயற்சி பெரிதாகும். ஓர் ஒலியை அடுத்துவரும் மற்றோர் ஒலி அதன் இனமாக, அல்லது அதற்கு இயைந்ததாக அமைந்தால் இரண்டையும் சேர்த்து ஒலித்தல் எளிதாகும். இந்த எளிமை நோக்கியே ஒலிகள் திரிகின்றன.[1] இத்தகைய திரிபு ஓர் எல்லைவரையில்தான் நடைபெறக்கூடும். அந்த எல்லையாவது, சொல்லின் பொருள் மாறுமலும் மயங்காமலும் இருத்தலாகும். ஒலியின் திரிபால் பொருள்மாற்றமோ, பொருள்மயக்கமோ நேருமாயின், திரிபு நிகழ்வதில்லை. அதனால் ஒலித்திரிபுக்

---

speaker, but with a regularity so limited in principle and a variety so disconcerting in results that one can hardly rediscover in it any of the characteristics of a given type of language.—J. Vendryes, Language, p. 307.

1. Euphony depends not only on custom, but even more on ease of articulation and on ease of perception: What requires intricate or difficult movements of the organs of speech will always be felt as cacophonous, and so will anything that is indistinct or blurred.—Otto Jespersen, Language, p. 278.

குக் காரணம், பேசுவோரின் வாய்மட்டும் அன்று; கேட்போரின் செவியும் எல்லை வரையறுப்பதன் வாயிலாகக் காரணமாகின்றது. அதனால்தான் 'ஐந்து' என்னும் சொல் 'அஞ்சு' எனத் திரிந்த போதிலும் 'அச்சு' எனத் திரிவதில்லை; 'போய்விட்டது' என்பது 'போச்சு' எனத் திரிந்தபோதிலும் 'போத்து' எனத் திரிவதில்லை.

பொருள் தெளிவுக்கு இடையூறுயின், ஒலித்திரிபு நேர்வதில்லை. இடையூறு இல்லாதவிடத்தில் மட்டும் திரிபு நேரும்.[1] அவன் வந்தான் என்னும் வாக்கியத்தில் வினை முற்றின் இறுதியில் உள்ள னகரம் தெளிவாக ஒலிக்கப் படுவதில்லை. 'வந்தா' என்பதுபோல் ஒலிக்கப்படுகிறது. இறுதியில் உள்ள 'ஆன்' விகுதி ஆண்பாலை உணர்த்துவது. 'அவன்' என்ற சுட்டே அதை உணர்த்துவதால், வினைச் சொல்லும் அதை இரண்டாம் முறையாக உணர்த்தவேண் டுவதில்லை. வேண்டாத ஒன்று படிப்படியாக ஒலியழுத்தம் இழந்து, நாளடைவில் ஒலிக்கப்படாமலே போகும். வாக் கியத்தில் ஒவ்வொரு சொல்லும் நிற்கும் இடம் இன்னது இன்னது என்று பழக்கத்தால் வரையறுக்கப்பட்டிருப் பதால், இறுதியில் உள்ளது வினைமுற்று என்பது தெளிவா கிறது. ஆகவே, 'வந்தான்' என்பதன் விகுதி ஒலிக்கப் படாமல் விடப்படினும், பொருள் தெளிவாக விளங்குவ தால் அவ்வாறு செய்கின்றனர்.

நா முயற்சி

'ஐந்து' என்பதை 'அஞ்சு' எனத் திரித்து ஒலிப்ப தைக் கொண்டு, நகரமும் தகரமும் ஒலித்தற்கு அரியவை

1. People do not pronounce distinctly unless they feel that distinctness is necessary if they are to be understood; whatever is easily understood from the context or from the situation is either slurred over or left out completely. —Otto Jespersen, Progress in Language, p. 55.

என்றும், ஞகரமும் சகரமும் எளியவை என்றும் கொள்ள லாகாது. ஐ என்ற ஒலியுடன் சேர்ந்து ஒலிக்கும்போது நகரமும் தகரமும் ஒலித்தற்கு அரியவையாக உள்ளன. ஐ பிறக்கும்போது நாவின் நிலை இன்னது எனக் கண்டு, நகரமும் தகரமும் பிறக்கும்போது நா நிற்கும் நிலை யையும் கண்டால் காரணம் புலனாகும்.

இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன
அவைதாம்
அண்பல் முதல்நா விளிம்புற வுடைய[1]

அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்
தாம்இனி து பிறக்கும் தகார நகாரம்[2]

எனத் தொல்காப்பியனார் ஓதியுள்ளார். பல்லின்மேல் உள்ள அண்ணத்தை நாவின் அடி விளிம்பு பொருந்துவ தால் ஐகாரம் பிறந்த பிறகு, நாவின் நுனி பரந்து பல்லை ஒற்றுதல் (த, ந பிறத்தல்) அரிய முயற்சியாக உள்ளது. ஆயின், ஐகாரம் ஒலித்த அதே முயற்சியைத் தொடர்ந்து, இடைநாவும் இடையண்ணமும் பொருந்தி நிற்க ஞகரமும் சகரமும் ஒலித்தல் எளிதாக உள்ளது.

சகார ஞகாரம் இடைநா அண்ணம்[3]

எனத் தொல்காப்பியனார் ஓதுதலையும் எண்ணிக் கருதலாம்.

இந்த நகரமும் தகரமும் 'தந்து' என்ற சொல்லில் ஒலித்தற்கு அரியனவாக இல்லை. அகரம் அங்காந்து ஒலிக் கும் முயற்சியுடையது. ஆதலின், அதனை அடுத்து நகர மும் தகரமும் பிறக்குமாறு ஒலிக்கும் முயற்சி எளிதாகவே

1. தொல். எழுத்து. 86.
2. ,, 93.
3. ,, 90.

அமைகின்றது. அதனால்தான், 'தந்து' என்பது 'தஞ்சு' எனத் திரியவில்லை. 'வைத்த' என்பது 'வைச்ச' எனத் திரிவதற்கும், 'எடுத்த' என்பது 'எடுச்ச' எனத் திரியாமைக்கும் இவைகளே காரணம் ஆகும்.

'ஐந்து' என்பது 'அஞ்சு' எனத் திரிந்தால், பொருள் மயக்கம் இல்லையோ எனலாம். 'ஐந்து' என்னும் பொருளுடைய 'அஞ்சு' பெயர்ச்சொல்; எண்ணை உணர்த்துவது. 'நீ அஞ்சு' என்பதில் உள்ள 'அஞ்சு' என்பது வினைச்சொல்; அச்சம்கொள் என்று தொழிலை உணர்த்துவது. ஆதலின், மயக்கம் நேர இடமில்லை. இடமிருந்திருப்பின், இத் திரிபு நேர்ந்திருக்காது. சில புத்தகங்களைக் காட்டி 'அஞ்சு' எனக் கூறப்பட்டபோது, அஞ்சுகின்றவனும் இல்லை. ஒரு புற்றைக் காட்டி 'அஞ்சு' என்று கூறப்பட்டபோது ஒன்று இரண்டு என எண்ணுகின்றவனும் இல்லை. சொற்கள் வாக்கியங்களில் இயைந்து மூன்னும் பின்னும் உள்ளவற்றோடு பொருந்திப் பொருள் உணர்த்தும்போது, இத்தகைய மயக்கத்திற்கு இடம் இல்லை.

அதுபோலவே, ஒலித்திரிபிலும் தனி ஓர் ஒலி ஒலித்தற்கு அரியது என்றோ எளியது என்றோ ஆராய்வதில் பயன் இல்லை. பழகிவிட்ட பிறகு அரிய ஒலியும் எளிதாகின்றது. பழகாத நிலையில் எளிய ஒலியும் அரிதாகின்றது. ஒரு சொற்றொடரில் அல்லது சொல்லில் அமைந்த ஓர் ஒலி, முன்னும் பின்னும் உள்ள மற்ற ஒலிகளோடு சேர்ந்து ஒலிக்கப்படும்போது, முயற்சி எளிதாக உள்ளதா அரிதாக உள்ளதா என்பதே ஆராயத்தக்கது.

சிக்கனமான முயற்சி உடையதாயின், அது ஒலிநயம் உடையது எனப் போற்றப்படுகிறது. ஒலிப்பதற்குத்

துன்பமான ஒன்றில் இனிமையோ நயமோ இருப்பதாகக் கூறமுடியாது அன்றோ? ஆகவே ஒலிநயத்திற்கு அடிப்படை முயற்சிச்சிக்கனம் ஆகின்றது. முயற்சிச்சிக்கனம் என்பதைவிட முயற்சிஎளிமை என்பது தெளிவாக உள்ளது. ஏன் எனின், க்றைஸ்த், இங்க்லாந்த் என்பவை சுருங்கிய முயற்சி உடையவைகளாக இருக்கலாம்; ஆயின், தமிழர்நாவிற்கு அவை எளியவை அல்ல; கிறிஸ்து, இங்கிலாந்து என்பவை நீண்ட ஒலிகளாக இருப்பினும், முயற்சி எளிமை உடையவை. ஆதலின், தமிழர் இவற்றையே போற்றுகின்றனர்.

சோம்பல்

முயற்சிஎளிமை அல்லது முயற்சிச்சிக்கனம் என்பது சோம்பல் காரணமானது என்று சிலர் கூறுவர். வேறு எந்தத் துறையில் சோம்பல் உடைய மனிதனும் பேச்சுத் துறையில் சோம்பல் உடையவன் அல்லன். ஆகவே, குறைந்த நேரத்தில் குறைந்த முயற்சியில் நிறையப் பேச வேண்டும் என்னும் ஆசையே, முயற்சிச் சிக்கனத்திற்குக் காரணம் ஆகும்.[1]

சோம்பல் உள்ளதை இழப்பதற்குக் காரணமாவது; இந்த முயற்சிச் சிக்கனம் அல்லது முயற்சிஎளிமை ஊதியம் கருதுவது; குறைந்த நேரத்தில் நிறைந்த பயனைக் காண விரும்புவது. சில மைல் நடப்பதற்கே தயங்குகிறவன் சோம்பல் உடையவன்; குறுக்கு வழிகளில் நடந்து சென்று நெடுந்தொலைவைக் கடக்கத் தளராமல் உழைப்

1. Economy of effort is sometimes called laziness, but the two terms are by no means synonymous. Economy of effort attains the result aimed at by the shortest means. Laziness produces either a mediocre result or not at all. —G. Noel-Armfield, General Phonetics, p. 46.

பவன் முயற்சிச்சிக்கனம் உடையவன். பேச்சுமொழியில் ஒலிகளைக் குறைத்துப் பேசுபவன், இத்தகைய சிக்கனத்தைப் போற்றி, உள்ள நேரத்தில் மிகப் பல கருத்துக்களைப் பேச விரும்புகிறவனாக உள்ளான்.

மாறி அமைதல்

மொழியின் ஒலியில் மாறுதல் ஏற்பட அடிப்படைக் காரணம் என்ன? பேசும் ஒவ்வொரு மனிதனும் வளர்ச்சி உடையவன்; நேற்று இருந்தது போல் இராமல் இன்று சிறிது மாறி அமைபவன்; மெல்ல மெல்ல மிக மிகச் சிறு அளவிலேனும் மாறுதலுக்கு இடம் தருபவன்; உடலில் ஏற்படும் மாறுதல் போலவே, மனத்திலும் சிறுசிறு வளர்ச்சியும் அதனால் மாறுதலும் அடைபவன். உடலுறுப்புக்களும் உள்ளக் கருத்துக்களுமே மொழி வழங்கக் காரணமாக இருப்பவை. ஆகையால், அந்தச் சிறுசிறு மாறுதல்கள் அவன் அறியாமல் மொழியிலும் மெல்ல மெல்ல ஏற்படுகின்றன. இப்படித் தனி ஒருவனுடைய பேச்சில் நிகழும் மிகச் சிறு மாறுதல், சமுதாயத்திற்குப் பொதுவாக உள்ள பொதுமொழியைப் படிப்படியாகச் சாரும். இவ்வாறு தனி மனிதர் பலருடைய பேச்சில் நிகழும் மாறுதல்கள் நாளடைவில் பொதுமொழியில் ஏற்படுகின்றன. இதுவே மாறுதலுக்கு அடிப்படைக் காரணமாகும்.

மொழியின் மாறுதலுக்கு இரண்டாவதாகக் கூறத்தக்க காரணம் இதுவாகும்; மொழி என்பது ஒருவரிடமிருந்து மற்றொருவர் கற்றுக்கொண்டு பேசுவதாகும். ஒருவரிடமிருந்து மற்றொருவர்க்கு மாறும்போது, முன்னவர் பேசியபடியே பின்னவர் பேசுவார் என்று எதிர்பார்க்க முடியாது. கற்பவர் தம் மனநிலைக்கும் செவி நா முதலிய

புலன்களின் நிலைக்கும் ஏற்றவாறே கற்க முடியும். அவர் மனநிலையும் இவர் மனநிலையும் ஒத்திருக்க முடியாது. அவருடைய புலன்களின் வளர்ச்சி போலவே, இவருடைய புலன்களின் வளர்ச்சி அமைய முடியாது. ஆகவே, அவரிடமிருந்து இவரிடம் வரும் மொழியில், சிறு சிறு மாறுதல்கள் ஏற்படுதல் இயற்கை.

அவ்வாறு கேட்டுக் கற்பதிலேயே குறை உள்ளது; தவறு நேர இடமுள்ளது. பேசுபவரின் வாயிலிருந்து கேட்பவரின் செவியில் விழும்போது, தெளிவாகக் கேட்காமையால் நேரும் மாறுதல்கள் சில. ஒருவர் கேட்டுக் கற்ற மொழியை அவர் அரைகுறையாக நினைவில் வைத்திருந்து மற்றவர்க்குக் கற்பிக்க, அதனால் நேரும் தவறுகள் சில. ஆகவே, மொழியில் சொற்களிலும் சொற்பொருள்களிலும் தலைமுறைக்குத் தலைமுறை சில மாறுதல்கள் நேர்வது இயற்கை.[1]

இவ்வாறு ஒலித்திரிபுகள் மொழிகளில் நேர்ந்தவண்ணம் இருப்பதால், முன்னோர் ஒலித்தவாறே நாமும் ஒலிக்கின்றோம் என்று கூற இடம் இல்லை. அறிஞர் விட்னேயின் கருத்துப்படி, ஷேக்ஸ்பியர் இப்போது வந்து தம் நாடகத்திலிருந்து ஒரு காட்சியைப் படிப்பாராஞல், அதை நாம் விளங்கிக்கொள்ள முடியாதாம்; ஆங்கிலச் சொற்களை ஒலிக்கும் முறை இக்காலத்தில் அவ்வளவு வேறுபாடு

1. Tradition is by its very nature imperfect and inaccurate. No one has ever yet been able to prevent what passes from mouth to ear from getting altered on the way.....And all through the life-long process of learning one's mother tongue, one is liable to apprehend wrongly and to reproduce inexactly.—Whitney, The Life and Growth of Language, p. 98.

அடைந்துள்ளது என்கிறார்.[1] ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆல்பிரட் அரசர் (King Alfred) பேசிய மொழி—ஆங்கிலோ-சாக்ஸன் என்று கூறப்படும் அந்தப் பழைய மொழி—ஆங்கிலத்தின் தாயாகக் கருதப்பட்ட போதிலும் இன்று உள்ள ஆங்கிலேயர் உணர முடியாதது என்கிறார்.

கேடு அன்று

ஒலித்திரிபுகள் இயற்கை என்று இக்காலத்து மொழியியல் அறிஞர் பலர் கருதுகின்றனர். ஆயின், சென்ற நூற்றாண்டின் அறிஞர் சிலர் ஒலித்திரிபுகள் மொழிக்குக் கேடு செய்வன என்னும் கருத்துடன் அவற்றை மிக வெறுத்துவந்தனர். அவர்களுள் மாக்ஸ்முல்லர் ஒருவர். மக்களின் மொழியின் இன்றியமையாத பண்பு இத்தகைய ஒலித்திரிபுகளால் வீணாக இழக்கப்படுகிறது என்று அவர் வருந்தினர். ஒவ்வொரு சொல்லும் ஒலிக்கூறும் தெளிவாக ஒலிக்கப்பட்டு நிறைந்த பொருளுணர்ச்சியோடு விளங்குவதற்கு ஒலித்திரிபுகள் கேடு செய்கின்றன என்றும், இலக்கண வேறுபாடுகளை உணர்த்தும் விகுதிகள் முதலியவை ஒரு மாறிக் கெடுமாறு செய்கின்றன என்றும் அவர் எடுத்துக்காட்டினார்.[2] மூன்றுபத்து என்னுமல் முப்பது என்று திரித்தது போன்றவை அவர் வெறுப்புக்கு ஆளாயின போலும். இக்கால மொழியியல் அறிஞரோ, அவர் கூறிய

1. Whitney, The Life and Growth of Language, p. 33.

2. As soon as phonetic corruption shows itself in a language, that language has lost what we considered to be the most essential character of all human speech, namely that every part of it should have a meaning.....Phonetic corruption leads to the first appearance of so-called grammatical forms (grammatical terminations).—Max-Muller, The Science of Language, p. 47.

வற்றை மறுத்து, மாறுதல் இயற்கை என்றும், தடுக்கமுடியாதது என்றும் கூறுவர். ஒலித்திரிபுகளால் பொருளுணர்ச்சி ஒருசிறிதும் கெடுவதில்லை என்றும், ஒலிக்கும் முயற்சி எளிமையாகி மொழி சிறந்த கருவியாக விளங்குகிறது என்றும் வலியுறுத்துகின்றனர்.[1]

மூவகை

ஒலியில் நிகழும் மாறுதல் மூவகைப்படும். தோன்றல் திரிதல் கெடுதல் என அவற்றை இலக்கண நூலார் குறிப்பர்.

ஒலித்தற்கு அரிய ஒலிகளாக உள்ளவற்றை—பழக்கப்பட்ட ஒலிகளோடு இயைந்து வராதவற்றை—ஒலிக்காமல் விடுதலும் உண்டு; மாற்றி ஒலிப்பதும் உண்டு. ஒலிக்காமல் விடின் 'கெடுதல்' என்னும் விகாரமாகும். மாற்றி ஒலிப்பின் 'திரிதல்' எனப்படும். பொருள் தெளிவாக உணரப்படும்பொருட்டு, உள்ள ஒலியுடன் வேறொன்றைச் சேர்த்தலும் உண்டு. அது 'தோன்றல்' எனப்படும்.

---

1. Since modification and change is a law of language, it was inevitable that, in proportion as they developed, languages should diverge further and further from this primitive ideal. —J. Vendryes, Language, p. 345.

We must resign ourselves to accepting change, which is inevitable, and not indulge in regrets for a golden age, as vain in linguistics as in everything else.—Ibid, p. 346.

கரு. இலக்கிய மொழியின் செல்வாக்கு

சிறப்புமொழி

ஒவ்வொரு மொழியிலும் இலக்கியத்திற்கெனப் போற்றப்படுவது ஒருவகைச் சிறப்புமொழி (special language) என்பர். அறிஞர்களும் செல்வாக்கு உள்ளவர்களும் மட்டும் போற்றும் மொழியாக அது ஒதுங்கி வளர்வதால், நாளடைவில் மக்களின் பொதுமொழியிலிருந்து வேறுபட்டு நிற்கிறது. மக்களின் மொழி விரைந்து மாறுவது; இலக்கிய மொழி விரைந்து மாறுதது.[1] ஆதலின் இரண்டற்கும் இடையே வேறுபாடு வளர்கிறது. வேறுபாடு பெருகப் பெருக, இலக்கிய மொழி மக்களுக்கு எட்டாத தனி மொழியாக ஒதுங்கிவிடுகிறது; காலப்போக்கில் இறந்த மொழியாக அல்லது இறந்த மொழிபோல் கருதப்படுகிறது. பேச்சுமொழி மக்களின் அன்றாடத் தேவைகளை ஒட்டி மாறி வளர்ந்து, பெரும்பாலோர்க்கு உரிய கருவியாகப் பயன்படுகிறது. இலக்கிய மொழி, கலையுளம் படைத்த ஒரு சிலரின் செல்வமாய்க் குறுகிநிற்கவேண்டியுள்ளது. முன்னது வாழ, பின்னது ஒடுங்குதல், பொது மக்களின் ஆட்சி ஓங்க ஒரு சிலராகிய பிரபுக்களின் ஆட்சி ஓடுங்கி மறைதல்போன்றது என்கிறார் அறிஞர் விட்னே.[2]

1. Culture and education are the most powerful of all the forces which oppose linguistic change.—Whitney, Language and the Study of Language, p. 148.

A literary dialect is naturally less subject to the inroads of decay than an unwritten one.—A. H. Sayce, Introduction to the Science of Language, p. 199.

2. Every dialect which is made the subject of literary culture is liable to the fate of Latin; aristocracy and exclusiveness tend to final overthrow, in language as in politics; the needs and interests of the many are more important than those of the few, and must in the end prevail.—Whitney, Language and the Study of Language, p. 150.

மாறுதலுக்குத் தடை

பேச்சுமொழி வேறுகவும் இலக்கிய மொழி வேறுகவும் இல்லாமல், இரண்டும் ஒன்றை ஒன்று ஒட்டியுள்ள நிலையும் உண்டு; அந்நிலையில், பேச்சு மொழியின் மாறுதலைப் பெரிதும் தடுத்த இலக்கிய மொழி அதனைப் பற்றி ஈர்த்து நிற்கும். மொழியின் மாறுதலுக்கு இடம் தராமல் தடுக்கும் ஆற்றல் இலக்கியத்திற்கு மிகுதியும் உண்டு என்பர் அறிஞர் சிலர்.[1] அவர்கூற்று, மொழியின் இந்த நிலையை விளக்குவதாகும்.

இலக்கியம் இல்லாத மொழியில் மாறுதல்கள் தடையின்றி நேர்ந்தவண்ணம் இருக்கும். அந்த மொழியின் கேற்றைய நிலையை இன்று அறிஞிக்கக்கூடிய எழுத்து வழக்கு இல்லாமையாலும், பழமையை நினைவூட்டிக் காக்கப் புலவர்கள் இல்லாமையாலும், பேசும் மக்களின் அன்றாடத் தேவைக்கு ஏற்ப மாறுதல்கள் ஏற்படும். இத்தகைய மாறுதல்களால் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. அந்த மொழியின் நல்ல சொற்களும் பயனுள்ள கருத்துக்களும் மறக்கப்பட்டுப் போகும்; இதுவே தீமை எனக் குறிக்கத்தக்கது. அந்த மொழியின் இலக்கணக் கூறுகளில் சிக்கலானவை சில இருக்கலாம்; வேண்டாத சுமைகளும் சில இருக்கலாம். இவை எழுதிவைக்கப்படாமையால், பேசும் மக்களின் நினைவில் பதிந்து கிடப்பதில்லை; இலக்கண நூல்கள் இல்லாமையால் கற்றவர்கள் இவற்றை வற்புறுத்துவதும் இல்லை. ஆகவே தன்பழமும் சுமையு

1. Literature is the most dignified, the most legitimate, and the most powerful of the forces which effect the conservation of language, and the one which acts most purely according to its true merit, free from the adventitious aids and drawbacks of place and time.—Whitney, Language and the Study of Language, p. 173.

மான வேண்டாப் பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன; மறக்கப்படுகின்றன. இவ்வாறு மறக்கப்பட்டபின், பயனுள்ள கூறுகள் மட்டும் நிற்க, இலக்கணம் எளிமையாகிறது. ஆங்கில மொழியின் இலக்கணம் எளிமை பெற்ற வரலாறு இங்குக் கருதத்தக்கது. ஆங்கில மொழி உழவர்களின் மொழியாக இருந்த மூன்று நூற்றாண்டுகளின் போதுதான் இத்தகைய மாறுதலைப் பெற்று எளிமை உற்றது. அப்போதுதான் சிக்கலான விகுதிகளை இழந்தது; வேண்டாத பால்பாகுபாடுகளைப் புறக்கணித்தது; இனிமை, எளிமை, இழையுந்தன்மை ஆகியவற்றைப் பெற்று வளர்ந்தது.[1]

தமிழும் மலையாளமும்

இந்திய மொழிகளில் மலையாள மொழியின் வளர்ச்சியிலும் இத்தகைய போக்கைக் காணலாம். தமிழ்மொழியின் இலக்கியக் காவல் இல்லாத காலத்தில் சேர நாட்டில் மலையாள மொழி தலையெடுத்துச் சில நூற்றாண்டுகள் வெறும் பேச்சு மொழியாக இருந்தது. அக்காலத்தில், வினைமுற்றுக்களின் இறுதியில் சேர்க்கப்படும் பால் காட்டும் விகுதிகள் வேண்டாதவை என உணரப்பட்டன; மெல்ல மெல்லக் கைவிடப்பட்டன. இன்று வினைமுற்றுக்

1. Now when a language is seldom written and is not an object of interest to scholars, it quickly adapts itself in the mouths of plain people to the needs and uses of life. This may be either good or evil, according to circumstances. If the grammar is clumsy and ungraceful, it can be altered much more easily when there are no grammarians to protest. And so it fell out in England. During the three centuries when our native language was a peasant's dialect, it lost its clumsy inflections and elaborate genders, and acquired the grace, suppleness, and adaptability which are among its chief merits.—G. M. Trevelyan, History of England, pp. 121, 132.

களில் பால்காட்டும் விகுதிகள் இல்லாத திராவிட மொழி யாக மலையாளம் விளங்கக் காண்கிறோம்.

நான் வருகிறேன்
நீ வருகிறாய்
அவர் வருகிறார்
அது வருகிறது

முதலான வாக்கியங்களை

நான் வருந்து
நீ வருந்து
அவர் வருந்து
அது வருந்து

முதலியனவாக மலையாளம் எளிமையாக்கி வழங்கும் வாய்ப்பு இவ்வாறு அமைந்ததே ஆகும்.

தமிழிலும் இலக்கிய மொழியை அறியாமல், எழுத்து வழக்கையும் அறியாமல், பேச்சுமொழியை மட்டும் ஆராய்வார்க்கு வினைமுற்றுக்களின் திணைபால் விகுதிகள் தெளிவாகக் கேளாமல் ஏறக்குறைய ஒரேவகைச் சொற்க ளாக ஒலித்தல் உண்டு.

நான் குடிக்கிறேன் (ன்)
நீ குடிக்கிறே
அவன் குடிக்கிறான் (ன்)
அவள் குடிக்கிறாள் (ள்)
அவர் குடிக்கிறார் (ர்)

தமிழில் எழுத்துவழக்கு இல்லாத நிலையாயின், யாரேனும் வெளிநாட்டார் வந்து எழுதிவைக்கத் தொடங்கின், வினை முற்றுக்களைத் திணைபால்விகுதி இல்லாமல் ஒரே வகை யாகக் 'குடிக்கிறு' என்பதுபோல் எழுதிவைத்தற்கு இடம்

உள்ளது. சேரநாட்டுப் பேச்சுத் தமிழாக இருந்த மலை யாளத்து வினைமுற்றுக்கள், மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் வடமொழி அறிஞர் சிலர் செவியில் இவ்வாறு ஒரே வகையாகக் கேட்கவே, அவர்கள் அவற்றைத் திணை பால் விகுதிகள் இல்லாதனவாக எழுதி வைத்துவிட்டனர். சேர நாட்டுப் பேச்சுத் தமிழாகிய அந்தக் கிளைமொழிக்கும் அந்நாட்டுச் சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து, பிரபந்தம் முதலியவற்றின் இலக்கிய மொழிக்கும் உள்ள தொடர்பை அந்த வடமொழி அறிஞர்கள் ஆராய்ந்துணரவில்லை; சேரநாட்டுப் பேச்சுத் தமிழை, அதனோடு நெருங்கிய உறவுடைய பாண்டிய சோழநாட்டுத் தமிழ்மொழியுடனும் ஒப்பிட்டு ஆராயவில்லை. புதிய எழுத்துக்களைப் படைத் தனர்; தம் செவியில் ஒலித்தவாறே புதிய எழுத்துக்களில் அந்தப் பேச்சுமொழியை எழுதினர்; வட சொற்களைக் கணக்கின்றிக் கலந்து வடமொழியோடு உறவு உடைய தாக்கிவிட்டனர். இலக்கியத்தின் தொடர்பு புறக்கணிக் கப்பட்டதால், இத்தகைய வேகமான மாறுதல்கள் நேர்ந்து புதுமொழி ஒன்று தலையெடுக்க முடிந்தது.

தாயும் குழந்தையும்

தாயை விட்டுக் குழந்தை தனித்து வளர்ந்தால் அன் பின் இனிமை அறியாத பிறவியாகிவிடும்; தாய் தன்னை விட்டுச் சிறிதும் பிரியாமல் குழந்தையை வளர்த்தாலோ அது தாயை வெறுத்தொதுக்கத் துணியும்; தனி வளர்ச்சி யும் இல்லாமற் போகும். ஆகவே, தாயும் குழந்தையும் பிரிந்தும் பிரியாமலும் வாழ்வதே இருவர்க்கும் நன்மை யாகும். இலக்கிய மொழியும் பேச்சு மொழியும் இவ்வாறு ஓரளவு தொடர்புகொண்டு உரிமை கெடாமல் இணைந்து வாழ்வதால் இரண்டனுக்கும் நன்மையாகும். அப்போது

தான் இலக்கிய மொழி தன் பண்பாடு கெடாமல் வளர்ந்து பேச்சுமொழியால் புத்தம் புதுச் செல்வங்களைப் பெற்று வாழமுடியும்; பேச்சுமொழியும் முற்றிலும் மாறிப் புதிய தொரு மொழி ஆகாமல், பழைய நல்ல சொற்களையும் காத்துப் புதிய கருத்துக்களுக்கு வடிவு தரும் ஆற்றலும் பெறும். இவ்வாறு ஒன்றனுக்கு ஒன்று ஆதரவாக இரண்டும் வளரும் வளர்ச்சியைத் தமிழில் காணலாம்.

இவ்வாறு உரிமையுடன் பண்பாட்டைக் காக்கும் வளர்ச்சி இல்லையேல், இலக்கிய மொழி சிறந்த மொழி போல் தேங்கிக் கிடக்க நேரும்; பேச்சுமொழி புதிய மொழியாய் வளர்ந்து வேறுபடும். இலக்கியப் பிரெஞ்சு மொழி பழைய மொழிக்கூறுகளைக் காத்துவர, பிரெஞ்சின் பேச்சுமொழி மிக மாறியுள்ளது. பேச்சுமொழியை மட்டும் ஆராய்வோர், அது இந்தோ-ஐரோப்பிய மொழி யைச் சார்ந்தது என்பதற்குப் போதிய சான்றுகள் காணு மல் திகைப்பர். எண்ணுப பெயர்கள், மூவிடப் பெயர்கள், உறவுப் பெயர்கள் முதலிய சில கூறுகள் மட்டுமே இந்தோ-ஐரோப்பியத் தொடர்பைக் காட்டும் வகையில் மாறாமல் உள்ளன. மற்றவை எல்லாம் மாறிவிட்டன[1] இலக்கியத்தின் அணைப்பு இல்லாமற் பேச்சு மொழி தன் போக்கில் விடப்பட்டால் எவ்வாறு மாறிவிடும் என்பதற்கு இது ஒரு சான்று.

---

1. J. Vendryes, Language, p. 308.

௧௯. கிளைமொழி

ஒருமொழியே பலவகை

தமிழ் நம் தாய்மொழி என்கிறோம். அது ஒன்றா, பலவா? பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழ் எனப் பாகு படுத்துகிறோம். எழுத்துத் தமிழைப் பத்திரிகைத் தமிழ், கடிதத் தமிழ், இன்றைய உரைநடைத் தமிழ், பழைய இலக் கியத் தமிழ் எனப் பல்வேறு வகையாகக் காண்கிறோம். இலக்கியத் தமிழ் என்று கொள்ளும் ஒன்றையும், சங்கத் தமிழ், இடைக்காலத் தமிழ் எனவும், காவியத் தமிழ், உரையாசிரியரின் தமிழ் எனவும் பகுத்துணர்கின்றோம். பேச்சுத் தமிழைப் பற்றிக் கூறவேண்டுவதே இல்லை. அது ஒன்று எனக் கூறுவார் ஒருவரும் இலர். நாட்டுக்கு நாடு, மாவட்டத்திற்கு மாவட்டம், ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு, இனத்துக்கு இனம் எனப் பேச்சுத்தமிழ் பலவகைப் படுகின்றது. ஒரே குடும்பத்தை எடுத்துக்கொண்டு ஆராய்ந்தாலும், பல்வேறு இடங்களில் பயின்று வீட்டிற்குத் திரும்பும் கணவனுடைய தமிழுக்கும், பக்கத்தாருடனும் சுற்றத்தாருடனும் பயின்று வீட்டினுள் வாழும் மனைவி யின் தமிழுக்கும், வயதிற்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற வாறு பயின்று கற்றுவரும் மக்களுடைய தமிழுக்கும் வேறுபாடுகளைக் காணலாம். ஆகவே தமிழ் என்பது ஒன்று என்று கூறத் தயங்கவேண்டிய நிலையும் உள்ளது.[1]

1. Clearly, therefore, we are guilty of no paradox in maintaining that, while we all speak the English language, the English of no two individuals among us is precisely the same; it is not the same in form; it is not the same in extent; it is not the same in meaning.

But what, then, is the English language?.....It is their average rather than their sum; it is that part of the aggregate

இவை அனைத்திற்கும் அடிப்படையாய், அனைத்திலும் ஊடுருவி விளங்கிக் காலம் கடந்து வாழ்ந்துவரும் ஒன்று தான் நம் தாய்மொழியாகிய தமிழ் எனக் கூறலாம். ஆயின் அந்த ஒன்று இதுதான் எனச் சுட்டிக்கூற இயலாத தாய், ஓரளவு நம் கருத்திற்கும் எட்டாததாய் உள்ளது. வெண்ட்ரியே என்னும் பிரெஞ்சு ஆசிரியர் கூறுமாறு, அது தேடிக்கொண்டிருத்தற்கு உரிய குறிக்கோளாக நிற்கிறதே அன்றி, தேடிக் காண்பதற்கு உரியதாக இல்லை; அது ஆற்ற லுடன் இயங்கிக்கொண்டே உள்ளது; இன்ன போக்கில் செல்கின்றது என்று மட்டும் கூறமுடியும்.[1] அதைப் பேசு வோரும் எழுதுவோருமாகிய நாம் பல்வேறு வகையாக வேறுபடுத்திப் பேசுகிறோம்; எழுதுகிறோம். நினைவில் லாக் குறை, தவறுபட ஒலிக்கும் குறை, நாவின் வழு முதலிய காரணங்களால் அந்த ஒரு மொழியே பலவாறு திரியவும் நேர்கின்றது.

ஒருவர் பேசிவரும் மொழியும் ஒரே வகையாக மாறாமல் நிலைத்திருக்க முடியாது என்பது அறிஞர் கொள்கை. காரணம் என்ன? முதலாவதாக, ஒருவர் ஒரே தொடரை முதல்முறை சொல்வதற்கும் பத்தாம் முறை சொல்வதற்கும் வேறுபாடு உண்டு. ஆகவே பல

which is supported by the usage of the majority; but of a majority made in great part by culture and education, not by numbers alone.....Although one language, it includes numerous varieties, of grately differing kind and degree: individual varieties, class varieties, local varieties.—Whitney, Language and the Study of Language, p. 22.

1. It is an ideal which can be sought but never found; a force in motion, to be defined only by the end to which it is working; a potential reality never actually realized; a becoming which never comes.—J. Vendryes, Language, p. 243.

முறை திரும்பத் திரும்பப் பேசும்போது பேச்சுச் சிறிது திரிபடையும். இரண்டாவதாக, பேசும் அவருடைய எண்ணத்தில் படிப்படியே வளர்ச்சியும் மாறுதலும் உண்டாகின்றன. அவருடைய மூளை நாளுக்குநாள் வளர்ந்து மாறிவருவதால், பேச்சிலும் அதற்கு ஏற்ற மாறுதல் நிகழ்கிறது. மூன்றாவதாக, அவருடைய செவியில் விழும் பிறருடைய சொற்களும் தொடர்களும், அவர் பேசிப் பழகும் மொழியுடன் சேரும்போதும் மாறுதல் நேர்கிறது.[1]

மொழி பல எனக் கூறத் தொடங்கினும், வரையறை இல்லாமற் போகின்றது. இடத்தாலும் பழக்கத்தாலும் சமயம் முதலிய காரணங்களாலும் ஒருமொழி பேசும் மக்களிடையே எத்தனை வகையாகக் குழுக்கள் உள்ளனவோ அத்தனை வகையாக அந்த மொழி உள்ளது எனக் கூறலாம். அன்றி, ஒவ்வொருவர் பேசும் மொழியிலும் வேறுபாடு காணப்படுதலால், மக்களின் தொகை எவ்வளவோ, அவ்வளவு மொழிவேறுபாடு உண்டு எனக் கூறலாம். இந்த இருவகையில் மொழியின் பன்மை அடங்குவதன்று. ஒரே மனிதன் அலுவலகத்தில் பேசும் மொழி வேறுகவும், கடைத்தெருவில் பேசும் மொழி வேறுகவும், விளையாட்டுக் கூடத்தில் பேசும் மொழி வேறுகவும், வீட்டில் வளர்ந்தோரிடத்தில் பேசும் மொழி வேறுகவும், சிறுவரிடத்தில் பேசும் மொழி வேறுகவும், மேடையில் பேசுவது வேறுகவும், கடிதத்தில் எழுதுவது வேறுகவும், கட்டுரையில் எழுதுவது வேறுகவும் இருத்தலால், மக்களின் குழுத் தொகைகளைவிட, மக்களின் எண்ணிக்கையைவிட, மொழி மிகப் பலவாக வேறுபட்டுள்ளதெனக் கூறலாம்.

1. P. D. Gune, An Introduction to Comparative Philology, p. 14.

இருவகைப் பான்மை

இத்தகைய மொழிவகைகள் எல்லைச் சுவர்களால் வரையறுக்கப்பட்ட கட்டிடங்கள்போல், தனித்தனியே வேறுபட்டு நிற்பனவும் அல்ல. ஏன் எனில், ஒரு குழுவில் உள்ளவன் அடுத்த குழுவினரோடு பழகும்போது, முன்னைய குழுவின் மொழியியல்புகள் இதனுள் கலக்கின்றன. ஓர் ஊராரின் பேச்சுக் கூறுகள் மற்றோர் ஊராரின் மொழியில் கலக்கின்றன. இவ்வாறே, இந்த மொழி வகைகள் ஒன்றனோடு ஒன்று கலந்து திரிந்தவாறே உள்ளன. அதனால், வேறுபாடுகளை வரையறுப்பது இயலாததாக உள்ளது. மொழி ஒன்று என ஒற்றுமையைக் காண்பது அரிது எனின், மொழி பல என வேற்றுமையைக் காண்பது அதனினும் அரிதாக உள்ளது.

இவற்றை ஆராய்ந்தால், மொழியின் வளர்ச்சியில் இருவகை இயல்புகள் இருத்தலைக் காணலாம். பலவகைக் கூறுகளையும் ஒன்றுபடுத்த முயலும் ஒற்றுமைப் பான்மையை ஒருபுறம் கண்டு, மற்றொருபுறம், ஒன்றுபட்ட மொழியையே பலவாறு வேறுபடுத்தும் வேற்றுமைப் பான்மையையும் காணலாம்.

வேற்றுமைப்பான்மை மொழியை ஒருபுறம் ஈர்த்திட, மற்றொருபுறம் ஒற்றுமைப்பான்மை ஈர்க்க, மொழி இவற்றிற்கு இடையே காலம் கடந்து நிலைத்துவாழும் தன்மை பெறுகிறது.[1] மொழி அளவு கடந்து வேறுபட்டுச் சென்றால், பலர்க்கும் பொதுவாய்க் கருத்துக்களை உணர்த்

1. The tendency towards unification is always at work against the tendency towards differentiation; and equilibrium is re-established. From the interplay of these two tendencies arise all those diverse kinds of language, such as dialects and special and common languages.—J. Vendryes, Language, p. 244.

தும் கருவியாக வாழும் தகுதியை இழந்துவிடுகின்றது. ஒரே தன்மையாய் வேறுபாடின்றிக் கிடந்தாலும், நாள் தோறும் இடந்தோறும் வளரும் மனித இனத்தின் வளர்ச்சிக்கு ஏற்றாற்போல் அமையும் தகுதியை இழந்துவிடுகின்றது. அதனால், இந்த இருவகைப் பான்மையும் மொழிக்கு இன்றியமையாதனவாக உள்ளன. இவ்விரண்டன் செல்வாக்கால் ஏற்படுவனவே கிளைமொழி (dialect), குறுமொழி (slang), பொதுமொழி (standard language), சிறப்புமொழி (special language) என்பன.[1]

இயல்பாக வேறுபடுவது

கிளைமொழி என்பது என்ன? ஓர் இடத்தார், அல்லது ஓர் இனத்தார், அல்லது ஒரு கூட்டத்தைச் சார்ந்தவர், அல்லது ஒரு தொழிலைச் சார்ந்தவர் தமக்குள் தடையின்றி விளங்குமாறு இயல்பாகப் பேசிவரும் மொழியாகும்; எவ்வகையான வேறுபாடும் அதைப் பேசுவோர்க்குத் தெரியாதவாறு அவ்வளவு இயல்பாக அமையும் மொழியாகும். ஒரு கட்சியார் அல்லது ஒரு தொழில்கிலையத்தைச் சார்ந்தவர் பேசும்மொழியும் கிளைமொழியே. குப்பங்களில் வாழும் ஏழைமக்களின் மொழி ஒரு வகையானது. ஒரு குப்பத்தார் பேசும் மொழிக்கும் மற்றொரு குப்பத்தாரின் மொழிக்கும் வேறுபாடு இருத்தலால், அவைகள் வெவ் வேறு கிளைமொழிகள் ஆகும். ஆற்றின் இந்தக் கரையில் வாழ்வோர்க்கும் அந்தக் கரையில் வாழ்வோர்க்கும் இத்தகைய மொழி வேறுபாடு உண்டு. தமிழ்நாட்டில் வடஆர்க்காடு மாவட்டத்தாரின் மொழி ஒருவகை; திருநெல்வேலி

1. In the life of language we seem to see two opposed tendencies, the one in the direction of splitting, the other in the direction of larger and larger units.—Otto Jespersen, Mankind Nation and Individual, p. 43.

மாவட்டத்தாரின் மொழி ஒருவகை. இவ்வாறே கிளை மொழிகள் பல காரணம் பற்றிப் பலவகையாய் அமைகின்றன. எல்லாம் இயல்பாக அமைந்தவைகளே. செயற்கையாக, வேண்டும் என்றே அமைத்தால், அவைகள் கிளை மொழி என்று கூறப்படுவதில்லை; குறுமொழி (slang) என்று வேறு பிரித்துக் கூறப்படும்.

பழக்கம் காரணம்

வெவ்வேறு கிளைமொழி பேசும் இரு கூட்டத்தார்க்கு இடையே உறவும் பழக்கமும் மிகுமாயின், அந்தக் கிளை மொழிகளுக்கு இடையே உள்ள வேற்றுமை குறைந்து வரும். அந்தக் கூட்டத்தார் கலந்து பழகும் வாய்ப்புக் குறைந்தால், கிளைமொழிகளுக்கு இடையே வேறுபாடு பெருகும். இரண்டு மாவட்டத்தார் நெருங்கிப் பழகினால், அந்த மாவட்ட மொழிகள் கலந்து ஒன்றுபடத் தொடங்கும். இல்லையேல், வேறுபாடு மிகும். மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கிழக்கே இருந்த தமிழர்க்கும் மேற்கே இருந்த தமிழர்க்கும் பழக்கம் மிகுதியாக இருந்துவந்த காலம் சங்க காலமும் இடைக்காலமும். ஆகையால் அக்காலங்களில், இருபுறமும் தமிழ் வழங்கியது; இருவகையாரின் தமிழுக்கும் வேறுபாடு வளரவில்லை. நான்கைந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்த நிலைமை மாறியது. மேற்குப் பகுதியார்க்கும் கிழக்குப் பகுதியார்க்கும் இடையே உறவு குறைந்தது; பழக்கம் குறைந்தது. ஆகவே மொழி வேறுபாடு மிகுந்தது. அதனால்தான் அந்தப் பகுதியாராகிய சேரநாட்டார் பேசிய மொழி பெரிதும் வேறுபட்டு 'மலையாளம்' என்று வேறு பெயருடன் கூறப்படும் நிலைமை வந்தது. திருநெல்வேலி மாவட்டத்தாரின் மொழியும் வடஆர்க்காடு மாவட்டத்தாரின் மொழியும் அவ்வாறு மிகுதி

யாக வேறுபடவில்லை. இரண்டு மாவட்டத்தார்க்கும் இடையே போக்குவரவு கொள்ளல் கொடுத்தல் பழக்கம் ஆகியவை என்றும் இருந்துவருகின்றன. கற்கும் நூல்களும் பொதுவாக இருந்துவருகின்றன. ஆகையால் இந்த மாவட்டக் கிளைமொழிகள் வெவ்வேறு மொழிகளாய் மாறவில்லை; எல்லாம் தமிழின் கிளைமொழிகளாகவே இருந்துவருகின்றன.

செந்தமிழ், கொடுந்தமிழ்

இலக்கண நூல்களில் செந்தமிழ் என்றும் கொடுந் தமிழ் என்றும் பாகுபாடு செய்துள்ளதை இங்குக் கருதலாம்.

அவற்றுள்
இயற்சொல் தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே[1]

என்றும்,

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம்குறிப் பினவே திசைச்சொற் கிளவி[2]

என்றும் தொல்காப்பியனார் கூறுவனவற்றால், செந்தமிழ் நிலம் என்றும், செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் என்றும் பகுத்த பாகுபாடு பண்டைக்காலத்திலேயே இருந்தமை அறியப்படும். பிற்காலத்தார் செந்தமிழ் நிலம் கொடுந்தமிழ் நிலம் எனப் பகுத்தனர்.[3]

தென்பாண்டி குட்டம் குடம்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன்வடக்கு—நன்றாய
சீத மலாடு புனனாடு சேந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்

1. தொல்காப்பியம், சொல். 398.
2. ,, 400
3. மேற்படி 398, சேனாவரையர் உரை. நன்னூல் 273, சங்கரநமச்சிவாயர் உரை.

என்னும் வெண்பா ஒன்று கொடுந்தமிழ் நிலம் பன்னிரண்டையும் விளக்குகின்றது. "செந்தமிழ் நிலமாவன, வைகையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்" என்கின்றனர் இளம்பூரணரும் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்[1]. மயிலைநாதரும் இவ்வாறே உரைக்கின்றார்.[2] சங்கரநமச்சிவாயர் அதனை மறுத்துப் பாண்டிநாடே செந்தமிழ்நாடு என்று கூறுகிறார்.

சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்
சவுந்தர பாண்டியன் எனுந்தமிழ் நாடனும்
சங்கப் புலவரும் தழைத்தினி திருக்கும்
மங்கலப் பாண்டி வளநா டென்ப

என்று காரணம் காட்டுகிறார்.

"தென்பாண்டி நாட்டார் ஆனினப் பெற்றம் என்றும், சோற்றைச் சொன்றி என்றும், குட்ட நாட்டார் தாயைத் தள்ளை என்றும், குட நாட்டார் தந்தையை அச்சன் என்றும், கற்கா நாட்டார் வஞ்சரைக் கையர் என்றும், வேணாட்டார் தோட்டத்தைக் கிழார் என்றும், பூழிநாட்டார் சிறுகுளத்தைப் பாழி என்றும், பன்றி அருவா நாட்டார் செறுவைச் செய் என்றும், சிறுகுளத்தைக் கேணி என்றும், அருவாவடதலையார் புளியை எகின் என்றும், சீதநாட்டார் தோழனை எலுவன் என்றும் தோழியை இகுளை என்றும் வழங்குவர்" என்று கொடுந்தமிழுக்கு எடுத்துக்காட்டுக்கள் கூறப்படுகின்றன.[3]

பொதுமொழி வேரூன்றியிருந்த நாட்டைச் செந்தமிழ் நிலம் என்றும், அதிலிருந்து வேறுபட்டுக் கிளை

1. தொல்காப்பியம், சொல். 398.
2. நன்னூல், 262. மயிலைநாதர் உரை.
3. ,, 273. சங்கர நமச்சிவாயர்.

மொழிகள் செழித்திருந்த தமிழ்நாட்டுப் பகுதிகளைக் கொடுந்தமிழ் நிலம் என்றும் பழங்காலத்துப் புலவர் பாகு பாடு செய்தனர் எனக் கொள்ளலாம்.

தொல்காப்பியனுர் சேரிமொழி என்றும், உரையா சிரியர்கள் பாடிமாற்றங்கள் என்றும் குறித்தவைகளும் கிளைமொழிகள் என்று கொள்ளப்படும்.

வேறுபாடு வளர்தல்

மலை ஆறு காடு முதலிய இயற்கை எல்லைகள் பிரித்த பிரிவுகளால் வேறுபட்டுள்ள நிலப் பகுதிகளில் வழங்கும் மொழிகளில் இவ்வாறுன வேறுபாடுகள் உள்ளன. இயற் கைப் பிரிவுகளே அன்றி, அரசாங்க வேறுபாடுகளால் பிரிந்து அமைந்த நாடுகளிலும் மொழி சிறிது சிறிது வேறுபாடு அடைகின்றது. பாண்டியநாட்டுத் தமிழும், சோழநாட்டுத் தமிழும், பொதுவாகத் தமிழ் என்று கூறப் படும் பொதுமை உடையன ஆயினும், சிறப்புக் கூறுகளை ஆராயும்போது வேறுபட்டு வந்துள்ள வரலாறு அறியப் படும். இன்று, அரசாங்க வேறுபாடு இல்லை ஆயினும், பழைய பிரிவுகளின் விளைவால் நேர்ந்த மாறுதல்கள் அடி யோடு மறையவில்லை. திருநெல்வேலித் தமிழ் என்றும் தஞ்சாவூர்த் தமிழ் என்றும் வேறுபடுத்திக் கூறும் நிலைமை இன்றும் உள்ளது. பிறநாட்டு மக்களின் கலப்பு மிகுதி யாக உள்ள சென்னை போன்ற பகுதிகளில் வேறுபாடு மேலும் வளர்ந்துள்ளமை காணலாம்.

ஒரு மாவட்டத்திற்குள்ளும் ஒரு மலைக்கு அப்பால் கிளைமொழி ஒன்றுகவும், மலைக்கு இப்பால் வேறொன்றுக வும் வழங்கும். இவ்விரு பகுதியுள், செல்வம் செல்வாக்கு அறிவுவளம் முதலிய காரணங்களால் ஒரு பகுதியார் சிறந்து விளங்கினுல், மற்றப் பகுதியிலும் அவர்கள் பேசும்

மொழி மெல்ல இடம்பெற்று வாழ்ந்துவிடும். ஒரே ஊரில் கிழக்குத் தெருவில் கிளைமொழி ஒன்றும், மேற்குத் தெருவில் வேறொன்றுமாக இருப்பின், எந்தத் தெருவினர் மேம்பட்டுச் செல்வாக்குடன் விளங்குகின்றனரோ அந்தத் தெருவின் கிளைமொழி மற்றத் தெருவின் கிளைமொழியை நாளடைவில் வென்றுவிடும். கிளைமொழிகளின் வெற்றி தோல்விக்கு அரசியல் செல்வாக்கு அறிவுவளம் முதலியவை காரணமாக விளங்குதல் போலவே, கட்டுப்பாடான ஒற்றுமையும் ஒரு காரணமாகும். கட்டுப்பாடாக ஒற்றுமைப்பட்டு வாழும் மக்கள் பேசும் கிளைமொழியை மற்ற எந்தக் கிளைமொழியும் எளிதில் வெல்ல முடியாது. அவர்களின் எண்ணிக்கையே வல்லமையாகக் கொண்டு அந்தக் கிளை மொழி நெடுங்காலம் வாழ்வுபெறும்.[1]

கிளைமொழிகள் குறைதல்

கிளைமொழிகளின் வாழ்வு வரவரக் குறுகி வருவதாகக் கூறலாம். இன்று அறிவியல் முன்னேற்றத்தால் ஏற்பட்டுள்ள போக்குவரவுக் கருவிகள், விரைவில் பரவும் செய்தித்தாள், திரைப்படம், வானொலி முதலியவை, பொது மொழி விரைவில் ஆற்றலுடன் பரவுதற்குத் துணைபுரிகின்றன. மக்களின் வாழ்விலும் பொதுத் தேவைகளே மிகுதியாகிக்கொண்டு வருகின்றன. குடிசைக் கைத்தொழில்கள் குறைந்து யந்திரத்தொழிற்சாலைகள் பெருகு

1. Dialects arise spontaneously through the natural interplay of linguistic acts. Whenever in contiguous areas the current speech shows common peculiarities and a general resemblance apparent to the speakers, there is a dialect. —J. Vendryes, Language, p. 260.

Even when we have made full allowance for outside influences in the building up of dialects, the fact remains that they are based mainly upon a natural development of the elements of language.—Ibid. p. 261.

வதாலும், இவ்வாறே மற்றச் சிறுசிறு அமைப்புக்கள் குறைந்து பெரியபெரிய நிலையங்கள் வளர்வதாலும், மக்கள் சிறுசிறு கூட்டமாகப் பிரிந்து வாழ்வதற்கு இடம் இல்லாமற் போகின்றது. முற்காலத்தில் ஒருவன் குடும்பத்தில் பழகும் காலம் மிகுதியாகவும், பொது இடங்களில் பழகும் காலம் குறைவாகவும் இருந்துவந்தன. இன்று ஒருவன் குடும்பத்தில் பழகும் நேரம் குறைந்து வருவதால், மனிதன் குடும்ப மனிதனாக வாழும் நேரத்தைவிட, ஊர் மனிதனாக வாழும் நேரம் மிகுதி; பலருடைய வாழ்வில், நாட்டு மனிதனாக வாழும் நேரமே மிகுதி; ஒரு சிலருடைய வாழ்வில் உலக மனிதனாக வாழும் நேரம் மிகுதியாக உள்ளது. இவற்றால் வேற்றுமைப்பான்மைக்கு உரிய வாய்ப்புக்கள் குறைந்து போவதால், இனிக் கிளைமொழிகள் வளர்வதற்கு வாய்ப்புக் குறைவு ஆகும்.

சென்ற நூற்றாண்டில் இவற்றை ஆராய்ந்த மொழி நூலார், நாகரிக மக்களிடையே காணப்படும் கிளை மொழிகளைவிட, நாகரிகம் குறைந்த காட்டுமிராண்டிகளிடையே காணப்படுவன மிகுதி என்று குறித்தனர். இன்றைய நிலையில் நாகரிக மக்கள் பொதுவாழ்வில் பெற்றுவரும் வேகமான வளர்ச்சியை நோக்கினால், அவர்களிடையே கிளைமொழிகள் விரைவில் குறைந்துவரும் என்பதை உணரலாம். இன்ன குடும்பமொழி, இன்ன தெருவின் மொழி, இன்ன ஊரின் மொழி என்று குறிக்கப்படும் பலவகைக் கிளைமொழிகள் எதிர்காலத்தில் இல்லையாகி விடும். ஒரு சில கிளைமொழிகள் மட்டும் நிற்றல் கூடும். மக்கள் கூடிப் பழகவும் கருத்துக்கள் கலந்து பரவவும் பழங்காலத்தில் வாய்ப்புக்களும் காரணங்களும் குறைவு, இக்காலத்தில் மிகுதி என்னும் இவ்வுண்மையை உணர்ந்தே கிளைமொழிகளின் பழங்கால வரலாற்றையும் வருங்கால

வாழ்வையும் ஆராயவேண்டும்.[1] மக்கள் ஒரு நாட்டினராய்த் திரண்டு அமையும் அமைப்புக்கு முன்னர், குடும்பங்கள், வகுப்புக்கள், சாதிகள், இனங்கள் என்று சிறு சிறு பிரிவுகளாய் வாழ்ந்ததுபோல், பொதுமொழியாக ஒன்று அமைவதற்குமுன், பல்வேறு சிறுசிறு கிளைமொழிகள் இருந்துவந்தன என்னும் உண்மையையும் இங்குக் கருதவேண்டும்.[2]

விளங்கும் நிலை

கிளைமொழிகள் என்பவை ஒரு மொழியின் பல்வேறு பிரிவுகள் அல்ல; இடம் தொழில் நாகரிகம் முதலியவற்றின் வேறுபாடுகளுக்கு ஏற்ப ஒரு மொழியே சிறிது சிறிது வேறுபட்டு நிற்கும் நிலைகளாகும். ஒரு கிளைமொழி பேசுவோர்க்கு மற்றொரு கிளைமொழி நன்கு விளங்கும். தம் கிளைமொழி மிக நன்றாக விளங்கும் எனின், மற்றொரு கிளைமொழி அதற்கு அடுத்தாற்போல் விளங்கும் எனலாம்.

எடுத்துக்காட்டாக, கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற இளைஞன் ஒருவனுடைய தமிழ், படிப்பில்லாத கிராமத்தான் ஒருவனுக்கு விளங்கும். ஆயின், கிராமத்தான் மற்றொருவனுடைய பேச்சைப் போல் அவ்வளவு தெளிவாக விளங்க முடியாது. செங்கல்பட்டுத் தமிழ

1. The most important cause of a language splitting into dialects is not purely physical, but want of communication for whatever reason.—Otto Jespersen, Mankind Nation and Individual, p. 41.

2. It is therefore human geography which is the decisive factor in the formation of dialects.—Ibid. 48.

As there were families, clans, confederacies and tribes before there was a nation, so there were dialects before there was a language.—Max Muller.

னுக்குத் தன் மாவட்டத்தைச் சார்ந்த மற்றொரு தமிழ னுடைய பேச்சு உடனே தெளிவாக விளங்கும்; திருநெல் வேலித் தமிழனுடைய பேச்சு அதற்கு அடுத்தாற்போல் விளங்கக்கூடியதே. இந்தக் கிளைமொழிகளுக்குள் சொற் களிலும் ஒலிமுறைகளிலும் வேறுபாடுகள் உண்டு. ஆயினும், இந்த வேறுபாடுகளைக் கடந்து ஒருவரோடு ஒரு வர் பேசிப் பழக முடிகிறது.

'அவர்கள் வந்தார்கள்', 'இவர்கள் போனார்கள்' முத லானவை பொதுமொழியை ஒட்டி எழுதப்படும் வாக்கியங் கள். இந்த வாக்கியங்களே பின்வருமாறு பலவேறு வகை யாக ஒலிக்கப்படுதல் கிளைமொழிகளில் காணலாம்.

அவங்க வந்தாங்க
இவங்க போனுங்க

அவுங்கோ வந்தாங்கோ
இவுங்கோ போனுங்கோ

அவா வந்தா
இவா போனு

இருக்கிறது என்ற ஒரு சொல், கிளைமொழிகளில் இருக் குது, இக்குது, கீது, இருக்கு எனப் பல வேறு வகையாக ஒலிக்கப்படுகிறது. வந்துட்டது, வந்துடச்சி, வந்திச்சி என்பனவும் இத்தகைய கிளைமொழித் திரிபுகளே. இவ் வாறே பல விகுதிகளும் இடைநிலைகளும் சில பகுதி களும் கிளைமொழிகளில் வெவ்வேறுக இருத்தலைக் காண லாம். வாழைப்பழம், வாயைப்பயம், வாளப்பளம், இழுத் தான், இளுத்தான், இயுத்தான், இசுத்தான் முதலானவற் றில் கிளைமொழிகளுக்கு ஏற்ப ஒலிகள் திரியும் திரிபுகளைக் காணலாம்.

'அவனை அங்கே பார்த்தான்' என்பது எழுத்து வழக் கில் உள்ளது; பேச்சு வழக்கிலும் உள்ளது. திருநெல்

வேலி மாவட்டத்தார் இதனையே 'அவனை அங்ஙனே வச்சி (வைத்துப்) பார்த்தான்' என்பர். இத்தகைய வழக்குகளும் கிளைமொழி எனத்தக்கவை ஆகும்.

அடுத்தடுத்துள்ள இரண்டு குடும்பங்களில் பேசப்படும் கிளைமொழிகளுக்குள்ளும் சிறிதளவாவது வேற்றுமை காணப்படும். ஆனால் அந்தக் குடும்பங்கள் நெருங்கிப் பழகின் வேற்றுமை பெருகாமல் ஓரளவோடு நிற்கும். இவ்வாறு பழகும் வாய்ப்பு எங்குக் குறைவோ அங்குக் கிளைமொழி வாழ இடம் உள்ளது.

கிளைமொழியும் பொதுமொழியும்

கிளைமொழிகளுக்குள் வேற்றுமைப் போக்கு ஒரு புறமும் ஒற்றுமைப்போக்கு மற்றொருபுறமும் இருந்து ஒன்றை ஒன்று ஈர்த்துவருதல் இயற்கை. மாறுபட்ட இந்த இரண்டு போக்குகளுக்கு இடையே மொழி தன்னைக் காத்துக்கொண்டு வளர்ந்துவருகிறது. சமுதாயமாய்ப் பழகும் மக்களுக்கிடையே சிலவகைப் பாகுபாடுகள் அமைந்து, அந்தந்தக் குழுவினர் தமக்குள் நெருங்கிப் பழகுவதால், புதிய கூறுகள் சில ஏற்பட்டு, வேற்றுமைப் போக்கு வளரத் தொடங்கும் ஆயின், எந்தக் காலத்திலும் வேற்றுமைப் போக்கு முற்றிலும் வளர்வதில்லை. அவ்வாறு வளர்ந்தால், பிறர்க்குக் கருத்தை உணர்த்த முடியாமற் போவதால் மொழி பயன் இல்லாமற்போகிறது. ஒரு குழுவினர் மற்றவர்களோடு பழகும் தேவையின் காரணமாக, அவர்களுக்கு விளங்கும் வகையில் பேச நேர்வதால், ஒற்றுமைப் போக்கு வளர்கிறது. ஆகவே, இந்த இருவகைப் போக்குகளுக்கு இடையேதான், பொதுமொழியின் வாழ்வும் கிளைமொழிகளின் வாழ்வும் அமைகின்றன. பொது மொழியின் செல்வாக்கு மிகும்போது, கிளைமொழி

தன்னைச் சிறிது மாற்றிக்கொண்டு அதை நெருங்கிச் செல்கிறது. கிளைமொழி விரைந்து வளர்ந்து பரவத்தொடங்கும்போது, பொதுமொழி அதன் கூறுகள் சிலவற்றைத் தான் மேற்கொண்டு நெருங்கிவருகிறது. இவ்வாறு ஒரு வகைச் சமநிலை காக்கப்பட்டுவருகிறது.

டாஸ்மேனியாவில் வாழ்ந்த பழங் குடிமக்கள் சிறு தொகையினர். ஆயினும், நாகரிகமில்லாத மக்கள் ஆகையால், அந்தச் சிறு தொகையினர்க்குள் நான்கு கிளைமொழிகள் இருந்துவந்தன. கண், காது, தலை முதலிய உறுப்புக்களை உணர்த்துவதற்கும் அந்த மொழிகளில் வெவ்வேறு சொற்கள் இருந்துவந்தனவாம்.

எஸ்கிமோக்களின் பேச்சிலும் கிளைமொழிகள் பலவாக இருந்தனவாம். ஒவ்வோர் இடத்தாரும் ஒவ்வொரு கிளைமொழியைப் பேசினார்களாம். கடைசியில் அவர்களுக்குப் பொதுவாக ஆண்டுதோறும் சந்தை விழா ஒன்று நடக்க ஏற்பாடு செய்யப்பட்ட பிறகுதான் அவர்கள் எல்லோரும் பொதுவாக உணர்ந்துகொள்ளக்கூடிய மொழி வளர்ந்ததாம்.[1] மக்கள் ஒன்றுசேரத் தலைப்பட்டால், இவ்வாறு பொதுமொழிகள் வளர வழி அமைகிறது.

மாறுதல் இயற்கை

கிளைமொழிகளுக்குள்ளும் நாளுக்குநாள் வேறுபாடுகள் பலவாய்ப் பெருகுவதற்குக் காரணம், சமுதாயத்தில் உள்ள பலவகைக் குழுக்கள் ஒன்றோடொன்று பழகுவதிலும், தனிமனிதர் பல குழுக்களோடு பழகுவதிலும் உள்ள பலவகை வேறுபாடுகளே ஆகும். இவ்வேறுபாடுகளே கிளைமொழிகள் வேறுபடுவதற்கும் மாறுவதற்கும் காரண

1. A. H. Sayce, Introduction to the Science of Language, p. 200.

மாக அமைகின்றன.[1] ஒருவர் தம் கூட்டத்தைவிட்டு மற்றொரு கூட்டத்துடன் பழக நேரும்போது, தம் கூட்டத்தார் பேசும் கிளைமொழியின் கூறுகள் சிலவற்றை அங்குக் கொண்டுசென்று பரப்புகிறார். இவ்வாறு கிளைமொழிகள் ஒன்றோடொன்று கலந்தவண்ணம் மாறுதல்கள் மெல்ல மெல்ல ஏற்பட்டுக்கொண்டிருத்தல் இயல்பாகிறது.

---

1. This diversity is due to the complexity of social relations, and since an individual rarely lives entirely in one social group, there is hardly a language which does not overlap other groups. Each individual, in the course of his migrations, carries with him the language of his own group, and this leaves its influence on the neighbouring group into which he has been introduced.—J. Vendryes, Language, p. 243.

கஎ. பொதுமொழி

பொதுமொழி அமைதல்

பலவேறு குடும்பத்தார், பல வேறு கூட்டத்தார் என முதலில் மக்கள் பிரிந்து பிரிந்து அமைந்திருத்தலே இயற்கை. அதற்குப் பிறகே நாளடைவில் பேரினமாய்த் திரண்டு, முடிவில் நாடு—ஒரு நாட்டினர்—எனப்படும் நிலைமை ஏற்படுகிறது. மொழித்துறையிலும் இவ்வாறே தொடக்கத்தில் பலவகை வேறுபாடுகள் உடைய சிறுசிறு கிளைமொழிகளாகத் தோன்றி வளர்ந்து, நாளடைவில் அத்தனைக்கும் பொதுமொழியாய் ஒன்று தலையெடுக்கின்றது. இனங்களுக்கும் இடங்களுக்கும் ஏற்ப வெவ்வேறாக இருந்த மொழிகள் மெல்ல மெல்ல மறைந்து, பொதுவான பெரு மொழி (standard language) ஏற்படுகிறது. அந்தப் பொதுமொழி எது எனில், முன் இருந்த கிளைமொழி களுள் ஒன்றே. மற்றக் கிளைமொழிகளைவிட இதற்குத் தனிச்சிறப்பு இருந்ததாகவும் கூறமுடியாது; ஓர் இனமோ இடமோ வழங்கிவந்த அந்தக் கிளைமொழியையே அடுத்துள்ள இனங்களோ இடங்களோ மெல்லமெல்லக் கற்றுக் கொள்ளும் சூழ்நிலை அமைந்துவிடுகிறது. மொழிக்கு ஒரு தனிச்சிறப்பு இல்லை எனினும், அதைப் பேசிய மக்களுக்கோ இடத்துக்கோ உள்ள சூழ்நிலைச் சிறப்பால், அந்தக் கிளைமொழியை மற்றவர்களும் கற்றுப்போற்றும் காரணம் ஏற்பட்டுவிடுகிறது.

தமிழ்மொழி என்று இன்று போற்றப்படும் இது, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நாட்டின் ஒரு பகுதியில் பேசப்பட்டுவந்த கிளைமொழியிலிருந்து வளர்ந்திருக்கலாம். அதை அடுத்திருந்த கிளைமொழிகள் படிப்படியே மறைந்துபோவதற்கு வேண்டிய காரணங்கள்

ஏற்பட்டு, இந்தக் கிளைமொழியே பொதுமொழியாய் நாடெங்கும் பரவியது எனலாம்.

காரணங்கள்

கிளைமொழியிலிருந்து பொதுமொழியில் இடம்பெறும் கூறுகள் எவை? இடம் பெறாமல் மறைவன எவை? இன்னவை என்று வரையறுத்துச் சொல்வது இயலாது. செல்வாக்கில் உள்ளவர்கள் கூறுவனவற்றிற்குச் சிலவேளைகளில் மதிப்பு ஏற்பட்டு, அவை பொதுமொழியில் வாழ்வு பெறுகின்றன. சிலவேளைகளில், நாட்டின் தலைநகர் போன்ற சிறப்புப் பெற்ற இடங்களில் வழங்குவன வாழ்வு பெறுகின்றன. சில வேளைகளில் இலக்கிய ஆட்சி பற்றிச் சில கூறுகளுக்கு மதிப்பு ஏற்படுகின்றது. உயர்ந்தவர் எனப்படும் மக்களால் வழங்கப்படுவன ஏற்கப்படுதலும் உண்டு. இலக்கண விதிகளுக்கு உட்பட்டவை ஏற்கப்படுதலும் உண்டு. ஒலிநயம் முதலிய சிறப்புப் பற்றி ஏற்கப்படுவனவும் உள்ளன. பெரும்பான்மையான மக்களால் பேசவும் போற்றவும் படும் கூறுகள் பொதுமொழியில் இடம்பெறுதலும் இயற்கையாகும். காலப்போக்கில், செல்வாக்கு, இடச்சிறப்பு, இலக்கிய ஆட்சி, உயர்ந்தோர் ஆட்சி, இலக்கண அமைதி, ஒலிநயம் முதலிய காரணங்களிடப் பெரும்பாலோரின் போற்றுதல் சிறந்த காரணமாக விளங்குகிறது.

எல்லா நாட்டு மொழிகளிலும் இத்தகைய வரலாறு காணப்படுகிறது. இன்று பிரெஞ்சுமொழி எனக் கூறப்படுவது, பிரான்ஸ் நாட்டின் ஒரு சிறு பகுதியினர் பேசி வந்த கிளைமொழியிலிருந்து வளர்ந்தது என்பர். பிரான்சின் தென்பகுதியில் சிறப்புடன் செழித்துவந்த மற்றொரு மொழி நெடுங்காலம் அதற்குப் போட்டியாக இருந்து

வந்தது என்றும், பிரான்ஸ் நாட்டை ஒரு குடைக்கீழ்க் கொணரும் முயற்சியால் வடபகுதிகள் ஒன்றுசேர்த்து ஆளப்பட்டபோது அப் பகுதிகளில் வழங்கிய மொழியே ஆட்சிமொழியாக வளர்ந்து நாடு முழுதும் பரவிவிட்டது என்றும் கூறுவர். இத்தாலி மொழிஎன்பது டஸ்கனி என்னும் பகுதியில் இருந்த கிளைமொழியின் வளர்ச்சியே என்று கூறுவர். ஆல்ப்ஸ் மலைக்கும் சிசிலிக்கும் இடையே கணக்கற்ற கிளைமொழிகள் வழங்கிவந்த இத்தாலி நாட்டில், மற்றவை எல்லாம் மறைய டஸ்கனி மக்கள் பேசிய கிளை மொழியே செல்வாக்குப் பெற்று இத்தாலி நாட்டுப் பொது மொழியாய் வளரலாயிற்று. டஸ்கனி மொழியைக் கற்ற வர்கள் ஒருமனமாய்ப் போற்றியதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

லத்தீன் மொழி என்பது இத்தாலியின் நடுவே தனித் திருந்த ஒரு மாவட்டத்தாரின் கிளைமொழியாக இருந்த தாம். ரோமப் பேரரசு அமைந்த காலத்தில் அது பொது மொழியாக வளர்ந்துவிட்டது. அது முதலில் பரவத் தொடங்கியதற்குக் கற்றவர்களின் முயற்சி காரணமாக இல்லை. படைத்தலைவர்களும், படைவீரர்களும் ஆட்சி நடத்திய அதிகாரிகளுமே அது பரவக் காரணமாக இருந் தனர்.

இவற்றை ஆராயின், மொழிக்கு உள்ள சிறப்பால் அல்லாமல், வேறு பல காரணங்களால் அது உயர்ந்தோங் கிப் பொதுமொழியாய்த் தழைக்கின்ற உண்மையை உணரலாம்.[1]

1. Each was, at the outset, one out of a number of kindred but more or less diverse forms of speech, and the predominance which it came to gain over them was the result, not of its inherent merits as an instrument of thought and

தலைநகரச் செல்வாக்கு

தலைநகரங்களின் மொழியே நாட்டின் பொதுமொழி யாக அமைதல் உண்டு. இவ்வாறு பொதுமொழியாக அமையும் தலைநகரங்களின் மொழியில் கிளைமொழிகள் இரண்டு தம்முள் போரிட்டு ஒன்றை ஒன்று வெல்லும் நிலைமை இல்லை. சென்னை போன்ற நகரங்களில் பிறந்து வாழும் மக்களின் தொகையைவிட வந்து குடியேறும் மக்களின் தொகை மிகுதி. அடுத்துள்ள மாவட்டங்களி லிருந்து குடியேறும் மக்கள் ஒருபுறமும், தொலைவில் உள்ள மாவட்டங்களிலிருந்து வந்து குடியேறும் மக்கள் மற்றொரு புறமுமாக, பல வேறு இடங்களிலிருந்து மக்கள் குடியேறு வதால், கிளைமொழிகள் பல வந்து சேர்கின்றன. அதனால் சென்னைத் தமிழ் என்று கூறப்படும் ஒன்று இன்னது என்று வரையறுப்பது அரிதாகின்றது. எல்லா நாட்டு வரலாறுகளிலும் தலைநகரத்து மொழி செல்வாக்குப் பெற்று வளர்ந்துவருதல் உண்மையே. ஆயின், அந்தத் தலைநகரத்து மொழி, உள்ளூரார் பேசும் மொழியா? வந்து குடியேறியவர் பேசும் கிளைமொழியா? வந்தவரின் மொழி எனின், எந்த இடத்தாரின் மொழி? அது வெற்றி பெற்றது எவ்வாறு? கிளைமொழி ஒன்றே எல்லாத்துறை யிலும் வெற்றி பெற்றுப் பொது மொழி ஆகின்றது எனக் கூறல் இயலாது.

அரசியல் துறையில் ஒரு மாவட்டத்து மக்கள் செல்வாக்குப் பெற்றுத் தலைநகரில் வாழலாம். அதனால் அரசியல் துறையில் அவர்களின் கிளைமொழியும் செல்

---

means of communication, but of outward circumstances, which made its usages worth the acquisition of a wider and wider community.—Whitney, Language and the Study of Language, p. 164.

வாக்குப் பெற்றுவிடும். இவ்வாறே சமயத்துறையில் ஒரு மாவட்டத்தாரின் கிளைமொழி வாழ்வு பெறும்; வாணிகத் துறையில் மற்றொரு மாவட்டத்தாரின் கிளை மொழி செல்வாக்குப் பெறலாம்; கைத்தொழில் துறையில் இன்னொரு மாவட்டத்தாரின் மொழி இடம் பெறலாம்; தலைநகரிலேயே பிறந்து வாழும் மக்களின் கிளைமொழியும் ஓரிரு துறையில் வெற்றி பெறலாம். இவ்வாறு ஒவ்வொரு துறையில் ஒவ்வொன்றன் வெற்றியாக, தலை நகரின் மொழி, பலவும் கலந்த பொதுமொழியாக விளங்க இடம் உள்ளது. லண்டன் மாநகர ஆங்கிலம் இங்கிலாந்தின் பொதுமொழியாக விளங்கிய போதிலும், அந்தப் பொது மொழி லண்டன் மக்களின் கிளைமொழி அன்று. நல்ல ஆங்கிலத்தைச் சிறந்த முறையில் பேசுவோர் யார் எனின், உள்ளூராரைப்போல் ஒலித்தல் முதலியன இல்லாமல் பேசு வோரே என்கிறார் அறிஞர் ஸ்வீட். பாரிஸ் முதலிய தலை நகர மொழிகளும் அவ்வாறு அமைந்தனவே ஆகும். ஆகவே, தலைநகர மொழி என்பது, பல வேறு கிளைமொழி கள் பல வேறு துறைகளில் வெற்றி பெற்றுக் கூட்டாட்சி யாக அமைந்த ஒன்று ஆகலாம்.[1]

இலக்கியமொழி பொதுமொழியா?

பொதுமொழி என்று குறிக்கப்படுவது வேறு; இலக்கிய மொழி வேறு. பொதுமொழி மக்கள் எல்லோ ருக்கும் விளங்குவது. இலக்கியமொழி கற்றுத் தேர்ந்த சிலர்க்குமட்டும் விளங்குவது. பொதுவாக எழுதத்

1. The population of a great town comes to talk in a manner which one would not expect from its geographical situation.....The common languages have been in the main evolved in Athens, Paris, London, etc., but not by born Athenians, Parisians or Londoners. —Otto Jespersen, Mankind Nation and Individual, p. 65.

தெரிந்த எல்லோராலும் எழுதப்படுவது பொதுமொழி. புலமை நிரம்பித் தேர்ந்த சிலரால் எழுதப்படுவது இலக்கிய மொழி. குழூஉக்குறியாக வழங்கும் சொற்களைக் கற்றுக் கொள்ள வாய்ப்பும் பயிற்சியும் தேவையாவதுபோல், இலக்கிய மொழியைக் கற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பும் பயிற்சியும் தேவை. அதுபற்றி இலக்கிய மொழியைச் செயற்கை மொழி என்று கூறுதல் உண்டு. வெண்ட்ரியே என்னும் அறிஞர், இக் காரணத்தால் இலக்கிய மொழியை ஒருவகைக் குறுமொழி என்றும் குறிப்பிடுகிறார்.[1] ஆதலின் இலக்கிய மொழி வேறு; பொதுமொழி வேறு எனத் தெளிதல் வேண்டும்.

சிறப்புக்கள் அமைதல்

எந்தக் கிளைமொழி சிறந்த அறிஞர்களின் போற்றுதலைப் பெற்று இனிய ஒலியமைப்பு மிக்கதாக விளங்குகிறதோ அது மற்றக் கிளைமொழிகளைவிடச் சிறந்து விளங்கி, அவை வழங்கும் இடங்களை எல்லாம் கைப்பற்றி அந்நாட்டுப் பொதுமொழியாய் வளர்ந்துவிடும் என்கிறார் அறிஞர் விட்னே.[2] இக் கால மொழிநூலார் இக் கருத்தை உடன்படுவதில்லை. அரசியல் முதலிய செல்வாக்கின் காரணமாக எந்தக் கிளைமொழி தலையெடுத்துப் பொதுமொழியாக வளர்கின்றதோ அதற்கு மேற்கூறிய சிறப்புக்கள் எல்லாம்

1. Artistic writing is always a reaction against the standard language. To a certain extent, indeed, it is a slang, a literary slang, which is none the less a modification of current speech.—J. Vendryes, Language, p. 273.

2. That form of the common speech in each country which has enlisted in its support the best minds, the sweetest and sonorous tongues, is ever gaining ground upon the others, supplanting their usages, and promising to become and to continue to be the true popular language.—Whitney, Language and the Study of Language, p. 151.

தாமே வந்து அமைகின்றன என்பர் இன்றைய மொழியியல் அறிஞர்.

மீண்டும் போராட்டம்

கிளைமொழிகள் சிலவற்றிலிருந்தோ பலவற்றிலிருந்தோ ஒன்று வளர்ந்து பொதுவான பெருமொழியாய் வளரும் என மேலே கண்டோம். ஆயின், கிளைமொழியின் வரலாறு அவ்வளவில் முடிவதில்லை. மற்றக் கிளைமொழிகள் மறைந்து, இந்த ஒன்று பொதுமொழியாய் வளர்ந்து நிலைத்து நெடுங்காலம் ஆனபிறகு, மறுபடியும் கிளைமொழிகள் புதியனவாய்த் தோன்றுகின்றன. நாடெங்கும் வழங்கும் அந்தப் பொதுமொழி நாட்டின் பொதுவான ஆட்சி, வாணிபம், கல்வி முதலியவற்றின் அளவில் நின்றுவிடுகிறது. நாட்டின் சிறு சிறு பகுதிகளில் வாழும் மக்கள் தமக்குள் தாம் பழகுவதற்காகப் பேசும் பேச்சில், சில புதிய சொல்வழக்குகள் ஏற்படுகின்றன. அந்தப் புதிய சொல்வழக்குகள் ஓர் இடத்தில் அல்லது ஒரு குழுவினர்க்குள் பலவாய்ப் பெருகிவிட்டால், அவர்களின் பேச்சு மறுபடியும் கிளைமொழியாய் விளங்குகின்றது.

பொதுமொழிக்கும் அதைச் சார்ந்த கிளைமொழிகளுக்கும் ஒருவகையான போராட்டம் என்றும் இருந்து வருவதாகக் கூறலாம். பொதுமொழி தன் செல்வாக்கை நாட்டு மக்கள் எல்லோரிடத்திலும் செலுத்துவதால், கிளைமொழிகளின் வளர்ச்சியைத் தடுத்துவருகிறது. ஆனால், மக்களின் மனத்திலும் வாழ்விலும் காணப்படும் வளர்ச்சியும் வேறுபாடும் அவர்கள் பேசும் மொழியிலும் புகுந்து இடம் பெறுவதால், புதுப்புது மாறுதலும் வேற்றுமையும் சிற்சிலருடைய பேச்சில் ஏற்பட்டுக் கிளைமொழிகளாய்த் தலையெடுத்துக்கொண்டே இருக்கின்றன. பயிரின்

வாழ்வுக்காகக் களி பறித்தலும் மண்ணின் இயற்கையால் களி மூளைத்தலும் இருந்து வருதல் போலவே, சமுதாயக் கூட்டுறவால் பொதுமொழி செல்வாக்குப் பெறுதலும், சமுதாய வேறுபாடுகளால் கிளை மொழி தலையெடுத்தலும் என்றும் இருந்துவருகின்றன. இது தவிர, இத்தகைய போர்ட்டத்தின் பயனாக, சிறுசிறு மாறுதல்களும் பேசுவோர் அறியாமல் நேர்ந்துவருகின்றன. கிளைமொழியின் நல்ல கூறுகள் சிற்சில மெல்லப் பொதுமொழியில் இடம் பெறுகின்றன. பொதுமொழியின் செல்வாக்கால், கிளை மொழியின் பயனற்ற கூறுகள் சில மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. மொழி என்பது பேசுவோர் தம் கருத்தைப் பிறர்க்குப் புலப்படுத்தவும் பிறர் கருத்தைத் தாம் உணரவும் பயன்படுவது; இங்கும் அங்கும் மாறிமாறிச் செல்லும் காசு போன்றது; ஆகையால் இங்கிருந்து அங்குச் செல்லும்போதும் அங்கிருந்து இங்கு வரும்போதும் சிற்சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, சிலர்மொழியால் பலர்மொழி மாறுதல் பெற, பலர்மொழியால் சிலர் மொழியும் மாறுதல் பெறுகின்றது. மாறுதல் மிகமிகச் சிறிது எனினும், மெல்ல மெல்ல நிகழ்ந்தவாறே உள்ளது. சுருங்கக் கூறின், மொழி என்பது தனி மனிதன் உடைமை ஆக இருக்காமல், சமுதாயக் கருவியாக இருத்தலால், இத்தகைய மாறுதல் நிகழாமல் இருக்க முடியவில்லை.

அன்றும் இன்றும்

நாகரிகப் பழக்கமும் போக்குவரவு வாய்ப்புக்களும் குறைந்த பழங்காலத்தில் கிளைமொழிகள் மிகப் பலவாக இருந்திருக்கும். நாகரிகம் வளர்ந்து மக்கள் நெருங்கிப் பழகும் நிலை ஏற்பட்டு, அதற்கு உரிய வகையில் போக்கு வரவுக் கருவிகளும் மிகுந்துள்ள இக்காலத்தில், மக்கள்

சிறு சிறு குழுவாகப் பழகும் வாழ்வு குறைந்து, எல்லோரும் எல்லோருடனும் கூடிப் பழகும் பொது வாழ்க்கை மிகுந்துள்ளது. ஆகையால் பொதுமொழி முற்காலம்போல் சிறந்து வளர்வதற்கு இப்போது வாய்ப்பு மிகுதி. முற்காலத்தில் பொருநையாற்றங் கரையில் பிறந்து வளர்ந்த மக்களும் பாலாற்றங்கரையில் பிறந்து வளர்ந்த மக்களும் கூடிப் பழகாமலே தனித்திருக்க முடியும். ஒரு சிலர்—மிக மிகச் சிலர்—அரசியல், போர், சமயம் முதலிய காரணம் பற்றிச் சிறிது காலம் பழகிப் பிரிந்திருக்க முடியும். பெரும்பாலோர் பழகியிருக்க முடியாது; ஒரு சாராரின் பேச்சை மற்றொரு சாரார் செவியால் கேட்டிருக்கவும் முடியாது. ஆதலின் அங்கங்கே பேசப் பட்டுவந்த கிளைமொழிகள் கலப்பின்றி வளர்ந்து வாழ்ந் திருக்க முடிந்தது.

இக்காலத்தில் மக்கள் பலரும் கூடிப் பழக முடி கிறது. இடம் விட்டுச் சென்று பழகாதவர்களும் இருந்த ஊரிலிருந்தே மற்ற ஊராரின் மொழியை நாடகம், திரைப் படம், வானொலி முதலியவற்றின் வாயிலாகக் கேட்டறிய முடிகிறது. முற்காலத்தில் கிளைமொழிகளின் பழக்கமே மக்களுக்கு மிகுதி; அவரவர்கள் தம் தம் ஊராரிடம் பேசிப் பழகுவதற்கே மொழி தேவையாக இருந்தது. ஆதலின் அந்தப் பகுதியின் கிளைமொழி மட்டும் அறிந் திருந்தால் போதும் என்ற நிலை இருந்தது. இலக்கியம் கற்ற ஒரு சிலரே எல்லார்க்கும் பொதுவான எழுத்து மொழியில் பழகியவராக இருந்தனர். இக்காலத்திலோ, ஊரின் மூலையில் அமைதியாக வாழ்பவரிடத்திலும் பொது மொழி தன் செல்வாக்கைச் செலுத்துகிறது. வானொலி, செய்தித்தாள், புதிய புதிய நூல்கள் முதலியவற்றின் வாயிலாகப் பொதுமொழி மிகுதியாகப் பரவுகின்றது.

ஆதலின் கிளைமொழி ஒங்க முடியவில்லை. பழங்கால மனித னுடைய பூலை கிளைமொழியில் பெரும்பான்மை பழகிச் சிறிதுநேரமே பொதுமொழியை நாடியது என்றால், இக் கால மனிதனுடைய பூலை கிளைமொழியில் சிறிது நேரமே பழகிப் பெரும்பாலும் பொதுமொழியிலேயே படிந்துள் ளது எனலாம்.[1]

ஒரு சாதியார் மற்றச் சாதியாருடன் நெருங்கிப் பழ காமலே முற்காலத்தில் வாழ முடிந்தது. நகரத்தின் ஒரு பகுதியார் மற்றொரு பகுதியாருடன் நெருங்கிப் பழகாமலே முற்காலத்தில் வாழ்க்கை நடத்த முடிந்தது. இப்போது அவ்வாறு வாழ முடியாது. சாதி சேரி (ஊர்ப்பகுதி) முத லிய வரையறைகள் தளர்ந்து மக்கள் அனைவரும் ஒரு குடும்பமாய்ப் பழகிப் பேச நேர்ந்துள்ளது. சாதிகளுக் குள்ளும் சேரிகளுக்குள்ளும் வரையறைகள் தளரவே, சாதிமொழி சேரிமொழி முதலிய கிளைமொழிகளுள் வேறுபாடு குறைந்து பொதுமொழி வளர்கின்றது,[2]

---

1. The dialectal or semi-dialectal differences within the limits of the same language and the same community, tend to become greatest when the differences between classes and sections are greatest. Mutual understanding is the force that is both restrictive and communicative, because it is by its means that an innovation in a speech is communicated to others and possibly accepted by them. Whatever, therefore, tends to increase communication like education, newspaper, trade, travel, railway, etc., also tends to make for unity in speech.—P. D. Gune, An Introduction to Comparative Philology, p. 17.

2. If communication is thus the assimilating force which averages and harmonizes the effects of discordant individual action on language, keeping it, notwithstanding incessant changes, the same to all the members of the same community, then it is clear that everything which narrows communication, and tends to the isolation of communities, favours the

பொதுமொழியின் செல்வாக்குக்கு உரிய மற்றொரு பெரிய வாய்ப்பும் இக்காலத்தே உள்ளது. முற்காலத்தே பெரிய நகரங்கள் ஏற்பட்டபோது, அவற்றின் அண்மையிலிருந்த சிற்றூர்களிலிருந்தே மக்கள் வந்து குவிந்தனர். சுற்றுப்புறச் சிற்றூர்களிலிருந்து வந்தவர்கள் சேர்ந்து நகர மாந்தராய்க் கூடி வாழ்ந்தனர். நாட்டின் மூலை முடுக்குகளில் அமைந்த ஊர்கள் பெரும்பாலும் மாறுதல் இன்றியே கிடந்தன. இப்போதோ, சென்னை போன்ற பெரிய நகரங்களில் வந்து சேரும் மக்கள், அவற்றின் எல்லையில் உள்ள சிற்றூர்களின் மக்கள் மட்டும் அல்லர். நாட்டின் மூலைமுடுக்கில் உள்ளவர்கள் பலரும் பெரு நகரங்களில் சென்று சேர்கின்றனர். சென்னையை எடுத்து ஆராய்ந்தால், அந் நகரில் வடஆர்க்காடு செங்கற்பட்டு மாவட்ட மக்கள் மட்டும் அல்லாமல், தஞ்சை திருச்சி மதுரை இராமநாதபுரம் நெல்லை முதலாய பல மாவட்ட மக்களும் குடியேறி நகர மாந்தராய் வாழ்கின்றனர்.

ஆகவே, சென்னையில் பலவகைக் கிளைமொழிகளும் வந்து சேர்கின்றன எனலாம்;[1] சென்னைமொழி பல மாவட்டக் கிளைமொழிகளிலும் சென்று சேர்ந்து கலப்புறுகின்றது எனலாம். பல மாவட்டங்களிலிருந்து

---

separation of a language into dialects; while all that extends communication, and strengthens the ties which bind together the parts of a community, tends to preserve the homogeneity of speech.—Whitney, Language and the Study of Language, p. 158.

1. I have not yet mentioned one of the most important factors in the unification of language, viz., the rise of great towns.....It rests on the fact that towns suck in a mass of people not only from their immediate environs, but from more remote districts.—Otto Jespersen, Mankind Nation and Individual, p. 65.

சென்னைக்கு வருதல் போலவே, சென்னையில் உள்ள இவர்கள் அடிக்கடி பல மாவட்டங்களுக்கும் சென்று, புதிய சொல்வழக்குகளைப் பரப்பிவருகின்றனர். கிளைமொழிகளின் கலப்பு மிகுதியாவது போலவே, பொதுமொழியின் செல்வாக்கும் மிகுதியாகின்றது. கிளைமொழிகளிடையே வேறுபாடுகள் குறைதல் பொதுமொழியின் வாழ்வுக்கும் வெற்றிக்கும் வழிவகுத்தாற்போல் ஆகின்றது.

கருத்துணர்த்தும் அவா

இவ்வாறெல்லாம் போக்குவரவுக் கருவிகளும் பெருநகர அமைப்புக்களும் செய்யும் மாறுதல்களுக்கு அடிப்படையானது, மனிதன் பிறர்க்குத் தன் கருத்தை உணர்த்த விரும்பும் இயல்பான அவாவே ஆகும். இந்த மனித இயல்புதான் மக்களினத்தைச் சமுதாயமாய்ப் பிணைத்துவைத் திருப்பதுமாகும். மனிதன் மற்றத் துறைகளில் தன் உரிமையையே மிகுதியாக நினைக்கிறான்; தன் விருப்பத்தையே பிறரிடம் செலுத்த முனைகிறான். ஆனால் மொழித்துறையில் மட்டும் வேறுவகையாக நடக்கிறான். தன் கருத்தைப் பிறர்க்கு உணர்த்தும் அவா இயல்பாக அமைந்துள்ள காரணத்தால், தான் விரும்பும் வகையில் பிறரிடம் பேச முனைவதில்லை. அவ்வாறு பேசினால், பேச்சு விளங்காதபோது தன் நோக்கமே கெடுவதை உணர்கிறான். ஆகவே, தன் உரிமையை மறந்து, தன் விருப்பத்தைத் தடுத்து, பிறர் விரும்பும் வகையில், பிறர்க்கு விளங்கும் மொழியில் பேச முயல்கிறான். இதனால்தான், அவன் நன்கு அறிந்த கிளைமொழியின் கூறுகள் அடங்கி, அவன் அரைகுறையாக அறிந்துள்ள பொதுமொழிக் கூறுகள் மேலோங்குகின்றன. இவ்வாறு ஒவ்வொருவர் பேச்சிலும் ஏற்படும் மாறுதல்கள் எல்லாம் திரண்டு, பொதுமொழியின் வளர்ச்சிக்குக் காரணமாகின்றன.

ஒருபொருட் கிளவிகள்

பூனையின் இளமைப் பெயராக ஒன்றும், மாட்டின் இளமைப் பெயராக மற்றொன்றும் இலக்கியத்தில் உள்ளன. இவ்வாறு இருக்கக் காரணம், ஒவ்வொரு விலங்கின் இளமைக்கும் ஒவ்வொரு பெயர் இருக்கவேண்டும் என்பது அன்று. பூனையின் இளமைப் பெயராகக் கிளைமொழி ஒன்றில் குட்டி என்பது வழங்கியிருக்கலாம். கிளைமொழிகளிலிருந்து பொதுமொழிக்குச் சொற்கள் புகுதல் இயற்கையாகையால், குட்டி என்ற சொல் இந்தக் கிளைமொழியிலிருந்து புகுந்து பொதுமொழியில் சில விலங்குகளைப் பொறுத்தவரையில் வழங்கி நின்றிருக்கலாம். அவ்வாறே கன்று என்ற சொல் வேறொரு கிளைமொழியிலிருந்து புகுந்து மாடு முதலிய சில விலங்குகளைப் பொறுத்த வரையில் நின்றிருக்கலாம். குட்டி, கன்று என்ற இரண்டு இளமைச் சொற்களையும் ஏற்ற பொதுமொழி, முன்னதைச் சிலவற்றிற்கும் பின்னதை வேறு சிலவற்றிற்கும் வழங்கியிருக்கலாம். இலக்கியம் எழுதுவோர் அந்த மரபை மறவாமல் போற்றிவந்தனர். அதனால் இலக்கணம் எழுதிய ஆசிரியர் அந்த மரபை ஆராய்ந்து இன்ன இன்னவற்றிற்கு இன்ன இன்ன சொற்கள் என்று விளக்கிச் சென்றனர்.

காலப்போக்கில் சொற்களில் காலத்தைச் செலவிடாமல், கருத்துக்கள் வளர்ந்து அவற்றில் உள்ளத்தைச் செலுத்தும் அறிவுவளர்ச்சி மிக்க நிலையில், பலவகைச் சிறப்புச் சொற்களை விட்டு ஒருசில பொதுச்சொற்களை மட்டும் மக்கள் போற்றத் தலைப்படுகின்றனர். ஐரோப்பாவிலும் உழவர் ஆயர் வேட்டுவர் முதலானோர் ஒவ்வொரு வகை விலங்குகளுக்கும் ஒவ்வோர் இளமைப்பெயர் வழங்குகின்றனராம். ஆயின் பொதுமொழியிலோ இலக்கிய

மொழியிலோ பொதுவான இளமைப் பெயர் மட்டுமே பயின்று வழங்குகின்றது.[1]

தொடக்கத்தில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு கூட்டத்தார் ஒவ்வொரு பெயர் வைத்திருப்பர். தமிழ் நாட்டிலேயே ஒரு பகுதியினர் 'மலர்' என்றும், அதையே மற்றொரு பகுதியினர் 'பூ' என்றும், இன்னொரு பகுதியினர் 'வீ' என்னும் பெயராலும், வேறொரு பகுதியினர் மற்றொரு பெயராலும் வழங்கியிருப்பர். இவ்வாறே பல ஊர்களில் பல பெயர்கள் வழங்கியிருக்கக்கூடும். நாளடைவில் ஒலி நயமில்லாத பெயர்கள், செல்வாக்கில்லாதவர்கள் வழங்கிய பெயர்கள், தெளிவில்லாத பெயர்கள் எல்லாம் அழிய, 'மலர்,' 'பூ' என்ற இரு சொற்கள் மட்டும் நின்றன. பேச்சுவழக்கை மட்டும் நோக்கினால், 'பூ' என்ற ஒரு சொல் மட்டுமே இன்று உள்ளதாகக் கூறலாம். 'வீ' என்ற சொல்லும் 'மலர்' என்ற சொல்லும் இலக்கியங்களில் இடம் பெற்றுவிட்டமையால் இன்றுவரையில் அறியப்படுகின்றன. அவற்றுள்ளும், 'வீ' என்பது பிற்கால இலக்கியங்களில் இடம் பெறாமல், 'மலர்' என்ற ஒன்றுமட்டுமே இலக்கிய வாழ்வு பெற்றது. இலக்கியம் இல்லையாயின், அதுவும் மறக்கப்பட்டுப் 'பூ' என்ற ஒரு சொல்லே நின்றிருக்கும். இவ்வாறே தமிழ்நாட்டில் ஒவ்வொரு பொருளுக்கும் வெவ் வேறு பகுதியில் வெவ்வேறு பெயர் வழங்க, பல சொற்கள் இருந்திருக்கும்; நாளடைவில் செல்வாக்கு, தெளிவு, ஒலி நயம் முதலிய காரணங்களால் ஒன்றுமட்டும் வாழ, மற்றவை அழிந்தன.

1. When the literary language speaks of the young of all sorts of animals, farmers, shepherds, and sportsmen would be ashamed to use so general a term.—Max Muller, The Science of Language, p. 69.

இவ்வாறே வினைச்சொற்களிலும் ஒரு கிளைமொழியார் 'விடு' என்பதன் இறந்தகாலமாக 'விடித்து' என்பதை வழங்கியிருக்க, மற்றொரு கிளைமொழியினர் 'விட்டு' என்பதை வழங்கியிருப்பர். நாளடைவில் பின்னது பொது மொழியில் நிலைத்துவிட்டது. 'விடித்து' என்பது இலக்கியங்களில் சில இடங்களில் மட்டும் காணப்படுகிறது. 'கொடு' என்பதன் இறந்தகாலமாகக் 'கொடித்து' என்பதே பொதுமொழியில் வழங்குகிறது. ('விட்டு' என்பது போல்) 'கொட்டு' என்பது தமிழ்நாட்டின் வடமேற்குப் பகுதியில் கிளைமொழியில் வழங்கியிருந்து மறைந்திருக்கக் கூடும். இன்றும் கன்னடமொழியில் 'கொட்டு' என்பதே (கொடித்து என்னும் பொருளில்) இறந்தகால வினையெச்சமாக வழங்கிவரச் காணலாம்.

இவ்வாறு கிளைமொழிகளில் உள்ள வேறுபாடுகள் பொதுமொழியில் புகுந்து இடம்பெற்றபோதிலும், அவை படிப்படியாய் மறைய, ஒரு பொதுத்தன்மை நிலவக் காணலாம்.

கஅ. சிறப்பு மொழி

வேறுபடும் வகை

வழக்கறிஞர்களின் சட்ட நூல்களையும் விளக்கங் களையும் படித்தால், அவர்களின் மொழியில் சிறப்புக் கூறுகள் சில காணலாம். அவர்கள் நீதிமன்றங்களில் வழக்காடும்போது பேசும் பேச்சில் அவற்றை மிகுதியாகக் கேட்கலாம். எல்லோரும் பேசும் பொதுமொழி அவர் களின் எழுத்திலும் பேச்சிலும் உண்டு. அந்தப் பொது மொழியோடு, இத்தகைய சிறப்புக் கூறுகளும் கலப்பதால், அவர்களின் மொழி வேறுபட்டு நிற்கின்றது.

சமய அறிஞர்களின் எழுத்திலும் பேச்சிலும் இவ் வாறே பொதுமொழியுடன் கலந்துள்ள சிறப்புக்கூறுகள் உள்ளன. அதனால் அவர்களின் மொழியும் வேறுபட்டு நிற்கின்றது.

வாணிகத் துறையிலும் மருத்துவத் துறையிலும் ஈடு பட்டுள்ளவர்களின் மொழியிலும் இத்தகைய சிறப்புக் கூறுகள் சில உள்ளன. தொழிலாளர்களின் மொழிகளும் இவ்வாறே வேறுபடுகின்றன. உழவர்களின் மொழிக்கும் கொல்லர்களின் மொழிக்கும் வெவ்வேறு சிறப்புக்கூறுகள் உள்ளன. நாட்டுப்புறக் கணக்கர்க்கும் அரசாங்கத்தின் தலைமை அலுவலகங்களின் கணக்கர்க்கும் மொழித் துறையில் வேறுபாடு உண்டு.

இவ்வாறு தொழில் முதலாய காரணம் பற்றி அமையும் குழுவினர்க்குள் மொழியில் அமையும் சிறப்புக் கூறுகளைக் கருதி, அவர்களின் மொழிவகைகளைச் சிறப்பு மொழிகள் (special languages) எனக் கூறுவர். அவற்றையும் கிளைமொழிகள் என்றோ குறுமொழிகள் என்றோ கூறு வோரும் உள்ளனர்.

இத்தகைய சிறப்புமொழிகளில் பொதுமொழியின் கூறுகள் மிகுந்திருக்கின்றன; சிறப்புக் கூறுகள் சிற்சிலவே உள்ளன. எனவே, இவை யாவும் பொதுமொழியிலிருந்து வளர்ந்தவைகளே என்றும், சட்டம் சமயம் வாணிகம் முதலிய துறைகளுக்குப் பயன்படுமாறு பொதுமொழியைச் சிறிது வேறுபடுத்தி அமைத்துக்கொண்டவைகளே என்றும் உணரலாம். வேறுபாடுகள் எவ்வளவில் நிகழ்கின்றன எனின், சொற்றொடர், சொல்லிலக்கணம் முதலியவற்றில் அல்ல; சில புதிய சொற்கள் இடம்பெறுகின்றன; சில பழைய சொற்களுக்குப் புதிய பொருள்கள் கற்பிக்கப்படுகின்றன; இவ்வளவே வேறுபாடு எனலாம்.

உயர்வு தாழ்வு

பொதுமொழியின்மீது வளர்ந்தமைந்த சிறப்புக் கூறுகளுள் உயர்ந்தனவும் உண்டு; தாழ்ந்தனவும் உண்டு. சமய அறிஞர், சட்ட அறிஞர், உரையாசிரியர் முதலியவர் படைத்து வழங்கும் சிறப்புக்கூறுகள் உயர்ந்தவை; பள்ளிச் சிறுவர், இழிதொழிலோர், சிறைக் கைதிகள், போக்கிலிகள் முதலியவர் படைத்து வழங்கும் சிறப்புக் கூறுகள் இழிந்தவை.[1] இத்தகைய இழிந்த கூறுகளேமட்டும் கொச்சைச் சொற்கள் என்ற பெயரால் வழங்குதல் உண்டு. உண்மையை ஆராய்ந்தால், இந்த உயர்வும் தாழ்வும் அவற்றை வழங்கும் மக்களின் உயர்வுதாழ்வுக்கு ஏற்ற

1. The word slang is nowadays a very vague term. In reality it is only another name for special language, and there are as many kinds of slang as there are specialized groups. Slang is characterized by its infinite variety; it is constantly being modified, accordiug to circumstances and places..... There is a school-boy slang which differs with each school, and sometimes with each form.—J. Vendryes, Language, pp. 250-251.

வாறு அமைந்தனவே அல்லாமல், அந்தந்தச் சொற்களின் உயர்வுதாழ்வு கருதி அமைந்தன அல்ல. பள்ளிச் சிறுவன் 'தண்டனை கிடைக்கும்' என்பதைப் 'பூசை விழும்' என் கிறான். குற்றவாளி 'சிறை' என்பதை 'மாமியார் வீடு' என்கிறான். இவர்களின் நிலையை நோக்கி, இவர்கள் வழங் கும் சொற்களைக் கொச்சைச் சொற்கள் என்கிறோம். சமய அறிஞர் உணவைத் 'திருவமுது' என்று கூறும்போது அவ்வாறு இழிவுள்ளதாகக் கூறுவதில்லை. சட்ட அறிஞர் மூதலானோர் பேசும் சொற்களையும் அவ்வாறு இழிவாகக் கருதுவதில்லை. இவர்களின் உயர்நிலைநோக்கி, இவர்கள் வழங்கும் சொற்களைச் சிறப்புக்கூறுகள் என்கிறோம்.

வழங்கும் மக்களின் நிலையை மறந்து, இந்தச் சொற் கள் புதிய பொருளுடன் வழங்கப்படும் காரணத்தையும் தன்மையையும் மட்டும் ஆராய்ந்தால், கொச்சைச் சொற் கள் எனவும் சிறப்புக் கூறுகள் எனவும் வேறுபாடு செய்ய வேண்டியதில்லை என உணரலாம். இருவகை மொழிகளையும் 'சிறப்புமொழிகள்' என்ற இப் பெயரால் குறிப்பிடுதல் பொருந்துவதாகும். எல்லாம் அந்தந்தத் துறைகளின் தேவைகளை ஒட்டிப் புத்துணர்ச்சி தரும் வகையில் ஆக்கப் படுவனவே ; உயர்ந்தோர் ஆயினும், இழிந்தோர் ஆயினும் தம்தம் சூழலில் சில புதிய கருத்துத் தெளிவை ஏற்படுத்து வதற்காகவே, புதிய சொற்களைப் படைக்கின்றனர் ; அல் லது, பழைய சொற்களுக்குப் புதிய பொருள்களைக் கற்பிக் கின்றனர். அறிவியல் முதலிய துறைகளில் கலைச்சொற்கள் (technical terms) என்று படைத்துக்கொள்ளப்படும் சொற்களும் இவ்வகையைச் சார்ந்தனவே ஆகும்.

சிறப்புமொழிகள் (special languages) அந்தந்தக் குழுவினர் தமக்குள் பயன்படுவதற்காகத் தாமே வேண்டு மென்று பொதுமொழியுள் சிலவற்றை மாற்றி அமைத்துக்

கொண்டவை; மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு நிற்கும் முயற்சியை அடிப்படையாகக் கொண்டவை. எனவே அவை பொதுமொழியின் மீது வளர்ந்து அமைந்தவை எனலாம்.[1]

கிளைமொழியும் சிறப்புமொழியும்

கிளைமொழிகள் (dialects) முற்றிலும் வேறுபட்டவை. அவை இயற்கையாக அமைந்தவை; இயற்கைப் பிரிவுகளாலோ, அரசியல் சமூகப் பிரிவுகளாலோ அந்தந்த இடங்களில் வாழ்வோர் வேறுபட வழங்கும் மொழிகள் அவை. மற்றவர்களிடமிருந்து வேறுபட வேண்டும் என்ற முயற்சி இவற்றைப் பேசுவோரிடம் இல்லை. வேறுபாடு அவர்கள் அறியாமல் இயல்பாகவே அமைந்துவிடுகின்றது. இயல்பாக வேறுபட்டு நின்று வாழும் இவற்றினின்றும் வளர்ந்த மொழியே பொதுமொழியாகும். எனவே, சிறப்பு மொழிகள் பொதுமொழியின் மீது வளர்ந்தது போல் அல்லாமல், கிளைமொழிகள் பொதுமொழியின் வளர்ச்சிக்கே அடிப்படையாய் உள்ளவை.[2]

மற்றொரு வேறுபாடும் உள்ளது. கிளைமொழியை ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள எல்லோரும் பேசுவர். ஆயின், சிறப்புமொழி ஒரே இடத்தில் அவரவர் மனப்பான்மைக்கும் தொழிலுக்கும் ஏற்ற வேறுபாடு பெறும்.

---

1. Special languages are the result of social divisions. In principle, therefore, they are as natural as dialects, but they are always born of the very heart of a common language, from which they usually continue to draw their sustenance. —J. Vendryes, Language, p. 259.

2. Dialects have always been the feeders rather than the channels of a literary language; Anyhow, they are parallel streams which existed long before the time when one of them was raised to that temporary eminence which is the result of literary cultivation.—Max Muller, The Science of Language, p. 55.

சட்டம் சமயம் முதலிய துறைகளில் உள்ள சிறப்பு மொழிக் கூறுகள் எழுதிவைக்கப்படுதலால் நிலைத்து நிற்கின்றன. பள்ளிச் சிறுவர் முதலானோரின் சிறுமொழிக் கூறுகள் (slang) கதையாசிரியர்களும் நாடக ஆசிரியர்களும் எழுத்து வடிவில் பொறித்து வைத்தபோதிலும், பேசும் மக்கள் வேறுகவும் எழுதும் மக்கள் வேறுகவும் இருத்தலால், நிலைபேறுன் வாழ்வு பெறுவதில்லை. ஆகையால், விரைவில் மாறிப்போகின்றன. போன தலைமுறையில் பள்ளிச் சிறுவர்களின் பேச்சில் இருந்த சிறப்புக் கூறுகள் பல இந்தத் தலைமுறைச் சிறுவர்களின் பேச்சில் இல்லாமற் போகின்றன; போன தலைமுறையினர்க்குத் தெரியாத புதிய சொற்கள் நுழைந்துவிடுகின்றன. ஆகையால், பேச்சளவில் நிற்கும் சிறப்புமொழிக்கூறுகள் விரைவில் மாறுதல் அடைகின்றன.

கிளைமொழிகள் அவ்வாறு மாறுவதில்லை. சிறப்பு மொழிகள்போல் வேறுபாடு கருதிப் படைக்கப்பெறுமல், இயற்கையாக மக்களிடையே வழங்கிவருதலால், கிளை மொழிகள் தலைமுறை தலைமுறையாக அவ்வாறே உள்ளன. பாண்டி நாட்டுத் தமிழ் பல தலைமுறைகளாக ஒரேதன்மை யாக விளங்க, அந்த நாட்டுப் பள்ளிச் சிறுவர்களின் பேச்சுக்கள் மாறி மாறி வழங்குவதற்குக் காரணம் இதுவே ஆகும்.

பொருள் விளங்கும் முறையிலும் கிளைமொழிக்கும் சிறப்புமொழிக்கும் வேறுபாடு உள்ளது. ஆற்றின் வட கரையில் வாழ்வோர் பேசும் மொழி தென்கரையினர்க்கு ஏறக்குறைய விளங்கும். தென்கரையினரின் கிளைமொழி யும் வடகரையினர்க்குப் பெரும்பாலும் விளங்கும். ஆயின், சிறப்புமொழி இவ்வாறு விளங்குதல் அரிது. மருத்துவர்

இருவர் பேசிக்கொள்ளும் மொழி மற்றவர்க்கு எளிதில் விளங்காது. வாணிகரின் பேச்சு வாங்குவோருக்குத் தெரியாது. ஒரு சமயத்தைச் சார்ந்தோரின் சொற்கள் பல மற்றொரு சமயத்தார்க்கு விளங்குவதில்லை. விளங்க வேண்டுமாயின், அவர்களோடு கலத்தலும் சிலகாலம் பழகுதலும் வேண்டும். கலந்து பழகும் வாய்ப்பு இல்லாவிடின் விளங்க வழி இல்லை. தச்சுத்தொழில், மருத்துவத்தொழில் முதலியவற்றில் முதலில் இடம் பெற்று, இடம்பெற்றபின் பழகும் வாய்ப்பும் பெற்றலன்றி, அந்தந்தத் தொழில் நுட்பங்கள் விளங்குவதில்லை. அவைபோலவே, சிறப்பு மொழியும், அந்தக் குழுவினரிடையே பழகும் வாய்ப்புப் பெற்றவர்களுக்கே விளங்கக்கூடியதாகும்.

இலக்கிய மொழி

இந்தக் காரணம் பற்றியே, சட்ட நூல்கள், சமய நூல்கள், மருத்துவ நூல்கள் முதலியவற்றைக் கற்கப் புகுவார்க்கு வல்லார் ஒருவரின் துணை இன்றியமையாததாக உள்ளது. பழங்காலத்து இலக்கியத் துறையிலும் இத்தகைய துணையும் பயிற்சியும் தேவையாக உள்ளன. இலக்கியத்தை ஆக்கி அளித்த புலவர்கள் தம் எழுத்திற்கென்றே தனியாக மொழியைச் செம்மைப்படுத்தி அமைத்துக் கொண்டுள்ளனர். அதனால் பழைய இலக்கிய மொழியும் ஒரு சிறப்பு மொழியே என்பது அறிஞர் வெண்ட்ரியே கருத்தாகும்.[1]

---

1. In many countries, men of letters, poets or story-tellers, formed a caste apart, with traditions, customs and previleges of their own; their language, therefore, had all the characteristics of a special language, necessitating initiation, and imposing an apprenticeship to the craft.—J. Vendryes, Language, p. 272.

குறுமொழியும் ஒருவகைச் சிறப்புமொழி என்னும் கொள்கையினர் அவர். ஆதலின், இலக்கிய மொழியும் குறுமொழியே என்கிறார். ஆயின், அதைச் சட்ட மொழி முதலியவைபோல் சிறப்புமொழி (special language) என்று வேறுபடுத்திக் கூறுவது பொருந்தும்.[1]

---

1. "Artistic writing" is always a reaction against the standard language. To a certain extent, indeed, it is a slang, a literary slang, which is none the less a modification of current speech.—Ibid, p. 273.

கசஞ. குறுமொழி

செயற்கை

பொதுமொழியிலிருந்து வேறுபட்டு இயல்பாக அமையும் மொழி கிளைமொழி; அதுபோலவே, பொது மொழியிலிருந்து வேறுபட்டுச் செயற்கையாக அமைக்கப் படும் மொழிக்கூறுகள் சில உண்டு; இவை குறுமொழி (slang) எனக் குறிக்கப்படும். இவை இழிந்தோர் வழக்கில் பெரும்பாலும் இருத்தலால், பொதுவாகக் கற்றவரால் விலக்கப்படும். பள்ளிகளில் ஒன்று சேர்ந்து விளையாடும் மாணவர்கள், திருடர்கள், கள்ள வாணிபம் செய்வோர் முதலிய பல குழுவினர் தமக்குள் வழங்கும் மொழிகள் இவ் வகையைச் சாரும். பொதுமொழியில் உள்ள சில சொற்களுக்கே இவர்கள் வேறு பொருள்களைக் கற்பித்து வழங்குவர். 'அளக்கின்றான்' என்றால் நெல் முதலியவற் றைச் சில கருவிகளால் அளக்கின்றான் என்பது பொது மொழியின் பொருள். ஆயின், 'விரிவாகப் பேசுகிறான்' 'பொய் மிகக் கலந்து பேசுகிறான்' என்று பொருள்பட இன்று சில வேளைகளில் வழங்கப்படுகிறது. 'நடந்து காட்டு' 'கம்பி நீட்டு' என்பவற்றிற்கு 'இன்னும் இங்கே நிற்காமல் உடனே போய்விடு' என்பது பொருளாவதும் அப்படியே ஆகும். இவ்வாறு நோக்கினால் ஒவ்வொரு சாரா ரிடத்தும் தனிச் சிறப்பாக உள்ள மொழி எல்லாம் குறு மொழியே யாகும்.[1]

கவர்ச்சியும் வேறுபாடும்

மொழிவழக்கை இயல்புவழக்கு, தகுதிவழக்கு என இருவகையாகப் பகுத்து, இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக்

1. Slang owes its character chiefly to a difference in vocabulary.—J. Vendryes, Language, p. 251.

குறி என்பன மூன்றும் தகுதிவழக்கு என இலக்கணம் கூறும். இவற்றுள் குழூஉக்குறி என்பது குறுமொழியைச் சேர்ந்ததாகும்.

இலக்கண முடையது இலக்கணப் போலி
மரூஉஎன் றாகும் மூவகை இயல்பும்
இடக்க ரடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோடு ஆறும் வழக்கியல்.[1]

இக் குறுமொழி, குறுகிய ஒரு கூட்டத்தார் தமக்குள் வழங்கி மகிழ்வதற்காக ஏற்படுத்திக்கொள்ளும் செயற்கை மொழி; பெரும்பாலும் குறும்பு மனப்பான்மையாலும், சிறுபான்மை உயர்வு மனப்பான்மையாலும் படைக்கப் படுவது; பொதுமொழி போலவோ, கிளைமொழி போலவோ நெடுங்காலம் நின்று வாழும் தகுதியின்றி, குறுகிய காலமே வாழ்ந்து மறைவது; பெரும்பாலும் இளைஞர் களும் குறுமக்களாகிய இழிந்தோரும் வழங்குவது; உயர்ந்த மக்களும் சிறிது நேரம் சிறுவர் மனப்பான்மை யுடன் பேசுமிடத்து வழங்குவது.

குறுமொழி இளைஞர்களிடத்து மிகுதியாக வழங்கு கிறது என்றும், அவர்களுள்ளும் பெண்களைவிட ஆண்க ளிடத்து மிகுதி என்றும், சுவையற்றுப்போன பழஞ் சொற்களை விட்டுக் கவர்ச்சியான புதுச் சொற்களைப் பேசும் மொழிவிளையாட்டு அது என்றும், மக்களுக்கு இயல்பான வேடிக்கைவேட்கை அதன் அடிப்படையில் உள்ளது என்றும் கூறுவர்.[2] குறுமொழிகளைப் படைப்

1. நன்னூல், 267.

2. Slang is a jesting language. There is always a humorous element in slang: the new words are meant to be a pleasant change from the old.—Otto Jespersen, Mankind, Nation and Individual, p. 153.

பவர், மற்றவர்களினிடத் தாம் ஒருவகையில் வேறு பட்டவர்களாக விளங்க வேண்டும் என்று விரும்புவதால் அவ்வாறு தமக்குள் ஒரு மொழி படைக்கின்றனர் என்றும் கூறுவர். ஒவ்வொரு சமயத்தாரும் தமக்கெனப் படைத் துக்கொள்ளும் சொல்வழக்குகள் இவ்வகையைச் சாரும் என்பது மொழியியலறிஞர் சிலரின் கருத்தாகும்.

நகைச்சுவையோடு மகிழ்ந்து பொழுதுபோக்கும் போது குறுமொழி மிகுதியாக இடம் பெறுவது போலவே, பிறர்மேல் கொள்ளும் வெறுப்பும் குறுமொழிக்குக் காரண மாக அமைதல் உண்டு.[1]

இத்தகைய குறுமொழியை ஒரு குழுவினர் படைக்கக் காரணம், பொதுமொழியில் உள்ள சில சொற்களைக் கொண்டு தம் கருத்தை ஆற்றலுடன் உணர்த்தும் நோக்கமே ஆகும்.[2] வேறுபாடு எல்லாம் சொற்களிலேயே ஆகும். 'போனார்' என்பதைவிடக் 'கம்பிநீட்டினார்' என்பது கவர்ச்சியாக உள்ளது. ஆனால் இந்தக் கவர்ச்சி நெடுங்காலம் நிலைப்பதில்லை. புதிதாகப் பரவிய ஒருவகை உடை, சில ஆண்டுகள் கழிந்தபின் பழகிய பழைய உடை ஆவதுபோல், புதுமைக் கவர்ச்சியுள்ள இந்தச் சொற்கள் பழகப்பழக அந்தக் கவர்ச்சியை இழந்து மற்றச் சொற்கள் போல் ஆகிவிடுகின்றன. அப்போது வேறு சில புதிய

1. Contempt, particularly, is one of the emotions which most frequently find an outlet in slang, side by side with the purely innocent delight in finding humorously-exaggerated expressions.—Ibid. 157.

2. It is, in fact, a specialisation of the common language, and as it exists only by the contrast to this common language, the relation between the two must of necessity be constantly felt whenever slang is used.—J. Vendryes, Language, p. 251.

சொற்கள் தேவைப்படுகின்றன. நாளடைவில் அந்தப் புதிய சொற்களும் கவர்ச்சி இழந்து பழமைப்படுகின்றன. இவ்வாறு நேரும் மாறுதல்களால், குறுமொழி நீட்டித்து வாழ இயலாமற் போகிறது. அதனால்தான், தொன்று தொட்டுக் குறுமொழிகள் இருந்துவந்தபோதிலும் அவைகள் இலக்கிய வாழ்வு பெறுமல் அப்போதைக்கப்போது அழிந்துபோகின்றன என்பர்.

விரைவில் மாறி அழிந்துபோகும் இந்தக் குறுமொழியின் தோற்றம் எதிர்பாராத வகையிலாகும். அதன் வளர்ச்சியோ, அழிவுபோலவே விரைவு உடையதாகும். புதுமைக் கவர்ச்சி அமைந்திருக்கும் காரணத்தால், எதிர்பாராமல் தோன்றும் இது மிக விரைவில் பரவிவிடுகின்றது. பள்ளிச் சிறுவன் ஒருவன் அடிபட்ட மற்றொருவனைக் குறித்து 'இவனுக்கு இன்று பூசை விழுந்தது' என்றால், அது மிக விரைவில மற்ற மாணவர்களிடமும் பரவி, அவர்களும் அவ்வாறே பேசத் தொடங்குகின்றனர். 'அவனை ஏமாற்றினான்' என்று சொல்லாமல், 'அவன்வாயிலே மண் போட்டான்' என்பது; 'அவன் லஞ்சம் வாங்கும் காலம்' என்பதை 'அவனுக்கு அறுவடைக் காலம்' என்பது; 'செருக்குடன் இருக்கிறான்' என்பதை 'அவனுக்குத் தலை கால் தெரியவில்லை' என்பது; சிறையை 'மாமியார் வீடு' என்பது முதலானவை எடுத்துக்காட்டுகள்.

குறுமொழிகளைப் படைத்து வழங்கும் மக்களின் உள்ளத்தில் வேற்றுமைப்பான்மை உள்ளது. சமயம், சட்டம், மருத்துவம் முதலிய துறைகளில் பழகுவோர் போலவே இவர்களும் தம்தம் கலை உயர்வகையானது, பிறர் அறிய வொண்ணாதது என்று பிரித்து வளர்க்க

முயல்கின்றனர்.[1] பிறர் அறிய வொண்ணுதது என்னும் அளவில் நிற்காமல், பிறர் அறியக்கூடாதது என்று தம் கலைக்குத் தனியே திரையிட்டுக் காக்கும் மனப்பான்மை, மந்திரவாதிகள் பூசாரிகள் மூலிகைமருத்துவர் முதலியவர் களிடத்தில் உள்ளது அன்றே? குழூஉக்குறியாக வழங்கும் மொழிகள் இத்தகையன ஆகும்.

புத்துணர்ச்சி

இளைஞரிடத்திலும் சிறுவரிடத்திலும் இந்த மனப் பான்மை புதியதொரு வடிவம் கொள்கின்றது. இவர் களுக்கென அமைந்த கலை ஒன்றும் இல்லை; விளையாடி மகிழ்வதே இவர்களின் குறிக்கோளாக உள்ளது. ஆதலின் இவர்களின் குறுமொழியின் அடிப்படையில் விளையாட்டு வேட்கை உள்ளது. வளர்ந்த பெரியவர்கள் பழமையைப் பெரிதும் போற்றுவதால், அவர்களைப் பிரித்துத் தமக்கே உரியதான மகிழ்ச்சியான போக்கில் பேசும் கலையை அமைத்துக்கொள்கின்றனர். வேற்றுமைப்பான்மை இங்

1. The ultimate impulse to the creation of slang is a certain feeling of intellectual superiority. We find that some particular word or expression of the normal language has grown trite, it is too well known, we are sick of it, and so we seek for a new word, that will tickle the fancy and satisfy our desire for something amusing, or at least pleasurable, by way of a change. Slang is an outcome of mankind's love of play: it is playful production of something new, when properly speaking, nothing new was required. In the light of pure reason, the old word is good enough: it is only our feelings that cannot stand it any longer. Slang is a linguistic luxury, it is a sport, and like any other sport, something that belongs essentially to the young. It is (or was, at any rate) a greater favourite with young men than with young women. One may briefly describe it as the fight against what is outworn and drab.—Otto Jespersen, Mankind Nation and Individual, p. 150.

குப் பழமையை எதிர்த்திடுவதில், புதுச்சொற்களைப் புத்துணர்ச்சியுடன் வழங்குவதில் புலப்படுகின்றது. பழைய சொல் உணர்ச்சியற்றதாகவும் பயனற்றதாகவும் இவர்களுக்குத் தோன்றுவதால், புத்துணர்ச்சி தந்து மகிழ்விக்கத் தக்க புதுச்சொல்லை நாடிப் படைக்கின்றனர். பணம் என்ற சொல்லைவிட்டு, வெள்ளையப்பன், வைடமின் 'ப' என்றெல்லாம் சொல்லி மகிழ்கின்றனர். புதிய சொல் தேவை இல்லாதபோதும் அதைப் படைத்துக்கொள்ள விழைவதன் காரணம் இதுவே. புத்துணர்ச்சி காரணமாக இளைஞர் படைத்தலால் இவை மிக மிக வேகமாகவும் பரவுகின்றன.

இவ்வாறு படைக்கப்படும் சொற்களில் துணிச்சலான தன்மை காணப்படினும் அரியதான கவிதைத்தன்மையும் உள்ளது என்கிறார் அறிஞர் யெஸ்பர்ஸன்.[1] உருவகம் முதலிய அணிகள் இத்தகைய பேச்சில் இயல்பாக அமைந்துள்ளதைக் காணலாம்.

இவ்வாறு என்றும் புதுமை நாடிப் பிரியும் மனப்பான்மை, மற்றொரு வகையில் நோக்கினால் நிலையான வாழ்வைப் போற்றுவதாக உள்ளது. கள்ளத் தன்மையால் வாங்கும் கையூட்டு (லஞ்சம்) என்பதை இன்று 'கிம்பளம்' என வழங்கலாம். ஆயின், 'கிம்பளம்' என்பதே சிலகாலம் பயின்று வழங்குமானால் பழைய சொல் ஆகிவிடுகின்றது. பிறகு அதைவிட்டு வேறொரு புதுச்சொல்லை நாட வேண்டுவதாகின்றது. இவ்வாறே நேற்றைய புதுச் சொற்கள் இன்று உதவாமற் போக, இன்றைய புதுச்

1. At times it takes a somewhat dare-devil character: but at other times it must be described as really poetical. Otto Jespersen, Mankind Nation and Individual, p. 150.

சொற்கள் நாளேக்கு உதவாமற் போக, அடிக்கடி சொற்கள் இறந்துபட்டுப் புதுச் சொற்கள் படைக்கப்படுகின்றன.[1]

கொச்சை அன்று

நாகரிகம் அற்ற கொச்சை மொழி வேறு ; குறு மொழி வேறு ; இழிவான கொச்சை மொழிகளேயே குறு மொழி எனக் கருதுதல் தவறு. இத் தவறு ஏற்படக் காரணம், குறுமொழியாகும் சொற்களேப் படைப்பவர், சிலவேளேகளில் பேச்சுமொழியில் உள்ள கொச்சைச் சொற்களே எடுத்து வழங்கி அவற்றைக் குறுமொழி யாக்கும் போக்கே ஆகும். ஒரு சில கொச்சைச் சொற் கள் குறுமொழியாகக் கொள்ளப்படுதல் பற்றி, கொச்சைச் சொற்கள் எல்லாம் குறுமொழி என்றோ, குறுமொழி எல்லாம் கொச்சை என்றோ கூறுதல் பொருந்தாது.[2]

பாட்டுமொழி வேறு

பாட்டில் அமையும் மொழி, குறுமொழியோடு நெருங்கிய தொடர்பு உடையது என்கிறார் யெஸ்பர்ஸன்.[3]

---

1. Slang, then, must be often renewed. A slang word which has been used too frequently is as depressing as a story we have often read before; or an old joke.—Ibid.

2. Slang words are often confused with vulgarisms, though the two things are really different.....And there is something that makes it difficult in practice always to keep slang and vulgar speech apart, namely, that when a person wants to leave the beaten path of normal language he is not always particular as to the source whence he takes his unusual words, and he may therefore sometimes take a vulgar word and raise it to the dignity of the slang word.—Otto Jespersen, Language, p. 299.

3. The language of poetry is closely related to slang, in so far as both strive to avoid commonplace and everyday expressions. The difference is that where slang looks only for the striking or unexpected expression, and therefore often is

பழக்கப்பட்டுக் கவர்ச்சி குறைந்துபோன சொல்வழக்கு களை விட்டு உணர்ச்சி மிகுந்த வேறு பல சொற்களையே புலவர்கள் விரும்பி அமைத்துப் பாடுகின்றனர். குறு மொழியில் பெரும்பாலும் விளையாட்டு மனப்பான்மை இருக்கிறது; பாட்டில் கலையழகைப் போற்றி உயர்வை நாடும் மனப்பான்மை இருக்கிறது; இவ்வளவே வேறு பாடு. கவர்ச்சியையும் அதற்காக வேறுவேறு சொற்களை யும் நாடுவதில் பாட்டுமொழியின் போக்கும் குறுமொழி யின் போக்கும் ஒன்றுகவே உள்ளது எனலாம். பாட்டு மொழி வேண்டுமென்றே குறிப்பிட்ட கலைநோக்குடன் படைக்கப்படுவது; ஆதலின் சட்டமொழி முதலியவை போல் சிறப்பு மொழி (special language) என்று கூறத் தக்கதாகும்.

---

merely eccentric or funny (sometimes only would-be comic), poetry looks higher and craves abiding beauty - beauty in thought as well as beauty in form, the latter obtained, among other things, by rhythm, alliteration, rime, and harmonious variety of vowel sounds.—Otto Jespersen, Language, pp. 300 - 301.

உ0. குழந்தை மொழி

குழந்தையும் பெற்றோரும்

மொழியின் தோற்றத்தை அறிவதற்குக் குழந்தை மொழி பற்றிய ஆராய்ச்சி பெரிதும் பயன்படும் என்று சிலர் நம்பினர். மொழி முதலில் தோன்றி வளர்ந்த நிலை வேறு; ஒரு குழந்தை மொழியைக் கற்று வளரும் நிலை வேறு. பல்வகை அமைப்பும் நிறைந்து பண்பட்ட மொழியையே குழந்தை கற்கத் தொடங்குகின்றது. ஆதலின், குழந்தைமொழியை ஆராய்வது, மொழி கற்கப்படும் முறையை உணர்வதற்கே பெரிதும் பயன்படும்.

மனிதன் தன் வாழ்நாளில் பெறுதற்கு அரிதாய்ப் பெற்ற பெருஞ்சிறப்பு, மொழி பேசக் கற்ற நிலையே. குழந்தைப் பருவத்தில் முதல் மூன்று நான்கு ஆண்டுகளில் கற்கும் அவ்வளவு கல்வியை வேறு எந்த மூன்று ஆண்டுகளிலும் மனிதன் கற்பதில்லை. இத்துணை முயற்சியும் முயற்சிக்கு ஏற்ற பயனும் உள்ள வாழ்வின் பகுதி ஆராய்ச்சிக்கு உரியதாகும்.

குழந்தைப் பருவத்தில் மொழியைக் கற்கும்போது செய்யப்படும் முயற்சி மிகப் பெரிது; ஆயினும் அது துன்பமாகவே உணரப்படுவதில்லை. எல்லாம் இயல்பாக நடைபெறுவதால் எள்ளளவும் துன்பம்இல்லை. அதற்கு மாறாக, நாள்தோறும் புதுமையே காணப்படுவதால் அக் கல்வி இன்பம் நிறைந்ததாக உள்ளது. கற்கும் குழந்தையும் இன்புறுகின்றது. கற்றலைக் காணும் பெற்றோரும் இன்புறுகின்றனர்.

குழந்தை கற்கும்போது நேரும் வழுக்களுக்குக் கணக்கில்லை. ஆனால், அவ்வாறு வழு நிறைந்த மழலையே இன்பத்

திற்குக் காரணமாக விளங்குகின்றது. வழுக்கள் குறையக் குறைய, பிழையின்றிப் பேசுதல் பெருகப் பெருக, குழந்தையின் பேச்சில் இன்பம் குறைகின்றதுபோலும்! இரண்டாம் ஆண்டில் குழந்தை பேசும் பேச்சில் பிறக்கும் அவ்வளவு இன்பம், ஐந்தாம் ஆண்டில் பேசும் பேச்சில் இல்லையன்றே?

சிறந்த இனிமை பயப்பனவாகத் தமிழர் கருதியன யாழும் குழலும் ஆகும். திருவள்ளுவர் அவற்றின் இனிமையைக் குறைகூற வில்லை. ஆயினும், குழந்தையின் மழலைச் சொல் பயக்கும் இனிமையைப் பாராட்டும்போது,

> குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
> மழலைச்சொல் கேளா தவர்[1].

என்று போற்றுவாராயினர்.

மொழிக்கு இனிமை நிரம்புதல் இருவகையாலாகும். ஒன்று, சொல்லும் சொற்களாலேயே அமையும் ஒலியின்பம்; மற்றொன்று, அவற்றின் பொருளால் அமையும் கருத்தின்பம். குழந்தையின் மழலையில் யாழிசை போன்ற ஒலியின்பமும் காணும்; அதற்குக் குழந்தையின் கருத்தைப் புலப்படுத்தும் ஆற்றலும் இல்லை; பெற்றோர் அதன் பொருளை அறிய முடியாமலிருந்தும் இன்புறுகின்றனர். இதனை உணர்ந்து வியந்தார் ஔவையார் என்னும் புலவரும்[2].

---

1. திருக்குறள், 66.

2. புறநானூறு, 92. ஔவையார் இங்கு மழலை மொழியைப் பொருளற்ற சொற்கள் என்று சொல்லத் துணியாமையும், அவை குழந்தையின் கருத்திற்கு வடிவந் தந்து வெளிவருவனவே என உணர்ந்தமையும், குழந்தை கருதிய பொருளைப் பெற்றோர் அறிய முடியவில்லை எனக் கூறமுன் வந்தமையும் காண்க. 'பொருளில் லாதன' என்னுமல், 'பொருளறிவாரா' என்ற அவருடைய கருத்து உளநூலாராய்ச்சியாளருக்கு உவகை ஊட்டுவதாகும்.

மூவகை நிலை

குழந்தை மொழியைக் கற்கும் நிலை மூவகைப்படும். அவை, அழுநிலை, செங்கீரைநிலை, பேச்சுநிலை எனப்படும். அழுத்தெரியாத குழந்தையைப் பற்றிப் பெற்றோர் ஐயமும் கவலையும் கொள்வர். அந்தக் குழந்தை ஊமையாகுமோ, பிழைத்து வாழுமோ என்று ஐயுறுவர்; கவல்வர். குழந்தை பிறந்ததும் அழுகின்றதா என்று கேட்பதும், அழுகுரல் கேட்டு அகமகிழ்வதும் வழக்கம். அழுநிலையில், ஒரு கருத்தை உணர்த்தும் நோக்கம் குழந்தைக்கு முதலில் எழுவதில்லை. இயல்பாகப் பெற்ற அந்த ஆற்றலை நாளடைவில் ஒரு நோக்கத்திற்குப் பயன்படுத்திக்கொள்கின்றது. பசித்துன்பத்தையோ வேறொன்றையோ அழுகுரலால் அறிவிக்கும் நிலைக்கு வருகின்றது. அன்றியும், இவ்வாறு அழுதலால் குரலுக்கும் அதனை அடுத்துள்ள உறுப்புக்களுக்கும் தன்னை அறியாமல் பயிற்சி கொடுத்து வளர்த்துக் கொள்கின்றது; எதிர்காலத்தில் இசைக் கலைஞனாகவோ சொற்பொழிவாளனாகவோ விளங்கத் தக்கவாறு குழந்தை பெறும் முதல் பயிற்சி இதுவே ஆகும்.

இந் நிலை கடந்து செங்கீரைப் பருவம் அடைந்ததும், குழந்தையின் வாயில் பிறக்கும் ஒலிகள் செவிக்கு இன்பம் பயக்கும் ஒலிகளாகும். இந்த ஒலிகளே அடுத்த நிலையில் சொல்வடிவு பெறுவன. சொல்வடிவு பெறுத இவ் வொலிகளைச் செங்கீரைப் பருவத்தில் குழந்தை ஒலிக்கக் காரணம் என்ன? குழந்தை விளையாட விரும்பும் விருப்பமே காரணமாகும். இந்த முதல் விளையாட்டில் குழந்தைக்கு விளையாட்டுக் கருவியாய்க் கிடைப்பது அதன் நாக்கே. நாக்கு முதலில் அசைந்த அசைவுகள் தன்னையறியாமல் நடைபெற்றன. குழந்தை அந்த நாக்கை இப்போது கருவி

யாய்ப் பெற்று, அதனைக் கொண்டு விளையாடத் தொடங்குகின்றது.

இப்போது நாக்கின் அசைவால் பிறக்கும் ஒலிகள் ஆ, ஊ, லா, ரா, மா, பா போன்றவை (தனி உயிர், அல்லது ஒரு மெய்யோடு கூடிய உயிர்); இவற்றை எந்த மொழியின் எழுத்துவடிவாலும் எழுதிக் காட்டல் இயலாது. குழந்தையின் இரண்டாம் திங்களிலேயே இவ் வொலிகள் தோன்றலாம்; மூன்றும் திங்களில் இவை வளரத் தொடங்கும்.

தன் ஒலிகளைத் தானே கேட்டு அறியும் நிலை அடுத்து வரும். அப்போது அது ஒரு தூண்டுகோலாக அமைந்து, குழந்தை தன் ஒலிகளைப் பலவடிவாய்ப் பயிலச் செய்யும். பெற்ற தாயோ மற்றவரோ குழந்தைமுன் இருந்து அத்தகைய ஒலிகளை ஒலித்து மகிழ்ந்துகொண்டிருந்தால், அது மற்றொரு தூண்டுகோல் ஆகும். தமிழ்நாட்டார் குழந்தையைத் தொட்டிலில் இட்டு, "ஆராரோ ஆரிரிரோ ஆரிவரோ" என்று பாடுவது விழுமிய தொண்டாகும். தாலப் பருவம் என்பது நாக்கின் பயிற்சியைக் குறித்தலும், தாலேலோ என்று முடியும் பாடல்கள் அதனைப் போற்றலும் அறிந்து மகிழ்தற்கு உரியன. பெற்றோர்கள் இப் பருவத்தில் குழந்தைக்குச் செய்யும் பேருதவி, குழந்தையோடு ஒலித்து மகிழ்வதே ஆகும். அதன் பயன், அப்போது காணப்படாவிடினும், குழந்தையின் பிற்கால மொழிப்பயிற்சிக்குச் சிறந்த அடிப்படையாக அமையும்.

ஒலி வளர்ச்சி

படிப்படியே குழந்தை பெற்றோர்போல் ஒலிக்க முயலும். அப்போது புதிய பல ஒலிகளும் அதன் வாய் மலரில் மணக்கும். பால் குடிப்பதோடு வேறு இன்பண்

டங்களும் பழங்களும் உண்ணத் தொடங்கி, நாக்கும் வாயும் இதழும் பயிற்சி பெறப் பெற, இம் முயற்சியில் வெற்றி பெற்றுக்கொண்டே வளரும். பெற்றோரின் பேச்சில் கேட்ட பல ஒலிகளைத் தானும் ஒலிக்க முயலும். இதுவே, அடுத்த நிலையாகும்.

முதலில் ஓரசையாகவே சொற்கள் ஒலிக்கப்படும். அவ்வாறு ஒலிக்கும் ஒலிகளும் பல திரிபுகளுக்கு உட்படும். நெய் நீ ஆகும்; காய் சா ஆகும்; மேல் மே ஆகும்.

ஈரசைச் சொற்களானால், முதலில் உள்ள மெய்யை யாவது ஈற்றெழுத்தையாவது விட்டு ஒலிக்கும். மூவசை நாலசைச் சொற்களை எவ்வாறேனும் ஈரசையாக்கிவிடும்.[1]

சில குழந்தைகளுக்கு ரகரமும் றகரமும் முதலில் ஒலிக்க வருவதில்லை. முறுக்கு என்பதை முக்கு என்னும். பருப்பு என்பதைப் பப்பு என்னும்; வேறு சில குழந்தைகளுக்கு லகரம் முதலில் ஒலிக்கவருவதில்லை. எலி என்பதை எயி என்னும். ஆங்கிலக் குழந்தைகள் வெரி(Very) என்பதை வெகி என்னுமாம். கிளாக்(Clock)என்பது கடினமான ஒலியாகையால், காக் என்னுமாம். எல்லாக் குழந்தைகளும் முதலில் எல்லா ஒலிகளையும் ஒலிக்க முடிவதில்லை சில குழந்தைகளுக்கு வரும் ஒலிகள் வேறு சில குழந்தைகளுக்கு வருவதில்லை. தொண்டையில் உள்ள கோழை, நாக்கின் தசைநார் இறுகாமை முதலியவற்றைக் காரணமாகக் கூறலாம். இவற்றில் ஒவ்வொரு குழந்தை

1. குழந்தை முதல் முதலில் வரையும் ஓவியங்களை இங்கே கருதவேண்டும் வெள்ளைத் தாளில் கருங்கோடு கிழித்து 'இது மாடு' என்னும். மற்றொரு கோணல் எழுதி 'இது குருவி' என்னும். அந்தக் குழந்தை கருதிய உருவங்களுக்கும் வரைந்த கீற்றுக்களுக்கும் எவ்வளவு பொருத்தம் உண்டோ, அவ்வளவு பொருத்தமே பெற்றோரின் பேச்சில் கேட்ட ஒலிக்கும் அது போல் குழந்தை ஒலித்த ஒலிக்கும் உண்டு.

யின் உடம்பிலும் வேறுபாடு இருத்தலால், அவை ஒலிக்கும் ஒலிகளிலும் வேறுபாடு காணப்படுகிறது.

அறியாமையா ?

குழந்தையிடம் அறியாமை இல்லை. எது திருத்தமான ஒலி என்பது அதற்குத் தெரியும். ஒலிக்க முடியாத குறையால் அவ்வாறு திரிபு நேர்கின்றது. மற்றவர்கள் திரித்து ஒலித்தால் குழந்தை கேட்டுக்கொண்டு தலையசைப்பதில்லை. 'தோசை' என்று நன்றாகச் சொல்லமுடியாமல் 'ஓசை' என்னும் குழந்தையே, அதன் தாய் 'ஓசை' என்று ஒலித்தால், ஒத்துக்கொள்ளாமல் மறுக்கின்றது. யாராவது வேண்டுமென்றே, அவ்வாறு அதன் எதிரே பலமுறை தவறாக ஒலித்தால், வருந்துகின்றது; அழவும் அழுகின்றது. ஆதலால் குழந்தைக்கு அந்தச் சொல்லின் முழு வடிவம் தெரியும். ஆயினும் அதனால் அவ்வாறு ஒலிக்க முடியவில்லை. இந்தக் குறையைப் பெற்றோர் உணர்ந்து நடக்கவேண்டும். குழந்தையின் பிழையை எடுத்துக் காட்டலாகாது. அவர்கள் அப்போது செய்ய வேண்டும் கடமை ஒன்றே அதாவது, பரபரப்பாகப் பலவற்றை விரைந்து பேசிக் குழந்தையைத் திகைக்கச் செய்யாமல், சில சொற்களே சொல்லவேண்டும். அவற்றையும் நிறுத்தி ஒலிக்கவேண்டும்.

பெற்றோர் குழந்தைக்குக் கருத்துக்களைக் கற்பித்தால் அது போதும். ஒலிகளைக் கற்பிக்கத் தொடங்கிச் சோர்வுறச் செய்தல் வேண்டா. ஒலிகளைக் கற்றுப் பேச வேண்டும் என்பதில் குழந்தைக்கு ஊக்கமும் ஆர்வமும் இயற்கையாகவே உள்ளன. அவற்றைக் கெடுக்காமலும் குறைக்காமலும் இருந்தால் போதும். அதுவே பெற்றோரின் கடமையாகும். குழந்தையின் மூளை இடைவிடாமல்

ஒலியாராய்ச்சி நடத்திக்கொண் டிருக்கின்றது. அதற்கு இடையூறு செய்யாமல் விட்டுவிட்டால், வளர்ச்சி காண்பது திண்ணம்.

'பூனை'யை நன்முக ஒலிக்க இயலாத குழந்தை, 'மியா' என்ற ஒலியால் அதனை எளிதில் உணர்த்திவிடு கின்றது. இந்த இயல்பு, வளர்ந்த மக்களிடத்தும் காணப் படுகின்றது. காக்கை என்றும், கிலுகிலுப்பை என்றும் டெயர் வைத்த காரணம் இதுதானே!

பக்கத்து வீட்டில் ஒரு பொருளுக்கு ஒரு பெயர் வைத்துப் பேசக் கேட்ட குழந்தை, அதனை நினைவில் வைத் துக்கொண்டு தன் தாயிடம் சென்று 'இது என்ன?' என்று விடாப்பிடியாய்க் கேட்டு அழுதலும் உண்டு. அப்போது தாய் சொன்ன பெயர் தனக்குப் பொருத்த மாகத் தோன்றுமையாலும், தன்னால் நன்முக ஒலிக்க முடி யாமையாலும் குழந்தை ஏமாற்றம் அடைகின்றது. ஒலி களைக் கற்பதில் இதுபோன்ற எத்தனையோ போராட்டங்கள் குழந்தைக்கு நேர்கின்றன. ஆங்கிலம் தெரியாத ஒருவர், தெரிந்த ஒரு மாணவனைப் பார்த்துத் 'தம்பி! உன் பெயர் ஆங்கிலத்தில் என்ன?' என்று கேட்டுத் திகைப்பது உண் டன்றே? வளர்ந்த பிறகும் மொழிப் போராட்டம் விட்ட பாடில்லை.

கருத்து வளர்ச்சி

ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு பொருளையே குறிக் கும் என்று நெடுநாள் வரையில் குழந்தை எண்ணி வளர்ந்து, பிறகு ஒருநாள் ஏமாந்துபோகின்றது. அப்பா என்றால் தன் தந்தை ஒருவரையே குறிக்கும் என்று முத லில் உணர்ந்த குழந்தை, வீடுதோறும் 'அப்பா' என்று ஒருவர் இருத்தலை உணர நாள் ஆகும். முதலில் கண்ட

தென்னை ஒன்றையே 'மரம்' என்ற சொல்லால் உணர்ந்த குழந்தை, மூருங்கை மரத்தைப் பக்கத்து வீட்டார் 'மரம்' என்று சொல்லும்போது மறுக்க முனைகின்றது.

திணை பால் முதலியவற்றைப் பற்றி முதலில் குழந்தை எள்ளளவும் கவலை கொள்வதில்லை. தன்னை 'நல்ல பையன்' என்று பாராட்டிய தாயைத் தானும் அந்தத் தொடரால் 'நல்ல பையன் நீ' என்று பாராட்டுகின்றது. தன் எதிரே வாலாட்டும் நாயையும் 'நல்ல பையன்' என்று பாராட்டுகிறது.

மொழிநூலறிஞர் யெஸ்பர்ஸன் தம் குழந்தை எவ்வாறு எண்களைக் கற்றது என்று ஆராய்ந்து சில குறிப்புக்களை விளக்கியுள்ளார். வேனிற்காலத்தில் வெளியே சென்று விளையாடவும் பலவற்றைப் பார்த்து அறியவும் வாய்ப்பு நேர்வதால், மற்றக் காலத்தில் வீட்டினுள் இருந்து கற்றவற்றை அக் குழந்தை மறந்துவிடக் கண்டாராம். முதலில் கற்ற எண்களை மறந்துவிட்டு மறுபடியும் அவற்றையும் அவற்றிற்கு மேற்பட்டவற்றையும் கற்றதாம்.[1]

குழந்தை தவறில்லாமல் பத்து வரையில் எண்ணுவதே பெரிய வெற்றிச் செயலாகும். ஒன்று அறிந்து, இரண்டு என்னும் எண்ணைக் கற்கும்போது, ஒன்றுக்கு மேற்பட்ட எல்லாவற்றையுமே இரண்டு என்று குறிப்பது குழந்தையின் இயற்கை. மூன்று கற்றபோது, ஐந்து பழத்தைப் பார்த்தாலும் மூன்று என்றே சொல்லும்; பத்துப் பழத்தைப் பார்த்தாலும் மூன்று என்று சொல்லும். இப்படியே மற்ற எண்களையும் படிப்படியே கற்று வளர்கின்றது.

1. Otto Jespersen, Language, p. 119.

குழந்தையிடம் காணப்படும் இந்த இயல்பு, மக்கள் பேசும் பல மொழிகளிலும் காணப்படுகின்றது. தென் ஆப்பிரிக்காவில் 'தம்மரர்' பேசும் மொழியில் எண்களே இல்லை என்று கூறலாம். அம் மக்கள் ஒன்று முதல் மூன்று வரையிலுமே எண்ணக் கற்றிருக்கின்றார்கள். ஓர் எருது காணுமற் போனது என்றால், அதனை அவர்கள் எண்ணித் தெரிந்துகொள்வதில்லையாம்; காணுமற்போன எருதின் முகத்தை நினைந்தே தெரிந்துகொள்கின்றார்களாம்.[1] ஆஸ்திரேலியாவின் பழங்குடி மக்களுக்கு நான்கு வரையில் எண்ணத் தெரியுமாம். அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையைக் குறிக்கப் 'பல' என்பது போன்ற ஒரு சொல்லை வழங்குகின்றார்களாம்.[2]

எண்களையும், பொருள்களையும் பிரித்து நுட்பமாக உணரும் அறிவு குழந்தைக்கு ஏற்படச் சில ஆண்டுகளாகும். அதனால், "இரண்டு கண்ணும் ஒரு மூக்கும் எவ்வளவு?" என்று குழந்தையைக் கேட்டால், "மூன்று" என்று விடை சொல்லிவிடும்.

சொற்களும் இலக்கணமும்

குழந்தை வளர வளர, அது கற்கும் சொற்களின் தொகையும் பெருகுகின்றது. அதனால், முதலில் சொற் பொருள் பற்றிக் குழந்தையிடம் இருந்த தெளிவு வர வரக் குறைகின்றது. ஆனால், குழந்தையின் மூளை வண்மைக் கேற்ப இது வேறுபடும். ஒரு திங்களில் நூற்றுக்கணக்கான சொற்களைக் கற்கும் குழந்தையும் உண்டு; சில சொற்களையே அரிதில் கற்கும் குழந்தையும் உண்டு. பெரும் புலவர்களிடையிலும் இத்தகைய வேறுபாடு உண்டு. ஆங்

1. Sayce, Introduction to the Science of Language, p. 11.
2. Abel Hovelacque, The Science of Language, p. 63.

கிலப்புலவர் ஷேக்ஸ்பியர் இருபதினாயிரம் சொற்களை எடுத்தாண்டுள்ளவர் என்றும், மில்டன் ஆண்ட சொற்கள் எண்ணாயிரம் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

சொற்களைக் கற்பதைவிட, சொல்லிலக்கணம் கற்பதே அரிய கல்வியாகும். குழந்தையின் மொழியில் எவ்வாறோ இலக்கணமும் அமைந்து படிப்படியே திருத்தமும் பெற்று வருகின்றது. எவ்வாறோ என்று கூறவேண்டுவதில்லை. ஒப்புமையாக்கம் (analogy) என்னும் முறை பற்றிப் பல வாக்கியங்கள் குழந்தையின் மூளையில் பதிந்து ஒழுங்கு பெறுகின்றன. அந்த ஒழுங்கைத்தான் இலக்கணம் என்ற பெயரால் நாம் வழங்குகின்றோம். அண்ணன் வந்தான் என்றும், அது வந்தது என்றும் இப்படிப் பல வாக்கியங்கள் பல நாள் கூறக் கேட்டுப் பின்று ஆண்பால் வினைமுற்றும் ஒன்றன்பால் வினைமுற்றும் குழந்தைக்குப் பழக்கமாகின்றன. பல ஆண்டுகள் கழிந்த பின்னர், தனக்கு முன்னமே தெரிந்த இதனையே, இலக்கணம் என்னும் பெயரால், ஆண்பால் விகுதி ஆன் எனவும், ஒன்றன்பால் விகுதி து எனவும் முயன்று இடர்ப்பட்டுக் கற்கின்றது.

கால வேறுபாடு அறிந்து சொற்களை ஆள்வதிலும் குழந்தைக்கு இடர்ப்பாடு உண்டு. முதலில் நாளைக்கு என்ற எதிர்காலச் சொல்லைக் கற்ற குழந்தை, அந்தச் சொல்லையே இறந்த காலத்திற்கும் வழங்கும். "எப்போது வந்தாய்?" என்ற கேள்விக்கு விடையாக, "நாளைக்கு வந்தேன்" என்றே சொல்லிவிடும். 'நேற்று' என்பது வேறு, 'நாளை' என்பது வேறு எனப் பகுத்துணரும் ஆற்றல் அப்போது குழந்தைக்கு இல்லை.

வளர்ந்தவர் அறியும் அத்தனை வேறுபாடுகளும் இலக்கணப் பாகுபாடுகளும் குழந்தைகளுக்கு எட்டாதவை.

ஆகவே குழந்தைகள் பொதுவானவற்றையும் பருப் பொருள்களாக உள்ளவற்றையுமே முந்திக் கற்க முடி கிறது. ஒருமை பன்மை என்ற பாகுபாடு குழந்தைக்கு அந் நிலையில் வேண்டாததாகிவிடுகிறது. ஒருமையையே பன்மைக்கும் பயன்படுத்துகிறது. வினைச்சொல்லின் பகுதியே குழந்தைக்குப் போதும்; விகுதி, கால இடை நிலை முதலியவை தேவை இல்லை; வினைப் பகுதி ஒன்றையே மூவிடங்களுக்கும் மூக்காலத்திற்கும் பயன்படுத்துகிறது. (நீ வா, அவன் வா, நான் வா, நேற்று வா....) பன்மை விகுதி, கால இடைநிலை முதலியவற்றைக் குழந்தை வளர்ந்த பின் பயன்படுத்தும் நிலை கருத்துலகத்தில் ஒரு பெரிய வெற்றியாகும். அப்போதும் குழந்தை தானாகப் படைப்ப தில்லை; தனக்காக மற்றவர்கள் படைத்து வழங்கிவரும் மொழிச் செல்வத்தைப் படிப்படியாகத் தன் உரிமை ஆக் கிக்கொள்கிறது. மற்றவர்கள் பண்படுத்தி உழுது விதைத் தக் களைகட்டு நீர்பாய்ச்சி வளர்த்துள்ள வயலில் உரிமை யுடன் புகுந்து கருத்துச் செல்வத்தைப் பெற்று வளர் கிறது.

வினாக்கள்

எதை எடுத்தாலும் 'ஏன்?' 'ஏன்?' என்று விடாமல் கேட்டுத் தொல்லை உண்டாக்குவதற்குக் குழந்தை பின் வாங்குவதே இல்லை.[1] இவ்வாறு 'ஏன்' என்று கேட்கும் வேட்கை பெரும்பாலும் மூன்றும் ஆண்டின் இறுதியில்

1. இத்தகைய வினாக்கள் மிக மிக இன்றியமையாதன என்றும், இவற்றின் வாயிலாகவே உலகத்தையும் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் குழந்தை அறியமுடிகின்றது என்றும், தொடர்ந் தாற்போல் வினாக்கள் எழும்போது தொல்லையாகத் தெரிந் தாலும் குழந்தையின் நன்மையைக் கருதிச் 'சும்மா இரு' எனச் சொல்லித் தடைசெய்யவே கூடாது என்றும் யெஸ்பர்ஸன் கூறுகிறார்.—Language, p. 137.

தொடங்கும். அதனோடு சேர்ந்தாற்போல் 'எங்கே' 'எப்போது' முதலான இடவினை காலவினைக்களும் குழந்தையின் அறிவுக்கு எட்டும். ஆனால், முதலில் குழந்தையின் வினைப் பலவும் ஒரு சொல் அளவி லேயே தொடங்கும். 'அப்பா?' என்று தாயைக் குழந்தை கேட்கும்போது, இடமும் காலமும் நோக்கியே தாய் அந்த வினையின் பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டும். 'அப்பா வந்தாரா?' 'அப்பா போனாரா?' 'அப்பா எங்கே?' 'அப்பா கொடுத்தாரா?' முதலான பல பொருள்களை மனத்தில் இருத்திக்கொண்டு 'அப்பா?' என்று ஒரு சொல்லை வினாவாக ஆளும். சில திங்கள் கழித்து, 'அப்பா கொடுத்து?' 'அப்பா கொடுத்தாங்க?' முதலான வாக்கியங்களை வினாவாக ஆளும். 'அப்பா கொடுத்து—ஊ?' என்பது போன்ற வாக்கிய முடிவை நோக்கியே அந்த வாக்கியம் வினா என்று உணர வேண்டும். குழந்தையோடு பழகுவோர் இவற்றை யெல்லாம் முயற்சியின்றி அறிந்து கொள்வர். நான்காம் ஆண்டில், ஏன் எங்கே முதலான வினாக்கள் பயின்ற பிறகே, 'கொடுத்தாரா?' 'வந்தானா?' போன்ற ஈற்று வினாக்களைக் கற்கத் தொடங்கும்.

தவறுகள்

குழந்தை இரண்டு ஆண்டு நிரம்பும் வரையில் மூவிடப் பெயர் கற்பதில்லை; நான் என்றும், நீ என்றும் பேச அறியா நிலையில் குழந்தை இருக்கின்றது. அவற்றைப் பேசத் தொடங்கும்போது, முதலில் தன்மை ஒருமை 'நான்', பிறகு முன்னிலை ஒருமை 'நீ' ஆகியவை தோன்று கின்றன.[1] அப்போதும் எனக்கு உனக்கு முதலான சொற்களைக் குழந்தை பேசுவதில்லை. ஐ, கு முதலிய

1. P. B. Ballard, Thought and Language, p. 127.

வேற்றுமை உருபுகளைச் சேர்த்துப் பேச இன்னும் நாளாகும். 'நானு மியா பிடிச்சு' 'நானு அண்ணு குடுத்து' என்பன போன்றவை குழந்தை அப்போது பேசுவன. சில திங்கள் கழித்து வேற்றுமை யுருபுகளைச் சேர்க்கும் போது, முதலில் எளிதில் பயில்வது 'கு' உருபேயாகும். 'அம்மாக்கு' 'அப்பாக்கு' என்று நான்காம் வேற்றுமை கற்கும்போது, 'எனக்கு' 'உனக்கு' என்ற சொற்கள் எளிதில் வருவதில்லை. 'நானுக்கு' என்றும், 'நீக்கு' என்றும் குழந்தை பேசிப் பெற்றோர் செவிக்கு அமிழ்தம் ஊட்டும்.[1]

குழந்தை 'நானுக்கு' என்று சொல்லும்போது தவறு செய்வதாக எண்ணுவது அறியாமை. குழந்தை செய்யும் தவறுகளும் உண்டு; ஒரு மொழியில் இயல்பாக அமைந்து விட்ட தவறுகளும் உண்டு. ஆதலின், குழந்தையின் தவறு என்று துணிந்து கூறிவிடலாகாது. குழந்தையின் மூளை, ஒழுங்கை விரும்புவது. 'அப்பாக்கு', 'அக்காக்கு', 'அண்ணுக்கு' என்று கு உருபைச் சேர்க்கும் முறையை 'நானுக்கு' என்பதிலும் கையாள்வது தவறு? இது, மொழிக்கும், மொழி கற்போருக்கும் உள்ள போராட்ட மாகும். இந்தப் போராட்டத்தில் சில வேளைகளில் மொழியே வெற்றி பெறுகின்றது; சிலவேளைகளில் மொழி கற்போர் வெற்றிபெறுகின்றனர். குழந்தையின் கல்வியில் காணும் பல உண்மைகளும், மொழி வளர்ச்சியின் அடிப் படையாக அமைந்த உண்மைகளாகும்.

---

1. ஆங்கிலத்தில் 'speak' என்னும் வினைச்சொல்லின் இறந்த காலமாக 'spake' இருந்தது. பெரும்பாலோர் 'spoke' என்று பேசி வந்தனர். முதலில் எதிர்ப்பு இருந்தது; வர வர எதிர்ப்புக் குன்றியது. இப்போது 'spoke' என்பதே இலக்கண மாகிவிட்டது. Whitney, Language and the Study of Languages, p. 29.

சில இங்கள் 'நானுக்கு' 'நீக்கு' என்றே பேசி வரும் குழந்தை, பிறகு, படிப்படியே, பெற்றோரும் மற்றோரும் பேசுவதைக் கேட்டுக் கேட்டு, 'எனக்கு' 'உனக்கு' என்று பேசத் தொடங்குகின்றது.[1] இங்கு மொழியே வெற்றி பெறுகிறது.

தொகைகள்

'நான் மாட்டைப் பார்த்தேன்' என்று ஐ உருபு சேர்த்துச் சொல்லாமல், 'நான் மாடு பார்த்தேன்' என்றே குழந்தை பேசுகின்றது. இப்படி எத்தனையோ வாக்கியங்களில் குழந்தை உருபு இல்லாமல் பேசிப் பேசி, வளர்ந்த பிறகும் அந்த வாக்கியங்களையே போற்றுகின்றது. மொழியும் அதற்கு உடன்படுகிறது; பொருள்புலப்பாட்டில் ஐயமும் இடர்ப்பாடும் இல்லாதபோது வேற்றுமைத் தொகைக்கு இடம் தருகிறது. இது மொழிகற்போர் பெறும் வெற்றியாகும்.

இத்தகைய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் குழந்தையின் மொழிக் கல்வியை நோக்குவோர், அதன் ஒழுங்குவேட்கையினை உணர்வர்.

வினைகள்

குழந்தையின் வாழ்வில் எண்ணுவதெல்லாம் பேச்சாகும்; பேசுவதெல்லாம் செயலாகும். குழந்தை

1. The language of children is more regular than our own. I have heard children say badder and baddest, instead of worse and worst...Children say, I goed, I comed, I catched; and it is this sense of grammatical justice, this generous feeling of what ought to be, which in the course of centuries has eliminated many so-called irregular forms—Max Muller, The Science of Language, p. 73.

யுலகமே செயல் உலகம் எனலாம். காக்கை நரி முதலிய வற்றின் கதைகளைக் குழந்தை சொல்லும்போது கைகட்டி யிருக்க முடியாது. கதையில் வரும் உணர்வெல்லாம் குழந்தையின் கைகாலில் செயலாய் விளங்கும்; உடலில் அசைவுகள் பலவாகும். இதனால் குழந்தை எண்ணுகின்றது, பேசுகின்றது என்பதைவிட நடிக்கின்றது என்பது பொருந்தும். இதனால் குழந்தை கற்கும் மொழியில் வினைச்சொற்கள் செல்வாக்குப் பெறும். ஒவ்வொரு வினையும் முற்றாகவே இருக்கும். எச்சம் முற்று என்னும் வேறுபாடு முதலில் இடம் பெறுவதே இல்லை. "மாடு வந்தது, போனது" என்று பேசத் தெரியுமே தவிர, "மாடு வந்து போயிற்று" என்பது தெரியாது. "அண்ணன் எடுத்தான், பொம்மை உடைந்தது" என்பது குழந்தை வாக்கியம். "அண்ணன் எடுத்ததனால் பொம்மை உடைந்தது" என்பது படித்த மாணவன் பேசும் வாக்கியமே.

பிறர் சொன்னதைச் சொல்லும்போது 'என்று' என்னும் எச்சத்தை ஆளவும் குழந்தையால் முடியாது. "பழம் கொடுப்பேன், அப்பா சொல்லி" என்றே குழந்தை பேசும். "பழம் கொடுப்பேன் என்று அப்பா சொன்னார்" என்பது பிற்காலத்தே அது கற்கும் வாக்கியம்.[1]

சுற்றுப்புற மொழி

குழந்தையின் பெற்றோர் பேசும் மொழியும் சுற்றுப்புற மொழியும் ஒன்றாகவே இருந்தால் குழந்தை அந்த மொழியை எளிதில் கற்றுக்கொள்ளும். அதனால் தமிழ் நாட்டில் தமிழ்க் குடும்பத்தில் உள்ள குழந்தை தமிழை

1. Father said : "I will give you fruit" என்று ஆங்கிலத்தில் "that" என்னும் சொல்லின்றி வழங்கும் நேர்ப்பேச்சு (direct speech) வழக்கு நோக்குக.

எளிதில் கற்றுக்கொள்ளக் காண்கின்றோம். ஆனால், பம்பாயில் உள்ள ஒரு தமிழ்க் குடும்பத்தின் குழந்தை, வீட்டில் தாய் பேசும் தமிழ்மொழியைக் கற்றுவருதல் எளிதன்று; சுற்றுப்புறத்தில் பேசப்படும் இந்தி குஜராத்தி மராத்தி மொழிகள் அதனைக் கவரும். பல மொழிகள் கற்பதால் குழந்தையின் இடர்ப்பாடுகளும் பெருகும். குடும்பத்தில் கற்கும் தாய்மொழியைப் போலவே சுற்றுப் புறத்தில் பேசப்படும் பிற மொழிகளும் எளிதில் பயிலப் படும் என்பது சிலர் கருத்து.[1]

ஆனால், இது குழந்தையின் ஆற்றலையும் அதன் வயதையும் பொறுத்திருக்கின்றது. மூதல் மூன்று ஆண்டு களில் குழந்தையிடம் புதியனவற்றைக் கற்கும் ஆற்றல் மிகுதியாக உள்ளது. வளர வளர, அவ்வாற்றல் குறைந்து வருகின்றது. ஆதலின், அது தாய்மொழியை எப்போது கற்கின்றது, பிறமொழியை எப்போது கற்கின்றது, எதற்கு மிகுதியான காலம் செலவாகின்றது என்பன போன்ற ஆராய்ச்சியின்றித் துணிய முடியாது.

ஆனால் குழந்தை இருமொழி கற்பதால், அம்மொழி களுக்கு நேரும் தீங்கைவிடக் கற்கும் குழந்தைக்கு நேரும் இடர்ப்பாடே மிகுதி. இயற்கையாகச் சொல்லும் பொருளும் கற்று உணர்வைப் பெருக்கி அறிவை வளர்க்க வேண்டிய தான வாழ்வு, அகராதி கற்கும் வாழ்வாக மாறுதல் அந்த

1. விட்னே என்னும் அறிஞர் இதனை விளக்கக் கிறிஸ்துவப் பாதிரிமார்களின் குழந்தைகளைக் குறித்துக் கூறுகின்றார். உல கத்தில் எந்தப் பகுதியிலிருந்தாலும், தாய்மொழியோடு உறவற்ற எந்த மொழி சுற்றுப்புறத்தாரால் பேசப்பட்டாலும், அந்த நாட்டு மொழியைத் தாய்மொழிபோல் இயற்கையாகவே அக்குழந்தை கள் கற்றுக்கொண்டு பேசுகின்றன என்பர்.—The Life and Growth of Language, p. 89.

வயதிற்குத் தீமையே பயக்கும். குழந்தைப் பருவத்தில் இரு மொழி கற்ற எந்தக் குழந்தையேனும் வளர்ந்தபின் தேர்ந்த பேச்சாளனாகவோ, புலவனாகவோ சிறப்புற்றது உண்டோ என்று யெஸ்பர்ஸன் வினவுகின்றார்.[1]

---

1. It is, of course, an advantage for a child to be familiar with two languages: but without doubt, the advantage may be, and generally is, purchased too dear. First of all the child in question hardly learns either of the two languages as perfectly as he would have done if he had limited himself to one. It may seem, on the surface, as if he talked just like a native, but he does not really command the fine points of the language. Has any bilingual child ever developed into a great artist in speech, a poet or orator ?

Secondly, the brain effort required to master two languages instead of one certainly diminishes the child's power of learning other things which might and ought to be learnt. The worst of the system is, that instead of learning other things necessary to us we must spend our time and energy in learning to express the same thought in two or three languages at the same time.—Language, p. 148.

உ க. மொழியின் தோற்றம்

பண்பட்ட நிலை

உலகை அறிவால் அறிதலே மனிதனின் தொல்லை யான முயற்சியாக இருந்தது ; இயற்கையுலகத்திலிருந்து மன உலகத்திற்குக் கொண்டு சென்று படைத்திடவும், அவ் வாறு படைத்து மன உலகத்தை விரிவடையச் செய்யவும் மனிதன் முயன்றான். அது ஒரு புதிய உலகத்தின் தோற் றமும் வளர்ச்சியும் ஆயிற்று. காலத்தினை ஒட்டி இயைந்த தாக இந்தத் தோற்றம் அமைந்தது. காலத்தை உணர்த்தும் கருவியாக ஒலி துணைசெய்தது; நேரான இயற்கைக் கருவி யாக ஒலி உதவ, இந்தப் புதிய உலகம் தோற்றம் கொண் டது. ஒலிக்கும் முயற்சியாலும் மரபுகளாலும், இடத்து நிகழ் பொருள்கள் காலத்து நிகழ் முறைகள் இரண்டையும் ஒலியால் புலப்படுத்த முயன்ற மனிதமுயற்சி வெற்றிபெற் றது. இவ்வாறு, இடமாகவும் காலமாகவும் உள்ள உல கத்தை உணர்த்தத் தக்க தனிக் கருவியாக மனிதன் ஒலியை அமைத்துக்கொள்ளலானான்.

எழுதப்படும் மொழியோ, ஓடும் காலத்தை வடித்துக் காட்டும் முயற்சியாகும். இடத்தைப் பொறுத்த அளவில் இயங்கா நிலை அமைய, அந்நிலையிலும் காலம் மாறிமாறிச் சென்றுகொண்டிருக்க, அதை வடித்துக் காட்டுவது எழுத்து மொழியாகும். இயக்கம் நிலைபேறு இரண்டையும் வியக்கத்தக்க கலப்பாக்கும் முறை—இரண்டையும் ஒன் றுக்கி இரண்டன் தன்மையும் கெடாமல் காக்கும் முறை— உரிமையும் உணர்வும் கொண்ட மனத்தின் சிறந்த கருவி யாக மொழியை ஆக்கிக்கொண்ட முறை—போற்றத்தக்கது. உலகத்தின் மற்ற எல்லாத் தத்துவங்களிலிருந்தும் இது வேறுபட்டு நிற்கின்றது. இதுவே மொழியின் இணையற்ற சிறப்பியல்பாகும்.

என்று அறிஞர் வில்ஸன் என்பவர் மொழியின் பிறப்பு என்னும் தம் நூலின் முடிவில் கூறும் கருத்துக்கள் இங்குக் கருதத்தக்கன.[1]

1, R. A. Wilson, The Birth of Language, pp. 172, 187.

மொழி என்பது மக்களின் மனத்தைக் காட்டும் கண்ணாடி என்பர்.[1] மக்களின் கருத்துக்கள் விரைந்து மாறுங்காலத்தில் மொழியும் அதற்கேற்ப மாறுகின்றது. மக்களின் கருத்துக்கள் மாறுமல் தேங்கிக்கிடக்கும்போது, மொழியும் மாறுமல் கிடக்கிறது.

இவ்வாறு மொழியைப் பற்றி அறியும் கருத்துக்கள் எல்லாம், வளர்ந்து பண்பட்ட மொழியைப் பற்றியனவே அல்லாமல், தொடக்கத்தில் இருந்த மொழியைப் பற்றியவை அல்ல. மொழி எவ்வாறு தொடங்கியது என்பதை அறிய, இந்தக் கருத்துக்களே எல்லாம் விட்டு விட்டு, மனிதன் எப்படி வளர்ந்தான் என்ற பழங்கால வரலாற்றை—வரலாற்றிற்கு எட்டாத வரலாற்றை ஆராய்தல் வேண்டும்.

ஆராய்ச்சி முயற்சிகள்

மொழி எப்படித் தோன்றியது என்பதை அறிவதற்காகப் பல்வேறு காலங்களில் ஆராய்ச்சிகள் நடத்தப் பட்டுள்ளன. அவ்வப்போது எடுத்துரைக்கப்பெற்ற கொள்கைகள் பலவும் வெறுங்கற்பனைகளாக நின்றனவே அன்றி, உண்மையை விளக்குவனவாக இல்லை. அதனால் ஆராய்ச்சியாளர்க்கிடையே பகைமையும் பூசலும் தோன்றவே, இத்தகைய ஆராய்ச்சிக்கே மதிப்பு இல்லாமற் போயிற்று. சென்ற நூற்றாண்டில் பிரெஞ்சு அகெடெமி என்னும் ஆராய்ச்சிக் கழகத்தினர் இனி இத்தகைய முயற்

1. The language is a mirror of their (people's) minds. If their ideas change rapidly, their language changes with them; if their ideas stagnate, their language stagnates also.—Pillsbury and Meader, The Psychology of Language, p. 290.

சிக்கு இடந்தருவதில்லை என்று துணிய வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.[1]

பழங்காலத்தில் மொழியின் தோற்றத்தைப் பற்றி ஒருவகையான நம்பிக்கை இருந்துவந்தது. வடமொழியைப் பாணினி ஆக்கி வளர்த்தார் என்றும், தென்மொழியாகிய தமிழை அகத்தியர் கொணர்ந்து வளர்த்தார் என்னும் இந்நாட்டில் உள்ளதுபோலவே, ஐரோப்பாவிலும் நம்பிக்கைகள் இருந்துவந்தன. இத்தாலி மொழி தாந்தே என்னும் கவிஞராலும், ஆங்கிலம் சாஸர் என்னும் புலவராலும், ஜெர்மன்மொழி லூதர் என்னும் அறிஞராலும், டச்சுமொழி கிறிஸ்தியேர்ன் பெடெர்ஸன் என்பவராலும் ஆக்கி வளர்க்கப்பட்டன என்று ஐரோப்பியர்கள் நம்பி வந்தனர்.[2] ஆராய்ச்சிமுறை தலையெடுத்த பின்னர், இந்த மொழிகளின் தோற்றத்திற்கு இவர்கள் காரணர் அல்லர் என்றும், மற்றப் புலவர்களுக்குமுன் தோன்றி இம்மொழிகளை வளர்த்த பெருமையே இவர்களுக்கு உரியது என்றும் உண்மை உணர்ந்தனர்.

---

1. The problem of how languages orginated is one that has been much discussed at many different periods, and since the evidence in favour of all theories has been frequently highly speculative, it is a topic that has given rise to much bad temper and may even be said to have fallen into disrepute. It is said that the French Academy some half century ago voted to hear no more papers on this topic.—Pillsbury and Meader, The Psychology of Language, p. 112.

2. In earlier times it was the general belief that each of the great national languages had been formed by some particular great writer, Italian, for example, by Dante, English by Chaucer, German by Luther and Danish by Christiern Pederson. Later research has shown that these men did not exert the influence attributed to them.—Otto Jespersen, Mankind Nation and Individual, p. 51.

ஆராய்ச்சி என்பது பெரும்பாலும் தெரிந்தவற்றைக் கொண்டு தெரியாதவற்றை அறிய முயல்வதே ஆகும். மொழித்துறையில் இத்தகைய ஆராய்ச்சி போதிய பயன் தரவில்லை இன்று மொழி பேசுவோர் அறிவு வளர்ச்சி மிக்கவர்; தொடக்கத்தில் பேசியவர் அறிவு வளரப் பெறாதவர். மொழியைப் பேசுவதில் இன்றைய மக்களின் அனுபவம், பழங்கால மக்களின் அனுபவத்திற்கு வேறு பட்டதாகும். ஆதலின் அறிவு வளராத பழங்கால மக்கள் மொழியை[1] எவ்வாறு பேசினர் என்பதை இதுகொண்டு அறிய முடியவில்லை.

மொழியின் தோற்றத்தை ஆராய்வதற்கு வேறுவகையான முயற்சிகள் பல செய்யப்பட்டன. ஆயினும் வெற்றி கிட்டவில்லை. எகிப்து மன்னர் ஒருவர் புதிதாகப் பிறந்த இரண்டு குழந்தைகளை ஆயன் ஒருவனிடம் ஒப்படைத்து, அவற்றிற்கு ஆட்டுப்பால் தந்து வளர்க்குமாறும், அவற்றின் எதிரில் ஒரு சொல்லும் பேசாதிருக்குமாறும், அவைகளே எந்தச் சொல்லை முதலில் பேசுகின்றன என்று கவனிக்குமாறும் ஏற்பாடு செய்தான். இத்தகைய முயற்சியே ஸ்காட்லாண்டில் நான்காம் ஜேம்ஸ் என்னும் மன்னனாலும், மொகலாய மன்னன் ஒருவனாலும், இரண்டாம் பிரடெரிக் என்னும் ஐரோப்பிய மன்னனாலும் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

மூளை வளர்ச்சி

ஒலிக்கும் முயற்சிக்கு உரிய உறுப்புக்களைப் பொறுத்த வரையில் மனிதனுக்குச் சிறப்பாக அமைந்தவை ஒன்றும்

1. The ordinary method of passing from the known to the unknown is here invalid. The principles underlying the evolution of the languages known to us do not necessarily apply to those spoken by people whose mentality is differently oriented from ours.—J. Vendryes, Language, p. 14.

இல்லை. மூளையின் சிறப்பான ஆற்றலே இவன் பெற்றுள்ள தனிச் செல்வமாகும். விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் மூளை வளர்ச்சி இல்லாமையே குறையாக உள்ளது. மனிதன் ஒலிக்கும் எல்லா ஒலிகளையும் கிளியால் ஒலிக்க முடிகிறது. ஆனால் ஒலிக்கும் பொருளுக்கும் கருத்துக்கும் மனித மூளையில் ஏற்படும் தொடர்புபோல், கிளியின் மூளையில் தொடர்பு ஏற்படுவதில்லை ; வேறு பறவை விலங்குகள் எவற்றின் மூளையிலும் இத்தகைய தொடர்பு ஏற்படுவதில்லை. அதனால்தான், மனிதன்மட்டும் மொழியை வளர்க்க முடிந்தது ; முடிகிறது.

கிளி பேசுவதாகக் கூறப்படும். ஆயினும் அது பேச்சு அன்று ; பேச்சு என்பது கருத்தை உணர்த்துவது. பேசப்படும் ஒலிகள், சில பொருள்களையும் அவற்றின் தன்மைகளையும் செயல்களையும் உணர்த்துகின்றன. ஒலிகள் பயனின்றித் தனித்து நிற்காமல், இவ்வாறு பொருளுடையனவாக நிற்கின்றன. இத்தகைய ஒலிகளால் அமைந்ததுதான் பேச்சு. கிளியின் ஒலிகள் கருத்துக்களை உணர்த்த ஒலிக்கப்படுவதில்லை. ஒலிக்கும் கிளிக்கு அவை பொருளற்ற ஒலிகளே. பொருளுணர்ச்சி இல்லாமல் கிளி 'பேசுவதால்' அதன் வாயில் பிறக்கும் ஒலிகள் வெற்றொலிகள் ஆகும்; பேச்சு ஆகா. மனிதன் வாயில் ஒலி பிறக்குமுன், அவற்றின் தொடர்பான கருத்துக்கள் அவனுடைய மூளையில் தோன்றுகின்றன. கிளியின் வாயில் பிறக்கும் ஒலிகளுக்கு ஏற்ற கருத்துக்கள் அதன் மூளையில் பிறப்பதில்லை. பிறக்குமாயின், கிளிகளின் வாழ்வில் வளர்ச்சி ஏற்படும்; அவைகளும் மனிதரைப் போல் நாகரிக அமைப்புக்களான அரசு முதலியவற்றை அமைக்க இயலும்.

குகையும் அரண்மனையும்

பெரிய பெரிய கட்டிடங்களைப் பார்க்கும் சிறுவர் களின் உள்ளத்தில் என்ன எண்ணம் தோன்றும்? இந்த உலகத்தைப் படைத்த கடவுள், இத்தகைய கட்டிடங்கள் கட்டுவதற்கு உதவியாக அளவுபட அமைந்த கற்களையும் படைத்திருக்கிறார் என்று தோன்றும்.

மொழியைப் பற்றி ஆராயாமல் எண்ணும்போதும் இத்தகைய எண்ணம் தோன்றுதல் இயற்கை. மொழி தோன்றிய தொடக்கத்தில் அடிச்சொற்கள் (roots) பல இருந்தன என்றும், அவற்றை ஒன்றோடொன்று சேர்த் துச் சொற்களாகவும், சொற்றொடர்களாகவும் அமைத்து மனிதன் பேசக் கற்றுக்கொண்டான் என்றும் கருதும் கருத்துக்குக் காரணம் இதுவே.

மண்ணும் மண் இறுகிய பாறைகளுமே மனிதனுக்கு இயற்கை தந்தவை. மலைகளில் இயல்பாக அமைந்த குகைகளே மனிதன் முதலில் வாழ்க்கை நடத்திய வீடுகள். அவற்றில் வாழ்ந்த மனிதன் படிப்படியாக அறிவு வளர்ச்சி பெற்றபின், பாறைகளை வெட்டி வேண்டியவாறு துண்டுக ளாக்கியும், பிறகு மண்ணைக் குழைத்துத் திரட்டி அறுத்து வேகவைத்துச் செங்கற்களாக்கியும் கட்டிடங்கள் கட்டக் கற்றுக்கொண்டான். இவ்வாறு குகைவீட்டிலிருந்து கல் வீடு கட்டி வாழக் கற்றுக்கொள்ளப் பல்லாயிர ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும்.

மொழித் துறையிலும் இத்தகைய வளர்ச்சி ஏற்படப் பல்லாயிர ஆண்டுகள் கழிந்திருக்கும். இயற்கையாக மனிதனுக்கு வாய்த்திருந்தவை ஒலியும் அதைப் பயன் படுத்தவல்ல அறிவுமே ஆகும். தொடக்கத்தில் மனிதன் பேசிய மொழி அவனுடைய முதல்வீடாகிய குகை போன்

றது. அந்த மொழி, இயற்கையாக அவனுடைய வாயிலிருந்து பிறந்த ஒலித் தொடராக இருந்தது. படிப்படியே அவன் பெற்ற அறிவால், நீண்ட ஒலித்தொடர்களைப் பகுத்துப் பகுத்துச் சில பொருள்களின் குறியீடுகளாகப் பயன்படுத்தக் கற்றுக்கொண்டான். இவ்வாறு ஏற்பட்டவைகளே சொற்கள். அந்தச் சொற்களையும் நாளடைவில் குறுக்கி எளிய ஒலித் துணுக்குகளாக அமைத்துக்கொண்டான். அவற்றையே இன்று அடிச்சொற்கள் என்று வழங்குகிறோம். கட்டிடத்தின் உறுப்பாகிய கற்கள் முதலில் இயற்கையாகத் தோன்றியவை அல்ல என்பது போலவே, மொழியின் உறுப்பாகிய இந்த அடிச்சொற்களும் மனிதனுக்கு இயல்பாக அமைந்தவை அல்ல எனல் வேண்டும். அடிச்சொற்கள் மனிதனுடைய படைப்பே ஆகும்.

குகைவீட்டில் வாயில் ஒன்று உண்டு. கதவு, தாழ், பலகணி முதலியவைகளும் நடை, கூடம், சமையலறை முதலிய பகுப்புக்களும் இருந்ததில்லை. தொடக்கத்தில் மனிதன் பேசிய மொழியிலும், எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம், அடிச்சொல் முதலிய பாகுபாடுகள் இருந்ததில்லை. இவை யாவும் மனிதன் படைத்துக் கொண்டவைகளே. தொடக்கத்தில் மனிதனுக்கு வாய்த்திருந்த ஒலிக்கும் ஆற்றலையும் அறிவின் துணையையும் கொண்டு இவை அத்தனையும் படைத்துக்கொள்ள முடிந்தது.

குகையில் வாழ்ந்த வாழ்வு, கோயில் அரண்மனை முதலியவற்றைக் கட்டும் நாகரிகமாக வளர்ந்ததுபோலவே, ஆடல்பாடலில் இருந்த ஒலி முயற்சி திருக்குறள் சிலப்பதிகாரம் போன்ற இலக்கியச் செல்வங்களைப் படைக்கும் நாகரிகமாக வளர்ச்சி பெற்றது.

எழுத்தும் சொல்லும் பிற்காலத்தார் பாகுபாடு செய்து பிரித்துப் படைத்த படைப்பாகும். பேச்சு மொழியில் வாய் பேசுவதும் ஒலித்தொடரே; செவி கேட்பதும் ஒலித்தொடரே. ஒரு கருத்தை உணர்த்த முயல்கிறவர், அதற்கு ஓர் ஒலித்தொடரைப் பயன்படுத்துகிறார். கேட்பவரும் அந்த ஒலித்தொடரை முழுதுமாகக் கேட்டுப் பொருள் உணர்கிறார். பேசுபவர்க்கும் சொற்களோ ஒலிகளோ நினைவுக்கு வருவதில்லை; கேட்பவர்க்கும் அவை நினைவுக்கு வருவதில்லை. 'அண்ணன் அதோ வந்துவிட்டான்,' என்று சொல்கிறவனுக்கு அ-ண்-ண-ன் முதலான ஒலித்துணுக்குகளைப் பற்றிய எண்ணமும் இருப்பதில்லை. 'அண்ணன்—அதோ—வந்து—'முதலான சொற்களும் சொல்லுறுப்புக்களும் பற்றிய எண்ணமும் இருப்பதில்லை. கேட்பவர்க்கும் அவ்வாறே அவை பற்றிய எண்ணம் இருப்பதில்லை. ஆகவே தொடக்கத்தில் ஒரு கருத்து—அதற்கு ஓர் ஒலித்தொடர் என்ற நிலையே இருந்தது.

அடிச்சொற்கள்

மொழியின் வரலாறு இவ்வாறு இருக்க, சென்ற நூற்றாண்டில் மொழியாராய்ச்சி செய்த அறிஞர் சிலர் உண்மை அறியாமல், மொழிகளுக்கு இத்தனை அடிச்சொற்கள் அடிப்படையாகத் தோன்றின என்று கணக்கிடுவதில் காலம் கழித்தனர். வடமொழி இலக்கணக்காரர் அம் மொழியில் 1706 அடிச்சொற்கள் உள்ளன என்று கணக்கிட்டுள்ளனர். மாக்ஸ்முல்லர் என்னும் அறிஞர் அடிச்சொற்கள் எல்லாம் ஓரசைச் சொற்கள் என்றும், ஈரசையாக உள்ள அடிச்சொற்கள் ஓரசைச் சொற்களிலிருந்து வளர்ந்தவை என்றும் கொண்ட கருத்தினராய், வடமொழியில் அவ்வளவு அடிச்சொற்கள் இல்லை என்று

மறுத்து, அதனினும் குறைந்த எண்ணிக்கையைக் காட்டினர். ஹீப்ரு மொழியில் 500 அடிச்சொற்கள் இருப்பது போல் வடமொழியிலும் அவ்வளவே இருத்தல் வேண்டும் என்றார்.[1] உள்ள எழுத்துக்களைக் கணக்கிட்டு, அந்த எழுத்துக்களால் எத்தனை ஓரசைச் சொற்கள் அமைக்க முடியும் என்பதையும் கணக்கிட்டு, அத்தனை அடிச் சொற்களே மொழியின் தொடக்கத்தில் இருந்திருக்க வேண்டும் என்று காட்ட முயன்றார். அத்தகைய ஆராய்ச்சி இன்று நகைப்புக்கு இடம் தருவதாக உள்ளது.

இன்று அடிச்சொல் என்று கூறப்படும் நட வா முதலியவை மொழியின் தொடக்கத்தில் இருந்த சொற்கள் அல்ல. ஒரு சொல்லிலிருந்து வேறுபட்டுப் பிரிந்து வளர்ந்த பல சொற்களிலும் காணப்படும் பொதுவான பகுதி என்று கூறத்தக்கதே இன்று நாம் காணும் அடிச்சொல் ஆகும்.[2] இவ்வாறு ஆராய்வதால், பல சொற்களின் பொருள்வளர்ச்சியும் வேறுபாடும் விளங்குவதால் இத்தகைய அடிச்சொல்ஆராய்ச்சி பயனுள்ளது ஆகின்றது. இவ்வாறு அன்றி, மொழியின் தொடக்கத்தை அறிதற்கு அடிச்சொற்கள் உதவும் எனக் கொண்டால் ஏமாற்றமே நேரும்.

தொடக்கத்தில் இருந்தவை அடிச்சொற்கள் அல்ல. ஈண்ட ஒலித்தொடர்கள் என்று உணர்ந்தால், மொழியின் தோற்றத்திற்கும் அடிச்சொற்களுக்கும் தொடர்பு இல்லை என்பது தெளிவாகும்.

---

1. Max Muller, The Science of Language, pp. 306, 307.

2. The proper definition of a root seems to be: what is common to a certain number of words felt by the popular instinct of the speakers as etymologically belonging together.—Otto Jespersen, Language, p. 374.

கடவுள் படைப்பு

ஒருவர் தம் உணர்ச்சியையோ கருத்தையோ மற்றவருக்கு வெளிப்படுத்துவதற்குக் கருவியாய் இருப்பது எதுவோ அதனை மொழி என்று கூறல் தகும். காட்டு விலங்குகளின் ஒலிகளை இக் காரணம் பற்றியே விலங்கு மொழி (animal language) என்ற பெயரால் மொழி நூலார் குறிப்பர். பறவை ஒலிகளும் அங்ஙனமே பறவைமொழி என்று குறிக்கப்படும். சைகைகள் (gestures), தொன்று தொட்டே மொழியாகக் கருதப்பட்டு வந்திருக்கின்றன. முகக்குறிப்பு (grimace), மெய்ந்நிலை (posture), இசை அல்லது போலியொலி (imitative utterance) என்பனவும் மொழியாகக் கருதப்பட்டவையே. சைகையாய், குறிப்பாய், போலியாய் இருந்த நிலை படிப்படியே வளர்ந்து சிறந்து பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு மக்களிடத்தில் உயர்நிலை அடைந்திருக்கின்றது. வரிவடிவாகவும் ஒலிவடிவாகவும் இன்று நாகரிக மக்களிடையே உள்ள மொழி இந்த வளர்ச்சியாகிய கூர்தல் அறத்தின் (evolution) பயனே ஆகும்.

மொழிப் பிறப்பைப் பற்றி மூன்னேர்பல்வேறு கருத்துக்கள் கொண்டிருந்தனர். சைகை முதலான எளிய நிலையிலே உள்ள மொழிக்கும், பேச்சும் எழுத்தும் ஆகிய உயர் நிலையிலே உள்ள மொழிக்கும் அமைந்துள்ள தொடர்பை அவர்கள் உணரவில்லை. அதனால், உயர்நிலையில் உள்ள பேச்சும் எழுத்தும் ஆகிய மொழி எதிலிருந்து தோன்றி வளர்ந்தது என்பதை அவர்கள் விளக்கவில்லை. இந்த மொழிதிடீரென்று ஏற்பட்டிருக்கலாம் என்று அவர்கள் கருதினர். அது பற்றியே மொழி கடவுளால் படைக்கப்பட்டது என்ற கொள்கை உடையராயினர். கடவுள் படைப்பு என்பதையே பலர் பலவாறு விளக்கிக் கூறியுள்ளனர்.

பகுதிகளையும் முழுச் சொற்களையும் கடவுளே அவருடைய வியத்தகு ஆற்றலால் படைத்து முதலில் தோன்றிய மக்களுக்கு வழங்கினர் என்பது சிலர் கொள்கை. தென்மொழியும் வடமொழியும் சிவபெருமான் தமருக ஒலியிலிருந்து பிறந்தன என்பது புராணக் கூற்று. சிவபெருமான் வடமொழியைப் பாணினிக்கும் தென்மொழியை அகத்தியர்க்கும் வகுத்தருளினர் என்னும் கருத்து இதனால் பிறந்ததே ஆகும்.[1]

பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் பிறவும் அமைந்த மொழியைக் கடவுள் மக்களுக்குக் கற்பித்து மாநிலத்தில் வாழச் செய்தார் என்று எண்ணுதல் பொருந்துமோ? முதற்காலத்து மக்கள் நாம் அணிவன போன்ற ஆடை அணிகளும், நாம் வாழ்வன போன்ற வீடுகளும் பெற்றே மாநிலத்தில் பிறந்தார்கள் என்று எண்ணுவது தகுமோ? மொழியின் தோற்றம் பற்றிய இக் கருத்தும் அத்தகையதேயாகும்.

பேச்சுமொழி உலகெங்கும் மக்கள் பலரிடத்திலும் காணப்படுகின்றது. நாகரிகம் அற்றவர்களும் விலங்கோடு ஒப்ப வாழ்கின்றவர்களும் ஆகிய மக்கள்கூட்டத்தாரும் பேச அறிந்தே இருக்கின்றனர். ஆனால், விலங்குகளுக்குள்ளே எவ்வளவு உயர்நிலை அடைந்தனவும் பேசும் ஆற்றல் அற்றனவாகவே உள்ளன. இதனால் ஓர் உண்மை விளங்குகின்றது. அதாவது, உண்பதும் உறங்குவதும் உயிர்ப்பதும் உழைப்பதும் மக்களுக்கு எவ்வளவு இயற்கையோ, பேசுவதும் அவ்வளவு இயற்கையாக அவர்களுக்குப் படைப்பவன் படைத்திருக்கின்றான். ஆனால், வேறு

1. பாணினியும் அகத்தியரும் முறையே வடமொழிக்கும் தென்மொழிக்கும் சிறந்த இலக்கண நூல்கள் எழுதினமை பற்றி இவ்வாறு போற்றப் பெற்றனர்.

பாடாக அறியத்தக்கது ஒன்று உள்ளது. உயிர்த்தல் முதலியவற்றில் மக்களின் எண்ணமும் முயற்சியும் குறைவு. அவை தாமே இயற்கையாய் நடைபெறுவன என்று கூறத்தக்கன. மொழி அவ்வாறு தானே அமைந்து நடைபெறும் ஒன்று என்று கூறிவிடல் இயலாது. இயற்கையாய் அமைந்த சில தேவைகளின் பொருட்டு, இயற்கையாய் அமைந்த ஆற்றலைக்கொண்டு உடையும் உறைவிடமும் மக்கள் தேடிக்கொள்வதுபோல, மொழியும் அவர்களால் கற்றுக்கொள்ளப்பெற்றது.

எனவே, மக்களின் இயற்கையாக அமைந்த பலவகை ஆற்றல் போலவே பேசுதலும் இயல்பான ஓர் ஆற்றலே. இந்த ஆற்றல் இயற்கையாதலின், மொழி கடவுளின் படைப்பு என்பது உண்மையாகின்றது.[1] அந்த இயற்கை ஆற்றலை மக்கள் பயன்படுத்தி வளர்த்த முறைகளை நோக்குங்கால், அது மக்களின் முயற்சியால் அமைந்தது என்பது பொருந்துவது ஆகின்றது.

கற்று வளர்த்தல்

எங்ஙனமாயினும் நூற்றுக்கணக்கான தலைமுறைகளாகப் பல்லாயிரக் கணக்கான மக்கள் பாடுபட்ட முயற்சி

1. We would ask...whether the hand of the creator is any the less clearly to be seen, and need be any the less devoutly acknowledged, in its production, if we regard man himself as having been created with the necessary impulses and the necessary capacities for forming language, and then as having possessed himself of it through their natural and conscious workings. The power which orginates is not to be separated from that which maintains and develops; both are one, one in their essential nature, one in their general mode of action.—Whitney, Language and the Study of Language, p. 399.

யின் பயனாகவே மொழி இன்று உள்ள நிலைமையை அடைந் திருக்கிறது என்பதில் ஒரு சிறிதும் ஐயம் இல்லை.

அவர்கள் மொழியை எவ்வாறு வளர்த்தார்கள்? இயற்கையுணர்ச்சியாக (instinctive) இருந்த மொழி, விரும்பிச்செய்வதான முறை (intentional) மாறியது எங்ஙனம்? தம் கருத்தைப் பிறர்க்கு உணர்த்தவும் பிற ருடைய கருத்தைத் தாம் உணரவும் விழைந்த விழைவே காரணம் என்னலாம்.

விலங்குகள் சிலவற்றினிடையே இவ்வாறு கருத்தை வெளிப்படுத்தும் விழைவு இல்லாமற் போகவில்லை. ஆயினும் அவை கருத்தை உணர்த்தும் வாயில், மக்கள் பேசும் மொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்டதேயாகும். விலங்குகளினிடையே காணப்படும் மொழி இயற்கையாகத் தானாகவே அமைந்த ஒன்று; மக்கள்மொழி விரும்பி வளர்த்து அமைத்துக்கொண்ட ஒன்றாகும். விலங்கு மொழி வேறுபாடு இல்லாமல், பெருகாமல், வளர்ச்சி பெறு மல், தோன்றிய நாள் போலவே இன்றும் இருக்கக் காண் கிறோம். மக்கள்மொழி பலவாறு வேறுபட்டுப் பெருகி வளர்ந்து உயரக் காண்கின்றோம்.[1] இதற்குக் காரணங்கள்

1. ஔவையார் பாடியதாக உள்ள வெண்பா ஒன்று மற்ற உயிர்களுக்கு இயற்கையாக அமைந்துள்ள ஆற்றலை விளக்கு கின்றது:—

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமைசொல வேண்டாகாண்
எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது.

குருவி, குளவி, சிலந்தி, தேனீ, சிதல் முதலிய உயிர்களின் ஆற்றல் படைப்புக்காலம் தொடங்கி ஒரே தன்மையாய் மாறாது வின்றி இருத்தல் கருதத்தக்கது. குருவியின் கூடு போலவும், குளவியின் அரக்குப் போலவும், தேன்கூடு போலவும், சிலந்தி யின் கூடுபோலவும், சிதலின் புற்றுப்போலவும் மனிதனால் செய்ய

மேற்கூறியவையே ஆகும். மக்கள்மொழி ஒருவரிட மிருந்து மற்றவர் கற்று வளர்வது. விலங்குமொழியோ எல்லா விலங்குகளுக்கும் தனித்தனியே இயற்கையாக அமைந்தது.

குழந்தை மொழி

மொழியின் தோற்றம் பற்றிச் சென்ற நூற்றாண்டில் ஆராய்ந்த அறிஞர் சிலர், குழந்தை எவ்வாறு பேசக் கற்கின்றது என்பதையே ஆராய்ச்சிக் கருவியாகக் கொண் டார்கள். அதனால் அவர்கள் உண்மை காண இயலாமற் போயிற்று. மொழி குழந்தையின் படைப்பு அன்று; குழந்தை கற்ற கல்வி அது. குழந்தை முன்னமே வளர்ந்து அமைந்த மொழியைக் கற்கின்றது. அது கற்கும் முறை யில் மொழித் தோற்றத்தை ஆராய இடமில்லை. அதன் பச்சிளங்குழந்தைப் பருவத்தில் அது பேசும் முறையை ஆராய்ந்தால் ஒரு சிறிது பயன் உண்டு. அப் பருவத்தில் அந்த இளங்குழந்தை பிறர் பேச்சைக் கவனிக்கவும், அதன் பயனே உணரவும் அறியாத நிலையில் இருக்கின்றது. அதன் செங்கீரைப் பருவத்தில் அதன் சிறிய செவ்வாயி லிருந்து பிறக்கும் இனிய ஒலிகள் காரணமின்றி எழுபவை. அந்த மழலை ஒலிகள் வேறு; அது சிறிது வளர்ந்து பேசும் மழலைச் சொற்கள் வேறு. மழலைஒலிகளிலே நாம் இயற்கை ஒலிகளைக் கேட்கிறோம். ஆகையால் அந்த ஒலி

இயலாமற்போயினும், மனிதனின் ஆற்றலில் வளர்ச்சியும் முற் போக்கும் காணப்படுகின்றன. இந்த வேற்றுமை மொழித்துறை யிலும் காணப்படுவதாகும்.

Man differs from brute animals not in degree or in the addition of new powers, but in a totally different direction and development of all powers. Man's inferiority to animals in strength and sureness of instinct is compensated by his wider space of attention.—Otto Jespersen Language, p. 27.

களிலே முதற்காலத்து மக்கள் பேசிய இயற்கை மொழியின் கூறுகள் ஒருவாறு அமைந்திருக்கக் காணலாம்.

பழைய இலக்கிய மொழி

மொழியின் தோற்றத்தை அறிவதற்கு மற்றொரு வழி, நம் காலம்தொடங்கிப் பின்நோக்கிச் சென்று மொழியின் வளர்ச்சியை ஆராய்ந்துகொண்டு செல்வதாகும். சில நூற்றாண்டுகள் வரையில் இவ்வாறு பின்நோக்கிச் சென்று ஆராய முடிகின்றது. அதற்கும் முன்னே செல்ல முடியவில்லை. எடுத்துக்காட்டாக, சில மொழிகளின் வரலாறு எழுநூறு எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்டுச் செல்ல இடம்தரவில்லை. சில மொழிகளின் வரலாறு ஈராயிரம் ஆண்டுகள்வரை ஆராய இடம் தருகின்றது. மிகப் பழைய மொழிகளுள் சிறந்ததொன்றாகிய தமிழ்மொழியும் கி. மு. 3000 வரைக்குமே செல்ல இடம் தருகின்றது. பண்டைக் காலத்தில் தமிழில் இயற்றப்பெற்ற பாடல்கள், நாகரிக மக்களின் மொழிநிலையினையே தெரிவிக்கின்றன. அக்காலத்திற்குப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னே வழங்கிய மொழியின் நிலைமையை, அவற்றைக் கொண்டு அறிய முடியவில்லை. கல்வெட்டுக்கள், செப்பேடுகள், புதைந்த பொருள்கள் என்பவற்றால் வளர்ந்த மொழியின் மாறுதல்களே அறிய முடிகிறதே அல்லாமல் மொழித் தோற்றத்தைப் பற்றி அறியக்கூடவில்லை.

நாகரிகம் வளராதவர் மொழி

காட்டுமிராண்டிகள் பல நாடுகளில் பலவகையான மொழிகளைப் பேசுகின்றார்கள். அவற்றை ஆராய்ந்து அறிஞர்கள் குறித்திருக்கின்றார்கள். முதற் காலத்து மக்களுக்கும் இவர்களுக்கும் ஓரளவு வேறுபாடு உண்டு. அது காலப்போக்கால் ஏற்பட்டது. அதுபோலவே முதற்காலத்து

மொழிக்கும் இவர்களின் மொழிக்கும் வேறுபாடு உண்டு. காட்டுமிராண்டிகள் சிலர் பேச்சில் எத்துணையோ வேறு வேறு அமைப்புக்கள் உள்ளன. தவிர, நாகரிக மக்களின் மொழியில் காண்பதைவிடப் பன்மடங்கு மாறுதல் காட்டு மிராண்டிகளின் மொழியிலே சில ஆண்டுகளில் நிகழ் கின்றது. நாகரிக மொழிக்கும் அநாகரிக மொழிக்கும் கருத்துக்களின் வேறுபாடே பெரிது மொழிவடிவின் வேறுபாடு பெரிதன்று.[1] ஆதலால் மொழித் தோற்றத்தைப் பற்றிக் காட்டுமிராண்டிகளின் பேச்சுக்களும் அறிவிக்க வல்லன அல்ல.

சமுதாய வரலாறு

எனவே, இவற்றையெல்லாம் விடுத்து, மக்களின் தோற்றத்தையும், சமுதாய அமைப்பின் தோற்றத்தையும் ஆராய்வதால் மொழியின் தோற்றத்தைப் பற்றிய உண்மை

1. நாகரிகம் அற்ற மக்களின் மொழியில் பொருள்களுக்குப் பெயர்கள் மலிந்துகிடக்கின்றன; ஆனால் கருத்துக்களுக்குச் சொற்கள் இல்லை; பொதுமையாகவும் நுட்பமாகவும் உணரும் ஆற்றல் அந்த மக்களுக்கு இல்லை; ஆதலால், அவர்கள் மொழியில் பொதுப் பெயர்களும் வினைகளும் இல்லை. எடுத்துக்காட்டாக, நடு பிராசில் (Central Brazil) நாட்டுப் பகைரி (Bakairi) மொழி யில், ஒவ்வொரு வகைக் கிளிக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு; ஆனால் கிளி என்ற பொதுப் பெயர் இல்லை. லிதுவேனியர் (The Lithuanians) மொழியில், குதிரையின் வெண்ணிறத்திற்கு ஒரு பெயரும், கால்நடையின் வெண்ணிறத்திற்கு வேறொரு பெயரும், மற்ற விலங்குகளின் வெண்ணிறத்திற்கு மற்றொரு பெயரும் வழங்க, பொதுவாக வெண்ணிறத்தை உணர்த்த ஒரு சொல் இல்லை. சில மொழிகளில், கை கழுவலை உணர்த்த ஒரு சொல்லும், தட்டு முதலியன கழுவலை உணர்த்த வேறு சொல் லும் இருக்க, கழுவுதல் என்னும் பொதுவினைக்கு ஒரு சொல் இல்லை. 'க்ளாமத்' இந்திய மொழியில், ஒவ்வொரு விலங்கின் ஓட் டமும் ஒவ்வொரு சொல்லால் குறிக்கப்படுகின்றது; ஆனால் ஓடு தல் என்ற பொதுவினை இல்லை.—Pillsbury and Meader, The Psychology of Language, p. 175.

உணரலாம். காரணம் என்ன எனில், மொழி தோன்றி வளர்ந்த வரலாறு மக்களின் மனப் பண்பாட்டையும் சமூக அமைப்பையும் ஒட்டியதாகவே இருக்கின்றது. மனத்தில் தோன்றிய கருத்தைப் பிறர்க்கு உணர்த்தி, பிறர் கருத்தைத் தானும் உணர்ந்து பேசிய காரணத்தாலன்றே மொழி வளர்ச்சி பெற்றது? எனவே, உள நூலும் சமுதாய நூலும் (Psychology & Sociology) மொழி நூலுக்குப் பெருந் துணை செய்வனவாகும்.

சைகைமொழி

சைகைகளிலிருந்தே மொழி தோன்றியதாகச் சிலர் கூறுகின்றனர். சைகைகள் அறிவை அடிப்படையாகக் கொண்டவை. சைகைகள் மக்களிடமே காணப்படுகின்றன. சுட்டிக்காட்டுதல் போன்ற எளிய சைகையும் எந்த விலங்கினிடமும் காணமுடியாது. ஆனால், எல்லா இனத்து மக்களும் அந்தச் சைகைகள் செய்ய வல்லவராய் இருக்கின்றனர். ஆகையால், மக்கள் மக்களாய் இருப்பது, மொழிக்கு அடிப்படையான சைகைகள் செய்யவல்லவராய் இருத்தல் பற்றியே என்று கொள்ளலாம்.

ஓர் இடத்தையோ பொருளையோ காட்டுவதற்குச் சுட்டுவிரலை நீட்டிப் பயன்படுத்துதல், பசித்தவன் தன் கையால் வயிற்றைத் தொட்டுக் காட்டுதல், உண்ணுவதைத் தெரிவிப்பதற்கு வாய்க்கு அருகே கைவிரல்களைக் குவித்து வைத்துக் காட்டுதல், அடித்தலைப் புலப்படுத்துவதற்குக் கையை நீட்டி ஓங்குதல், பேசவேண்டா என்பதற்கு வாயைக் கையினால் மூடிக்காட்டுதல், இசைவைத் தெரிவிப்பதற்கு ஒருவகையாகவும் மறுப்பைத் தெரிவிப்பதற்கு மற்றொரு வகையாகவும் தலையை அசைத்தல், வரவழைப்பதற்குக் கைவிரல்களை உயர்த்தி உயர்த்தி மடக்கிக்காட்டு

தல், வேண்டா என்பதற்கு உயர்த்திய கைவிரல்களை ஊசல்போல் அசைத்துக் காட்டுதல், போகச் செய்வதற்குக் கைவிரல்களைச் சாய்த்து அசைத்துக் காட்டுதல், விரைந்து போகச் செய்வதற்கு அவற்றை விரைவாக அசைத்துக் காட்டுதல் முதலாக மனிதன் கற்றுள்ள சைகைகள் எத்தனையோ உள்ளன. இவற்றை மனிதன் வேண்டும்போது வேண்டியவாறு பயன்படுத்துகிறான். விரும்பிச் செய்யும் (intentional) இயல்பின இவை எல்லாம். ஆயின், சினம் வரும்போது படபடப்பான ஒலி எழுப்புதல், வெறுப்பு வரும்போது சகர ஒலி (சீ, சே, உச்) எழுப்புதல், துன்பம் மிகும்போது அழுதல், மகிழ்ச்சி மிக்கபோது ஆரவாரம் செய்தல் முதலானவை இயற்கை யுணர்ச்சியால் (instinctive) ஆகும். விலங்குகளும் பறவை களும் அறிந்த மொழிகள் இவ்வகையைச் சார்ந்தன. மேலே குறித்த சைகைமொழிகள் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் எட்டாதவை. பழங்கால மனிதர் சைகை மொழிகளைத் தக்கவாறு பயன்படுத்தும் ஆற்றல் பெற் றிருந்தமையாலேயே குரலில் எழும் ஒலிகளையும் தக்கவாறு பயன்படுத்தக் கற்றனர்.

குரல் ஒலி

ஆயினும், கருத்தை உணர்த்தச் சைகைகள் மிகச் சிறிதே பயன்படுகின்றன. உள்ளத்தில் உணர்ந்ததை உள் ளவாறு முழுவதுமாகப் பிறர்க்கு உணர்த்தச் சைகைகள் போதா. தவிர, சைகைகளால் உணர்த்துவதில் சில இடை யூறுகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, கண் காணு விடத்திலும், ஒளி இல்லா இராக்காலத்திலும் சைகைகளைப் பிறர் அறியமுடியாது.[1] மற்றொன்று, கைகளால் வேலை

1. தென் ஆப்பிரிக்காவில் உள்ள புதர்மக்கள் இரவில் பேச விரும்பினால், தீ வளர்ப்பார்களாம். தீயின் ஒளியால் சைகைகள்

செய்துகொண்டிருக்கும் ஒருவன் அந்த வேலையை விட்ட பிறகே சைகைகளைச் செய்ய முடியும். பேச்சுமொழி வல்ல ஒருவன், பேசிக்கொண்டே தொழில் செய்வதுபோல, தொழிலும் சைகையும் ஒருங்கே செய்வதற்கு அவனால் முடியாது. கைகள் தொழில் செய்யத் தேவையில்லாமல் இருந்திருப்பின் பழங்காலத்து மக்கள் சைகைமொழி யோடு நின்றுவிட்டிருப்பார்கள்; பேச்சுமொழி தேவை யென்பதை உணர்ந்து அதை வளர்த்திருக்க மாட்டார்கள். சைகைகளுக்குப் பயன்பட்ட கைகள் வேறு தொழிலுக்கும் வேண்டியிருந்தன. ஆனால் வேறு தொழிலுக்குப் பயன் படாமல், பேச்சுக்கென அமைந்திருக்கின்ற ஓர் உறுப்பு உடலில் இருக்கின்றது. அதுதான் குரல்வளை. ஆதலின் கைகள் வேறு வேலைக்குத் தேவையாயிருந்தபோது மக்கள் குரலைப் பயன்படுத்திக்கொண்டனர். (குரல்வளையில் அமைந்த தசைநார்கள் மிக மெல்லியவை, திண்ணியவை; பல்வேறு வகையாக அமைந்து தொழிலாற்ற வல்லவை; பெருமுயற்சியும் வேண்டாமல் சிறு காற்றாலேயே அசைந்து தொழில் செய்பவை.) இக் காரணங்களால் சைகைக்கு உரிய கைகள் தோற்றன. குரல், மொழிக்கு உரியதாய் வென்றது. மொழி என்றால் பேச்சு மொழியே என்னும் நிலை மையும் வந்தது. நாவால் பிறக்கும் மொழியின் சிறப்புப் பற்றிக் கலைமகளை நாமகள் என்பதும் கருதத்தக்கது.

இவ்வாறு வெற்றி பெற்ற குரலை மக்கள் எவ்வாறு பயன்படுத்தினர்? இதுபற்றிய ஆராய்ச்சிகள் பலதிறத்தன. அவற்றுள் குறிக்கத்தக்கன ஐந்து:

தெரியாவிட்டால், அவர்களின் பேச்சு விளங்காமற் போகுமாம். ஆதலின், அவர்கள் பேசும் மொழியில் சைகைகளே உயிராய் இருத்தல் அறியப்படும்.—G. W. Wade, Elementary Chapters in Comparative Philology, p. 2.

போலி மொழி

பறவை, விலங்கு முதலியவற்றின் ஒலியைக் கேட்டு அவற்றைப் போல் ஒலித்தலால் மொழி பிறந்தது என்பது ஒரு கொள்கை. அவ்வாறு பிறந்த மொழியே இசை மொழி அல்லது போலிமொழி (The onomatopoetic theory or the bow-wow theory) என்பது. இப்படிப் பிறந்த ஒலிகளைச் சொற்களாகக் கொண்டு பல பொருள் களுக்கும் செயல்களுக்கும் பெயராகவும் வினையாகவும் இட்டு வழங்கினர் என்றும், அந்தச் சொற்களிலிருந்தே மற்றச் சொற்களும் அமைந்து மொழி வளர்ந்தது என் றும் கூறுவர்.[1] எடுத்துக்காட்டாக. காக்கை, குயில், கிளி கிளுப்பை முதலிய தமிழ்ச் சொற்களைக் குறிப்பிடலாம்.[2] எகிப்து நாட்டு மக்கள் பூனையை மியா என்பார். பாப்பன் மக்கள் (Papuans) கோடரியை டின்டின் (dindin) என்பர்; உணவை 'நம்நம்' (num-num) என்பர்; நாயை 'பவ்வவ்' என்பர்.[3] இங்ஙனமே பல மொழியிலும் பல சொற்கள் உள்ளன. ஆயினும் மொழியில் உள்ள எல்லாச் சொற்

---

1. இத்தக் கொள்கையைப் பல சான்றுகள் தந்து கிறுவி யவர் ஹெர்டர் என்னும் அறிஞர். பெர்லின் கழகம் (Berlin Academy) மொழித் தோற்றத்தைப் பற்றிய சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்குப் பரிசு வழங்க முன்வந்தது. அத்தப் பரிசை அறிஞர் ஹெர்டரே பெற்றார். ஆயின், அவருடைய இறுதிக் காலத்தில் அந்தக் கொள்கை மதிப்பிழந்துவிட்டது. பரிசு வழங்கிய கழகமும் அவரைக் கைவிட்டது.—Max Muller, The Science of Language. p. 409.

2. வங்காளி மொழியில் இத்தகைய சொற்களே எண்ணி நூற்றைம்பது உள்ளன என்பர்—The Origin and Development of the Bengali Language, p. 890.

3. Sayce, Introduction to the Science of Language, Ch. II.

களும் இவ்வாறே பிறந்தன என்று கூறுதல் பொருந்தாது. மாக்ஸ்முல்லர் கூறுவது போல இத்தகைய ஒப்புமை ஒலிகள் ஒரு மொழிக்கு இன்றியமையாத கருவிகள் அல்ல. விளையாட்டுப் பொருள்கள் என்னலாம்.

உணர்ச்சி மொழி

வெறுப்பு, வெகுளி, மகிழ்ச்சி, அழுகை முதலிய உணர்ச்சி வயமாக இருக்கும்போது பிறக்கும் ஒலிகள் மொழிக்குக் காரணம் என்பர் ஒருசாரார். இதனை உணர்ச்சி மொழி அல்லது குறிப்புமொழி பற்றிய கொள்கை (the interjectional theory or the pooh-pooh theory) என்பர். ஆ, ஒ, அன்னை, அந்தோ, சீ முதலிய சொற்கள் அவ்வாறு பிறந்தன என்னலாம். இந்தக் கொள்கையும் குறையுடையதே. உணர்ச்சி பற்றிப் பிறக்கும் ஒலிகள் மிகச் சில சொற்களுக்கே காரணமாக இருக்கின்றன. தவிர, இச் சொற்கள் உணர்ச்சியை உணர்த்துமே ஒழியக் கருத்தை அறிவிப்பதில்லை. சொற்கள் உணர்ச்சிக்குக் கருவியாய் இருக்கும் நிலை குன்றி அறிவுக்குப் பயன்படும் நிலை வந்தால்தான் மொழி வளர்கின்றது. சுருங்கக் கூறினால், உண்மையான பேச்சுமொழி உணர்ச்சியால் பிறக்கும் ஒலிகளைக் கடந்ததாகவே உள்ளது.[1]

பண்புமொழி

மணியின்கண் ஒலி அமைந்திருத்தல் போல, ஒவ்வொரு பொருளுக்கும் இயல்பாகவே ஒவ்வொரு வகையாக ஒலிக்குந்தன்மை உள்ளது. மக்களுக்கும் அத் தன்மை உண்டு. அறிவால் உணரும் பொருள்களைக் குறிக்கச்

1. These interjections are only the outskirts of real language. Language begins where interjections end.—Max Muller, The Science of Language, p. 420.

சொற்களே ஆக்கி அமைத்துக்கொள்ளும் ஆற்றலும் மக்களுக்கு இயல்பாக அமைந்ததென்று. இவ்வாறு கூறுவர் மாக்ஸ்முல்லர் என்னும் அறிஞர். இக்கொள்கையைப் பண்புமொழிக் கொள்கை (the ding-dong theory) என்பர். மக்களுக்கு முதலில் இயல்பாக அமைந்த ஆற்றல் பிற்காலத்தே எவ்வாறு மறைந்துவிட்டதோ தெரியவில்லை. அன்றியும் இந்தக் கொள்கை எல்லாவற்றையும் பற்றித் தெளிவற்றுக் கிடப்பதால், ஒன்றையும் விளக்காது பயனற்றுப் போகின்றது என்கிறார் அறிஞர் பில்ஸ்பரி.[1]

தொழில்ஒலி

நான்காது கொள்கை ஏலேலோ மொழி அல்லது தொழில் ஒலி பற்றியது (yo-he-ho theory). முயன்று உடல் வருந்தித் தொழில் செய்யும் தொழிலாளர் மூச்சு விட்டு வாங்கும் துன்பம் குறைதற் பொருட்டுக் குரல்வளையைப் பலவாறு இயக்கப் பிறக்கும் ஒலிகளே இத்தகையன. தொழிலாளரின் பாட்டுக்களில் இத்தகைய சொற்கள் பல உள்ளன. ஆனால், ஒரு மொழியில் உள்ள எல்லாச் சொற்களையும் நோக்குங்கால் இக் காரணம் பற்றிப் பிறப்பன மிகமிகச் சிலவேயாகும்.

இக்கொள்கைகள் அனைத்தும் மொழியின் சிற்சில பகுதிகளை விளக்குகின்றனவே யன்றி முழுமையும் விளக்கவில்லை; முக்கியமான பகுதிகளையும் விளக்கவில்லை. ஆதலின் இவை மொழியின் தோற்றத்தை விளக்குவன அல்ல என்பர் அறிஞர் ஆட்டோ யெஸ்பர்ஸன். அவர் கூறும் காரணம் பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது உடலில் எந்த உறுப்பும் பயன்படாமல் இருந்து

1. The third theory (the ding-dong theory) is so vague as to explain everything and so nothing.—Pillsbury and Meader, The Psychology of Language, p. 113.

திடீரென முழுவளர்ச்சி பெறுவதில்லை ; படிப்படியாகவே வளர்ந்து பயன்படுகின்றது. அவ்வாறே மக்களின் குரலும் வாளா இருந்து திடீரென்று சொற்களை ஒலிக்கப் பயன் பட்டதாகக் கொள்ளுதல் பொருந்தாது. மேற்குறித்த நான்கு கொள்கைகளும், ஒலிகள் பிறக்கும் வரைக்கும் மக்கள் ஊமையராக இருந்தார்கள் என்று கொள்ளுவதால், பொருந்தாமல் போகின்றன.

இன்பப் பாட்டு

[1]யெஸ்பர்ஸன் கொள்கைப்படி, முதற்காலத்து மக்கள் ஒரு காரணமும் இல்லாமல் மழலை ஒலிகளை ஒலிக்கும் இளங்குழந்தைபோல் பேசிவந்தார்கள். அவர்களின் பேச்சு ஒலிகள் அப்போது கருத்தை உணர்த்துவதற்காகப் பயன் படவில்லை; வெறும் பொழுதுபோக்கான இன்ப விளை யாட்டாக இருந்தன. ஒரு தாய் தன் இளங்குழந்தையுடன் பொருளற்ற ஒலிகளைப் பேசி மகிழ்வித்துத் தானும் மகிழ் வதுபோல இருந்தது அந்த நிலைமை. குழந்தையின் செங் கீரைப் பருவத்தில் அதன் நாக்கு அதற்குச் சிறந்த விளையாட்டுக் கருவியாக இருப்பதுபோல், முதற்காலத்து மக்களுக்குப் பேச்சுமொழி பொழுதுபோக்கான இன்பப் பாட்டாக இருந்தது.[1]

---

1. இக்காலத்திலும், நாகரிகம் மிக்க மக்களின் பேச்சுக் கும் நாகரிகம் குறைந்த மக்களின் பேச்சுக்கும் இடையே ஒலி வகையில் வேறுபாடு உள்ளது. நாகரிகம் மிக்க மக்களின் பேச் சில் அறிவு மேம்பட்டுள்ளது; மற்றவர்கள் பேச்சில் உணர்ச்சியே தலைகாட்டுகின்றது. அதனால் முன்னவர்பேச்சில் ஆற்றொழுக்குப் போன்ற ஒலியமைப்பு உள்ளது ; பின்னவர்பேச்சு எடுத்தலும் படுத்தலும் விரவி, ஒருவகை இசையுடன் கேட்கின்றது. நகர மக்கள் சொற்களை ஒலியளவு கடவாமல் பேச, நாட்டுப்புற மக்கள் சொற்களை நீட்டி நீட்டிப் பேசி இசையோடு முடித்தல் இன்றும் உள்ளதே ஆகும்.

அவர்கள் பேச்சைப் பாட்டு என்று குறிப்பிடுதல் முற்றிலும் பொருந்தும். ஏனெனின், மொழியின் தோற்றம் இன்பமான விளையாட்டுப் பகுதியில் காணத்தக்கதே யன்றிக் கவலையான வாழ்வுப் பகுதியில் காணத்தக்கது அன்று. அறிவுகொண்டு அறிந்து ஆழ்ந்திருந்த நிலையில் மொழி பிறக்கவில்லை. ஆனால் உணர்வுகொண்டு உணர்ந்து இன்பமாய் விளையாடிய நிலையிலேயே மொழி பிறந்தது. இன்ப ஆடல்களில் சிறந்தது காதல் விளையாட்டு. இன்பம் மிக்க இளமை, பாட்டாகப் பொங்கி வழிதல் இயற்கை. கவலையற்ற உள்ளத்தில் பாட்டுப் பிறத்தல் இயற்கை. பறவைகளின் வாழ்வில் இதைக் காணலாம் நாகரிகம் அற்ற காட்டுமிராண்டிகளிடம் இந்த உண்மையை இன்றும் அறியலாம். அவர்கள் ஆடும்போதெல்லாம் பாடுகிறார்கள். அவ்வப்போது புதியனவாகப் புனைந்த பாட்டுக்களைப் பாடுகிறார்கள். முதற்காலத்து மக்கள் இவ்வாறு ஆடுகின்ற நிலையிலே மொழியைத் தோற்றுவித்தார்கள். அவர்கள் பாட்டெல்லாம் பொருளற்ற வெற்றொலிகளாக இருந்தன.[1] படிப்படியே அவை பொருளுணர்த்தத் தொடங்கின. பிறந்த காலமும், இடமும் காரணமும் பற்றி ஒவ்வோ ரொலியும் ஒவ்வொரு பொருளையோ தொழிலையோ சுட்டத் தொடங்கின. இவ்வாறுதான் பொருளற்ற வெற்றுரைகள்

1. Men sang out of their feelings long before they were able to speak their thoughts. But of course we must not imagine that "singing" means exactly the same thing here as in a modern concert hall. When we say that speech originated in song, what we mean is merely that our comparatively monotonous spoken language and our highly developed vocal music are differentiations of primitive utterances, which had more in them of the latter than of the former.—Otto Jespersen, Language, p. 436.

கருத்துணர்த்தும் சொற்களாயின.[1] எனவே எல்லா நாடுகளிலும் பாட்டு உரைநடையை விடப் பழமையாய் இருப்பது போலவே, பாட்டு மொழி, பேச்சு மொழியினும் முற்பட்டதாகும். ஓவியம் முந்தியது; அதிலிருந்து தோன்றிய எழுத்துப் பிந்தியது. அதுபோலவே முதற் காலத்து மக்கள் பாடிய பாட்டுக்களே பிற்பட்ட பேச்சு மொழியின் தோற்றத்திற்குக் காரணமானவை. இந்தக் கொள்கையே 'தானன கொள்கை' அல்லது 'பாட்டு மொழிக் கொள்கை' (the lyric theory or the heynonino theory) என்பது.

---

1. பெட்டைக் கோழி கிக் கிக் என்று ஒலித்துக்கொண்டிருக்கின்றது. வானத்தில் பருந்து பறந்துவருவதைக் கண்ட போது, தன் குஞ்சுகளுக்கு எச்சரிக்கை செய்யத் தொடங்கி, கிக் கிக் என்னும் ஒலியையே ஒருவகை மாறுதலுடன் ஒலிக்கின்றது. அந்த ஒலிவேறுபாட்டைக் குஞ்சுகள் தெரிந்துகொண்டு தாயின் சிறகை அரணுக அடைகின்றன. பொருளற்ற 'கிக் கிக்' என்னும் ஒலி இவ்வாறு எச்சரிக்கைப் பொருள் பெற்றது போலவே, பண்டைக் காலத்தில் ஒவ்வொருவகை ஒலியும் சொல்லாய்ப் பொருள் பெற்றது என்பது யெஸ்பர்ஸன் கொள்கை.—Otto Jespersen, Language, p. 437.

உஉ. மொழிநிலைகள்

மக்களும் மொழியும்

நூற்றுக்கணக்கான மொழிகள் உலகில் பேசப்படுகின்றன. ஒரு நாட்டு மக்கள் பல மொழிகளைப் பேசுதலும் உண்டு; பல நாட்டு மக்கள் ஒரு மொழியைப் பேசுதலும் உண்டு. மக்களை இனம் கருதிப் பிரிப்பவர் மொழி ஆராய்ச்சி நடத்தி முடிவுகாண முயல்வதும் உண்டு. அத்தகைய ஆராய்ச்சிக்குத் தெளிவாகாமல் தடைப்படும் ஒன்று, மக்களும் மொழிகளும் கலக்கும் கலப்புமுறையே யாகும். இருவகை மக்கள் ஒரு நாட்டில் பழகிக் கலந்து வாழும் வாழ்வில் ஒற்றுமை மிகுதியாக உள்ளது. ஆயின், அவர்கள் பேசும் இருவகை மொழிகளும் அவ்வளவு நெருங்கிக் கலத்தல் அரிதாகவே உள்ளது. மக்கள் கலப்பில் இரண்டு இனம் உரிமையுடன் கலந்து ஒன்றுகக் காண்கின்றோம். ஆனல், மொழிக் கலப்பில் ஒரு மொழி செல்வாக்குப் பெற்று ஓங்க, மற்றொரு மொழி உரிமை இழந்து அழிதலே பெரும்பாலும் நிகழக் காண்கின்றோம். ஆதலின், மக்களின் ஆராய்ச்சி வேறு, மொழிவகை ஆராய்ச்சி வேறு எனப் பிரித்தறிதல் நலம்.

மொழிவகை ஆராய்ச்சியில், ஒலியைக் கருவியாகக் கொண்டு வகுத்தல் பயனற்றுப் போகின்றது. பல ஒலிகள் மொழிகளுக்கெல்லாம் பொதுவாக உள்ளன. ஒலித் துறையில் ஒற்றுமை மிகுதி; வேற்றுமை குறைவு. சில, காலப்போக்கில் ஒலிவகையில் காணும் மாறுதல்களும் பற்பல.

மக்கள் பேசும் பலவகைச் சொற்களையும் ஆராய்ந்து அவற்றை மொழிகளை வகைப்படுத்துவதும் ஒரு சாரார் முயற்சியாகும். அவர்களின் முயற்சியும் தெளிவு பயப்ப

தில்லை. உறவல்லாத இரண்டு மொழிகளுக்குள் ஒரு சில சொற்கள் ஒத்திருத்தலும் உண்டு. எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் எய்ட் (eight), பிரைஸ் (prize), மம்மா (mamma) முதலிய சொற்களை எட்டு, பரிசு, அம்மா என்னும் தமிழ்ச் சொற்களோடு ஒப்பிட்டுக் காணலாம். நெருங்கிய உறவு உடைய இரு மொழியுள் பல சொற்கள் வேறுபடுதலும் உண்டு. அவன், உள், எழுபது என்னும் தமிழ்ச் சொற்களும் வாடு, லோ, டெப்பை என்னும் தெலுங்குச் சொற்களும் உறவு அற்றவை போல் தோன்றுகின்றன அல்லவா? தமிழ், தெலுங்கு, கன்னடம் மலையாளம் இவற்றின் அகராதிகளை ஒப்பிட்டால் இந்த உண்மையை அறியலாம். தவிர, சொற்கள் அடிக்கடி உருவம் மாறுவன, கெடுவன. ஒரு சொல் அழிந்தபின், தொடர்பில்லாத வேறு சொல் அதன் இடத்தைக் கொள்ளுவதும் உண்டு.

ஆதலின், ஒலியியலையும் (phonetics) சொற்பிறப்பையும் (etymology) விடுத்து, சொல்லமைப்பை (morphology) ஆராய்தல் நலம். சொல்லமைப்பினைக்கொண்டு மொழிநிலையைப் பொதுவாக மூன்று வகைப் படுத்தலாம்.

தனிநிலை

சொற்கள் ஒன்றோடொன்று ஒட்டாமல் தனித் தனியே நின்று வாக்கியமாக அமைந்து பொருள் உணர்த்தும் நிலை ஒன்று. இது தனிநிலை (isolation) எனப்படும். இந் நிலையில் உள்ள மொழியில் பெயர்வினைகளாகிய சொற்கள் பெரும்பாலும் ஓசைச் சொற்களாகவே (monosyllabic words) இருத்தல் இயல்பு.

இத்தகைய மொழியில் சொற்கள் எல்லாம் அடிச் சொற்கள் (roots) ஆகும். அதாவது, இம் மொழியில்

சொற்களுக்கும் பகுதிகளுக்கும் வேறுபாடு இல்லை. சொற்க ளெல்லாம் பகுதிகளே; பகுதிகளே சொற்கள். விகுதி இடைநிலை முதலியன இல்லை. இலக்கணம் என்பது இம் மொழியில் வாக்கிய அமைப்பைப் பற்றியதே யாகும்.[1] அதற்கு அடுத்தபடி, சொற்களை எடுத்தும், படுத்தும் நலிந்தும் ஒலித்துப் பொருள்வேறுபாடு புலப்படுத்தும் முறை இன்றியமையாதது. சீன மொழி, சயாம் மொழி (Siamese), பர்மிய மொழி, திபெத்து மொழி எல்லாம் இவ் வகையைச் சார்ந்தவை.

சீனமொழி

சீனமொழியில் இலக்கணத்தை விளக்கும் முறை வியப் பூட்டுவதாகும். "சொற்கள் இருவகைய. அவை பொரு ளுணர்த்தும் சொற்கள், வெறுஞ் சொற்கள் என்பன. பொருட் சொற்களுக்கும் வெறுஞ் சொற்களுக்கும் வேற் றுமை புலப்படுத்தும் கலையே இலக்கணம் எனப்படும்" என்பது அந்த விளக்கம்.[2] இதிலிருந்தே அம் மொழியில்

1. The grammar of all monosyllabic or isolative idioms is necessarily and entirely a question of syntax.—Abel Hovelacque, The Science of Language, p. 34.

2. The Chinese divided the roots into two distinct classes—the full and the empty words (chi-tsen and lin-tsen) By the first, they understood those roots that retained their full and independent meaning. They called empty words those roots whose proper value was becoming gradually obscured and which, little by little, acquired the function of fixing precisely the extremely vague idea of the full words, whose primitive sense was still fully preserved. "What is grammar?" the Chinese teacher asks his pupil. "It is a very useful art", replies the pupil, "an art that teaches us to distinguish between the full and empty words."—Ibid, p. 37.

இலக்கணம் அமைந்த முறையினை எண்ணி வியக்கலாம். "கையால் எடு" என்ற தமிழ் வாக்கியத்தில் சீன இலக்கணப்படி, 'கை' என்னும் பெயரும் 'எடு' என்னும் வினையும் பொருட்சொற்கள். 'ஆல்' என்னும் வேற்றுமை யுருபு வெறுஞ் சொல்லாகும்.

சீன மொழிச் சொல் ஒவ்வொன்றும் இடத்திற்கேற்பப் பல பொருள் தரும். 'தா' என்பது பெயராக நிற்கும் போது 'பெருமை' என்னும் பொருளும், பெயரடையாக நிற்கும்போது 'பெரிய' என்னும் பொருளும், வினையாகும் போது 'பெரிதாக்கு, பெருகு' என்னும் பொருளும், வினையடையாகும்போது 'பெரிதும், பெரிதாக' என்னும் பொருளும் உணர்த்தும்.[1] கல் என்னும் தமிழ்ச் சொல், 'கல் எடு,' 'கல் வீடு,' 'அதைக் கல்' என்னும் வாக்கியங்களில் பெயராகவும், பெயரடையாகவும், வினையாகவும் வேறுபடுமாறு போலக் கொள்க. ஆகையால், அம் மொழியில் சொல் நிற்கும் இடம் (word-order) அறிந்து பொருளுணரவேண்டும்; வாக்கிய இலக்கணம் இன்றியமையாததாகின்றது.

தமிழிலும் ஓரசைச் சொற்கள் பலவாக உள்ளன. நீ—போ, மண்—பார், பூ—தா முதலான வாக்கியங்களும் உள்ளன. சங்க இலக்கியத்தில் பெரும்பாலும் ஓரசைச் சொற்களும் ஈரசைச் சொற்களுமே இருத்தல் கருதத் தக்கது.

ஒட்டு நிலை

அடிச்சொற்கள் (roots) இரண்டு சேருங்காலத்தில், அவற்றுள் ஒன்று சிதையாமல் நிற்க, மற்றொன்று சிதை

1. Whitney, Language and the Study of Language, p. 330.

தல் உண்டு. இவ்வாறு அடிச்சொல் இரண்டும் பலவும் ஒட்டி நிற்கும் நிலை, ஒட்டு நிலை (Agglutination) என்பது. 'கண்ணன் பார்த்தான்' என்னும் தமிழ் வாக்கியத்தில் 'கண்ணன்' என்ற சொல் ஒட்டுநிலையாக அமைந்ததே. 'கண்' என்ற சொல்லும் 'ஆன்' (அன்) என்ற சொல்லும் ஒட்டி முன்னது சிதையாமல் நிற்க, பின்னது குறுகிக் கண்ணன் என்று ஆயிற்று. பார்த்தான் என்பதிலும் பார் என்பதோடு வேறு சில சேர்ந்துநின்றன.

இச் சொற்களில் முதலில் நிற்கும் கண், பார் என்ப வற்றை இலக்கண நூலார் பகுதி என்பர். மொழிநூலார் அடிச்சொல் (root) என்பர். அவற்றோடு சேர்ந்த விகுதி இடைநிலை முதலியவை இடைச்சொல் எனப்படும். இடைச் சொல் தமக்கென்று பொருளில்லாதவை. தாம் சாரும் பெயர்வினைகளின் பொருளைத் தெளிவாக்குவன.[1] முதலில் இடைச்சொல் என்று ஒருவகைச் சொல் இல்லை என்பதும், பெயர்வினைகளே நாளடைவில் சிதைந்து அவ்வாறு பயன் பட்டன என்பதும் மொழிநூலார் கொள்கை. முழுச் சொற்களாக இருந்த இவை சிதைந்து இடைச்சொற்க ளாய்ப் பெயர்வினைகளோடு ஒட்டிநிற்றலே ஒட்டுநிலை என்பது.

உலகில் உள்ள மொழிகளில் பெரும்பாலன இந்நிலை யில் உள்ளன. சித்திய மொழி என வகுக்கப்பெற்ற மொழி

---

1. இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே.
—தொல். சொல். 249.

"பெயரும் வினையும் உணர்த்தும் பொருளைச் சார்ந்து நின்று அவற்றை வெளிப்படுப்பதல்லது, தமக்கெனப் பொருளுடைய அல்ல" என்று சேனாவரையர் தரும் விளக்கம் காண்க.

களும் இவ்வகையினவே. திராவிட மொழிகளும் இவ்வகையினவே. தமிழ்மொழியின் பகுதிகள் பலவும் ஒரசையாக இருத்தலும், அவை இடைச்சொற்களோடு ஒட்டி நிற்றலும் காண்க.

தென் ஆப்பிரிக்காவின் பழங்குடி மக்களின் பண்டு (Bantu) மொழி, ஆஸ்திரேலியாவின் பழங்குடி மக்களின் மொழி, மலேயா—பாலினேஷியன் மொழி, ஜப்பானிய மொழி, கொரிய மொழி, பின்னிஷ் (Finnish) மொழி, பாஸ்க் (Basque) மொழி முதலான பல மொழிகளும் ஒட்டுநிலையினவே.

உட்பிணைப்பு நிலை

அடிச்சொல் இரண்டு சேருங்காலத்து இரண்டும் சிதைந்து ஒன்றுபட்டு நிற்றல் உண்டு. இந்நிலையே உட்பிணைப்பு நிலை (inflection) என்பது. இவ்வகை மொழியில் அடிச்சொல் தெளிவாய் நிற்றல் இல்லை. பகுதி விகுதி முதலியவற்றை எளிதில் பிரித்தறிய இயலாது.[1] ஐரோப்பிய மொழிகள் பலவும் வடமொழியும் இவ்வகையைச் சார்ந்தவை. இவற்றில் பகுதி ஒன்றே பலவகையாய்த் திரிந்து பலவகைப் பொருள் உணர்த்தும். கிரேக்க மொழியில் ஒரு வினைப்பகுதி 268 வகையாய்த் திரியும் என்றும், வடமொழி

1. தமிழில் 'கொணு' என்னும் சொல் அவ்வாறு உட்பிணைப்பாய் நிற்கும் சொல்லாகும். செத்தான், சென்றது முதலான சொற்களிலும் அடிச்சொல் திரிந்து நிற்றல் காண்க. இந்நிலைக்கு எடுத்துக்காட்டாகத் தமிழில் சொற்கள் கிடைத்தல் அரிது. காரணம் தமிழ்ச் சொற்கள் ஒட்டுநிலையின. ஐரோப்பிய மொழிகளில் பல சொற்களும் உட்பிணைப்பாய் அமைந்துள்ளன. Such, which என்னும் ஆங்கிலச் சொற்கள் so-like, who-like என்பவற்றின் உட்பிணைப்பாம்.

யில் ஒரு விணைப்பகுதி 891 வகையாய்த் திரியும் என்றும் கூறுவர்.

இத்தகைய மொழியின் வாக்கியங்களில் சொற்களின் இடம் (word-order) பற்றிக் கவலையில்லை. எந்தச் சொல்லும் எங்கு வேண்டுமாயினும் இருக்கலாம்.[1] ஏதோ ஒரு மரபு பற்றி மாற்றியமைத்து (அன்வயப்படுத்திப்) பொருள் செய்துகொள்ளலாம். லத்தீன், ஜெர்மன் முதலான மொழிகளில் எழுவாய் பயனிலை முதலியவை வாக்கியத்தில் கண்ட இடமெல்லாம் காணப்படும் முறையினைச் சொற்களின் ஒளிப்பாட்டம் (hide—and—seek) என்கின்றார் யெஸ்பர்ஸன்.[2]

உயிர் மாற்றம்

செமிடிக் மொழிகளில் உள்ள சொல்லமைப்பு முறை ஒருவகை உட்பிணைப்பாகும். அவ் வகை மொழியில் மூவசைச் சொல்லின் உயிரெழுத்துக்களின் மாறுதலால் பொருள்வேறுபாடு உணர்த்தப்படும். அவற்றின் அடிச் சொல் இரண்டு பிணைந்தன என்றோ, பிரிந்தன என்றோ கூற இடம் இல்லை.[3] ஆயினும் இதுவும் ஒருவகை உட்பிணைப்பு நிலையாகும்.

எடுத்துக்காட்டாக அரபிய மொழியில் க்-ட்-ல் (Q-T-L) என்னும் மூன்று மெய்யும் அடங்கிய அடிச் சொல் கொல்லுதல் என்னும் பொருளைத் தரும். அம்

1. The more highly inflected a language is, the greater is the liberty which it may take in positional arrangement. The presence or absence of inflectional devices, and the degree of their usage, modifies the scope of syntactical arrangement.—G. K. Zipf, The Psycho-Biology of Language, p. 246.

2. Growth and Structure of the English Language, p. 11.

3. Whitney, Language and the Study of Language, p. 301.

மெய்யெழுத்துக்களுடன் உயிரெழுத்துக்கள் பலவகையாகச் சேர்ந்து பல பொருள் தரும்.

காடாலா—Qatala—அவன் கொன்றான்
குடில —Qutila—அவன் கொல்லப்பட்டான்
குடிலு —Qutilu—அவர்கள் கொல்லப்பட்டனர்
உக்டில் —Uqtul—கொல்
க்டில் —Qatil—கொலை
காடில் —Qtil—பகைவன்.

சொற்றொகை நிலை

அமெரிக்காவின் பழங்குடிமக்கள் பேசும் மொழிகள் முற்றிலும் வேறுபட்ட மற்றொரு நிலையில் உள்ளன. அவற்றில் சொற்கள் பல ஒன்றுய்ச் சேர்ந்து ஒரு தொகுதியாய் நீண்டு கிடக்கின்றன. அம்மொழிகளில் சொல்லுக்கும் வாக்கியத்திற்கும் வேறுபாடு இல்லை என்னலாம். எவ்வளவு பெரிய வாக்கியமும் பிரிக்கமுடியாமல் ஒரு சொல்லாகவே இருக்கின்றது. இந்நிலை சொற்றொகை நிலை (incorporative or polysynthetic stage) என்பது.[1] இதனை ஒருவகை ஒட்டுநிலை எனலாம்.

மொழிநிலையில் நாகரிகம்

சென்ற நூற்றாண்டில் மாக்ஸ் முல்லர் மொழிப் பாகுபாட்டினை ஆராயத் தலைப்பட்டு உலக வரலாற்றிலிருந்து சான்றுகள் தேடினர். அவர்முயற்சி பயனற்றுப் போனது; அவர் கண்ட முடிபுகளும் அறிஞர்களால் ஏற்றுக்கொள்

1. It tends to the exclusive and abnormal agglomeration of distinct significant elements in its words. The Mexican name for goat is 'kwa-kwanch tentsone,' literally 'head-tree (horn)-lip-hair (beard)' or 'the horned and bearded one'... 'I-it-him-give - the bread - my son' for 'I give my son the bread.'—Ibid, p 348.

ளப்படவில்லை. அவர் மக்கள்இனத்தை மூவகையாக்கினர். குடும்ப வாழ்க்கையின் அளவில் நாகரிகம் நின்றுவிட்ட மக்கள் பேசும் மொழியே தனிநிலைமொழி என்றார். ஒட்டு நிலைமொழியை ஊர் ஊராக நாடுதோறும் அலைந்து திரியும் நாடோடிக் கூட்டத்தினர் பேசும் மொழி என்றார். ஒரு நாடு அமைத்து ஆளும் நாகரிகம்பெற்று உயர்ந்த மக்கள் பேசும் மொழியே உட்பிணைப்புமொழி என்றார். இவ்வாறு அவர் செய்த முயற்சி யெல்லாம் ஐரோப்பிய மொழிகளுக்குச் சிறப்புத் தேடுவதற்கே பயன்பட்டது. அவர் கருத்தின்படி திராவிட மொழி பேசிய மக்கள் நாடோடிகளாய்த் திரிந்தவர்கள் என்றும், அரசியல் நாகரிகம் அடையாதவர்கள் என்றும் கொள்ளவரும். ஆனால் அறிஞருலகம் கண்மூடியிருந்து அதனை ஏற்றுக்கொள்ள வில்லை. தமிழ், தெலுங்கு முதலான மொழிகளில் ஒரு சில உட்பிணைப்புகள் காணப்படுவதால், அவற்றைப் பேசிய மக்கள் ஒரு சிறிது அரசியல் நாகரிகத்தை எட்டினவர் என்றும் அவர் கூறியுள்ளார்.[1]

ஆனால், யெஸ்பர்ஸன் முதலிய சிறந்த அறிஞர் ஆராய்ச்சியால் அது மறுக்கப்படுகின்றது. உட்பிணைப்பு மொழிகள் கருத்துக்களை எளிதில் புலப்படுத்தாமையால் அவை தனிநிலை மொழிகளைவிடத் தாழ்ந்தவை என்பது யெஸ்பர்ஸன் கொள்கை. சாய்ஸ் என்னும் அறிஞரும் உட்பிணைப்புமொழிக்குச் சிறப்புத் தர மறுக்கின்றார்;

1. Where nomadic tribes approach to a political organisation, their language, though Turanian, may approach to the system of political or traditional languages, such as Sanskrit or Hebrew. This is indeed the case with the most advanced members of the Turanian family, the Hungarian, the Finnish, Tamil, Telugu, etc.—Max Muller, The Science of Language, p. 340.

அவர் ஒட்டுநிலை மொழியைப் போற்றி அம்மொழி அமைப்பிலுள்ள அறிவாற்றலை எடுத்து விளக்கியுள்ளார்.[1]

உட்பிணைப்புநிலை உயர்வானது என்று போற்றி, வடமொழி முதலான இந்தோ - ஐரோப்பிய மொழிகளின் மேம்பாட்டுக்கு அதுவே காரணம் என்று கூறும் கொள்கையை யெஸ்பர்ஸன் மேலும் எள்ளுகிறார். அமெரிக்க மொழிகளில் உட்பிணைப்புநிலை இன்னும் மிகுதியாக இருத்தலைக் கண்டு, அவற்றைப் பேசும் சிவப்பு இந்தியருக்கு மேம்பாடு கூறலாகாது என்று கருதியே, அம் மொழிகளை உட்பிணைப்புநிலை என்ற வகையில் சேர்க்காமல் விட்டனர் என்கிறார். உட்பிணைப்புநிலை உயரிய நாகரிகத்தின் விளைவு என்பாரை நோக்கி லித்துவேனிய மொழியின் உட்பிணைப்புநிலையைக் காட்டி வடமொழியோடு அதனை ஒப்பிடுமாறு கோருகிறார். லித்துவேனிய மொழியின் உட்பிணைப்பு வடமொழியின் உட்பிணைப்பே போன்றது; இலக்கண அமைப்பும் ஒரு தன்மையானது; ஆயினும் அதனைப் பேசும் மக்கள் பண்பாடு உள்ளவர்கள் எனக்

1. In fact, when we examine closely the principle upon which flection rests, we shall find that it implies an inferio logical faculty to that implied by agglutination. In a flectional language the relations of the sentence are denoted by particular suffixes or internal vowel-changes, which group themselves, as it were, round the principal thought contained in the sentence...In other words, every snbordinate thought should be denoted by a flection...In fact, the principal of flection cannot be logically carried out beyond the narrow circle of those simple sentences which sufficed for the needs and intelligence of primitive man, and progress of thought in modern Europe has been marked by a corresponding revolt from the trammels of flection. English has fitted itself to become a universal language by struggling to assimilate its condition to that of Chinese.—Sayce, Introduction to the Science of Language, p. 375.

கூறமுடியாது. ஆகையால், மக்களின் நாகரிகத்திற்கும் மொழியின் வளர்ச்சிக்கும் முடி போடும் முறை மிகத் தவறானது என்கிறார் யெஸ்பர்ஸன்.[1]

தென் ஆப்பிரிக்காவில் பண்டு (Bantu) முதலிய மொழிகளில் மிகச் செறிந்த உட்பிணைப்புநிலை காணப்படுகிறது. அவற்றை நோக்க, சமஸ்கிருதம், கிரீக், லத்தீன் முதலிய மொழிகளில் உட்பிணைப்பு இல்லை என்றும் கூறத் தோன்றும். ஆனால் மாக்ஸ்முல்லரின் கருத்துப்படி, பண்டு (Bantu) முதலிய மொழிகளைப் பேசுவோர் நாகரிகம் மிகுந்தவர்கள் என்று கூறுதல் பொருந்துமோ? அல்லது, தனிநிலையாக வழங்கும் சீன மொழியைக் கண்டு, சீன மக்கள் நாகரிகமற்ற காட்டுமிராண்டிகள் என்று கூறுதல் தகுமோ? பண்டைக்காலத்துச் சிறப்பெய்தி விளங்கிய ஒரு சில நாகரிக நாடுகளுள் சீனாவும் ஒன்றாக ஒங்கியிருந்தது என்பது வரலாறு அறிந்த உண்மை. ஆதலின் மாக்ஸ்முல்லரின் கொள்கை தவறாகும்.

பாகுபாடு

உலக மொழிகளை எல்லாம் தனிநிலைமொழி, ஒட்டுநிலை மொழி, உட்பிணைப்புமொழி என மூவகைப்படுத்தி மொழியியலார் பிரிக்க முயன்றார். மொழிநிலைகளை மூன்றாகப் பாகுபாடு செய்தல் வேறு; மொழிகளையே இவற்றை ஒட்டி மூன்று இனமாகப் பாகுபாடு செய்தல் வேறு.

---

1. Very little thought seems to be required to show the fallacy of the assumption that high civilisation has any intrinsic and necessary connexion with the grammatical construction of the language spoken by the race or nation concerned...Culture and language must be appraised separately, each on its own merits and independently of the other.—Otto Jespersen, Language, p. 78.

இவ்வாறு மொழிகளை மூவகைப்படுத்தல் அறிஞர் யெஸ்பர்ஸனுக்கு உடன்பாடு அன்று. உட்பிணைப்பு நிலைக்கும் ஒட்டுநிலைக்கும் பெரிய வேறுபாடு இல்லை என்றும், ஒட்டுநிலை என்பதே தெளிவில்லாத ஒரு குறியீடு என்றும் அவர் கருதுகிறார்.

எதையும் பாகுபாடு செய்வதில் ஆர்வம் காட்டுவது மனித இயல்பு; மூன்றுவகை, ஏழுவகை என்று சிலவற்றைப் பாகுபாடு செய்துமுடித்தவுடன், அவற்றைப் பற்றி ஐயமற அறிந்து கொண்டாற்போன்ற நம்பிக்கை மனத்திற்கு ஏற்படுகிறது. அதனால் எந்தத் துறையிலும் எளிதில் பாகுபாடு செய்யும் பழக்கம் வளர்ந்துவிடுகிறது. மொழியினங்களை மூன்றாகப் பகுத்த முறையும் இவ்வாறு ஏற்பட்ட ஒன்றே என்றும், அதன் அடிப்படையில் உண்மையும் தெளிவும் இல்லை என்றும், இப் பாகுபாடு போதாதது என்றும், குறையுடையது என்றும் யெஸ்பர்ஸன் கருதுகிறார். இந்த மூன்றுநிலைகளும் ஒவ்வொரு மொழியின் வளர்ச்சியிலும் மாறுதலிலும் காணப்பட்டுவருகின்றன என்பதை அவர் உடன்படுகிறார்.

மாறுதல்

எந்த மொழியும் காலப்போக்கில் மாறுதல் அடையாமல் இருக்க முடியாது. மாறுதல் மெல்ல மெல்ல நடந்தவாறே உள்ளது. உயிரினங்களின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் மாறுதல் இன்றியமையாதது போலவே மொழிகளின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அது இன்றியமையாதது என்பது சிலர் கருத்து.[1] மொழியின்

1. The natural condition of language is diversity and change, and it is only under the artificial influences of civilisation and culture that a language becomes uniform and

இயற்கை அதுவே; இலக்கியப் பண்பாடும் நாகரிகமும் செயற்கையாக அதைத் தடுத்து ஒரு நிலையில் நிறுத்த முயல்கின்றன. அந்த முயற்சியையும் கடந்து மொழி ஓரளவு மாறிக்கொண்டே இருக்கிறது.

மொழியின் மாவட்டம்

ஆகவே, ஒரு மொழியில் தனிநிலை வாக்கியங்கள் மிக்கிருக்கும்போதே ஒட்டுநிலையான சொற்கள் பல அமைகின்றன. ஒட்டுநிலைமொழியில் உட்பிணைப்புநிலை மெல்ல இடம் பெறுகிறது. உட்பிணைப்புநிலையில் தனிநிலைக்கான வளர்ச்சி ஓரளவு இடம்பெறுகிறது. இவ்வாறு ஒரே மொழியில் மூவகைநிலையும் மாறி மாறி வளர்கின்றன எனலாம்.[1] ஒருநிலை மிக்கிருப்பதாகவும் மற்றவை குறைந்திருப்பதாகவும் கூறுதல் பொருந்துமே தவிர, இந்த மொழி இன்ன நிலையைச் சார்ந்தது என்று வரையறுத்துக் கூறமுடியாது.

---

stationary.—A. H. Sayce, Introduction to the Science of Language, p. 200.

No language remains, or can remain, the same during a long period of time. Growth and change make the life of language, as they are everywhere else the inseparable accompaniment and sign of life.—Whitney, Language and the Study of Language, p. 32.

1. These different 'stages', however, are the result of modifications taking place at the same time in every language, which influence the morphological system at every point, and whose momentary success or otherwise, is determined by particular conditions in each language. Further, the transformation is never complete; the earlier forms often live side by side with the new ones.—J. Vendryes, Language, p. 349.

எடுத்துக்காட்டாக, தமிழைக் காணலாம். தமிழ் ஒட்டுநிலையில் உள்ளது என்று கூறப்படுகின்றது. நாட்டார், மனிஷி, காண்பார், வரும் முதலான ஒட்டுநிலைச் சொற்கள் பெரும்பாலனவாக இருத்தல் உண்மையே. ஆனால், கல், மண், நான், நீ, போ, வா முதலான சொற்கள் தனிநிலையில் வழங்குதலும் சிறுபான்மை உண்டு. கொணை, சென்றது, சிவந்தன முதலான சில சொற்கள் உட்பிணைப்பு என்று சொல்லக்கூடியவாறும் உள்ளன. ஆங்கில மொழியில் பெரும்பான்மையும் தனிநிலையே காணப்படினும், ஒட்டுநிலையும் உட்பிணைப்பு நிலையும் இன்னும் உள்ளன. ஆகையால், இன்ன மொழி இன்ன நிலையில் உள்ளது என்று ஆராய்தலைவிட, இன்ன மொழியில் இன்ன நிலை பெருகியுள்ளது என்று ஆராய்தல் தக்கது.

தனிநிலைமொழி என்று கருதப்படும் சீனமொழியின் பேச்சுவழக்கிலும் கிளைமொழிகளிலும் (dialects) இரு சொற்கள் கூடிய தொடர்கள் ஒட்டுநிலைபோல் சிற்சில காணப்படுகின்றன. தனிநிலை மொழியாகிய பர்மிய மொழியிலும் ஓரிரு விகுதிகள் சேர்ந்து சொல் அமைதல் உண்டு.[1] ஆகவே மொழிகள் என்றும் ஒரே நிலையாக இருப்பதில்லை என்றும், இத்தகைய மாறுதல் இயல்பாக உள்ளது என்றும் உணரலாம்.

அன்றியும், தனிநிலை மொழியில் உள்ள சொற்கள் நாளடைவில் சேர்ந்து ஒன்றுபட்டு ஒட்டுநிலையாதல் எல்லா மொழியிலும் இயற்கையாகக் காணப்படுகிறது.

1. Even the Chinese, the purest type of the isolating structure, is by some regarded as, in its colloquial forms, and yet more in some of its dialects, a language of compounded words : and the possession of one or two real formative elements has been claimed for the Burmese.—Whitney, Language and the Study of Language, p. 359.

மக + அன் — மகன்
மக + அள் — மகள்

ஒட்டுநிலை உட்பிணைப்பாதலும் உண்டு. தந்தை தவ்வை, களிறு மூதலிய சொற்கள் அவ்வாறு அமைந்தன எனலாம். உட்பிணைப்பாய் அமைந்த சொற்கள் மீண்டும் தனிநிலையாய் வழங்கலும் உண்டு. கொணை, கொடு மூதலிய சொற்கள் இன்று சிறு சிறு அடிச்சொற்கள் போல் வழங்குகின்றன. கொண்டுவா, கொள்ளச்செய் மூதலான கருத்துக்கள் அச் சொற்களில் அடங்கியிருத்தலின், அவை நீண்ட உட்பிணைப்புச் சொற்களாக இருந்தே குறுகியிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகின்றதன்றே? கொணர்ந்தான் கொடுத்தான் என்னும் போது, தனிநிலையாய் வழங்கின கொணை கொடு என்பன ஒட்டுநிலையாகின்றன. இவ்வாறு ஒருநிலை மற்றொரு நிலையாய், அது மீண்டுமவ்வேறொன்றாய் மாறி மாறி வரக்காண்கின்றோம். வட்டவடிவமான கோளத்தைச் சுற்றி வந்து புறப்பட்ட இடத்தை அடைதல் போல் உள்ளது இது. மொழி வரலாற்றில் இம்மாறுதலை ஒரு மாவட்டம் என்பர்.[1] தனிநிலையாகவே எல்லா மொழிகளும் தொடங்கியிருக்க வேண்டும் என்றும், அவை படிப்படியே வளர்ந்து மாறி மாறி மீண்டும் தனிநிலை அடையும் என்றும் மொழிநூலறிஞர் சிலர் கருதுகின்றனர். ஆங்கிலம் அவ்வாறு சுற்றிவந்து இன்று தனிநிலையாய் ஓங்கிநிற்கக் காண்கின்றோம். தமிழிலும் அதற்குரிய அறிகுறிகள் ஒரு சில காணப்படுகின்றன.

வாக்கிய அமைப்பு

பழங்காலத்து மக்களுக்கு நிலைவில் நின்ற கருத்துக்களும் பொருள்களும் சிலவே; இக்காலத்து மக்கள் அறிந்து

1. G. K. Zipf, The Psycho—Biology of Language.

நினைவில் வைத்துக் காக்க வேண்டும் கருத்துக்களும் பொருள்களும் பற்பல. அன்றியும், நாகரிக வாழ்வில் நினைவாற்றல் வேறு பல துறைக்கு வேண்டுவதாக உள்ளது. ஆதலின், நாகரிகம் வளர வளர நினைவாற்றல் குறைவதாகக் காணப்படும். நினைவாற்றல் குறைந்த மக்கள் ஒவ்வொரு சொல்லிலும் இலக்கண வேறுபாடுகளை அமைத்து அவற்றை மறவாமல் போற்றிப் பேசுதல் அரிதாகும். அதனால் காலப்போக்கில் இலக்கண வேறுபாடுகளைச் சொல்லின் இடைநிலை, விகுதி, உருபு முதலியவற்றால் உணர்த்தும் முயற்சி குறைந்துபோகும்; அதற்கு ஈடாக, இன்னசொல் இன்ன இடத்தில் அமைந்து இன்ன பொருள் பயக்கும் என்ற வாக்கிய இலக்கணமே தலையெடுத்து வாழும்.[1] இதுவே ஆங்கில முதலிய மொழிகளின் வளர்ச்சியில் காணப்படுவதாகும்.[2] இதனைத் தனிநிலை மொழி பலவற்றுள்ளும் காணலாம். தமிழ் தனிநிலை மொழி அன்று. ஆயின், தமிழிலும் பல வாக்கியங்கள் இம் முறையில் அமைந்துவருகின்றன.

தனிநிலையின் சிறப்பு

இவ்வாறு அமைந்த தனிநிலை மொழிகளே மிகச் சிறந்தவை என்பது அறிஞர் யெஸ்பர்ஸன் கொள்கை. அவர் அதற்குத் தக்க காரணங்கள் காட்டி நிறுவியுள்ளார். இவ்வாறு சொற்கள் அமையும் முறை பேசுவதற்கு எளி

1. The logical ideal of grammar would be to have an expression for each function and a single function for each expression.—J. Vendryes, Language, p. 154.

2. Ancient languages have a more copious grammar than modern ones. The comparison of the two extremes, Greek and English, has often prompted the remark that English has 'no grammar.'—Sweet, The Practical Study of Languages, p. 278.

தாகவும், கேட்டு உணர்வதற்குத் தெளிவாகவும் உள்ளது. திணை பால் இடம் வேற்றுமை காலம் முதலியவற்றிற்கு ஏற்ப விகுதி முதலியவை ஒட்டி நீண்டமைந்த சொற்களைக் காக்கும் முயற்சியின்றி, ஓரசை ஈரசைச் சொற்கள் சிலவற் றால் வாக்கியங்களைத் தெளிவாக அமைத்துக்கொள்ள முடிகின்றது. சொற்களில் திணை பால் காலம் முதலிய வற்றை எவ்வாறு செறிக்கலாம் என்று முயல்வதைவிட, வாக்கியத்தில் எவ்வெச் சொற்களை எவ்வெவ்விடத்தில் அமைத்திடல் சிறந்தது என்ற ஆராய்ச்சியும் பயிற்சியும் முற்போக்கானவை. இவ்வாறு விளக்கும் யெஸ்பர்ஸன், மொழி ஒரு கருவி என்று கூறி, ஆட்சிக்கு எளிதாய்ப் பயன் பிக்கதாய் உள்ள கருவியே சிறந்த கருவி என்று குறித்து, சிறு சொற்கள் சிலவற்றைக்கொண்டு பற்பல அரிய கருத்துக்களையும் எளிய முறையில் தெளி வுற உணர்த்துதலே மொழியின் வெற்றி என விளக்கு கின்றார். எதிர்காலத்தில் மொழியின் முற்போக்கு என் பது இவ்வாறு அமைந்து பயன்படுவதேயாகும் என்பது அவர் நம்பிக்கை.[1]

1. Languages tend on the whole more and more to utilise word-position for grammatical purposes; and this is really a progressive tendency, directly progressive, because it is in itself the easiest and nicest linguistic expedient, rendering the task of speaking easier, and involving less effort on the part of the speaker; indirectly, because it facilitates the great work of simplification in language by making the unwieldy forms used of old to indicate concord, etc., more and more superfluous. The substitution of word-order for flection means a victory of spiritual over material agencies.—Otto Jespersen, Progress in Language, p. 110.

What is to be taken into account is of course the interests of the speaking community, and if we consistently consider language as a set of human actions with a definite end in view, namely, the communication of thought and

ரஷ்ய மொழியில் உட்பிணைப்பே மிகுதியாக இருந்தது. இன்றும் எழுத்துமொழியில் உட்பிணைப்பே பெருகிக் கிடக்கின்றது. ஆனால், பேச்சுமொழியில் தனிநிலை தலையெடுத்துவருகின்றது.[1] சொற்களைச் சிதைத்துப் பிணைக்கும் பழைய முறை மெல்ல மறைந்துவர, சொற்களைத் தனித்தனியே அமைத்து வாக்கிய அமைப்பால் தெளிவுபடுத்தும் முறை செல்வாக்குப் பெற்றுவருகின்றது. பழைய கிரேக்க மொழியையும் இன்று வழங்கும் மொழியையும் ஒப்பிட்டாலும் இவ்வுண்மை புலனாகின்றது. இவற்றையெல்லாம் ஆராய்ந்த மீடர் என்னும் பேராசிரியர், பேசும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் பேசப்படும் மொழியின் வளர்ச்சிக்கும் தொடர்பு கண்டு, மொழிகள் தனிநிலையாகும் காரணத்தை விளக்குகின்றார்.[2] மக்களின் அறிவுவளர்ச்சியில் தேக்கம் காணப்படுமாயின்—அறிவு மேன்மேலும் வளராது நின்று தடைப்படுமாயின், அவர்கள் பேசும் சொற்கள் ஒன்றோடொன்று பிணைந்து சிதைந்து பிரிக்கப்பட முடியாதவாறு மாறும் என்கின்றார்.

---

feelings, then it becomes easy to find tests by which to measure linguistic values, for from that point of view it is evident that that language ranks highest which goes farthest in the art of accomplishing much with little means, or, in other words, which is able to express the greatest amount of meaning with the simplest mechanism.—Otto Jespersen, Language, p. 324.

1. Though Russian has retained in its system of writing and printing a considerable part of its older elaborate inflectional system, in the spoken language it is retained (incompletely) only in those forms in which the accent falls upon the endings. In other cases the inflectional system has either been extensively modified or has disappeared.—Pillsbury and Meader, The Psychology of Language, p. 289.

2. Ibid. pp. 289, 290.

இது உட்பிணைப்புநிலைக்குக் காரணம். மக்களின் அறிவு வளர்ச்சியில் தடையின்றி முற்போக்குக் காணப்படுமாயின், அவர் பேசும் சொற்கள் பிரிக்கப்பட்டுத் தனித்தனியே பொருளும் அமைப்பும் பெற்றுத் தெளிவுபெறும் என்பது அவர் கருத்து. இது தனிநிலைக்குக் காரணம். அடுத்தது காட்டும் பளிங்குபோல் மக்களின் மனப்பண்பை மொழி காட்டும் என்கின்றார். மனத்தில் கருத்துக்கள் புதியன வாய்த் தோன்றத் தோன்ற, கருத்துக்களில் மாறுதல்கள் விரைந்து நிகழ நிகழ, மொழியின் அமைப்பும் அவற்றிற்கு ஏற்ப மாறும் என்றும், கருத்துக்கள் தேக்கமுறின் மொழிவளர்ச்சியும் தடைப்படும் என்றும் எடுத்துரைக் கின்றார்.

தொகுநிலை

உட்பிணைப்பு மொழிகளிலும் ஒட்டுநிலை மொழிகளிலும் வாக்கிய அமைப்பு நெகிழ்ச்சி உடையது ; சொற்களை வேறு வேறு இடங்களில் மாற்றி அமைத்தாலும் வாக்கியம் பொருள் தரக் கூடியது.

அவன்	போனான்	வந்து
வந்து	அவன்	போனான்
போனான்	வந்து	அவன்
போனான்	அவன்	வந்து

என்று சொற்களை எங்கெங்கே மாற்றி அமைத்தாலும்,

அவன் வந்து போனான்

என்ற வாக்கியப் பொருள் தருகின்றது.

இத்தகைய வாக்கியங்களில் சொற்கள் நிற்கும் இடங்கள் வரையறுக்கப்படவில்லை எனலாம். காரணம், ஒவ்வொரு சொல்லும் அதற்கு ஏற்ற விகுதி முதலியவை

பெற்றுப் பெயர் அல்லது வினைமுற்று அல்லது வினையெச்சம், பயனிலை, எழுவாய் என்று எளிதில் அறியக்கூடிய வாறு அமைந்திருக்கிறது. ஒவ்வொரு புட்டியிலும் ஒவ்வொரு பொருளை இட்டு, புட்டியின்மேலே பொருளின் பெயரை எழுதிய சீட்டை ஒட்டி வைத்தால், அந்தப் புட்டிகள் எங்கே எந் நிலையில் கிடந்தாலும் அந்தச் சீட்டுகளின் உதவியால் இன்ன இன்ன பொருள்கள் என்று அறிதல் எளிது அன்றே? அதுபோல் இந்த வாக்கியத்தில் எந்தச் சொல் எங்கே நின்றாலும், இன்னது எழுவாய், இன்னது பயனிலை, இன்னது பயனிலைக்கு அடை என்று எளிதில் உணர்ந்து வாக்கியத்தின் பொருளை அறிய முடிகின்றது. இத்தகைய நிலையை வாக்கிய அமைப்பின் தொகுநிலை (Synthetic Stage) என்பர்.

பிரிநிலை

தனிநிலை மொழியில் சொற்கள் இவ்வாறு உணர முடியாமல் இருத்தலால், வாக்கிய அமைப்பு மாற்ற முடியாதவாறு இறுகியுள்ளது எனலாம். ஆயினும், இவற்றில் ஒவ்வொரு சொல்லும் தனித்துநின்று ஒவ்வொரு கடமையை ஆற்றிச் செல்ல முடிகிறது. இது பிரிநிலை (Analytic Stage) எனப்படும்.

அவன்	இல்லை	மகன்	போக
அவன்	போக	இல்லை	மகன்
மகன்	அவன்	இல்லை	போக
போக	மகன்	அவன்	இல்லை

என்றும் பிறவாறும் சொற்களை மாற்றி அமைத்தால் பொருள் விளங்காமல்,

அவன்மகன் போக வில்லை

என்ற ஒரு முறையில் அமைத்தால்தான் வாக்கியம் பொருள் தருகிறது. இது தனிநிலை மொழியின் இயல்பு ஆகும். ஒவ்வொரு சொல்லும் பழக்கப்பட்ட—பழக்கத்தால் வரையறுக்கப்பட்ட—அந்தந்த இடத்தில் இருந்தால் தான் பொருள் உணர முடிகிறது. பெயர் எழுதிய சீட்டு ஒட்டாத புட்டிகளாக இருந்தால், ஒவ்வொன்றையும் குறிப்பிட்ட அந்தந்த இடத்திலேயே வைத்திருந்தால்தான், பொருளை எடுத்தாளுவோர் மயங்காமல் தடுமாறுமல் ஆள முடியும். அதுபோல் சொற்களின் இடம் வரையறுக்கப் பட்டு அமைந்த நிலையே தனிநிலை வாக்கிய அமைப்பாகும். சீனமொழி இந்த நிலைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.[1] ஆங்கில மொழியும் இந்தப் போக்கில் வளர்ந்துவருகிறது என்பர்.

சீன மொழியில்,

நி தா ஞோ

என்பது, 'நீ என்னை அடிக்கிறாய்' என்னும் பொருள் உடைய வாக்கியம். சொற்களை மாற்றி,

ஞோ தா நி

என்று அமைத்தால், 'நான் உன்னை அடிக்கிறேன்' என்று பொருள்படும். ஆங்கிலத்தில்,

John beats Jack
Jack beats John

என்ற வாக்கியங்களில், சொற்களின் இடம் மாறினால் பொருள் மாறுதல் காணலாம்.

1. The most important part of Chinese grammar is that dealing with word-order: ta kuok=great state or great states; but, kuok ta=the state is great.—Otto Jespersen, Progress in Language, p. 80.

பழக்கமே காரணம்

இவ்வாறு சொற்களுக்கு இடம் வரையறுப்பதற்குக் காரணம் ஒன்று இருப்பதாகக் கூறல் இயலாது. பழக்கத்தால் ஏற்பட்ட முறை என்றே சொல்லலாம். உடையவனை மூன்றும் உடைமையைப் பின்னும் வைத்து,

என் கை
உன் கண்

என்று தொடர் அமைப்பது தமிழ் வழக்காக உள்ளது.

My hand
Your eye

என்று ஆங்கிலத்திலும் இதே முறை உள்ளது. இதற்குக் காரணம் இந்த மொழிகளில் தொன்றுதொட்டு வந்த பழக்கமே ஆகும்.

சித்திய மொழிகளில்,

கை என்
கண் உன்

என்று பின்னும் மூன்றுமாக மாற்றி அமைத்தால்தான், ஆறும் வேற்றுமையின் கிழமைப் பொருள் பயக்கிறது. இதற்குக் காரணம் அந்த மொழிகளின் பழக்கமே எனலாம்.

உருபுகளைச் சேர்த்து வேற்றுமைப் பொருளை உணர்த்துவதிலும் இவ்வாறே பழக்கம் ஒவ்வொருவகை மொழியிலும் ஒவ்வொரு முறையை வரையறுத்துள்ளது.

வீடு + கு—வீட்டுக்கு
பெட்டி + இல்—பெட்டியில்

என்று உருபுகளைப் பின்னே சேர்க்கும் முறை தமிழ் இந்தி முதலிய மொழிகளில் உள்ளது.

to the house
in the box

என்று உருபுகளை முன்னே அமைக்கும் முறை ஆங்கிலம் முதலிய மொழிகளில் உள்ளது. பழகிவிட்ட ஒன்றே, விதியாக அமைவது மொழிகளில் காணும் உண்மையாகும்.

நான் பூனையைக் கண்டேன்

என்பதுபோல், செயப்படு பொருளை வினைச்சொல்லுக்கு முன்னே அமைப்பது தமிழ் முறை.

I saw the cat

என்று அதைப் பின்னே அமைப்பது ஆங்கிலம் முதலிய மொழிகளில் உள்ள வாக்கிய முறையாகும். இன்ன முறையே இயற்கையானது, மற்றது செயற்கையானது என்று கூறுவதில் பயன் இல்லை. தம் மொழியில் பற்றுக் கொண்டு, அதில் உள்ள முறையை உயர்த்திக் காரணம் காட்டுவது, குழந்தைத் தன்மை என்று விடலாம். இவற்றில் அறிவிற்கு இயைந்த காரணம் ஒன்று இருக்கும் என்று ஆராய்வதிலும் பயன் இல்லை. மக்கள் வாழும் வாழ்க்கையில் எல்லாவற்றிற்கும் காரணப் பொருத்தம் இல்லை. பொருத்தம் அற்றவை பல உள்ளன. மக்களின் படைப்பாகிய மொழியிலும் காரணப்பொருத்தம் அற்றவை சில உள்ளன. செயப்படுபொருள் முதலியவற்றை எந்த முறைப்படி வைத்து வழங்கினும் அந்தந்த மொழியின் காரணம் அற்ற பழக்கம் என்றே கருதவேண்டும்.[1]

1. In treating linguistic questions, we must never forget that men are only in part reasonable beings, and that the universal human element is also therefore largely irrational and illogical.—Otto Jespersen, Mankind Nation and Individual, p. 213.

மாறுதல்

தொகுநிலை காலப் போக்கில் பிரிநிலையாக மாறுவதும் உண்டு. ஆங்கில வாக்கியங்கள் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன் தொகுநிலையில் இருந்தன. இன்று பிரிநிலைக்கு மாறியுள்ளன. தமிழ் ஒரு காலத்தில் பிரிநிலையில் இருந்து பிறகு தொகுநிலைக்கு மாறியது. அவ்வாறு மாறிய காலத்திலேயே எழுத்துமுறை கண்டு இலக்கியங்கள் வகுத்து விட்டபடியால், மாறுதல் மேலும் வளராமல் நின்றது.

உழு த் ஆன் — உழுதான்

பகுதி தொழிலைக் காட்ட, இடைநிலை காலத்தைக் காட்ட, விகுதி எழுவாயை உணர்த்த, மூன்றும் சேர்ந்து உழுதான் என்னும் ஒட்டுநிலைச் சொல் அமைந்துள்ளது. இதுவே பிரிநிலையாக ஒரு காலத்தில்,

உழு த் ஆன்

என்று மூன்று தனிச் சொற்கள் சேர்ந்த வாக்கியமாக இருந்திருக்கும். பிரிநிலை வாக்கியங்களின் முறைப்படி, அந்த மூன்று சொற்களும் சிறு சிறு சொற்களாகவும் இடவரையறை மாறுதனவாகவும் இருந்திருக்கும்.

ஆன் + த் + உழு
த் + உழு + ஆன்

என்றெல்லாம் மாற்றியமைக்க முடியாமல் இருந்த காரணத்தால்தான், மூன்றும் சேர்ந்து ஒரு சொல்லாய்ப் பிணைந்து வழங்க முடிந்தது. அவ்வாறு வழங்கியபோது தனிச் சொற்களாக இருந்த காலச் சொல்லும் எழுவாய்ச் சொல்லும் தம் உரிமை இழந்து ஒரு சொல்லின் உறுப்புக்களாக அமைந்தன.

நெடுங் காலத்துக்கு முன்பே ஏற்பட்ட இலக்கிய வளர்ச்சி தமிழுக்கு இல்லாதிருந்தால் 'உழுதான்' என்ற

சொல் பலமுறை வழங்கி வழங்கித் தேய்ந்து தேய்ந்து உழுன், உழான், உழன், உதன், உதான், உழுத் போன்ற சிறு வடிவங்களில் ஒன்றைப் பெற்று மாறியிருக்கும்.[1] அப்போது ஒட்டுநிலை கடந்து உட்பிணைப்புநிலை உற்றிருக்கும்; ஐரோப்பிய மொழிகளும் வடமொழியும் போல் தமிழும் ஆகியிருக்கும்.

மாறுதலுக்குத் தடை

ஐரோப்பிய மொழிகள் பலவற்றை உட்பிணைப்பு நிலையிலேயே எழுத்துவடிவில் பொறித்து இலக்கிய வாழ்வு தந்துவிட்டமையால், உட்பிணைப்புநிலையிலிருந்து தனி நிலைக்கு மாறுதலைத் தடுத்தாகிவிட்டது. ஆங்கில மொழி மட்டும் அவ்வாறு வளர்ந்து மாறியதற்குக் காரணம், நெடுங்காலம் கழித்து அதற்கு இலக்கிய வளம் ஏற்பட்டமையே ஆகும். இலக்கியம் ஒரு மொழிக்குச் செல்வம் எனக் கூறத்தக்கதே ஆயினும், அந்த மொழியின் சொற்களும் சொற்றொடர்களும் வளர்ந்து மாறுமல் தடுக்கும் தடையாக உள்ளது.[2] இலக்கியம் கருத்துவளர்ச்சிக்குத்

1. Now the growing degree of crystallization or dependence in arrangement which arises in a purely positional language can slowly but steadily convert the positional language into an inflectional language. The same relative frequency of usage which makes a word more crystallized in arrangement is the same relative frequency which shortens its actual form and which so far saps the preciseness of its meaning that the word gradually becomes little more than a tag to another word. —G. K. Zipf, The Psycho-Biology of Language, p. 249.

2. Literature is the most dignified, the most legitimate, and the most powerful of the forces which effect the conservation of language, and the one which acts most purely according to its true merit, free from the adventitious aids and drawbacks of place and time.—Whitney, Language and the Study of Language, p. 173.

துணையாக நிற்பினும், மொழியின் வளர்ச்சிக்குத் தடையாகவே உள்ளது. இலக்கிய வளம் பெற்ற மொழியை விட இலக்கிய வளம் பெறுத மொழி விரைந்து வளர்ந்து மாறுதல் இயற்கை.

சீனமொழி பல்லாயிர ஆண்டுகளாகவே தனிநிலை மொழியாக விளங்கக் காரணம், அது மிகப் பழங்காலத்திலேயே பெற்ற எழுத்துமுறையாகும். அதன் எழுத்து முறையோ விந்தையானது. சொல்லுக்கு ஓர் எழுத்தாக அமைந்த அந்த எழுத்துமுறை, ஒட்டுநிலைக்கும் இடம் தராமல் அந்த மொழியின் வளர்ச்சியை நிறுத்திவிட்டது எனலாம். ஆகவே உட்பிணைப்புநிலைக்கு அது மாறுவதற்கு வழியே இல்லாமற் போயிற்று.

உரிமையும் கட்டுப்பாடும்

பிரிநிலைவாக்கியத்தில் சொற்கள் நிற்கும் நிலையில் கட்டுப்பாடான வரையறை உள்ளது; சொற்கள் சிறுசிறு வடிவுடையனவாய் உரிமையுடன் வாழ்கின்றன. தொகுநிலை வாக்கியத்தில் சொற்கள் விகுதி முதலியவற்றை விட முடியாமல் சிக்குண்டுகிடக்கின்றன; ஆயின், வாக்கியத்தில் எந்த இடத்திலேனும் நிற்கும் உரிமை பெற்றுள்ளன. ஒரு வகையில் உரிமை இழந்து மற்றொரு வகையில் கட்டுப்பட்டுக் கிடக்க நேர்கிறது.

தேய்ந்து குறுகல்

'இல்லை' என்ற தமிழ்ச் சொல் (அல்+அ—அல்ல போல) இல்+அ—இல்ல என்பதன் திரிபாகும். எதிர்மறைப் பொருள் உணர்த்தும் பகுதியும் அஃறிணைப் பன்மை உணர்த்தும் அகர விகுதியும் சேர்ந்த ஒட்டுநிலைச் சொல் அது. அதற்குமுன் இல் என்னும் எதிர்மறைச் சொல்லும் அ என்னும் அஃறிணைப் பன்மைச் சொல்லும்

அமைந்த தனிநிலை வாக்கியமாக இருந்திருக்கும். அந்த நிலையிலிருந்து இல்ல என்று ஒட்டுநிலைக்கு வந்தபின், பல முறை பயின்று பயின்று, அதன் விகுதி பொருட்சிறப் பிழந்தபின், இல்லை என்ற திரிபாக அமைந்தது. இன்று அந்த 'இல்லை' என்ற சொல் ஒட்டுநிலை என்று அறிய முடியாமல் உட்பிணைப்புப் போல் உள்ளது. அஃறிணைப் பன்மைக்குரியது என்னும் வரையறையைக் காட்டும் விகுதி, சாரியைபோல் நின்றுவிடலாயிற்று. தொடக்கத் தில் ஆர்வத்துடன் செய்யப்படும் ஒரு செயல், பலராலும் பயின்று செய்யச் செய்ய உணர்ச்சி குறைந்த சிறு சடங் காக மாறுவதுபோல், பலமுறை வழங்கும் சொல்லும் உருவம் திரிந்து பொருளுணர்ச்சியும் மாறிவிடுகின்றது. ஆகவே 'இல்லை' என்பது இன்மைப் பொருள் உணர்த்தும் ஒரு தனிநிலைச் சொல்லாக நிற்கிறது. இலக்கியம் அதன் வளர்ச்சியைத் தடுத்திருக்காமல், பேச்சுமொழியின் அள வில் விட்டிருந்தால், அதுவும் திரிந்து திரிந்து 'இல்; என்றோ, 'லை' என்றோ, 'லே' என்றோ ஓரசைச் சொல் லாகவும் மாறியிருத்தல் கூடும்.[1] அஃறிணைப் பன்மைப் பொருளுணர்த்தும் ஒரு சொல், விகுதியாய்க் குறுகி, பிறகு தேய்ந்து சாரியைபோல் நின்று, பின்னர் அதனிலும் குறுகிப் போதலை இங்குக் காணலாம். 'போய்விட்டது' என்ற சொல் 'போச்சு' எனத் திரியும்போது, அஃறிணை ஒன்றன்பால் உணர்த்தும் உறுப்பாக இருந்த சொல் 'து' விகுதியாக நின்று, பின்னர் அந்த நிலையும் இழந்து,

---

1. With ever-increasing relative frequency, the word becomes the morpheme, which with passing time becomes a phoneme, and finally the component part of a phoneme until it disappears —G. K. Zipf, The Psycho-Biology of Language, p. 250.

சொல்லின் இறுதியில் நிற்கும் துணையொலியாய்க் குறுகியது காணலாம்.

விகுதிகள், இடைநிலைகள் முதலியவை பெரும்பாலும் ஓரசைச் சொற்களாக உள்ளன. காரணம் என்ன? அவை கணக்கற்ற முறை பயின்று பயின்று வழங்கியதாலும், தனிச் சொற்களாக நிற்கும் உரிமை இழந்து ஒட்டிவாழும் உறுப்புக்களாக வழங்கியதாலும் அவ்வாறு தேய்ந்து குறுகி நின்றன.

உழுதான்
செய்தான்
படித்தான்

முதலான சொற்களில் உழு, செய், படி முதலிய வினைப் பகுதிகள் ஒவ்வொருமுறை வருகின்றன. த் என்னும் காலச் சொல்லும், ஆன் என்னும் ஆண்பாற் சொல்லும மாறிமாறித் திரும்பத் திரும்ப வருகின்றன. உழு, செய், படி முதலான சொற்கள் உரிமையுடன் தனித்து நிற்க இயலும். காலச் சொல்லும் ஆண்பாற் சொல்லும் அவ்வாறு நிற்க இயலாதவை. ஆகவே உரிமையற்ற அந்தச் சொற்கள் பலமுறை பயின்று தேய்ந்து, சொற்கள் எனப்படும் வாழ்வு இழந்து, கால இடைநிலை எனவும், ஆண்பால் விகுதி எனவும் வாழ்வு பெற்றன.[1]

---

1. An inflectional tag represents merely an enormously frequently used class or category, whatever or wherever it may be, and nothing more. These inflectional affixes, or categorizing tags, are made of precisely the same stuff as the roots of words... There is no special category of phonetic elements reserved exclusively for affixes.—G. K. Zipf, The Psycho-Biology of Language, p. 250.

அழகா? சுமையா?

'யாரையோ நீ மடக்கொடியோய்'

என்பது சிற்ப வேலைப்பாடு அமைந்த நாற்காலிபோல் அழகாக உள்ளது.

யார் நீ மடக்கொடி?

என்பது சிற்ப வேலைப்பாடு ஒன்றும் இன்றி, வெறுஞ் சட்டங்களை இழைத்துச் செய்த நாற்காலிபோல் உள்ளது. ஆனால் முன்னதைவிட உட்காருவதற்குத் தகுதியாக இருப்பின், குறை என்ன? நாற்காலி இருந்து மகிழ்வதற்காக வாங்கியதே அன்றிப் பாத்து மகிழ்வதற்காக அன்று.

முதல் வாக்கியத்தில் யார் என்ற வினாவும் மடக்கொடி என்ற விளியும் முன்னிலையில் அமைந்திருப்பதால், முன்னிலை ஒருமை விகுதியாகிய ஐகாரம் சேர்க்கப்பட்டிருக்கிறது. நீ என்ற முன்னிலையிடப்பெயர் இருப்பதால், அந்த விகுதி சேர்த்திருக்க வேண்டுவதில்லை. 'யார் நீ மடக்கொடி' என்பதில் பொருளுணர்ச்சி கெடாமல் போதிய அளவு அமைந்திருக்கிறது. ஆயினும் முதல் வாக்கியத்தில் ஒருவகை அழகு உள்ளது எனக் கூறலாம். அத்தகைய அழகு மொழிச்குத் தேவையா?

வீடு இருந்து வாழ்வதற்காக அமைப்பது. ஆயின், கட்டிடக் கலைஞர் அதை நோக்கும்போது, அழகும் உள்ளதா என்று தவறாமல் பார்ப்பார். வீட்டில் குடியிருந்து வாழ்வோர் அந்த வீட்டை நோக்கும்போது, வாழ்வதற்கு ஏற்ற அமைப்புக்கள் உண்டா என்றுதான் நோக்குவர். இருவகையாரின் பார்வையிலும் வேறுபாடு உள்ளது.

இடையூறு

மொழி எத்தகையதாக இருத்தல்வேண்டும்? விகுதி கள் முதலியவை சொல்தோறும் மலிந்துகிடந்தால், வாக் கியம் அழகாக இருக்கும் என்றல், அத்தகைய அழகைத் தேடுவதால் மொழியின் பயன் குன்றுமானால், அந்த அழகைத் தேடாமல் விடுவது நன்று அன்றே? மொழி என்பது கருத்தை உணர்த்தும் கருவி. இத்தகைய விகுதி முதலியவை சொல்தோறும் அமைவது இலக்கணச் சுமை யாவதால், கருத்தை வெளியிடுவதில் இடர்ப்பாடு நேரும் என்றல், அத்தகைய அழகு, மொழியின் நோக்கத்திற்கு மாறுனதாக நிற்கின்றது.

சொல்தோறும் விகுதி முதலியவை அமைந்த தொகு நிலை வாக்கியம் நல்லது எனப் போற்றுவோர் சிலர்; பழங்காலத்து மொழியியல் அறிஞர் அனைவரும் (மாக்ஸ்முல்லர், விட்னே முதலானோர்) அந்த முறையைப் போற்றிப் புகழ்ந்தனர். ஆயின் இருபதாம் நூற்றாண்டின் மொழியியல் அறிஞர் சிலர் அதை மொழிவளர்ச்சிக்கு இடையூறானது எனப் பழித்து, சிறு சிறு சொற்களால் அமைந்த பிரிநிலைவாக்கியத்தையே போற்றுகின்றனர்.[1] 'யார் நீ மடக்கொடி' முதலான வாக்கியங்கள் பொருளை முற்ற உணர்த்துதலால், பழங்கால இலக்கணச் சுமை தேவையற்றுப் போயிற்று.[2]

1. E. Tegner: "so far from being more perfect than both the other groups (agglutinating and isolating) the fexional languages are radically inferior to them because they impede liberty of thought."—Otto Jespersen, Progress in Language, p. 16.

2. Grammatical meaning was first expressed by certain more material instruments, independent of word-position, then by the same instruments with the words arranged in a fixed order, and finally by order, independent of those original instruments.—Ibid. p. 111.

சீர்கேடு ?

'அவர் கண்டிலர்'[1] என்னும் பழங்காலத் தமிழ் வாக்கியத்தைவிட, 'அவர் காணவில்லை' என்னும் இக்காலத் தமிழ் வாக்கியம் எவ்வகையிலும் பொருளுணர்ச்சி கெடாமல் வழங்குகின்றது. தமிழில் ஒரு சிறிதே காணப்படும் இந்த மாறுதல், ஆங்கிலத்தில் பெரிய அளவில் காணப்படுகிறது; பிரெஞ்சு மொழியிலும் டச்சு மொழியிலும் அவ்வாறே மிகுதியாகக் காணப்படுகிறது. இம் மாறுதலைக் கண்ட பத்தொன்பதாம் நூற்றாண்டு மொழியியல் அறிஞர் இதனைச் சீர்கேடு என்றும், பிற்போக்கு என்றும், சிதைவு என்றும், அழிவு என்றும் பலவாறு கூறிப் பழித்தனர்.[2] லத்தீன் கிரீக்கு மொழிகளையே உயர்ந்தவை எனப் புகழ்ந்தனர்.

முயற்சியும் பயனும்

இந்தோ - ஐரோப்பிய மொழிகள் நெடுங்காலமாகத் தொகுநிலைவாக்கியம் மிகுந்தவை ஆயின், ஆங்கிலம், டச்சு ஆகிய மொழிகள் பிற்காலத்தில் வளர்ந்த வளர்ச்சி அவற்றில் தொகுநிலையைக் குறைத்துப் பிரிநிலையை மிகுத்துள்ளது. அதனால் ஆங்கிலம், பிரெஞ்சு, டச்சு மொழிகளுக்கு யாதொரு குறையும் நேரவில்லை. ஆங்கில மொழியில் ஷேக்ஸ்பியர் போன்ற பெரும்புலவர்கள் தோன்றிச்

1. தமிழில் விளக்குவதற்காகக் கொடுக்கப்பட்ட எடுத்துக் காட்டு இது. உண்மையாக உட்பிணைப்பு மிகுந்துள்ள சம்ஸ்கிருதம், கிரீக்கு, லத்தீன் முதலிய மொழிகளையும், தனிநிலை மிகுந்துள்ள சீனம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் உள்ள சொற்களையும் ஆராயின், இது மேலும் தெளிவாகும்.

2. Ancient languages have a more copious grammar than modern ones. The comparison of the two extremes, Greek and English, has often prompted the remark that English has 'no grammar'—Sweet, The Practical Study of Languages, p. 273.

சிறந்த இலக்கியங்களை எழுத முடியவில்லையா? ஆதலின் சிறந்த அறிஞர் எந்த மொழியிலும் அது எந்த நிலையில் இருந்தபோதிலும் தம் கருத்துக்களை நன்முக உணர்த்த முடியும். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்னும் பழ மொழி மொழித்துறையிலும் உண்மையாக உள்ளது. மொழியியலில் ஆராய்ந்து காணவேண்டியது இது அன்று. குறைந்த முயற்சியில் நிறைந்த பயனைத் தரவல்லதாக உள்ள மொழிநிலை எது என்று காணவேண்டும்.[1] இலக்கிய வளம் பெற்றுள்ளபோதிலும், விகுதி முதலியவை நிரம்பப் பெற்றுள்ள தொகுநிலை, மொழிக்கு அழகன்று. அது தீங்கான சுமையே என்பது யெஸ்பர்ஸன் முதலான அறிஞர் கருத்து.[2]

எளிமையும் சிக்கனமும்

'யாரை' என்னுமல் 'யார்' என்று குறுகிய வடிவில் சொல்லை வழங்குதலால், முயற்சிச் சுருக்கத்தோடு காலச் சிக்கனமும் ஆயிற்று என்கிறார் யெஸ்பர்ஸன்.[3] தவிர, முன்னிலை ஒருமைக்கு ஐகார விகுதி சேர்த்தாற்போல், மற்ற இடங்களுக்கும் திணைபால்களுக்கும் உரிய விகுதிகளைச் சேர்த்தால் ஒன்பது வகையான சொற்களாகின்றன. அவை அத்தனை வகைகளையும் நினைவில் வைத்துக்கொண்டு திணைபால் எண் இடம் அறிந்து விகுதி சேர்த்து வழங்குவதற்கு எவ்வளவோ முயற்சி தேவை என்றும், அதற்கு

1. That language ranks highest which goes farthest in the art of accomplishing much with little means, or, in other words, which is able to express the greatest amount of meaning with the simplest mechanism.—Otto Jespersen, Progress in Language, p. 13.

2. The so-called full and rich forms of the ancient languages are not a beauty but a deformity.—Ibid. p. 14.

3. Otto Jespersen, Progress in Language, p. 18.

எவ்வளவோ நினைவாற்றல் தேவை என்றும், அத்தனைக் கும் ஈடாக 'யார்' என்ற ஒரு சொல்லையே வழங்குவதால் வேண்டாத சுமைகள் குறைந்து நன்மை விளைகிறது என்றும் அவர் கருதுகிறார்.

யான்	கண்டிலேன்
யாம்	கண்டிலேம்
நீ	கண்டிலை
நீர்	கண்டிலீர்
அவன்	கண்டிலன்
அவள்	கண்டிலள்
அவர்	கண்டிலர்
அது	கண்டிலது
அவை	கண்டில

எனப் பல எதிர்மறைவினைவடிவங்களை நினைவில் வைத்து வழங்குதலை விட,

யான்	காணவில்லை
யாம்	காணவில்லை
நீ	காணவில்லை
நீர்	காணவில்லை
அவன்	காணவில்லை
அவள்	காணவில்லை
அவர்	காணவில்லை
அது	காணவில்லை
அவை	காணவில்லை

என ஒரேவகையான எதிர்மறைவினைவடிவத்தை நினைவில் வைத்து வழங்குதல் பெரு நன்மையே. சொல் வடிவங் களில் மூளையின் உழைப்பைச் செலவிடுதலைவிட, நுண் கருத்துக்களில் செலவிடுதல் பயனுள்ளதுமாகும். இவ்

வாறே நீ யாரை, நீர் யாரீர், நீ அல்லை, யான் அல்லேன், அவன் அல்லன், அவள் அல்லள் எனச் சொல்தோறும் வெவ்வேறு விகுதிகளைச் சேர்த்து வழங்குவதில் மூளையின் உழைப்பைச் செலவிடுதலில்லை, நீ யார், நீர் யார், நீ அல்ல, யான் அல்ல, அவன் அல்ல, அவள் அல்ல, எனத் திணை பாலிடங்களைச் சில பெயர்ச்சொற்களால் உணர்த்தி மற்றச் சொற்களைத் திணைபாலிடங்களுக்குப் பொதுவாக வழங்குதல் எளிமையும் சிக்கனமும் ஆகும் என்பது அறிஞர் கருத்தாகும்.

உருபுகள் எண் உணர்த்தல்

சில மொழிகளில் ஒவ்வொரு வேற்றுமையிலும் ஒருமைப் பெயர்க்குச் சேர்க்கும் உருபு ஒன்றாகவும், பன்மைப் பெயர்க்குச் சேர்க்கும் உருபு மற்றொன்றாகவும் இருக்கும். தமிழில் ஆறும் வேற்றுமை தவிர மற்ற வேற்றுமைகளில் ஒருமைக்கும் பன்மைக்கும் ஒரே வகையான உருபுகள் உள்ளன.

கல் + கு—கல்லுக்கு
கற்கள் + கு—கற்களுக்கு

இவ்வாறு உருபுகளில் ஒருமை பன்மை என எண் வேறுபாட்டைப் புகுத்தாமல் வழங்குவதும் முயற்சிச் சிக்கனமாகும். ஆறும் வேற்றுமையில் மட்டும் ஒருமைக்கு அது உருபும் பன்மைக்கு அகர உருபும் வெவ்வேறாக உள்ளன. அதையும் எளிமைப்படுத்த விரும்பிய மக்கள், அந்த இரண்டு உருபுகளையும் பேச்சு வழக்கில் கைவிட்டு, உடைய என்ற புதிய உருபை எண் வேறுபாடு இல்லாமல் வழங்குகின்றனர்.

எனது கை —என்னுடைய கை
என கைகள் —என்னுடைய கைகள்

பெயரடைகளில் திணைபால்

சில மொழிகளில் பெயர்ச் சொற்களுக்கும் வினைச் சொற்களுக்கும் திணைபால் விகுதிகளைச் சேர்ப்பது போலவே, பெயரடைகள் (adjectives) ஆகிய பெயரெச் சங்களுக்கும் விகுதிகள் சேர்த்துத் திணைபால் வேறு பாட்டை உணர்த்தி இலக்கணத்தைச் சுமையாக்குவர்.[1]

அவன்	நல்ல	பிள்ளை
அவள்	நல்ல	பெண்
அவர்கள்	நல்ல	பிள்ளைகள்
வஹ்	அச்சா	லட்கா
வஹ்	அச்சி	லட்கி
வே	அச்சே	லட்கே

என இந்தி வாக்கியங்களில் அச்சா, அச்சி, அச்சே என மூன்று வடிவங்களில் அப் பெயரடை (adjectives) வழங் குதல் காண்க. தமிழில் உள்ளது போல் ஒரே வடிவில் (நல்ல) வழங்குவதால் இழுக்கு ஒன்றும் இல்லை ; வேண் டாத வீண்சுமை குறையும். இந்தி மொழியைவிட வேறு சில மொழிகளில் இத்தகைய சுமை இன்னும் மிகுதியாக உள்ளது. பல ஐரோப்பிய மொழிகளில் பெயரடைகள் (adjectives) ஒவ்வொன்றும் திணைபால் உணர்த்துதல் உண்டு. ஆங்கிலம் முதலான சில மொழிகள் அந்த நிலை யைக் கடந்து தமிழ்போல் வளர்ந்துவிட்டன.

தேவையில்லை

உண்மையாகக் காணின், திணைபால்விகுதிகள் பெயர்ச் சொற்களுக்குத் தேவையே அன்றி வினைச்சொற்க

1. The greatest change towards simplicity and regularity is seen in the adjectives, where one form now represents the eleven different forms used by the contemporaries of Alfred. —Otto Jespersen, Growth and Structure of the English Language, p. 179.

ளுக்குத் தேவை இல்லை; பெயரடை முதலியவற்றிற்கும் தேவை இல்லை. பெயர்ச் சொல், பொருளை உணர்த்துவது; பொருளுக்குத் திணைபால் வேறுபாடு உண்டு. வினைச் சொல், தொழிலை உணர்த்துவது; தொழிலில் உயர்திணை அஃறிணை ஆண்பால் பெண்பால் முதலியவை இல்லை; 'நல்ல' முதலிய பெயரடைகள் பண்பை உணர்த்துவன; பண்பிலும் உயர்திணை ஆண்பால் முதலாய வேறுபாடுகள் இல்லை; எனவே பெயரடையில் விகுதிகள் சேர்த்தல் வீண்சுமையாகும்.[1]

இவ்வாறே இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கு ஏற்ப, ஒவ்வொரு பெயரெச்சத்திற்கும் ஒன்பது வடிவங்கள் இருந்திருப்பின், ஒரு மொழியில் உள்ள ஆயிரக்கணக்கான பெயரெச்சங்களுக்குப் பதினாயிரக்கணக்கான வடிவங்கள் கற்கவேண்டிய சுமை இருந்திருக்கும். தமிழில் பெயரெச்சங்கள் (பெயரடைகள்) திணைபால் இடங்களுக்குப் பொதுவாக இருத்தலால் இந்தச் சுமை இங்கு இல்லை. இவ்வாறு மொழியில் உள்ள மூழுச்சொற்களையும் ஆராய்ந்து எவ்வளவு சுமை குறைகிறது என்பதைக் காணும்போதுதான், இத்தகைய மாறுதலால் விளையும் பெருநன்மை புலனாகிறது. சொற்களை இவ்வாறு சிக்கலுடையனவாக்கி நினை

1. Many grammarians of the ordinary type are also disposed to make small subtle distinctions, which they expect to be observed, even though they are of no practical value for the understanding of the language or for clearness of thought, and are therefore merely a burden to those who use the language.—Otto Jespersen, Mankind Nation and Individual, p. 97.

The grammatical forms of the modern languages are all shorter, fewer, simpler, more abstract and more regular; those of the older languages in general larger, more complicated, more concrete, and more irregular.—Ibid. p. 122.

வில் வைத்துக் காக்கும் வீண் முயற்சியைக் குறைத்தால், கருத்துக்களைத் தெளிவாகவும் எளிமையாகவும் ஒழுங்காகவும் உணர்த்தும் மொழித்திறன் பெருகும் என்பர்.

வினைமுற்று—திணைபால் இடம் காட்டும் பழையவழக்கு			திணைபால் இடம் காட்டாத புதிய வழக்கு		
அவன்	இலன்,	உளன்	அவன்	இல்லை,	உண்டு
அவள்	இலள்,	உள்ளாள்	அவள்	இல்லை,	உண்டு
அவர்	இலர்,	உளர்	அவர்	இல்லை,	உண்டு
அஃது	இலது(இன்று)உண்டு		அஃது	இல்லை,	உண்டு
அவை	இல்ல,	உள	அவை	இல்லை,	உண்டு
நீ	இல்லாய்,	உள்ளனை	நீ	இல்லை,	உண்டு
நீர்	இலீர்,	உள்ளீர்	நீர்	இல்லை,	உண்டு
யான்	இலேன்,	உளேன்	யான்	இல்லை,	உண்டு
யாம்	இலேம்,	உளேம்	யாம்	இல்லை,	உண்டு

வேறு இல்லை என்னும் சொற்கள், தொல்காப்பியனுரின் காலத்திலே இவ்வாறு திணைபாலிடங்கட்குப் பொதுவாக வழங்கும் நிலை உற்றன.[1] மிகப் பழங்காலத்தில் ஒரு சில சொற்களில் நேர்ந்த இந்த மாறுதல், பிற்காலத்தில் இன்னும் சில சொற்களில் நேர்ந்துள்ளது. எடுத்துக்காட்டாக, பின்வரும் இருவகை வழக்குகளைக் காணலாம்.

---

1. A light and flexible language in which grammar is reduced to a minimum allows the thought to appear in all its clarity and permits it freedom of movement. On the other hand, thought is hampered by the constraint of a rigid and heavy language.—J. Vendryes, Language, p. 239.

1. முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறென் கிளவி.....
பிரிபுவேறு படூஉம் செய்திய ஆகி
இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய.
தொல். சொல். 224.

பழங்கால வழக்கு :

அவன்	பகைவன்	அல்லன்
அவள்	பகையினள்	அல்லள்
அவர்	பகைவர்	அல்லர்
அது	பகையினது	அன்று
அவை	பகையின	அல்ல
நீ	பகையினை	அல்லை
நீர்	பகையினீர்	அல்லீர்
யான்	பகையினேன்	அல்லேன்
யாம்	பகையினேம்	அல்லேம்

இக் காலப் பேச்சு வழக்கு :

அவன்	பகை	அல்ல
அவள்	பகை	அல்ல
அவர்	பகை	அல்ல
அது	பகை	அல்ல
அவை	பகை	அல்ல
நீ	பகை	அல்ல
நீங்கள்	பகை	அல்ல
நான்	பகை	அல்ல
நாங்கள்	பகை	அல்ல

மலையாள வினைமுற்று

இத்தகைய மாறுதல் ஒரு சில சொற்களில் நேர்ந்துள்ளதே அன்றி, மொழியின் பெரும்பான்மையான வினை முற்றுக்கள் பழைய நிலையிலே மாறாமல் உள்ளன. தமிழ் இலக்கியம் பண்பாடும் பரப்பும் பெற்று விளங்குவதாலும், காலத்திற்கு ஏற்பத் தமிழ் இலக்கியம் வளர்ந்து மக்களின் உள்ளத்தில் வாழ்ந்து வருவதாலும், சொற்களில் மாறுதல் பலவாக நிகழவில்லை. இத்தகைய இலக்கியத் தொடர்பும்

பிணிப்பும் இல்லாதிருந்த சில நூற்றாண்டுகளில் சேர நாட்டுப் பேச்சுத் தமிழ் மலையாளமாக உருப்பெற்றபோது, மொழியில் பெரும் புரட்சி நேர்ந்துவிட்டது. திணை முற்றுக்கள் எல்லாம் திணைபால் உணர்த்தும் விகுதிகளை ஒழித்து நிற்கலாயின. 'அல்ல' என்னும் குறிப்புவினை முற்று எவ்வாறு இன்றைய பேச்சுத் தமிழில் திணைபாலிடங்கட்குப் பொதுவாய் நிற்கின்றதோ, அவ்வாறே மலையாளத்தில் ஒவ்வொரு வினைச்சொல்லும் பால்காட்டும் விகுதியை ஒழித்துப் பொதுவாக நிற்கத் தொடங்கிவிட்டது.

அவன் உறங்கி
அவள் ,,
அவர் ,,
அது ,,
அவை ,,
நீ ,,
நிங்ஙள் (நீங்கள்) உறங்கி
ஞான் (யான்) ,,
ஞங்ஙள் (யாம்) ,,

தமிழ்மொழியில் பழைய இலக்கியப் பண்பாட்டுத் தொடர்பு சிறிதும் நீங்காமல் இருத்தலால், இத்தகைய பெரு மாறுதல் ஏற்பட இடம் இல்லை. ஆயினும், மேலே காட்டியவாறு ஒரு சில சொற்களில் மாறுதல் நேர்ந்துள்ளது என்பதைப் புறக்கணிக்க முடியாது.

மாறுதலைப் போற்றல்

இத்தகைய மாறுதலை வெண்மையே முதலாய மொழியியல்அறிஞர்கள் வரவேற்கின்றனர். அல்லள், அல்லர், அல்லேன் போன்றவற்றில் உள்ள திணை பால் இடம்

காட்டும் விகுதிகள் மிகையானவை என்றும், அத் திணை பாலிடங்களை எழுவாயே காட்டுவதால் பயனிலையில் அவை வேண்டா என்றும், சிக்கனமே மொழியின் நோக்கமாதலின் மிகையாக உள்ளவை இலக்கண நூலாரின் காப்பையும் கடந்து மறைந்தொழிகின்றன என்றும் அவர்கள் கருதுகின்றனர்.[1]

நீ பகையினை அல்லை, யாம் பகையினேம் அல்லேம் முதலிய வாக்கியங்களில் உள்ள இலக்கண முறையில் ஒழுங்கும் இல்லை, எளிமையும் இல்லை என்று குறைகூறுவர்.[2]

அறிவு குறைந்த மக்களின் மொழியில் திணை பால் இடம் வேற்றுமை முதலியவற்றைத் திரும்பத் திரும்ப உணர்த்தும் சிக்கலான நிலை மிகுதி என்றும், அவற்றை உணர்த்தும் இடைச்சொற்களும் அம் மொழியில் மிகுதி என்றும், அறிவு வளர்ச்சியும் அறிவின் உழைப்பும் மிக்க நிலையில் அவற்றை எளிமையாக்கி ஒழுங்குபடுத்திடும் முயற்சி தலையெடுக்கிறது என்றும், புதுச் சொற்கள் ஏற்பட்டுத் திணை பால் இடம் வேற்றுமை முதலியவற்றைத் தெளிவாக உணர்த்துகின்றன என்றும் மொழியியலார் கருதுகின்றனர்.[3] அதனால் பழைய இடைச்சொற்களோடு

1. The logical order of grammar would be to have an expression for each function and a single function for each expression.—J. Vendryes, Language, p. 154.

2. The general impression left by these and many similar instances is, that the grammatical system of our remote ancestors was, to say the least of it, very unsystematic and far from simple.—Otto Jespersen, Progress in Language, p. 76.

3. We often find a very elaborate group of case-forms in the language of a people of lower intellectual level and a less fully developed one in the language of a more highly cultured people. The reason for this seems clear. A people which is making rapid intellectual peogress is continually developing new

இயைந்த தொகுநிலை தேய்ந்து, தனித் தனியே ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு பொருள் வேறுபாட்டை உணர்த்தும் பிரிநிலை ஓங்குகிறது என்பர். இறுதியில் சீன மொழியில் உள்ளவாறு, ஒரு கருத்திற்கு ஒரு சொல்லாகத் தனித்து நிற்கும் பிரிநிலையே வெற்றி பெறுவதாகும் என்பது புளும்பீல்ட் என்பவரின் கருத்தாகும்.[1]

டச்சும் ஆங்கிலமும்

உலக மொழிகளுள், டச்சு மொழி, மலையாளம்போல் பால் இடங்கட்குப் பொதுவான வினைமுற்றுக்களைப் பெற்றுள்ளது. ஆங்கிலம், ஓரிடம் தவிர (படர்க்கை ஒருமை நிகழ்கால வினைமுற்றுத் தவிர) மற்ற இடங்களில் இத்தகைய வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

He comes } ஒருமை
It comes }

They come } பன்மை
These come }

படர்க்கையில் நிகழ்காலத்தில் ஒருமையை உணர்த்துவதற்குமட்டும் ஆங்கில வினைச்சொல் வேறுபடுகிறது. இறந்த காலம் முதலியவற்றிலோ தன்மை முன்னிலைகளிலோ

ideas and new combination of ideas. For their expression new groupings of the muscular movements are necessary, and hence many new words arise, not only new substantives and adjectives, but more particularly particles expressing relationships. The rapidity with which they arise exceeds the normal rate of fusion of concepts and movements and thus the old inflectional forms disappear and the analytic type of symbols comes to dominate. —Pillsbury and Meader, The Psychology of Language, p. 289.

1. The ultimate outcome may be the state of affairs which we see in Chinese, where each word is a morpheme and every practical feature that receives expression receives it in the shape of a word or phrase.—L. Bloomfield, Language, p. 509.

வேறுபாடு இல்லாமல் ஒரே வினைமுற்று வழங்குகிறது. படர்க்கை ஒருமை நிகழ்கால வினைமுற்றுகிய ஓரிடத்தில் மட்டும் எண்வேறுபாட்டை உணர்த்தும் இந்த விதி விலக்கான முறையும் செயற்கையானது என்று கடிந் துரைக்கப்படுகிறது. வினைச்சொல் தொழிலையும் காலத் தையும் உணர்த்தல்வேண்டுமே தவிர, பெயர்ச் சொல்லின் இயல்பாகிய எண் வேறுபாட்டை உணர்த்துதல் வேண்டா தது என்றும், வீண்சிக்கல் என்றும் எடுத்துரைக்கின்றனர். வருதல், போதல், உண்ணுதல் முதலாய தொழிலில் நிணையோ பாலோ இடமோ பற்றிய வேறுபாடு இல்லை என்றும், வருபவர் போபவர் உண்பவரிடத்திலேயே அந்த வேறுபாடுகளைக் காணவேண்டும் என்றும் கூறுகின்றனர். படர்க்கை ஒருமை நிகழ்கால வினைமுற்றுகிய ஓரிடத்தில் மட்டும் எண் வேறுபாட்டை உணர்த்தும் ஆங்கிலம் குறை உடையது என்று கூறி, எந்த இடத்திலும் வினைச்சொல் தனக்கு உரிய தொழிலையும் காலத்தையும் மட்டுமே உணர்த்திச் செல்லும் இயல்பினதாகிய டச்சு மொழி அதை விட உயர்வு உடையது என்றும் யெஸ்பர்ஸன் கூறுகிறார்.[1]

வளர்ச்சி

தொடக்கத்தில் வினைமுற்றுக்களில் பால் இடம் உணர்த்தும் விகுதிகள் சேராமலே இருந்திருக்கும். வினை முற்றுக்களை அடுத்து மூவிடப் பெயர்களை (வந்து ஆன், செய்து ஏம், உண்டு ஆர்) சேர்த்துப் பேசிப் பேசி, அவை

1. Even English, which has in most respects, gone farthest in simplifying its inflexional system, is here inferior to Danish, in that in the present tense of most verbs it separates the third person singular from the other persons by giving it the ending—(e)s.....Small and unimportant as these survivals may seem, still they are in some instances impediments to the free and easy expression of thought.—Otto Jespersen, Progress in Language, p. 33.

(வந்தார், செய்தேம், உண்டார் என) ஒட்டி ஒருசொல் தன்மை பெற்றிருக்கக் கூடும். இன்றைய பேச்சுத் தமிழில் உள்ள ஒரு மாறுதலை ஆராய்ந்தால் இதன் உண்மை உணரலாம்.

செய்தான் அடா > செய்தாண்டா
செய்தான் அடி > செய்தாண்டி
செய்தான் அய்யா > செய்தான்யா
செய்தான்(ர்)ங்கள் > செய்தானுங்க

என்னும் சொற்களில் முன்னின்று கேட்போரைக் குறிக்கும் அடா அடி அய்யா ர்ங்கள் முதலிய சொற்கள் வினை முற்றுக்களோடு ஒட்டி ஒருசொல்தன்மை பெற்று, செய்தாண்டா முதலிய சொற்களாய் வழங்குவதைக் காணலாம். இவற்றைக் கொண்டு, ஆண்டா ஆண்டி ஆன்யா ஆனுங்க முதலியவை விகுதிகள் என்றும், இவ் விகுதிகள் எழுவாயின் திணைபாலிடம் உணர்த்துதலோடு கேட்போரின் தன்மையும் உணர்த்துகின்றன என இலக்கணம் வகுக்க முடியுமோ?

பாஸ்க் மொழியில் வினைச்சொற்கள் இவ்வளவில் நிற்காமல், செயப்படு பொருளின் இட வேறுபாட்டையும் நான்காம் வேற்றுமைக்குரிய பொருளின் இட வேறுபாட்டையும் உணர்த்துகின்றனவாம்.[1] இவற்றைக் கொண்டு, வினைச்சொல், திணைபால் இடம் கேட்போர் செயப்படு பொருள் கொள்வோர் ஆகிய பலவற்றையும் உணர்த்தும் எனக் கொள்வது பொருந்தாது. வினைச்சொல் தொழி

1. Here the verbal forms indicate not only the person of the subject, but also that of the object proper and that object of reference (dative); and, further, "the Basque language distinguishes in the verbal flexion when a man, a woman, or a person who commands respect is spoken to. —Otto Jespersen, Progress in Language, p. 116.

லையும் தொழில்நிகழ் காலத்தையும் உணர்த்துதலே பொருந்துவதாகும். மற்றவை வினைச்சொல்லுக்கு வேண்டாத சுமை எனவும், பழக்கத்தால் இச் சுமை ஏற்பட்டபின் அதற்கும் வாழ்வு தருவதே மொழியின் இயற்கை எனவும், அதனாலேயே நாகரிக மக்களின் மொழியிலும் இச் சுமை உள்ளது எனவும் கொள்ளுதல்வேண்டும்.

பிரிநிலைவளர்ச்சியுடைய மொழிகளில் இலக்கண வேறுபாடு உணர்த்தும் விகுதிகள் முதலியவை கெடுதலையும் மறைதலையும் பற்றி வருந்தி மொழியின் சீர்கேடு எனக் கருதுவாரும் உளர்.

மனிதன் தான் இழந்தவற்றைப் பற்றித் தெளிவாக உணர்கிறான்; தான் பெற்றவற்றைப் பற்றி இவ்வளவு தெளிவாக உணர்வதில்லை. மொழி என்னென்ன இழந்துவிட்டது என்பதை இவர்கள் எடுத்துரைக்கின்றனர். ஆனால் மொழி புதியனவாகப் பெற்றவை என்ன என்ன என்பதை—சிறப்பாகவாக்கிய அமைப்பின் எளிமை, இலக்கண எளிமை முதலியவற்றைப் பற்றி—நன்றாக அறிவதில்லை. மொழியாராய்ச்சியாளருள்ளும் சிலர் இழந்தவற்றை விடாமல் எழுதிவைக்கின்றனர்; பெற்றவற்றை முற்றிலும் அறிந்து எழுதுவதில்லை. கண்டிலர் போன்ற பழைய வினைச் சொற்களை இழந்துவிட்டோம் என்பதை உணரும்போது, காணவில்லை முதலிய திணை பால் பாகுபாட்டைக் கடந்த பொதுச்சொற்களைப் பெற்றுள்ளோம் என்பதையும் உணர்தல் வேண்டும். வேறு இல்லை என்னும் சொற்கள் அஃறிணைக்கு உரியனவாக இருந்தும், தொல்காப்பியனார் காலத்திலேயே திணைபால் இடவேறு பாட்டைக் கடந்த பொதுச் சொற்களாக அவை வளர்ந்து விட்டன என்பதையும் கருதல் வேண்டும்.

உங. மொழியினங்கள்

மக்களும் மொழியும்

மொழி ஒன்றுகத் தோன்றுமல் பலவாகத் தோன்றி வளர்ந்துள்ளமைக்குக் காரணம் மக்களுக்குப் பேசும் ஆற்றல் வளர்ந்தபோது, அவர்கள் ஓர் இடத்தில் ஓர் இன மாக ஒத்த அறிவினராகக் கூடி வாழாமையே ஆகும். அவர்களின் வாழ்வில் அமைந்திருந்த பிரிவுகளுக்கு ஏற்ற வாறு வெவ்வேறு மொழிகள் தோன்றின.

தோற்றத்தைப் பொறுத்தவரையில் இதைக் கூற முடியுமே தவிர, பேச்சுத்திறனும் நாகரிகமும் வளர்ந்த பிறகு மொழிகள் வெவ்வேறு வகையாய்ப் பிரிந்து வளர்வ தற்கு இதைக் காரணமாகக் கூற முடியாது. தொடக்கத் தில் காரணமாக இருந்த இட வேறுபாடும் இன வேறு பாடும் அறிவு வேறுபாடும், பிற்காலத்தில் அவ்வளவு காரணமாக இல்லை. ஒரே இடத்தில் வெவ்வேறு மொழிகள் பேசப்படுகின்றன; வெவ்வேறு இடத்தினர் ஒரே வகை மொழி பேசுதலும் காண்கிறோம். ஒரே இனத்தார் வெவ் வேறு மொழி பேசுதலும், வெவ்வேறு இனத்தார் ஒரே மொழி பேசுதலும் இன்று காண்கின்றோம். அறிவில் ஒற்றுமை உடையவர் தங்கள் கருத்துக்களை வெளியிட வெவ்வேறு மொழிகளைப் பயன்படுத்த, வேறுபட்ட அறிவு நிலையினர் ஒரே மொழி பேசிப் போராடுதலும் காண்கின் றோம். ஆகவே, தொடக்கத்தில் மொழிகள் பிரிந்து வேறு படுதற்கு எவை காரணமாக இருந்தனவோ, அவற்றின் செல்வாக்கையும் கடந்து மொழிகள் இன்று வளர வல்லன வாக உள்ளன.

மக்களினங்கள்

இந்தியாவிலும் மேற்கு ஆசியாவிலும் ஐரோப்பா விலும் உள்ள மக்கள் காக்கேசிய இனத்தவர் என்றும்,

மெல்லிய தலைமயிரும் நீண்ட தலையும் நீண்ட மூன்கையும் அவர்களை வேறுபடுத்துவன என்றும் கூறப்படும். சீனாவிலும் ஜப்பான் ஜாவா முதலிய தீவுகளிலும் வாழ்வோர் மங்கோலிய இனத்தவர் என்றும், மஞ்சள் நிறமும் தட்டை மூக்கும் வட்டத் தலையும் அவர்களின் சிறப்பியல்புகள் என்றும் கூறப்படும். ஆப்பிரிக்க மக்கள் நீக்ரோ இனத்தவர் என்றும், கம்பளி மயிரும் கருநிறமும் நீண்ட தலையும் அவர்களை வேறுபடுத்துவன என்றும் கூறப்படும். இவ்வாறு மக்களை இனம் இனமாகப் பாகுபாடு செய்திருந்தனர். இன்று காக்கேசிய இனமும் மங்கோலிய இனமும் கலந்த கலப்பே மிகுதியாக உள்ளது என்கின்றனர். எளிதில் கலப்பு நேராதது உடல்; எளிதில் கலப்பு நேர்வது மொழி. உடலளவிலேயே இனங்களுக்குள் கலப்பு மிக நேர்ந்துள்ளது எனின், மொழிகளிடையே நேர்ந்துள்ள கலப்பைப் பற்றிக் கூற வேண்டுவதில்லை. அன்றியும், மக்களின் உடலமைப்பின் ஒற்றுமைவேற்றுமைகள் அந்தந்த நாட்டுத் தட்பவெப்ப நிலைகளாலும் படிப்படியே மாறியமைகின்றன; ஆதலின் அவை ஆராய்ச்சிக்கு அவ்வளவாகத் துணை செய்வனவும் அல்ல.[1]

1. In several cases the physical features presented may be dubious or elusive.

—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 135.

Ethnology, if one may say so, is a fleeting science, if it can be termed as a science at all. And anthropology is its cousin. The historian of ancient South India is baffled by a number of conflicting theories propounded by the Ethnologist and the Anthropologist. The theories not only conflict with one another but also are based on little or no evidence. Most of them are imaginary, unconvincing and untenable.

—Ibid. p. 140.

இந்தியாவில் உள்ள மக்களையே சிலர் எழுவகை இன மாகப் பாகுபாடு செய்துள்ளனர். துருக்க—ஈரானியர், இந்திய—ஆரியர், சித்திய—திராவிடர், ஆரியத் திராவிடர் அல்லது இந்துஸ்தானியர், மங்கோலியத் திராவிடர் அல்லது வங்காளியர், மங்கோலாய்ட், திராவிடர் என்ற எழு வகையாகப் பகுத்துள்ளனர்.[1]

இடையிடையே பல இனத்தார் வந்து கலந்துள்ள கலப்புமுறையை இப் பாகுபாடே அறிவிக்கிறது. தென்னிந்தியாவில் இக் கலப்பு மிகக் குறைவு ஆகையால், இங்குள்ள மக்களை மட்டும் திராவிடர் என்ற கலப்பற்ற பெயரால் வழங்க முற்பட்டனர். ஆயினும், சென்னைப் பகுதியில் உள்ளவர்கள் எல்லோரும் திராவிடர்கள் என்றோ வங்காளத்தில் உள்ளவர்கள் எல்லோரும் மங்கோலியத் திராவிடர்கள் என்றோ துணிந்து கூறிவிட முடியாது என்றும், எங்கும் கலப்பு உள்ளது என்றும் கிரியர்ஸன் கருதுகிறார்.[2]

மொழியினங்கள்

இந்திய மக்களை இவ்வாறு பகுத்த ஐரோப்பிய அறிஞர்கள், இந்திய நாட்டு மொழிகளை வேறுவகையாகப் பாகுபாடு செய்துள்ளனர். ஆரியம், திராவிடம், முண்டா, மான்குமேர், திபேத்தோசினம் என்று ஐவகை மொழிகள் இந்தியாவில் இருப்பதாகக் கூறியுள்ளனர். இக் கொள்கையை இவ்வாறே ஏற்றுக்கொள்ள வேண்டுவதில்லை. இல்லாத ஊர்க்கு இலுப்பைப்பூச் சர்க்கரை ஆதல் போல், ஒருவகை ஆராய்ச்சியும் இல்லாத நிலையில், ஏதேனும் ஒரு

1. Turko - Iranian, Indo - Aryan, Scythio - Dravidian, Aryo - Dravidian or Hindustani, Mongolo - Dravidian or Bengali, Mongoloid, Dravidian.

2. Grierson, Linguistic Survey of India, Vol. IV.

பாகுபாடு போற்றப்படுவதாயிற்று. இந்திய மொழிகளைத் திராவிட மொழிகள் என்றும், ஆரியத் திராவிட மொழிகள் என்றும், ஆரிய மொழிகள் என்றும் மூவகையாகப் பாகுபாடு செய்தலே இன்று மொழியாராய்ச்சிக்குப் பொருந்துவதாக உள்ளது.

உலகில் உள்ள மற்ற மொழிகளை ஆராய்ந்தால், சீன மொழி மிகப் பழமையானது. கொச்சின்சீனா, கம்போடியா முதலிய இடங்களில் உள்ள மொழிகள் அதனோடு உறவு உடையன. அவை அன்னமியினம் (Annamese group) எனப்படும். சயாம் நாட்டில் பேசப்படுவது தை மொழி எனப்படும். அதுவும் சீன மொழியோடு இயைந்ததே. பர்மிய மொழியும் திபேத் மொழியும் அதனோடு உறவு உடையனவே.

ஐரோப்பாவில் பின்லண்டு முதல் கிழக்கு ரஷ்யா வரையில் வழங்கும் மொழிகள் சித்திய மொழிகள் எனப்படும். துருக்கியிலிருந்து ரஷ்யா வரையில் உள்ள நாடுகளில் வழங்கும் மொழிகள் துரானிய மொழிகள் எனப்படும். அவையும் இந்தச் சித்திய இனத்தைச் சார்ந்தனவே.

ஆரியம் என்று சொல்லப்படுவன வடமொழியாகிய சம்ஸ்கிருதமும் அதைச் சார்ந்த வட இந்திய மொழிகளும் மட்டும் அல்ல; கிரீக், லத்தீன், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம், வெல்ஷ் முதலிய ஐரோப்பிய மொழிகள் பலவும் ஆரிய இனத்தைச் சார்ந்த மொழிகளே. பாரசீகமும் அதைச் சார்ந்ததே.

பாபிலோனிய மொழி, யூத மொழி, ஹீப்ரூ மொழி, பினீசிய மொழி, அரபி மொழி, எகிப்து மொழி, அபிசீனிய மொழி, எத்தியோப்பிய மொழி முதலியவை

செமிட்டிக் (Semitic) இனம் எனக் கூறப்படும். இவை அரேபியாவிலும் வட ஆப்ரிக்காவிலும் வழங்குவன.

பார்ஜு, பூலா, புஷ்மன் முதலிய மொழிகள் மத்திய ஆப்பிரிக்காவில் வழங்குவன; உலாப் (Wolof) இனம் எனப்படும்.

ஜப்பான் மொழி தனிவகையானது.

ஐரோப்பாவில் ஸ்பெயினுக்கு வடக்கே வழங்கும் பாஸ்க் மொழியும் தனிவகையானது. எஸ்கிமோப் பேச்சுக்களும் வேறுவகையானவை.

அமெரிக்காவில் நாகரிகம் இல்லாத மக்கள் பேசிவந்த மொழிகள் வெவ்வேறு பெயரால் வழங்கப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவின் பழங்குடி மக்களின் மொழிகள் திராவிட மொழிகளோடு தொடர்பு உடையன என்று கருதிவந்தனர். போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. மலேயா, ஜாவா, பாலினேஷிய மொழிகள் வேறுவேறுக உள்ளன.

மக்களினமும் மொழியினமும்

மக்களைச் சில இனங்களாகப் பாகுபாடு செய்த முறைக்கும், மொழிகளைச் சில இனங்களாக வகுத்த முறைக்கும் பழங்காலத்தில் தொடர்பு இருந்தது. ஏன் எனின், அக் காலத்தில் மக்களினங்களின் கலப்பு ஏற்பட வில்லை. இன்று உலகில் பல பகுதிகளிலும் பலவகை மக்கள் கலந்துவிட்டனர். ஆகையால், இருவகைப் பாகு பாட்டுக்கும் தொடர்பு இல்லாமற்போய்விட்டது. இன்ன இனத்து மக்களின் நிறம் இன்னது, அவர்களின் உட லமைப்புக்கள் இத்தகையன என்று ஒருவாறு எடுத்துக் கூறலாம். ஆனால், இன்ன இனத்து மக்களின் மொழி இன்னது என்று எடுத்துரைப்பதற்கு இக்காலம் அவ்

வளவாக இடம் தருவதில்லை. உடல்நிறம், உறுப்புக்களின் அமைப்பு முதலியவற்றை ஒருவர் விருப்பம் போல் மாற்றிக் கொள்ள முடியாது. ஆயின், சமயம், பழக்க வழக்கம் முதலியவற்றை மாற்றிக்கொள்ள முடியும். அவை போலவே, ஒருவர் தம் தாய்மொழியை மறந்து மற்றொரு மொழியைக் கற்க முடியும். ஒரு நாட்டில் குடியேறிய மக்களின் நிறமும் உறுப்புகளின் அமைப்பும் எளிதில் மாறுவதில்லை. பல தலைமுறைகளாகப் பிறருடன் கலந்து விட்டாலும், மாறுதல் மிகுதியாக ஏற்படுவதில்லை. ஆயின், சமயம் மொழி முதலியவற்றை ஒரே தலைமுறையில் மாற்றிக்கொள்ள முடிகின்றது.[1] வடஇந்தியாவில் பஞ்சாப் போன்ற ஒரு மாநிலத்தை எடுத்துக்கொண்டு ஆராய்ந்தால், அங்கே பலவகை மக்கள் குடியேறிக் கலந்தும் கலக்காமலும் வாழ்ந்துவருகின்றனர். ஆயின் எல்லோரும் ஒரு மொழியையே பேசி வருகின்றனர். தென்னிந்தியாவில் பெரும்பாலோர் ஒரேவகையான இனத்தைச் சார்ந்த மக்கள்; ஆயின், அவர்கள் பேசும் மொழிகளில் வேறுபாடுகள் உள்ளன. ஆகவே, மக்களிடையே இனங்களின் உறவும் கலப்பும் ஒருவகையாய்ச் செல்ல, மொழியினங்களின் தொடர்பும் கலப்பும் வேறுவகையாய் அமைந்துவருகின்றன எனலாம்.[2] எதிர்காலத்தில் உயர்ந்த

1. We must not confound hereditary ethnical characteristics with institutions such as language, religion and culture which are eminently transmissible and can be borrowed and exchanged.—J. Vendryes, Language, p. 235.

2. Linguistic relationship can hardly expect much corroboration from archaeology or anthropology. The utmost the philologist can ask from an allied science is either some directing hypothesis or some control to enable him to check his researches. He can use none but linguistic methods to prove linguistic relationship.—J. Vendryes, Language, p 365.

நாகரிகம் பரவி ஒத்த உரிமை உண்மையாய் விளங்குமாயினும், உலக மக்களுக்குள் எவ்வகையான வேறுபாடும் இல்லாமல் ஒழியுமாயினும், அப்போதும் நாட்டுக்கு நாடு வெவ்வேறு மொழிகள் வழங்கிவரும் என்றே தோன்றுகின்றது. ஆகவே மக்களினமும் மொழியினமும் வளர்ச்சியிலும் கலப்பிலும் வெவ்வேறுக உள்ளன எனலாம்.

பொதுவான அடிப்படை

மனித உடலமைப்பிலும் வளர்ச்சியிலும் பலவகை வேறுபாடுகள் இருந்து வந்தபோதிலும், அடிப்படையான பொதுத்தன்மை ஒன்று இருந்துவருகின்றது அன்றே? அதுகொண்டு, நீகிரோவும் இந்தியனும் ஐரோப்பியனும் சீனனும் பொதுவாக மனிதர் என்று கருதப்படுகின்றனர் அல்லரோ? மூளையமைப்பும் வளர்ச்சியும் மிகப் பல வேறுபாடுகளுடையன எனினும், அவற்றிற்குப் பொதுவான அடிப்படைத்தன்மை உண்டு. மூளையின் கருவியாக வளர்ந்து அமையும் மொழிகளும் நாட்டுக்கு நாடு வெவ்வேறுக உள்ளபோதிலும், அவை எல்லாவற்றிற்கும் பொதுவான அடிப்படை உண்டு.[1] பெயர் வினை எழுவாய் பயனிலை செயப்படுபொருள் விளிவேற்றுமை இடைச்சொல் முதலிய பலவகையில் உலக மொழிகள் ஒத்திருப்பதற்குக் காரணம் அதுவே ஆகும்.[2]

1. Our languages with all their diversities disclose the existence of a great common factor in men's trend of thought and men's craving for expression.—Otto Jespersen, Mankind Nation and Individual, p. 221.

2. Some features of language are due to a common humanity : they show themselves just because the individuals who speak the languages are human beings.—Otto Jespersen, Mankind Nation and Individual, p. 206.

In the world of language there is a bond of common human nature which can bring about the same or related

பிறமொழிகளே மதியாமை

ஒவ்வொரு மொழியாரும் மற்ற மொழியாரைக் குறைவாகவும் மற்ற மொழியை நாகரிகம் இல்லாததாகவும் கருதிவந் திருக்கின்றனர். வடமொழி படித்தவர்கள் அது மட்டும் 'தேவபாஷை' என்றும், மற்றவை மண்ணுலக மொழி (பிராகிருதம்) என்றும் கருதினர். விந்தியமலைக் குத் தெற்கே அக்காலத்தில் வழங்கிய திருந்தாத் தமிழை (அல்லது திருந்தாத் திராவிட மொழியைப்) பைசாச பாஷை என்றனர். ரோமர்கள் இவ்வாறே பிறமொழி யினரைப் 'பிதற்றுவோர்' என்றும், காட்டுமிராண்டிகள் என்றும் கருதினர். வேங்கடமலைக்குத் தெற்கே இருந்த பழந்தமிழர், மலைக்கு வடக்கே இருந்த பகுதியில் தமிழ் திரிந்த மொழியே (தெலுங்கு) வழங்குவது அறியாமல் அதை வடுகர் மொழி என்று கருதினர்; அந்த நிலப் பகுதியை மொழி வேறுபட்ட பகுதி (மொழிபெயர் தேஎம்)[1] என்றனர். அந்த மக்களை 'வம்பவடுகர்'[2] என்றும் கல்லா நீள்மொழிக் கதநாய் வடுகர்'[3] என்றும் குறித்தனர்.

பழங்காலத்துக் கிரேக்கர், உலக மக்களையே கிரேக்கர் என்றும் காட்டுமிராண்டிகள் என்றும் இருவகைப் பாகு பாட்டில் அடக்கினர். மற்றவர்களை நாகரிகம் குறைந்த வர்கள் என எண்ணியமைதாடு அவர்களின் நடை உடை மொழி முதலிய யாவற்றையும் இழிவாகக் கருதினர்.

---

effects in many different places, where all thought of imitation or borrowing is absolutely excluded. If the effects, though analogous, show great variety, it is because often the fundamental common nature encounters different materials in the different languages in which it operates.—Ibid. p. 208.

1. அகநானூறு, 31, 127, 205, 211. 2. ஷை. 375.
3. ஷை. 107.

கிரேக்க மொழி பேசுவதையே தமக்கு ஒரு பெருமையாகக் கொண்டனர். கிரேக்க மொழியைச் சார்ந்த கிளைமொழி களையும் அவர்கள் மதிக்கவில்லை. போலந்து மக்கள் தம்மை அடித்துள்ள ஜெர்மனியரை ஊமைகள் என்னும் பொருள்படும் சொல்லால் குறித்தனர். கிரேக்கர்களும் தம்மை அடித்துள்ள நாட்டினரைப் பேச்சற்றவர் என்னும் பொருள்படும் சொல்லால் வழங்கினர்.[1] இவ்வாறு பிற மொழிகளையும் பிறமொழியினரையும் மதிக்காத கொடிய அறியாமை பழங்காலத்தில் பல நாடுகளில் இருந்து வந்திருக்கிறது.

பழம் பெருமை

இன்றும் பல நாட்டினர் தம் தம் மொழியின் பழைய பெருமைகளைப் பாராட்டுவதில் ஊக்கம் கொண்டுள்ளனர். பழைய வரலாற்றை நினைத்துப் பெருமைப்படுவதில் பயன் இல்லை. பழம் பெருமை இன்றைய வாழ்வுக்கு உதவுவ தில்லை. பழம் பெருமையை நினைப்பதால் ஊக்கம் வரும் எனின், அதனால் சோர்வும் வளர இடம் உண்டு அன்றே? இன்றைய சூழ்நிலையும் வளர்ச்சியுமே உயர்வுக்குக் காரண மாக விளங்க முடியும். சமுதாயம், மொழி இரண்டனுக் கும் இது பொருந்தும். வாழ்க்கையில் காணும் எழுச்சியும் வீழ்ச்சியும் போலவே, மொழிவரலாற்றிலும் அவற்றைக்

1. The ancient Greek divided the whole world into Greeks and barbarians, and he would have felt himself degraded by adopting either the dress or the manners or the language of his barbarian neighbours. He considered it a previlege to speak Greek, and even dialects closely related to his own, were treated by him as mere jargons...The Poles called their neighbours, the Germans, Niemiec, niemyi meaning dumb; just as the Greeks called the barbarians Aglossoi, or speechless.—Max Muller, The Science of Language, p. 96.

காணலாம். ஏழெட்டுத் தலைமுறையாகச் செல்வாக்குடன் வாழ்ந்த ஒரு குடும்பத்தார், வீழ்ச்சியுற்று இருக்கும் இடம் தெரியாமல் மங்கிப்போவதும் உண்டு. ஊர் பேர் அறியாமல் மூலையில் ஒதுங்கி வாழ்ந்த குடும்பம் திடீரென்று முன்னேற்றம் அடைந்து நாடறிய வாழ்வதும் உண்டு. ஆங்கில மொழி சில நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒருவகைச் சிறப்பும் இல்லாமல் மூலையில் கிடந்தது; இன்று உலக மொழியாக உயர்ந்துள்ளது. இலக்கிய வளமும் நிரம்பியதாக உள்ளது. மிகப் பழங்காலத்திலேயே எழுத்துக்கலை படைத்த எகிப்தியமொழி இன்று இருளில் மங்கியது. கிறிஸ்து பிறப்பதற்கு ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே மொழி கலை முதலிய யாவற்றிலும் நாகரிகச் சிறப்புடன் விளங்கி நின்ற நாடு சீனை. சீன நாடு உயர்ந்திருந்த மிகப் பழங்காலத்தில் இந்தோஐரோப்பிய இனத்து மக்கள் எல்லோரும் காடோடிகளாய்த் திரிந்த காட்டுமிராண்டிகளாக இருந்தனர் என விட்னே கருதுகிறார்.[1] ஆயின், அந்தச் சீனநாடு பல நூற்றாண்டுகளாகத் தாழ்வுற்றுக் கிடந்தது; வேறு என்னென்ன நாடுகளோ மேம்பாடு பெற்று வாழ்ந்தன. மொழியின் நிலைமையும் அவ்வாறே ஆகும். பழங்காலத்தில் நாடு முழுதும் தனியரசு செலுத்திய தமிழ் மொழியின் பண்டைப் பெருமையினையும் இன்றைய நிலையினையும் ஒப்பிட்டுக் காணினும், இந்த உண்மையை உணரலாம்.

---

1. Its earliest literary records claim to go back to nearly two thousand years before Christ, and the annals and traditions of the race reach some centuries farther, so that Chinese antiquity almost exceeds in hoariness both Semitic and Indo-European.....in the past at which every Indo-European people of which we know aught was but a roving tribe of barbarians.—Whitney, Language and the Study of Language, p. 332.

விருப்பு வெறுப்பு

மொழிகளைப் பற்றிய ஆராய்ச்சியறிவு மிகப் பிற்காலத்தே தோன்றியதாகும். முற்காலத்தே தம்மைச் சார்ந்தவை எல்லாம் உயர்ந்தவை என்றும், பிறருடையவை எல்லாம் இழிந்தவை என்றும் எல்லாத் துறையிலும் தவறான மனப்பான்மை வேரூன்றியிருந்தது போலவே, மொழித்துறையிலும் இருந்துவந்தது. தாம் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்னும் அறியாமைக்கு இடையே ஆராய்ச்சி தோன்ற இடம் ஏது? தன் குஞ்சே பொன் குஞ்சு என்னும் மனப்பான்மை இருந்துவந்தமையால், பழங்கால மக்கள் வேறு மொழி பேசுவோருடன் கூடிப் பழக நேர்ந்த போதும், அந்த வாய்ப்பை நேர்மையான ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தவில்லை. தம்தம் விருப்பு வெறுப்பே மூடிந்த முடிபுகள் எனக் கொண்டு உண்மை அறியாமல் மயங்கிக் கிடந்த நிலையே அக் கால நிலை.

இலக்கியச் சிறப்பு

அதற்கு அடுத்ததாகக் கூறத்தக்க நிலையில், இலக்கிய வளம் உடைய மொழியே சிறந்த மொழி என்றும், இலக்கியம் இன்றிப் பேச்சு வழக்கு மட்டும் பெற்ற மொழி இழிவானது என்றும் கருதப்பட்டுவந்தது. பழங்காலத் தமிழ் அறிஞர் தம் மொழியைத் தென் மொழி என்றும், அதற்கு இணையானது வடமொழி என்றும் கருதி, பிராகிருதம் பாலி முதலிய வட நாட்டுப் பேச்சுமொழிகளைப் புறக்கணித்த காரணம் இதுவே: வேங்கடத்திற்கு அப்பால் பேச்சு வழக்கில் இருந்த (வடுகர் மொழியாகிய) தெலுங்கைப் பற்றியும், அவ்வாறே மேற்கே வழங்கிய கன்னடத்தைப் பற்றியும் கவலை கொள்ளாத காரணமும் இதுவே. இலக்கிய வளம் இல்லை எனினும் பேச்சுவழக்கு

உடையதும் மொழியே என்னும் உண்மையை அவர்கள் போற்றவில்லை.

அதற்கு அடுத்த நிலையில், இலக்கிய வளம் பெற்ற மொழிகளுக்குள் எது சிறந்தது என்று ஆராயும் ஆராய்ச்சி தலையெடுத்தது. சிறந்த புலவர்கள் உயர்ந்த இலக்கியம் எழுதிய மொழியே மேம்பாடு உடைய மொழி என்று கருதும் போக்கு வந்தது. ஐரோப்பாவில் உள்ள பலவகை மொழிகளையும் இத்தகைய மனப்பான்மையோடு ஒப்பிட்டுச் சீர்தூக்கும் முயற்சி பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்துவந்தது. விழுமிய மொழியின் தன்மை எத்தகையது என்பதைப் பற்றியும், ஐரோப்பிய மொழிகள் அதனோடு ஒட்டிக் காணும்போது எவ்வாறு உள்ளன என்பதைப் பற்றியும் சிறந்த கட்டுரை எழுதுவோர்க்குப் பெர்லின் கலைக் கழகம் (The Berlin Academy) பரிசு ஒன்றை ஏற்படுத்தியது. பரிசு பெற்ற கட்டுரையாளர் (Jenisch), ஐரோப்பிய மொழிகளின் தன்மைக்கும் அவற்றைப் பேசும் மக்களின் இயல்புக்கும் உள்ள ஒற்றுமைகளை எடுத்துக் காட்ட முயன்றார். அவருடைய கொள்கைகளை இன்று உடன்படுவார் இல்லை. உயர்ந்த இலக்கியங்கள் உயர்ந்த மொழியில்தான் பிறக்கும் என்று உடன்படும் அறிஞருமை இன்று இல்லை. ஆட்சிச் செல்வாக்கின் காரணமாக சிறிய தொரு கிளைமொழியும் பெரிய பொதுமொழியாய் வளர்ந்து வளம் பெறுதல்போல், பண்பாடு குறைந்த ஒரு மொழியிலும் உயர்ந்த இலக்கியம் பிறப்பது உண்டு என்று இன்று அறிஞர் கருதுகின்றனர்.[1] நாகரிகம் குறைந்த

1. Too much stress is laid on the literary merits of great writers, which have really no intrinsic connexion with the value of a language as such. It depends to a great extent on accidental circumstances whether a language has been or has not been used in elevated literature, and its merits should be

சிறு குடும்பத்தில் உலகை உய்விக்கும் பெருமகன் பிறப்பது இயற்கை; அதுபோல், பண்பாடு இல்லாத மொழியைப் பேசுவோரின் கூட்டத்தில் உயர்ந்த கருத்துக்கள் கொண்ட புலவர் பிறப்பதும் உண்டு; அத்தகைய புலவர் இயற்றும் சிறந்த நூல்களால் பிற்காலத்தில் அந்தச் சிறு மொழிக்கு மேம்பாடு ஏற்படுவதும் உண்டு. ஆகையால் ஒரு மொழியின் இலக்கிய வளத்தை ஒட்டி அதன் மொழித் தன்மையைச் சீர்தூக்குதல் பொருந்தாது.[1]

சொற்களால் உறவு காணல்

இதற்கு அடித்தளமில் வளர்ந்த மொழியாராய்ச்சி, சொற்களை ஒப்பிட்டு முடிவுகாணும் அளவில் நின்றது. இரண்டு மொழிகளை ஆராயத் தொடங்குவோர், அவற்றின் அகராதிகளை மட்டும் ஆராய்ந்து, அந்த இரண்டு மொழிகளுக்குள் உள்ள உறவையும், எதிலிருந்து எது தோன்றியிருக்கும் என்ற முடிவையும் தெரிவிக்கத் தலைப்பட்டனர். ஒரு மொழி மற்றொரு மொழியிடமிருந்து சொற்களைக் கடன் வாங்குதல் எளிது என்பதையும், கடன் வாங்கிய காரணத்தாலேயே இது அதிலிருந்து பிறந்தது என்று பிறபபுப் பற்றி முடிவு காணுதல் பொருந்தாது என்பதையும், அவர்கள் அறியார். அதனால்தான் அக்காலத்து அறிஞர் சிலர், தமிழ் தெலுங்கு கன்னடம் முதலிய மொழிகளில் வட சொற்கள் இருத்தலைக் கண்டு, இந்த மொழிகள் எல்லாம் வடமொழியிலிருந்து தோன்றியவை என்று உடனே முடிவு செய்தனர்.

---

estimated, so far as this is possible, independently of the perfection of its literature.—Otto Jespersen, Language, p. 30.

1. It is evident, from all this, that written records give us only an imperfect and often distorted picture of past speech, which has to be diciphered and interpreted, often at the cost of great labour.—Bloomfield, Language, p. 293.

தவிர, சொற்களின் ஒப்புமை காணும் ஆராய்ச்சியில் தவறுகள் நேர்வதற்கும் இடம் உண்டு. இருவேறு மொழிகளில் தனித்தனியே ஏற்பட்டு வழங்கும் சொற்கள் ஒப்புமை உடையன போல் தோற்றக் கூடும். உண்மையில் மொழிகள் உறவு இல்லாதனவாக இருக்கலாம். சொற்களின் வடிவங்களைக் கொண்டு அவற்றிடையே ஒற்றுமை கண்டு தொடக்கம் ஒன்று எனக் கூறுதலோ, வேற்றுமை கண்டு வெவ்வேறு எனக் கூறுதலோ பொருந்தாது ஒரு குடியில் பிறந்தவர்கள் பல ஆண்டுகளுக்குப் பிறகு அடையாளம் காண இயலாதவாறு உருவம் திரிதலும் உண்டு. வெவ்வேறு குடியில் பிறந்த இருவர், உடன் பிறந்தார்போல் தோன்றுதலும் உண்டு. சொற்களிலும் இத்தகைய நிலை உண்டு. தமிழில் உள்ள 'எட்டு' என்ற சொல்லும் ஆங்கிலத்தில் உள்ள 'எய்ட்' (eight) என்ற சொல்லும் ஒன்று போல் தோன்றினும், உறவே இல்லாதவை. தமிழில் உள்ள 'பெயர்' என்ற சொல்லும், கன்னடத்தில் உள்ள 'ஹெஸரு' என்ற சொல்லும் வேறுபட்டுத் தோன்றினும், இரண்டும் ஒரே சொல்லிலிருந்து பிறந்தவை. ஆகவே, சொற்கோவைகளை ஒப்பிட்டு ஆராய்வோர், இலக்கணக் கூறுகளையும் ஒப்பிட்டு ஆராயாவிடின் பலவகைத் தவறுகளுக்கு இடந்தர நேரும்.

புதிய வழிகாட்டி

சொற்கோவைகளை (vocabularies) ஒப்பிட்டு ஆராயும் மொழியாராய்ச்சி போலியானது என்னும் உண்மையை முதல்முதலில் தெளிவாக்கியவர், ராஸ்மஸ் ராஸ்க் (Rasmus Rask) என்னும் அறிஞர்.[1] 1816—23-ம் ஆண்டுகளில் அவர் ஸ்வீடன், பின்லண்ட், ரஷ்யா, காகஸஸ்

1. ராஸ்க், டென்மார்க் நாட்டின் நடுவே ஒரு சிற்றூரில் ஏழைக் குடிசையில் உழவர்குடும்பத்தில் 1781-ல் பிறந்தவர்.

பெர்ஷியா, இந்தியா ஆகிய நாடுகளில் சுற்றிப் பலவகை மொழிகளையும் ஆராய்ந்தார். ஆயின், அவர் உடல்நலம் இழந்து பொருள்முடையால் வருந்தி ஆராய்ச்சி முடிவுறும் முன்னரே மறைந்தார். அவர் கண்ட உண்மைகளைத் தம் தாய்மொழியாகிய டேனிஷ் மொழியில் எழுதினார். அது உலகம் அறியாத சிறுபான்மையோரின் மொழியாக இருந்த காரணத்தால், அவருடைய கொள்கைகள் விரைவில் உலக மெங்கும் பரவ முடியாமற் போயிற்று. அவர் இந்திய மொழிகள் எல்லாம் வடமொழியைச் சார்ந்தவை என்னும் எண்ணத்தோடுதான் சுற்றி ஆராய்ந்தார். ஆயின், பழங் கொள்கைகளைக் கண்மூடிப் பின்பற்றாமல் என்றும் விழிப் புடனிருந்து புதிய உண்மைகளைக் காணும் ஆராய்ச்சித் திறனுடையவராக விளங்கியதால், தென்னிந்தியாவில் உள்ள மொழிகள் தனியினம் எனக் கண்டார். தென் னிந்திய மொழிகளைத் திராவிட மொழிகள் என்று அவர் குறிப்பிடவில்லை; தாம் முதலில் கண்டுணர்ந்த நாடும் மொழியும் பற்றித் தென்னிந்திய மொழிகளுக்கு மலபார் மொழிகள் எனப் பெயர் குறித்து, அவைகள் வடமொழி யிலிருந்து வேறுபட்டவை என நாட்டினார். அவருடைய ஆராய்ச்சி, சொற்களை ஒப்பிட்டுக் கண்ட ஆராய்ச்சி அன்று; கடன் வாங்க முடியாதவைகளாகிய இலக்கணக் கூறுகளை ஒப்பிட்டுக் கண்ட ஆராய்ச்சி ஆகும். அதனால் மொழியாராய்ச்சித் துறையில் அவர் ஒரு புதிய வழிகாட்டியாக விளங்கினார்.

அறிஞர்கள்

அவர்க்கு அடுத்தாற்போல் கருதத் தக்க மொழியியல் அறிஞர் ஜாகப் கிரிம் (gacob Grimm) என்பவர், சொற் பிறப்பு (Etymology) ஆராய்ச்சியிலும் ஒலியியல்

(Phonetics) ஆராய்ச்சியிலுமே பெரிதும் காலம் கழித்தார். ஆகலின் அவருடைய முடிபுகள் இன்று ஏற்றுக்கொள்ளத் தக்கனவாக இல்லை.

பிரான்ஸ் பாப் (Franz Bopp) என்பவர் அடித்தாற் போல் கருதத் தக்க மொழியியல் அறிஞர் ஆவார். அவர் பாரிஸ் நகரத்திற்குச் சென்று கிழக்கு நாடுகளின் மொழி களைக் கற்று ஆராய்ந்தார். விகுதிகளின் பிறப்பை ஆரா யும் ஆராய்ச்சியில் தொடங்கிய அவர், இலக்கணங்களை ஒப் பிட்டுக் காணத் தலைப்பட்டார் ஒப்பிலக்கணம் என்னும் ஆராய்ச்சித் துறை அவரால் வளர்ந்தது எனலாம். ஐரோப்பிய மொழிகளுக்கும் வடமொழி முதலான சில இந்திய மொழிகளுக்கும் உள்ள உறவைக் கண்டு, எல்லா வற்றையும் குறிப்பிட இந்தோஐரோப்பிய மொழியினம் (Indo-European group) என்ற குறியீடு அமைத்தவர் அவரே.

அடித்தாற்போல் வந்த மொழியியல் அறிஞர் பலர்; பத்தொன்பதாவது நூற்றாண்டில் அவர்கள் ஆற்றிய ஒப் பற்ற தொண்டுகள் பல. திறத்தன தென்னிந்தியாவில் திரா விடமொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதினார் அறிஞர் கால்டுவெல். மலையாள மொழியை ஆராய்ந்தார் டாக்டர் குண்டர்ட் (Dr. Gundert) தெலுங்கு மொழியை அறிஞர் பிரௌன் (C. P. Brown) ஆராய்ந்தார். கன்னட மொழியை ஆராய்ந்தவர் அறிஞர் கிட்டல் (F. Kittel) என்பவர். குடகு, துளு, பிராஹுய் முதலிய மொழிகளையும் வெவ்வேறு அறிஞர் ஆராய்ந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவ்வாறு வளர்ந்து வந்த மொழியாராய்ச்சித் துறையில் ஒரு குறை இருந்து வந்தது; அந்தக் குறையால் சில உண்மைகள் விளங்

காமற் போயின ; விளங்கிய சில தெளிவில்லாமற் போயின. அந்தக் குறை என்ன? எடுத்ததற்கெல்லாம் வடமொழியின் விளக்கத்தை எதிர்பார்த்த குறையே ஆகும். மொழியியல் என்னும் அரிய கலையை ஆராய்ச்சியாளரே அல்லாமல் மக்கள் பிறரும் உணரும் வகையில் பரவுமாறு பெருந்தொண்டு புரிந்த மாக்ஸ் முல்லர் (Max Muller) விட்னே (W. D. Whitney) ஆகியோரும் இவ்வாறு வடமொழிவிதிகளையும் எடுத்துக்காட்டுக்களையுமே கண்மூடிப் பின்பற்றினர். மாக்ஸ்முல்லரின் முறை, ஒரு பெரிய மரத்தின் உதிர்ந்த சருகுகளை ஆராய்ந்தது போன்றது என்கிறார் அறிஞர் யெஸ்பர்ஸன். விட்னேவின் ஆராய்ச்சிகளில் நேர்மையும் தெளிவும் இருந்தபோதிலும் அவருடைய முடிபுகளும் இன்று பெரும்பாலும் தடுமாறி நிற்கின்றன. வடமொழியில் தாது (அடிச்சொல) பற்றிய விதிகளைக் கண்மூடிப் பின்பற்றி, எல்லாச் சொற்களுக்கும் ஓரசைவடிவில் அடிச்சொற்கள் கண்டு மகிழ்ந்தனர். இன்று அது பொருந்தாத முறை எனக் கைவிடப்பட்டது.[1] இவ்வாறே மற்றவற்றிலும் வடமொழியைப் பின்பற்றிய கண்மூடி முறைகள் கைவிடப்பட்டன.

உண்மை உணராமை

போதிய சான்றுகளைத் தேடிக் காணுமலே விரைந்து முடிவு காணும் போக்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஓளவு இருந்துவந்திருக்கிறது. முயன்று தேடியவர்க்கு எளிதில் சான்றுகள் கிடைக்காததே இதற்குக் காரணம் என்று கூறலாம் அபெல் ஹாவலெக் என்பவர், முதல் முதல் தமிழுக்கு இலக்கணம் எழுதியவர் ஒரு டச்சுப்

1. Sanskrit, once the oracle of the rising science and trusted blindly, is now put on one side.—Otto Jespersen, Language, p. 91.

பாதிரியார் என்றும், தமிழிலக்கணத்தை அவர் லத்தீன் மொழியில் எழுதினர் என்றும், அது கி. பி. 1716-ல் அச்சிடப்பட்டது என்றும் குறித்திருக்கிறார்.[1] அவருடைய நூலை மொழிபெயர்த்தவர், அதற்கு ஒரு திருத்தக் குறிப்பு எழுதியுள்ளார். அதில், முதல் தமிழிலக்கணம் தொல் காப்பியம் என்று கூறப்படும் என்றும், அது கி. பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய நூல் என்றும், அதுவே தமிழ்நூல்களில் மிகப் பழமையானது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அந்த ஆசிரியர் திராவிட மொழிச் சொற்களைக்கொண்டு திராவிட நாகரிகத்தைச் சீர்தூக்க முனைந்து, கடவுள் உயிர் இலக்கணம் எழுத்து ஆகியவற்றிற்குச் சொற்கள் இல்லாத காரணத்தால், தமிழர் என்பவர் நாகரிக வளர்ச்சி இல்லாத தாழ்ந்த நிலையினர் என்று குறித்திருக்கிறார்.

விட்னே என்னும் மொழியியல் அறிஞர் தமிழுக்குத் தொன்மையான இலக்கியங்கள் உண்டு எனக் கூறி, கி. பி. எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தோன்றியவை எனச் சொல்லக்கூடிய பழைய நூல்களும் தமிழில் உண்டு என்கிறார்.[2]

---

1. The first Tamil grammar is that of the Danish missionary Ziegenbald, written in Latin and printed in 1716; but the first Malayalam grammar had already appeared in India in the year 1780.—Abel Hovelacque, The Science of Language, p. 80.

The Dravidian vocabulary implies rather a low order of civilisation having neither 'god', nor 'soul', nor 'grammar', nor 'writing'.—Ibid. p. 87.

2. Tamil literature is the most important and the oldest, part of it appearing to date back as far as to the eighth or ninth century of our era.—Whitney, Language and the Study of Language, p. 326.

இத்தகைய ஆராய்ச்சியாளர்கள் உண்மை உணராமல் தவறு செய்தனர் என்று கூறுவதைவிட, உண்மை உணர முடியாமல் தவறினர் என்றும், உண்மை உணர்வதற்கு வேண்டிய உறுதுணைகள் அவர்களுக்கு வாய்க்கவில்லை என்றும் கூறலாம்; தமிழ்நாட்டுத் தமிழ் அறிஞர்களின் செல்வாக்கின்மையும் சோர்வும், அறிஞர் சிலருடைய பிற மொழிமோகமும் புறக்கணிப்பும் இத் தவறுகளுக்குக் காரணம் எனலாம்.

உசு. சித்திய மொழியினம்

சித்திய இனம் எது ?

திராவிட மொழிகளைப் பற்றிய ஆராய்ச்சிகளில் கால்டுவெல் அடிக்கடி சித்திய இனம் என்ற மொழியினத்தைக் குறிப்பிடுகிறார். சித்தியா என்பது ஐரோப்பா ஆசியா ஆகிய இரு கண்டங்களின் வடபகுதியைக் குறிக்க ஒரு காலத்தில் வழங்கியது. அப் பகுதியில் நாடோடிகளாய் வாழ்ந்த மக்களைச் சித்தியர் என்றனர். ஆகவே, சித்தியா என்ற சொல் பூகோள வழக்கான ஒரு சொல் எனக் கொள்ளல் தகும் என்றும், மக்களினத்தையோ மொழியினத்தையோ தெளிவாகக் குறிக்க இயலாத சொல் என்றும் பிரெடெரிக் முல்லர் குறித்திருக்கிறார்.[1]

துரானிய மொழியினம் என்று குறியீடு வழங்குவதையும் அறிஞர்கள் இன்று உடன்படுவதில்லை. துரானியம் என்ற பெயரைப் பல இனங்களுக்கும் மொழிகளுக்கும் வழங்குவதற்குப் போதிய அடிப்படை இல்லை என்று பலரும் கருதுகின்றனர்.[2]

ஆசியாவின் வடபகுதியிலும் ஐரோப்பாவின் வடபகுதியிலும் உள்ள அம் மொழிகளைச் சித்திய இனம், துரானிய இனம் என்ற பெயராலேயே அன்றி, தார்த்தார் இனம், பின்னிஷ் இனம், ஆல்தாயிக் இனம், மங்கோலிய இனம் முதலிய வேறு பெயர்களாலும் வழங்குவர். துரானியம், தார்த்தார், பின்னிஷ், ஆல்தாயிக் முதலிய மொழிகள் பலவற்றினிடையே ஒருவகை ஒப்புமை கண்ட அறிஞர்கள் இத்தகைய பெயர்களை வழங்கினர். வேறு தக்க பொதுப் பெயர் இல்லாக் காரணத்தால், சித்திய இனம் என்ற பெயரையே கொண்டு இங்கு ஆராய்தல் நலம்.

---

1. Abel Hovelacque, The Science of Language, p. 139.
2. Ibid. p. 145.

சித்தியர் எனப்படும் சொல், மத்திய ஆசியாவில் நாகரிகம் குறைந்தவர்களாய் வாழ்ந்த மக்களைக் குறித்தபோதிலும், சித்திய இனம் என்று மொழியை ஆராயும்போது, மத்திய ஆசியாவிலும் வட ஆசியாவிலும் வட ஐரோப்பாவிலும் பின்லண்டு முதல் வடக்குச் சீனா வரையில் உள்ள பல மொழிகளின் பொதுத்தன்மையை மட்டுமே கருதல் வேண்டும்.

ராஸ்க் கருத்து

திராவிட மொழிகளாகிய தென்னிந்திய மொழிகள் சித்திய இனத்தோடு உறவு உடையன என்ற கருத்தை முதல் முதலில் வெளியிட்டவர் டென்மார்க் நாட்டு அறிஞர் ராஸ்க் என்பவரே. அவர் சித்திய மொழிகளையும் நன்கு அறிந்தவர் அல்லர்; திராவிட மொழிகளையும் நன்கு அறிந்தவர் அல்லர். ஆயினும் இவ்வாறு ஒரு புதிய கருத்தை வெளியிடக் காரணம் உண்டு. காய்தல் உவத்தல் இல்லாமல் உண்மையைக் காணும் நோக்கம் மட்டுமே கொண்ட அறிஞர் ராஸ்க் இவ்வாறு ஒரு புதிய கருத்தை வெளியிடுவாராயின், அது ஆராயத்தக்கதே ஆகும்.

மொழிகளை ஒப்பிட்டு உறவு காணும்முன், அந்த மொழிகளில் போதிய அறிவு பெறுதல் கடமையாகும். ஆனால் அதற்கு உரிய வாய்ப்பு எல்லோர்க்கும் கிடைப்பதில்லை. ஆயினும், மேற்போக்கான ஆராய்ச்சியால் புலப்படும் சில உண்மைகளை மறைத்தலால் பயனில்லை. அவற்றை வெளியிட்டால், தொடர்ந்து ஆராய்வோர்க்கும் பயன்படும். அறிஞர் ராஸ்க் எடுத்துக் கூறிய கருத்து, கால்டுவெல் முதலான மொழியியலறிஞர்களின் ஆராய்ச்சிக்குத் தூண்டுதலாக நின்றதோடு துணையும் புரிந்தது எனலாம்.

சித்தியர் யார், திராவிடர் யார், இரு சாராரக்கும் உள்ள உறவு எத்தகையது என்பது போன்ற (மக்களின்) ஆராய்ச்சிகொண்டு அறிஞர் ராஸ்க் இம் முடிவு காண வில்லை. மொழிகளில் உள்ள சொற்களின் ஒப்புமைகொண் டும் இத்தகைய முடிவு காணவில்லை. மொழிகளில் எளிதில் மாறுமல் நிலைத்திருக்கும் சொல்லமைப்பு முறையைக் கொண்டே, அவர் ஆராய்ந்து முடிபு கண்டார்.

லத்தீன், கிரீக், ஜெர்மன் முதலான ஐரோப்பிய மொழி களின் சொற்கள் பெரும்பாலும் உட்பிணைப்புநிலையில் விளங்குதலையும், அரபி, ஹீப்ரு, எகிப்து முதலிய மொழி களில் உயிரெழுத்துக்களின் மாறுதலுடன் கூடிய மற்றொரு வகை உட்பிணைப்புநிலை விளங்குதலையும் அவர் கண்டார். சீனம் முதலிய மொழிகளில் தனிநிலை விளங்குதலையும் கண் டார். திராணியம், பின்னிஷ், தார்த்தார் முதலிய சித்திய மொழிகளில் ஒட்டுநிலை இருத்தலையும் அறிந்தார். ஒவ் வொரு மொழியும் இந்த மூவகைநிலைகளுள் ஒன்றை மிகுதி யாகக் கொண்டு அதுவே தன் சிறப்பியல்பாக விளங்கு தலால், மொழிகளைப் பாகுபாடு செய்வதற்கு இம் மூவகை நிலைகளே பயன்படும் என உணர்ந்தார். தென்னிந்திய மொழிகளைப் பற்றி ஆராய்ந்தபோது, அவை ஒட்டுநிலையில் விளங்குதலை அறிந்தவுடன், மற்ற ஒட்டுநிலை மொழிக ளாகிய திராணியம் பின்னிஷ் முதலியவற்றோடு இவற்றிற்கு உறவு இருத்தல்வேண்டும் எனக் கருதினர். இதுபற்றியே தென்னிந்தியமொழிகள் சித்திய இனத்தோடு சேர்த்தற்கு உரியன என்னும் கருத்தை வெளியிட்டார்.

கால்டுவெல் ஆராய்ச்சி

இத்துறையில் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்திய பெருமை அறிஞர் கால்டுவெலுக்கே உரியதாகும். அறி

ஞர்கள் ராஸ்க், கால்டுவெல் ஆகியோர் கொண்ட முடிபுகள் இன்று அவ்வாறே ஏற்றுக்கொள்ளப் படாவிடினும், அவற்றின் அடிப்படையில் உள்ள உண்மை இனி வரும் ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டுவதாகும்.

பின்னிஷ் மொழியைப் பற்றி போலர் (Bollar) என்பவரும், துரானிய மொழியைப் பற்றி ஹன்பல்வி (Hunfalvy) என்பவரும் எழுதிய ஆராய்ச்சிகளைத் துணைக் கொண்டு, கால்டுவெல் அவற்றின் இலக்கண அமைப்பை யும் திராவிட மொழிகளின் இலக்கண அமைப்பையும் ஒப்பிட்டு ஆராய்ந்தார். அவர்க்கு மற்றொரு துணையும் கிடைத்தது. பாரசீகத்தில் உள்ள பெஹிஸ்தன் அட்ட வணைகள் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தன. இவற்றில் டரையஸ் ஹிஸ்டாஸ்பஸ் (Darius Hystaspes) என்பவர் தம் வரலாற்றையே எழுதிவைத்துள்ளார். இந்த அட்ட வணைகளின் மொழி, துரானிய மொழி அல்லது சித்திய மொழியாகும் என்று அறிஞர் முடிவு செய்தனர். கால்டு வெல் அம் மொழியின் இலக்கண அமைப்பைத் திராவிட மொழிகளின் இலக்கண அமைப்போடு ஒப்பிட்டு ஆராயத் தொடங்கினர்.

ஒற்றுமைக் கூறுகள்

ஆராய்ச்சியின் பயனாக, பின்வரும் பகுதிகளில் இரு வகை மொழிகளும் ஒத்திருக்கின்றன எனக் குறிப்பிட் டுள்ளார் :—

1. ஆரிய மொழிகளில் ட ண என்ற பின்அண்ண ஒலிகள் இல்லை. ஆயின், இவை சித்திய மொழிகளிலும் உள்ளன; திராவிட மொழிகளிலும் உள்ளன.

2. வல்லின மெய்கள் மொழி முதலிலும் இரட்டிக்கு மிடத்திலும் வல்லொலியையும், மற்ற இடங்களில் மெல்

லொலியையும் பெறுதல் திராவிட மொழிகளின் இயற்கை. இது சித்திய மொழிகளிலும் உள்ளது.

3. மேற்கண்ட அட்டவணைகளில் னி, னின, இன்ன என்பவை ஆறனுருபாக உள்ளன. திராவிட மொழிகளில் ஆறும் வேற்றுமையை னி, ன, அ, இன் என்பவை உணர்த்துகின்றன.

4. இக்கி அல்லது இக்க என்பது அட்டவணைகளில் நான்கனுருபாக உள்ளது. திராவிட மொழிகளில் கு, கி, க என்பவை நான்கனுருபுகள்.

5. அட்டவணைகளில் இரண்டாம் வேற்றுமையுருபு உன், இன், ன் என்பவை. தெலுங்கில் இரண்டனுருபு னு,னி; கன்னடத்தில் அம், அன்னு.

6. ஒன்று என்னும் பொருளில் அட்டவணைகளில் வரும் சொல் கிர்; திராவிட மொழிகளில் ஓர், ஒரு. கோந்த் மொழியில் ர, இர்ர.

அட்டவணைகளில் எண்ணுப் பெயர்கள் பெயரடையாகும்போது வரும் இடைச்சொல் 'இம்'; தமிழில், 'ஆம்' என்பது.

7. முன்னிலைப் பெயர் 'நீ' இருவகை மொழிகளுக்கும் பொதுவாக உள்ளது.

8. பெயரெச்சம் திராவிட மொழிகளில் உள்ளது போலவே, அட்டவணைகளிலும் உள்ளது.

9. எதிர்மறை ஏவல் விகுதியாக அட்டவணைகளில் உள்ளது இன்னி. திராவிடத் திருந்தா மொழியாகிய கோந்த் மொழியில் 'மின்னி' என்பது உள்ளது.

(1) சித்திய மொழிகளில் திராவிட மொழிகளைப் போலவே கற்பனை அற்ற பால்பாகுபாடு உள்ளது.

(2) திராவிட மொழிகளைப் போலவே சித்திய மொழிகளிலும் வேற்றுமை யுருபுகள் ஒருமை பன்மை வேறுபாடு அற்றனவாக உள்ளன. (3) பெயரடைகள் பால் எண் வேறுபாடு இல்லாமல் பொதுவாக வழங்குதல் இருவகை மொழிகளிலும் உள்ளது. (4) உடன்பாட்டிற்கும் எதிர் மறைக்கும் வெவ்வேறு வினைவடிவங்கள் இருவகை மொழிகளிலும் உள்ளன. (5) இந்த இருவகை மொழிகளிலும் இணைப்பு இடப்பெயர்கள் (relative pronouns) இல்லாமல், பெயரெச்சங்களும் வினையாலணையும்பெயர்களும் உள்ளன. (6) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை தமிழில் உள்ளது போலவே சித்திய மொழிகளிலும் உள்ளது. (7) தமிழிற் போலவே வினையெச்சங்கள் அம் மொழிகளில் உண்டு. (8) தழுவுதொடர் முன்னும் தழுவப்படும் தொடர் பின்னும் நிற்றல் இருவகைமொழிகளிலும் உள்ளது. இவை போன்ற ஒற்றுமைக் கூறுகளைக் கால்டுவெல் தம் ஒப்பிலக்கணத்தின் இடையிடையே எடுத்துக்காட்டியுள்ளார்.

சித்திய மொழிகள் என்று கூறப்படும் பின்னிஷ், உக்ரியம், துராணியம் முதலிய மொழிகள் தம்முள் எவ்வளவோ வேற்றுமை உடையனவாக உள்ளன. ஆதலின் அவற்றை ஓரினம் என்று கொள்வதற்கும் தயங்க நேர்கின்றது என அறிஞர் சிலர் கருதுகின்றனர்.[1] இந்தச் சிக்கலையும் கால்டுவெல் அறிந்துள்ளார். இவ்வளவு வேறு

1. If we examine closely the various languages that are supposed to be Scythian, there are very many diversities among them, diversities of a pronounced character, such as the numerals of every Scythian family, that it is difficult for us to speak of a Scythian family as we can speak of the Indo-European family. At the most we can treat with the various Scythian tongues as a group of families and not one family as such. —V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 192.

பாடுகளை உடைய இந்த மொழிகளைச் சித்திய இனம் என்று கூறுவதைவிட, ஒவ்வொரு மொழியும் ஓரினம் என்றும், இத்தகைய பல இனங்களைக் கொண்டது சித்தியப் பேரினம் என்றும் கருதலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். சித்திய மொழிகள் இலக்கிய வளம் அற்ற கிருந்தா மொழிகள் ஆகையால் அவற்றிடையே காலப்போக்கில் பல மாறுதல் ஏற்பட்டு வேறுபாடுகள் மிகுந்துள்ளன என்கிறார். ஒற்றுமைப் பகுதிகள் சில உள்ளன என்றும், அவற்றைக் கொண்டே திராவிட மொழிகளை ஒப்பிட வேண்டும் என்றும் அவர் கருதுகிறார். இத்தகைய ஆராய்ச்சிக்குப் பெஹிஸ்தன் அட்டவணைகளின் மொழி பெரிதும் பயன்படுகிறது என்பதும் அவருடைய கருத்தாகும்.

வரலாற்றுக் கருத்து

எந்த இருவகை மொழிகளையும் ஆராய்ந்து அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளைக் காண்பதில் ஒரு தீமையும் இல்லை; ஒருகால் சில உண்மைகள் அவற்றால் விளங்க, அவை ஒரு சில நன்மை பயத்தலும் கூடும். ஆனால் இருவகை மொழிகளுக்குள் சில வகையில் ஒற்றுமை கண்ட அளவிலேயே, இம்மொழி அம்மொழியிலிருந்து பிறந்தது என்று முடிவு செய்தல் பொருந்தாது. இம்மொழி பேசும் மக்கள் அம்மொழி பேசும் மக்களோடு ஓரினத்தவர் என்றோ, அவர்கள் இவர்களிடமிருந்து பிரிந்த கூட்டத்தினர் என்றோ முடிபு செய்தல், சிறிதும் பொருந்தாது. சித்திய மொழியினத்தோடு திராவிட மொழியினத்திற்கு உள்ள ஒற்றுமைகளைக் கண்ட கால்டுவெல், அவ்வளவில் விடாமல், திராவிடர்கள் ஆரியர்களோடு நடு ஆசியாவில் இருந்து பிறகு இந்தியாவிற்கு வந்தவர்கள் என்றும், வரும் வழியில் தூரானியருடன் ஒன்றாக இருந்து பிறகு பிரிந்து

வந்தவர்கள் என்றும் சில வரலாற்றுக் கருத்துக்களை வெளியிடுகிறார். இவை உண்மை எனக் கொள்வதற்கு இடம் இல்லை.

திராவிடர்கள் ஆரியர்களோடு ஒரினமாக இருந்தவர் கள் என்பதற்குக் கால்டுவெல், திராவிட மொழிகளுக்கும் ஆரிய மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைக் கூறுகளைச் சான்று காட்டுகிறார். நடு ஆசியாவிலிருந்தபோது இவ் வாறு ஒன்றுபட்டிருந்து, பிறகு பிரிந்து துரானிய உக்ரிய மக்களோடு ஒன்றாக இருந்தனர் என்பதற்குச் சித்திய மொழியுடன் காணப்படும் ஒற்றுமைக் கூறுகளைச் சான்று காட்டுகிறார். ஆரிய உறவு மிகப் பழையது ஆகையால், ஒற்றுமைக் கூறுகள் சிலவாக உள்ளன என்றும், சித்திய உறவு அதற்கு அடுத்து நெடுங்காலம் நிலவியது ஆகையால் அவ்வகையான ஒற்றுமைக் கூறுகள் பலவாக உள்ளன என்றும் கூறுகிறார். ஆயின், இவற்றைக் கொண்டு திரா விடர் ஆரியரில் ஒரு கிளையாக இருந்து பிரிந்து, பிறகு துரானியரிடமிருந்து பிரிந்தவர் என்று கூறல் இயலாது.

உண்மை எது?

இதே சான்றுகளை வைத்துக்கொண்டு நேர்மாறாகக் கூறுவதற்கும் இடம் உண்டு. ஸ்லேட்டர் (Sclater) கொள் கைப்படி, கடல் கொண்ட லெமூரியா அல்லது குமரி நாட்டில் மக்கள் முதலில் தோன்றினர் என்றும், கடல் கோள் நேர்ந்தபோது ஒரு பிரிவினர் குமரிமலையின் வட புறத்தே (இன்றைய தென்னிந்தியாவில்) தங்க, மற்றொரு பிரிவினர் மத்தியதரைக் கடற்பகுதியைச் சார்ந்து ஐரோப் பாவில் பல இடங்களில் குடியேறி ஆரியர் ஆயினர் என் றும், இன்னொரு பிரிவினர் ஆசியாவில் பல இடங்களில் குடியேறித் துரானியர் அல்லது மங்கோலியர் அல்லது

சித்தியர் எனப்பட்டனர் என்றும் கூற இடம் உள்ளது.[1] அவ்வாறு கொண்டால், திராவிட மொழிகளுக்கும் ஆரிய மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைக் கூறுகளின் காரணமும் விளங்குகிறது; திராவிட மொழிகளுக்கும் சித்திய மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைக்கு உரிய காரணமும் விளங்குகிறது.[2] கால்வின் கெபார்ட் என்பவரின் கருத்தும் இதற்கு அரண் செய்கிறது.[3] ஆரிய மொழியின் பல கிளைகளும், தரானிய மொழிகளின் கிளைகளும் ஒரு மொழியிலிருந்தே தோற்றம் கொண்டன என்றும், அந்த அடிப்படைமொழி வங்காளக் குடாக்கடலின் கரையருகே

---

1. From the large number of Dravidian words and expressions in the main Scythian and also from the Scythian language in the Behistun tablets, one has to conclude in conformity with the original theory that the Dravidians moved in the westerly direction not only by sea but also by land in days of unrecorded history. They left their impression here and there, in the countries which they passed through and this largely explains why such languages which were at that time uncultivated or undeveloped, adopted some peculiar features of the Tamil language which had appealed to them most.

—V. R. R. Dikshitar, Pre-Historic South India, pp. 194-195.

2. The points of resemblance between the Dravidian languages and the language of the tablets should therefore be due to the Tamil influence on the Scythian language and not vice versa.....From this one has to draw the inference that the Dravidian usage had already become familiar to the Scythian speaking peoples, and the peculiarities noted were made use of in the Scythian language.

—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 194.

3. The progenitors of the Aryan race were the primitive ancestors of the present Dravidian peoples of the Dekhan through their Indonesian branch.—Calvin Kephart, Sanskrit Language Its Origin Composition and Diffusion, p. 82.

தோன்றியிருக்கவேண்டும், அல்லது, இப்போது தென்னிந்தியாவில் உள்ள திராவிட மக்களின் முன்னோர் பேசிய ஒரு கிளைமொழியிலிருந்து தோன்றியிருக்கவேண்டும் என்றும் அவர் கருதுகிறார். இன்று திராவிட மொழியில் பல கிளை மொழிகள் இருத்தலைப் போலவே அன்றும் இருந்திருக்க வேண்டும் என்றும், ஆரிய மொழியும் தூரானிய மொழிகளும் பழந் திராவிட மொழியின் வெவ்வேறு கிளைமொழிகளிலிருந்து வளர்ந்தன என்றும் கூறுகிறார்.[1]

திராவிடர் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வரவில்லை என்றும், அவர்கள் இந்நாட்டின் பழம் பெருங் குடி மக்கள் என்றும் கிரியர்ஸன் வலியுறுத்துகிறார்.[2]

மக்கள் வரலாறு

மக்கள் முதல் முதலில் எங்கே தோன்றினர்கள், பிறகு எங்கெங்குச் சென்று தங்கினர்கள் என்ற ஆராய்ச்சி

1. It may be said with reasonable certainty, that the basic language from which all the branches of the Aryan language as well as those of the Indafrica and Turanian languages were derived had its origin in a region adjacent to the shores of the Bay of Bengal, if not on the mainland of India, and probably from a primitive dialect of the people whose descendants comprise the present Dravidian population of the Dekhan. However, those languages may have emanated from different branches of the original common dialect, as reflected by the different dialects of the Dravidians today. —Calvin Kephart, Sanskrit Language Its Origin Composition and Diffusion, p. 80.

2. Grierson, Linguistic Survey of India, Vol. IV.

The real fact seems to be that the so - called Dravidians who are supposed to be migrants into peninsular India from different parts of the world and hence alien to the soil, could not be foreigners to the land but indigenous and autochthon of South India.

—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 140.

பல அறிஞர்களின் முயற்சியை வீணுக்கியுள்ளது. ஒவ் வொருவரும் தம்தம் மனப்போக்கிற்கு ஏற்ப முடிபுகள் கொள்ளவும், கொள்ளும் முடிபுகளுக்கு ஏற்ற காரணங் களைத் தேடிக் காணவும் இத் துறை இடம் தருகிறது. ஆராய்ச்சிக்கு எட்டாத ஒன்றை எட்டிப் பிடித்துவிட்டாற் போன்ற மயக்கத்தையும் இது ஊட்டுகிறது. தென்னிந்திய மக்களின் வரலாற்றில் மயக்கம் மட்டும் அல்லாமல் சிக்கலும் மிகுதியாக உள்ளது. என்ன முயன்றாலும் சிக்கல் தீர்தல் அரிதாக உள்ளது என்கின்றனர் அறிஞர்.[1]

வால்கா நதிக்கரையில் பிறந்த ஒரு குழந்தைக்கும் காவிரிக் கரையில் பிறந்த ஒரு குழந்தைக்கும் உள்ள ஒற் றுமை வேற்றுமைகளை ஆராய்வதில் தீங்கு ஒன்றும் இல்லை. அறிவுக்கு இன்பமான பொழுதுபோக்கு எனக் கொண்டு அத்தகைய ஆராய்ச்சி செய்யலாம். ஆனால் அந்த ஆராய்ச்சி யின் முடிவாகக் காணப்படும் சில ஒற்றுமைகளைக்கொண்டு, இந்தக் குழந்தையும் அந்தக் குழந்தையும் ஒரே தாய்க்குப் பிறந்தவை என்றோ, ஒரே தந்தைக்குப் பிறந்தவை என்றோ விரைந்து முடிபு செய்தல் தீங்காகும். ஒருவர் இத் தீமை யைச் செய்யின், மற்றொருவர், தேம்ஸ் நதிக்கரையில் உள்ள இன்னொரு குழந்தையைத் தேடி அதற்கும் இதற்கும்

1. The racial history of Southern India or for the matter that of any country in the East or West is an extremely complicated subject and deserve a very careful scrutiny. Any amount of construction or reconstruction or even shifting by anthropologists, ethnologists, or historians is bound to be tentative in character. Centuries have rolled by, milleniums have flown and the mist of the ages has covered all the tracks over which early man began to move from one part of the country to another or from one part of the globe to another.

—V. R. R. Diksitar, Pre-Historic South India, p. 131.

உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்து, வேறு சில பொருந்தா முடிபுகள் செய்வார். இன்னொருவர் இன்னொரு வகை முடிபுகள் செய்ய, இவ்வாறே எல்லையில்லா வகையில் கருத்துக்கள் வளர, அவற்றால் மக்களிடையே வேறுபாடுகள் பெருக, வேண்டாத பூசலுக்கும் பிணக்குக்கும் வித்திடலாகிறது.

ஒற்றுமை சில

அறிஞர் போப் தம் நூல் ஒன்றில் திராவிட மொழிகள் ஆரிய மொழிகளோடு நெருங்கிய உறவு உடையன எனக் கூறி, அதற்கு ஏற்ற காரணங்களைக் காட்ட முயன்றுள்ளார்.[1]

உறவே இல்லாதவை எனக் கருதப்படும் சீன மொழி ஆரியமொழி இரண்டையும் ஒப்பிட்டு, அவற்றிடைதோ உறவு காட்டியுள்ளார் அறிஞர் குஸ்தர் ஷ்லேகெல் என்பவர்.[2] ஆயின், அவர் செய்த ஆராய்ச்சி இலக்கண அமைப்பு முதலியவற்றைக் கருதாமல், சில அடிச்சொற்கள் முதலியவற்றை மட்டுமே கருதிச் செய்ததாகும்.

இத்தகைய ஆராய்ச்சிகளுக்கு வரம்பே இல்லை. இவ்வாறு ஆராய்வதாயின், உலகில் உள்ள எந்த இரண்டு மொழிகளுக்கிடையிலும் ஒற்றுமைப் பகுதிகள் சிலவற்றைக் காட்டமுடியும். ஒன்றுபட்ட எந்த இருமொழிகளுக்கு இடையிலும் வேறுபாட்டை எடுத்துக் காட்ட முடியும்.

ஆகவே, மொழியாராய்ச்சியாளர் நடுநிலையில் நின்று ஆராய்ச்சிக்கு எட்டிய சில உண்மைகளை மட்டுமே குறித்து, எட்டாத கற்பனைகளைக் கூறாமல் விடுத்தல் நலம்.

---

1. U. Pope, Tamil Hand Book.
2. Dr. Gustar Schlegel, Sinico-Aryaca.

இருவகை மொழிகளுக்குள் ஒற்றுமை காணப்படின், அந்த ஒற்றுமை இயற்கையாக அமைந்த ஒற்றுமையாக இருத்தல்கூடும் எனக் கொள்ளலாம். போதிய சான்றுகள் இருந்தால், அவற்றால் விளங்கக்கூடிய மக்கள்வரலாற்றுப் பகுதியை எடுத்துச் சுட்டலாம். போதிய வரலாற்றுச் சான்றுகள் இல்லாதபோது, படைப்பில் மனிதர் அனைவரும் ஒரே வகையானவர் என்னும் பொதுவான பேருண்மையை இந்த ஒற்றுமைப் பகுதிகள் காட்டுகின்றன என்று கூறி அமைதல் நல்லது.

உரு. ஆரிய மொழியினம்

இந்திய நாட்டின் வரலாற்றை எழுதியவர்கள் பலர். அவர்களிடையே நிலவும் கருத்து வேறுபாடுகளும் பல. ஆயின், அவர்கள் அனைவரும் கருத்து ஒருமித்துக் குறிப்பிடுவது ஒன்று உண்டு எனின், அது இதுவாகும்: ஆரியர் நடு ஆசியாவிலிருந்து இந்தியாவிற்குள் புகுந்தனர்; அப்போது இந்தியாவில் வாழ்ந்திருந்த திராவிடருடன் கலந்தனர். இந்த ஒரு செய்தியை மட்டுமே வரலாற்று ஆசிரியர்கள் அனைவரும் ஒரே வகையாய்க் கூறியுள்ளனர். ஆயின், வந்த ஆரியரையும் இருந்த திராவிடரையும் ஒப்பிட்டுச் சீர் தூக்கி உயர்ந்தவர் யார் தாழ்ந்தவர் யார் என்பதில் கருத்து வேறுபாடு பெருகப் பலவாறு எழுதியுள்ளனர். திராவிடருடன் போர் நிகழ்த்தி வெற்றி பெற்றுக் கலந்தனரா, அல்லது, அன்பு முறையில் அமைதியாக வாழத் தொடங்கிக் கலந்தனரா என்பதிலும் கருத்து வேறுபாடு உள்ளது. வந்த ஆரியர்கள் அப்போது அறிந்திருந்த நாகரிகம் எத்தன்மையானது, இருந்த திராவிடரிடமிருந்து கற்றவை யாவை என்று விளக்குவதிலும் வேறுபாடுகள் பல உள்ளன.

தம்மை உயர்வாகக் கருதிக்கொண்டு பிறரைத் தாழ்த்தும் மனப் பான்மை எல்லாரிடமும் உள்ளது. எனினும் ஆரியர்க்கு அது மிகுதி எனலாம் அவர்கள் சென்று தங்கிய இடங்களில் எல்லாம், அங்குள்ளவர்களோடு கலந்து பழகி அவர்களின் நாகரிகப் பழகக வழக்கங்களையும் கலைகள் முதலியவைகளையும் தம்முடையனவாக ஆக்கிக் கொண்டு, பிறகு உயர்வெல்லாம் தமக்கே என்றும், அங்கு வாழ்வோர் அனைவரும் காட்டுமிராண்டிகள் என்றும் தூற்

றும் இயல்பினராக விளங்கினர். சென்ற நூற்றாண்டில் வரலாறு எழுதத் தொடங்கியவரும், அது உண்மை எனக் கருதி மயங்கி அவ்வாறே நூல்களும் எழுதிவிட்டனர். நடுநிலை பிறழ்ந்து வரலாற்று ஆசிரியர்கள் மயங்கிச் செய்த அத் தவறுகள், பலவகைப் பூசல்களுக்கும் பிளவுகளுக்கும் பிணக்குகளுக்கும் போர்களுக்கும் காரணமாய் நின்றன. உலகைப் போரால் கலக்கிய ஹிட்லரின் உள்ளத்தே இந்த மயக்கத்தால் ஏற்பட்ட வெறி நிறைந்திருந்தது. இன்றும் பல நாடுகளின் உட் குழப்பங்களுக்கு இது காரணமாக உள்ளது.

ஐரோப்பியர்கள் எழுதிய வரலாறுகளில் குழப்பத்திற்கும் பூசலுக்கும் வித்துக்கள் பல இருத்தலை உணர்ந்த கவிஞர் ரவீந்திரநாத தாகூர், வந்த ஆரியரைவிட இருந்த திராவிடர் எவ்வகையிலும் தாழ்ந்தவர் அல்லர் என்றும், திராவிட நாகரிகத்துடன் கலப்புற்ற காரணத்தாலேயே இன்றுள்ள இந்து நாகரிகம் என்பது வளம் மிகுந்ததாக உள்ளது என்றும், மெய்யுணர்வுத் துறையில் சிறந்து விளங்காவிட்டாலும் திராவிடர்கள் இசைக்கலை கட்டிடக் கலை முதலிய பலவகைக் கலைகளில் வல்லவர்களாக விளங்கினர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.[1]

1. Let no one imagine that the non-Aryan contributions... had no value of their own. As a matter of fact, the old Dravidian culture was by no means to be despised, and the result of its combination with the Aryan, which formed the Hindu civilization, acquired both richness and depth under the influence of its Dravidian component. Dravidians might not be introspective or metaphysical, but they were artists, and they could sing, design and construct. The transcendental thought of the Aryan, by its marriage with the emotional and creative art of the Dravidian gave birth to an offspring, which was neither full Aryan nor Dravidian, but Hindu.—Rabindranath Tagore, Vision of India, Viswa-Bharathi, No. 1.

ஆரிய, திராவிட நாகரிகம்

இந்த உண்மையை விளக்க வேறு பல சான்றுகள் தேவையில்லை. இன்று ஆரிய நாகரிகம் என்று போற்றப் படுகின்றவை உண்மையாகவே ஆரியருக்கு உரியவை எனின், இந்தியாவுக்கு வந்த ஆரியர் அவற்றை அறிந்திருந் ததுபோலவே, ஐரோப்பாவில் வாழ்ந்த ஆரியரும் அவற்றை அறிந்திருக்க வேண்டும். கிரேக்கரும் ரோமரும் மற்ற ஐரோப்பியரும் பழங் காலத்துப் பாரசீகரும் அவற்றை அறிந்திருக்க வேண்டும். எந்த எந்தப் பகுதிகள் ஐரோப் பிய ஆரியர் அறியாமல் இந்திய ஆரியர் மட்டும் அறிந்திருந் தனவாகக் கூறப்படுகின்றனவோ, அந்த அந்தப் பகுதிகள் ஆரியருக்கு மட்டும் உரியவை அல்ல என்றும், இந்திய நாட்டுத் திராவிடருக்கும் உரியவை என்றும் கூறத்தகும்.[1] அவ்வாறு ஆராய்ந்தால் இன்று ஆரிய நாகரிகக் கூறுக ளாகப் போற்றப்படும் இந்திய மருத்துவக் கலை, போர்க் கலை, ஆடை, அணிகலன், உணவு, திருமணம், இல்வாழ்க்கை முறை முதலியவை ரோமரும், கிரேக்கரும், பாரசீகரும் மற்ற ஆரியரும் அறியாதவை ஆகையால், அவை திராவிட

1. It has however been overlooked that it is not sufficient to show that a word is found in Sanskrit, or even in the Vedic dialects, in order to prove that it belonged to the original language of the Aryans. The foreign element must reach back into the oldest times, and it would be necessary to trace the dubious words not only in Sanskrit, but also in other languages of the Indo-European family. That is exactly what modern philology has, in many cases, failed to do. There are, e.g., a number of verbal roots in Sanskrit which do not appear to occur in other Indo-European forms of speech. The same is the case with a considerable portion of vocabulary. There is, however, every probability for the supposition that at least a considerable portion of such words and bases has been borrowed from the Dravidian—Grierson, Linguistic Survey of India, Vol. IV, pp. 278—279.

ருக்கே உரியவை என்று கொள்ள நேர்கிறது. இவ்வாறே மொழித் துறையிலும், சில ஒலிகளும் சொல்லமைப்பு முறைகளும், இலக்கணக் கூறுகளும் இலக்கியத் துறைகளும் ஆரியர் திராவிடரிடமிருந்து கற்றவைகளே தவிர, ஆரியருக்கே உரியவை அல்ல. ஆரியரின் உரிமை என்று கருதப்பட்டு வரும் சமயத் துறையிலும் சார்லஸ் எலியட் என்பவர் இத்தகைய கருத்தைக் கொள்கிறார். இந்திய நாட்டுச் சமயம் என இன்று கருதப்படுவது ஆரியச் சமயம் என்பதைவிடத் திராவிடச் சமயம் என்று கூறுவதே மிகப் பொருந்தும் என்றும், ஒருபுறம் கோணமல் சிறிது நடுநிலை நின்று காணின் இந்த உண்மை விளங்கும் என்றும் அவர் கூறுகிறார். பாரசீகத்திலோ, கிரேக்க நாட்டிலோ, வேறு ஆரிய நாடுகளிலோ இத்தகைய சமயநெறி இல்லாதிருத்தலை அவர் சான்றாக எடுத்துக்காட்டுகிறார்.[1] அறிஞர் எஸ். கே. சட்டர்ஜியும், டாக்டர் ராதாகிருஷ்ணனும்[2] இக் கருத்தை எடுத்துரைக்கின்றனர்.

---

1. But were our knowledge less one-sided we might see that it would be more correct to describe the Indian religion as Dravidian religion stimulated and modified by the ideas of foreign invaders... ..The chief characteristics of the mature Indian religion are not the characteristics of religion in Persia, Greece, or other Aryan lands.—Charles Elliot, Hinduism and Buddhism An Historical Sketch, Book I, p. XV.

2. The ideas of karma and transmigration, the practice of yoga, the religious and philosophical ideas centering round the conception of the divinity as Siva and Devi and as Vishnu, the Hindu ritual of puja as opposed to the Vedic ritual of homa,—all these and much more in Hindu religion and thought would appear to be non-Aryan in origin; a great deal of Puranic and Epic myth, legend and semi-history is pre-Aryan; much of

இவ்வாறு ஆராயின், இன்று வடமொழியில் உள்ள பலவகை நூல்களேயும் கொண்டு அவை அனைத்தும் ஆரிய நாகரிகத்தின் பெருமையைக் காட்டுவனவாகக் கொள்ளல் இயலாது. அதற்கு மாறாக, அக் காலத்தில் வந்த மக்கள் இருந்த மக்களின் நாகரிக வாழ்வில் கண்டவற்றை எல்லாம் கண்ணும் கருத்துமாகப் போற்றிப் பற்பல நூல்களாக எழுதிவைத்த முயற்சிச் சிறப்பையே போற்ற வேண்டும். இவ்வாறு எழுத்துவடிவில் பல நூல்களேப் பெற்று வட மொழி சிறப்பெய்திய பிறகு, இருந்த திராவிட மக்களில் அறிஞராயினேரும் அவர்களே அம் மொழியிலேயே எழுதி வைத்துப் போற்றினர். எனவே, வந்த மக்களின் விடா முயற்சியையும் இருந்த மக்களின் கவலேயற்ற பெருந் தன்மையையும் போற்றுதல் வேண்டுமே அன்றி, வட

---

our material culture and social and other usages—eg., the cultivation of some of our most important plants like rice, and some vegetables and fruits like the tamarind and the cocoanut, etc., the use of the betel-leaf in Hindu life and Hindu ritual, most of our popular religion, most of our folk crafts, our nautical crafts, our distinctive Hindu dress, (the dhoti and the sari), our marriage ritual in some parts of India with the use of the vermilion and turmeric—and many other things could appear to be a legacy from our pre-Aryan ancestors.—S. K. Chatterji, Indo-Aryan and Hindi, pp. 31-32.

The Vedic religion absorbed, embodied and preserved the types and rituals of other cults. Instead of destroying them, it adapted them to its own requirements. It took so much from the social life of the Dravidians and other native inhabitants of India that it is very difficult to disentangle the original Aryan elements from the others.—Dr. S. Radhakrishnan, Eastern Religions and Western Thought, p. 308.

மொழியில் உள்ள நூற்பெருக்கைக் கண்டு ஆரிய நாகரிகத்தின் பெருமையை அளத்தல் ஆகாது.

மொழிக் கலப்பு

வேறுபட்ட கொள்கைகள் உடைய இருவர் சேர்ந்து பழக வேண்டுமானால், ஒருவர் மற்றொருவர்க்கு அடிமை ஆகவேண்டும்; அல்லது இருவரும் ஒத்துப் பழகித் தம் தம் கொள்கைகளில் ஓரளவு விட்டுத்தர வேண்டும். வேறு பட்ட பழக்க வழக்கங்கள் உடைய இருவர் சேர்ந்து வாழ்வதானாலும், ஒருவர் தம் பழக்க வழக்கங்களை அடியோடு மறந்து மற்றவரைப் பின்பற்ற வேண்டும்; அல்லது, இருவரும் சிறிது சிறிது மாறுதல் செய்துகொண்டு பழக்க வழக்கங்களைப் பொதுவாக்கிக்கொள்ள வேண்டும்.

வேறுபட்ட மொழிகளைப் பேசும் இரண்டு கூட்டத்தார் நெருங்கிப் பழக நேர்ந்தாலும் இவ்வாறே ஆகும். ஒரு கூட்டத்தார் தம் மொழியை மறந்து மற்றவரின் மொழியைக் கற்றுத் தாய்மொழிபோல் போற்றவேண்டும். அல்லது, இருமொழியாரும் வேறுபாடு மிக்க மொழிக் கூறுகளை விட்டு, பொதுவானவற்றை மட்டும் சேர்த்து ஒரு புது மொழி அமைத்துக்கொள்ள வேண்டும்.

அறிவால் உயர்ந்த இனத்தார், மற்றவர்களின் மொழியை எளிதில் கற்றுக்கொள்ளும் ஆற்றல் பெற்றிருத்தலால் தம் மொழியை மறந்து பிறமொழியைக் கற்று வாழ வைத்தலும் உண்டு.[1]

1. It sometimes happens in a district of mixed nationalities that the population which is intellectually superior give up their own language because they can learn their neighbours' tongue.—Otto Jespersen, Growth and Structure of the English Language, p. 247.

இந்தியாவிற்குள் புகுந்து அறிவாற்றல் மிக்க திராவிடருடன் கலந்த ஆரியர் மிக மிகச் சிலரே. ஒரு சிறு கூட்டத்தாராகவே வந்து செல்வாக்கின் காரணமாகத் தம் மொழியைப் பெரும்பாலோராகிய நாட்டுமக்களிடையே பரப்பி வெற்றி பெற்றனர்.[1] நாட்டாட்சியிலும் சமுதாயத் தலைமையிலும் இடம் பெற்றுள், ஒரு சிலரே ஆயினும் நாடு முழுதிலும் மக்கள் எல்லோரிடையிலும் தம் செறியையும் மொழியையும் எளிதில் பரப்ப முடியும். ஆங்கிலேயர் தம் மொழியையும் நாகரிகத்தையும் இந் நாட்டில் பரப்பியது இதற்கு எடுத்துக்காட்டாகும்.[2] ஆசிரியர் அவ்வாறு பரப்பிய பிறகும், இலக்கியத்தின் அளவில் அம் மொழி

---

1. Indo-Aryan speech must have been brought into India by a relatively small group of invaders and imposed in a long progression of dominance, by a ruling caste.—Bloomfield, Language, p. 469.

2. Since these settlers, who came only in smaller numbers, could not think of imposing their language and culture on a large population speaking their own tongue, and having a culture of their own, they thought it best to meet these people more agreeably...As they were faced with a foreign language, which they had to master before they could interpret anything of their religion and culture to the people of the country, the first thing they had to do was, to analyse the language and frame rules of grammar according to the grammatical principles of their own language the Sanskrit, just like the early Christian missionaries, who adopted the same plan of preparing grammars of vernacular languages in English and also of simple readers in vernaculars, for the use of their own countrymen who came in their wake and worked here as the propagators of Christian religion among the masses.—K. Ramakrishnaiah, Studies in Dravidian Philology, p. 16.

தனியே நின்றதே தவிர, மக்களின் பேச்சில் முழு வெற்றி பெறவில்லை. அதுவரையில் அம் மக்கள் அறிந்திருந்த திராவிட மொழியை அடியோடு மறந்துவிட முடியாமல், தாம் கற்ற புதுச் சொற்களையும் சேர்த்துக் கலப்பு மொழியாகப் பேசத் தொடங்கினர். அதனால்தான், மக்களின் மொழியாக வளர்ந்த பிராகிருத மொழிகளில் வடமொழிக் கூறு தவிர, திராவிடக் கூறுகளும் இருந்தன. அவற்றின் வழியே வளர்ந்து இன்று வழங்கும் வட இந்திய மொழிகளில் திராவிடக் கூறுகள் இருப்பதற்குக் காரணமும் அதுவே ஆகும்.

பெயர்ப் பொருத்தம்

இவைகளை இந்தோஐரோப்பிய மொழிகள் என்று ஐரோப்பிய அறிஞர்கள் பெயரிட்டு வழங்கினர். ஆயின் இப் பெயர் அவ்வளவாகப் பொருந்துவது அன்று. வேறு தக்க பெயர் அமையாக் காரணத்தாலேயே இது வழங்குவதாயிற்று.[1]

இந்த மொழியினத்துக்கு இந்தோஜெர்மானிய மொழியினம் என்ற பெயரும் ஆரிய மொழியினம் என்ற பெயரும் உண்டு. ஆரிய மொழியினம் என்பதே பொருந்தும் என்கிறார் யெஸ்பர்ஸன்.[2] அவ்வாறு பெயரிட்டு வழங்குவதால், அவற்றிற்கும் கிரீக், லத்தீன், ஜெர்மன், பிரெஞ்சு, பாரசீகம் முதலிய தூய ஆரிய மொழிகளுக்கும் வேறுபாடு விளங்காமற் போவதால், இந்தியாவில் வந்து திராவிடக் கலப்புடன் விளங்கும் இம் மொழிகளை ஆரியத் திராவிட மொழிகள் என்று குறிப்பிடல் பொருந்தும்.

---

1. The name Indo-European has been given to these languages for want of a better term.—J. Vendryes, Language, p. 301.

2. Otto Jespersen, Growth and Structure of the English Language, p. 20.

திராவிட மொழிகளின் செல்வாக்கு

இந்தியாவிற்கு வெளியே இருந்து வந்த ஆரியரும் இந்தியாவில் வாழ்ந்துவந்த திராவிடரும் முதல் முதலில் சிந்து கங்கைக் கரையில் கலந்து வாழத் தொடங்கிய போது நேர்ந்தது, இத்தகைய கலப்புத்தான். ஆரியர் களின் சொற்களும் திராவிடர்களின் சொற்களும் இலக் கணமும் சேர்ந்து புதுமொழி ஏற்பட, கலந்த மக்கள் அதையே தம் பொதுமொழியாகக் கொண்டனர். பிரா கிருதம், பாலி முதலிய மொழிகள் அவ்வாறு அமைந்த கலப்பு மொழிகளே ஆகும். அவற்றிலிருந்து திரிந்து திரிந்து இன்று வெவ்வேறாய் வழங்கும் இந்தி, வங்காளி முதலிய மொழிகளில் திராவிடக் கூறுகள் இருப்பதற்குக் காரணம் இதுவே ஆகும். வடமொழி, இன்றுள்ள நிலைக்கு மாறி அமைந்ததற்கும் இதுவே காரணம் என்பர் அறிஞர் திரு. ராமச்சந்திர தீட்சிதர்.[1]

ஆரியர்கள் இந்தியாவிற்குள் புகுந்தபோது, திராவிட மொழிகளின் செல்வாக்கால் அவர்களின் மொழியில் மாறுதல் ஏற்பட்டன என்னும் கொள்கை, மொழிநூலார் பலர் உடன்பட்ட கொள்கையாகும்.[2] ஆரிய மொழிகளில்

1. Not only Tamil or any South Indian language is not derived from Sanskrit, but if we find more analogies which go to confirm our opinion that the Dravidian languages have to a great extent influenced the Sanskrit and even Vedic dialects. —V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 190.

Dravidian influences are far-reaching in character and must be held responsible for the transformation into its present form of the original Sanskrit language.—Ibid. p. 191.

2. In our language we have mainly accepted in the north of India the Aryan speech, but this speech has been very deeply modified, and that on the lines of the pre-Aryan languages, while in the south the old languages survive, although they have been profoundly influenced by the speech of the

பயிலாத ஒலிகள் பல—பின்னண்ண மெய்கள் முதலியன—வட இந்திய மொழிகளில் பயிலுதற்குக் காரணம் இதுவே என்பர்[1]

வேத காலத்து வடமொழியில் பழைய திராவிட மொழிக் கூறுகள் பல கலந்துள்ளன என்கிறார் ரைஸ் டேவிஸ் என்பவர்.[2] வடமொழியைவிடத் திராவிட மொழிகள் தொன்மை வாய்ந்தவை என்பதில் ஐயம் இல்லை என்கிறார் டாக்டர் மக்லின்.[3]

வட இந்தியாவில் வழங்கும் இந்தி மொழியின் வரலாறு ஆராயத்தக்கது; அதனால் விளங்கும் மொழியியல் உண்மைகள் சில உள. இதுகாறும் இத்தகைய ஆராய்ச்சி போதிய அளவு செய்யப்படவில்லை. இந் நாட்டின் பழைய மொழியாகிய திராவிட மொழிகளின் இயல்பையும் வடநாட்டில் முற்காலத்தே பேச்சு மொழியாய் வழங்கிய பாலி பிராகிருதம் முதலியவற்றின் இயல்பையும் நன்கு ஆராய்ந்து உணர்ந்த அறிஞர் நடுநிலைமை நின்று உண்மை காணும் ஆர்வத்துடன் இந்த ஆராய்ச்சியில் தலைப்படின் பயன் விளையும். பந்தர்கார் என்னும் வங்காளப் பேராசிரியர் ஓரளவு ஆராய்ந்து சில முடிவுகளைக் கூறியுள்ளார்.

Aryan as naturalised in India and as it progressed in the various periods.—S. K. Chatterji, Indo-Aryan and Hindi, p. 32.

1. According to a theory which is very widely accepted, the Dravidian languages exerted a definite influence on the Aryan languages when the Aryans first set foot on Indian soil, in making them adopt the cacuminal sounds—Otto Jespersen, Language, p. 196.

2. Rhys Davis, Buddhist India, p. 156.

3. Dr. Maclean, The Manual of the Administration of of the Madras Presidency, pp. 42, 112-3.

பாலி மொழி

பாலி மொழி என்பதும், பிராகிருதம் போல், வட இந்தியாவில் வாழ்ந்த பழங்காலத்து மக்கள் வடமொழியும் திராவிட மொழியும் கலந்து பேசிய பேச்சாகும். வட மொழிச் சொற்கள் பலவற்றைக் கற்றுக் கலந்தபோதிலும், அவர்களின் ஒலிமுறை திராவிட மொழி போல் எளிமை யாகவே அமைந்தது. வடமொழியில் உள்ள மூன்று சகர (sibilants) ஒலிகளுக்கு ஈடாக, பாலி மொழியில் (தமிழில் இருப்பது போல்) ஒன்றே உண்டு. தமிழில் உள்ளவாறு, மெய்யெழுத்துக்கள் வரும்மொழி முதலெழுத் துக்கு ஏற்பத் திரியும் திரிபுகள் மிகுதியாக உண்டு. வட மொழிபோல் அரிய ஒலிகளுடன் சொற்கள் முடியாமல், தமிழ்போல் எளிய ஒலிகளே சொற்களின் ஈற்றில் அமை யும். உயிரொலிகள் அல்லது மூக்கொலியுடன் கூடிய உயிரொலிகளே சொற்களின் முடிவில் அமைவன. வட மொழியில் உள்ள இருமை பாலி மொழியில் இல்லை; திராவிட மொழிகளில் உள்ள ஒருமை பன்மை ஆகிய இரண்டே பாலியிலும் உண்டு. வடமொழியில் இல்லாத எகர ஒகரக் குற்றுயிர்கள் பாலி மொழிக்கு இன்றியமை யாதவை. பின்னண்ண மெய்களாகிய டகர ணகரங்களும் பாலி மொழியில் பயின்றுள்ளன. இவை அனைத்தும் திராவிட மொழிக் கூறுகளே ஆகும். இத்தகைய பாலி மொழியைப் பேசிய வடஇந்திய மக்கள் ஆரியர் வருகைக்கு முன்னமே இந் நாட்டில் இருந்த இனத்தைச் சார்ந்தவர் என்று கருதவேண்டும். அந்த இனம் திராவிட மொழி களைப் பேசி வந்த மக்களினமே என்று கொண்டால், திராவிட ஒலிகளாகிய எகர ஒகரக் குற்றுயிர்களும் டகர ணகரப் பின்னண்ண மெய்களும் அவர்களுக்கு இயல்பான ஒலிகளாதலின், அவை பாலி மொழியில் திராவிடக் கூறு

களாக நின்றவை எனக் கொள்ள இடமுளது என்கிறார் பந்தர்கார்.[1]

வட இந்திய மொழிகள்

இன்றுள்ள வட இந்திய மொழிகளிலும் வடசொற்கள் தவிர, திராவிட மொழிச் சொற்கள் பல இன்னும் உள்ளன; அவற்றை இலக்கண நூலார் தேசிச் சொற்கள் எனப் பிரித்துக் கூறுவர்.[2] இந்தச் சான்றும், பழைய வட இந்திய மொழிகள் திராவிட மொழிகளே என்பதையும், அவை வடமொழி வந்த பிறகு அதனிடமிருந்து நிறையக் கடன் வாங்கி வேறுபட்டன என்பதையும் விளக்க வல்லதாக உள்ளது.

ஆரிய மொழிகளில் உருபுகள் விகுதிகள் முதலியன சொற்களோடு இயைந்து உட்பிணைப்புநிலையாக அமைந்

1. The existence of the short e and o in the Pali, and the predilection the people showed for them, as well as the change of dentals to cerebrals without any influencing cause, are similarly to be attributed to the natural vocal tendencies of the people. These sounds must have existed and played an important part in the original language of this people, so that they were unable to shake them off entirely, even when they left their mother tongue and learned that of the more civilized Aryans with whom they came to be closely incorporated. If the original Pali speakers belonged to the same race as the Dravidians of Southern India of the present day, we have a reason to believe that their native tongue contained them; for they exist in the Dravidian languages and are very characteristic of them.—R. G. Bhandarkar, Collected Works, pp. 293, 4.

2. In the main they are words of other than Sanskrit extraction...They throw great light on the vocabulary not only of the Prakrits, but also of the present vernaculars and the non-Indo-Aryan element in them. Some of the words are clearly Dravidian.—P.D. Gune, An Introduction to Comparative Philology, p. 220.

திருக்கும் முறை, இன்றைய வடஇந்திய மொழிகளில் இல்லை; இம் மொழிகள் திராவிட மொழிகளைப் போல் உள்ளன; உருபுகள் விகுதிகள் முதலியன சொற்களின் பின் ஒட்டி நிற்கக் காண்கிறோம்.[1] ஆரியச் சொற்களை நிறையக் கடன் வாங்கிய இம் மொழிகள் பழைய திராவிட இலக்கண அமைப்பை விடாமல் கொண்டுள்ளன என்பதற்கு இதுவும் சான்றாகும். இவ்வாறு கொள்ளாமல் இவை ஆரிய மொழிகளே என்றால், அடுத்துள்ள திராவிட மொழிகளின் செல்வாக்கால் அவற்றின் இலக்கணக் கூறுகளைக் கடன் வாங்கியுள்ளன என்றும் அறிஞர் சாய்ஸ் உண்மை அறியாது உரைத்துள்ளார். முன்னைய முறையே மொழிகளுக்கு இயல்பானது என்பதை மொழிநூலார் நன்கு அறிவர்.

இயற்கையான திணைபால் பாகுபாடு திராவிட மொழிகளில் உள்ளது வட இந்தியாவில் ஆரியர் பரவிய பின், இலக்கணத்திற்காக அமைத்த செயற்கைத் திணை பால் முறை சில இடங்களில் புகுந்தது. வங்காளிகள் பேசும் மொழியில் இந்தச் செயற்கை முறை இல்லை. காரணம், அங்குப் பெரும்பாலோராக இருந்த திராவிடர்கள் பழைய இயற்கைத் திணைபால் முறையை விடாமல் கையாண்டதே ஆகும்.[2]

1. Thus it is believed that the modern Aryan languages of India have substituted agglutinated postfixes for flection, and so have adopted the grammatical machinery of their Dravidian neighbours.—Sayce, Introduction to the Science of Language, p. 174.

2. This early abandoning of grammatical gender in the eastern speeches has been regarded as a heritage from the non-Aryan languages current in the East, and has been connected with conditions in Tibeto-Burman, which does not possess grammatical gender.—S. K. Chatterji, The Origin and Development of the Bengali Language, p. 721.

வினைச்சொற்களுக்குமுன் சில சொற்கள் அல்லது இடைநிலைகள் சேர்ந்து துட்பமான பொருள் வேறுபாடுகளை உணர்த்துவது ஆரிய மொழிகளின் இயல்பு. ஆயின் வங்காளி முதலிய வட இந்திய மொழிகள் வினைகளுக்குப் பின் சேர்க்கப்படும் துணை வினைகளைக் கொண்டு பொருள் வேறுபாடுகளை உணர்த்துகின்றன. இதுவும் திராவிட மொழிகளின் செல்வாக்கால் ஏற்பட்ட முறையாகும்.[1]

இந்தி

வடமொழியில் நிறைபயிற்சியும் பேராசிரியரும் உடைய மாக்ஸ்முல்லரும் இந்தி மொழியைப் பற்றி ஆராய்ந்தபோது, அதற்கும் வடமொழிக்கும் உள்ள வேறுபாடுகளைக் கண்டு, அது வடமொழியிலிருந்து பிறந்த மொழி அன்று என்ற முடிவுக்கு வந்தார்.[2] இந்தியாவில் பேச்சு வழக்கிலிருந்த ஒரு மொழியின் கிளையே என்றும், வடமொழி எதிலிருந்து கிளைத்ததோ அதிலிருந்தே இந்தியும் கிளைத்தது என்றும் கூறியுள்ளார்.

இந்தி மொழியோடு ஒத்த மொழியாகிய உருதுவில் சொற்கள் எல்லாம் பாரசீகச் சொற்களாக இருந்தும், இலக்கணம் மட்டும் பாரசீக இலக்கணமாக இல்லை; இந்திய மொழிகளின் இலக்கணமாகவே உள்ளது என்பர் அறிஞர் வெண்ட்ரியே.[3] இந்திய மொழிகளின் இலக்கணம் என்று

1. S. K. Chatterji, The Origin and Development of the Bengali Language, p. 1050.

2. Hindustani is not the daughter of Sanskrit as we find it in the Vedas, or in the later literature of the Brahmins : it is a branch of the living speech of India : springing from the same stem from which Sanskrit sprang, when it first assumed its literary independence.—Max Muller, The Science of Language, p. 67.

3. In literary Urdu (a branch of Hindustani) there are entire sentences whose grammar alone is Indian but whose

அவர் கூறினர் எனினும், அது இந்தோஐரோப்பிய மொழிகளின் இலக்கணம் அன்று என்பதையும், திராவிட மொழிகளின் இலக்கணமே என்பதையும் அவர் அறியார். அவர் திராவிட மொழிகளைப் பற்றிப் போதிய அளவிற்கு அறிந்திருந்தால் இந்த உண்மையைத் தெளிவுபடுத்தி யிருப்பார்.

ஆரியமொழிகள் அல்ல

இவ் வுண்மைகளைக் கருத்தில் கொண்டு ஆராய்ந்தால், வட இந்திய மொழிகளாக இன்று உள்ள இந்தி குஜராத்தி மராத்தி வங்காளி முதலியவற்றை வடமொழியிலிருந்து பிறந்த ஆரிய மொழிகள் என்று கூறும் கூற்றுப் பொருந்தாமை அறியப்படும்.[1] இந்த வட இந்திய மொழிகள் நேரே வடமொழியிலிருந்து பிறந்தவை அல்ல என்பதும் இங்குக் கருதத்தக்கது. ஆரியர் இந்தியாவிற்குள் வந்து குடியேறியபோது திராவிடர்களுடன் கலந்து வாழ்ந்தனர். இக் கலப்பால், ஆரிய மொழியும் திராவிட மொழியும் கலந்து பலவகைத் திரிபுற்ற புதுமொழிகள் ஏற்பட்டன.[2]

vocabulary, from beginning to end, is Persian—J. Vendryes, Language, p. 175.

1. It ia surmised not incorrectly that all the languages of India could be traced to one original family of languages and this family cannot be the Indo-Germanic as is assumed, but native to the soil, having its birth in Neolithic times if not earlier. This is certainly true if we make a comparative study of the North Indian and South Indian vernacular dialects, for, in both we see the same fundamental grammatical structure. By substituting one word for another it is easy to translate their languages from one to another.—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 179.

2. When the original inhabitants of Northern India entered the Aryan fold and got mixed up with them they had naturally to adopt the language of the conquering race, and in

அவ்வாறு ஏற்பட்ட கலப்புமொழிகளே பிராகிருதம், பாலி முதலியவை. இவை, பேச்சுமொழிகளாகவே நெடுங் காலம் நின்றன. புத்தர்பெருமான் தம் அறவுரைகள் பொதுமக்களுக்கு எட்டுவதற்காகப் பாலி மொழியைக் கருவியாகக் கொண்டிராவிட்டால், பாலி மொழியும் எழுத்துவழக்கு இன்றிப் பேச்சுமொழியாகவே இருந்து மறைந்திருக்கும்.

இவ்வாறு சில கலப்புமொழிகள் பேச்சளவில் நின்ற போது, தம் கலைகளையும் கற்பனைகளையும் பிறவற்றையும் எழுதிவைப்பதற்குக் கலப்புக் குறைந்த பிராகிருதத்தைச் செம்மைப்படுத்திச் சமஸ்கிருதம் என அதனைப் போற்றினர். (சமஸ்கிருதம் என்பதற்குச் செம்மை செய்யப் பட்டது என்பது பொருள்.) சமஸ்கிருதம் எழுத்து மொழியாக விளங்க, மற்றப் பேச்சு மொழியாகிய பிராகிருதம் முதலியவை திரிந்து திரிந்து மாறிக்கொண்டிருந்தன. அவ்வாறு திரிந்து மாறிய மொழிகள் பிற்காலத்தில் சௌரசேனி முதலிய பெயர்களால் குறிக்கப்பட்டன. அவற்றிலிருந்து அமைந்த மொழிகளே இன்று வட இந்தியாவில் வழங்கும் இந்தி முதலிய மொழிகள். ஆகவே, இவற்றை வடமொழியிலிருந்து நேரே கிளைத்த மொழிகள் எனக் கூறுவதில் பொருள் இல்லை.

---

so doing they subjected the sounds of the Aryan tongue to various kinds of modifications suited to their own vocal tendencies and habits of speech. Such adaptation of the Aryan speech by the non-Aryan population of the country greatly tended to corrupt that speech in such a way as to give rise to what are called the popular languages or Prakrits, as opposed to the language of the cultured, represented by the Vedic dialect and Sanskrit.—K. Ramakrishnaiah, Studies in Dravidian Philology, p. 10.

இவற்றை நன்கு ஆராய்ந்த டாக்டர் ஸ்டீவென்சன் என்பவரும், ஹாட்ஜ்ஸன் (Hodgson) என்பவரும் கூறிய கருத்துக்கள்[1] இங்குப் போற்றுதற்கு உரியன.

வட இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் வட மொழிக் கூறுகளுடன் பிறமொழிக் கூறுகள் உள்ளன என்றும், அப் பிறமொழிக் கூறுகள் திராவிடமொழிக் கூட்டுறவால் அமைந்தவை என்றும் அவர்கள் தெளிவுறுத்தி யுள்ளனர்.

ஒற்றுமைக் கூறுகள்

வட இந்திய மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்கும் இலக்கண அமைப்பில் உள்ள ஒற்றுமைப் பகுதிகளைக் கால்டுவெல் எடுத்துரைத்துள்ளார் :—

1. பெயர்ச்சொற்களின் பின் உருபுகள் சேர்ந்து வேற்றுமை உணர்த்தும் முறை, இருவகை மொழிகளிலும் உள்ளது.

2. பன்மைக்கும் ஒருமைக்கும் வேற்றுமை ஒரு தன்மையாக அமைகிறது. பன்மைவிகுதி பெயருடன் சேர்ந்த பிறகு, வேற்றுமை உருபு சேர்கிறது. இருவகை மொழிகளும் இவ் வகையில் ஒத்திருக்கின்றன.

3. திராவிட மொழிகளில் உள்ளவை போலவே, முன்னிலையாரை உளப்படுத்தும் தன்மைப் பன்மையும் உளப்படுத்தாத தன்மைப் பன்மையும் வெவ்வேறுக வட இந்திய மொழிகளிலும் உள்ளன.

---

1. Rev. Dr. Stevenson, Journal of the Asiatic Society of Bombay.

Hodgson, Journal of the Asiatic Society of Bengal.

4. உருபு முதலிய இடைச்சொற்கள் சொற்களுக்கு முன் அமையாமல் பின்னே சேரும் முறை, திராவிட மொழிகளில் உள்ளவாறே வட இந்திய மொழிகளிலும் உள்ளது.

5. வடமொழியில் விகுதியே காலம் காட்டுவது போல் அல்லாமல், திராவிட மொழிகளிலும் வட இந்திய மொழிகளிலும் இடைநிலை காலம் காட்டுகிறது.

6. தழுவும் தொடர், தழுவப்படும் தொடரின் முன் வரும் முறையும் இவ் விருவகை மொழிகளிலும் உள்ளது.

சித்திய உறவு

இவ்வாறு திராவிட மொழிகளுக்கும் வட இந்திய மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைக் கூறுகளை எடுத்துக் காட்டும் கால்டுவெல், இதனால் விளங்கும் திராவிடமொழிக் கலப்பையும் உறவையும் நேரே கூற மனம் கொள்ளாமல், தாம் விரும்பும் கொள்கையான சித்திய மொழியினத்தின் உறவையும் தொடர்பையும் காட்ட முயல்கிறார்.

திராவிட மொழிகளின் அடிப்படைச் சொற்களில் சில சொற்களும் வட இந்திய மொழிகளில் இல்லையே என்றும், எண்ணுப் பெயர்களும் ஒத்திருக்கவில்லையே என்றும், எதிர்மறை வினைவடிவம் தனியே அமையும் திராவிட மொழிமுறையும் அவற்றில் இல்லையே என்றும் கூறி, திராவிட மொழிகளின் கலப்பு உள்ளது என்னும் கொள்கையை அவர் ஏற்கத் தயங்குகிறார்.[1] வட இந்திய மொழிகளில் வடமொழிச் சார்பற்ற பகுதிகள் திராவிடக் கூறுகள் எனக் கூறுமல், சித்தியச் சார்பானவை எனக் கூறுகிறார்.

1. I conclude, therefore, that the non-Sanskritic portion of the northern languages cannot safely be placed in the same category with the southern, except perhaps in the sense of both being Scythian rather than Aryan—Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, p. 61.

அக் கூற்று, அவர் சித்திய மொழி பற்றிக் கொண்டிருந்த கொள்கையின் உறுதியைப் புலப்படுத்துவதே அன்றி, உண்மையைப் புலப்படுத்துவது அன்று.

வடமொழி தாய் அன்று

வடமொழியின் தோற்றமும் அமைப்பும் பற்றி ஆராய்ந்த அறிஞர் கால்வின் கெபார்ட் என்பவர், இந்தியாவின் பழைய மொழி எதற்கும் வடமொழி தாய் அன்று என்று கூறுகிறார்; அதற்கு மாறாக, பழைய இந்திய மொழிக் கூறுகள் கலந்த கலப்பாலும் மாற்றிய மாறுதல்களாலும் பிற்காலத்தில் தோன்றி வளர்ந்ததுவே வடமொழி என்று அவர் காட்டுகிறார்.[1]

உண்மை இவ்வாறு இருக்க, திராவிடரை இழிந்தவர் (தஸ்யூக்கள்) என்றும், தென்னிந்திய மொழிகளைப் பைசாச மொழிகள் என்றும் பழித்த வடமொழியறிஞர் ஒருவகைத் தவறு செய்தனர். தமிழ் தெலுங்கு முதலியவற்றைச் சிறிது கற்று வடமொழியிற் புலமை பெற்ற அறிஞர், இந்த மொழிகளுக்கெல்லாம் வடமொழியே தாய் என்றும், வடமொழியிலிருந்தே இவை பிறந்து வளர்ந்தன என்றும் கூறி மற்றொருவகைத் தவறு செய்தனர்.[2]

1. It purports to show the fundamental ingredients of both Vedic and Modern Sanskrit and when they were introduced into Western India, from which it follows that Sanskrit cannot well be the parent of any ancient languages in India; in fact, as a conglomeration of phases or features of or modifications by other well-known languages, it is a relatively recent language as languages go, both in its evolution and in its introduction into India.—Calvin Kephart, Sanskrit Language Its Origin Composition and Diffusion, p. 59.

2. The Sanskritic element in the vocabularies of the Dravidian languages is so large that it has often been urged that Dravidian languages can claim no orginality independent

வடமொழிக்கலப்பு மிகுந்த திராவிடமொழி தெலுங்கு மொழியாகும்; வடமொழியை ஒட்டி இலக்கணமும் எழுதப்பட்ட மொழி அது; வடமொழி கற்ற அறிஞரால் இலக்கியம் பல எழுதி வளம் செய்யப்பட்ட மொழி அது. அந்த மொழியை ஆராய்ந்த அறிஞரும், அது வடமொழி யிலிருந்து பிறந்தது அன்று என்றும், வடமொழிச் சார்பு உடையது என்றும் எடுத்துரைக்கின்றனர்.[1]

காரணங்கள்

வடமொழியிலிருந்தே தெலுங்கு முதலியன பிறந்தன என்று அந்தந்த மொழிப் புலவர்களே கூறிவந்தனர்.[2] அதை நம்பி, வடமொழியிலிருந்தே திராவிடமொழிகள் பிறந்தன என்று ஐரோப்பிய அறிஞர் சிலரும் கண்மூடித் தன்மையோடு திரும்பத் திரும்பக் கூறிவந்தனர். பின் வரும் காரணங்களைக் கூறி அக் கூற்றைக் கால்டுவெல் மறுக்கவும் நேர்ந்தது :—

1. திராவிட மொழிகளில் வடமொழிச் சார்பில்லாப் பகுதியே மிகுதி.

---

of Sanskrit, that, in other words, Sanskrit is the mother of the South Indian languages. This is only the popular view shared by illiterate people along with the orthodox pandits whose learning knows no analysis nor comparison.—Anavaratavinayakam Pillai, Sanskrit Element in the Vocabularies of the Dravidian Languages, p. 1.

1. The native grammarians of the present day are fond of the expression that "Sanskrit is the mother;" but this does not allude to its (Telugu's) origin; it only means dependence.—C. P. Brown, A Grammar of the Telugu Language.

2. Orientalists of the last century who have specialised more and more in Sanskrit and less in Dravidian languages were of the opinion that the South Indian vernaculars might have derived from the Sanskrit tongue.—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 188.

2. மொழிக்கு அடிப்படையான மூவிடப் பெயர்கள், வினைத்திரிபுகள், பெயர்த்திரிபுகள், சொல்லமைப்பு முறை முதலியவற்றில் திராவிட மொழிகள் வடமொழிக்கு முற்றிலும் மாறுபட்டுள்ளன.

3. ஐரோப்பிய அறிஞர் இவற்றை ஆராயாமல், திராவிட மொழிகளின் அகராதிகளே மேற்போக்காகக் கண்டு, அவற்றில் பல வடசொற்கள் இருப்பதைச் சான்றாகக் கொண்டனர். திராவிடமொழிப் புலவர்கள் இச் சொற்களே வடசொற்கள் என்று உடன்பட்டுப் பாராட்டும் செய்துள்ளனர். வடசொற்கள் அல்லாத திராவிடச் சொற்களே திராவிட மொழிகளில் பலவாக உள்ளன; அடிப்படைச் சொற்களாகவும் உள்ளன.

4. ஐரோப்பிய அறிஞர் திராவிட இனத்துள் திருந்தா மொழிகள் இருத்தலை அறிந்து ஆராய்ச்சி செய்யவில்லை. செய்திருந்தால், அத் திருந்தா மொழிகளில் திராவிடச் சொற்களே மிகுதியாக இருத்தலை உணர்ந்திருப்பர். வடசொற் கலப்பு இல்லை, அல்லது மிகமிகக் குறைவு என்னும் நிலையே திருந்தா மொழிகளில் காணப்படுகிறது.

திருந்திய மொழிகளில் தெலுங்கும், கன்னடமும், மலையாளமும் வடசொற்களைக் கணக்கின்றிக் கடன் வாங்கியிருப்பதால், வட மொழியின் உதவியின்றி வாழ்தல் இயலாதவாறு தனித் தன்மை இழந்துள்ளன. ஆயின், திருந்திய மொழிகளில் தொன்மைச் சிறப்பு மிக்கதாகிய தமிழ், வடமொழியுடன் உறவு இல்லாததாகவே உள்ளது.[1]

1. After carefully considering a good number of roots and their meanings, and also the inflexional forms of the words in most of the South Indian languages, we do not feel that we could subscribe to any hypothesis of even a remote affinity between Dravidian languages, especially Tamil and Sanskrit, —V. R. R. Dikshitar, Pre-Historic South India, pp. 189-190.

பழங்கால இலக்கியத் தமிழ், செந்தமிழ் என்னும் பெயர் பெற்றது. அதில் வட சொற் கலப்பு மிக மிகக் குறைவு. இன்றும், வடசொற் கலப்புக் குறைந்த நூலுக்கே தமிழில் மதிப்பு மிகுதியாக உள்ளது. தெலுங்கு முதலியவற்றில் வட சொற் கலப்பு மிகுவதற்கு ஏற்ப நூலுக்குப் பெருமை மிகுகிறது; தமிழிலோ அதற்கு நேர்மாறான நிலைமை உள்ளது. இன்றும் நாட்டுப்புறங்களில் பேசப்படும் தமிழில் வட சொற் கலப்பு மிகக் குறைவாக உள்ளது. உரைநடை நூல்களிலும் சமய நூல், தத்துவ நூல் ஆகியவற்றிலேயே வட சொற்கள் பலவாகக் கலந்துள்ளன. அவ்வாறு கலந்துள்ள வட சொற்களின் தொகையும் ஆங்கிலத்தில் கலந்துள்ள லத்தீன் சொற்களின் தொகையைவிட மிகுதி அன்று.

5. மொழிகளுக்குள் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்க அடிப்படையானது அம் மொழிகளின் இலக்கண அமைப்பைப் பற்றிய ஆராய்ச்சியே. இம் முறைப்படி ஆராய்ந்தால் திராவிட மொழிகள் வட மொழியிலிருந்து பெரிதும் வேறுபட்டு விளங்குகின்றன.[1]

இக் காரணங்களைக் காட்டித் திராவிட மொழிகள் சம்ஸ்கிருதத்திலிருந்து பிறந்தவை என்ற கொள்கையை மறுத்துள்ளார் அறிஞர் கால்டுவெல்.

ஆதலின், திராவிட மொழிகளை ஆரிய (இந்தோ ஐரோப்பிய) மொழிகளோடு தொடர்பு படுத்தாமல், இந்

1. We have to acknowledge the fact that the South Indian languages had an independent growth and if they came under Sanskrit influence it was only in much later time than we are apt to imagine.—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p, 192.

நாட்டில் தோன்றி வளர்ந்த தனியினமாகக் கொள்வதே பொருந்துகிறது.[1]

ஆரியம்: திராவிடம்

இனி இவை எல்லாவற்றையும் விடுத்து, ஆரிய மொழிகளுக்கும், திராவிட மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கால்டுவெல் கூறுமாறு காண்போம்.

ஒற்றுமைக் கூறுகள்

1. இருவகை மொழிகளிலும் படர்க்கைப் பெயரிலும் வினையிலும் பால்பாகுபாடு இருக்கிறது.

2. கிரேக்க மொழியில் னகரம் உடம்படுமெய்யாக உள்ளது; தெலுங்கிலும் உள்ளது.

3. படர்க்கை ஒன்றன்பால் விகுதியாக இருவகை மொழிகளிலும் 'த' உள்ளது.

4. பலவின்பால் விகுதி திராவிட மொழிகளில் 'அ'; லத்தீன் மொழியிலும் அதுவே.

5. இருவகை மொழிகளிலும் சேய்மைச்சுட்டு அகரமாகவும், அண்மைச்சுட்டு இகரமாகவும் உள்ளன (அது இது : that, this).

6. த் என்ற இடைநிலை திராவிட மொழிகளில் இறந்த காலம் உணர்த்துதல் போலவே, பாரசீக மொழியிலும் அதுவே அக்காலத்தை உணர்த்துகிறது. (ஆங்கிலத்தில் talked முதலிய வினைகளில் 'த' (d) இறந்தகாலம் உணர்த்தல் காணலாம்).

---

1. With regard to the Dravidian languages the attempt to connect them with other linguistic families outside India is now generally recognised as a failure, and we must still consider them as an isolated family,—Grierson, Linguistic Survey of India, Vol IV, p. 197.

7. விணைப்பகுதியில் ஒரு மெய் இரட்டித்து இறந்த காலம் உணர்த்தல் திராவிட மொழிகளிலும் உள்ளது; ஆரிய மொழிகளிலும் உள்ளது. (மொழிநூலின்படி அது இரட்டித்தல் எனப்படாது. மற்றொரு மெய் வந்து சேர்ந்ததே ஆகும். ஆதலின் கால்டுவெல் கருத்து இங்குப் பொருந்தாது).

8. விணைப்பகுதியில் முதல் உயிர் நீண்டு தொழிற் பெயர் ஆதல் இருவகை மொழிகளிலும் உள்ளது. (உண்> ஊண். conduct>conduct).

வேற்றுமைக் கூறுகள்

1. திராவிட மொழிகளில் உள்ள திணைபால் பாகுபாடு சிறந்தது. ஆரிய மொழிகளின் பால்பாகுபாடு செயற்கையானது; கற்பனையாக அமைந்தது. ஆண் பெண் அலி என்ற பால்பாகுபாடு ஆரிய மொழிகளில் உள்ளது. பொருள்களின் தன்மைக்கும் அவற்றினை உணர்த்தும் சொற்களின் பாலுக்கும் தொடர்பே இல்லை.

தமிழில் கை என்பது ஆண்பாலும் அன்று, பெண் பாலும் அன்று; அஃறிணையில் ஒருமை அல்லது பன்மை எனப்படும். ஆனால் அப் பொருள் உடைய வடசொல்லாகிய கரம் என்பது வடமொழியில் ஆண்பால். மனைவி இல்லாள் என்பவை தமிழில் பெண்பால். இப்பொருள் உணர்த்தும் வடசொற்களுள், தாரம் என்பது ஆண்பால்; களத்திரம் என்பது அலிப்பால். இத்தகைய விந்தையான பால்பாகுபாடு எந்தத் திராவிட மொழியிலும் இல்லை.

2. திராவிட மொழிகளில் பெயர்ச் சொற்களின்பின் வேற்றுமையுருபுகள் சேர்ந்து உருவம் திரியாமலே வேற்றுமைப் பொருள்களை உணர்த்தும். அந்த உருபுகள் (ஆறும் வேற்றுமை தவிர மற்ற வேற்றுமைகளில்) ஒருமை

பன்மை வேறுபாடு இன்றி வழங்குகின்றன. ஆரிய மொழிகளில் உருபுகள் பெயர்ச்சொற்களிலிருந்து பிரிக்க முடியாதவாறு பிணைந்து நிற்கின்றன; ஒருமைக்கும் பன்மைக்கும் வெவ்வேறு உருபுகள் உள்ளன.

3. திராவிட மொழிகளில் அஃறிணைப் பெயர்களுடன் பன்மைவிகுதிகள் பெரும்பாலும் சேர்ந்து வழங்குவதில்லை. ஆரிய மொழிகளில் பெரும்பாலும் சேர்ந்தே வழங்குகின்றன.

4. திராவிட மொழிகள் பலவற்றிலும் நான்காம் வேற்றுமை உருபு கு, கி, கெ. கிரீக், லத்தீன், பிரெஞ்சு, ஜெர்மன், சம்ஸ்கிருதம் முதலிய எந்த ஆரிய மொழியிலும் இந்த உருபு இல்லை.

5. ஆரிய மொழிகளில் முன்னுருபுகள் (prepositions) வழங்கும் இடங்களில், திராவிட மொழிகளில் பின்னுருபுகளாக (postpositions ஆக) இடைச்சொற்கள் பயன்படுகின்றன.

6. பெயரடைகள் (பெயரெச்சங்கள்) திராவிட மொழிகளில் பால்எண் உணர்த்தாமல் பொதுவாக வழங்குகின்றன. ஆரிய மொழிகளில் பெயரடைகள் பாலும் எண்ணும் உணர்த்துகின்றன. (நல்ல என்ற அடையைத் தமிழில் நல்ல கணவன், நல்ல மனைவி, நல்ல மாந்தர், நல்ல மாடு, நல்ல வீடுகள் என எல்லாப் பாலுக்கும் பயன்படுத்தலாம். வடமொழி முதலியவற்றில் அவை பால்தோறும் எண்தோறும் வேறுபடும். வடமொழியின் இலக்கணத்தை ஒட்டியே இந்தி மொழியின் எழுத்து வழக்கிலும் அச்சா அச்சீ அச்சே எனப் பெயரடைகள் பால் வேறுபாட்டிற்கு ஏற்பத் திரிகின்றன. பழைய ஆங்கிலத்தில் goda, godne, gode, godum முதலிய பல வடிவங்கள் இருந்தன. இன்றைய ஆங்கிலத்தில் good என்ற ஒரு வடிவே உள்ளது).

7. திராவிடமொழிகள் பண்புப்பெயரை அடையாக வழங்குதற்கு உரிய இடத்திலும் (உயர் மரம்); அதன் பெயரெச்ச வடிவை வழங்குகின்றன (உயர்ந்த மரம்). இம் முறை ஆரிய மொழிகளில் இல்லை.

8. திராவிட மொழிகளில் முன்னிலையாரைக் கொள்ளுவது, தள்ளுவது என இருவகையான தன்மைப் பன்மைகள் உள்ளன. (நாம் வந்தோம்—முன்னிலையாரை உளப்படுத்துவது; நாங்கள் வந்தோம்—முன்னிலையாரை உளப்படுத்தாதது). ஆரிய மொழிகளில் இந்த அமைப்பு இல்லை.

9. திராவிட மொழிகளில் செயப்பாட்டு வினைக்குத் தனி வடிவம் இல்லை படு என்னும் துணைவினையே அதனை அமைக்கிறது. ஆரிய மொழிகளில் அதற்குத் தனிவடிவம் உள்ளது.

10. ஆரிய மொழிகள் பல, வினைகளுக்கு இடையில் இணைப்பு இடைச்சொற்களை (conjunctions) பயன்படுத்துகின்றன; திராவிட மொழிகள் வினையெச்சங்களைப் பயன்படுத்துகின்றன.

11. திராவிடமொழிகளில் உடன்பாட்டிற்கும் எதிர்மறைக்கும் வெவ்வேறு வினைவடிவங்கள் உள்ளன. ஆரிய மொழிகளில் இவ்வாறு இல்லை.

12. ஆரிய மொழிகளில் இணைப்பு இடப்பெயர் (relative pronoun) உள்ளது. திராவிட மொழிகளில் அதன் இடத்தில் பெயரெச்சமும் வினையாலணையும்பெயருமே உள்ளன.

13. திராவிட மொழிகளில் தழுவும் தொடர்கள் (clauses) தழுவப்படும் தொடர்களுக்கு (முடிபுத் தொடர்களுக்கு) முன் அமைதல் இயல்பாக உள்ளது. ஆரிய மொழிகளில் இவ்வாறு இல்லை.

உசு. திராவிட மொழியினம்

திருந்தியன, திருந்தாதன

திராவிட மொழிகளைத் திருந்திய மொழிகள் என்றும், திருந்தா மொழிகள் என்றும் (cultivated languages and uncultivated languages) இருவகையாகப் பாகுபாடு செய்கிறார் கால்டுவெல்.

தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் துளு குடகு என்னும் ஆறும் திருந்திய மொழிகள்.

தூதம் (Tuda), கோடம் (Kota), கோந்த் (Gond), கூ அல்லது கந்த் (Kin or Khond), ஒரொவன் (Oroan), ராஜ்மஹால் (Rajmahal) என்னும் ஆறும் திருந்தாமொழிகள். இவற்றுடன் பிராஹுய் மொழியும் சேர்தல் உண்டு.

தமிழ்

'வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' என்று பழங்காலத்திலேயே தமிழ் வழங்கிய நாட்டின் எல்லை கூறப்பட்டுள்ளது.[1] இலங்கையின் வட பகுதியாகிய யாழ்ப்பாணத்திலும் வேறு சில பகுதிகளிலும் தமிழ் பேசப்பட்டுவருகிறது. பினாங்கு, சிங்கப்பூர் முதலிய கிழக்குத் தீவுகளின் பகுதிகளிலும் தமிழ் மிகப் பலரால் பேசப்பட்டுவருகிறது. தமிழ்நாட்டில் தமிழ் பேசுவோரின் தொகை ஏறக்குறைய மூன்று கோடி.

தெலுங்கர்களும் கன்னடர்களும் தமிழை அரவம் என்பர். தெலுங்கர் தமிழரை அரவாளு என்பர். அறம் உடையவர் அறவர், அல்லது, அருவாநாட்டினர் அரவர், அல்லது, ஒலிமிக்கவர் அரவர் (அரவம் - ஒலி) எனப் பல காரணங்கள் அப் பெயர்க்குக் கூறப்படும்.

---

1. பனம்பாரனார், தொல்காப்பியம், பாயிரம்.

திராவிட மொழிகளில் பிறமொழிக்கலப்புக் குறைந்த மொழி, இலக்கிய வளம் மிகுந்த மொழி இதுவே.

தெலுங்கு

தமிழ்நாட்டின் வடக்கே உள்ள ஆந்திரநாட்டு மொழி இது. ஹைதராபாத்திலும் பலர் தெலுங்கு பேசுகின்றனர். தெலுங்கு பேசுவோரின் தொகை மூன்று கோடிக்குச் சிறிது மிகுதி.

வடமொழியாளர் தெலுங்கை ஆந்திரம் என்று குறிப்பிடல் வழக்கம். ரிக்வேத ஐதரேய பிராமணம் என்ற வடநூல் ஆந்திரரை நாகரிகமற்றவர் என்று கூறுகிறது. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த ஹியூன்சியாங் ஆந்திர நாட்டில் வேறொரு மொழி வழங்குவதைக் குறிப்பிட்டுள்ளார். பழந் தமிழிலக்கியம் ஆந்திரரை வடுகர் என்றும், அந்நாட்டை மொழி பெயர்தேம் (மொழி வேறுபட்ட நாடு) என்றும் கூறுகிறது.

தேன் போன்ற இனிமை உடைய மொழி என்னும் பொருளில், தெனுகு>தெலுகு>தெலுங்கு என்று பெயரமைந்திருக்கலாம். கலிங்கம் முதலான மூன்று லிங்கக் கோயில்களை உடையது என்னும் பொருளுடைய சொல்லாகிய திரிலிங்கம் என்பது திரிந்து தெலுங்கு ஆயிற்று என்பர் ஒரு சிலர்.

இதன் எழுத்துமுறை தேவநாகரியை (வடமொழி எழுத்தை) ஒட்டி அமைந்தது. தேவநாகரி எழுத்தோடு திராவிட மொழிக்கு இன்றியமையாத றகர எழுத்தும் பெற்றுள்ளது.

வடமொழி அறிஞர்களாகிய நன்னயபட்டர் முதலானோர் இதற்கு இலக்கியம் எழுதி வளர்த்தமையால், வட

மொழிச் சார்பு மிகுதியாயிற்று. நன்னயரே தெலுங்கு மொழியின் முதல் புலவர் எனப் போற்றப்படுவர். அவர் வடமொழியின் பாரதத்தைத் தெலுங்கில் மொழிபெயர்த்தார்.[1] அம் மொழிபெயர்ப்பில் நூற்றுக்கு எழுபத்தைந்து விழுக்காடு வடசொற்கள் கலந்து எழுதினர். அவர்க்குப் பின் வந்தவர்கள் (சைவப் புலவர் சிலர்) வடசொற்கள் குறைந்த நடையையே போற்றினர். அதை 'ஜானு தெலுங்கு' என்று கூறி வேறுபடுத்தினர். ஆயினும், வட மொழி அறிஞர்களின் முயற்சி தொடர்ந்து நடைபெற்ற காரணத்தால், அதுவே வெற்றி பெற்றது. அதன்பயனாக, இன்று நன்னயர் போன்றாரின் தெலுங்கே மக்களுக்கு விளங்கும் மொழியாகிவிட்டது; மற்றது விளங்குவது அரிதாகிவிட்டது.

கன்னடம்

மைசூர் மாநிலத்திலும் மராத்தி நாட்டின் தென் பகுதியிலும் பேசப்படும் மொழி இது. நீலகிரியில் உள்ள படகர் என்பவர் பேசுவது பழைய கன்னடம். கன்னடம் பேசும் மக்களின் தொகை ஏறக்குறைய ஒன்றரைக் கோடி.

கர்நாடகம் திரிந்து கன்னடம் ஆயிற்று என்றும், அது வடசொல் என்றும் கூறுவர் வடமொழி மோகம் மிக்கவர். டாக்டர் குண்டர்ட் என்பவர் கரு + நாடு + அகம், கருநாடகம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு என்பர்.

1. In Telugu, though Nannaya, who is considered as the first poet in the language, was a Sanskritist and began to translate Bharata in a high flown style containing 75 per cent of Sanskrit element, there were others after him, specially the Saiva poets, who denounced this kind of heavy importation of Sanskrit into Telugu language and always advocated the use of what is called 'Janu Telugu.'—K. Ramakrishnaiah, Studies in Dravidian Philology, p. 42.

சில நூற்றாண்டுகளுக்குமுன் இருந்த கன்னடம் தமிழ் போலவே அமைந்திருந்தது; அது ஹள கன்னடம் (பழங் கன்னடம்) எனப்படும் (பழ>பள>ஹள). இன்று உள்ளது ஹொச கன்னடம் எனப்படும் (புது>பொது> பொசு>ஹொசு).

இதன் எழுத்துமுறை தெலுங்கை ஒட்டி அமைந்ததாகும். இதுவும் தெலுங்கு போல் வடமொழிச் சொற்களை மிகுதியாகப் பெற்றுள்ளது.

மலையாளம்

தமிழ் நாட்டின் மேற்குப் பகுதியாகிய சேரநாட்டின் மொழி இது. திராவிட மொழிகளின் வினைகளில் உள்ள பால் காட்டும் விகுதிகள் மலையாள வினைகளில் இல்லை. மற்றத் திராவிட மொழிகளுக்கும் மலையாளத்திற்கும் உள்ள பெரிய வேறுபாடு இது. வருகிறேன், வருகிறான், வருகிறது முதலிய பல வினைவாய்பாடுகளுக்கு ஈடாக மலையாளத்தில் பால் விகுதி அற்ற 'வருந்து' என்பது ஒன்றே உண்டு.

இதனைத் தமிழோடு ஒத்த இனமொழி என்று கொள்வதைவிட, தமிழின் (மிகத் திரிந்த) கிளைமொழி என்று கொள்வது பொருந்தும் எனக் கருதுகிறார் கால்டுவெல்; தொடக்கத்தில் தமிழின் தங்கையாக அல்லாமல், மகளாக இருந்த மொழி என்கிறார். அதற்குக் காரணம் உள்ளது. சில நூற்றாண்டுகளுக்குமுன் சேர நாட்டில் தமிழே பேச்சு மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் இருந்துவந்தது. சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து என்னும் நூல்களும் புறநானூற்றில் பல பாடல்களும் சேரநாட்டுத் தமிழ் ஆகும். அந்தத் தமிழே, இலக்கியத் தொடர்பு குறைந்தமையாலும், சோழ பாண்டிய நாட்டுத் தமிழோடு உறவு குறைந்தமை

யாலும், வடமொழிச் சார்பு மிகுந்தமையாலும் மிகமிகத் திரிபுற்று வேறொரு மொழியாக வளர்ந்துவிட்டது. அவ்வாறு வளர்ந்ததே மலையாளம். அது புதிதாக வந்த வேற்று மொழி அன்று; அந் நாட்டுத் தமிழ் திரிந்த திரிபே ஆதலின் கிளைமொழி எனல் பொருந்தும்.[1]

அது பற்றித் தமிழைத் தாய் என்றும், மலையாளத்தை மகள் என்றும் கூறுவர். ஓர் இன மொழிகளுள் ஒன்றைத் தாய் என்றும், மற்றவற்றை அத் தாயிடமிருந்து பிறந்தவை என்றும் கூறுவதை அறிஞர் சிலர் கடிகின்றனர். ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழி பிறப்பதில்லை என்பதும், மொழியியலில் தாய் மகள் என்றெல்லாம் பேசுவதில் பொருளில்லை என்பதும் வெண்ட்ரியே என்னும் அறிஞரின் கருத்தாகும்.[2] ஒரு நாட்டின் கிழக்குப் பகுதியில் மொழி பழையபடியே இருக்க, மேற்குப் பகுதியில் வழங்கும் மொழி மிக வேறுபட்டுச் சென்று ஒரு தனி மொழி போல் தோன்றுமாயின், இது முன்னதன் மகள்

1. The difference between Malayalam and Tamil, though originally slight, has progressively increased, so that the claim of Malayalam, as it now stands, to be considered not as a mere dialect of Tamil, but as a sister language, cannot be called in question. Originally it is true, I consider it to have been not a sister of Tamil, but a daughter. It may best be described as a much altered off-shoot.—Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, Introduction, p. 24.

2. Applied to linguistic matters, the term relationship is ambiguous and has frequently led those who are not trained philologists into error...There is nothing in common between the "relationship" of languages and generation or filiation in the physiological sense of these terms.

One language does not give birth to another; no philologist could fix the hour of a language's birth. This is succession.—J. Vendryes, Language, p. 297.

என்று சொல்லப்படுவது உண்டு. ஆயின், அது அங்கு வழங்கிய பழைய மொழியின் திரிபே தவிர, அதிலிருந்து பிறந்த இளங்குழந்தை ஆகாது. ஆகவே, பழைய தமிழ் (அல்லது திராவிடம்) தாய் என்றும், இன்றைய தெலுங்கு கன்னடம் முதலியவை மக்கள் என்றும் கூறுவது பொருந்தாமல் போகிறது. பழைய தமிழ் (அல்லது திராவிடம்) வேங்கடத்திற்கு வடக்கே ஒரு வகையாகத் திரிந்து தெலுங்கு ஆயிற்று என்றும், மேற்கே மற்றொரு வகையாய்த் திரிந்து கன்னடம் ஆயிற்று என்றும், சேரநாட்டில் இன்னொரு வகையாய்ப் பிற்காலத்தில் திரிந்து மலையாளம் ஆயிற்று என்றும் கூறுவதே மொழியியலுக்குப் பொருந்திய கூற்று ஆகிறது.

இவ்வாறே, ஆரியர் வருவதற்குமுன் இந்தியா முழுதும் இருந்த பழைய மக்கள் பேசிய மொழியையும் தமிழ் என்று கூறுவதைவிட, வேறு பெயரால் வழங்குவது தகும் என்பது அறிஞர் கருத்து. மொஹெஞ்சதாரோ நாகரிகத்தின் மக்கள் பேசிய அந்தப் பழைய மொழியைத் திராவிட மொழி என்று கூறாமல் பழந்திராவிட மொழி (Proto-Dravidian Language) என்பது பொருந்துவதாகக் கருதுகிறார் அறிஞர் ஹீராஸ்.[1]

காலப் போக்கில் வடமொழிச் சொற்கள் பல கலந்து மலையாளம் மிக வேறுபட்டுவிட்டது. மலையாளத்தின் பழைய இலக்கியம் தமிழிலக்கியம் போலவே உள்ளது; தமிழர்க்கு விளங்கும் மொழியாகவே பழைய மலையாளம்

1. Being Dravidians, the inhabitants of Mohenjo-Daro and Northern India naturally spoke of a Dravidian language; yet this language was not one of the Dravidian languages now spoken in India, but probably their parent, which may be called Proto-Dravidian.—Rev. H. Heras, Light on the Mohenjo-Daro Riddle, p. 14.

உள்ளது. மலையாளத்தின் முதல் இலக்கியமாகிய இராம சரிதம் தமிழ் ஒலியாலாகிய தமிழிலக்கியம் போலவே உள்ளது. பழைய மலையாள இலக்கியத்தில் தமிழ் எழுத்துக்களாகிய பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யுமே மிகுதியாக உள்ளன. கிரந்த எழுத்தை ஒட்டி மலையாளத்திற்கு எழுத்துக்கள் அமையவே, பிற்காலத்தில் மற்ற ஒலிகளும் மிகப்பயின்று கலப்புற்றன. வடசொற்களும் கணக்கின்றிக் கலந்தன. இந்த மாறுதல் எல்லாம் பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டவைகளே ஆகும்.

ஏறக்குறைய ஒரு கோடி மக்கள் இன்று மலையாளம் பேசுகின்றனர்.

துளு

இதனைத் திருந்திய மொழி எனக் கால்டுவெல் பாகுபாடு செய்துள்ளபோதிலும், இதற்குக் கிரந்தத்தை ஒட்டிய எழுத்துமுறை உண்டு; தனி இலக்கிய வளம் இல்லை. கிறிஸ்துவப் பாதிரிமார்களே முதல் முதலில் இம் மொழியில் நூல்கள் எழுதி அச்சிட்டனர். அவர்கள், கன்னட எழுத்துக்களிலேயே அவற்றை எழுதி அச்சிட்டனர்.

மைசூர் மாநிலத்தை அடுத்து ஓடும் கல்யாணபுரி சந்திரகிரி என்னும் இரண்டு ஆறுகளுக்கு இடையே உள்ள பகுதியில் வாழும் மக்கள் இம் மொழி பேசுகின்றனர். அவர்களின் தொகை எழுநூறுயிரம்.

பிரிகெல் (Brigel) என்னும் ஐரோப்பிய அறிஞர் இதற்கு முதல் முதலாக இலக்கணம் எழுதினர். கன்னடத்திற்கும் இதற்கும் நெருங்கிய உறவு இருப்பதாக அவர் குறித்துள்ளார்.

குடகு

இதற்கும் எழுத்தும் இலக்கியமும் இல்லை. டாக்டர் மோக்லிங் (Dr. Mogling) என்னும் ஜெர்மனி அறிஞர் இதனை ஆராய்ந்துள்ளார். இது கன்னடம் பேசும் நாட்டை அடுத்திருந்தபோதிலும், தமிழோடும் மலையாளத் தோடும் உறவு உடையது என்கிறார் அவர். இது பழங் கன்னடத்திற்கும் துளுவிற்கும் இடைப்பட்டது என்கிறார் கால்டுவெல்.[1] மேஜர் கோல் (Major Cole) என்பவர், இதன் இலக்கணத்தையும் சில பாட்டுக்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். இதைப் பேசுவோர் ஏறக்குறைய ஐம்பதினாயிரவர்.

தூத மொழி

நீலகிரி மலையில் வாழும் பழங்குடி மக்களின் மொழி இது. அவர்கள் நாகரிகம் குறைந்தவர்கள்; இப்பொழுது அரசாங்க முயற்சியின் பயனாகக் கல்வியறிவு பெற்றுத் தீய பழக்கங்களை விட்டுவருகின்றனர். இவர்களின் தொகை ஏறக்குறைய எழுநூறு.

கோட மொழி

இம் மொழி பேசுவோர் நீலகிரியில் வாழும் நாகரிகம் குறைந்த மக்களே. இவர்களின் தொகை ஆயிரத்து முந்நூறு.

இம் மொழி கன்னடத்தின் கொச்சைக் கிளைமொழி போல் உள்ளது.

---

1 It is not quite clear to me yet to which of the Dravidian dialects it is most closely allied. On the whole, however, it seems safest to regard it as standing about midway between Old Canarese and Tulu.—Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, Introduction, p. 36.

கோந்த் மொழி

நடு இந்தியாவில் சில மலைகளிலும் காடுகளிலும் வாழும் மக்கள் இம் மொழி பேசுகின்றனர். பதினைந்து நூறுயிரம் மக்கள் இதனைப் பேசுகின்றனர்.

கூ அல்லது கந்த்

ஒரிஸாவின் குன்றுகளில் வாழும் ஐந்நூறுயிரம் மக்கள் பேசும் மொழி இது.

ராஜ்மஹால்

வங்காளத்தில் ராஜ்மஹால் மலைகளில் வாழும் எழு பதினாயிரம் மக்கள் பேசும் மொழி இது. இம்மொழி பேசுவோர் மாலர் என்றும் இராஜ்மஹாலர் என்றும் கூறப் படுவர்.

ஒரொவன்

சூடிநாகபுரியிலும் அதன் சுற்றுப்பக்கத்திலும் வாழும் எண்ணூறுயிரம் மக்கள் பேசும் திருந்தா மொழி இது. பாட்ஸ்க் (Rev. F. Batsch) என்னும் பாதிரியார் இதன் இலக்கணத்தை எழுதியுள்ளார்.

இத் திருந்தா மொழிகளைப் பேசுவோர் அல்லாமல், வட இந்தியாவில் திராவிடர்களாக உள்ளவர்கள் இன்னும் சில வகையினர் உள்ளனர் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். வங்காளத்திலும் ஒரிஸாவிலும் வாழும் பூயியர்கள் (the Bhuyias), கொச்சர்கள் (the Kocch) ஆகியோரும் திராவிடர்களே என்பர். இவர்களின் தொகை ஏறக்குறைய நாற்பது நூறுயிரம்.

பிராஹுய் மொழி

இந்தியாவின் வடமேற்கே பலுச்சிஸ்தானத்தில் ஒரு சாரார் பேசும் மொழி இது. ஹாட்ஜ்ஸன் (Hodgson)

என்பவர் இதனையும் நேபாள மொழியையும் திராவிடக் குழுவுடன் சேர்த்தார்.[1] ஆனால் பிறமொழிக் கூறுகள் இதில் மிகுதியாக உள்ளன. பிராஹுய் மொழியில் திராவிட மொழியின் அடிப்படைக் கூறுகள் சில உள்ளன. எடுத்துக்காட்டாக, இரட், இரட்டு, முஞ்ட் முதலிய எண்ணுப் பெயர்கள் பிராஹுயில் உள்ளன. மூவிடப் பெயர்களும் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. திராவிட இலக்கண அமைப்புக்களும் இதில் உள்ளன.

இம் மொழியில் உள்ள திராவிட மொழிக்கூறுகள் சில என்றும், மற்றவைகைக் கலப்புக்கள் பல என்றும் கூறி, தாம் விளக்கிய திராவிட மொழிவகைகளுள் இதுவும் ஒன்றுகச் சேர்க்காமல் விட்டுவிட்டார் கால்டுவெல்.[2]

1911 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கில் இம் மொழி திராவிட மொழிகளோடு வைத்துக் கணக்கிடப் பட்டுள்ளது. அப்போது இம் மொழி பேசியவர் தொகை நூற்றெழுபதினாயிரம். வர வர, இவர்கள் தொகை குறைந்துவருகிறது.

---

1. Brahui, the language of the mountaineers in the khanship of Kalat in Baluchistan, contains not only some Dravidian words, but a considerable infusion of distinctively Dravidian forms and idioms; in consequence of which this language has a better claim to be regarded as Dravidian or Tamilian than any of the languages of the Nepal and Bhutan frontier, which had been styled 'Tamulian' by Mr. Hodgson.—Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, Introduction, p. 43.

2. I have not included, however, the Brahui in the list of Dravidian languages which are to be subjected to systematic comparison, because the Dravidian element contained in it bears but a small proportion to the rest of its component elements.—Ibid.

அந்த ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கில் மல்ஹார் (Malhar) என்னும் மொழியும், கொலாமீ (Kolami) என்னும் மொழியும் திராவிடக் குழுவுள் சேர்க்கப்பட்டன. அவற்றைப் பேசியவர் தொகை முறையே இருநூற்று மூப்பத்தாறும், இருபதினாயிரத்து எழுபத்து நான்கும் ஆகும்.

பிராஹுய் மொழி இந்தியாவின் வடமேற்குக் கணவாயை அடுத்துள்ள பகுதியில் வழங்குவதால், திராவிடர் இவ் வழியாகவே இந்தியாவிற்குள் புகுந்து சிந்துநதிக் கரையில் தங்கிப் பரவினர் என்னும் தம் கொள்கைக்கு இதனைச் சான்றாகக் கொள்கிறார் கால்டுவெல்.[1] திராவிடர் தென்னிந்தியாவிலிருந்து சிந்துநதிக்கரை வரையிலும் பரவியபின், வடமேற்குக் கணவாய் வழியாக நடு ஆசியாவிற்குச் சென்றனர் என்ற கொள்கைக்கும் இது சான்றாக அமைதல் காணலாம்.

திராவிட மக்களும் பிராஹுய் மக்களும் ஒரே இனத்தவர் என்று கொள்வதற்குச் சான்றுகள் இல்லை. ஆனால் திராவிட மொழியைப் பேசுவோரின் கலப்பு அவர்களிடையே ஏற்பட்டு நிலைபெற்றது என்பதற்கு இந்த ஒற்றுமைக் கூறுகள் சான்றாக உள்ளன.[2]

---

1. The discovery of this Dravidian element in a language spoken beyond the Indus tends to show that the Dravidians, like the Aryans, the Graeco-Scythians, and the Turco-Mongolians, must have entered India by the north-western route.—Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, Introduction, p. 44.

2. It must be remembered tbat ethnically there is a vast difference between the Brahuis and the Dravidians and it is very difficult to accept that both of them belonged to one and the same race. If any linguistic affinity can be traced between the Dravidian languages and the Brahui tongue it must be due to the contacts between the Brahuis and the Dravidian

மூவிடப் பெயர்கள்

மக்கள் முதலில் பேசிவந்த ஒலித்தொகுதியிலிருந்து தனிச் சொற்களாக முதலில் பிரித்தெடுக்க நின்றவை மூவிடப் பெயர்களாக இருக்கவேண்டும். நான் நீ முதலிய மூவிடப் பெயர்கள் மிகத் தொன்மையானவை என்பது மட்டும் அன்று; அவைகள் இயற்கையுணர்ச்சியாற் பிறப்பவை; சைகை முதலியவற்றால் விளங்கக் கூடியவை; மொழி வளர்ச்சி பெற்ற பிறகு சைகைகளோடு கலந்து வழங்கும் சொற்களாக உள்ளவை.[1] ஆதலின் மற்றப் பெயர்ச் சொற்கள் எல்லாம் அவற்றிற்குப் பிறகு பிறந்தவையே எனலாம். இவ்வாறு அவை மொழிக்கு மிக அடிப்படையாய்த் தொன்மை மிக்கனவாய் அமைந்திருப்பதால்தான், ஓரினமாக இருந்து பிரிந்து நெடுங்காலமான மொழிகளுள்ளும் மூவிடப் பெயர்களில் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது. திராவிட மொழிகளே விட்டுப் பிரிந்து நெடுங்காலமாகத் தனித்துத் தொலைவில் வழங்கும் பிராஹுய் முதலிய மொழிகளிலும் மூவிடப் பெயர்கள் திராவிடச் சொற்களாகவே இருத்தல் காணலாம்.

தன்மை யொருமைப் பெயராகத் திராவிட மொழிகளில் உள்ள யான் ஞான் நான் நா என் என்னும் வடிவங்களே ஆஸ்திரேலிய மொழியில் உள்ள ங, ஙைஇ, ஙத்ஸ, ஙன்ய என்பவற்றோடும், திபேத்திய மொழியில் உள்ள ங,

peoples. So any theory that the two peoples belonged to a common race falls to the ground.—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 168.

1. It is pronoun therefore that must have been the word to be the earliest distinguished from others. It is more primitive, more instinctive, and more easily expanded by gesture, etc. than the substantive which it must have preceded.—P. D. Gune, An Introduction to Comparative Philology, p. 77.

ஙெ, ஙெத் என்பவற்றோடும், சீன மொழியில் உள்ள ஙொ என்பதோடும் ஒப்பிடுகிறார் கால்டுவெல்.[1]

அவ்வாறே, முன்னிலை ஒருமைப் பெயராகத் திராவிட மொழிகளில் உள்ள நீன், நின் என்பவற்றை ஆஸ்திரேலிய மொழியின் முன்னிலைஒருமை வடிவங்களாகிய நின்ன, ஙின்னே, ஙிங்தொஅ, ஙிங்தெ என்பவற்றோடு ஒப்பிடுகிறார். திராவிட முன்னிலைப் பன்மைப் பெயர் வடிவங்களாகிய ஈம், நிம், ஈர், நும், ஈவு என்பவற்றை ஆஸ்திரேலிய மொழியில் உள்ள நிமெதூ, நுர, ஙிவ, ஙுர்லெ என்பவற்றோடு ஒப்புமை கண்டு வியக்கின்றார்.[2]

முண்டா

நடு இந்தியாவிலும் வங்காளத்திலும் ஆசியச் சார்பு குறைந்த மொழிகள் வேறு சில உள்ளன. அவற்றை முண்டா மொழிகள் என்றும் கொலேரிய இனம் என்றும் கூறுவர். ஹாட்ஜ்ஸன் என்பவர் அவற்றைத் தமிழினம் என்கிறார். போடொவர் (Bodos), திமாலர் (Dhimals), குமாவோன் (Kumaon) மொழிகளையும் அவர் தமிழினம் என்கிறார்.[3]

திராவிட மொழிகள் போல் தோன்றினும், இவற்றில் திராவிட இலக்கணக் கூறுகள் மிகக் குறைவே என்கிறார் கால்டுவெல்.

இவற்றைப் பேசும் மக்கள், உடலமைப்பு வகையால் திராவிடர் போலவே உள்ளனர்; ஆயினும் இவர்களின்

1. Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, Introduction, p. 78.

2. Ibid. 79.

3. Hodgson, Journal of the Asiatic Society of Bengal, Calcutta, 1849.

மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்கும் போதிய ஒற்றுமை காணப்படவில்லை என்று கிரியர்ஸனும் கருதுகிறார்.[1] பால்எண் பாகுபாட்டிலும் வேற்றுமை உணர்த்தும் முறையிலும் பிறவற்றிலும் இம் மொழிகள் திராவிட மொழிகளுக்கு வேறுபட்டுள்ளன என்றும் அவர் கூறுகிறார்.

இம் மொழிகளைப் பேசுவோர் மங்கோலியக் கலப்புப் பெற்ற திராவிடர் என்றும், அதனாலேயே இம்மொழிகள் இவ்வாறு வேறுபடலாயின என்றும் கருதுகின்றனர் சிலர்.

அறிஞர் மாக்ஸ்முல்லரே இவற்றை முண்டா மொழிகள் எனப் பெயரிட்டு வழங்கினார். மலாக்கா (Malacca), ஆஸ்ட்ரலொனேஷியா (Australonesia), நிக்கோபார் (Nicobarese) தீவுகளில் பேசப்படும் மான்குமேர் (Mon-Kumer) மொழியினத்திற்கும் முண்டா மொழிகளுக்கும் உறவு இருப்பதாக ஆராய்ச்சியாளர் சிலர் எடுத்துரைக்கின்றனர். இது கொண்டு இந்தியாவிலும் கிழக்குத் தீவுகளிலும் உள்ள மக்களின் மூன்னோர் ஒரு பொது மொழியை வழங்கியிருக்கவேண்டும் என்று கிரியர்ஸன் கருதுகிறார்.

முண்டா மொழிகள், ஒட்டுநிலை பற்றி அமைந்த சொற்களை உடையவை. இவற்றில் உயர்திணை அஃறிணை என்ற திணைப் பாகுபாடு இல்லை; உயிருள்ளன இல்லன

1. Whether we consider the phonetic system, the methods of inflexion or the vocabularies, the Dravidians have no connection with the Munda languages. They differ in their pronunciations, in their modes of indicating gender in their declension of nouns, in their method of indicating the relationship of a verb to its objects, in their numerical systems, in their principles of conjugation, in their methods of indicating the negative, in their vocabularies.— Grierson, Imperial Gazetteer of India, Vol, I. pp. 378-379.

என்ற பாகுபாடு உண்டு. ஒருமை இருமை பன்மை என மூவகை எண் உண்டு. வேற்றுமை யுருபுகள் பெயர்ச் சொற்களுடன் சேராமல் வினைச்சொற்களுடன் சேர் கின்றன. பத்துப் பத்தாக எண்ணும் முறை இல்லாமல், இருபது இருபதாக எண்ணும் முறை உள்ளது. திராவிட மொழிகளில் உள்ளவாறு மூன்னிலையை உளப்படுத்தும் தன்மைப் பன்மையும் உளப்படுத்தாத தன்மைப் பன்மை யும் வெவ்வேறாக உள்ளன. இவற்றில் எதிர்மறை வினைகள் இல்லை.

கோர்வாரி, கூர்க்கூ, கறியா, ஜுவாங், சவாரா, கடபா என இம்மொழிகள் இடந்தோறும் பலவகைப் பெயர் பெற்று வழங்குகின்றன. இவற்றைப் பேசுவோரின் தொகை ஏறக்குறைய மூப்பது லட்சம்.

இவற்றிற்குப் பொதுவான எழுத்து முறையும் இல்லை; இலக்கியமும் இல்லை.

இவ்வாறு உள்ள திருந்தா மொழிகளில் மட்டும் அன்றி, வடநாட்டில் இன்று செல்வாக்குப் பெற்றுள்ள திருந்திய மொழிகளிலும் திராவிடக் கலப்பு இருத்தலைக் காணலாம். சட்டர்ஜி என்னும் அறிஞர், வங்காளி மொழி யாராய்ச்சியில், திராவிடக் கூறுகள் பல கலந்திருப்பதைக் காட்டுகின்றார்.[1] வீடி, குண்டா (வீடு, குன்று) முதலான பல சொற்கள் ஊர்ப்பெயர்களின் இறுதியில் இருப்பதை எடுத்துக்காட்டி, அவை திராவிடச் சொற்கள் எனக் குறிக்கிறார்.

---

1. S. K. Chatterji, The Origin and Development of the Bengali Language, p. 65.

உ எ. தமிழ்

தொன்மைச் சிறப்பு

உலகில் பல மொழிகள் தோன்றி வழங்கி மறைந்தொழிந்தன; ஒரு சில மொழிகள் மட்டுமே இன்னும் அழியாமல் நிலைபெற்றுள்ளன. அவ்வாறு நிலைத்துள்ள மொழிகளிலும் சில பேச்சு வழக்கு இழந்து, இலக்கிய மொழியாக மட்டும் உள்ளன. அவற்றின் இடத்தில் வேறு பல புதிய மொழிகள் தோன்றி வாழ்ந்துவருகின்றன. இவ்வாறு தோன்றி வளர்ந்து மாயும் மொழிகளுக்கு இடையே, மிகப் பழங்காலத்திலேயே தோன்றி, செல்வாக்குடன் வளர்ந்து, இன்றளவும் வாழ்ந்து விளங்குவன தமிழ், சீனம் முதலிய சில மொழிகளே. இவற்றுள்ளும் பழமைக்கும் பழமையாய் இலக்கிய வளம் உடையதாய் நிற்பதோடு, புதுமைக்கும்புதுமையாய்க் கருத்துச் செல்வம் நிறைந்ததாய் என்றும் இளமைப் பொலிவுடன் விளங்குவது தமிழ் மொழியாகும்.

ஆதலின் தமிழ் மொழி பெருமை மிக்க பழைய வரலாறு உடையதாகும்.[1]

மொழியின் வரலாறு

மொழிவரலாற்றை வெவ்வேறு துறையிலிருந்து வெவ்வேறு வகையாகக் கற்றல் இயலும். சென்ற நூற்றாண்டினர் சிலர் நாட்டு வரலாற்றை ஒட்டியும், வேறு சிலர் உலக வரலாற்றை ஒட்டியும் கற்றனர். மற்றும் சிலர், சமுதாய அமைப்பை ஒட்டிக் கற்கத் தொடங்கினர். இன்னும் சிலர், ஒலிக்கும் உடலுறுப்புக்களை ஒட்டிக் கற்க

1. In the most ancient layers of tbe Tamil language can be discovered not only ample trace of Neolithic culture but also the birth of the iron age culture which succeeded it.—
—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 179.

லாயினர். இன்று, உளநூலை அடிப்படையாகக் கொண்டு கற்பவர் பலர் உள்ளனர். மொழி என்பது பேசப்படும் நாட்டின் வரலாற்றோடும் மக்களின் வரலாற்றோடும் இயைந்தது; உடலுறுப்புக்களால் ஒலிக்கப்படுவது; மூளை நரம்புகளின் அசைவுகளால்—எண்ணங்களின் எழுச்சியாலும் வளர்ச்சியாலும்—அமைவது; ஆகவே பலரும் பல துறையிலிருந்து மொழியை ஆராய இடம் உள்ளது.

வரலாற்றுக் காலம் என்றும், வரலாற்றுக்கு எட்டாக் காலம் என்றும் நாட்டு வரலாற்று ஆராய்ச்சியாளர் பழங்காலத்தை இருவகையாகப் பிரிப்பர். நாட்டின் வரலாற்றை ஆராயும்போது, வரலாற்றுக்கு எட்டும் காலத்தை மட்டும் ஆராய்ந்து அமைதியுற முடிகின்றது. அரச மரபுகள் தோன்றிய காலம்முதல், நாட்டின் வரலாற்றை எழுதுதல் வழக்கம் ஆகிவிட்டது. ஆயின், மொழி வரலாற்றை அவ்வாறு தொடங்குவதால் பயன் இல்லை. மொழி வரலாற்றை ஆராய்வோர், வரலாற்றுக்கு எட்டாத இருண்ட காலத்தையும் காணவேண்டியுள்ளது; கண்டு, இவ்வாறு இருந்திருக்கலாம் அவ்வாறு இருந்திருக்கலாம் என்று தம் கற்பனைக் கருத்துக்களைக் கூறவேண்டியுள்ளது. ஆதலின் இத் துறையில் தெளிவின்மையே காணப்படுகிறது.[1]

போதா முயற்சி

வரலாற்றுக்கு எட்டாத பழங்காலத்தை ஆராய்வோர் மூவகைப்படுவர். பழைய மனித எலும்புக்கூடுகளையும்

1. All these theories are at the most tentative in character. No finality could be reached and no conclusions could be drawn on the slender foundations of possible evidences.—V. R. R. Dikshitar, Pre-Historic South India, pp. 134-135.

மண்டையோடுகளையும் கொண்டு ஆராய்ச்சி நடத்தும் பழமை யாராய்ச்சியாளர்; பழங்காலக் கருவிகள் ஈகைகள் முதலியவற்றைக் கொண்டு ஆராய்ச்சி நடத்தும் புதை பொருளாராய்ச்சியாளர்; உள்ள ஒலிகளையும் சொற் களையும் கொண்டு பழைய நிலை இவ்வாறு இருந்திருக்கக் கூடும் என எண்ணி ஆராய்ந்தறியும் மொழியியல் ஆராய்ச்சியாளர்: இம் மூவரும் வரலாற்றுக்கு எட்டாமல் இருண்டுகிடக்கும் பழைய நிலைகளை ஆராய்வோர் ஆவர். இவர்கள் தங்களுக்குப் புலனுகும் உண்மைகளைக் கொண்டு முறைப்படுத்திக் கூற முயல்கின்றனர்.

உண்மைகளை உணர்த்தும் சான்றுகள் போதியன கிடைத்துவிட்டன என்று கூறமுடியவில்லை. ஆராய்ச்சி தொடங்கியவர்கள் ஐரோப்பியரே ஆதலின் ஐரோப்பிய நாடுகளில் தேடிய அளவுக்கு, ஆசியா முதலிய மற்ற நாடு களின் சான்றுகளை அவர்கள் தேடி வெளிப்படுத்தவில்லை. மொஹஞ்சதாரோ ஹாரப்பா முதலிய ஒருசில சான் றுகள் தவிர, திராவிட வரலாற்றிற்கு உரிய சான்றுகள் இன்னும் போதிய அளவிற்கு உலகறிய வெளிக்கொணரப் படவில்லை.[1]

---

1. The earliest signs and traces at present known to science of humanity which is indisputably kindred with ourselves have been found in western Europe and particularly in France and Spain.....

Of course our present collections of these things are the merest beginnings of the accumulations we may hope for in the future.....The greater part of Africa and Asia has never even been traversed yet by a trained observer interested in these matters and free to explore...

In Asia or Africa or submerged beneath the sea of today there may be richer and much earlier deposits of real human remains than anything that has yet come to light.—H. G. Wells, A Short History of the World, ch. XI.

முதல் மக்களினம்

முதல் முதலில் இந்தப் பரந்த நிலவுலகில் ஒரு பகுதியில் மக்கள் தோன்றி வளர்ந்தனர். அவர்கள் பேசிய மொழியே முதல் மொழி. அந்த மக்கள் பின்னர்ப் பல் வேறு இடங்களில் குடியேறினர். குடியேறிய மக்கள் அவ் வவ் விடங்களில் அந்த மொழியைப் பல்வேறு வகையாகத் திரித்துப் பேசினர். அதனால்தான் மொழிகள் பலவாக ஏற்பட்டன. நாளடைவில் அந்த மொழிகளில் ஒவ் வொன்றும் பல்வேறு கிளைமொழிகளாகப் பிரிந்து வளர்ந் தன. அதனால்தான் மொழியினங்கள் என்றும், ஒவ்வோர் இனத்திலும் இனமொழிகள் என்றும் பலவாக உள்ளன.

அவ்வாறு மக்கள் முதல் முதலில் தோன்றிய நிலப் பகுதியை லெமூரியா என்பர். அது இந்தியக் கடலில் இருந்து அழிந்தது என்றும், அழிந்தபின் மக்கள் பல் வேறு திக்குகளில் சிதறி அங்கங்கே குடியேறினர் என்றும், ஐரோப்பாவில் சேர்ந்தவர் ஐரோப்பியர் என்றும், ஆப் ரிக்காவில் சிதறிச் சென்றவர் ஆப்ரிக்கர் என்றும், இந்தி யாவைச் சேர்ந்தவர் இந்தியர் என்றும், ஜாவா சுமத்ரா வழியாகச் சீனு முதலிய பகுதிகளுக்குச் சென்றவர் மங்கோலியர் என்றும் இவ்வாறு பலவகை மக்களாக வாழ நேரிட்டது என்றும் கூறுவர்.[1] அந்தந்த நாட்டுத் தட்ப

1. We are therefore forced to acknowledge that the Dravidians of India, after a long period of development in this country, travelled westwards, and settling successfully in the various lands, they found their way from Mesopotamia up to the British Isles, spread their race—afterwards named Mediterranean owing to the place where they were known anthropologically—through the west and made their civilization flourish in two continents, being thus the originators of the modern world civilisation.—Rev. H. Heras, Studies in Proto-Indo-Mediterranean Culture, p. 21.

வெப்ப நிலையாலும் உணவு வகையாலும் நிறமும் உட லமைப்பும் வேறுபடலாயின என்பர். லெமூரியா என்று கூறப்படும் அந்த நிலப் பரப்பே குமரிக்கண்டம் என்று தமிழிலக்கியத்தால் அறியப்படும் பகுதியாகும். அங்கே குமரிமலை என்ற பெருமலை இருந்தது என்றும், பஃறுளி யாறு என்னும் ஆறு ஓடியது என்றும் பழந்தமிழ்ப் பாட் டுக்கள் அறிவிக்கின்றன.[1] அந்த மலையும் ஆறும் இருந்த பழங்காலம், இமயமலையும் கங்கையாறும் தோன்றுமல் இந்தியாவின் வடகோடி கடற்பகுதியாக இருந்த கால மாகும். அத்தகைய குமரிக்கண்டத்தில் முதல்முதலில் மக்கள் இருந்தனர் என்றும், அவர்கள் பேசிய மொழியே உலக முதல்மொழி என்றும் கொண்டால், பழந்தமிழரே முதலில் தோன்றிய மக்கள் என்றும், பழந்தமிழே முதலில் பேசப்பட்ட மொழி என்றும், உலகில் ஆங்கிலேயர் முதலான ஐரோப்பியரும் மற்ற இனத்தவர்களும் பழந் தமிழரின் வழித்தோன்றியவர்களே என்றும், மொஹெஞ் சதாரோவில் வளர்ந்த பழந்தமிழ் நாகரிகமே மத்திய தரைக்கடலை அடுத்த பகுதிகளில் எகிப்து நாகரிகம், பாபிலோனிய நாகரிகம், போனிசிய நாகரிகம், கிரேக்க நாகரிகம் முதலியன வளரக் காரணமாக இருந்தது என்றும் கருத இடம் உள்ளது.[2]

---

1. வடிவேல் எறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
—சிலப்பதிகாரம், காடுகாண் காதை.

2. The better suggestion would be that the Dravidians who were also experts in the art of navigation could have influenced the Cretan and Aegean culture not only by their customs and manners but also by the various symbols. This might have been possible as the Dravidian culture flowed t hrough Mesopotamia, Lycia and other countries. Therefore

தென்னிந்திய மலைகளிலும் மேடுகளிலும் உள்ள கற்கள் உலகிலேயே மிகப் பழைய கற்களாய்க் கோடிக் கணக்கான ஆண்டுகட்கு முற்பட்டனவாய் இருத்தலை ஆய்ந் தறிந்து அறிஞர் வியப்புறுகின்றனர். தென்னிந்திய நிலப் பகுதி, ஒருபுறம் மடகாஸ்கர் தென்னாப்ரிக்கா தென் அமெரிக்கா முதலியவற்றோடும், மற்றொருபுறம் மலேயா ஆஸ்திரேலியா முதலியவற்றோடும் சேர்ந்ததாய்ப் பெரிய நிலப்பரப்பாய் ஒரு காலத்தில் விளங்கியிருந்தது என்ப தற்கு நிலநூல் பல சான்றுகள் காட்டுகின்றது என்பர்.[1] இந்தியாவிற்குள்ளும், வட இந்தியாவில் காணப்படுவன போல் எரிகுழம்புகள் எழுந்து படிந்தமைக்கோ, பூகம் பங்கள் ஏற்பட்டமைக்கோ அறிகுறிகள் ஒன்றும் தென் னிந்தியாவில் காணப்படவில்லை. ஆதலின், உலகம்

---

it would be possible to suppose that the South Indian ideals which made a mark in Mohenjodaro and Harappa flowed both by land and sea to the countries of the Mediterranean region whose finds resemble remarkably those found in Southern India.—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 170.

Animated by a love of adventure the ancient South Indian left his shores by sea to the Mediterranean regions and the Far East and colonised these regions feeling the necessity for new homes. Those who left for the Mediterranian region were responsible for making the new Mediterranean race...We must not forget that there was also a land route which led them to the Indus Valley, Baluchistan, Mesopotamia and Egypt. Thus there was contact, perhaps, intimate contact of peoples and cultures. These we may call tentatively the makers of, and the people responsible for, the Dravidian culture and civilization.—Ibid. p. 134.

1. South India formed a great part of the continental area known as the Gondvana land, which extended through Madagascar and South Africa to South America on the one side and through Malaya Archipelago to Australia on the other. —Ibid. p. 5.

தோன்றிய காலத்தில் குழம்பாக இருந்த மண் முதலில் குளிர்ந்து அமைந்த நிலப்பகுதி தென்னிந்தியாவே என்றும், இங்குத்தான் மனிதன் முதலில் தோன்றியிருக்கக் கூடும் என்றும் ஆராய்ச்சி புலப்படுத்துகிறது.[1]

வெவ்வேறு கொள்கைகள்

ஆயின் இன்று இக் கொள்கைகளுக்கு உலகில் ஆதரவு குறைவு. பழந்தமிழர் பழந்தமிழ் என்று கூறுமல், விளங்காத வேறு பெயர்களால் கூறின் ஒருவாறு உலகம் வாளா இருக்கிறது. காரணம், இன்றுள்ள தமிழரும் தமிழும் சிறு பான்மையுற்றுச் சிறப்பு இழந்து நிற்றலே ஆகும். குடிசையில் ஏழைக் குடியானவன்குடும்பத்தில் பிறந்த ஒருவன் உயர்நிலை உற்றபின் தன் பிறப்புப் பற்றிக் கூற நாணுதல் போன்ற நிலைமை இத் துறையில் உள்ளது. முந்நூறு ஆண்டுகளுக்கு முன் சேரநாட்டில் தமிழின் திரிபாய் வளர்ந்த மலையாளமொழியைத் தமிழின் கிளை எனின் மலையாளிகள் உடன்படுவதில்லை; செல்வாக்கு இழந்த மொழியாக உள்ள தமிழ் என்பதன் பெயரோடு தம் மொழியைத் தொடர்புபடுத்திக்கொள்ள விரும்பாமையே இதற்குக் காரணம்.

மத்தியதரைக்கடலை அடுத்த நிலப்பகுதியில் மக்கள் முதல் முதலில் தோன்றினர் என்பது மற்றொரு கொள்கை. அங்கிருந்தே மக்களும் மக்களின் மொழியும் பல இடங்களில் பரவிப் பலவகைப்பட நேர்ந்தது என்பர்.

---

1. Considering the fact that we have scarcely any trace of volcanic eruptions or earth-tremours, as they frequently occur in North India, it may be said that South India was the part of the world to settle first as a land mass. It is probable that the original man might have come into existence first in South India.—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 234,

மக்களின் தோற்றம் ஒரே இடத்தில் இருந்திருக்க வேண்டியதில்லை என்னும் கொள்கையும் உள்ளது. சில இடங்களில் தனித்தனியே தோன்றி வளர்ந்தனர் என்றும், அங்கங்கே தனித்தனி மொழிகள் வளர்ந்தன என்றும் அக் கொள்கையினர் கருதுவர்.

மக்கள் தொடக்கத்தில் ஒரே இடத்தில் தோன்றியிருப்பினும் அந்த இடத்தில் அவர்கள் வாழ்ந்த காலத்தில் மொழி தோன்றவில்லை என்றும், பல்வேறு இடங்களில் சிதறிச் சேர்ந்த பிறகே அவ்வவ்விடங்களில் வேறு வேறு மொழிகள் தோன்றின என்றும் கூறுவர் சிலர்.

இந்தியாவிற்கு வடகிழக்குக் கணவாய் வழியாகவும் வடமேற்குக் கணவாய் வழியாகவும் வேறு வேறு இன மக்கள் வந்து குடியேறினர்கள் என்றும், அவர்கள் குடியேறுவதற்குமுன் இந்தியாவில் பழங்குடி மக்கள் இருந்தார்கள் என்றும் கூறுவர். அந்தப் பழங்குடி மக்களே பழந் தமிழர் அல்லது திராவிடர் என்பது பெரும்பாலோர் கருத்து. அவர்கள் திராவிடர் அல்லர், நாகர் என்னும் பழையதோரினத்தார் என்பர் சிலர். திராவிடர் என்பவர் மற்றவர்கள் போல் இந்தியாவிற்குள் குடிபுகுந்தவர்களே என்பது சிலர் கருத்து.

வடகிழக்குக் கணவாய் வழியாகத் துரானியர் என்னும் மஞ்சள் நிற மக்கள் வந்து திராவிடரோடு கலந்தனர் என்றும், அதனால்தான் பழந்தமிழாகிய திராவிட மொழியில் துரானிய மொழிக் கூறுகள் சில கலந்து அமைந்தன என்றும், முண்டாமொழிகளில் அக் கூறுகள் பல அமைந்து விட்டன என்றும் கூறுவர். வடமேற்குக் கணவாய் வழியாக ஆரியர் வந்து கலந்தனர் என்பதும், அவர்களின் கலப்பால் திராவிட மொழியும் ஆரிய மொழியும் கலந்தன

என்பதும் பெரும்பாலோர் உடன்பட்ட கொள்கை களாகும்.

வரலாற்றுக் குறிப்புக்கள்

வரலாற்றைப் போற்றிக் குறித்து வைக்கும் வழக்கம் இந்த நாட்டில் இருந்ததில்லை. உள்ள சிறு குறிப்புக்களும் அயல்நாட்டிலிருந்து இங்கு வந்தவர்கள் இந்த நாட்டைப் பற்றி எழுதிவைத்துள்ள குறிப்புக்களே. கிரேக்க ஆசிரியர் தாலமி (Ptolemy), பெரிப்ளஸ் (Periplus), பிளினி (Pliny), சீனவிலிருந்து வந்து சுற்றிப் பார்த்த ஹியூன் சியாங் ஆகியோரின் குறிப்புக்கள் உள்ள அளவிற்குத் தமிழ்நாட்டில் தமிழர் ஒன்றும் குறித்து வைக்கவில்லை. தமிழ் வேந்தரைப் பற்றி இலங்கைநாட்டு வரலாறுகிய மகாவமிசம் என்னும் பழைய நூல் குறித்துள்ள அந்த அள விற்கும் தமிழ் நாட்டில் வரலாற்று நூல் இல்லை. பழந் தமிழ்நாட்டைப் பற்றி அறிவிக்கும் சான்றுகளாக உள் ளன எல்லாம் புறநானூறு முதலிய இலக்கிய நூல்களே ஆகும். பிற்காலத்தில் கல்வெட்டுக்கள் ஓரளவு சான்று களாக அமைந்து உதவுகின்றன.

தனித்தனி மாந்தரின் பிறப்புநாள் நாழிகை முதலிய வற்றைக் குறித்துவைக்கும் பழக்கம் உள்ள நாட்டில், நாட்டின் பொதுவான வரலாற்றைக் குறிக்கும் பழக்கம் இல்லாதிருந்தது வருந்தத்தக்கதே. தனியாட்களைப் போற் றும் அளவிற்கு நாட்டைப் பொதுவாகப் போற்றும் நல்ல கொள்கை இங்கு இன்னும் வேரூன்றவில்லை. பிற்காலத்துக் கல்வெட்டுக்களிலும், நாட்டுப் பெருநிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிடும்போது, நாட்டுக்குப் பொதுவான மரபை உடைய ஆண்டின் கணக்கால் குறிப்பிடாமல், அந்த அரசன் முடிசூடிய ஆண்டிலிருந்து கணக்கிட்டு அவ

னுடைய ஆட்சியில் இத்தனையாம் ஆண்டு என்று குறிப்பிடும் வழக்கமே காணப்படுகிறது. பொதுவான மரபை உடைய ஆண்டின் கணக்கால் குறிப்பிட்டிருந்தால், இன்றைய வரலாற்று ஆராய்ச்சிக்கு அது ஓரளவு தணை புரியும். வரலாற்றில் எழுதுவோரின் மனப்பான்மைக்கு ஏற்பப் பொய்யும் திரிபும் புகுதல் எங்கும் உள்ள இயல்பே எனினும், அவற்றினிடையே கால ஆராய்ச்சி பற்றிய உண்மை காண்பதற்கேனும் வழி இருந்திருக்கும்.

எழுதிப் போற்றுமை

புதியன படைக்கும் துறையிலும் கலைச்செல்வத்தை நுகரும் துறையிலும் தமிழர் வல்லவர்களாக விளங்கினர் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆயின், தாம் படைத்த புதுமைகளைப் பற்றிப் பல நூல்கள் எழுதவில்லை; தாம் நுகர்ந்த கலைச்செல்வங்களைப் பற்றியும் எழுதிவைக்க வில்லை. கட்டிடக் கலையிலும் கடல்வாணிகத் துறையிலும் தேர் யானை குதிரை காலாள் ஆகிய படைத் துறையிலும் மிக மிக வல்லவர்களாக ஒப்பும் உயர்வும் அற்று விளங்கிய இப் பெருமக்கள் அவற்றைப் பல நூல்களில் எழுதிப் போற்றிக் காக்கவில்லை. யானை நூல், குதிரை நூல் என ஒன்றிரண்டு இருந்து அழிந்தனவாக அறியப்படுகின்றன. குழல் யாழ் முதலிய கருவிகள் கொண்டு இசைக்கலையை மிக நுட்பமாக வளர்த்து, தொட்டில்முதல் அரியணைவரையில் இசையைப் போற்றிப் பரப்பி மகிழ்ந்த மக்கள், இசைநூல் கள் பல எழுதவில்லை. இருந்த இரண்டொரு நூல்களாகிய இசைநுணுக்கம் போன்றவைகளும் காக்கப்படாமற் போயின. சமையல்கலையில் இன்றளவும் நிகரின்றி விளங்கும் மக்கள், தமிழில் அதைப் பற்றிச் சிறந்த நூல்கள் எழுதி வைக்கவில்லை. ஓவியம், சிற்பம், அணிகலன், ஆட்சி

முறை முதலிய பல துறைகளிலும் இந்தக் குறை இருந்து வருதல் போலவே, வரலாற்றுத் துறையிலும் குறை உள்ளது.

வேறு பெயர்கள்

திராவிட மொழியினம் என்று தமிழ் முதலிய மொழிகளைக் கூறும் வழக்கு, சென்ற நூற்றாண்டில் வளர்ந்தது. சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்மொழியினம் அல்லது மலபார் மொழியினம் என்று கூறும் வழக்குகளும் இருந்திருக்கின்றன.[1] தமிழ் மிகத் திருந்திய மொழியாகவும் செல்வாக்கு உள்ள மொழியாகவும் இருத்தலை உணர்ந்த ஐரோப்பியர், தமிழினம் (the Tamilian group or family) என வழங்கினர். மேற்குக் கடற்கரையில் இறங்கி அங்கே வழங்கிய மலையாள மொழியைப் பற்றி அறிந்து கிழக்குக் கடற்கரை வரையில் வந்தவர், இங்குள்ள தமிழ்மொழியின் வேறுபாட்டை அறியாதவராய்த் தென்னாட்டு மொழியை மலபார்மொழி என்ற பெயரால் குறித்தனர். அவர்கள் வந்த காலத்தில் தமிழும் மலையாளமும் வேறுபடாமல், மலையாளத்தில் வடசொற்களும் திரிபுகளும் மிகாமல் இருந்த நிலைமை அதற்குக் காரணம் எனலாம்.

திராவிட மொழிகளுள் தொன்மைச் சிறப்பும் தெளிவான அடிப்படை யமைப்பும் உடைய தமிழ்மொழியின் பெயரால் அதன் இனத்தைச் சுட்டுவது பொருத்தமே ஆயினும், தெளிவு கருதித் தமிழ்மொழியை மட்டும் சுட்டிக் கூறுவதற்கு ஒரு பெயரும், அதன் இனத்தைச் சுட்டு

1. The group commonly called the Tamilian or Dravidian group or family—Whitney, Language and the Study of Language, p. 326.

This group which is spoken of as the Tamulu, the Tamil and the Malabaric family—Abel Hovelacque, The Science of Language, p. 77.

வதற்கு வேறொரு பெயரும் இருத்தல் நலம் என்று கால்டுவெல் கருதுகிறார்.[1]

திராவிடம் என்ற சொல்

வடமொழியில் வால்மீகி ராமாயணத்திலும் மனு நூலிலும் பாரதத்திலும் பாகவதத்திலும் திராவிடர் என்ற சொல் வழக்கு உள்ளது. கி. பி. எட்டாம் நூற்றாண்டில் குமாரிலபட்டர் என்பவர் ஆந்திரதிராவிட பாஷைகள் என்ற தொடரை வழங்கியுள்ளார். அவர் கருத்துப்படி, ஆந்திரா என்பது தெலுங்கைக் குறிக்க, திராவிடம் என்பது தமிழைக் குறிப்பதாகிறது. 1573-ல் தாரநாத் என்பவர் எழுதிய புத்தமத நூலில் 'திரமிள' என்ற சொல் தமிழைக் குறிக்கிறது. தென்னாட்டு மக்களைப் பொதுவாகக் குறிக்கத் திராவிடர் என்ற சொல்லை வடநூல்கள் வழங்குகின்றன. தமிழில் உள்ள ஆழ்வார் நாயன்மார்களின் பாடல்கள் திராவிட வேதம் என்று குறிக்கப்படுதலும் உண்டு. சங்கராச்சாரியார் திருஞானசம்பந்தரைத் 'திராவிட சிசு' என்று கூறியுள்ளார். விந்தியமலைக்குத் தெற்கே வழங்கிய மக்களை மகாராஷ்டிரர், ஆந்திரர், திராவிடர், கருநாடகர், கூர்ச்சரர் என்று பகுத்துப் பஞ்ச திராவிடர் என்று கூறும் மரபும் வடநூல்களில் காணப்படுகிறது.

1. It thus appears that the word 'Dravida' from which the term 'Dravidian' has been formed, though sometimes used in a restricted sense, as equivalent to Tamil, is better fitted, notwithstanding, for use as a generic term; inasmuch as it not only has the advantage of being more remote from ordinary usage, and somewhat more vague, but has also the further and special advantage of having already been occasionally used by native philologists in a generic sense. By the adoption of this term 'Dravidian', the word 'Tamilian' has been felt free to signify that which is distinctively Tamil.—Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, Introduction, p. 7.

தமிழைத் திராவிடம் என்ற பெயரால் குறிப்பிட்டமைக்கு இதுவும் ஒரு சான்றாகும்.[1]

தமிழ் என்ற சொல்லுக்கு நேரான வடசொல் திராவிடம் என்பதைக் கால்டுவெலும் எடுத்துக்காட்டியுள்ளார்.[2] தமிழ், திராவிடம் என்பவை வேறுபட்ட இரண்டு சொற்கள்போல் காணப்படினும், ஒன்றன் திரிபே மற்றது என்பதையும் அவர் உடன்படுகிறார். ஆனால் திராவிடம் என்ற சொல்லே தமிழ் எனத் திரிந்தது என்ற கொள்கையைப் போற்றுகிறார். திராவிடம், திரவிடம், திரமிடம், திரமிளம், த்ரமிளோ, தமிளோ, தமிழ் எனப் படிப்படியே திரிந்திருத்தல் கூடும் என்கிறார். பழைய ரோமகிலப் படங்களில் (The Peutinger Tables) தமிரிசி என்ற பெயரும், சீன அறிஞர் ஹியூன்சியாங் எழுதிய குறிப்பில் ட்சிமோலோ என்ற பெயரும் தமிழுக்கு ஈடாக வழங்கு வதையும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

தமுளியா (Lingua Damulia) என்ற திரிபை டச்சுப் பாதிரிமார்களும், தமிரிசி (Damirici) என்ற திரிந்த வடிவத்தை ரோமர்களும், தெஹிமோலோ (Tehi-molo) என்ற திரிபைச் சீனரும் வழங்கியது போலவே, தமிழ்ஞாலி பயிலாத ஆரியர் தமிழ் என்பதையே தமிளோ, த்ரமிளோ, திரமிளம், திரவிடம், திராவிடம் எனத் திரித்து வழங்கினர் எனக் கொள்வதே பொருந்தும்.[3] தமிழ் என்ற சொல்

1. Still later on the people who lived south of the Vindhya ranges were designated as Pancha Dravidas viz., Maharastra, Andhra, Dravida, Karnataka and Gurjara.—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 203.

2. Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, Introduction, pp. 4, 5.

3. To return to the term Dravida, it must be a corruption of the word Tamil :...So the Dravidian must legitimately

மிகப் பழங்காலம் முதல் தமிழிலக்கியத்தில் பயின்று வழங்கியிருத்தலையும், திரமிளம் திராவிடம் என்ற சொற்கள் வடநூல்களில் ஒரோவழி ஆங்காங்கே வழங்குதலையும் இங்குக் கருதல் வேண்டும்.

பழம்பெருமை

வடமொழியின் முதல் காவியமாகிய வால்மீகி ராமாயணத்தில் தமிழர் பாராட்டப்பெற்றுள்ளனர். "பின்பு, பொன் நிறைந்ததாயும் அழகுடைத்தாயும் முத்து மணி இவற்றால் அணியப்பட்டதாயும் நகரத்து அரணோடு இணைக்கப்பட்டதாயும் உள்ள பாண்டியர் வாயிற் கதவை, வானரங்காள், போய்க் காண்பீர்"[1] என்று இராமன் கிஷ்கிந்தையில் (ஆந்திர நாட்டுப் பெல்லாரி மாவட்டத்து ஹம்பி Hampi என்னும் இடத்தில்) இருந்த வானரப் படையினர்க்குச் சொன்னதாக அக் காவியம் கூறுகிறது.

தமிழ்நாட்டுக் கடற்கரைப் பட்டினங்கள் உலக வாணிகத்தின் தலைமை நிலையங்களாக விளங்கியிருந்தன. மரக்கலத்திற் சென்று பல நாடுகளிலும் தமிழர் வாணிகத்தின் காரணமாகப் பழகியிருந்தனர். கடற்பயணத்தில் தமிழர் மிகப் பயின்றிருந்த காரணத்தால், ஆழி, புணரி, முந்நீர், பவ்வம், பரவை, ஆர்கலி, கடல் முதலிய பல சொற்கள் ஒரே பொருளைக் குறிக்க ஏற்பட்டன.

---

refer to the growth and development of the Tamil language. But the word has been extended by modern scholars to all the allied languages and even as the generic name for all South Indian people.—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p, 203.

1. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், தமிழ்மொழி வரலாறு, பக். 49.

பொருள்களும் சொற்களும்

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே சேர நாட்டின் தேக்கமரம், தமிழ்க் கப்பல்களின் வாயிலாக வெளிநாடுகளுக்குச் சென்று பல நகரங்களில் அரிய பெரிய கட்டிடங்களை எழுப்பியுள்ளது. பல்வேறு பொருள்கள் எகிப்து சிரியா பாபிலோனியா முதலிய நாடுகளுக்குத் தமிழகத்திலிருந்து சென்றிருந்தன. தமிழ் நாட்டு நீலிச்சாயத்தில் தோய்த்த மெல்லிய துணிகள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட எகிப்து நாட்டுக் கல்லறைகளில் காணப்பட்டனவாம். கி. மு. 962—930-ல் இருந்த சாலமன் என்ற ஹீப்ரு மன்னன் இந் நாட்டிலிருந்து பொன், வெள்ளி, தந்தம், குரங்கு, மயில், அகில் ஆகியவற்றைப் பெற்றதாக வரலாறு கூறுகிறது. பைபிலில் மயில்கள் துக்கியம் (Tukkiyam) என்று குறிக்கப் பட்டுள்ளன. 'அம்' பன்மை விகுதியாக, துகி என்ற சொல் தமிழில் உள்ள தோகை என்பதன் திரிபாகும். இந்தச் சொல் ஹீப்ரு அகராதிகளிலே மிகப் பழங்காலத்திலேயே இடம் பெற்றுவிட்டது.

ஆரியர் அறியாதது யானை; அதனால் யானை மிகப் பழைய வேதமொழியில் இடம் பெறவில்லை என்பர். ஆனால் யானைகள் தமிழ்நாட்டிலிருந்து கி. மு. 727-722-ல் அசிரிய நாட்டு மன்னனாகிய ஷால்மனேசருக்கு நன் கொடையாக அளிக்கப்பட்டன. தமிழ் நாட்டு அரிசி பாபிலோனியாவுக்குக் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் அனுப் பப்பட்டது; சந்தனமும் அனுப்பப்பட்டது. அரிசி சந்தனம் என்ற தமிழ்ச் சொற்களும் அந் நாட்டு மொழியில் இடம் பெற்றன. அரைசா (Oryza) என்று அன்று ஹீப்ரு மொழியில் அவர்கள் எழுதிவைத்த சொல்தான் ஐரோப்பிய மொழிகளில் புகுந்து திரிந்து பல வடிவு

பெற்றது ; இன்று ஆங்கிலத்தில் ரைஸ் (rice) என வழங்கும் சொல்லும் இத் திரிபிலிருந்து பிறந்ததே ஆகும். தமிழ் நாட்டு அரிசி ஆங்கில 'ரைஸ்' ஆனதுபோலவே, தமிழிலக்கியத்தில் உள்ள சாந்தம் (சந்தனம்) பல மொழிகளின் வாயிலாக ஆங்கிலத்திற்கு எட்டி, சந்தல் (sandal) ஆயிற்று.

தமிழ் நாடு உலக முழுவதிற்கும் தந்த பாண்டிநாட்டு முத்து, வடமொழி இலக்கியங்களில் 'முக்த' எனத் திரிந்து வழங்குகிறது. தமிழ் நாட்டு அகில் ஹீப்ரு மொழியில் அஹலிம் அஹலத் என ஆகியது ; வடமொழியில் அகரு என நின்றது.

பாண்டியர் சோழர் சேரர் என்னும் வேந்தர் பெயர்களும், ஆர்க்காடு கரூர் முசிரி தொண்டி கொற்கை குமரி முனை பொதிகை கோடி என்னும் இடப்பெயர்களும் எவ்வெவ்வாறு கிரேக்கர் முதலியோரால் குறிப்பிடப் பெற்று அவர்களின் வரலாறுகளில் இடம் பெற்றன என்பதைக் கால்டுவெல் தம் ஒப்பிலக்கணத்தின் முன்னுரையில் எடுத்துரைத்துள்ளார்.[1]

வாணிகச் சிறப்பு

கி. பி. இரண்டாம் நூற்றாண்டு மூன்றும் நூற்றாண்டுகளில் ரோமர்கள் தமிழர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். முசிரி என்னும் சேரர் துறைமுகத்தில் ரோமர் பலர் தங்கி வாழ்ந்தனர். ரோம் நாட்டுக் குறிப்புக்களின்படி (Peutingerian Tables of 225 A. D.) ஈராயிரம் ரோமர்கள் அடங்கிய படை ஒன்று அத் துறைமுகத்தில் இருந்ததாக அறியப்படுகிறது ; அகஸ்டஸ்

1. Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, Introduction, pp. 15-28.

போல் ஒரு கோயிலும் கட்டியிருந்ததாக அறியப்படுகிறது. கிரேக்கர்களும் பலர் மேற்குக் கரையில் வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது. பழைய ரோம நாணயங்கள் பல தமிழ்நாட்டுக் கடற்கரைகளில் கண்டெடுக்கப்பட்டவை இதற்குச் சான்றுகளாக உள்ளன. முத்துக்களை அனுப்பும் புகழின் தொடர்பாகவே கிரேக்கர்கள் பலரும் தமிழ்நாட்டை அறிந்திருந்தனர். முத்து, அதைப் போல் மூன்று மடங்கு எடையுள்ள மாற்றுயர்ந்த பொன்னுக்கு நிகராக மதிக்கப்பட்டதாம். காயஸ் கிளாடியஸ் என்னும் வேந்தனுடைய மனைவி, மூன்று லட்சம் பவுன் மதிப்புள்ள முத்து அணிந்திருந்தாளாம். முத்துக்களுக்காகவும் மணிகளுக்காகவும் இருபது லட்சம் பெறும் ரோம் நாட்டுச் செல்வம் ஆண்டுதோறும் தமிழ்நாட்டுக்குச் சென்று விடுகிறதே என்று பிளைனி (Pliny) என்னும் ரோம் வரலாற்று ஆசிரியர் மிக வருந்தினர்.

தமிழ்நாட்டின் வாணிகச் சிறப்பு, பெரும்பாலும் பிறரைப் போற்ற முன்வராத வடநூலாராலும் போற்றப்படும் அளவிற்குச் சிறந்து விளங்கியது. அர்த்த சாஸ்திரம் என்னும் வடநூலாசிரியர் கௌடில்யர், வடநாட்டு வாணிகத்தைவிடத் தென்னாட்டு வாணிகமே சிறந்தது என்றும், வடநாடு கம்பளி தோல் குதிரைகளில் வாணிகம் நடத்த, தென்னாடோ மிக உயர்ந்த பொருள்களாகிய பொன் வைரம் முத்து சங்கு முதலியவற்றில் வாணிகம் நடத்துகிறது என்றும் குறித்துள்ளார்.

கிழக்கே சீனா முதலிய நாடுகளுடனும் ஜாவா சுமத்ரா மலேயா முதலிய தீவுகளுடனும் தமிழ்நாடு வாணிகம் முதலிய துறைகளில் தொடர்பு கொண்டிருந்தது.

வேந்தர் மரபுகள்

இலங்கை நாட்டுப் பழைய வரலாற்று நூல்களாகிய மகாவமிசம், ராஜவழி, ராஜரத்னகரி என்பவற்றிலும் தமிழரின் வாணிகச் சிறப்பும் போர்த்திறனும் ஆட்சிப் பெருமையும் பொறிக்கப்பட்டுள்ளன. கி. மு. ஆறாம் நூற்றாண்டில் ஒரு பாண்டிய இளவரசன் இலங்கை அரச குடும்பப் பெண்ணை மணந்ததாகக் கூறப்பட்டுள்ளது. வேறு பல காலத்திலும் அரச குடும்ப உறவுகள் இரு நாடுகளுக்கும் இடையே இருந்துவந்தன.

கி. மு. 20-ம் ஆண்டில் பாண்டிய வேந்தன் ஒருவன் ஐரோப்பாவில் அப்போது புகழ் பெற்று விளங்கிய அகஸ்டஸ் என்ற வேந்தனுக்குத் தூது அனுப்பியுள்ளான். வேறொரு வேந்தன் கிரேக்க வீரர்களை வருவித்துத் தன் மெய்காப்பாளராக வைத்துக்கொண்டான்.

இவ் வரலாற்றுச் செய்திகள் எல்லாம் பிறநாட்டுக் குறிப்புக்களால் அறியப்பட்டவைகளே அல்லாமல், தமிழ் நூல்கள் கூறுவன அல்ல. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்நூலாகிய தொல்காப்பியமும் பத்துப்பாட்டு புறநானூறு முதலிய இலக்கியங்களும் கூறும் பொதுவான சான்றுகள் கணக்கற்றவை உள்ளன. புகார் (காவிரிப்பூம் பட்டினம்) கொற்கை முதலிய துறைமுகங்களைப் பற்றிப் பட்டினப்பாலை மதுரைக்காஞ்சி முதலிய தமிழ் நூல்கள் பல சான்றுகள் தருகின்றன. மதுரைமாநகரின் சிறப்புப் பற்றித் தமிழ்இலக்கியம் உயர்வுநவிற்சி இன்றிக் கூறும் குறிப்புக்கள் நல்ல வரலாற்றுச் சான்றுகளாகக் கொள்ளத் தக்கன.

சேர வேந்தன் ஒருவன் 'கடல் பிறக்கோட்டிய' சிறப்புப் பெற்றுள்ளான். இலங்கையிற் சென்று மணி

களைக் கொணர்ந்த அரபியரின் கப்பல்கள் சேரநாட்டுக் கரையை அணுகியதை அறிந்து, கடற்போர் நடத்தி அவற்றைத் துரத்திய பெருமையை இது குறிக்கின்றது.

செம்மொழி, பெருமொழி

சுருங்கக்கூறின், சென்ற நூற்றாண்டில் ஆங்கிலேயர் உலக மக்களிடையே பெற்றிருந்த செல்வாக்கான நிலையையும் பெருமையையும், இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழர் பெற்றிருந்தனர். ஒரு மொழி பேசும் மக்கள் ஆட்சி வாணிகம் முதலாய துறைகளில் தலைசிறந்து விளங்கும் காலத்தில் அந்த மொழியும் பல்லாற்றானும் வளம் பெற்றுச் சிறப்புறுதல் இயற்கை. ஆங்கிலேயர் மாட்சியுற்று உயர்ந்திருந்த சென்ற நூற்றாண்டில் ஆங்கிலம் உயர்ந்தோங்கியதுபோலவே, இருபது நூற்றாண்டுகளுக்கு முன் தமிழரின் உயர்வால் தமிழும் உயர்வுபெற்றுத் திகழ்ந்தது. ஆயினும் ஒரு வேறுபாடு கூறத்தக்கது. ஆங்கிலம் உயர்ந்தோங்கிய காலத்தில் அச்சுப்பொறி, விஞ்ஞானம், போக்குவரவுக் கருவிகள் முதலியவை அதன் ஆக்கத்திற்குத் துணைநின்றன ; ஆங்கிலேயரும் தம் வாழ்க்கையை வளம்படுத்தியதோடு தம் மொழியையும் செல்லுமிடம் எல்லாம் நிலைக்கச்செய்தனர். பழந்தமிழர் ஓங்கி உயர்ந்த காலத்தில், தமிழுக்கு இத்தகைய சிறந்த துணைக்கருவிகள் வாய்க்கவில்லை ; தமிழரும் தம் மொழியைப் பரப்புவதில் ஊக்கம் கொள்ளவில்லை. தக்க கருவிகளும் வாய்த்து, ஏற்ற முயற்சியும் செய்யப்பெற்றிருப்பின், இன்று உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக மட்டும் கருதப்படும் தமிழ் மொழி, உலகப் பெருமொழிகளுள் ஒன்றாகக் கருதப்படும் நிலையையும் பெற்றிருக்கும்.

ஆரியக் கலப்பு

ஆரியர் வருவதற்குமுன் திராவிடமொழி என்பது இந்திய நாடு முழுதும் இருந்தது.[1] வடகிழக்குக் கணவாய்களின் வழியாக மங்கோலிய மக்கள் சிலர் வந்து கலந்தனர். பிறகு வடமேற்குக் கணவாய் வழியாக ஆரியர் வந்து சிந்துநதிக்கரையில் குடியேறி அங்கிருந்த திராவிடரோடு கலந்தனர். அவ்வாறு அவர்கள் சிந்துநதிக்கரைக்கு வந்து சேருமுன்பு திராவிடர்கள் அங்கு நாகரிகமான வாழ்வு நடத்திவந்தனர்.[2] ஒழுங்காக வீடுகளைக் கட்டி, ஒழுங்காகத் தெருக்களையும் ஊர்களையும் அமைத்து, சிறந்த கருவிகளைச் செய்து பயன்படுத்தி வந்தனர்; எழுத்துமுறை வைத்துக்கொண்டு கலைகளையும் வளர்த்து வாழ்ந்து வந்தனர் என்பதற்கு மொஹெஞ்சதாரோ ஹாரப்பா புதைபொருளாராய்ச்சிகள் சான்றுகளாக உள்ளன.

எந்த நாட்டிலும் மக்களினங்கள் கலக்காமல் இருந்ததில்லை.[3] ஆரியர்கள் வந்து குடியேறியதும், திராவிட மக்களுடன் கலந்து அவர்களின் நாகரிக வளர்ச்சியையும் பழக்க

1. It is regarded as certain that Dravidian speakers were at one time spread over the whole of Northern India as well, Baluchistan to Bengal.—S. K. Chatterji, The Origin and Development of the Bengali Language, I, p. 28.

2. The early history of India is still very obscure. Somewhere, perhaps about 2000 B.C., an Aryan-speaking people came down from the northwest into India, either in one invasion or in a series of invasions, and was able to spread its language and traditions over most of North India. Its peculiar variety of Aryan speech was the Sanskrit. They found a brunet people with a more elaborate civilisation and less vigour of will in possession of the country of the Indus and Ganges.—H. G. Wells, A Short History of the World, ch. XXVIII.

3. We have to remember that human races can all interbreed freely and that they separate, mingle and reunite as

வழக்கங்களையும் கற்று மேற்கொண்டனர்;[1] படிப்படியாக அரசியல் துறையிலும் சமயத் துறையிலும் செல்வாக்குப் பெற்றனர்; திராவிட எழுத்துமுறையை ஒட்டிப் புதிய எழுத்துமுறையும் வகுத்துக்கொண்டனர்; கலப்பான பேச்சுமொழியிலிருந்து திருத்தமான இலக்கியமொழி ஒன்று வகுத்துக்கொண்டு அதை சம்ஸ்கிருதம் என்ற பெயரால் வழங்கினர். அதுவரையில் தம் செவிவாயிலாக உணரும் கலைகளாக (சுருதியாகக்) கற்றவற்றை எல்லாம், கண்வாயிலாகக் கற்றுணரும் கலைகளாக எழுதிவைத்தனர். திராவிடரிடம் வளர்ந்துவந்த அறிவுத்துறைகளை எல்லாம் புதிய எழுத்துமொழியால் எழுதிவைத்தனர். காலப் போக்கிற்குத் தேவையான மாறுதல்களை எல்லாம் அமைத்துப் புதிய கலைகளாகவும் புதிய துறைகளாகவும் தோன்றச் செய்து அவற்றை மக்களிடையே பரப்பினர். காலத்திற்கு ஏற்ற மாறுதல்கள் அமையப்பெற்ற கலைகளை எந்தக் காலத்திலும் எல்லா நாட்டவரும் வரவேற்றுப் போற்றுதல் இயற்கை. சிந்துநதிக் கரையிலிருந்த திராவிடரும் இவ் வாறு புது வடிவு பெற்று வந்த கலைச்செல்வங்களை ஏற்றுப் போற்றினர்.

---

clouds do. Human races do not branch out like trees with branches that never come together again. It is a thing we need to bear constantly in mind, this remingling of races at any opportunity. We shall be saved from many cruel delusions and prejudices if we do so...Nearly all the European nations are confused mixtures of brownish, dark-white, white and Mongolian elements.—H. G. Wells, A Short History of the World, Ch. XIV.

1. Aryan peoples, speaking Sanskrit, had come down through the western passes into North India long before 1000 B.C. There they came into contact with a primordial brunet civilisation, the Dravidian civilisation, and learned much from it.—Ibid. ch. XIX.

எளிதில் பெற்ற வெற்றி

ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை எதிர்த்துப் போராடும்போது, வெற்றி தோல்வி என்பவை வெளிப் படையாகத் தெரியும்; ஒருபுறம் ஆக்கமும் மற்றொருபுறம் அழிவும் புலனுகும். ஆனல் ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரைப் பகைவராகக் கருதி எதிர்க்காமல், அவர் களோடு இயைந்து கலந்தும் விட்டுக்கொடுத்தும் வாழத் தொடங்குவார்களாயின், தோல்வியும் அழிவும் இல்லாத அமைதியான வெற்றியைப் படிப்படியே பெற்றுவிட முடியும்.[1] எதிர்ப்பவர்களையும் எதிர்க்காமல், யாவரும் விரும்பும் வகையில் கடமையைச் செய்து காலப்போக்கில் வினையும் நன்மையை எதிர்பார்த்திருந்த காரணத்தால் தான், எளிதில் வெற்றிபெற முடிந்தது. சிந்துநதிக்கரைத் திராவிடர்களின் நல்ல பழக்க வழக்கங்களையும் கலைகளையும் ஏற்றுப் போற்றித் தம்முடையனவாகவே கொண்டுவிட்ட மையால், அங்குத் திராவிட நாகரிகம் என்று ஒன்று தனியே விளங்காதவாறு மாறுதல் ஏற்படுத்த முடிந்தது. எதிர்த்துப் போராடுவதே முதல் கடமையாகக் கொண்டி ருந்தால், வந்த ஆரியர் இத்தகைய வெற்றியைப் பெற் றிருக்க முடியாது.

சிந்துநதிக் கரையில் பெற்ற ஆக்கம் மெல்ல மெல்லக் கங்கைநதிக் கரையில் பரவியது. அப்போது ஒருசிலர் புதிய நாகரிகத்தை ஏற்காமல் எதிர்க்கத் தொடங்கினர். அவ்வாறு எதிர்க்கத் தொடங்கியவர், கலப்பற்ற திராவிட ராக இருக்க விரும்பினர். அவர்கள் கலப்புற்ற திரா

1. This borrowing of Dravidian culture by the Aryas, which proves the mythical character of the Aryanization of India, was doubtlessly fostered by the free mixture of both the races.—Rev. H. Heras, Studies in Proto-Indo-Mediterranean Culture. Vol. I, p. 12.

விடரின் பகைக்கும் புறக்கணிப்புக்கும் ஆளாயினர். பெரும்பான்மையான மக்கள் புதுமையை வரவேற்க, சிறு பான்மையோர் அதை எதிர்க்கும் நிலைமை ஏற்பட்டது. பெரும்பாலோர் வெற்றி பெற, சிறுபான்மையோர் அடிமைகள் என்றும், தீண்டத்தகாதவர் என்றும் ஒதுக்கப்பட்டனர். ஊரின் புறத்தே வாழும் நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டது. நாளடைவில் பெரும்பாலோர்க்கு அஞ்சியும் அடங்கியும் வாழும் நிலைமை, இவ்வாறு கலப்பற்ற வாழ்வை விரும்பிய பழந்திராவிடர் சிலர்க்கு ஏற்பட்டது.

தென்கோடித் தமிழர்

வடக்கே இவ்வாறு சமுதாய மாறுதல் ஏற்பட்டுவந்த காலத்தில், தென்னிந்தியாவில் வாழ்ந்த திராவிடர்கள் இந்த மாறுதலால் தாக்குண்ணுமல் தனித்து வாழ முடிந்தது. தென்னிந்தியாவிலும் தென்கோடியில் இருந்த திராவிடர்கள், தம் கலைகளையும் வாணிகம் அரசியல் முதலிய துறைகளையும் வளர்த்துச் செல்வாக்குடன் விளங்கினர். வேங்கடமலை முதல் குமரிமுனை வரையில் இருந்த அந்தத் திராவிடர்கள் தம்மைத் தமிழர் என்றும், தம் மொழியைத் தமிழ் என்றும், தம் நாட்டைத் தமிழகம் என்றும் சொல்லிப் பெருமையுடன் வாழ்ந்துவந்தனர். தமிழகம் என்னும் அந்த நாடு, மூன்று வேந்தர் மரபுகளால் ஆளப்பட்டு, சேர நாடு பாண்டிய நாடு சோழ நாடு என்ற பாகுபாடு பெற்றிருந்தது. தம்மோடு தொடர்புபட்டிருந்த சிந்துநதிக்கரைத் திராவிடர்களைப் பற்றியோ அவர்களின் பழக்கவழக்கங்களிலும் சமுதாய வாழ்விலும் ஆரியக் கலப்பால் நேர்ந்துவரும் மாறுதல்களைப் பற்றியோ அந்தத் தென்கோடித்தமிழர் கவலைப்படவில்லை. வடக்கே வாழ்ந்த தம் இனத்தாரைத் தம்மவர் என்று எண்ணும் மனப்பான்

மையும் இன்றி, வடபுலத்தார் என்ற பெயரால் பிரித்துச் சுட்டிவந்தனர்.

தென்னாட்டில் கலப்பு

தமிழகத்தின் ஆட்சிச் சிறப்பும் வாணிகப் பெருமையும் கலைமாட்சியும் பற்றி வடநாட்டார் அறிய முடிந்தது. அவற்றின் பயனையும் பெறவேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு ஏற்பட்டது. அவர்களில் ஒருசிலர் தெற்கு நோக்கி வந்தனர்; தமிழரிலும் ஒருசிலர் வடக்கு நோக்கிச் சென்றனர். (இந்நூற்றாண்டில் பர்மா மலேயா முதலிய வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழர்போல்) பழந்தமிழர் வாணிகம் ஒன்றே நோக்கமாக வடநாட்டுக்குச் சென்று திரும்ப, வடநாட்டார் தமிழகத்திற்கு வந்தபோது தம் வயிறு வளர்க்க வகை தேடியதோடு தாம் போற்றிய சமயம் மொழி முதலியவற்றைப் பரப்புதலையும் கடமையாகக் கொண்டனர். ஒரு சிலரே அவ்வாறு தமிழகத்திற்கு வந்து தம் மொழி சமயம் முதலியவற்றை முதலில் பரப்ப முயன்றனர். நாளடைவில் தமிழகத்து தமிழறிஞரிலேயே பலர் அவர்களின் தொண்டைத் தொடர்ந்து செய்யத் தலைப்பட்டனர். (சென்ற நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஒருசிலர் இந்நாட்டில் ஆங்கிலத்தைப் பரப்ப முயன்ற முயற்சியை இந்நாளில் தமிழர்களில் செல்வாக்கு உள்ள அறிஞர்கள் தம் வாழ்நாள் தொண்டாக அதை மேற்கொண்டு ஆங்கிலேயரிடம் இல்லாத ஆங்கில வெறியும் கொண்டு தொடர்ந்து செய்து வருவதுபோல்) அக்காலத் தமிழறிஞரில் பலர் வடமொழியில் பேரார்வம் கொண்டு அம்மொழியையும் சமயம் முதலியவற்றையும் தமிழகத்தில் பரப்பும் தொண்டு செய்துவந்தனர். ஆகவே, வடநாட்டாரின் பெருமுயற்சி இல்லாமலே இங்கு அவர்களின் மொழி சமயம் முதலியவற்றின் கலப்பு எளிதில்

ஏற்படலாயிற்று. இப் புதுமைக்கு இயைந்துவராதவர் களைச் சமுதாயத்திற்கு வெளியே ஊருக்கு அப்பால் ஒதுக்கும் முயற்சி இங்கும் நேர்வதாயிற்று.

செல்வாக்குப் பெற இயலாமை

இத்தகைய முயற்சிக்கு ஒரே ஒரு பெரிய தடை மட்டும் இருந்துவந்தது. அத் தடை இல்லாதிருந்திருப் பின், சிந்துநதிக்கரை முதல் பொருநையாற்றங்கரை வரையில் இந்தியா முழுதும் ஒரே இனம், ஒரே பழக்க வழக்கம், ஒரேவகையான மொழி என்ற நிலை எளிதில் ஏற்பட்டிருக்கும்.

அந்தத் தடைதான், தென்னிந்தியாவில் வேரூன்றி விட்டிருந்த திராவிட மொழியின் செல்வாக்கு. தென் னிந்தியாவில், சிறப்பாகத் தமிழகத்தில், தமிழ்மொழி பெற்றிருந்த இணையற்ற இலக்கிய வளமும் சேர சோழ பாண்டியர்களின் ஆட்சிமொழியாக இருந்த உரிமைச் சிறப்பும் பெரிய தடையாக நின்றன. அதனால்தான், வந்த வடமொழி இங்குத் தனியரசு செலுத்த முடியாமற் போயிற்று. வடநாட்டில் கலப்பு ஏற்பட்டபோது பழைய திராவிட மொழி மெல்ல மறைய, கலப்புமொழி தலை யெடுத்துச் செல்வாக்குப் பெற்றதுபோல், தென்னாட்டில் ஏற்பட முடியவில்லை. பழைய திராவிட மொழியும் வாழ, வந்த வடமொழியும் அதனுடன் விளங்கும் வாய்ப்பே இங்கு ஏற்பட முடிந்தது.

சமயம் கலை வாணிகம் முதலிய துறைகளில் ஒரு மொழி எவ்வளவு செல்வாக்குப் பெற்றிருந்தாலும், அதன் வாழ்வு நிலைத்துவிட்டது என்று கூறமுடியாது. ஆட்சி மொழியாக அது விளங்கினால்தான், நிலைபேறு எய்த முடி யும். சிந்துநதிக் கரையிலும் கங்கைநதிக் கரையிலும்

இருந்த திராவிட மொழிகள், எவ்வளவோ செல்வாக் கோடு இருந்தபோதிலும் அங்கு நிலையான ஆட்சிமுறைகள் இல்லாதிருந்தமையால், அந்தத் திராவிட மொழிகள் நிலை கலங்கின. கலப்புமொழியான பிராகிருதம் தலையெடுத்த போது அந்தத் திராவிடமொழிகள் மறையத் தொடங்கின. ஆயின் தமிழகத்தில் வடமொழி பரவத் தொடங்கியபோது தமிழ் மொழியே சேர சோழ பாண்டியர்களின் ஆட்சி மொழியாய்ச் செல்வாக்குப் பெற்றிருந்தமையாலும், அந்த அரசுகள் நிலைத்து நின்று விளங்கினமையாலும், அது நிலைகலங்காமல் விளங்க முடிந்தது; வந்த வடமொழி அதனுடன் சேர்ந்து அதன் நிழலில் விளங்க முடிந்ததே தவிர, அதன் அரியணையைக் கைப்பற்ற முடியவில்லை. கன்னடம் ஆந்திரம் முதலிய மற்ற நாடுகளில் வடமொழி யிலே கல்வெட்டுக்கள் அமைத்த பிற்காலத்திலும், தமிழ் நாட்டின் கல்வெட்டுக்களில் வடமொழிச் சொற்கள் ஓரளவு இடம் பெற்றனவே தவிர, அவற்றில் தமிழுக்கே இடம் இல்லாமல் செய்ய முடியவில்லை.

இலக்கியத் தொன்மை

பிறகு தொடர்ந்து நெடுங்காலம் வரையில் தமிழிலக் கியம் தனக்கெனத் தனி வளர்ச்சியும் மாண்பும் பெற்றுச் சிறந்த அகப்பொருள் புறப்பொருட் பாட்டுக்களைப் பெற்று விளங்கியது. தமிழிலக்கியத்தைப் பொறுத்த வரையில் வடமொழி தன்னிடமிருந்து மொழிபெயர்ப்ப தற்குச் சில காவியங்களையும் புராணங்களையும் உதவியது. இலக்கணத்தில் அலங்காரம் என்னும் அணியை உதவியது. மற்ற எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் தமிழின் தனிச் செல்வமே ஆகும். வடமொழித் தொடர்பு அற்ற யாப்பிலக்கணம் பழந் தமிழில் அமைந்திருத்தல் இங்கு ஆராய்ந்து போற்றுதற்கு உரியதாகும். வெண்பா ஆசிரி

யப்பா கலிப்பா வஞ்சிப்பா எனப் பாவும், அவற்றிற்கு ஏற்பச் செப்பல் அகவல் துள்ளல் தூங்கல் என ஓசையும் தனித்தனியே அமைந்து, தளை தொடை முதலியனவும் தனியே அமைந்துள்ள முறை வடமொழியோடு எவ்வகையிலும் தொடர்பற்றதாக உள்ளது. ஒலிநயத்தை இவ்வாறு தனியே ஆராய்ந்து பண்படுத்திப் பாகுபாடும் செய்துள்ள யாப்புமுறையில் சில பெயர்கள் வடசொற்களாக இருந்திருப்பினும், யாவும் வடமொழியிடமிருந்து கடன் வாங்கப்பட்டவை என்று சிலர் கூற முன்வந்திருப்பர். மற்றத் துறைகளில் தம் உழைப்பால் வளர்த்த கலைச் செல்வங்களைப் பற்றிப் பல நூல்கள் எழுதிவைத்துப் போற்றத் தவறிய தமிழர் இந்த ஒரு துறையிலேனும் தம் தனிச் சிறப்பிற்குச் சான்று தேடிவைத்துள்ளது நன்மையாயிற்று. கலப்பற்ற தூய யாப்பிலக்கணம் ஒரு மொழிக்கு அமைய வேண்டும் எனின், அந்த மொழி அதற்குமுன் எவ்வளவு பண்பட்டுத் தனியே வளர்ந்திருக்க வேண்டும் என்பது எண்ணிப் போற்றுதற்கு உரியதாகும்.

தெலுங்கின் தோற்றம்

வேங்கட மலைக்கு வடக்கே கிருஷ்ணை கோதாவரி நதிக்கரைகளில் பழங்காலத்தில் கொச்சைத் தமிழே பேசப் பட்டு வந்தது. அதன் கொச்சை யொலிகளைத் தமிழகத்துத் தமிழர் எள்ளினரே அல்லாமல், அவைகளும் தம் மொழியின் திரிபுகளே என உணரவில்லை. கோழி, ஏழு, எழுபது, மகன், அவர் முதலியவற்றைக் கோடி, ஏடு, டெப்பை, மொக(ன்)டு, வாரு முதலியவைகளாகத் திரித்துப் பேசிய பேச்சைக் கேட்டு, 'கல்லா நீள்மொழிக் கதநாய் வடுகர்' என்று குறித்து ஒதுக்கினரே அல்லாமல், அவர்களிடையே அவர்களுக்காக வாழ்ந்து (இக் காலத்துக் கிறிஸ்துவப் பாதிரிமார்போல்) அவர்களுக்குக் கல்வியும் நாகரிக

மும் கற்பிக்கவில்லை. அதனால் அந்த வடுகர்மொழியில் நாளுக்குநாள் திரிபுகள் மிகுந்து, அந்த மொழி தமிழை விட்டு விலகி மாறிச் சென்றுகொண்டே யிருந்தது. பல நூற்றாண்டுகள் வரையில் தமிழர்களின் புறக்கணிப்பால் திரிந்து உருமாறிய அந்த மொழி, நன்னயபட்டர் முதலான வடமொழியறிஞர்களின் கையில் அகப்படலாயிற்று. அவர்கள் வடமொழியை ஒட்டி எழுத்துமுறை அமைத்து, இலக்கணம் எழுதி இலக்கியமும் இயற்றினர். அதை ஒரு தனி மொழியாக வளர்த்துத் தெலுங்கு என்ற பெயரால் விளங்கச் செய்தனர்.

கன்னடத்தின் தோற்றம்

அவ்வாறே தமிழகத்தின் மேற்கே மைசூர்ப் பகுதியில் பேசப்பட்டுவந்த கொச்சை மொழி, தமிழரின் புறக்கணிப்பால் திரிந்து உருமாறியது; கேசவர் முதலிய வடமொழி அறிஞர் சிலர் எழுத்துமுறையும் இலக்கணமும் இலக்கியமும் தந்து வாழ்வு நல்கியபின், அது கன்னடம் என்ற பெயர்பெற்றுத் தனியாக விளங்கலாயிற்று.

தெலுங்கு கன்னடம் ஆகிய இந்த மொழிகளும் கலப்பற்ற திராவிட மொழிகளாக விளங்கிய காலம் ஒன்று இருந்தது. அக் காலத்தில் அவை இலக்கியச் சிறப்பும் பண்பாடும் பெறும் வகையில் போற்றிக் காக்கப்படாமல் கைவிடப்பட்டன. அதனால், வடமொழியறிஞர் சிலர் முன்வந்து செய்த முயற்சிகள் வெற்றி பெற்றன; அம் முயற்சிகளின் பயனாக இம் மொழிகள் வடமொழிச் சார்புமிக்க மொழிகளாக மாறி அமைந்துவிட்டன.[1]

1. Just like Tamil, Telugu and Kanarese must have been free from Sanskrit element before the Aryan contact; but when once Sanskrit scholars come to cultivate these languages, they naturally began to introduce a large amount of Sanskrit word

மலையாளத்தின் தோற்றம்

தமிழகத்தின் ஒரு பகுதியாகிய சேரநாட்டில் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரும் தமிழ்மொழியே இருந்து வந்தது; மற்றத் தமிழ்நாட்டு இலக்கியங்களே சேரநாட்டு இலக்கியங்களாகப் போற்றப்பட்டுவந்தன. சோழ பாண்டிய வேந்தர் மரபுகள் கலங்கி மறைய, அவற்றோடு சேர வேந்தர் மரபுக்கு இருந்த உறவு அற்றுப் போகவே, சேரநாட்டிற்குத் தமிழகத் தொடர்பும் தமிழ்மொழித் தொடர்பும் நீங்கி ஒருவகைக் குழப்பம் ஏற்பட்டது. சேர நாட்டுத் தமிழர்க்குத் தாம் தமிழர் என்றும், தம் மொழி உயர்ந்தது என்றும் இருந்த உணர்வு நீங்கியது. இத்தகைய கலங்கிய நிலையில், அவர்களுக்குப் புதிய கற்பனைச் செல்வங்களும் கலைவிருந்துகளும் அளிப்பவர் இல்லாமற் போயினர். எழுத்தச்சன் முதலிய வடமொழி அறிஞரே அத் துறையில் தொண்டு செய்ய முடிந்தது. அவர்கள் அந் நாட்டுப் பேச்சுத்தமிழ் மட்டும் அறிந்தவராதலின், அந்தக் கொச்சைத் தமிழுக்கே எழுத்து வடிவம் தந்து நூல்கள் இயற்றினர்; வடமொழியை ஒட்டி அந்தக் கொச்சைத் தமிழுக்கு இலக்கணம் எழுதினர். இவ்வாறு அங்கே மலையாளம் என்ற பெயரால்[1] ஒரு மொழி தலையெடுத்து விளங்கச்

material in their compositions. The old indigenous words began to drop away from the language yielding place to the new comers, so much so in course of time a composition in which a larger amount of native element appeared was felt to be difficult of understanding and accordingly denounced as insipid and obsolete,—K. Ramakrishnaiah, Studies in Dravidian Philology, pp. 40-41.

1. But the people in the West Coast were cut off from the mother country, viz., Tamilagam and cultivated a sort of dialect including what we can call Kodum-Tamil and Prakritic Sanskrit which came to be known later as Malayalam.—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 204.

செய்தனர். மலையாளத்திற்கு அமைந்த எழுத்தை அந் நாட்டார் 'ஆர்ய எழுத்து' என்ற பெயரால் வழங்குவதும் கருதத்தக்கது. இந்த மொழிக்கு மலையாளம் என்ற பெயரும் சென்ற நூற்றாண்டில் ஐரோப்பியரால் ஏற்பட்டதே ஆகும். அதற்குமுன் அதைத் தமிழ் என்றே வழங்கி வந்தனர். இன்றும் மலையாளப் புராணப் பிரசங்கிகள் 'தமிழில் பரயுந்து' என்று கூறி மலையாளத்தில் விளக்கம் கூறுகின்றனர்; மலையாளத்தைத் தமிழ் என்றே குறிக் கின்றனர்.

மணிப்பிரவாளம்

தமிழகத்திலும் அவ்வப்போது ஆட்சித் துறையிலும் சமயத் துறையிலும் மாறுதல்களும் கலக்கங்களும் நேர்ந்த போது, வடமொழி கற்ற தமிழர் இத்தகைய முயற்சிகள் செய்து மொழியின் அமைப்பை மாற்ற முனைந்தனர். மணிப்பிரவாளம் என்று தமிழும் வடமொழியும் கலந்த நடை புகுந்ததும், கிரந்தம் என்ற எழுத்து அமைந்ததும் இத்தகைய முயற்சிகளின் பயனேயாகும். ஸ்ரீ புராணம் முதலிய சில நூல்களின் அளவிலும், விருத்தாசலம் மாயூ ரம், வேதாரணியம் முதலிய சில ஊர்ப் பெயர்களை மாற்றும் அளவிலுமே அந்த முயற்சிகள் நின்று தோற் றன. அம் முயற்சிகள் வெற்றி பெறுமைக்குக் காரணம் இரண்டு. ஆட்சித் துறையில் சேர சோழ பாண்டிய மரபுகள் செல்வாக்காக விளங்கித் தமிழை ஆட்சி மொழி யாகப் போற்றிவந்தது ஒரு காரணம். வடமொழி மிகச் செல்வாக்குப் பெற்று விளங்கிய சமயத் துறையில், ஆழ் வார்நாயன்மார்கள் பல பாடல்களைத் தமிழில் நல்கிச் சமய ஆர்வம் மிகுந்த தமிழர் வடமொழியை நாடாவண் ணம் தமிழிலேயே வேண்டுவன அருளியது மற்றொரு காரணம். அரண்மனையிலும் கோயிலிலும் தமிழ் பெற்

நிருந்த இத்தகைய செல்வாக்கே, எவ்வளவோ தாக்குதல் களுக்கு உட்பட்டும் இன்று வரையில் தமிழ் சீர்குலையாமல் வாழ்ந்துவருவதற்குக் காரணம் ஆயிற்று.

மொழிப்பற்றுக் குறைவு

மதிநுட்பமும் கலையுணர்வும் மிக்க மக்களினம், வளர்ந்து பண்பட்ட மொழி பேசிய இனம், பேராவத் துடன் பிறமொழியைக் கற்றல் இயல்பு என்றும், தம் மொழியைப் பிறரிடையே பரப்புவதில் கவலை கொள்ளாது என்றும் அறிஞர் கருதுகின்றனர். தமிழரைப் பொறுத்த வரையில் இக் கருத்து அன்றைய தமிழகத்திலும் உண்மை யாயிற்று ; இன்றைய தமிழகத்திலும் உண்மையாகின்றது.[1] இன்று தமிழைப் பிறரிடம் பரப்புவது நோக்கமாக இருக்க வேண்டுவதில்லை. ஆயின், தமிழைத் தம் ஆட்சி மொழி யாக, கலைமொழியாக, சமய மொழியாக, சமுதாய மொழி யாகப் போற்றும் முயற்சி இருப்பினும் சாலும். அன்று தமிழறிஞருள் பலர்க்கு வடமொழி யார்வம் மிக்கிருந்தது போலவே, இன்றும் தமிழறிஞருள் பலர் ஆங்கில ஆர்வம்

1. From the early times of the East India Company, its servants who were bound for Madras and its neighbourhood were not in need of studying any Indian languages, for the Indians whom they had to deal with spoke English ; while those whose destination was North India always had to learn Hindi, Bengali, or other languages of the countries of the North. The Aryan-speaking people of North India did not speak English so much, nor did they learn it with the same facility as the people of the South. This is also experienced in our own days. In South India, all servants...speak English. But go to Bombay, travel through Rajputana, visit Delhi, Agra Banares, or Calcutta and you will meet with very interesting and, at times difficult, experiences if you do not speak Hindi or know at least a few Hindustani words ; no uneducated person will speak to you in English.—Rev. H. Heras, Studies in Proto-Indo-Mediterranean Culture, I. p. 17.

மிக்கு விளங்குகின்றனர். 'ஐந்தெழுத்தா லொரு பாடை யென்று அறையவும் நாணுவர் அறிவுடையோரே' என்று அன்று தமிழர் ஒருவர் வடமொழியைப் பாராட்டித் தமிழைத் தூற்றியதுபோலவே, இன்றும் தமிழில் என்ன உள்ளது என்று தூற்றி ஆங்கிலத்தைக் கண்மூடிப் போற்றும் தமிழறிஞர் பலர் உள்ளனர் அன்று வடநாட்டார் தம் கடமையைச் செய்து வருங்கால ஆக்கத்திற்கு வழி தேடிக் கொண்டதுபோலவே, இன்றும் வடநாட்டார் இந்தி குஜராத்தி மராத்தி வங்காளி ஒரியா முதலிய தம் தம் தாய் மொழிகளை ஆட்சிமொழி, பல்கலைக் கழகக் கல்விமொழி, நீதிமன்றமொழி எனப் பல துறையிலும் உயர்ந்து விளங்குமாறு பணி பல புரிந்து, இடைவிடாத் தொண்டுகளாலும் இயற்றும் சட்டங்களாலும் காத்துவருகின்றனர். தமிழ் மொழிக்குத் தொண்டு செய்யும் அறிஞர் சிலர் அவ்வப்போது இருந்துவரினும், மற்ற நாடுகளில் மற்ற மொழிகள் பெற்றுவரும் ஆக்கத்தைத் தமிழ் இன்னும் போதிய அளவு பெறவில்லை.

பிறர் உணர்த்திய பெருமை

சென்ற நூற்றாண்டில் சமயத்தொண்டு காரணமாக இந் நாட்டிற்கு வந்த ஐரோப்பியர் தமிழின் அருமை பெருமைகளை உணர்ந்து போற்றத் தொடங்கியது தமிழுக்கு நன்மை ஆயிற்று. ஆங்கிலம் கற்ற தமிழர் பலரைத் தட்டியெழுப்புதற்கு அது காரணம் ஆயிற்று. தமிழரிடையே மீண்டும் மொழிப்பற்று வளர்வதற்கு அது உதவியது.

தமிழ்மொழியின் வளமான இலக்கியங்களும், திட்பமான அறநூல்களும், தெளிவான சமய நூல்களும் மேற்கு நாட்டு அறிஞர் பலருடைய உள்ளங்களைக் கவர்ந்திருக்கின்றன. அவற்றைக் கற்று வாழ்நாள் வரையில் போற்

மித் தம் வாழ்வைத் தமிழோடு தொடர்புபடுத்திக் கூறிக் கொள்வதில் பலர் பெருமை கொண்டனர். ஜி. யு. போப் என்னும் அறிஞரை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ஆங்கில இலக்கியத்திலும் அரசியற் கலையிலும் வல்லு நராய் ஆந்திரப் பல்கலைக் கழகத் துணைவேந்தராய் விளங் கிய அறிஞர் சி. ஆர். ரெட்டி, தமிழ் மொழியைத் திராவிடர் களின் சமயப் பெருமொழி எனப் போற்றியுள்ளார்.[1] சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் தமிழிலேயே கற்க வாய்ப்பு இல்லாமல், ஆங்கில மொழிபெயர்ப்பில் கற்ற அவருடைய உள்ளம் அவற்றை மிகப் போற்றிப் பாராட்டியது. அவற்றின் மொழிபெயர்ப்பு நூல்களும் இவ்வாறு உள்ளம் கவரும் ஆற்றல் பெற்றுள்ளனவே என வியந்துரைக்கிறார். ஆந்திரராகிய தாம், இத்தகைய இலக் கியச் செல்வம் பெற்றிருத்தலைக் கண்டு தமிழின்மேல் பொறுமை கொள்வதாகக் கூறிப் போற்றி யுரைத்தார்.[2]

மிகமிகப் பண்பட்ட மொழி என்றும், தனக்கே உரிய தாக இயல்பாக வளர்ந்த சிறந்த இலக்கியச் செல்வம் உடைய மொழி என்றும் மாக்ஸ்முல்லர் தமிழைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[3]

---

1. Tamil, the holy language of the Dravidians—C. R. Reddy, Foreword to The Ancient Dravidians by T. R. Sesha Iyengar, p. XVII.

2. As an Andhra I envy Tamil its possession of two such poems as Silappadhikaram and Manimekhalai for which I can find no equivalents in Telugu literature. Even in translation they dominate the soul like charm. What must they be like in the original!—Ibid. p. XX.

3. Tamil is the most highly cultivated language and possesses the richest stores of indigenous literature.—Max Muller.

ஆற்றல் மிக்கதாகவும் சில சொற்களால் கருத்தைத் தெரிவிப்பதாகவும் விளங்குவதில் தமிழ்மொழியை எந்த மொழியும் விஞ்சமுடியாது என்றும், உள்ளத்தின் பெற்றியை எடுத்துக்காட்டுவதில் வேறு எந்த மொழியும் தமிழைவிட இயைந்ததாக இல்லை என்றும் பெர்சிவல் என்னும் அறிஞர் எடுத்துரைத்துள்ளார்.[1]

ஒரு நூற்றாண்டின்முன் மொழியாராய்ச்சியில் ஈடுபட்டுத் தொண்டு ஆற்றிய விட்னே என்னும் அறிஞர் தம் நூலில் தமிழ்மொழியைப் போற்றிக் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிஞர் தமிழ் அறியாதவர்; ஆயினும் அறிந்தவர் வாயிலாகக் கேட்டுப் போற்றியுள்ளார். தென்னிந்தியாவில் பிறந்த அமெரிக்கர் ஒருவர்—கல்வியும் திறனும் மிக்க எழுத்தாளர் ஒருவர், எண்ணுதற்கும் பேசுதற்கும் எந்த ஐரோப்பிய மொழியையும்விடத் தமிழ்மொழி சிறந்தது எனத் தம்மிடம் எடுத்துரைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.[2]

---

1. No language combines greater force with equal brevity than Tamil and it may be asserted that no human speech is more close and philosophic in its expression as an exponent of the mind than the same.—Rev. Percival.

2. The author has been informed by an American who was born in Southern India and grew up to speak its language vernacularly along with his English, a man of high education and unusual gifts as a preacher and writer, that he esteemed the Tamil as a finer language to think and speak in than any European tongue known to him.—Whitney, The Life and Growth of Language, p. 244.

உஅ. எழுத்து

எழுத்துமொழியின் ஆற்றல்

இன்று மொழிக்கு உள்ள சிறப்புக்கெல்லாம் காரணம், அதற்கு அமைந்த எழுத்துவடிவே ஆகும். பேச்சளவில் உள்ள மொழி குறிப்பிட்ட இடத்தில் வாழும் மக்களைக் குறிப்பிட்ட ஒரு சிறு காலத்திற்குப் பிணைத்து வைக்க முடியும். எழுத்து வடிவில் உள்ள மொழியோ, மக்களினத்தைப் பல நூற்றாண்டுகள் பிணைத்து வாழ வைக்கும் ஆற்றலுடையது.

ஒருவர்வாயில் பிறந்த ஒலிவடிவான மொழி பயனுடையதாக விளங்கவேண்டுமானால், அப்போது அங்கேயே அதைக் கேட்டு உணரும் செவி வேண்டும். ஒருவர் கையிலிருந்து பிறந்த வரிவடிவான மொழியைக் கண்கொண்டு உணர அப்போது அங்கே ஒருவரும் இல்லாமற் போயினும், காலம் கடந்தும் இடம் கடந்தும் பயன் தரும் ஆற்றல் அதற்கு உண்டு. அறிவியல் (Science) முன்னேற்றத்தால் பல புதுக் கருவிகள் ஏற்பட்டு எவ்வளவோ முன்னேறியபோதிலும், இந்த வேறுபாடு இன்னும் இருந்து வருகிறது.

பேச்சுமொழி இல்லையானால், மனிதனுக்கும் விலங்கிற்கும் வேறுபாடு இல்லை எனலாம். எழுத்துமொழி இல்லையானால் காட்டுமிராண்டிக்கும் நாகரிக மனிதனுக்கும் வேறுபாடு இல்லை எனலாம். விலங்கினிடமிருந்து மனிதனைப் பிரித்தது உயர்த்தியது பேச்சுமொழி. உண்பதும் உறங்குவதுமாக வாழ்ந்த பழங்காலக் காட்டு மனிதனை வளர்த்துப் பண்படுத்தி நாகரிகம் பெறச் செய்தது எழுத்துமொழி. பேச்சுமொழி, அதனை அறிந்து பழகும் ஒரு கூட்டத்தார்க்கு மட்டுமே பயன் அளிக்க வல்லது ;

அவர்களின் அளவில் ஒற்றுமை வளர்க்க வல்லது. ஆனால், எழுத்துமொழி, ஒரு கூட்டத்தார்க்கும் மற்றொரு கூட்டத்தார்க்கும் பழகும் வாய்ப்பைத் தந்து ஒற்றுமை வளர்க்கச் செய்வது; பழகாத பல இனத்தார்க்கும் பயன் தந்து உலகத்தை ஒரு குடும்பமாகப் பிணைக்க வல்லது.

முன்னேற்றம்

இவ்வளவு சிறப்புக்களை உடைய எழுத்துமொழி, தொடக்கத்தில் பல இடர்ப்பாடுகளுக்கு இடையே வளர்ந்து வந்தது. எழுதும் முறையிலும் எழுதும் கருவிகளிலும் குறை பல இருந்துவந்தன. எழுதிய எழுத்துக்கள் - நூல்கள் - பரவும் வகையிலும் வாய்ப்புக்கள் குறைவாக இருந்தன. ஆதலின் அக் காலத்தில் கற்றல் குறைவாகவும் கேட்டல் மிகுதியாகவும் இருந்தன. "கற்றில னாயினும் கேட்க"[1] என்று அறிவுறுத்த வேண்டிய நிலையே அக்கால நிலை. எழுத்துக்கள் திருத்தமும் ஒழுங்கும் பெற்ற பின்னர், காகிதமும் அச்சுப் பொறிகளும் பெருகிய பின்னர், நூல்கள் பரவும் வகையில் போக்குவரவுக்கு உரிய புகைவண்டி கப்பல் வானவூர்தி முதலியவை ஏற்பட்ட பின்னர், எல்லோரும் கற்பதற்கு உரிய நிலை எளிதாகியுள்ளது. ஆதலின் இக் காலத்தில் கேட்டறிதல் குறைவு எனவும் கற்றறிதல் மிகுதி எனவும் கூறலாம்.

பேசக் கற்ற மொழியை எழுதிவைக்குமாறு மனிதனைத் தூண்டியது எது? தன் எதிரிலோ அண்மையிலோ இல்லாத ஒருவனுக்குத் தன் கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்னும் முயற்சியே ஆகும். இது இடத்தின் சேய்மையைக் கருதியது. நாளடைவில் காலத்தின் சேய்மையைக் கருதியும் இம் முயற்சி எழுந்தது. தன் காலத்தில்

1. திருக்குறள், 414.

இல்லாத மக்களுக்கும் - பிற் காலத்தில் வாழப்போகும் மக்களுக்கும் - தன் கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்ற முயற்சியால், கல்லிலும் களிமண்ணிலும் ஓலையிலும் செம்பிலும் எழுதிவைக்கத் தலைப்பட்டான் மனிதன்.

மதிப்பும் அச்சமும்

பேசிய பேச்சு, காற்றோடு காற்றாய் மாறி மறைந்து போகிறது; மறக்கப்பட்டுப்போகிறது. ஆயின் எழுதிய எழுத்து நெடுங்காலம் நிற்கிறது; அழியாத ஆற்றல் உடையதாக விளங்குகிறது. இந்தக் காரணத்தால் எழுதிய வற்றை மதிப்புடனும் அச்சத்துடனும் போற்றும் வழக்கம் தோன்றியது.

நாகாஸ்திரம், வருணாஸ்திரம் முதலியவைகளும் இந்த உண்மையைத் தெரிவிக்கின்றன. பழங்கால மக்கள் அம்பு, வேல் முதலிய தம் கருவிகளில் பாம்பு முதலியவற்றின் வடிவை எழுதினர்; அவ்வாறு செய்வதனால், பாம்பு முதலியவற்றின் ஆற்றல் அந்தக் கருவிகளுக்கு அமைந்ததாக நம்பினர்; அவ்வாறு எழுதப்பட்ட கருவிகள் பகைவரை ஆற்றலுடன் அழித்துவிடும் என எண்ணிவந்தனர்.[1]

முதலில் எழுதக் கற்ற மனிதர் அதை மந்திர வித்தைகளுக்குப் பயன்படுத்தினர் என்று அறிஞர் விட்னே கருதுகிறார்.[2] எழுத்துக் கலையே தொடக்கத்தில் மந்திரக் கலையாக மதிக்கப்பட்டது என்பது அவர் கருத்து. ஒரு

1. Certain savages draw a serpent or leopard upon their weapons with the idea that these animals will confer a portion of their power on the object they decorate. Thus adorned, the lance or shield becomes endowed with magic virtue; the leopard, for example, communicates strength, and the serpent cunning to foil the attempts of the enemy to entrap its owner. —J. Vendryes, Language, p. 317.

1. Whitney, Language, p. 331.

மரத்தின் பட்டையிலோ விலங்கின் தோலிலோ ஒருவர் பெயரைப் பொறிப்பது, அவரை வயப்படுத்தி ஆளும் வழியாகக் கொள்ளப்பட்டது. அவ்வாறு பெயரைப் பொறிப்பதால் அந்தப் பெயருள்ளவரைக் கெடுக்கவும் எடுக்கவும் முடியும் என்ற நம்பிக்கை இருந்துவந்தது. இன்றும் நோய் தீர்க்கவும் பிசாசு பித்து முதலியவற்றைப் போக்கவும் பெயர் எழுதி மந்திரம் எழுதித் 'தாயத்து' எனக் கொள்ளும் வழக்கம் சில நாடுகளில் இருந்து வருதல் இதற்குச் சான்றாகும். ஆகவே மாயவித்தைக்காரரே முதல் எழுத்தாளர் என விட்னே கருதுகிறார். எழுத்து-தலையெழுத்து-விதி என்பவற்றை ஒரு பொருட் கிளவியாகப் பேச்சில் வழங்குவதும் இத்தகைய தோற்றம் இருந்திருக்கும் என நம்பச்செய்கிறது.[1]

எழுத்தின் தோற்றம்

மொழியின் தோற்றம் ஆராய்ச்சிக்கு எட்டாததாக உள்ளது; ஆயின் எழுத்தின் தோற்றம் அத்தகையது அன்று. இருப்பவற்றைக் கொண்டு இருந்தவற்றை அறிதல் கூடும் எனப் பொதுவாகக் கூறுவர். இக் கூற்று, மொழியின் தோற்றத்திற்குப் பொருந்தவில்லை; எழுத்தின் தோற்றத்திற்குப் பொருந்துகிறது.

1. Writing and fate, among many peoples, are synonymous. To the Celts and the Germans writing was a "mystery" (Gothic *runa*), a system of magical practices. The wood upon which letters were engraved served also for witchcraft. The two ideas are still confused at the present time in the Irish and Breton vocabularies. While *Buchstabe* (literally 'beech staff') is the term for "letter" in German, the Irish *crann-chur* ('throwing the wood') stands for 'fate', and the Welsh *coel-bren* means literally 'divining wood'.—J. Vendryes, Language, pp. 331-332.

மொழியின் தோற்றம் மனிதனின் தோற்றத்தோடு இயைந்தது; இன்ன காலத்தில் தோன்றியது என்று ஆராய்வதற்கு எட்டாத தொன்மையுடையது. அதன் தொன்மையோடு ஒப்பிட்டு நோக்கினால், எழுத்தின் தோற்றம் மிகப் பிந்தியது; நேற்றுத் தோன்றிய நாகரிகக் கருவிகளைப் போன்றது.

சில மொழிகளுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எழுத்துமுறை தோன்றி அமைந்துவிட்டது. வேறு சில மொழிகளுக்கு எழுத்துமுறை அமைந்து சில நூற்றாண்டுகளே ஆயின. சென்ற நூற்றாண்டில் முதல்முதலாக எழுதப்பட்ட மொழிகளும் சில உள்ளன.

இன்று உலகில் நாகரிகம் உள்ள மக்கள் வழங்கும் எழுத்துக்கள், நூற்றுத்தொண்ணூற்றெட்டு வகையானவை உள்ளனவாம். இந்திய நாட்டிலும் முப்பது வகை எழுத்து முறைகள் (லிபிகள்) உள்ளன என்பர். மிகப் பழங்காலத்தில் இருந்த எழுத்துமுறைகளில் பல வழக்கிழந்து அழிந்திருத்தலும் கூடும்.

பழங்காலத்து எழுத்து முறை முதலியவற்றை இன்ன நாட்டார் கண்டுபிடித்தார் என்றும், இன்ன இன்ன நாட்டார்கள் பின்பற்றிப் போற்றினார்கள் என்றும் ஆராயும் ஆராய்ச்சியில் தெளிவு காண்பது அரிது. நல்லதொரு புதுமை ஒரு நாட்டில் தோன்றியவுடன் அது மிக விரைவில் பரவிவிடும். அச்சு, ரயில், விமானம் முதலியவற்றைக் கண்டுபிடித்த நாடுகளைப் போலவே மற்ற நாடுகளும் அவற்றைப் பயன்படுத்துதல் காணலாம்.

இன்று நாம் எழுத்தைக் கற்கும் முறையைக்கொண்டு, முதல் முதலில் எழுத்தை அமைத்த மக்களும் இவ்வாறு எளிதில் அமைத்தார்கள் என்று கூறமுடியாது. வானொலிப்

பெட்டியைக் கடையில் வாங்கிவந்து வீட்டில் ஒரு மூலையில் வைத்துத் திருப்பிப் பாட்டையோ பேச்சையோ கேட்கிறோம். இதுபோன்ற எளிய செயலே நாம் எழுத்தைக் கற்பது. எத்தனையோ தலைமுறைகளாக நம் முன்னோர்கள் முயன்று முயன்று தவறு செய்து திருந்தித் திருந்தி அமைத்த அருமையான அமைப்பின் பயனை நாம் சிறு முயற்சியின் அளவிலேயே பெற்று மகிழ்கிறோம். வானொலியைக் கண்டுபிடிக்க முயன்றவரின் உழைப்பு நினைந்து நினைந்து வியந்து போற்றத்தக்க பேருழைப்பாகும். எழுத்தை அமைத்த மக்களின் முயற்சியும் அத்தகையதே ஆகும். எழுத்துமுறையை முதலில் அமைத்தவர் ஒருவர் அல்லர்: பல தலைமுறையினராகப் பலர் பாடுபட்டு அமைத்த அமைப்பு அது; அதற்குக் காரணமாக இருந்த உழைப்பு இன்று நமக்கு விளங்குவதற்கு அரிய பேருழைப்பாகும். பள்ளிக்கூடத்திற்குச் சென்று எழுத்துக்களை முறையாகக் கற்றுச் சொற்களைக் கூட்டி எழுதும் குழந்தையின் முயற்சியைக் கண்டு அவர்களின் உழைப்பை அளந்து கூறல் இயலாது. அது, இன்று மோட்டாரில் ஊர்ந்து செல்வோரைப் பார்த்து, அதைக் கண்டுபிடித்தவரின் முயற்சியின் அருமையை அளப்பதுபோல் ஆகும்.

ஓவிய எழுத்து

முதலில் பேசத் தொடங்கிய மக்கள் சிறு சிறு ஒலிகளை ஒலிக்கவில்லை; சிறு சொற்களையும் ஒலிக்கவில்லை; முழுக் கருத்து அமைந்த வாக்கியங்களையே ஒலித்தனர். அதுபோலவே முதலில் எழுதத் தொடங்கிய மக்களும் எழுத்துக்களை எழுதவில்லை; சொற்களையும் எழுதவில்லை; கருத்துக்களையே எழுதினர்; ஓவியங்கள் எழுதி அவற்றின் வாயிலாகக் கருத்துக்களைப் புலப்படுத்தினர். இவற்றையே ஓவிய எழுத்துக்கள் (Ideographs) என்பர்.

தமிழிலக்கியத்தில் 'எழுத்து' என்பதற்கு ஓவியம் என்ற பொருள் இருத்தலும்[1], சீன மொழியில் எழுத்துக்களை 'உருவங்கள்' (images) என்றே குறித்தலும் இங்குக் கருதத் தக்கன.

காணப் பட்ட உருவம் எல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவில் ஓவியன் கைவினை போல
எழுதப் படுவது உருவெழுத் தாகும்[2].

என்று பழைய நூற்பா ஒன்று, ஓவிய எழுத்தை உருவெழுத்து எனக் கூறி விளக்குதலும் இங்குக் கருதத் தக்கது.

குழந்தையின் கையில் ஒரு சாக்கு (சுண்ணும்புத்) துண்டைக் கொடுத்து, "காக்கையை எழுது" என்று வேண்டினால், ஒன்று அல்லது இரண்டு கோணல் கீற்றுக்களைக் கிழித்து "இதுதான் காக்கை" என்னும். இவ்வாறே எந்தப் பொருளை எழுதச் சொன்னாலும், தன் மெல்லிய பூங்கையால் கிறுக்கி, "இதுதான் அது" என்னும். பார்ப்பவர்க்கு அந்தக் கிறுக்கலில் காக்கையும் இராது; குருவியும் இராது. ஆனால் ஓவியப் புலவனாகிய அந்தக் குழந்தையின் கண்ணுக்கோ அங்கே காக்கையும் காணப்படும்; குருவியும் காணப்படும், அந்தக் கீற்றுக்களில் அந்தந்த உருவங்களையே குழந்தை காண்கின்றது. ஆதலால் குழந்தையின் மனத்திற்கு, எழுத்துக்கள் என்பன பொருள்களின் உருவங்களே அன்றி வேறு குறிகள் அல்ல.

காட்டு வாழ்க்கையராக அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் உள்ள பழங்குடி மக்களுக்கும் எழுத்து

1. இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்—பரிபாடல், 19.
2. யாப்பருங்கல விருத்தி, 96. (பக்கம் 585)

என்பது இத்தகையதுதான்[1]. ஆனல், குழந்தையின் எழுத்திற்கும் இவர்கள் எழுதும் எழுத்திற்கும் வேற்றுமை உண்டு. குழந்தை, கற்பனைக் களஞ்சியம். அது தன் மனம் போல் கற்பனையுலகில் பறந்து வாழும் ஆற்றல் பெற்றது. ஆதலால் ஒன்றை எழுதி மற்றொன்றைக் காணும் ஆற்றல் அதற்கு இயற்கை. விளையாட்டையே வாழ்வாக உடைய குழந்தைக்கு எழுத்தும் ஒரு விளையாட்டே. ஆனல், காட்டுமிராண்டி, வாழ்க்கையின் கவலையைக் கண்டவன். கற்பனையும் விளையாட்டும் அவனுக்கு என்றே ஒருநாள் ஒருவேளை வந்து போவன. அவன் கண்ணுல் காண்பன, காதால் கேட்பன இவற்றை நம்புகின்றன்; குழந்தைபோல் உலகம் பொய் என்று தள்ளி விளையாட்டை மெய் என்று கொள்ளல் அவனுல் இயலாது. அதனுல் அவனை நோக்கி, "காக்கையை எழுது" என்று கேட்டால், காக்கையின் உருவத்தைத் தனக்குத் தெரிந்த அளவில் எழுதிவிடுவான்.

அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் உள்ள பழங்குடி மக்களின் எழுத்தெல்லாம் இவ்வாறு உருவங்களை வரையும் நிலையிலேயே இருக்கின்றன.

சீன எகிப்திய எழுத்துக்கள்

நாகரிக மொழிகளுள், சீன மொழியும், எகிப்து மொழியும் எழுத்துக்கள் தோன்றிய வரலாற்றை விளக்க வல்லனவாய் பழைய நிலையில் உள்ளன. சீன மொழியில் மலை என்னும் பொருளைக் குறிக்க, மலையின் உருவமே

1. The first endeavours at the communication of thought to the eye would naturally take the shape of sketches or drawings, such as those executed by the American Indians or the Australian aboriginals.—Tucker, Introduction to the Natural History of Language, p. 44.

எழுத்தாக எழுதப்படுகின்றது. மனிதனைக் குறிப்பதற்கும் இவ்வாறே ஓர் எழுத்து அமைந்துள்ளது.[1] நீர் வேட்கையைக் குறிக்க, நாக்குப் போல் வளைந்த கோடும், அதன் மேல் நீரைக் குறிப்பிட இரண்டு புள்ளியும் எழுதப்படுகின்றன. 'கேள்' என்ற வினையைக் குறிக்க, ஒரு கதவின் அருகே அமைந்த காது எழுதப்படுகின்றது. நட்பைக் குறிக்க, இரண்டு கைகள் இணைத்து எழுதப்படுகின்றன. கண்ணீரைக் குறிக்கக் கண்ணும் நீரும் சேர்த்து எழுதப்படுகின்றன. ஞாயிறும் திங்களும் எழுதப்பட்ட உருவம் ஒளியைக் குறிக்கும். வாயும் பறவையும் எழுதப்பட்ட உருவம் பாட்டைக் குறிக்கும். மலையும் மனிதனும் போல் எழுதப்பட்டது ஆசிரமம் எனக் கொள்ளப்பட்டது. மங்கையும் கையும் துடைப்பமும் போல் எழுதப்பட்ட எழுத்து, வீட்டுக்காரி என்பதாகும். இடப் பக்கமாகப் பறக்கும் கொடி 'இடம்' என்ற பொருளுடையதாயிற்று. வலப் பக்கமாகப் பறக்கும் கொடி 'வலம்' என்பதை உணர்த்தியது.

இவ்வாறு ஏறக்குறைய நாற்பதினாயிரம் அடையாள உருவங்கள் எழுத்துக்களாக இருந்தன. சீன மொழியில் பேசப்படும் சொற்களின் தொகை மற்ற மொழிகளைவிடக் குறைவு; ஆனால் எழுதப்படும் எழுத்துக்களின் தொகை மற்ற மொழிகளைவிட மிகுதி. சீன எழுத்துக்களைப் படிக்கக் கற்றல் அவ்வளவு அருமை அன்று; எழுதக் கற்றல் அருமையாம்; எழுத்துக்களை நன்கு பயின்று எழுதுவதற்கு எட்டாண்டுகள் வேண்டுமாம்.[2] ஏனெனில் எழுத்துக்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன.

---

1. Ibid. pp. 47, 48.
Whitney, Language and the Study of Language, pp. 455-459.
2. Sweet, The Practical Study of Language, p. 30.

இவ்வாறு ஒவ்வொரு பொருளையும் கருத்தையும் உணர்த்த வெவ்வேறு எழுத்துக்கள் வளரவே, சீனமொழி ஏறக்குறைய நாற்பதினாயிரம் எழுத்துக்களை உடையதாக ஒரு காலத்தில் இருந்ததாம்.

சிவப்பிந்தியர் எழுத்து

அமெரிக்காவின் பழங்குடி மக்கள் ஆகிய சிவப்பு இந்தியர் இருவர் ஆற்றோரமாக வேட்டைக்குச் சென்றார்களாம். அங்கே ஒரு கரடியைக் கொன்றார்கள். பிறகு ஆற்றில் சிறிது நேரம் மீன் பிடித்தார்கள். இதை மற்றவர்களுக்கு எழுதிவைக்க விரும்பினர்கள். எழுத்துமொழி அறியாதவர்கள் ஆகையால், அடையாளங்களைப் பொறித்தார்கள். அங்கே இருந்த ஒரு மரத் துண்டில் இரண்டு படகுகளை எழுதித் தங்கள் குடும்ப அடையாளத்தையும் பொறித்தார்கள். அதன்பின் கரடியின் உருவத்தையும் எழுதி ஆறு மீன்களையும் எழுதினர்கள். இவ்வாறு தங்கள் செயலைப் பிறருக்குப் புலப்படுத்த முயன்றார்கள்.

புதைபொருள்களாகக் கண்டெடுக்கப்பட்ட சில விலங்குகளின் எலும்புகளில் பழங்கால மக்கள் எழுதிய ஓவியங்கள் காணப்படுகின்றன. அவர்கள் பயன்படுத்திய கருவிகளில் பாம்பு புலி முதலியவற்றின் உருவங்களைப் பொறித்திருந்தனர். அவைகள் ஓவிய எழுத்துக்களின் தோற்றத்திற்குச் சான்றாக உள்ளன.

பலரும் அறிதல்

ஓவிய எழுத்து, குறிப்பிட்ட ஒரு பொருளையோ கருத்தையோ உணர்த்தப் பயன்படுமே தவிர, பொருளின் பலவகை வேறுபாடுகளையோ, கருத்துதுட்பங்களையோ உணர்த்தப் பயன்படாது. ஆனால் அதில் ஒரு சிறப்பு உண்டு. அதை இன்ன மொழியார் மட்டுமே தெரிந்து

கொள்ள முடியும் என்ற வரையறை இல்லை. எல்லாமொழி யாரும் தெரிந்துகொள்ளக்கூடிய பொதுத்தன்மை உடை யது அது. பொருள்கள் இன்ன மொழிக்கு உரியவை என்று இல்லாமல் பொதுவாக இருத்தல்போல், அவற்றின் உருவங்களாகிய ஓவிய எழுத்துக்களும் மொழிகளுக்குப் பொதுவானவை. கதிரவன் போல் எழுதிய ஓவிய எழுத்தை எந்த நாட்டவரும் பார்த்துக் கதிரவன் என்று உணரலாம்.[1]

ஓவிய எழுத்து, பொருளுக்கு அல்லது கருத்துக்கு நேரே வடிவம் கொடுக்கிறது. வரிவடிவ எழுத்தோ, பொருளுக்கு அல்லது கருத்திற்கு அறிகுறியாக உள்ள சொல்லுக்கு வடிவம் கொடுக்கிறது.

திரிபுகள்

பொருள்களுக்கும் கருத்துக்களுக்கும் நேரே வடிவம் கொடுத்துத் தொடங்கிய ஓவிய எழுத்து அவ்வாறே நிற்க வில்லை. எழுதிப் பழகப்பழக, ஓவியங்கள் படிப்படியாக மாறி, விளங்காத அளவிற்குத் திரிந்துபோயின. அப் போது, பழகிய ஒரு கூட்டத்தார் தவிர, மற்றவர் அறிய முடியாத எழுத்தாகிவிட்டது. அன்றியும், நுண்கருத்துக் களை உணர்த்துவதற்குப் பயன்படத் தொடங்கி, மற்ற வர்க்கு விளங்காத தாகிவிட்டது. எடுத்துக்காட்டாக, கதிரவனின் உருவம் கதிரவனைக் குறிக்கும் வரையில் அனைவர்க்கும் விளங்கியது. ஒளியையோ, அறிவையோ, புகழையோ குறிக்க வழங்கத் தொடங்கியதும் அது குறிப் பிட்ட கூட்டத்தார்க்கு மட்டும் விளங்கும் எழுத்தாகிவிட்

1. One advantage of ideographic writing—perhaps the only one—is that it can be read by people speaking different languages.—J. Vendryes, Language, p. 321.

டது. அதுபோல்வே, கண்ணின் ஓவியம் கண்ணைக் குறிக்கும் வரையில் பயனுடையதாக விளங்கியது; அதனைத் நிற்காமல், பார்த்தல், பார்வை, காவல், அறிவு முதலான கருத்துக்களை உணர்த்தத் தொடங்கியதும் இடர்ப்பாடு நேர்ந்தது. மனிதனின் கருத்தும் கற்பனையும் வளர்ந்த போது, ஓவிய எழுத்து அவற்றைத் தக்கவாறு உணர்த்த இயலாமல் தடுமாறியது; அதனால் கிரிய நேர்ந்தது.[1]

பொருள்களையும் கருத்துக்களையும் மட்டும் உணர்த்தும் அளவில் மனிதன் நிற்பதில்லை. திணை பால் எண் இடம் ஆகிய பாகுபாடுகளையும் காலவேறுபாடு முதலியவைகளையும் உணர்த்தும் அளவிற்கு மனிதனின் மூளை வளர்ச்சி பெறும்போது, ஓவிய எழுத்து அதற்கு உரிய துணை புரிவதில்லை.[2] இலக்கணக் கூறுகளாகிய திணைபால் முதலியவற்றை உணர்த்த வேறுசில ஓவிய எழுத்துக்களைப் பயன்படுத்தத் தொடங்கினால், அந்த எழுத்துக்கள் ஓவியங்களாக நிற்காமல், அறிகுறிகளாக மாறிவிடுகின்றன.

---

1. It is important to realize, however, that none of these remained purely ideographic, and that from the earliest times at which we know them the ideograph had ceased to play more than a limited part in them, the reason being that the ideograph is not altogether adequate to its purpose and leaves too much to be supplied by the imagination.—J. Vendryes, Language, p. 321.

An absolutely fixed ideographic writing would be like a rigid garment imprisoning thought; the thought would soon break its shackles and render even the remaining fragments useless.—Ibid.

2. However poor in grammar we suppose a language to be there are nevertheless elementary grammatical notions which the ideograph does not naturally express; for example, the distinction between the individual and the species, between noun and verb, tense, mood, negation, etc.—Ibid. p. 322.

இக் காரணங்களால்தான், நாகரிக வளர்ச்சி பெற்ற மக்கள், ஓவிய எழுத்தால் போதிய பயன் விளையாதது கண்டு, அதைக் கைவிட்டு இன்று வழங்கும் ஒலியெழுத்து முறையைக் கண்டு கையாளத் தொடங்கினர். ஆயின் ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றும் எளிய முயற்சி என்று இதைக் கருதலாகாது. பல தலைமுறைகளாக ஒன்றிலிருந்து மற்றொன்றிற்குப் படிப்படியாக மாறிய மாறுதல் எனக் கருதல் வேண்டும்.

எகிப்து நாட்டில் சிங்கத்திற்கு 'லாபோ' என்பது பெயர்; சிங்கத்தின் உருவத்தை முதலில் எழுத்தாக எழுதிய மக்கள், பிறகு அந்த உருவத்தை 'ல' என்ற ஒலியின் எழுத்தாகக் கொண்டனர். கழுகை 'அஹோம்' என்றனர்; கழுகின் உருவம் 'அ' என்ற எழுத்தாயிற்று.[1] எழுத்தாக நிற்கத் தொடங்கிய உருவங்கள் நாளடைவில் திரிந்து திரிந்து உருத்தெரியாத வரிவடிவங்களாக நின்றன.

மற்ற மொழிகளின் எழுத்து வரலாறும் இவ்வாறுதான் இருந்திருக்கவேண்டும். முதலில் பாட்டாக எழுந்த மொழி பிறகு நாளடைவில் பேச்சாக மாறி வளர்ந்தது என்பதை விளக்கும் யெஸ்பர்ஸன்,[2] முதலில் ஓவியமாக எழுந்த ஒரு கலையே பின்னர் எழுத்தாக வளர்ந்தமைந்துள்ளது என்ற கருத்தைப் புலப்படுத்துகிறார்.[3]

---

1. Whitney, Language and the Study of Language, p. 454.

2. As the art of writing to primitive painting, so is the art of speaking to primitive singing.—Otto Jespersen, Progress in Language, p. 360.

3. A certain poet, praising painting, called it the art by which we paint words, and speak to the eyes; this he said poetically rather than truly; for a picture expresses indeed our ideas, but not our words. Nor would I say that painting differs much from writing, except that it is a book which is

அடையாள எழுத்துக்கள்

ஒருவாறு திரியத் தொடங்கிய காலத்தில் அவைகளே அடையாள எழுத்துக்களாக (Hieroglyphs) மாறத் தொடங்கின. காக்கையின் உருவம் காக்கை போல் தோன்றுமல் திரிபுற்றபோது காக்கையின் அடையாளம் என்று கருதப்படுவதாயிற்று. இவ்வாறு, பொருளின் வடிவம் மறைந்து, பொருளின் அடையாளம் என்று கருதும் எழுத்துக்கள் வளரத் தொடங்கியபோது, அடையாள எழுத்துக்கள் (Hieroglyphs) தோன்றலாயின. தாமரையை எழுத, அதன் வடிவத்தை எழுதாமல் 'பு' என்ற எழுத்துப்போல் ஒன்றைக் குறித்தாலும் தாமரையை உணர்ந்துகொள்ள முடிந்திருக்கும். நாளடைவில், தொடர்பு இல்லாத ஒன்றும் ஒரு பொருளுக்கு அடையாளமாகக் கொள்ளும் நிலை வந்திருக்கும்.[1]

ஒருவர் மற்றொருவர்க்கு ஆள் வாயிலாகச் செய்தி சொல்லியனுப்பும்போது, சொல்லிவிடும் செய்தியோடு அடையாளமாக ஏதேனும் ஒரு பொருளையும் கொடுத்தனுப்புவது வழக்கம். அது நெடுங்காலம் எல்லா நாட்டு மக்களிடையிலும் இருந்துவந்திருக்கிறது. வேந்தர்களுக்குவில் புலி கயல் ஆகியவை அடையாளங்களாக இருந்தமை போலவே, ஒவ்வொரு பெரிய குடும்பத்திற்கும் அடையாளப் பொருள்கள் இருந்துவந்தன. (இன்றும் வாணிகம் செய்வோர் 'சங்குமார்க்' 'கிளிமார்க்' எனப் பல அடையாளங்களைக் கொள்ளுதலும், தேர்தலுக்கு நிற்பவர் தம்

read even by the ignorant, and is drained, at one glance, and devoured, as it were, by the eyes.—Rev. Beschi, A Grammar of the Common Dialect of the Tamil Language, p. 11.

1. The sign representing the object likewise became the sign of the sound expressing the object.—J. Vendryes, Language, p. 323.

தம் பெட்டிகளுக்கு அடையாளமாகப் பல பொருள்களைக் கொள்ளுதலும் காணலாம்.) குடும்ப மடந்தை தன் கண வனுக்குப் பூப்புச் செய்தியை அறிவிக்கச் செல்லும் மலர் அணி முதலியவற்றையும், மகப்பேற்றுச் செய்தியை அறி விக்க வெண்ணிற மலர் அணி முதலியவற்றையும் பயன் படுத்தியதாக இலக்கணம் விளக்குகிறது.[1] வரிவடிவான எழுத்துமொழி இல்லாதிருந்த மிகப் பழங்காலத்தில் இத் தகைய அடையாளங்கள் பலவாகப் பெருகியிருந்தன. வரவர அவை அறிகுறிகளாக மாறலாயின.[2]

இன்றும் உள்ளவை

இந்த வளர்ச்சியை அறிவதற்கு ரோமன் எழுத்து ஒன்றைக் காண்போம். ரோமன் எழுத்துக்கள் எகிப்தி யரின் எழுத்துக்களிலிருந்து அமைக்கப்பட்டன. எகிப்து எழுத்துக்களில் நத்தை வடிவாக அமைந்திருந்த ஓர் எழுத்தே ரோமன் எழுத்தாகிய F என அமைந்தது. அது தொடக்கத்தில் நத்தையின் ஓவியமாக அமைந்து, நத்தை யைக் குறித்தது. அதிலிருந்து அமைந்த F என்ற எழுத்து இன்னும் அந்தத் தன்மையை இழக்கவில்லை; இந்த எழுத்தில் உள்ள இரண்டு மேற்கோடுகள் நத்தையின்

---

1. "செவ்வணி அணிந்து சேடியை விடுப்புழி
அவ்வணி உழையர்கண்டு அழுங்கிக் கூறலும்.....
—நம்பியகப்பொருள், 205.

வெள்ளணி அணிந்து விடுத்துழிப் புள்ளணி
மலைவேல் அண்ணல் வாயில் வேண்டலும்.....
—ஷை 206.

2. We are, therefore, right in regarding these property marks and mnemonic signs as the starting-points of writing.—J. Vendryes, Language, p. 818.

தலையில் உள்ள இரண்டு கொம்புகளைக் குறிப்பன என்பர்.[1] ஆயின், இன்று F என எழுதுவோர்க்கு, நத்தையின் ஒவியமோ அதன் இரண்டு கொம்புகளோ நினைவுக்கு வருவதில்லை. இவ்வாறே ஒவ்வோரெழுத்தும் மூதலில் ஒவியமாக இருந்து பொருளை மேரே உணர்த்தி, பிறகு அந்தப் பொருளின் பெயராகிய ஒலியை உணர்த்தி, பிறகு ஓர் அசையை உணர்த்தி, அதன் பிறகு, ஓர் உயிரை அல்லது மெய்யை மட்டும் உணர்த்தும் நிலை எய்துகிறது.

எவ்வளவோ திறமையாகப் பேசக் கற்ற பிறகும் சைகை அடியோடு நீங்காததுபோல், எவ்வளவோ திருத்தமாக எழுத்துமுறை அமைந்தபிறகும் அடையாள எழுத்து முறை அடியோடு நீங்கவில்லை. அம்புகளில் விலங்குகளின் உருவங்களையும் பறவைகளின் உருவங்களையும் எழுதி, அந்தந்த அம்புகளை அவற்றின் பெயராலேயே வழங்கும் முறை, நாகரிகம் வளர்ந்த பிற்காலத்திலும் இருந்து வந்தது. புலிக்கொடி, கயற்கொடி, வில்கொடி, பனைக் கொடி முதலிய கொடிகளின் அறிகுறிகள் நாகரிகம் வளர்ந்த காலத்திலும் இருந்துவந்தன. இன்றும் இத்தகைய கொடிகள் நாடுகளைக் குறிக்கப் பயன்படுகின்றன. தேர்தல் காலத்தில் வழங்கும் அறிகுறிகளும் இத்தகையனவே ஆகும்.

தென் அமெரிக்காவில் 'பெரு' நாட்டில் கயிற்றுமுடிகள், செய்தி அறிவிக்கப் பயன்பட்டுவந்தன. கயிறுகளின் நிறம், முடிகளின் எண்ணிக்கை, முடி அமைப்பு முதலி


1. Our own writing is ultimately derived from the ancient Egyptian, but no one could recognize pictures in our letters; as a matter of fact, our letter F still has the two horns of the snail which was pictured in the hieroglyphic ancestor of this letter.—Bloomfield, Language, p. 284.

யவை வெவ்வேறு கருத்துக்களை உணர்த்தப் பயன்படுத்தப் பெற்றன. அரச தூதர்கள் இவற்றை உடன்கொண்டு சென்று செய்திகளை அறிவித்துவந்தனர். சீனநாட்டிலும் பழங்காலத்தில் இத்தகைய முறை இருந்துவந்தது.

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் பலவகைக் குச்சிகளைப் பயன்படுத்தினர். வேறு சிலர் நத்தை ஓட்டுத் துண்டுகளைப் பயன்படுத்தினர். இவைகள் எல்லாம் ஓவிய எழுத்துமுறைக்கு அடுத்த நிலையில் வளர்ந்தவை. ஓவிய எழுத்துமுறையில் பொருள்களின் உருவங்களே இருந்தன. மூடிச்சு முதலியவற்றில் பொருள்களின் அறிகுறிகளே இருந்தன. உருவங்களால் கருத்தை உணர்த்தும் முறையைவிட அறிகுறிகளால் உணர்த்தும் முறை ஒருபடி உயர்ந்ததாகும்.

வளர்ச்சி

ஓவிய எழுத்திலிருந்து அடையாள எழுத்து வளர்ந்த வளர்ச்சியைப் பின்வருமாறு குறிக்கலாம். பேச்சுமொழி வளர்ந்த நிலையில் பொருள்கள் இருந்தன; அவற்றிற்குச் சொற்கள் இருந்தன. பொருள்கள் இயற்கையின் படைப்பு; சொற்கள் அவற்றிற்கு மக்கள் இட்ட ஒலிக் குறியீடுகள். எழுத்துக்கள் இவற்றிற்கு இடையே தோன்றியவை. தொடக்கத்தில் அவை பொருள்களை ஒட்டியவைகளாக இருந்தன; வளர வளர ஒலிகளை ஒட்டி மாறி அமைந்தன. அஃதாவது, தொடக்கத்தில் எழுத்துக்கள் பொருள்களின் உருவங்களைக் காட்டின; வளர்ந்து அமைந்தபோது, பெயர்களான ஒலிகளின் அறிகுறிகளாக நின்றன. இவ்வாறு மாறியமைவதற்குமுன், இடைக்காலத்தில் ஓவியங்களே ஒலிகளின் அடையாளங்களாகப் பயன்பட்டு ஒருவகைத் தடுமாற்ற நிலைமை இருந்துவந்தது எனலாம்.



அசையோவிய எழுத்துக்கள்

ஓவிய எழுத்துத் தோன்றிய தொடக்கத்தில் செங் கழுநீர்ப் பூவைக் குறிக்கநேர்ந்தது எனின், அந்தப் பூவின் வடிவத்தையே எழுதினர். பிறகு செம்மை-கழு-நீர்-பூ என அந்தச் சொல்லின் ஒலியைக் கருதும் நிலை ஏற்பட்டு, செங்நிறப் பொருள், கழு, நீர், பூ ஆகிய நான்கு சொற் களின் வழக்கமான வடிவங்களைச் சேர்த்து எழுதும் நிலை நேர்ந்தது. இந்த இடைப்பட்ட நிலை இடர்ப்பாடான நிலையே ஆகும். இதிலிருந்து வளர்ந்துள்ள மூன்றும் நிலையே, இன்று உள்ளது ; அஃதாவது அந்தச் சொல்லின் ஒலிகளை ஒழுங்காகப் பகுத்து அவற்றிற்கு அமைந்துள்ள தனித்தனி எழுத்துக்களால் செ-ங்-க-ழு-நீ-ர்-ப்-பூ என எழுதும் முறையாகும்.

இடைப்பட்ட நிலை இங்குச் சிறிது கருதத்தக்கது. அந் நிலையில் ஓவிய எழுத்தும் திருத்தமான ஓவியமாக நின்று உரிய பொருளை உணர்த்தவில்லை; ஒலியெழுத்தும் பிறக்கவில்லை. ஒரு பொருளுக்கு ஒரு சொல், ஒரு சொல் லுக்கு ஓர் ஓவியம் என்ற தெளிவான நிலையும் இல்லை. ஒரு சொல்லுக்குச் சில ஒலிகள், ஒவ்வோர் ஒலிக்கும் ஒவ்வோர் எழுத்து என்ற பயனுள்ள நிலையும் இல்லை. இத்தகைய நிலையில் இருந்த எழுத்துக்கள் முழுச் சொற்களைக் குறிப்

யதையும் விட்டு, தனித்தனி யொலிகளைக் குறிப்பதையும் செய்யாமல், சொல்லின் அசைகளை உணர்த்திவந்தன. செங்கழுநீர்ப்பூ என்ற பொருளுக்கும் ஓவியமாகாமல், அதன் எழுத்துக்களையும் உணர்த்தாமல், செம்மை + கழு + நீர் + பூ என்று அதில் உள்ள அசைகளை எழுதிவந்தனர். ஆதலின் அத்தகைய எழுத்துக்களை அசை ஓவிய எழுத்துக்கள் எனலாம்.

ஒலி எழுத்துக்கள்

இத்தகைய நிலை இருந்துவந்தபோது தோன்றிய எழுத்துக்களே பிற்காலத்தில் ஒலி யெழுத்துக்களாகப் பயன்பட்டன. அதனால்தான், இன்றும் சில மொழிகளில் எழுத்துக்களின் பெயர்கள் முழுமுழுச் சொற்களாக உள்ளன. A, B என்னும் எழுத்துக்களை ஆல்பா, பேட்டா என்று சில மொழியினர் வழங்குதல் காணலாம். (ஆல்ப பெட்—alphabet என்று எழுத்துக்களுக்குப் பொதுப் பெயர் வழங்குதலும், இப் பெயர்களைக்கொண்டே ஆகும்). செமிட்டிக் மொழிகளிலும் எழுத்துக்களின் பெயர்கள், குறிப்பிட்ட பொருள்களின் பெயர்களாக உள்ளன. தமிழில் 'அ' என்ற எழுத்தை 'அ' என்றே பெயரிட்டு வழங்குகிறோம் (அல்லது, பொருளில்லாத சாரியை சேர்த்து அவ்வன்னு அகரம் என்று வழங்குகிறோம்). அதை 'அ' என்று கூறாமல், அணில் அல்லது அகப்பை அல்லது அடுப்பு என்று பெயரிட்டால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறு உள்ளன அந்த மொழிகளில் எழுத்துக்களின் பெயர்கள்.[1]

1. It was inevitable that the ideograpic symbols should also become associated with the sounds of the spoken language representing the same ideas, and thus gradually pass over to the state of alphabetic, or at any rate phonetic, symbols.—Pillsbury and Meader, The Psychology of Language, p. 9.

ஆப்பு வடிவ எழுத்துக்கள்

மத்திய ஆசியாவில் பெஹிஸ்தன் என்ற இடத்தில் பெரிய கற்பாறையில் சில கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப் பட்டன. சர் ஹென்றி ராலின்சன் என்பவர் அந்தக் கற் களில் இருந்த எழுத்துக்களைப் பார்த்து அப்படியே எழுதி வந்து வெளியிட்டார். இடர்ப்பாடு மிகுந்த அந்த இடத் தில் உயரமான பாறையின் ஓரமாக ஓர் ஏணி வழியாகத் துணிந்து ஏறிச்சென்று, அந்த எழுத்துக்களைக் கண்டு எழுதிப் பல ஆராய்ச்சிகள் செய்து வெளியிட்டார்.

இந்தியாவிலும் எகிப்திலும் பாறைகள் உள்ளன. இங்கெல்லாம் உருவங்களைக் கற்களில் செதுக்கும் வழக்கம் வளர்ந்தது. பாறைகள் இல்லாத மெசபடோமியாவில் வேறு முறை தோன்றியது. களிமண்ணை அந்த நாட்டு மக்கள் மிகப் பயன்படுத்தினர். கல்லில் எழுதுவது போல் களிமண்ணில் எழுத இயலாது. கல் உறுதியானது; ஆகை யால் எழுத்துக்களை வெட்டிச் செதுக்க இயலும். களி மண்ணை அத்தகையது அன்று; நீர் பட்டால் குழைந்து போவது; காய்ந்தால் இறுகிவிடுவது. ஆகவே அதற்கு வேறொரு முறை கண்டார்கள். களிமண்ணை நீர்விட்டுக் குழைத்துத் தட்டையாக்கிக்கொண்டு, பட்டையான கருவி யைச் சாய்த்துவைத்து அழுத்துவதால் ஏற்படும் அடையா ளத்தை எழுத்து எனக் கொண்டார்கள். அவ்வாறு அழுத்துவதால் மேலேவரும் களிமண், அம்புமுனை போல், ஆப்புப் போல் இருக்கும். இவ்வாறு மெசபடோமியாவில் வாழ்ந்த சுமேரியர் எழுதிப் பழகிய எழுத்துக்கள் ஆப்பு வடிவ எழுத்துக்கள் (cuneiform writing) எனப்படும். இந்த எழுத்துக்கள் அழியாமல் விளங்குவதற்காக, அவற்றைப் பொறித்த களிமண் தட்டுக்களை வெயிலில் காய வைத்தும் நெருப்பில் வேக வைத்தும் உறுதிபெறச் செய்

தார்கள், இத்தகைய எழுத்துக்களைச் சித்திரங்கள்போல் அமைக்க முடியவில்லை. குறுக்கும் நெடுக்குமான கோடுகளே தோன்றின; பொருள்களின் உருவங்கள் தோன்றவில்லை. இன்ன எழுத்துக்கு இன்ன பொருள் என்று பழக்கத்தால் நினைவில் வைத்துக்கொண்டார்கள். இதனால் ஆப்புவடிவ எழுத்துக்கள் நேரே ஓவியங்களாக நிற்காமல், அடையாள எழுத்துக்களாகப் பயன்பட்டன.

இந்த ஆப்புவடிவ எழுத்துக்களைப் பற்றி ஆராய்ந்தவர்கள், இவை ரோமாபுரியும் ஏதென்ஸ் நகரமும் தோன்றுவதற்குமுன், அந்த நகரங்கள் இருக்கும் இடத்தில் அடர்ந்த காடுகள் விளங்கிய மிகப் பழங்காலத்திலேயே இருந்தன என்று கூறுகின்றனர். அந்தப் பழங்காலத்தில் 'நினெவெ' என்ற பழைய நகரத்தில் ஆப்புவடிவ எழுத்துக்களால் அமைந்த புத்தகங்கள் இருந்தன என்றும் கூறுகின்றனர். புத்தகங்கள் என்றால், அவை களிமண் தட்டுக்களாகும்.

நாம் இன்று எழுதும் எழுத்துக்கள் சித்திர எழுத்துக்களிலிருந்து தோன்றவில்லை என்றும், ஆப்புவடிவ எழுத்துக்களிலிருந்தே தோன்றின என்றும் அறிஞர் சிலர் கருதுகின்றனர். நம் எழுத்துக்களில் கோடுகள் மிகுதியாக அமைந்திருக்கக் காரணம், இந்த ஆப்புவடிவ எழுத்துக்களிலிருந்து தோன்றியதே என்பர். ஆங்கிலத்தில் உள்ள எழுத்துக்களில் (A B C D முதலியவற்றில்) கோடுகள் இருப்பதற்கும் காரணம் இதுவே என்பர். இக் கருத்துத் தமிழைப் பொறுத்தவரையில் பொருந்தாது. எழுதுவதற்கு உரிய பொருள்களாகிய ஓலை, தோல், தகடு, கல் முதலியவற்றிற்கும் எழுதும் கருவிகளுக்கும் ஏற்ப எழுத்து வடிவங்கள் மாறுதல் இயற்கை. வட்டெழுத்துக்

களாக இருந்த தமிழ் எழுத்துக்கள், கல்லில் செதுக்கும் முறைக்கு மிகப் பயன்பட்டபோது, வளைவுகள் குறைந்து கோடுகள் மிகுந்தன. ஓலையில் கோடுகள் எழுதின் ஓலை கிழிபடும்; அதனால் வளைவுகள் மிக்க வட்டெழுத்துக்கள் பயின்று வழங்கின. கல்லில் வட்டங்களைச் செதுக்குதல் அரிது; கோடுகளைச் செதுக்குதல் எளிது; ஆதலின் தமிழ் எழுத்துக்களில் பிற்காலத்தில் கோடுகள் மிகுந்தன; அவற்றிற்கு ஆப்பு வடிவ எழுத்துக்கள் காரணம் அல்ல.

எழுதும் முறைகள்

எழுதும் முறையும் பலவகையாக வேறுபடுகிறது. செமிட்டிக் மொழிகளில் வலமிருந்து இடம்நோக்கி எழுதும் வழக்கம் உள்ளது. தமிழ் முதலான மொழிகளில் இடமிருந்து வலமாக எழுதும் வழக்கம் உள்ளது. பழைய கிரேக்கர்கள் இடமிருந்து வலமாக எழுதிக்கொண்டே போய், அந்த வரி முடிந்ததும், அடுத்த வரியில் அங்கிருந்தே திரும்பி வலமிருந்து இடமாக எழுதினர்கள். அதனால் அவர்களின் எழுத்து, ஒரு வரி இப்படியும் ஒரு வரி அப்படியுமாக மாறி மாறி அமைந்திருந்தது. இடையில் படிப்பவர்க்கு அதனால் தடுமாற்றம் ஏற்பட்டமையால், அந்த முறை போய், தமிழ்போல் எழுதும் முறை வந்தது. பழைய பிராமி எழுத்தும் இடமும் வலமுமாகக் கலந்து எழுதப்பட்டுவந்தது.

சைனாவிலும் ஜப்பானிலும் இடம் வலமாகவோ வலம் இடமாகவோ எழுதும் முறைஇல்லை. மேலிருந்து கீழ் நோக்கி எழுதிய வரிதான் சீனமொழியில் ஒரு வரி. மெக்சிகோ நாட்டினர் கீழிருந்து மேல்நோக்கி எழுதும் முறையில் பழகினர்கள்.

அரபி எழுத்துக்கள்

இன்று உள்ள எழுத்துக்களில் அரபி எழுத்துக்கள் தனிவகையானவை. முதல்முதல் ஏற்பட்ட அரபி எழுத்துக்களுக்குக் 'குபியா' என்று பெயர். ஆசியாவின் மேற்குப் பகுதியில் யூப்ரடிஸ் என்ற ஆற்றின் கரையில் அமைந்த 'குபா' என்ற நகரத்தின் பெயரால் 'குபியா' என்று பெயர் பெற்றது இது. குபா நகரத்தில்தான் 'கொர்-ஆன்' முழுதியாக எழுதிப் பரவச் செய்யப்பட்டது. பழைய நாணயங்களிலும் பழைய கல்வெட்டுக்களிலும் இந்த எழுத்துக்கள் காணப்படுகின்றன.

காலம் செல்லச் செல்ல, தேவையை ஒட்டி எழுத்துக்கள் பெருகுதல் இயற்கை. முதலில் தோன்றிய அரபி எழுத்தாகிய 'குபியா'வில், பதினாறு மெய்யெழுத்துக்களே இருந்தன. பத்தாம் நூற்றாண்டில் பல எழுத்துக்கள் சேர்ந்து, இன்று அரபி எழுத்தில் இருபத்தெட்டு மெய்கள் உள்ளன.

அசையெழுத்துக்கள்

மெய்யுடன் உயிர் சேர்ந்துவரும் இடங்களில் மெய்யெழுத்துக்களுக்கு முழு உருவம் தந்து, உயிரெழுத்துக்களுக்கு முழு உருவம் தராமல், சிறிய குறியீடுகளே (க்+இ=கி) வழங்கும் வழக்கம் இந்திய மொழிகளில் முழுதும்; செமிட்டிக் மொழிகளிலும் உண்டு. ஐரோப்பிய மொழிகளில் மெய்யுடன் உயிர் சேர்ந்து வரும்போதும் (k+i=ki) இரண்டையும் முழு உருவத்துடன் எழுதுதல் வழக்கம்.

தமிழ் முதலான மொழிகளில் உயிர்மெய்யெழுத்துக்களே எழுதும்முறை அசையெழுத்துமுறை என

ஐரோப்பியர் தவறுகக் கருதினர்;[1] காரணம் ஐரோப்பிய மொழிகளில் உள்ளவாறு போல் இவற்றில் மெய்யும் உயிரும் சேர்ந்த இடத்தில் மெய்யை மட்டும் எழுதி அதனுடன் உயிரின் சிறிய குறியீட்டை எழுதுதலாகும்;[2] அதனால் அவர்கள் இவ் வெழுத்தை அசையெழுத்து எனக் கருதியது பொருந்தாது. பனையோலையில் எழுதியபோது இடப்புறத்தில் எழுதத்தொடங்கிய வரி வலப்புறத்தில் சென்று முடியும் வரையில் ஒரே தொடர்ச்சியாக எழுத வேண்டியிருந்தது. இடையில் எழுத்தாணியை எடுத்து விட்டு விட்டுத் தனித்தனி எழுத்துக்களாக எழுதின், எழுத்தும் ஓடாது; ஓலையும் சிதையும். அதனால் மெய்யும் உயிரும் அடுத்துவரும் மெய்யும் ஆகிய யாவற்றையும் தொடர்ந்து எழுதும் வழக்கமும், அடி முதலில் தொடங்கும் உயிரெழுத்தைச் சுழித்தெழுதும் பழக்கமும் ஏற்பட்டன. சுழித்தலும் வளைத்தலும் இல்லையேல், உயிரெழுத்துக்களுக்கும் அவற்றின் குறிகளுக்கும் அவ்வளவாக வேறுபாடு இல்லாதிருத்தலையும் காணலாம். உயிர்மெய் எனக் கூறப்படும் காரணம் கருதி அசைஎழுத்து எனக்

1. A pure syllabic alphabet is one whose letters represent syllables, instead of articulations; which makes an imperfect phonetic analysis of words, not into the simple sounds that compose them, but into their syllabic elements.—Whitney, Language and the Study of Language, p. 460.

2, Another and a less pure form of syllabic alphabet is that which treats the consonants alone as the substantial part of the syllable; and looks upon the vowel as something of subordinate consequence as it were, a colouring or affection of the consonant. In its view, then, only the consonant has a right to be written, or to be written in full; the accompanying vowel, if taken note of at all, must be indicated by some less conspicious sign, attached to the consonant.—Whitney, Language and the Study of Language, p. 461.

கொள்ளாமல், மெய்யை அடுத்துவரும் உயிராக, மெய்யும் உயிருமாகத் தனித்தனியே விளங்குதலைக் கண்டு ஒலி யெழுத்து எனக் கொள்வதே பொருந்தும். பழந்தமிழ் எழுத்துக்களை ஒட்டி அமைந்த பழைய பிராமி எழுத்தில் அமைந்த சில கல்வெட்டுக்களில், மெய்யெழுத்தும் உயி ரெழுத்தும் தனித்தனியே எழுதப்பட்டு வந்த வழக்கமும்[1] இதனை உறுதிப்படுத்துகிறது.

பேச்சும் எழுத்தும்

பேசும் பேச்சு அப்படியே திரிபு இல்லாமல் எழுதப் படுவதாகத் தோன்றலாம். ஆனால் அஃது உண்மை அன்று. எந்த மொழியிலும் அந்த நிலைமை இல்லை. பேசுவது போல் எழுதுவதில்லை; பிறர் எழுதுவது போல் எழுது கிறோம்.[2]

பேசுவதைப் போல் எழுத முயல்வது உண்டு; அதற் குக் காற்புள்ளிமுதல் விளிக்குறி வரையில் உள்ள குறி யீடுகள் பலவற்றைப் பயன்படுத்துகின்றனர்; எழுத்துக் களின் மேலும் கீழும் கோடிட்டும் புள்ளியிட்டும் ஒலி வேறுபாடுகளைத் தெளிவாக்குகின்றனர். இவ்வளவெல்லாம் செய்த பிறகும், பேசுவதைப் போல் எழுத முடிவதில்லை.[3] ஆதலின் இவ் வகையில் முயற்சி நடைபெறுகிறதே அல்லா மல், வெற்றி பெறவில்லை எனலாம்.

1. தி. நா. சுப்பிரமணியன், பண்டைத் தமிழ் எழுத்துக்கள், பக்கம் 20.

2. No orthography has ever exactly reproduced the spoken language.—J. Vendryes, Language, p. 333.

3. The spoken language is so complex that there are always a number of details of intensity, intonation, and articulation, which even the most perfect writing cannot indicate.—Ibid. p. 334.

பேச்சுமொழியும் எழுத்துமொழியும் வேறுபடுவ தற்குக் காரணங்கள் உண்டு. முதலாவதாக, பேச்சு மொழியில் உள்ள எல்லா ஒலிவகைகளும் எழுத்து மொழியில் இல்லை; முண்ணிய ஒலிவேறுபாடுகளை எழுத் துக்களால் காட்ட முடிவதில்லை.

இரண்டாவதாக, பேச்சுமொழி அப்போதைக்குப் பயன்படுவதற்காக உள்ளது; இறந்தகாலத்துடனும் எதிர் காலத்துடனும் தொடர்பு இல்லாமல் மறைந்து போகிறது; ஆகையால் எவ்வளவு மாறுதல் ஏற்பட்டாலும் தாங்கி நிற்கிறது. எழுத்துமொழி, இறந்தகாலத்தினை அடிப்படை யாகக் கொண்டு எதிர்காலத்தினை நோக்கி எழுதுவது. ஆகவே, எழுத்துமொழியில் மாறுதல் என்றால், இறந்த காலத்தின் தொடர்புஅற்றது என்றும், எதிர்காலத்தில் இல்லாமல்போவது என்றும் கொள்ளவேண்டும். அதனால் காலம் கடந்து வாழ வல்ல எழுத்துமொழியில் மாறுதல் பல செய்தல் இடர்ப்பாடு ஆகிறது. பேச்சுமொழி மட்டும் இத்தகைய தடை இன்றி மாறுதலுக்கு இடம் தருகிறது.

மாறும் பேச்சுமொழியை மாறுத எழுத்துமொழி யால் புலப்படுத்த முயல்வது, உயிருடன் இயங்கும் உடம் பின்மேல் உயிரற்ற உடையை அணிவது போல்வது என் கிறார் விட்னே.

பேச்சுமொழி மாறுமல் இருக்கும் இயல்புடைய தானால், தமிழ் தெலுங்கு கன்னடம் ஆகிய மொழிகள் தனித்தனியே அமைந்து வெவ்வேறாய் நிற்கும் நிலை கோர்ந் திருக்காது. ஏழு, கோழி என்னும் சொற்கள் எல்லா மொழிகளிலும் ஒரே வகையாக இருந்திருக்கும். தமிழில் ஏழு கோழி என்றும், தெலுங்கில் ஏடு கோடி என்றும்,

கன்னடத்தில் ஏளு கோளி என்றும் திரிந்து வழங்குவதற்குக் காரணம், பேச்சுமொழியின் மாறும் இயல்பே ஆகும்.

எழுத்தும் ஒலியும்

பேசுவது போல் எழுத முடிவதில்லை என்பதைக் கண்டோம். இனி எழுதுவது போல் ஒலிக்கும் வழக்கம் உள்ளதா எனக் காண்போம்.

சொற்களை எழுதியவாறே ஒலிப்பது இயற்கையான முறை; நூல்களில் படிக்கும்போது எழுதியவாறே ஒலிக்கும் முறையே, தமிழிலும் வேறுபல மொழிகளிலும் உள்ளது ஆயின், பேசும்போது அவ்வாறே பேசுவதில்லை. 'இரண்டு' என்று எழுதுகிறோம், படிக்கிறோம்; ஆனால் பெரும்பாலோர் பேசும்போது 'ரெண்டு' என்று ஒலிக்கிறோம். 'ரெண்டு' என்று பேச்சுமொழியில் ஒலிப்பதால், படிக்கும்போதும் அவ்வாறு ஒலிப்பதில்லை. ஆக, எழுதிப் படிப்பதற்கு ஒரு முறையும் பேசுவதற்கு ஒரு முறையும் உள்ளன. உலக மொழிகள் எல்லாவற்றிலுமே எழுத்துமொழிக்கும் பேச்சுமொழிக்கும் இத்தகைய வேறுபாடு உண்டு.

ஆயின், ஆங்கிலத்தில் உள்ள எழுத்துக் கூட்டி ஒலிக்கும் முறை இவ்வாறு இல்லை. D-e-p-o-t என்று ஐந்தெழுத்தால் எழுதிய ஒன்றைப் படிக்கும்போது, இறுதி எழுத்தைவிட்டு 'டிபோ' என்றே ஒலிக்கிறார்கள். ஒலிக்கும் முறையை நோக்கியாவது, அந்த எழுத்தை விட்டுவிடலாம் எனின், அதுவும் இல்லை. சென்ற ஆண்டில் இருந்ததை விடச் சிறிது மாறி வளர்ந்த சிறுவனுக்கு, அந்த மாறுதலுக்கு ஏற்றவாறு சட்டையை மாற்றி அமைக்காமல், சென்ற ஆண்டில் தைத்த அதே அளவிற்கு இன்றும் சட்டை தைத்தலைப் போன்றது இது. ஒரு காலத்தில்

h-o-n-o-u-r என்னும் ஆறெழுத்து மொழியை 'ஹானர்' என்று ஒலித்தார்கள்; அதனால் அவ்வாறு எழுதினார்கள். இன்று 'ஆனர்' என்று ஒலிக்கிறார்கள்; ஆனால் 'h' என்ற எழுத்தை விடுவதில்லை. எழுத்துக்களை மட்டும் விடாமல் அவ்வாறே எழுதி வருகிறார்கள். இது பழைய நிலையைக் காட்டப் பயன்படுவதாயினும், பிற்போக்கான நிலையே என விட்னே கருதுகிறார். 'யாடு' 'யாறு' என்ற பழைய தமிழ்ச் சொற்களைப் பிற்காலத்தார் 'ஆடு' 'ஆறு' என்று ஒலிக்கத் தொடங்கினர். மாறிய ஒலிக்கு ஏற்பவே தமிழர் கள் அவற்றை எழுதவும் தொடங்கினர்கள். இன்று 'ஆடு' 'ஆறு' என்றே எழுதப்பட்டு அவ்வாறே ஒலிக்கப்படு கின்றன. 'ஆடு' 'ஆறு' என்று ஒலி முறையும், எழுதும் போது 'யாடு' 'யாறு' என்று எழுத்துமுறையும் தமிழில் இருந்தால், பொருந்தாதனவாகத் தோன்றும் அல்லவோ? 'சோழ நாடு' என்பதைச் 'சோணாடு' என்று சிலர் ஒலித் தார்கள்; உடனே அவ்வாறே எழுதவும் தொடங்கினர்கள். 'சோழ நாடு' என்று எழுதியதையே 'சோணாடு' என்று படிக்கவேண்டும் என்றால், அது குறை அன்றோ? அத் தகைய குறை ஆங்கிலத்தில் மிகுதியாக உள்ளது. n-e-i-g-h-b-o-u-r என்று எழுதிவிட்டு 'நேபர்' என ஒலிப்பதன் குறை ஆங்கிலேயர்க்கு அவ்வளவாகத் தெரிவ தில்லை. ஒருவர்குறை அவருக்குத் தெரிவதைவிட, மற்ற வர்களுக்கே தெளிவாகப் புலப்படும். மொழி பேசுவோ ரிடையிலும் இது உண்மையாக உள்ளது.

இதனால் ஒரு பயன் உள்ளது எனக் கூறப்படுகிறது. ஒரு சொல்லின் பிறப்பு, முந்திய வரலாறு ஆகியவை பற்றி அறிவதற்கு இந்த வடிவம் பயன்படுவதாகக் கூறப்படு கிறது. இத்தகைய சொல்லாராய்ச்சிக்காக மொழி வழங்கு வதில்லை. சொல்லாராய்ச்சி செய்வோர் நூறுபிரத்தில்

ஒருவர். மொழிவழக்குக்கு வேண்டாத ஒன்றை அவர்க் காக வைத்துச் சுமையாகக் காத்தல் இடையூறே ஆகும். சொல்லின் பயனைப் பெரிதாகக் கருதாமல், அதன் வடிவத் தைப் பெரிதாகப் போற்றும் மனப்பான்மையே இதற்குக் காரணம் எனலாம்.[1]

திராவிட மொழிகளின் எழுத்துக்கள்

திராவிட மொழிகளுள் தமிழுக்கும் மலையாளத்திற் கும் தனித்தனி எழுத்துக்கள் உள்ளன. தெலுங்கு, கன் னடம் ஆகிய இரு மொழிகளுக்கும் உள்ள எழுத்துக்கள் பெரும்பான்மையும் ஒத்திருப்பதால் அவ்விரு மொழி களுக்கும் ஒருவகை எழுத்து இருப்பதாகக் கொள்ளலாம். தெலுங்கு கன்னட எழுத்துக்களுள் உள்ள வேறுபாடுகள் மிகச் சிலவே ; முக்கியமான வேறுபாடு ஒன்றும் இல்லை.

துளு மொழி, கிரந்தத்தை ஒட்டிய ஒரு வகை எழுத் தில் எழுதப்பட்டுவந்தது. இப்போது கிறித்தவப் பாதிரி கள் கன்னட எழுத்துக்களில் நூல்களை அச்சிடுகின்றார்கள்.

கூ மொழியை ஓரியா எழுத்தால் எழுதுகின்றார்கள். இலக்கிய வளமற்ற மற்ற மொழிகளை ஆங்கில (ரோமன்) எழுத்துக்களால் எழுதுகின்றார்கள்.

எனவே, தமிழ் எழுத்து, தெலுங்கு எழுத்து, மலை யாள எழுத்து ஆகிய மூன்றும் திராவிட மொழிகளுக்கே உரிய எழுத்துவகைகள் எனலாம்.

---

1. Of all the forms of linguistic conservatism, or purism, orthographic purism is the lowest and the easiest; for it deals with the mere external shell or dress of language, and many a one can make stout fight in behalf of the right spelling of a word whose opinion as to its pronunciation even, and yet more its meaning and nice application, would possess no authority or value whatever.—Whitney, Language and the Study of Language, p. 468.

ஹள கன்னடம் என்னும் பழைய கன்னடத்திற்கு இப்போது உள்ள தெலுங்கெழுத்து இல்லாமல், வேறு எழுத்துவகை இருந்தது. தமிழ்மொழியில் உள்ள பழைய கல்வெட்டுக்களை ஆராயும்போது தமிழ்மொழியிலும் இவ்வாறே பண்டைக் காலத்தில் வேறு வகை எழுத்து இருந்துவந்தமை அறிகின்றோம்.

இப்போது உள்ள தமிழ் எழுத்துக்களைப் பற்றிய ஆராய்ச்சியிலும் பண்டைத் தமிழ் எழுத்துக்களைப் பற்றிய ஆராய்ச்சியிலும் கருத்து வேறுபாடுகள் பல உள்ளன. ஆனால், இன்று உள்ள மலையாள எழுத்துக்கள், தமிழ்க் கிரந்த எழுத்துக்களை ஒட்டி அமைக்கப்பட்டவை என்பதில் அறிஞர்கள் ஒன்றுபட்ட கருத்து உடையவர்களே. தெலுங்கு கன்னட எழுத்துமுறை தேவநாகரி எழுத்துக்களை ஒட்டி அமைந்தவை. தேவநாகரி முறைக்கும் தெலுங்குகன்னட எழுத்துமுறைக்கும் வேறுபாடு மிகச் சிறிதே. தேவநாகரியில் இல்லாத குறில் எ, குறில் ஒ, றகரமெய், ளகர மெய் இவை தெலுங்குகன்னட எழுத்துக்களில் உள்ளன. வேறுபாடு இவ்வளவே ஆகும். தமிழ்எழுத்துக்கள் தேவநாகரியை ஒட்டி அமைந்தவை என்றோ, கிரந்த எழுத்துக்களை ஒட்டி அமைந்தவை என்றோ கூற முடியாது.

பழங் கன்னடத்தில் ழகர எழுத்து இருந்தது; புதுக் கன்னடத்தில் இல்லாமற் போயிற்று. அந்த எழுத்து, தமிழில் உள்ளது போலவே, இன்றுவரை மலையாளத்திலும் உள்ளது. மலையாள எழுத்துமுறைக்கும் தேவநாகரி எழுத்துமுறைக்கும் வேறுபாடு சிறிதே எனலாம். எனினும் எழுத்துவடிவங்கள் தமிழ் எழுத்துவடிவங்களை ஒட்டியவைகளேயாகும்.

தமிழ் எழுத்துக்கள் : வேறுபாடு

தமிழ் மொழியோ எழுத்துமுறையில் ஏனைய மொழிகளினின்றும் பெரிதும் வேறுபட்டு விளங்குகின்றது.

(1) எகர ஒகரக் குறிலுக்கும் அவ்வர் நெடிலுக்கும் தமிழில் தனித்தனி எழுத்துக்கள் உள்ளன. தெலுங்கு கன்னடத்திலும் அவை உள்ளன. ஆனால் தேவநாகரியில் அவை இல்லை; அம் மொழிகளில் நெடிலுக்கு மட்டுமே எழுத்துக்கள் உண்டு.

(2) தேவநாகரியில் உயிரினத்தோடு ஒருசேர வைக்கப்பட்டுள்ள ரு, லு என்பவை தமிழில் இல்லை.

(3) தமிழில் அநுஸ்வார விஸர்க்க எழுத்துக்கள் இல்லை.

(4) தெலுங்கிலுள்ள அர்த்தாநுஸ்வாரம் தமிழில் இல்லை.

(5) தமிழில் ஹை (aspirate) இல்லை. வல்லினங்களோடு கூடி ஒலிக்கும் ஹகர ஒலியும் (aspirated consonants) அவற்றிற்குரிய எழுத்துக்களும் தமிழில் இல்லை. அவற்றிற்கு ஈடாகத் தமிழில் ஆய்தம் என்னும் தூண்ணெனி உள்ளது.

(6) தமிழில் வல்லினமாகிய க ச ட த ப என்பவற்றிற்கு இனமான (கடல், அகம், அச்சு, அஞ்சு, தட்டு தடு, பத்து, பந்து, அப்பர், அம்பல்) மெல்லொலி அமைந்த சொற்கள் உள்ளன. ஆனால் அவற்றைக் குறிக்கும் எழுத்துக்கள் இல்லை. ஏனை மொழிகளில் உள்ளன. வல்லினத்தில் வல்லொலி மெல்லொலி இரண்டையும் குறிக்க ஓரெழுத்தே பயன்பட்டுவருகின்றது.

(7) தேவநாகரியில் இல்லாத ழ, ற, ன என்னும் மூன்றெழுத்துக்களும் தமிழுக்கு இன்றியமையாதனவாய் உள்ளன. அவை தமிழுக்குச் சிறப்பெழுத்துக்கள் எனப் படும். அது பற்றியே அவை எழுத்துக்களின் இறுதியில் இடம்பெற்று விளங்குகின்றன என்பர்.

(8) தேவநாகரியிலும் மலையாளம் முதலியவற்றிலும் உள்ள ஶ, ஸ, ஷ (sibilants) என்பவை தமிழில் இல்லை.

தமிழ் எழுத்து வரலாறு

தமிழில் எழுத்துக்களை நெடுங்கணக்கு என்ற பெயரால் குறித்தல் மரபு. அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியரைக் கணக்காயர் என்பது வழக்கு. அன்றியும், எழுதப் படுதலின் எழுத்து என்ற தனிப்பெயரும் உண்டு. எழுதப் பட்ட நூலுக்குச் சுவடி என்ற பெயரும் உள்ளது. இத் தூய தமிழ்ப் பெயர்கள் அனைத்தும், தமிழ்மொழியின் எழுத்துமுறையின் தொன்மையும் தனிமையும் விளக்கும் சான்றுகளாகக் கொள்ளத் தக்கவை.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் இலக்கணம் எழுதப் புகுந்த பவணந்தியார், எழுத்துக்களைப் பன்னிரண்டு வகையால் ஆராய்ந்தார்.[1] அவற்றுள் உருவம் என்பதும் ஒன்று. எழுத்துக்களின் உருவத்தை இலக்கண நூலாரும் போற்றும் அத்துணைத் தனிச் சிறப்பு, தமிழ் எழுத்துக்களுக்கு இருந்தமை இதனால் தெளிவாகின்றது.

ஆயினும் இன்று வழங்கும் தமிழெழுத்துக்களே தொன்றுதொட்டு இருந்துவந்தன என்று கூறல் பொருந்தாது.

---

1. எண்பெயர் முறைபிறப்(பு) உருவம் மாத்திரை
முதலீ றிடைநிலை போலி என்றா
பதம்புணர்ப் பெனப்பன் னிருபாற் றதுவே.—நன்னூல், 57.

ஆயிரத்திருநூறு ஆண்டுகளுக்கு முன்னே வேறு வகை எழுத்தே இருந்துவந்தது. அந்த எழுத்தை வட்டெழுத்து[1] என்பர். அதுவே மிகப் பழைய தமிழ்எழுத்தாகும். பிறகு வடமொழியாரால் பரப்பப்பெற்ற கிரந்த எழுத்து, படிப்படியே தமிழ்நாட்டில் இடம் பெற்றது. முதலில் சிறுபான்மையோராலேயே அது கையாளப்பட்டு வந்தது. சிறிது சிறிதாகச் செல்வாக்குப் பெற்றுப் பதினான்காம் நூற்றாண்டில் அது வட்டெழுத்துக்களைப் பெரிதும் மாற்றி இப்போது வழங்கும் எழுத்துக்களை அமைத்துவிட்டது.

தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களையும், திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களில் உள்ள கல்வெட்டுக்களையும் ஆராயும்போது, சில வட்டெழுத்துக்களிலும் சில கிரந்த எழுத்துக்களிலும் அமைந்திருக்கக் காண்கின்றோம். மதுரை திருநெல்வேலி வட்டாரங்களில் அசோக மன்னரின் பிராமி எழுத்துக்களில் ஒரு சில, கல்வெட்டுக்களில் இருப்பதைக் காண்கிறோம். எனவே, தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்கள் மூவகை எழுத்துக்களைத் தெரிவிக்கின்றன :

(1) மிகப் பழைய கல்வெட்டுகளில் உள்ள வட்டெழுத்து—தமிழரின் பழைய எழுத்து.

(2) பௌத்தர் புகுத்திய ஒரு சில பிராமி எழுத்து.

(3) வடமொழியாளர் பரப்பிய கிரந்த எழுத்து.

வட்டெழுத்து வாழ்ந்திழந்த காலம் இதுவென்றும், ஏனை எழுத்துக்கள் புகுந்த காலங்கள் இவை என்றும் வரையறுத்துக் கூற முடியவில்லை. கல்வெட்டுக்களே

1. கல்லில் வெட்டும் எழுத்தாகலின், வெட்டெழுத்து என்பதே பெயர் என்றும், அது திரிந்து வட்டெழுத்து என ஆயிற்று என்றும் தஞ்சை திரு. ஜி. தியாகராசர் கருதுகிறார்.

ஒருவாறு துணை செய்யும் கருவிகளாக உதவுகின்றன. தொண்டை மண்டலத்தில் பல்லவராட்சிக் காலத்தில் பிராமி எழுத்துக்கள் பல்லவர்களின் எழுத்துக்களாக விளங்கின. அவை கி. பி. 650ம் ஆண்டு வரையில் சென்று ஆராய இடம்தருகின்றன. கூரத்துச் சாசனம் எடுத்துக்காட்டாகக் கூறலாம். சோழ நாட்டில் மிகப் பழைய கல்வெட்டுக்களாகக் காணப்பட்டவை கி. பி. பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவை. அவை கிரந்த எழுத்துக்களில் அமைந்துள்ளன. சோழநாட்டில் ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாக வட்டெழுத்துச் சாசனங்கள் உள்ளன. அவை பெரும்பாலும் பாண்டிய வேந்தர்களால் ஏற்பட்டனவாக உள்ளன. பாண்டிய நாட்டில் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பழைய கல்வெட்டுக்களும் உள்ளன. அவற்றுள் சில வட்டெழுத்துக்களாலும் சில கிரந்த எழுத்துக்களாலும் அமைந்தவை. சேரநாட்டில் வட்டெழுத்து நெடுங்காலம் வாழ்ந்துவந்திருக்கின்றது. மேற்குக் கடற்கரை ஓரமாக உள்ள மாப்பிள்ளை வகுப்பார், சென்ற நூற்றாண்டிலும் வட்டெழுத்திலேயே எழுதிவந்தார்கள். ஆகவே, வட இந்தியர் முதலில் பரவிய தொண்டைமண்டலத்திலும் சோழ மண்டலத்திலும் கிரந்த எழுத்துக்கள் முதலில் பரவின என்றும், பிறகே ஏனை நாடுகளில் இடம்பெற்றன என்றும் அறிகின்றோம்.

அன்றியும் வட்டெழுத்து மிகப் பழைய கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றது. இலக்கண நூலாரை அணுகின், அதன் தொன்மை தெளிவாகின்றது. கி. மு. 1000க்கு முற்பட்ட பழங்காலத்தில்[1] இயற்றப்பட்ட தொல்

1. தொல்காப்பியனார் தமது நூலில் இந்திரன் என்னும் வடமொழியிலக்கண ஆசிரியரைக் குறிப்பிட்டுள்ளார்; ஆயின், அவர் பாணினி என்னும் வட மொழியிலக்கண ஆசிரியரைக்

காப்பியம் என்னும் தொன்மைத் தமிழ்நூலில் கூறப்பட்ட எழுத்து வடிவங்கள் வட்டெழுத்துக்களைக் குறிப்பனவே ஆகும்.

இவ் வெழுத்தினையே கோலெழுத்து எனவும் கண்ணெழுத்து எனவும் பழந்தமிழ் நூல்கள் குறிக்கும்.[1] இத் திரம்போல் எழுதப்பெற்றவை என்பதுபற்றி இப் பெயர்கள் அமைந்தன. சீனம் முதலிய மொழிகளிலும் முதல்முதலில் எழுத்துக்கள் ஓலியமாக எழுதப்பெற்று வந்தமையும் இன்றும் ஓரளவு அவைபோல் இருத்தலும் ஈண்டுக் கருதத் தக்கன.

வட்டெழுத்துக்கள் வேறு; வட இந்திய எழுத்துக்கள் வேறு

வட்டெழுத்துக்களின் தொன்மையும் சிறப்பும் இத் தன்மையனவாக, அவையும் கிரந்த எழுத்துக்களின் திரிபு என்றும், பிராமி எழுத்துக்களினின்றும் பிறந்தவை என்றும் கூறும் கொள்கைகள் பொருந்தாதன ஆகும். ஆராய்ச்சியின் முடிபும் அவ்வாறே தெளிவிக்கின்றது. டாக்டர் கால்டுவெல் பிற எழுத்துக்களுக்கும் தமிழ் எழுத்துக்களுக்கும் உள்ள வேறுபாடுகளையும், அவற்றின் காரணங்களையும் தெளிவாக விளக்கியபோதிலும், இறுதியில் எல்லாம் கிரந்த எழுத்துக்களின் திரிபே என்று கூற முன்வந்ததும் பொருந்தாமலே போகின்றது.[2]

குறிப்பிடவில்லை. பாணினியின் காலம் கி. மு. 350 என்று ஆராய்ச்சியாளர் கூறுதலால், தொல்காப்பியனார் அதற்கு முற்பட்டவர் என்பது அறிஞர் கருத்து.

1. சிலப்பதிகாரம், 5—112, 26—136.

2. There can be little doubt of the derivation of the Tamil character in ordinary use from the Grantha; for some characters are identical with Grantha letters which are still in use, and others with more ancient forms of the Grantha; but the other part of the hypothesis, viz., the existence of a Pre-

கடன்வாங்கினவை அல்ல

வட்டெழுத்துக்கள் வடமொழியிலிருந்து கடன் வாங்கினவை என்ற கொள்கையும் பிராமியிலிருந்து அமைக்கப்பட்டவை என்ற கருத்தும் பொருந்தாமைக்குக் காரணங்கள் :—

1. திராவிடர்கள் மிகப் பழைய குடிமக்கள்; தங்களுக்கே உரிய தொன்மையான நாகரிகம் வாய்ந்தவர்கள். கி. மு. பத்தாம் நூற்றாண்டுக்கு முன்னரும் எகிப்தியர் முதலான நாகரிக நாட்டினரோடு வாணிகம் முதலான தொடர்பு கொண்டிருந்தவர்கள். பிறமொழிகளில் புகுந்த தோகை, அரிசி முதலிய தமிழ்ச்சொற்கள் இதற்குச் சான்றுகளாம். எனவே, பிற்காலத்தே இந் நாட்டில் அமைந்த பிராமி தேவநாகரி என்பவற்றைப் பார்த்துத் தமிழர் எழுதக் கற்றனர் என்பது பொருந்தாது.

2. வடமொழியின் இலக்கண நூல்கள், தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை எழுதக் காரணமாக இருந்திருப்பினும், இலக்கண நூல்களுக்கு மிக முற்பட்ட எழுத்துமுறைக்கு அவை காரணம் ஆகா. தவிர, எழுத்து, சுவடி, நெடுங்கணக்கு என்ற தனித்தமிழ்ப் பெயர்கள் தமிழ் எழுத்துமுறை தனியே இருந்துவந்த உண்மையைத் தெரிவிக்கின்றன.

3. வடமொழிபோல் தமிழிலும் எ, ஒ என்ப வற்றிற்குத் தனி எழுத்துக்கள் இல்லையாதலின், வட

Sanskrit Tamil character, out of which the Grantha itself was developed, is more doubtful.—Caldwell, A. Comparative Grammar of the Dravidian Languages, p. 125.

The materials of that alphabet appear to be wholly, or in the main, Sanskrit; but the use which is made of those materials is Tamilian.—Ibid. p. 30.

மொழியை ஒட்டியே தமிழ் எழுத்துக்கள் ஏற்பட்டன என்பர் கால்டுவெல். இதுவும் பொருந்தாக் கூற்றே. மெய்யெழுத்துக்களுக்கு இருப்பதுபோல் எகர ஒகரக் குற்றெழுத்துக்களுக்கும் புள்ளியிருந்தது. இவற்றின் வரிவடிவங்களைப் பற்றித் தொல்காப்பியர் கூறுவதால், அவர் காலத்திற்கு மிக முன்னரே எ, ஒ இவற்றிற்குத் தனி எழுத்துவடிவம் இருந்தமை புலனாகும்.[1] குறியில் புள்ளியை நீக்கி, நெட்டெழுத்துக்களில் ஏ, ஓ என்ற உருவ வேறுபாடு செய்தவர் வீரமாமுனிவர். அதனாலேயே அவர்க்குமுன் ஒரு வேறுபாடும் இல்லை என்று கருதுதல் தவறு.

அன்றியும், இந்தக் குறை பிற்காலத்து எழுத்துக்களில் நேர்ந்த குறையாக இருத்தல் கூடும். அல்லது, தமிழ் எழுத்துக்கள் வடநாட்டாரிடம் சென்று, மீண்டும் தமிழகத்திற்கு வந்தபோது அவர்களின் கைப்பட்டு அமைந்த மாறுதலைத் தமிழும் ஏற்றது எனக் கொள்ளலாம்.[2] இவ்

---

1. 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்' (எழுத்ததிகாரம், கஎ) என்றும், 'எகர ஒகரத்து இயற்கையும் அற்றே' (எழுத்ததிகாரம், கசு) என்றும் தொல்காப்பியனார் கூறியுள்ளார். இவற்றால் குறிலெழுத்துக்களாய எகர ஒகரங்களின் வரிவடிவ வேறுபாடு விளக்கியுள்ளார். இக்காலத்து எ ஏ என்றும் ஒ ஓ என்றும் எழுதப்படும் குறில் நெடில்கள் அக்காலத்தில் ள் எ என்றும் ஒ ஒ என்றும் எழுதப்பட்டன. குறில்களாகிய எகர ஒகரம் புள்ளியோடு நிற்கும் என்பதே அவர் விளக்கம்.

2. பிராமி மொஹஞ்சதாரோக் குறிகளினின்றும் முதலில் தமிழுக்கெனப் பெறப்பட்ட லிபியாக இருக்குமாதலால், என் எகர ஒகரங்களுக்கு மட்டில் நாம் முன்பு காட்டிய வேறுபாடு காணப்பட வேண்டும்? ஒருகால், ஆரியர்கள் தமிழர்களிடமிருந்து கடன் வாங்கிய எழுத்துகள் வளர்ச்சியடைந்து, தமிழ் நாட்டில் ஆரிய நாகரிகத்துடன் புதிய வடிவத்தில் வந்துள்ளன வென்று கூறலாமா? இதற்கு உதாரணம் இல்லாமல் இல்லை.—தி. நா. சுப்பிரமணியன், பண்டைத் தமிழ் எழுத்துக்கள், பக். 104.

வாறு பழந்தமிழர் நாகரிகம் வடநாட்டாரின் கைப்பட்டுப் புதிய உருவம் பெற்றுத் திரும்ப வந்து அமைதலே நடனக் கலை முதலிய வேறு பல துறைகளிலும் காணலாம். ஆரியர்கள் இந்த நாட்டுக்கு வந்தபோது செவி வாயிலாக வளர்ந்த இலக்கியம் (சுருதி) இருந்ததே தவிர, அவர்களுக்கு எழுத்துமுறை இருந்ததில்லை என்பதும், பழந் திராவிடர் களிடமிருந்தே எழுத்தைக் கற்றனர் என்பதும் இங்குக் கருதத்தக்கன.[1]

4. கிரந்தத்திலிருந்து தமிழ் எழுத்துக்கள் அமைந் திருந்தால், தெலுங்கு மலையாளம் முதலியவற்றில் உள்ள வாறுபோல், தமிழிலும் எல்லா எழுத்துக்களும் இருக்க வேண்டும். ஆனால் தமிழில் உள்ள எழுத்துக்கள் உயிரும் மெய்யுமாக மூப்பதே; கிரந்தத்திலோ ஐம்பத்தாறு. எனவே, தொடக்கத்திலேயே பெரிய வேறுபாடு இருந்த தெனக் கொள்ளல் வேண்டும்.

5. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடும் வழக்கம் பிராமியிலும் அதைச் சார்ந்த வடநாட்டு எழுத்துக்களிலும் இல்லை. ஆனால் தமிழிலும் மேற்கு ஆசியாவில் வழங்கும் செமிட்டிக் மொழியிலும் இம் முறை உண்டு.

6. அசோக மன்னர் பௌத்த சமயத் துறவிகளைத் தமிழகத்திற்கு அனுப்பிப் பிராமியைப் பரப்பிய காலம் கி. மு. 250. அதற்கு முன்னமே தமிழில் இலக்கணமும் இலக்கியமும் எழுத்தும் இருந்தமை மறுக்க முடியாத உண்மையாகும். தொல்காப்பியர் கூறும் எழுத்து வடிவங்கள் பிராமி எழுத்துக்களைப் பற்றியன அல்ல.

1. They (the Aryans) had no writing until they had come into contact with civilisation.—H. G. Wells, A Short History of the World, ch. XIX.

7. வடமொழிப் பகுதியைக் கிரந்த எழுத்துக்களாலும் தமிழ்ப் பகுதியை வட்டெழுத்துக்களாலும் விரவி எழுதிய முறையைப் பல கல்வெட்டுக்களில் காண்கின்றோம். இதனால் கிரந்த எழுத்துக்கள் தமிழ் நாட்டில் புகுந்த காரணம் வடமொழிப் பகுதிகளை எழுதவே என்றும், நாளடைவில் வட்டெழுத்து வழக்கொழிய, கிரந்தம் இடம் பெற்றது என்றும் அறிகின்றோம்.[1]

8. தமிழ்நாட்டில் கி. பி. ஏழு எட்டாம் நூற்றாண்டுகளில் கிரந்தம் பரவியது என்றும், பிற்காலத்தில் விஜயநகர மன்னரும் மராட்டியரும் செல்வாக்குப் பெற்றபோது அதனைக் கைவிட்டு நாகரி எழுத்தைப் போற்றத் தொடங்கினர் என்றும் கல்வெட்டுக்கள் அறிவிப்பதால்,[2] வடமொழிப் பகுதிகளுக்காக வடவெழுத்துக்கள் இந்நாட்டில் கையாளப்பட்டனவே அல்லாமல், அவற்றைப் பார்த்துத் தமிழுக்கு எழுத்துக்கள் அமைக்கப்படவில்லை என அறியலாம்.

9. ஒலியெழுத்துக்கள் ஒலிய எழுத்துக்களிலிருந்து வளர்ந்தன என்பதே இயற்கையான வளர்ச்சி முறை. கிரந்தவெழுத்தோ நாகரிவெழுத்தோ பிராமிவெழுத்தோ அவ்வாறு வளர்ந்தன என்பதை உணர்த்தும் சான்றுகள் இல்லை. அவை ஒலியெழுத்துக்களாக வளர்ந்த வேறு எழுத்துக்களைப் பார்த்துக் கற்று எழுதப்பட்டவைகளே. பர்னெல் என்பவர் போனீசிய எழுத்துக்களைப் பார்த்துக் கற்கப்பட்டவை அவை என்கிறார். ஆயின், தமிழ் எழுத்துக்கள், ஒலிய எழுத்துக்களிலிருந்து வளர்ந்தன என்ப

1. கி. பி. 770-ல் ஏற்பட்ட ஆனைமலைச் சாசனத்தில் வட்டெழுத்தும் கிரந்த எழுத்தும் கலந்துவிட்டமை காண்கின்றோம். ஆதலால், அக்காலத்திலிருந்தே வட்டெழுத்துக்கள் படிப்படியே மாறிவரத் தொடங்கின எனலாம்.

2. தி. நா. சுப்பிரமணியன், பண்டைத் தமிழ் எழுத்துக்கள், பக். 36.

தைத் தமிழிலக்கியச் சான்றுகள் தெரிவிக்கின்றன. சிந்து நதிக்கரையில் தோண்டிக் காணப்பட்ட மொஹெஞ்சதாரோ எழுத்துக்களும் ஓவிய எழுத்துத் தொடர்பைப் புலப்படுத்துகின்றன. மொஹெஞ்சதாரோ எழுத்துக்கள் ஓவிய எழுத்துக்களாக உள்ளன என்பதும், அவ்வாராய்ச்சியால் புலனாகும் நாகரிகம், பழந்தமிழரின் (அல்லது பழந்திராவிடரின்) நாகரிகம் என்பதும் வெளிப்படை. மிகப் பழைய எழுத்துக்கள் என்று அறிஞர்கள் பலர் இதுவரையில் கருதிவந்த சுமேரிய எழுத்துக்களும் மொஹெஞ்சதாரோ எழுத்துக்களினின்று பிறந்தவை என்று அறிஞர் ஹீராஸ் தெளிவுபடுத்தியுள்ளார்.[1]

10. பிராமி எழுத்துமுறையில் தென்னமைப்பு என்றும், வடவமைப்பு என்றும் இருவகை உள்ளன. வடவமைப்பு வட இந்திய மொழிகளுக்கு ஏற்றாற்போல் அமைந்திருக்கிறது. மற்றது தமிழ்மொழிக்கு ஏற்றாற்போல் அமைந்திருக்கிறது. அன்றியும், பழைய பிராமி மொழியில், வடமொழிக்கு இன்றியமையாத பல ஒலிகள் இல்லை; அனுஸ்வாரம் விஸர்க்கம் என்பவை இல்லை; ஷ ஸ எழுத்துக்கள் இல்லை; ஹகர ஒலியுடன் கூடிய க ச த ப ட வர்க்கங்கள் இல்லை. மேலும், வடமொழிக்கு வேண்டாத எகரக் குறிலும் ஒகரக் குறிலும் உள்ளன. ஆகையால் அவை தொல்காப்பியனார் காலத்துப் பழந்தமிழ்க்கு உரிய ஒலிகளை மட்டும் உணர்த்தி வந்தன[2] என்றும், பழந்தமிழ் எழுத்தை ஒட்டி அமைக்கப்பட்டவை என்றும் கொள்ளலாம்.

1. There cannot be any doubt at present that the greatest number of signs of the Sumerian script owe their origin to the Mohenjo-Daro signs.—Rev. H. Heras, Studies in Proto-Indo-Mediterranean Culture, p. 277.

2. இவற்றை நாம் கவனித்தால் பிராமி லிபி முதலில் வடமொழிக்காக ஏற்படவில்லை என்றும், உயிரெழுத்துக்களுள்

11. வட்டெழுத்துக்கள் பிராமிஎழுத்திலிருந்து அமைக்கப்பட்டவை அல்ல என்றும், இந் நாட்டில் ஆரியர் குடியேறித் தம் நாகரிகத்தைப் பரப்புவதற்கு முன்பே வட்டெழுத்துக்கள் இருந்தன என்றும் டாக்டர் பர்னெல் என்பவர் கருதுகிறார்.[1] பிராமி எழுத்துக்களால் எழுதப் பெற்ற அசோகர் கல்வெட்டுக்கள் தோன்றுவதற்கு நெடுங் காலத்திற்கு முன்னரே வட்டெழுத்துக்கள் வழங்கி யிருந்தன என்று வரலாற்றறிஞர் திரு. ராமச்சந்திர தீட்சிதர் கூறியுள்ளார்.[2]

12. 1883-ல் லெய்டனில் நடந்த கிழக்கு நாட்டாரின் மாநாட்டில் இந்திய எழுத்துக்களின் தோற்றத்தைப் பற்றிய ஆராய்ச்சி, இரண்டு நாட்கள் நடைபெற்றது. தென் அரேபியாவில் வளர்ந்த போனீசிய எழுத்துக்களிலிருந்தே இந்திய எழுத்துக்கள் தோன்றின என்று அப்போது முடிவு செய்யப்பட்டது.

அ இ உ ஆகிய மூன்றுக்கும் அதிகச் சிறப்பை அளிப்பதும் மெய் யெழுத்துக்களுள் வர்க்க எழுத்துக்களைக் கொள்ளாததுமான ஒரு பாஷைக்கென அமைக்கப்பட்டுப் பின்னால் வடமொழிக்கு உபயோகப்படும்படி புதிய குறிகள் உண்டாக்கப்பட்டன என்றும் எண்ணவேண்டியிருக்கிறது. இந்தியாவில் உள்ள மொழிகளுள் இவ்விதம் உள்ளது தமிழ் ஒன்றுதான். அங்ஙனமாயின், பிராமி முதலில் தமிழுக்கென அமைந்த லிபியாக இருத்தல் கூடுமோ? இஃது ஆராய்தற்குரியது.—தி. நா. சுப்பிரமணியன், பண்டைத் தமிழ் எழுத்துக்கள், பக். 103.

1. Dr. A. C. Burnell, Elements of South Indian Palaeography, p. 49.

2. What the Vatteluttu is and how it came into being and how it was practised we cannot say definitely. But we can say almost with some definiteness that it represents a very ancient cursive alphabet, perhaps the primitive South Indian alphabet which existed long, long before the inscriptions of Asoka.—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 218.

டாக்டர் பர்னெல் என்பவரும், வட்டெழுத்துக்கள் நேரே ஐரோப்பாவில் போனீசிய எழுத்துக்களிலிருந்து கற்று அமைக்கப்பட்டவை என்ற கருத்துக் கொள்கிறார். இது பொருந்தாது. அரேபிய ஐரோப்பிய முறைகளில் உயிரெழுத்துக்கள் வேறாகவும் மெய்யெழுத்துக்கள் வேறாகவும் அமைதல் இல்லை. தமிழில் தொல்காப்பியனார் காலத்திற்கு முன்னிருந்தே இந்த முறை இருந்துவந்துள்ளது. அரேபியர்களும் கிரேக்கர்களும் தென்னிந்தியாவிற்கு வந்துபோய் வாணிகம் முதலிய தொடர்புகள் வைத்திருந்தார்கள் என்ற ஒரு காரணத்தால், அந் நாடுகளிலிருந்தே தமிழர் எழுதக் கற்றுக்கொண்டனர் என்று மேற்குநாட்டறிஞர்கள் கருதிவிட்டனர். ஆனால் அதே காரணம் கொண்டு, அரேபியர்களும் கிரேக்கர்களும் தென்னிந்தியாவில் தமிழெழுத்துக்களைப் பார்த்துத் தம் மொழிகளுக்கு எழுத்துமுறை அமைத்துக்கொண்டார்கள் என்று கூறுவதற்கு இடம் உள்ளது. இன்று அரேபிய எண்கள் என்று கூறப்படும் (1, 2, 3 முதலிய) எண்கள் உண்மையில் அரேபிய நாடு இந்தியாவிலிருந்து கடன் வாங்கியவைகளே என்று அறிஞர்கள் உணர்த்துகிறார்கள். அதுபோலவே, போனீசியர் தமிழ் எழுத்துக்களைப் பார்த்து எழுத்துமுறை கற்றனர் என்று கூறுவதும் ஒரு காலத்தில் ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.[1]

---

1. It is difficult to admit of the Phonecian or other exotic origin of South Indian characters. They say that the Phonecian alphabet was itself indebted to the so-called Egyptian signs about the 19th century B. C. But our theory is the Egyptian signs themselves are indebted to Indian ones.—V. R. R. Dikshitar, Pre-Historic South India, p. 216.

13. தமிழ் எழுத்துக்களில் க ப ர ல முதலிய ஒரு சில எழுத்துக்கள் அசோகர் காலத்துப் பிராமி எழுத்துக்களைப் போல் உள்ளன என்பர். இத்தகைய ஒற்றுமை சில எழுத்துக்களில் இருத்தலைக்கொண்டு, எல்லா எழுத்துக்களும் இத்தகையன என்று துணிதல் கூடாது. அன்றியும், ஒரு சில தமிழ் எழுத்து வடிவங்கள், அசோகர் காலத்துக் கல்வெட்டுக்களில் அமைந்த எழுத்துக்களின் செல்வாக்கால் திரிக்கப்பட்டிருக்கலாம். வீரமாமுனிவர் காலத்தில் சில எழுத்துவடிவங்கள் திரிந்தது போன்ற சிறு திரிபாக இவற்றைக் கருதல் வேண்டுமே அன்றி, பிராமி எழுத்துக்களிலிருந்து முழுதும் கடன் வாங்கப்பட்ட முறை எனக் கருதல் பொருந்தாது.

14. பழங்காலத்தில் இந்திய நாட்டில் பற்பல எழுத்துமுறைகள் இருந்துவந்தன என்பதை வடநாட்டு நூல்கள் தெரிவிக்கின்றன.[1] பழந் தமிழெழுத்துமுறை வடநாட்டு எழுத்துக்களை ஒட்டி அமைக்கப்பட்டதாக—கடன் வாங்கப்பட்டதாக இருந்திருந்தால் அதை வடநாட்டார் தம் கணக்கிலேயே சேர்த்திருக்கமாட்டார்கள். ஆனால் பிராமி, கரோஷ்டி, யவனனி முதலிய எழுத்துக்களைப் போல், த்ராவிடி என்று தனிவகையான எழுத்துமுறை ஒன்று இருந்ததாக அந் நூல்களே தெரிவிக்கின்றன.

1. சற்றேறக்குறைய கி. மு. 300-ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாகக் கொள்ளப்படும் ஸமவாயாங்க ஸூத்ரம், கி. மு. 168-ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாகக் கொள்ளப்படும் பண்ணவண ஸூத்ரம் முதலிய ஜைன நூல்களில் அக்காலத்தில் பதினெட்டு வகை லிபிகள் வழங்கிவந்தனவென்பது கூறப்பட்டிருக்கின்றது. மஹாவஸ்து என்னும் நூலில் முப்பதுவகை லிபிகளின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. லலிதவிஸ்தரம் என்னும் நூலோ புத்தர் காலத்தில் அறுபத்துநான்கு வகை லிபிகள் இருந்தனவென்று தெரிவிக்கின்றது —கி. நா. சுப்பிரமணியன், பண்டைத் தமிழ எழுத்துக்கள், பக். 95.

அன்றியும் அந்தத் திராவிடி என்னும் எழுத்துமுறைக்கு டாமிலீ (Damili) என்ற வேறு பெயர் இருந்ததாகவும் அறியப்படுகிறது. பழந்தமிழ் எழுத்துமுறையையே இவ்வாறு 'தமிழ்' என்பதன் திரிந்த வடிவங்களாகிய டாமிலீ த்ராவிடி என்னும் சொற்களால் உணர்த்தினர் என்பது தெளிவாகிறது.

தொல்காப்பியத்தில் விளக்கப்படும் எழுத்துவடிவம் சில

1. மெய்யெழுத்துக்கள் புள்ளிபெறல்.[1]
2. எகர ஒகரக் குறில் புள்ளிபெறல்.[2]
3. குற்றியலுகரமும் குற்றியலிகரமும் புள்ளி பெறல்.[3]
4. ம என்பது ப் என்ற வடிவாக, பகரத்தினுள் புள்ளியிட்டு எழுதப்படல்.[4]

பிற்கால மாறுதல்கள் :

1. எகர ஒகரக் குறில் புள்ளி பெறுமை.
2. ஏ ஓ என்பவை காலும் சுழியும் பெறல்.[5]

---

1. தொல். எழுத்து. 15. 2. ஷை. 16.

3. தொல். பொருள். 320. இங்கு, "ஒற்றெழுத்தியற்றே குற்றியலுகரம்" என்பதற்குப் பேராசிரியர் பின்வருமாறு எழுதும் உரை இதற்குச் சான்றாகும் :—"'மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' (தொல். எழுத்து. 104) எனக்கூறி, 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' (ஷை. 105) எனக் குற்றுகரத்திற்குப் புள்ளிபெறுதலும் கூறினன். அதுபோலக் குறுகிகரமும் புள்ளி பெற்றுநிற்றல் உடைத்தெனவும்...ஆயிற்று...இவற்றையெல்லாம் 'ஒற்றெழுத்தியற்றே' என்பதனுற் புள்ளியிட்டெழுதுக."

4. உட்பெறு புள்ளி உருவாகும்மே - தொல். எழுத்து. 58

5. இவை வீரமாமுனிவர் (Rev. Beschi) செய்த மாறுதல்கள். "I also state I have devised another and easier way of distinguishing e and o long from e and o short."—Rev. Beschi, A Grammar of the Common Dialect of the Tamil Language, p. 7.

3. குற்றியலுகரமும் குற்றியலிகரமும் புள்ளி பெறுமல் மற்ற உகர இகரங்களைப் போலவே எழுதப்படல்.

4. ப் என எழுதாமல், புள்ளியை உள்ளே வளைத்து ம என எழுதுதல்.

5. கா ஙா முதலியவற்றில் கால் சேர்க்கப்படல். முற்காலத்தில் இவை க. ங. என எழுதப்பட்டன.[1]

தமிழில் உயிர்மெய் யெழுத்துக்கள் எப்படி ஒலிக்கும் என்பதை இலக்கண ஆசிரியர் பவணந்தியார் விளக்கிச் சென்றுள்ளார். மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலிக்கும் என்பதே அவர் செய்த விளக்கம்.[2] இது ஒலிவடிவிற்கு ஆகும். ஆனால் வரிவடிவில் பல எழுத்துக்கள் அவ்வாறு (மெய் முன்னும் உயிர் பின்னுமாக) அமையவில்லை. 'கி' என்பதை எழுதும்போது 'க' என்று மெய் முன்

1. "உருவு திரிந்து உயிர்த்தலாவது மேலும் கீழும் விலங்கு பெற்றும் கோடு பெற்றும் புள்ளி பெற்றும் புள்ளியும் கோடும் உடன்பெற்றும் உயிர்த்தலாம். கி கீ முதலியன மேல் விலங்கு பெற்றன. கு கூ முதலியன கீழ் விலங்கு பெற்றன. கெ கே முதலியன கோடு பெற்றன. கா ஙா முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினர். மகரம உட்பெறு புள்ளியை வளைத்தெழுதினர். கொ கோ ஙொ ஙோ முதலியன புள்ளியும் கோடும உடன் பெற்றன" என நச்சினார்க்கினியர் எழுதிய உரை காண்க.

—தொல். எழுத்து. கள.

2. புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை உயிரோ டுருவு திரிந்தும்
உயிரள வாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடும் ஒற்றுமுன் ஞய்வரும் உயிர்மெய்.

—நன்னூல், எழுத்து. 89.

னெழுதி இகர உயிரின் வடிவைப் பின்னெழுது கிறோம் 'கெ' என்பதை எழுதும்போது, 'ஒ' என்பதை முன் எழுதுவது தவறன்றோ? 'தை' என்று எழுதின் தகர மெய் யும் ஐகார உயிரும் கூடிய உயிர்மெய் என்பது தெளி வாகும். 'ஐ' என்ற ஒலியை—அதன் குறியை—'தை' என்று மெய்க்குமுன் எழுதுவது பொருந்துமாறு எங் ஙனம்? கொ, கோ, கௌ முதலான எழுத்துக்களில் மெய்யை இடையில் வைத்து, உயிரின் வடிவை முன்னும் பின்னுமாகப் பிரித்து எழுதுதல் பெருங்குறையாகும்.

மேற்சொன்ன குறை தமிழிலும் மலையாளத்திலுமே உண்டு. தெலுங்கிலும் கன்னடத்திலும் இல்லை. தெலுங் கிலும் கன்னடத்திலும் மெய்யின் வடிவு எழுதின பிறகே, உயிரின் வடிவை எழுதுதல் இன்றும் உள்ள வழக்கம் ஆகும்.

உரு. எண்கள்

வளர்ச்சி

பத்துப் பத்தாக எண்களை அமைத்து எண்ணும் முறை (decimal system) மனித நாகரிக வளர்ச்சியின் நல்ல அமைப்பைக் காட்டுவதாக உள்ளது. குழந்தை 'இரண்டு' என்னும் எண்ணைக் கற்றதும், ஒன்றுக்கு மேற்பட்ட எல்லாவற்றையும் இரண்டு என்பது போலவும், 'மூன்று' கற்றதும், இரண்டனுக்கு மேற்பட்ட எத்தனைப் பொருளையும் மூன்று என்றே குறித்தல் போலவும், நாகரிகம் குறைந்த மக்கள் பலர் இரண்டு அல்லது மூன்றுக்கு மேல் எண்ண இயலாதவராய் நின்றுவிட்டனர். விக்டோரியாவில் வாழ்ந்த பழங்குடிகளும், நியூஹாலந்தின் மக்களும் இவ்வாறு எண்ணறிவு வளரப்பெறாமல் உள்ளனர் என்ச் சாய்ஸ் என்னும் அறிஞர் ஆராய்ந்து குறித்துள்ளார்.[1] 'காம்'புதர் மக்களின் மொழியிலும் இந் நிலை உள்ளது என்கிறார் புளூம்பீல்ட்.[2] அமெரிக்காவின் பழங்குடிகளின் மொழிகளில் ஒன்றாகிய அல்கோன்கின் மொழியில் ஐந்துவரையில் எண்கள் உள்ளன என்று[3] அறிஞர் குறித்துள்ளனர்.

வெவ்வேறு முறைகள்

உலகில் நாகரிக மொழிகள் எல்லாவற்றிலும் பத்துப் பத்தாக எண்ணி நாறு ஆயிரம் நூறுயிரம் கோடி என

1. The aborigines of Victoria have no name for numerals above two; the Puris of South America call "three" price or many. The New Hollanders have no names for numbers beyond two.—Sayce, Introduction to the Science of Language, p. 410.

2. The Kham Bushmen are said to count by simple numbers only to three, and to use 'two and two' for four, and so on.—Bloomfield, Language, pp. 279-280.

3. Abel Hovelacque, the Science of Language, p. 184.

எண்ணும் நாகரிக முறை உள்ளது. தமிழில் இந்த முறையே தொன்றுதொட்டு வந்துள்ளது. தமிழ் எண்களில் அரை, கால், அரைக்கால், மா ($\frac{1}{20}$), காணி ($\frac{1}{80}$), முந்திரி ($\frac{1}{320}$) என நூணுகிப் பகுத்துக் கணக்கிடும் முறையும் மிக ஒழுங்காகவும் செம்மையாகவும் அமைந்துள்ளது. எத்தகைய சிறு பகுதியையும் கணக்கிடும் வகையில் இந்தக் கீழ்வாயிலக்கம் தொன்றுதொட்டு வந்திருக்கிறது என்பதற்குக் கல்வெட்டுக்கள் சான்றாக உள்ளன.

சில மொழிகளில் பத்துப் பத்தாக எண்ணுமல், பன்னிரண்டு பன்னிரண்டாக எண்ணும் வழக்கம் இருந்து வந்தது. ஆங்கிலத்தில் one, two, three என எண்ணிச் செல்லும் முறை, பத்திற்குமேல், (twenty-one, twenty-two என்பனபோல்) ten-one, ten-two என்று அமையவில்லை; (thirteen, fourteen என்பனபோல்) oneteen, twoteen என்றும் அமையவில்லை; eleven, twelve என்றே இந்த இரண்டு எண்கள் அமைந்துள்ளன. அதனால் ஒரு காலத்தில் பன்னிரண்டு பன்னிரண்டாக எண்ணும் முறை இருந்தமை புலனாகிறது.

டச்சு மொழியில் இருபது இருபதாக எண்ணும் முறை (vigesimal system) கலந்துள்ளது. பாஸ்க் மொழியில் இதுவே முற்றிலும் உள்ளது. முப்பத் தெட்டை நாம் மூன்றுபத்தும் எட்டும் என்கிறோம். பாஸ்க்மொழி முறைப்படி, அதை இருபதும் பதினெட்டும் என்பர்.[1] அறுபதை, நாம் பத்தால் அளந்து ஆறு பத்து என்கிறோம்; அவர்கள் இருபதால் அளந்து மூன்று இருபது என்பர். பிரெஞ்சு மொழியிலும் இவ்வாறு இருபதாக எண்ணும் முறை சிறிது கலந்து உள்ளது. அறுபத்

1. Abel Hovelacque, The Science of Language, p. 118.

தொன்றிலிருந்து எழுபத்தொன்பது வரையில் பிரெஞ்சு எண்கள் அறுபது என்னும் எண்ணின்மேல் வளர்ந்தன வாகவே உள்ளன. பிரெஞ்சுக்காரர், எழுபது என்பதை அறுபதும் பத்தும் (soixante-dix) என்று கூறுகின்றனர்; எழுபத்தொன்றை அறுபதும் பதினொன்றும் (soixante et onze) என்கின்றனர். எண்பதை நான்கு இருபது (quatre-vingt) என்கின்றனர். தொண்ணூற்றிரண்டு என்னும் எண்ணை நான்கு இருபதும் பன்னிரண்டும் quatre-vingt douze) என்கின்றனர்.

தமிழ் முதலாய திராவிட மொழிகளின் எண்களில் மிகப் பழங்கால முதலாகவே பத்துப் பத்தாக எண்ணும் முறை ஒழுங்குபெற அமைந்திருப்பது வியந்து போற்றற் குரியதாகும். மிகப் பழங்காலத்திலேயே தமிழர் நாகரிக வளர்ச்சி பெற்றுப் பண்பட்டிருந்தனர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

கைவிரல் காரணம்

பழங்கால மனிதன் எண்ணத் தொடங்கியபோது தன் கைவிரல்களைப் பயன்படுத்தினன் என்றும், அதனால் தான் கைவிரல்களின் தொகையாகிய பத்து என்பதை எண்ணும் முறையின் அளவுகோலாக அமைந்தது என்றும் கூறுவர்.[1] ஒரு கையின் விரல்களின் தொகையாகிய ஐந்து என்பது தமிழில் இந்த உண்மையை விளக்குவதாக அமைந்துள்ளது.[2] ஒரு கை என்றால் ஐந்து என்று கொள்ளும் வழக்கம் இன்றும் சிற்றூர்களில் காணப்படு

1. The anthropologist tells us at once that this is due to the habit of counting on one's fingers.—Bloomfield, Language, p. 508.

2. Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, p. 233.

கிறது. கை என்பதே மெய்யெழுத்துக் கெட ஐ என எண்ணுப் பெயராய் (ஐவகை ஐம்பால்) அமைந்தது என்பது தெளிவாக அறியக் கிடக்கிறது.

ஆரிய மொழிகளில் பத்து என்னும் எண்ணைக் குறிக்கும் சொற்கள் (ten, dix, தசம் முதலியன) கோதிக் (gothic) மொழியில் உள்ள tai-hun என்பதிலிருந்து அமைந்தவை என்பது லெப்சியஸ் என்பவரின் கருத்தாகும். tai-hun என்னும் கோதிக் மொழியின் சொல் லிற்கு இரண்டு கை என்பது பொருள்.[1] கைவிரல்களின் துணையால் எண்ணுமுறை வளர்ந்தது என்பதற்கு இதுவும் சான்றாகும்.

எழுத்து வடிவங்கள்

க உ ங சா ஞி சு ள அ கூ ல் ா (நூறு), ஆ (ஆயிரம்) என மற்ற எழுத்துக்களையே சிறிது வேறுபாட்டுடன் எண்களைக் குறிக்க வழங்கினர் தமிழர். அரை, கால், அரைக்கால், மா, காணி, முந்திரி முதலிய பின்னப்பகுதிகளை, கீழ்வாயிலக்கங்களுக்கும் இத்தகைய எழுத்துக்கள் வழங்கி வந்தன. ஆனால் 3782 என இக் காலத்தில் பத்துக்கு (வலமிருந்து) இரண்டாம் இடமும், நூற்றுக்கு மூன்றாம் இடமும், ஆயிரத்துக்கு நான்காம் இடமும் கொடுத்து எழுதும் சிறந்த முறை அக் காலத்தில் இல்லை. இதை கூ தூ எ ா அ ல் உ என எழுதுவதே பழைய தமிழ் எண் முறை.

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, என இன்று உலகமெங்கும் எழுதப்படும் எண்கள் அரபி எண்கள் என்று கூறப்படு கின்றன. ஆனால் அரபியர்களுக்கு இந்த எண்களின் பழைய வரலாறு பற்றி ஒன்றும் தெரியவில்லை; அவர்கள்

1. Ibid. pp. 233-234.

இவற்றை இந்திய எண்கள் என்கிறார்கள். வட நாட்டு அறிஞர்களுக்கும் இவற்றின் தோற்றம் பற்றி ஒன்றும் விளங்கவில்லை. தமிழ்நாட்டின் பழைய எண் வடிவங்களைப் பற்றி இவர்கள் அறியாமலிருத்தலே இவ்வாறு அனைவரும் தடுமாறுவதற்குக் காரணம் ஆகும். அரபி எண்கள் என்றும் இந்திய எண்கள் என்றும் இவ்வாறு தடுமாறிக் கூறப்படும் அந்த எண்கள் (1, 2, 3, முதலியவை) பழைய தமிழ் எண்களே என்பது, பின் வரும் பழந் தமிழ் எண் வடிவங்களை நோக்கின் உணரப்படும்.

எண்கள்	இன்று உள்ளவாறு	கல்வெட்டுக்களில் உள்ள வளர்ச்சி		
1	௧	—	†	⊤
2	௨	=	≍	≍
3	௩	≡	≡	≡
4	௪	⤫	⤫	⤫
5	௫	⅄	⅄	⅄
6	௬	⅂	⅂	⅂
7	௭	⅂	⅂	⅂
8	௮	⅄	⅄	⅄
9	௯	⅄	⅄	⅄

இவற்றை நோக்கி எண்ண வல்லவர்க்கு, 1, 2, 3 முதலிய எண்களின் எழுத்துவடிவம் தமிழகம் உலகிற்கு அளித்த கலையே என்னும் உண்மை புலப்படும்.

கழக வெளியீடு : எசo

பதிப்பாளர் :
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை - 1.

தலைமை நிலையம் :
24, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி.

விலை ரூ. 6 0.

அப்பர் அச்சகம், சென்னை-1.